துறைமங்கலம்

சிவப்பிரகாச அடிகளார் சுவாமிகள்

அருளிய

திருக்கூவப் புராணம்

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

அருளிச் செய்த

திருவிற்கோலத் தேவாரம்

பண் - காந்தார பஞ்சமம்

1 உருவினார் உமையொடும் ஒன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவி வானவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினான் உறைவிடம் **திருவிற் கோலமே.**

தெளிவுரை : அழகு பொருந்திய உமையம்மையோடும் பொருந்தி நின்ற ஒப்பில்லாத செல்வத்தை உடையவனும், வளர்ந்து நீண்ட சடையில் பிறைத் திங்களையும் கங்கையையும் அணிந்தவனும், தேவர்கள் எல்லாம் அஞ்சி வணங்கப் பகைவரைச் சினத்துடன் நோக்கிய போர்க் கோலத்தைக் கொண்டவனும் ஆகிய **சிவபெருமான்** வீற்றிருக்கும் இடம் திருவிற்கோலமாகும்.

குறிப்பு : திருவிற்கோலம் கூவப்பதியில் அமைந்த கோயிலின் பெயர். உமையாளொடு இறைவன் வீற்றிருக்கின்ற கோலம் செல்வமாகக் கருதப்படுகிறது. ஆதலால் அதனை ஒப்பற்ற செல்வம் என்ற பொருள் பட 'ஓர் திருவினான்' என்றார். இறைவன் திரிபுர அசுரர்களை வெல்லப் போர்க் கோலம் கொண்டதைப் பார்த்த தேவர்களே அஞ்சினர். ஆதலால் "வெருவி வானவர் தொழ வெகுண்டு நோக்கிய" என்றார். 1

2 சிற்றிடையுமை யொரு பங்கன் அங்கையில்
உற்றதோர் எரியினன் ஒரு சரத்தினால்
வெற்றிகொள் அவுணர்கள் புரங்கள் வெந்தறச்
செற்றவன் உறைவிடம் **திருவிற்கோலமே.**

தெளிவுரை : சிறிய இடையையுடைய உமையவளை ஒரு பாகத்தில் கொண்டவனும், உள்ளங்கையில் பொருந்தியுள்ள ஒப்பில்லாத தீயையுடையவனும், ஓர் அம்பினால் வெற்றியைப் பெற அவுணர்களின் மூன்று புரங்களும் எரிந்து சாம்பலாக

அழித்துவருமான சிவபெருமான் வீற்றிருக்கின்ற இடம் **திருவிற்கோலம்** ஆகும். 2

3 **ஜயன்நல் அதிசயன் அயன் விண்ணோர்தொழும்**
மையணி கண்டனார் வண்ணம் வண்ணம் வான்
பையரவல் குலாள்பாக மாகவும்
செய்யவன் உறைவிடம் திருவிற்கோலமே.

தெளிவுரை : விண்ணவர் மண்ணவர் முதலிய யாவர்க்கும் தலைவனும், அதிசயிக்கத்தக்க பலவடிவம் கொள்பவனும், தேவர்கள் வணங்குகின்ற மை போன்ற கருமை நிறம் பொருந்திய திருக்கழுத்தையுடையவனும் ஆகிய சிவபெருமான் நிறம் செந்நிறம். பாம்பின் படம் போன்ற அல்குலையுடைய உமையவள் தன் இடப்பாகத்தில் வீற்றிருக்கவும் சிவந்த நிறமாகவே விளங்கும் சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் திருவிற்கோலம் ஆகும். 3

குறிப்பு : (உமையவள் கருநிறம் உடையவள். அவள் இடப்பாகத்தில் வீற்றிருந்தும் எம் பெருமான் கருநிறம் அடையாமல் சிவந்த நிறம் உடையவனாய் விளங்குதல் குறிப்பாகும்.)

4 விதைத்தவன் முனிவருக் கறமுன் காலனை
உதைத்தவன் உயிரிழந்துருண்டு வீழ்தரப்
புதைத்தவன் நெடுநகர்ப் புரங்கள் மூன்றையும்
சிதைத்தவன் உறைவிடம் **திருவிற்கோலமே.**

தெளிவுரை : சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்காகிய அறத்தைச் சனகர் முதலிய முனிவர்க்கு முன் மனத்தில் உபதேசித்தவனும், மார்க்கண்டேயனின் உயிரைக் கவர வந்த இயமனை உயிர் இழந்து விழுமாறு காலால் உதைத்தவனும் பெரிய நகரங்கள் மூன்றையும் அழித்தவனுமான சிவபெருமான் வீற்றிருக்கின்ற பதி திருவிற்கோலம் ஆகும். 4

5 முந்தினான் மூவருள் முதல்வனாயினான்
கொந்துலா மலர்ப்பொழிற் **கூகம்** மேவினான்
அந்திவான் பிறையினான் அடியர்மேல்வினை
சிந்துவான் உறைவிடம் **திருவிற் கோலமே.**

தெளிவுரை : யாவர்க்கும் முன் தோன்றியவனும், நான்முகன் திருமால் உருத்திரன் என்ற மூவர்க்கும் முதல்வனாய் விளங்குபவனும், மலர்க்கொத்துகள் மலர்ந்துள்ள சோலையையுடைய கூவம் என்ற நகரத்தில் வீற்றிருப்பவனும் அந்தி மாலையில் தோன்றும் பிறைச்சந்திரனை சடையில் அணிந்தவனும் தன்னை அடைந்த அடியவர்க்கு மேல்வர இருக்கின்ற வினைகளை அழிப்பவனும் ஆகிய சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் திருவிற்கோலம் ஆகும். 5

6 தொகுத்தவன் அறுமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழில் **கூகம்**மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் **திருவிற் கோலமே.**

தெளிவுரை : பலவாக விரிந்து கிடந்த நான்கு மறைகளையும் அவற்றின் அங்கங்களையும் தொகுத்தவனும், ஆகமநூற் பொருளை நந்தியம் பெருமானுக்கு வகுத்துக் கூறியவனும், உயர்ந்து ஓங்கி வளர்ந்துள்ள சோலையையுடைய கூவம் என்ற பதியில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனும் செருக்கு மிகுந்த அசுரர்களின் மூன்று புரங்களும் எரிந்து சாம்பலாகும்படி அழித்தவனும் ஆகிய சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் திருவிற்கோலம் ஆகும். (கூகம்-கூவம்) 6

7 விரித்தவன் அருமறை விரிசடை வெள்ளம்
தரித்தவன் தரியலர் புரங்கள் ஆசற
எரித்தவன் இலங்கையர் கோனிடர்படச்
சிரித்தவன் உறைவிடம் **திருவிற்கோலமே.**

தெளிவுரை : அரிய வேதங்களை விரித்துரைத்தவனும், விரிந்த சடையில் கங்கை நீர் வெள்ளத்தை உடையவனும், பகைவர்களான அசுரர்களின் பற்று அற எரித்தவனும், இலங்கையின் மன்னனான இராவணன் துன்பப்படும்படியாகச் சிரித்தவனுமான சிவபெருமான் வீற்றிருக்கும் இடம் திருவிற் கோலம் ஆகும். 7

8 இப்பாடல் கிடைக்கப் பெறவில்லை.

9 திரிதருபுரமெரி செய்த சேவகன்
வரியர வொடுமதி சடையில் வைத்தவன்
அரியொடு பிரமனது ஆற்றலால்உருத்
தரியலன் உறைவிடம் **திருவிற்கோலமே.**

தெளிவுரை : வானில் திரிந்து கொண்டிருந்த மூன்று புரங்களையும் எரித்த வீரம் உடையவனும், வரியை உடைய பாம்புடன் பிறைத் திங்களைச் சடையில் அணிந்தவனும், திருமாலுடன் நான்முகன் ஆற்றலால் அடிமுடி ஆகியவற்றின் வடிவத்தைக் காண முடியாதவனும் ஆகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற இடம் திருவிற்கோலம் ஆகும். நான்முகனும் திருமாலும் அன்னப்பறவையாகவும் பன்றியாகவும் வடிவு கொண்டு தீப்பிழம்பாய் உயர்ந்து நின்ற சிவபெருமானைக் காணப்புறப்பட்டுச் சென்று, அவற்றைக் காண இயலாது வருந்தினர். இதனை 'அரியொடு பிரமன தாற்றலால் உருத்தெரியலன்' என்ற தொடர் விளக்கியது. 9

10 *சீர்மையில் சமணொடு சீவரக்கையர்*
நீர்மையில் உரைகள் கொள்ளாத நேசர்க்குப்
பார்மலி பெருஞ் செல்வம் பரிந்து நல்கிடும்
சீர்மையினானிடந் **திருவிற்கோலமே.**

தெளிவுரை : நல்ல ஒழுக்கம் இல்லாத சமணர்களுடன் காவியாடையை உடுத்த பௌத்தர் ஆகிய நல்ல தன்மையற்றவர் உரையைக்கொள்ளாத தம் அடியார்க்கு உலகத்தில் நிறைந்து விளங்கும் பெருஞ்செல்வத்தை அன்புடன் நல்கும் மேன்மையுடையவனது இடம் திருவிற்கோலம் ஆகும். (இறைவர் அடியார்க்குப் பெருஞ்செல்வம் அளிப்பான் எனக்கூறுவதை இந்நூலில் 'செந்நெல் வைத்தச் சருக்கம்' என்பதால் அறியலாம். 10

11 கோடல் வெண்பிறையனைக் **கூகம்**மேவிய
சேடன செழுமதில் **திருவிற்கோலத்தை**
நாடவல்ல தமிழ் ஞானசம்பந்தன்
பாடல் வல்லார்களுக்கில்லை பாவமே.

விளக்கம் : வளைந்த வெண்மையான பிறைத்திங்களை அணிந்தவனும் திருக்கூவப்பதியில் பொருந்திய சிவபெருமானின் செழுமையான மதில்சூழ்ந்த திருவிற்கோலம் என்ற திருக்கோயிலைத் தமிழ் வல்லார் விரும்பும் ஞானசம்பந்தனின் பாடல்களைப் பாட வல்லவர்களுக்குப் பாவங்கள் எவையும் வந்து சேரா.

திருச்சிற்றம்பலம்.

உரையாசிரியர் திரு. அ. மாணிக்கம் வாழ்க

தொண்டை நன்னாட்டுத் தொல்பதி
திருக்கழுக் குன்றம் வேளாளர்
பண்டை மேவும் பவமறச்
செய்யும் **அப்பாவு** நல்லோன்

மீனாட்சி நற்றாய் ஆறாம்
மகனாய் **மாணிக்கம்** உதித்தார்
தேனார் செந்தமிழ் ஈர்ப்பு
'**திருவிக**' புலமை நாட்டம்.

தவத்தவர் **சீர்திருப் பனந்தாள்**
செந்தமிழ்க் கல்லூரி தக்கோர்
சிவனருள் **சாமிநாத அடிகளார்**
செப்பிய வரமாம் நற்றமிழ்

கனிதரும் தருவாய் பயிற்றல்
கல்லூரி ஆசான் நற்றொண்டு
நனிபெரும் சைவமும் தமிழும்
தழைக்க அரிய சேவை

பேசாப் பைந்தமிழ் நூற்கு
பேருரை கண்ட உரைக்கோ
மேதினி ஏத்த ஔவை,
ஆத்தி சூடி கொன்றை

வேந்தன் முதலாய அறநூல்கள்
விசாகன் கந்த புராணம்
சேக்கிழார் **பெரிய புராணம்**
சீர்மிகு வில்லி பாரதம்

பதினெண் கீழ்க்கணக்கு பழமைசால்
பத்துப் பாட்டு, தனிப்பாடல்
திரட்டு, எட்டுத்தொகை, நன்னூல்
திருப்புகழ், திருமந்திரம் தன்பாச்

சுவையும் உரையும் கண்டனன்
செந்நாப் புலவரும் தேமதுர
அவைநா பலரும் போற்றிட
கற்பனைக் களஞ்சியம் இறையருள்

துறைமங்கலம் சிவப்பிரகா சர்பாடிய
திருக்கூவப் புராணம் உரையை
நிறைவோடு கடிதில் முடித்தான்
நானிலம் போற்றுமா புகழ்வேன்.

மாணிக்க உரைதரு மாணிக்கம்
ஆணிப்பொன் முத்தாய் வாழி!
வானின் ஞாயிறு திங்களாய்
வையகம் போற்ற வாழ்க!

ஆ. காளத்தி.

நல்லாசி அருளுக!

திருக்கச்சி மருங்கு **தண்டலம்**
தீதிலா முன்னோர் வாழ்பதி
திருவளர் பிச்சாண் டவர்கோத்
திரித்தார் **ஆறுமுகனார், கிளியாம்பாள்**

தலைமகன் தஞ்சை ஆனங்குடி
திங்கள் ஆனிஈசு வரயாண்டு
கலைமுழுமதி பத்தாம் நாள்பிறப்பு
கனிவுமிகு நற்றாய் எட்டாம்

அகவையில் மறைவு, கற்றல்
இளமையில் வள்ளல் சென்னை
புகழுறு **சீனிவாச முதலியார்**
மணலியார் இல்லம், ஆசிரியர்

நற்றொண்டு பைந்தமிழ் விழைவு
தமிழாசான் நற்பணி அறமிகு
கொற்றம்சென் னைமாநகர் பள்ளி
எட்டுமூன்று அகவை வதுவை

கொண்டகஞ் சேரிசாமி **செகதாம்பாள்**
இளையமகள் **வள்ளியம்மாள்** ஈன்றமூவர்
அன்பெழில மீனாட்சி ரேவதி
அரியநாதன் அண்ணாமலை மருகர்

வன்னிமர நாதர்புனல் நீராட
மின்பொறிக் கருவி, வண்ண
மின்விளக்கு '**அருள்மிகு கூவம்**
திருவிற் கோலமே' முகப்பு

சிவப்பிரகா சர்அருளிய திருக்கூவப்
புராணம் வெளியிடல் முப்பெரும்பணி
உவப்பிலாக் களிப்பால் திளைக்க
தக்காரே நல்லாசி அருளுக.

- **ஆ. காளத்தி**

முகவுரை

சீர்மிளிரும் பூவார்சோலை எழிலார் திருக்கூவம். கார்சூழ் ஏரால் வளம் கொழிக்கும் தொல்பதி தொண்டை நன்னாட்டு வேளாளர் பெருமக்கள் வேண்ட, சிவநெறிச் செம்மல் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளார் தொடுத்த தூய புராணமே திருக்கூவப் புராணமாகும்.

இவ்விழுமிய நூல் இருப்பதை அறியாத நான், என் கெழுதகை உழுவலன்பர் திருமிகு. நா. சந்திரசேகரன் இயம்ப இருவரும் தேடுதலுற்றோம்; கிடைக்கப்பெற்றோம்.

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக மேலாண்மை இயக்குநர் செந்தமிழ்ச் செல்வி ஆசிரியர் **திரு. இரா. முத்துக்குமார** சுவாமி அவர்களை நாடினேன். அன்னார் மறைமலையடிகள் நூல் நிலையத்தில், 1908ஆம் ஆண்டு திருக்கைலாச பரம்பரைப் பொம்மபுரம் ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகராதீனத்துச் சிதம்பரம் ஈசானிய மடம் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளவர்கள் பதிப்பின்படி மேற்படி சுவாமிகள் மாணாக்கரும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசியர், திரு. க.வே. திருவேங்கடன், அவர்கள் ஆராய்ந்து, இரண்டாம் பதிப்பாக வந்துற்ற மூலநூல் படிகளை, நிழற்படம் எடுத்துத்தந்து உதவினார். அன்னாரின் பெருமுயற்சியே இந்நூல் வெளிவரக் காரணமாகும். அன்னாருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைப் படைக்கின்றேன்.

இப்புராண நூல் நிழற்படியின் மூலத்தைத் தொண்டை சீர்பதியின் சான்றோர் திருக்கழுக் குன்றக்கிழார், மே நாள் சமணக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் **திரு. புலவர். அ. மாணிக்கம்,** எம்.ஏ., அவர்களிடம் கூவப் புராண வரலாற்றின் மூலப்படிகளைக் கொடுத்தேன். உரையாசிரியர் பெருங்கோவாகிய அவர்கள், செய்யுட்களை நிரல்பட அமைத்து பொழிப்புரை, விளக்கவுரை எழுதித் தம்பணியை என் வேண்டுகோளின்படி முட்டின்றி விரைவில் செய்து முடித்தார், அவருக்கு என் மேலான வணக்கத்தையும் நன்றியையும் படைக்கின்றேன்.

என் ஆசான் சுவடியியல் சிந்தனையாளர், நுண்மாண் நுழைபுலம் மிக்க பேராசிரியர் **முனைவர். பூ. சுப்ரமணியம்,** எம்.ஏ.பி.எச்.டி., அவர்கள் என்பால் பேரன்பு கொண்டு 'இப்புராண நூல்' செப்பம் பெற 'நூல் ஆய்வு' எழுதுக எனப் பணித்தார். அதற்கான ஆக்கமும், ஊக்கமும் அளித்தார். எனவே, பல புராணங்களையும், சைவ சமய நூல்களையும் ஆய்ந்து 'நூல் ஆய்வு' என்ற கட்டுரையை எழுதினேன். அவர்க்கும் என் வணக்கமும் நன்றியும் உரியதாகுக.

என் ஆய்வுப் பணிக்கு துணை புரிந்த நூல்கள் திருத்தொண்டர் புராணம் (சேக்கிழார் ஆராய்ச்சி மைய வெளியீடு) தமிழ்ப் புலவர் வரலாறு. பதினேழாம் நூற்றாண்டு கல்வெட்டு ஆராய்ச்சி வல்லாரும், வானநூல் அறிஞரும். ஆன திரு. ச. சோம சுந்தர தேசிகர் எழுதியது. பெரிய புராணம் ஆராய்ச்சி-ஆசிரியர் டாக்டர். மா. இராசமாணிக்கனார், எம்.எ.எல்.டி., எம்.எ.எல்.,பி.எச்டி., -'தேவார அடங்கன் முறை. செயலாளர் சைவ சித்தாந்தப் பெருமன்றம், மயிலைக்கிழார், இளமுருகனார். ம. பாலசுப்பிரமணியம், பி.ஏ.பி.எல்.,

இந்நூல், உங்கள் கரங்களில் தவழ முழுமையான காரணராகயிருப்பவர் நண்பர் நா. சந்திரசேகரன் என்றால் மிகையன்று. நூல் வடிவம் பெறவும், பிழையகற்றியும் நூல் வடிவத்துக்குத் தன்னுழைப்பு நல்கிய அப்பெருமகனார் அவர்கட்கு வணக்கமும் நன்றியும் படைக்கின்றேன்.


இவ்விழுமிய நூல் வெளிவரவும், வெளியீடவும் பல்லாற்றானும் ஒத்துழைப்பு நல்கிய, அருள்மிகு திரிபுராந்தக சுவாமி திருக்கோயில் **கூவம் அறங்காவலர் குழுத் தலைவர் அ. சண்முக முதலியார். செயல் அலுவலர். பெ. மாணிக்க வாசகம், எம்.ஏ.பிஎட்.** அவர்கட்கும் மற்றும் இக்குழுவைச் சேர்ந்த திரு.கெ.அ. சாம்பசிவ முதலியார். திரு. தி. பழநி முதலியார் திருமதி. சரசுவதி விநாயகம், திருமதி. செண்பகவள்ளி ராசேந்திரன் ஆகிய பெருந்தகைகளுக்கு என் வணக்கமும் நன்றியும்.

இந்நூல் பதிப்பிக்க, நெஞ்சத்தின் உள்ளீடாக இருந்து, மனச் சோர்வையகற்றி எனக்கு வழிகாட்டியாக இருந்த **திருமிகு. சா. கணேசன், முன்னாள் மேயர், சென்னை.** அவர்கட்கும் என் வணக்கமும் நன்றியும் நூல் வெளியீட்டுக்கு உதவிய தொண்டை மண்டல வேளார் சங்கத் தலைவர் **திரு. சொ. சிவசுப்ரமணியம்.** காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதினம் குருமகா சந்நிதானம் சிவவளர்சீர் **திருவம்பல சுவாமிகள். நீதியரசர். திரு.P. பாஸ்கரன், எம்.ஏ.பி.எல்.,** ஆகிய இம்மூவருக்கும் மனமுவந்த வணக்கமும், நன்றியையும் மற்றும் இவ் விழாவிற்கு உழுவலன்புடன் பல்லாற்றானும் உதவிய குமாரச்சேரி திரு. மு. இராமநாதன், பிஞ்சிவாக்கம், சிவ. **தணிகை மணி** ஆக அனைவர்க்கும் என்நன்றியும் வணக்கமும்.

இந்நூல், முகப்பு அட்டை பொலிவுறக் காரணமாக யிருந்த ஓவியர் வடசேரி. **கா. ஜெயகுமார்** அவர்கட்கு வணக்கமும் நன்றியும். கம்ப்யூட்டரில் தட்டச்சு செய்து உதவிய செல்வி. **முல்லை ரகுநாதன்** அவர்கட்கும். இச்சீரிய கூவப்புராணத்தை அழகியமுறையில் அச்சிட்டுத் தர ஒத்துழைப்பு நல்கிய கல்கி பூந்தோட்டத்தில் மலர்ந்த வண்ணமலர். குடந்தை **நா. இராசகோபாலன்** அவர்களின் விழுமிய செல்வங்கள் முத்தமிழ்நிகர். **இரா. சேதுராமன், இரா. ஜெயராமன், இரா. ஜானகிராமன்** ஆகியோர் தங்களது மேலான் அச்சகமான **'ஸ்ரீ விஜயா பிரிண்டிங் பிரஸ்'** (72, ஜோன்ஸ் ரோடு, சைதை, சென்னை-15) மூலம் வடிவத்தை நல்கியமைக்கு என் வணக்கமும், நன்றியையும் படைககின்றேன்.

செவ்வியின் அச்சிட்ட படிவங்களை நூல்வடிவில் கட்டமைத்துத் தந்த **திரு. நா. சண்முகனாரின் ராஜாம்பாள் புக் பைண்டிங் ஓர்க்ஸ்** (16, பெரியார் பாதை, சூளைமேடு, சென்னை-94) பணியாளர் யாவர்க்கும் என் நன்றி.

ஆ. காளத்தி



'கூவரக்னர்' (அச்சிறுத்த பிள்ளையார்)

ஏர்தரு சாலி வாகன சகாத்தமாயிரத் தெழுசதத் தொருபத்
திரண்டின் மேற்சாத ரணவருடத்தி னியைதரு சித்திரைத் திங்கள்,
சார்தரு தெய்தி பத்தினேடொன்று தருசெவ்வாய் வாரம்பூ ருவத்தி
சத்தமி புணர்பூ சத்திரு நாளிற் றவலறு கும்பலக் கினத்தில்
சீர்தரு துறைசை வாழ்சிவ ஞான தேவன்மா ணாக்கருண் முதன்மை
திகழ்ந்துள 'கச்சியப்பமா முனிவர் திருப்பெருங் காஞ்சியி னெதிர்ச்
சேர்தரு மடியார் தமதக விருளைத் திவாகரன் முன்னிரு ளென்னத்
திருந்துதன் னருளா லகற்றிவீ டுறுதிச் சிறந்தபூ ரணடகசையடைந்தத

(இச் செய்யுள் முற்காலத்தது)

மெய்கண்டதேவர் மெல்லடி வாழ்க!


சிவஞானயோகிகள் சேவடி வாழ்க!

கச்சியப்ப முனிவரர் கழலடி வாழ்க

கச்சியப்ப முனிவர் சரித்திரச் சுருக்கம் முற்றிற்று.

[இது முதற் பதிப்பிற் கண்டவாறே சிற்சில மாறுதல்களுட பதிப்பிக்கப்பெற்றது]

★ ★ ★



அருள்மிகு திரிபுரசுந்தரி உடனுறை
ஸ்ரீ திரிபுராந்தக சுவாமி



அருள்மிகு திரிபுராந்தக சுவாமி திருக்கோயில்
கூவம் அறங்காவலர் குழுத் தலைவர், செயல் அலுவர்
மற்றும் பெருந்தகையாளர்கள்

உ
கணபதி துணை
ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகர் திருவடி வாழ்க

திருக்கூவப் புராணம்

1. பாயிரம்

பாயிரம் என்பது ஒரு நூலுக்கு இன்றியாமையாத முன்னுரை.

"*ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்*
பாயிரம் இல்லது பனுவல் அன்றே
என்பது சான்றோர் வாக்கு.

கடவுள் வாழ்த்துப் பகுதியில், திரிபுராந்தக நாதர், திரிபுராந்தக நாயகி, சபா நாதர், சிவகாமியம்மை விநாயகக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள், திருநந்தி தேவர், காரைக்கால் அம்மையார், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியவர்க்கு வணக்கம் காணப்படுகின்றது.

இவ்வணக்கத்துக்குப்பின் அவையடக்கமும் நூல்வந்த வழியும் அமைந்துள்ளன.

சிவமயம்

மேலைச் சிதம்பரம் என்கிற

திருப்பேரூர்.

தேவாரமாதி அருட்பாசுரங்கள்

ஆரூர் மூலத்தான மானைக் காவும் ஆக்கூரிற் றன்றோறி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேராவூரும் பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் கொறுக்கைவீ ரட்டா னமும் கோட்டூர் குடமூக்கு கோழம்பமும்
காரார் கழுக்குன்றுங் கானப் பேருங் கயிலாய நாதனையே காணலாமே.

அப்பர் சுவாமிகள் தேவாரம்-க்ஷேத்திரக் கோவை.

அஞ்சைக களத்துள்ளார் ஐயாற்றுள்ளார் ஆரூரார் பேரூரார்
அழுந்தூருள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்களூரார் சாந்தை யயவந்தி தங்கினார்தாம்
தஞ்சைத் தமக்காமுத வுண்ட நம்பர் நாகேச் சுரத்துள்ளார் நாரையூரார்
வெஞ்சொற் சமண்சிறையில் என்னை மீட்டார் வீழிமிழலையேமேவினாரே.

அப்பர் சுவாமிகள் தேவாரம்-திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்.

கூறுத டைக்குழி கட்பகு வாயன பேயுகந் தாடநின் றோரியிட
வேறுப டக்குட கத்திலை யம்பல வாணனின் றாடல் விரும்புமிடம்
ஏறுவி டைக்கொடி யெம்பெரு மானிமை யோர்பெரு மானுமை
யாள்கணவன்
ஆறுச டைக்குடை யப்ப னிடங்கலிக் கச்சி யனேகதங் காவதமே.

சுந்தரமூர்த்திகள் தேவாரம்-திருக்கச்சியனேகதங்காவதம்-2

பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள் பங்கன் பைங்க ணேற்றன்
ஊரூரன் றருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் றம்பிரா னாரூரன் மீங்கொங்கி லணிகாஞ் சிவாய்ப்
பேரூர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்ற மன்றே.

சுந்தரமூர்த்திகள் தேவாரம்-கோயில்-குறிஞ்சி-10

ஆரூரத்தா! ஐயாற் றமுதே! அளப்பூர் அம்மானே!
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகா வூரானே!
பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே!
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாரூர் அம்மானே!

சுந்தரமூர்த்திகள் தேவாரம்-ஊர்த்தொகை.

திருக்கூவப் புராணம்

பாயிரம்

1. குவளத்து அந்தக் குளிர்வின் வளத்து உறக்
கவளத்து அந்தக் கரணம் இருத்திய
பவளத் தந்தப் படிவம் நிகர்த்து ஒளிர்
தவளத் தந்தத் தலைவனை வாழ்த்துவாம்

அடியார் படையலை ஏற்றல்

தெளிவுரை : பவளத்தைப் போன்ற சிவந்த வடிவும், விளங்கும் வெண்மையான தந்தமும் உடைய விநாயகப் பெருமான் தம் அன்பர்களை மண்ணுலகச் செல்வத்திலும் விண்ணுலகச் செல்வத்திலும் செலுத்துதற்கென்றே அவ்வன்பர்கள் படைக்கும் கவளத்தை அன்போடு ஏற்றுக் கொள்வர்.

விளக்கம் : கு-பூமி. **வளத்து**-வளத்திலும், செல்வத்திலும், **விண்வளத்துஉற**-விண்ணுலக வளத்தை அடைய. **கவளத்து**-கவளத்தில், படைக்கும் நைவேதியத்தில், படையலில். **அந்தக்கரணம் இருத்திய**-விரும்பி ஏற்றுக்கொண்ட **பவளத் தந்தப்படிவம் நிகர்த்து**-பவளத்தால் ஆன வடிவத்தை ஒத்து **தவளத் தந்தத் தலைவன்**-வெண்மையான கொம்பையுடைய தலைவரான விநாயகர். 1

2. நச்சுஇ றுத்த நயனக் குவிமுலைப்
பொச்சுஇ றுத்த நுசுப்பினர்ப் போற்றிவாய்
மிச்சில் துத்த விரகிலிக்கு ஆங்கொலோ
அச்சுஇ றுத்த அடிகள் அடிகளே

விநாயகர் திருவடிகள் எனக்குக் கிடைக்குமோ!

தெளிவுரை: தம் தந்தை ஏறியிருந்த தேரின் அச்சினைத் தன் துதிக்கையால் முறித்தருளிய விநாயகப் பெருமானின் திருவடிகள் நஞ்சையுடைய விழியையும் குவிந்த கொங்கையையும் பொய்யான இடையையும் உடைய இளம் மாதரைப் போற்றி அவர்தம் வாய் ஊறலான தம்பலத்தை விரும்பியுண்ட எனக்குக் கிடைக்குமோ? கிடைக்காது.

விளக்கம்: **நச்சு இறுத்த**-நஞ்சையுடைய. **நயனம்**-கண். **குவிமுலை**-குவிந்த கொங்கை. **பொச்சு இறுத்த**-பொய்மை தங்கிய 'இறுத்த' என்பது 'தங்கிய' என்ற பொருளது. **வாய் மிச்சில் துத்து**-வாயில் ஊறிய தம்பலத்தை உண்ட. **அச்சிறுத்த விநாயகர்**-அவுணரை வெல்லப் புறப்பட்ட சிவபெருமானின் தேர் அச்சைத் தம் துதிக்கையால் ஒடித்த விநாயகர். இஃது இத்தல விநாயகரின் பெயர். விநாயகரை வணங்கி எத்தொழிலும் செய்ய வேண்டும் என்பதை உலகத்துக்குப் புலப்படுத்தத்தேரின் அச்சை விநாயகர் முறித்தார். **அடிகள்**-விநாயகரின். **அடிகளே**-திருவடிகள். 2

கடவுள் வணக்கம்

திரிபுராந்தக நாதர்

3. நீர்கொண்ட சடையொடுநம் பெருங்காமத்து
அழல்அவிப்ப நிற்கின் றானைக்
கூர்கொண்ட கனல்மழுமான் ஆண்மையும் பெண்
மையுமாய் கூற்றிற்கு ஏற்பச்
சீர்கொண்ட வலன்இடம்கொள் நாயகனைப்
புகலிஇறைச் செந்த மிழ்ப்பூந்
தார்கொண்ட திருவிற்கோ லப்பெருமான்
தனைஇதயத் தவிசின் வைப்பாம்.

திரிபுராந்தக நாதர்

தெளிவுரை: கங்கை நீர் பொருத்திய சடையுடன் நம் பெருங்காமத் தீயை அவிப்ப விளங்குபவனும் கூர்மையான தீயையும் மழுவையும் மானையும் கொண்டு ஆண்மையும் பெண்மையுமாய் ஆன கூற்றுக்கு ஏற்றபடி சிறப்புப் பொருந்திய வலப் பக்கத்தும் இடப்பக்கத்தும் விளங்குநாயகனும், சீர்காழிப் பதியில் தோன்றிய திருஞானசம்பந்தர் செந்தமிழ்ப் பூமாலையை அணிந்து கொண்டவனுமான திருவிற்கோலப் பெருமானை உள்ளமான தாமரை யிருக்கையில் கொண்டு துதிப்போம்.

விளக்கம் : நீர் கொண்ட சடை-நீரையுடைய கங்கையை அணிந்த சடை. **பெருங்காமத் தழல் அவிப்ப**-மிக்க காமமான தீயை அவித்தற் பொருட்டாக. **கனல்**-தீ. **மழு**-சூலம். தீ, மழு, மான் என்ற இவற்றைச் சிவபெருமான் வலக்கரத்தில் ஏந்தியுள்ளார்; இடப்பக்கத்தில் உமையை வைத்துள்ளார். **புகல் இறை**-சீர்காழிப்பதியில் தோன்றிய திருஞானசம்பந்தர். **செந்தமிழ்ப்பூந்தார்**-செந்தமிழால் ஆன தேவாரம் ஆகிய பாமாலை, இத்தலத்துறை இறைவன் மீது திருஞானசம்பந்தர் மூன்றாம் திருமுறையில் ஒரு பதிகம் பாடியுள்ளார். அப்பதிகம் '**உருவினார்**' எனத் தொடங்குவதாகும். இந்நகரைச் சார்ந்த திருஇலம்பையங் கோட்டூர்த்தேவாரமும் உண்டு. அது '**மலையினார்**' எனத் தொடங்கும் பதிகமாகும். **இதயத் தவிசு**-உள்ளமாகிய இருக்கை. 1

திரிபுராந்தக நாயகி

4. பைத்தசிறு மணிஅரவம் தாழ்ந்துமதி
 கவர்கின்ற பரிசது என்ன
மெய்த்த இருப் புகழ்த் திருவிற் கோலநா
 யகன்மகிழ விற்கோ லத்தை
ஒத்தநறு நுதலிடைப்பொன் சுட்டியின்கீழ்
 வெண்திலகம் ஒளிரத் தீட்டி
வைத்தருளும் எழில் உடைப்பை அரவுஅல்குல்
 அம்மைபதம் வணக்கம் செய்வாம்.

திரிபுராந்தக நாயகி

தெளிவுரை: பையையுடைய சிறிய மணியுடைய பாம்பு தாழ்ந்து சந்திரனைக் கவர்கின்ற தன்மையுடையதென்ன, மெய்யான பெரும் புகழையுடைய திருவிற்கோல நாயகனின் மனம் மகிழ, வில்லினது தோற்றத்தை ஒத்த நல்ல நெற்றியில் பொன்னால் ஆன சுட்டி என்ற அணியின் கீழ் வெண்மையான பொட்டு விளங்கும்படி தீட்டி வைத்துள்ள அழகையுடைய பையையுடைய பாம்பைப் போன்ற அல்குலையுடைய திரிபுராந்தக நாயகியின் திருவடியை வணங்குவோம்.

விளக்கம்: பைத்த-பையையுடைய. **மணியரவம்**-மணியை உடைய. பாம்பு. **பரிசு**-இயல்பு, தன்மை. **விற்கோலம்**-வில்லின் தோற்றம்; அழகு.

பாம்பு குனிந்து சந்திரனைக் கவரமுயல்வது போல் பொற்சுட்டியின் கீழ் திலகம் விளங்குகிறது என்பது கருத்து. **நறு நுதலின்**- நறுமணம் உடைய நெற்றியில். **சுட்டி**-நெற்றியில் அணியும் அணிவகை. **வெண்திலகம்**-வெண்மையான பொட்டு. பாம்புக்குச் சுட்டியும் சந்திரனுக்கு வெண்திலகமும் உவமைகள்.

பைஅரவு அல்குல்-பையையுடைய பாம்பின் படத்தைப் போன்ற அல்குல். **பதம்**-திருவடி **பையரவல்குல்அம்மை**-இத்தலத்து அம்பிகையின் திருப்பெயர். 2

சபாநாதர்

5. சீர்கொண்ட மலைமாதின் திருநுதல் கண்டு
 அராப்பகைவெண் திங்கள் நீக்கி
ஆர்கொண்ட சடை அரவம் அல்குலைக்கண்டு
 அழல் கைஉழைப் பகைஅ யர்த்து
நேர்கொண்ட உழைவிழி கண்டு அறுகுறுமெய்ப்
 புலிப்பகைநீத்து இருப்ப நின்றே
ஏர்கொண்ட தனித்தில்லை நடம்புரி எம்
 பெருமானை இறைஞ்சல் செய்வாம்.

சபா நாதர்

தெளிவுரை: சிறப்புடைய இமயலையின் மகளான பார்வதியின் அழகிய நெற்றியால் பாம்புப் பகையான வெண்மையான திங்கள் பகையையும் அகற்றி ஆத்திமாலை அணிந்த சடையில் உள்ள பாம்பு போன்ற அல்குல் துணையால் கையில் உள்ள மான்பகையைப் போக்கி, நேர்மையுடைய (சிறந்த) மான்விழியின் துணையால் அருகில் பொருந்திய வியாக்கிரபாதரான பகையைப் போக்கி நின்று அழகிய ஒப்பில்லாத தில்லையில் நடனம் செய்யும் எம்பெருமானை வணங்குவோம்.

விளக்கம்: மலைமாது-இமயமலையின் மகள் பார்வதி. **அராப்பகை**-பாம்புப்பகை. **வெண்திங்கள்**-சடையில் உள்ள பிறைச்சந்திரன். **ஆர்**-ஆத்திமாலை. **அடற்கை**-வெல்லும் இயல்புடைய கை. **உழை**-மான். **பகைஅயர்த்து**-பகையை வென்று **புலிப்பகை**-புலிவடிவினரான வியாக்கிரபாதரின் பகை. **ஏர் கொண்ட**-அழகையுடைய. **இறைஞ்சல் செய்வோம்**- வணங்குவோம். மான் பாம்பை உண்ணும் என்பர். 3

சிவகாமியம்மை

6. வன்னிகரம் வளர்வுறநற் பணிபயில
வருவார்க்குச் சுவர்க்கம் ஈந்து
பன்னுநுதல் மதி அடியார் பரிபுரங்கொண்டு
எழில்கனி மெல்இதழி யாரப்
பொன்அணுகு மலரவைசேர்ந்து இசைகொள்அரி
மறைஓதி புரிந்து தாழத்
தன்னைஇடத்து இருத்துபரம் பொருளைநிகர்
உமைஅம்மை சரணில் தாழ்வாம்.

சிவகாமியம்மை

தெளிவுரை: இச்செய்யுள் கூத்தப்பெருமானுக்கும் சிவகாமி அம்மைக்கும் சிலேடை

கூத்தப்பெருமானுக்கு: கையில் தீயை ஏந்தி நல்ல தொண்டு செய்ய வருபவர்க்குப் பொன்னுலகத்தைத் தந்து போற்றித் துதிக்கும் அறிவுடைய அடியார் உடலைக் கொண்டு அழகு ஒழுகும் மென்மையான கொன்றை மலர் மாலையைச் சூடி, திருமகள் சார்ந்திருக்கும் தாமரையைத் தன் உறுப்பாகக் கொண்டு புகழ் பெற்ற திருமாலும் வேதம் ஓதும் நான்முகனும் விரும்பி வணங்குமாறு நிற்கின்ற பரம்பொருள்.

சிவகாமியம்மைக்கு: கையில் கிளியிருக்க அழகிய வேலைப்பாட்டையுடைய கச்சணித்த கொங்கையையும், வியக்கத்தக்க மதிபோன்ற நெற்றியையும், கால் அணியையும்

கொண்டு மென்மையான கொவ்வைக் கனிபோன்ற இதழினை உடையவளாய், அகன்ற பொன்னம்பலத்தில் கூடிப் பாடும் வண்டுகள் மறைந்துள்ள கூந்தல் சுருண்டு கீழே விழ நிற்கும் தன்னை இடப்பக்கத்தே இருத்திய கூத்தப் பெருமானுக்கு ஒப்பான உமையம்மையாரின் திருவடிகளை வணங்குவோம்.

விளக்கம்: வன்னி-அனல், கிளி. **பணி**-தொண்டு, ஓவிய வேலைப்பாடு. **பயில வருவார்**- செய்தற்கு வருபவர்கள் அமைய நிற்கும் கச்சு(வார்). **சுவர்க்கம்**-பொன் உலகம், கொங்கை. **பன்னுதல்**-துதித்தல், வியப்பு உறுதல். **நுதல்**-நெற்றி,சொல்லுதல். **பரிபுரம்**-காற்சிலம்பு; பரி+புரம்- தாங்குகின்ற உடல். **இதழி**-கொன்றை மலர், இதழ்களை உடைய வாய். **பொன்**-திருமகள்; பொன். **அவை**-தில்லை பொன் அம்பலம். **இசைகொள் அரி** -புகழ் பொருந்திய திருமால். இசைபாடும் வண்டு. **மறையோதி**-வேதத்தை ஓதுபவன், மறைந்த கூந்தல்.
தன்னை இடத்து இருத்தும்-தன்னை இடப்பாகத்தில் இருக்கச் செய்யும். **சரணில்**-திருவடியில். **தாழ்வாம்**-வணங்குவோம். 4

விநாயகக் கடவுள்

7. கற்றைநெடுஞ் சடாமவுலிப் பிறையும்ஒரு
தன்கோடும் கரத்தில் சேர்த்தி
மற்றைநிறை மதியாக்கி மறுஇகந்து
வல்லபைதன் வடிவு பூத்த
நெற்றிநிகர்த் தமையன்றி அழகுஒழுகு
திருமுகத்தை நிகர்ப்ப நேயம்
பெற்றமழ களிற்றைமனச் சேவகத்தின்
நிறுவி இடர்ப்பிறவி தீர்ப்பாம்

விநாயகக் கடவுள்

தெளிவுரை: நீண்ட சடைக் கற்றையில் உள்ள பிறைத் திங்களைத் தன் வளைந்த கொம்புடன் இணைத்து முழுமதியாக்கித் தன் மனைவியான வல்லபையின் நெற்றிக்கு மட்டும் ஒருபிறை ஒப்பாக

விளங்குவதன்றி, அழகுமிகும் திருமுகத்துக்கும் முழுமதியாக ஒப்பாய் விளங்க, விருப்புடன் செய்த இளைய யானைமுகனை உள்ளத்தில் இருத்திப் பிறவித் துன்பத்தைப் போக்குவோம்.

விளக்கம்: விநாயகர் சடையில் உள்ள பிறைத் திங்களுடன் தன் வளைந்த கொம்பை இணைத்து வல்லபையான தன் மனைவியின் முகத்துக்கு ஒப்பாகுமாறு செய்தார்.

சடாமவுலி -சடைமுடி. **தன்கோடு**-தன் கொம்பு;தந்தம். **கரத்தில் சேர்த்தி**-கைகளால் ஒன்று சேர்த்து. **நிறைமதி**-முழுமதி. **மறுஇகந்து**-களங்கம் நீங்கப் பெற்று. **வல்லபை**-விநாயகரின் மனைவி. **நேயம்**-அன்பு. **மழகளிற்றை**-இளைய ஆண்யானையை சேவகம்-யானை உறங்கும் இடம். விநாயகரை யானை என்பதற்கு ஏற்ப அவர் சேரும் இடம் 'சேவகம்' எனப்பட்டது. **இடர்ப்பிறவி**-துன்பத்தைத் தரும் பிறப்பு **தீர்ப்பாம்**-போக்குவோம். 5

சுப்பிரமணியக் கடவுள்

8. நான்குமுகன் தொழும் ஐந்து முகன்ஈன்ற
ஆறுமுக நாதன் தன்னை
வான்குலவும் ஒருகடவுள் யானையின் பா
கனைப் புனத்து வடிவு கூர்ந்த
மான்குறுக வேங்கை உருவு எடுத்தானை
அசுரர் குலம் மாய்த்துப் பேய்கட்கு
ஊன்குருதி யொடும் அளவிப் புதுவிருந்திட்
டானைநமது உளத்துள் வைப்பாம்.

சுப்பிரமணியக் கடவுள்

தெளிவுரை: நான்முகன் ஆன பிரமன் வணங்கும் ஐந்து முகனான சிவன் பெற்றருளிய ஆறுமுகம் உடைய இறைவனை, விண்ணவர் உலகத்தில் உள்ள ஒரு தெய்வயானையின் பாகனை (இடப்பக்கத்தில் கொண்டவனை) தினைப் புனத்து இருந்த அழகிய (வள்ளி) மான் வரவும் (அதைக் கண்டு) வேங்கை (மரத்தினது) வடிவம் கொண்டவனை, அசுரர் குலத்தைக் கொன்று பேய்களுக்கு அந்த அசுரரின் ஊனை இரத்தத்துடன் கலந்து புதிய விருந்தை அளித்திட்ட முருகப் பெருமானை உள்ளத்தில் கொண்டு துதிப்போம்.

விளக்கம்: ஐந்துமுகன்-சிவபெருமான்; அப்பெருமானுக்கு ஐந்து முகங்கள். **வான்குலவு**-வானத்தில் பொருந்திய. **ஒருகடவுள் யானை**-தெய்வயானை. **பாகன்**-பாகத்தில் கொண்டவன்; செலுத்துபவன்; கணவன். **மான் குறுக**-வள்ளி நாயகியார் வர. **வேங்கையுரு எடுத்தானை**-வேங்கை மரத்தின் வடிவு கொண்டவனை. **அசுரர் குலம்**-சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் முதலிய அசுரர் குலம். **ஊன்**-மாமிசம்.
தெய்வயானை, ஐராவதம் என்ற யானையால் வளர்க்கப்பட்ட வளாதலால் தெய்வயானை என்று அழைக்கப்பெற்றாள். கடவுள் யானை என்பதும் அது. 'கடவுள்' இங்குத் தேவரைக் குறிக்கும். 'யானை' என்பதற்கேற்பப் 'பாகன்' என்றார். 'மான்' என்பதற்கேற்ப 'வேங்கை உரு எடுத்தானை' என்றார்.
வள்ளியுடன் முருகப் பெருமான் காதல் விளையாட்டில் ஈடு பட்டிருந்தபோது வள்ளியின் உறவினர் வர, முருகப்பெருமான் வேங்கை மரத்தின் வடிவு கொண்டு நின்றார். 6

திருநந்தி தேவர்

9. பாக்கு லங்கள் பழிச்சுஉமை நெஞ்சமும்
வாக்கு மங்கை வடிவு நிகர்த்து ஒளி
தேக்கும் வெள்ளிச் சிலம்புடன் எம்மையும்
காக்கும் நந்தி கழல் தொழுது ஏத்துவாம்.

நந்திதேவர்

தெளிவுரை: செய்யுள் தொகுதிகள் போற்றிப் புகழ்கின்ற உமையம்மையின் மனமும், சொல்லின் செல்வியான கலைமகளின் வெண்மையான திருமேனியும் போன்ற ஒளி நிறைந்துள்ள வெள்ளி மலை-கயிலை-மலையையும் எம்மையும் காவல் மேற் கொண்டருளும் நந்தியம் பெருமான் கழல் அணிந்த அடிகளை வணங்குவோம்.

விளக்கம்: பாக்குலங்கள்-பா+குலங்கள்; செய்யுள் தொகுதிகள். **பழிச்சும்**-புகழும். **வாக்கு மங்கை**-கலைமகள். **ஒளிதேக்கும்**-ஒளி தங்கியுள்ள. **வெள்ளிச்சிலம்பு**-வெண்மையான கயிலைமலை. **கழல்**-கழல் என்ற அணியை அணிந்த திருவடி. **ஏத்துவாம்**-துதிப்போம். 7

காரைக்காலம்மையார்

10. கிடந்து கண்களில் கேட்கு மவன்புகல்
அடைந்த கைகொடு உயிர்ப்பவன் அத்தன்வாழ்
வடம்த யங்கு வனத்தில் தலையினால்
நடந்த அம்மை பதமலர் நண்ணுவாம்

காரைக்கால் அம்மையார்

தெளிவுரை: கண்ணையே செவியாகக் கொண்டு விளங்கும் கார்க்கோடகன் என்ற பாம்பு அடைக்கலமாய் அடைந்ததும், விநாயகப் பெருமானின் தந்தை சிவபெருமான் வீற்றிருப்பதுமான திருவாலங்காட்டில் தலையால் நடந்து சென்றிட்ட பேய் வடிவுடைய காரைக்கால் அம்மையாரின் திருவடியை வணங்குவோம்.

விளக்கம்: கண்களில் கேட்கும்-கண்களே செவியாய்க் கேட்கும். **அவன்**-கார்க்கோடகன் என்ற பாம்பு. **கைகொடு உயிர்ப்பவன்**-துதிக்கையையே மூச்சுவிடும் மூக்காக உடைய யானையான விநாயகப் பெருமான். **வடவனம்**-ஆலங்காடு. **வடம்**-ஆலமரம் காரைக்கால் அம்மையார் இத்தலத்தில் தலையால் நடந்து வந்தார். **அம்மை**-காரைக்கால் அம்மையார். **பதமலர்**-திருவடியாகிய தாமரை. **நண்ணுவாம்**-மனத்தால் அடைவோம்; துதிப்போம். 8

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்

11. அங்க மானது அணங்கினும் மேம்படும்
மங்கை யாகப் படைத்து மகள்எனப்
பங்க யாதனன் வெள்குறப் பார்த்தருள்
பொங்கு ஞானசம் பந்தனைப் போற்றுவாம்.

திருஞான சம்பந்தர்

தெளிவுரை: பூம்பாவை என்ற பெண்ணின் எலும்பைத் தேவமங்கையைவிட மேம்பட்ட அழகிய மங்கையாக ஆக்கி, அவளைத் தன் மகள் என்னும் அன்புடன், நான்முகனும் வெட்கம் கொள்ளுமாறு ஆக்கியருளிய திருஞானசம்பமூர்த்தி அடிகளைப் போற்றுவோம்

விளக்கம்: அங்கம்-எலும்பு. **அணங்கினும்**-தேவ மங்கையைவிட. **மகள்என**-அவள் தன் மகளாவாள் என்று. **பங்கயாதனன்**-தாமரை மலரில் வீற்றிருக்கின்ற நான்முகன். **வெள்குற**-நாணம் கொள்ளும்படி. நான்முகன் தான் படைத்த திலோத்தமை என்ற பெண்ணைக் கண்டு காமம் கொண்டான். அதற்கு மாறாகத் திருஞானசம்பந்தர் தான் படைத்த பூம்பாவையைத் தன் மகள் ஆவாள் என்றார். எனவே இவ்வகையால் நான்முகன் வெட்கம் கொள்பவன் ஆவன். 9

திருநாவுக்கரசு நாயனார்

12. மருக்கு லாவு மறைவனத்து ஒன்றிய
திருக்க பாடம் திறந்தசொல் வேந்தனை
அருட்கு லாவும் அறிவினை மூடிய
இருள்க பாடம் திறக்கவும் ஏத்துவாம்

திருநாவுக்கரசு நாயனார்

தெளிவுரை: ஞானவாசம் மிக்க திருமறைக் காட்டில் வேதத்தால் பூசிக்கப்பட்டு மூடப்பட்டுக் கிடந்த கோயில் கதவுகளைப் பாடல்களால் பாடித் திறந்த திருநாவுக்கரசரை அறிவினை மூடியுள்ள அஞ்ஞானக் கதவுகளைத் திறக்கும்படியாய்ப் போற்றி செய்வோம்!

விளக்கம் : மருக்குலாவு-ஞானமணம் பொருந்திய. **மறைவனம்**-திருமறைக்காடு. **திருக்கபாடம்**-கோயில் கதவுகள். **சொல் வேந்தன்**-நாவுக்கரசர். **அருள் குலாவு**-அருள் பொருந்திய **இருள் கபாடம்திறக்க**-இருளாகிய கதவினைத் திறக்க. இருள் என்றது அஞ்ஞானம். 10

சுந்தரமூர்த்தி நாயனார்

13. கன்று காமம் கழன்றிலர் தம்உரு
என்றும் ஓர்வு அரிது என்றிருப் பான்தனை
அன்று தூதுவ னாக அரிவைபால்
சென்று வாஎன்ற தீரனை வாழ்த்துவாம்.

சுந்தர மூர்த்தி நாயனார்

தெளிவுரை: வருத்துகின்ற காமநோய் நீங்கப் பெறாது விளங்குபவர் காணற்கு அரிய சிவபிரானை முன்னம் ஊடல் கொண்டிருந்த பரவை நாச்சியாரிடம் தூதனாய்ச் சென்று வா என்று அனுப்பிய தீரனான சுந்தரரை வாழ்த்துவோம்.

விளக்கம்: கன்று-வருத்தும். **கழன்றிலர்**-நீங்கப் பெறாதவர். **அரிவை பால்**-பரவை நாச்சியாரிடம். **தீரனை**-வீரனை சுந்தரர் முதலில் பரவை நாச்சியாரைத் திருவாரூரில் மணந்து கொண்டார். பின் அவர் திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியாரை மணந்து கொண்டார். அதன் பின்பு திருவாரூர்க்கு வந்தார். அதனால் அவர்மீது சினம் கொண்டார் பரவையார். எனவே அவள் சினத்தைத் தணித்து வருமாறு இறைவனைத் தூதாகச் சுந்தரர் அனுப்பினார். 11

மாணிக்கவாசக சுவாமிகள்

14. இன்ப மாணிக்க வாசகன் என்னும்ஓர்
மன்பெ ரும்பெயர் யாரும் வழங்குறத்
தன்பெயர்க்கொடை யோடுத ரித்தபேர்
அன்பன் தன்னை அகத்துள் இருத்துவாம்.

மாணிக்க வாசகர்

தெளிவுரை: இனிய மாணிக்கவாசகர் என்னும் ஒப்பற்ற பெருஞ்சிறப்புடைய பெயரைத் தாம் மட்டுமன்றி தன்னை வழிபடும் அடியார்களுக்கும் வழங்கிய பேரன்பரைத் தியானிப்போம்.

விளக்கம்: மன்பெரும்-நிலைபெற்ற பெரிய. **யாரும்**-தம்மை வழிபடும் பிறரும். **கொடை**-கொடுத்த கொடைத் தன்மையுடைய. **அகத்துள்**-மனத்துள். **இருத்துவாம்**-நினைப்போம். 12

அவையடக்கம்

15. மூதறி வாளரும் அறிவுஇல் மூகரும்
ஒறு நடுநிலை யோடும் சொற்பொருள்
தீதுஉரைப் பதற்குஒரு செயலும் கண்டிலேன்
ஆதலின் என்கவிக்கு அழிவுஇன் றாகுமால்.

அவையடக்கம்

தெளிவுரை: பேரறிவுடையாரும் அறிவற்றவரும் நடுவு நிலைமையை மேற்கொள்பவரும் எளியேன் யான் கூறும் சொல்லிலும் பொருளிலும் குறை கூறக் கூடிய செயலை அவர்களிடத்தில் நான் காணவில்லை. ஆதலால் என் கவிக்கு அழிவு ஏற்படாது.

விளக்கம் : மூதறிவாளர்-பேரறிவுடையவர். **அறிவின்மூகர்**-அறிவற்றவர். **ஒதுறு**-கூறும்படியான. பிறர் குறைகளைப் பெரியோர் உரையார். அறிவற்றவரோ பிறரும் தம்மைப் போல் குறையுற்றவர் என்று நினைத்துக் குறை கூறார். நடுவுநிலையாளர் காணத்தக்க குறை இல்லை. ஆதலால் குற்றம் காணார். எனவே என் கவிகள் அழியா. 13

நூல் வந்த வழி

16. காவி நேர்விழி மங்கைபங்கினன் இசைக் காந்தம்
மேவும் மாச**னற் குமாரசங்கிதை**யில் விரித்த
தாவில் **காளிகா காண்டம்**என் கடற்புகழ் தன்னில்
கூவ நீர்மையுள் கொண்டுயான் கூறுவன் தமிழால்

நூல் வந்த வழி

தெளிவுரை: உமையம்மையை ஒருபாகத்தில் கொண்ட சிவபெருமான் அருளிச் செய்த வடமொழிக் **'கந்தபுராண சனற்குமார சங்கிதையில்' 'காளிகா காண்டம்'** என்று புகழ்மிக்க குறிப்பிடப்பெறும் கடல் பகுதியில் திருக்கூவம் என்ற பதியின் சிறப்பை உள்ளத்திற் கொண்டு தமிழ் மொழியிலே புராணமாகச் செய்துள்ளேன்.

விளக்கம்: வடமொழியில் உள்ளது. 'கந்தபுராணம்' அதில் உள்ளது 'சனற்குமார சங்கிதை', அதன் பகுதி. 'காளிகா கண்டம்', அப்பகுதியில் கூவப்பதியின் சிறப்பு கூறப்படுவதை இங்குத் தமிழில் தருகின்றார் ஆசிரியர்.

காவி நேர்விழி மங்கை-குவளை மலரை ஒத்த விழியை உடைய உமையம்மை. **மங்கை பங்கன்**-சிவபெருமான். **காந்தம்**-காந்தபுராணம். **தாவில்**-தா+இல்; குற்றம் அற்ற. **கடற்புகழ்**-கடல் போன்ற பெரும்புகழ். **கூவநீர்மை**-கூவப்பதியின் சிறப்பு. 14

பாயிரம் முற்றிற்று. ஆகப் பாடல் 16.

2. நைமிசாரணியச் சருக்கம்

நைமிசாரணியம் என்ற வனத்தில் நிகழ்ந்தவை பற்றி இப்பகுதியில் கூறப்படுகின்றது. ஆதலால் நைமிசாரணியச் சருக்கம் என்ற பெயர் பெறுகின்றது. நைமிசம்+ஆரணியம்= நைமிசாரணியம். ஆரணியம் ~வனம்.

நைமிசம் என்ற வனம் சிறந்தது. அதில் சிவபெருமானை எண்ணித் தவம் இயற்றும் முனிவர் பலர் இருந்தனர். அவர்களுள் சிறப்பாய்க் குறிப்பிடத் தக்கவர் காசிபர், வசிட்டர், கௌதமர், பரத்துவாசர், கண்ணுவர், சவுனகர், புலத்தியர், சனகர், நாரதர், வான்மீகர், சதாதபர் முதலியவர். அவர்கள் எப்படிப் பிறவிக்கடலைக் கடந்து சிவதியைப் பெறுவது என்பதை ஆராய்ந்தனர். வசிட்ட முனிவர் 'தவமே சிவகதியில் ஒருவரைச் சேர்ப்பிக்கும்' எனக் கூறினார். சதாதபர் 'அறம் ஒன்றே சிறந்தது' என்றார். பின் கவுதமர், 'தானம் ஒன்றினால் சிவகதியைப் பெறலாம்' என மொழிந்தார். அவர்க்குப் பின்பு காசிபர் 'வாய்மை அறமே சிவகதியில் ஒருவரைச் சேர்க்கும்' என விளக்கினார். அவரை அடுத்துப் பேசத் தொடங்கிய பரத்துவாசர் 'வேள்வியே சிறந்தது. அது ஒன்றால் உய்தி பெறலாம்!' என்று இயம்பினார். அப்போது, 'கண்ணுவ முனிவர் மக்கட் பேறே சிறந்தது' என் அறுதியிட்டு உரைத்தார்.

அவர் உரைத்ததைக் கேட்ட துருவாச முனிவர் 'துறவு வாழ்வே இறைவனிடம் ஒருவரைச் சேர்க்க வல்லது' என்று விளக்கினார்.

இங்ஙனம் அம்முனிவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த போது சூத முனிவர் அவ்வனத்துக்கு வந்தார். அவரது வருகையைக் கண்ட வசிட்ட முனிவர் முதலியவர் அவரை வரவேற்று, தக்க இருக்கையில் அமரச் செய்து, "சிறந்த வியாச முனிவரைப் போன்றவரே! வினைத் தொடர்பு நீங்கிச்சிவபெருமானின் திருவடியை அடையும் வழியை எங்கட்கு உரைத்தருள வேண்டும்" என்று வேண்டினர். அதைச் செவியேற்ற

சூத முனிவர், உங்கட்குத் திருவருள் பதிவு ஏற்பட்டுள்ளது. ஆதலால் இத்தகைய ஆராய்ச்சியைச் செய்துள்ளீர். நல்லது! அரியவை எனச் சிறப்பித்துப் பேசப்படுபவை வித்தைகள். அவை மறை நான்கு. அவற்றின் அங்கம் ஆறு. கரும காண்டம் ஞான காண்டம் என்ற பிரிவுடைய மீமாம்சை, அறநூல், காந்தருவநூல், தனுர் வேதம், பரதம், வாகடம், புராணம், நியாயம் என்பன. அவற்றுள் சிறந்தது புராணமே. சிறப்பாகப் பேசப்படும் புராணங்கள் பதினெட்டு. சிவபெருமானுக்குப் பத்துப்புராணங்கள் உரியவை. திருமாலுக்கு நான்கு உரியவை. நான்முகனுக்கு இரண்டு உரியவை. அக்கினிக்கும் கதிரவனுக்கும் ஒவ்வொன்று உரியவை. எம் சிவபெருமானுக்கு உரிய கதை பத்துள் சிறந்தது 'காந்த புராணம்', அதில் சிறந்து விளங்குவது 'சனற்குமாரசங்கிதை' அதனுள்ளும் சிறந்ததானது 'காளிகா காண்டம்', இவ்வாறு மேலோர் உரைப்பர்.

'அக்காளிகா காண்டத்துள் எம் தலைவரான வியாச முனிவர் வீடுபேற்றை அடைவதற்குரிய வழியை எனக்கு உரைத்தார். அதை யான் உங்கட்கு உரைப்பேன். கேளுங்கள்! பிறவி நீங்கி வீடு பேற்றை அடைவது சிவஞானத்தால் ஆகும். அதைப் பெற்றவர் பிரமகற்பத்தின் ஈற்றிலும் சச்சிதானந்த முத்தியை அடைவர். ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களும் நீங்கிட ஞானம் பெற வேண்டும். அதைப் பெறச் சிவபெருமானின் தலங்களை வழிபட வேண்டும்' என்றார்.

அப்போது நைமிச வனத்து முனிவர்கள் 'முக்தியை அளிக்க வல்ல சிறந்த தலம் ஒன்றைக் கூறியருளுங்கள்' என்று வேண்டினர். அவ்வளவில் சூத மாமுனிவர் கூவப்பதியை நினைந்தார். அவர்க்கு மெய்ம்மயிர் பொடித்தது. கண்ணீர் அரும்பியது. உடல் நடுக்கம் கொண்டது. பின்பு அவர், 'நைமிசவன முனிவர்களே! நீங்கள் வேண்டியபடி அமைந்த தலம் ஒன்று உள்ளது. நான் அறிந்த அளவிலே அதை உங்கட்குக் கூறுவேன்' எனக் கூறத் தொடங்கினார்.

நைமிசாரணியச் சருக்கம்

17. சீத அம்புஉலா மலர்க்கொடி நானிலம் திகழும்
பாத வம்புதல் ஆதிய வளம்எலாம் பயின்றது
ஆத வம்பனி மழைஒலிக் குடைந்திடாது அமர்ந்து
மாதவம் புரிவோர்க்குஇடம் நைமிச வனமே.

மாதவம் புரிவோர்க்கு இடம் நைமிசவனம்

தெளிவுரை: குளிர்ந்த நீரையுடைய மலர்க்கொடிகள் பொருந்தி நான்கு வகைப்பட்ட நிலங்களும் விளங்கும் மரம் புதர் முதலிய வளங்கள் எல்லாம் பொருந்தியது வெயில் பனி மழை காற்று ஆகியவற்றால் துன்பம் அடையாது பெருந்தவம் செய்பவர்க்குத் தக்க இடம் அது நைமிசம் என்ற வனம் ஆகும்.

விளக்கம்: துறவியர் இருந்து தவம் செய்பவர்க்குத் தக்க இடம் நைமிசவனம் ஆகும்.
சீத அம்பு உலாம்-குளிர்ந்த நீர் பொருந்திய. **நானிலம்**-நான்கு வகைப்பட்ட உலகம்; அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை சிறந்ததன்று ஆதலின் .மற்றவையே சிறந்தனவாகக் கூறப்படும். **பாதவம்**-மரம். **ஆதிய**-முதலிய. **உடைந்திடாது**-மனம் தளராது. **ஆதவம்**-வெயில். 1

18 பொன்னு லாமலர்க் கற்பகா டவிநிழல் போகம்
இன்ன லாம்என வெறுத்து இந்த வனத்திடை இன்பம்
மன்ன யான்புக அருள்என ஈசனை மகவான்
உன்னி வேண்டுவன் எனில்அதன் சிறப்புஎவர் உரைப்போர்?

இதன் சிறப்பை எவர் உரைப்பார்?

தெளிவுரை: பொன் மயமான மலரையுடைய கற்பகச்சோலையின் நிழலில் அனுபவிக்கும் இன்பம் துன்பம் தருவதாகும் என்று வெறுப்பு அடைந்து இந்த நைமிசவனத்தில் இன்பம் பொருந்த யான் புகுதற்கு அருளவேண்டும் என்று இந்திரன் சிவபெருமானை வேண்டிக் கொண்டான் என்றால் இந்த வனத்தின் சிறப்பை எடுத்துரைக்க வல்லார் யார்? எவருமிலர்.

விளக்கம்: பொன் உலாம் மலர்க் கற்பகாடவி-பொன்னை ஒத்த மலர்களையுடைய கற்பக மலர்ச் சோலை. **கற்பகாடவி**- கற்பகம்+ அடவி. **அடவி**-சோலை;காடு. **போகம்**-இனபம். **இன்னலாம் என**-துன்பத்தைத் தருவது என்று. **இன்பம்மன்ன**-இன்பத்தை அடைய. **மகவான்**-இந்திரன். **உன்னி**-மனத்துள் நினைத்து. 2

19. வந்ததே யுண வாகிமற்றுஊண் உணா மறுத்துச்
சந்த யோகிகள் போன்றுபோ கிகள் உறத்தமது
புந்தி போம்விரிவு ஒடுக்கியே பொறிப்பண அடக்கும்
உந்து போகிகள் போன்றுயோ கிகள் உறுமுதிர்கான்.

யோகிகள் வாழும் காடு

தெளிவுரை:வீசும் காற்றையே உணவாக உண்டு வேறு உணவை விரும்பாத யோகிகளைப் போன்று போகிகள் பொருந்தத் தம் மனம் போகும் போக்கின் விரிவை ஒடுக்கிப் புள்ளிகளை யுடைய படத்தை அடக்குகின்ற ஊர்ந்து போகும் பாம்புகள் போல் ஐம்புலன்களையும் அடக்குகின்ற துறவியர் பொருந்திய முதிர்ந்த காடு.

விளக்கம்: துறவியர் தம் ஐம்புலன்களையும் அடக்குவர். பாம்பு தன் படத்தை அடக்கும் தன்மைக்கு யோகியர் புலனடக்கம் உவமை. யோகியர் உணவை உண்ணாமல் காற்றையே உணவாக உண்பர். பாம்பு காற்றை உணவாக உண்பது. இது இருவருக்கும் பொதுத்தன்மை. **உந்துபோகி**-ஊர்ந்து செல்லும் பாம்பு. **முதிர்கான்**-மரம் முதலியன அடர்ந்து முதிர்ந்தகாடு. **வந்ததே**-வீசிய காற்றே. **மாற்றுஉணா**-வேறு உணவு. **புந்தி**-மனம். **பொறிப்பணம்**-புள்ளிகளையுடைய படம். 3

20. எலியும் பாம்பும் அங்கதமும் மஞ்ஞையும் இளமயிலும்
நலியும் கோம்பியும் ஒருத்தலும் மடங்கலும் நவியும்
புலியும் தாம்பெறு பகை ஒரீஇப் புணரும் அவ்வனத்தின்
மெலியும் பாவமும் அறமுமே பகையன்றி விரவா.

20. வனத்தின் இயல்பு

தெளிவுரை: எலியும் பாம்பும், பாம்பும் மயிலும், இறகையுடைய

மயிலும் வருத்தும் பச்சோந்தியும், யானையும் சிங்கமும், மானும் புலியும் ஆகியஎவ தம்மிடையே உள்ள பகைமை நீங்கி ஒன்றாய் வாழும் இயல்பு கொண்டது அவ்வனம். அதில் உள்ளவை வருத்தும் பாவமும் அறமுமே பகையுடையவை பிறபகை அங்குப் பொருந்தா.

விளக்கம்: எலியும் பாம்பும், மயிலும் பாம்பும், மயிலும் பச்சோந்தியும், யானையும் சிங்கமும், மானும் மயிலும் பகைமை நீங்கி அந்த நைமிசவனத்தில் வாழ்ந்தன. வேறு பகையாயின அங்கு இல்லை.

அங்கதம்-பாம்பு. **மஞ்ஞை**-மயில். **கோம்பி**-பச்சோந்தி. **ஒருத்தல்**-யானை. **நவி**-நவ்வி என்பதன் விகாரம் மான். **ஒரீஇ**-நீங்கி 'ஒருவி' என்பது 'ஒரீஇ' என விகாரப்பட்டது. **மெலியும் பாவம்**- மெலிவை வருத்தத்தை ஏற்படுத்தும் பாவம். **விரவா**-கலவா. 4

21. ஆதி மால்அயன் மனத்துஎழும் அகந்தையை அடக்க
மீதுஉ லாம்அழல் மயநெடுந் தம்பம்மிக்கு உயர்ந்த
சோதி மாமரம் முகில் அதில் சூழ்தரு தூமம்
தீதி லாஅகி மணிசித றிய பொறிச் சிவணும்

பாம்பு சிதறிய மணி

தெளிவுரை: பழைமையுடைய திருமாலும் நான்முகனும் ஆகியவரின் மனத்தில் எழும் செருக்கை அடக்குதற் பொருட்டாக மேலே உயர்ந்து தீ மயமான நீண்ட தூண் ஆக உயர்ந்த பேரொளி மாடத்தினின்று எழுந்து மேகத்தில் சூழ்கின்ற புகையானது. குற்றமற்ற பாம்பு தன் பணியைச் சிதறிய பொறியைப் போல் விளங்கும்.

விளக்கம்:பாம்புகள் தம் மணிகளை எங்கும் சிதறியுள்ளது. அது திருமால் அயன் ஆகியோர் செருக்கை அடக்கத் தீத்தம் பத்தினின்று சிதறிய நெருப்புத் துளிகள் போல் விளங்கும்.

மால்-திருமால். **அயன்**-நான்முகன். **அகந்தை**-செருக்கு. திருமாலும் நான்முகனும் தாமே முழுமுதற்கடவுள் என்று எண்ணிக் கருவம் கொண்டு திரிந்தனர். அவர்களின் கருவத்தை அடக்கச்

சிவபெருமான் நெருப்புத் தூணாய் உயர்ந்து நின்றார். இவ்வரலாற்றைப் பின்னே 'அடிமுடி தேடிய சருக்கத்தில்' காணலாம்.

அழல்மய நெடுந்தம்பம்-தீ மயமான உயர்ந்த தூண். **முகில்**-மேகம். **தூமம்**-புகை. **அகி**-பாம்பு. **சிவணும்**-ஒக்கும். 5

22. கரணம் நான்கையும் கடந்தமுக் கண்பெருங் கடவுள்
சரண வாரிசம் பற்றென அடைந்ததா பதர்க்குத்
தருண வேள்வியில் பகைஞர்சா தித்திடப் படாத
அரணம் ஆயது நலம்தரு நைமிசா ரணியம்.

பாதுகாப்பானது நைமிசவனம்

தெளிவுரை: மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு கரணங்களையும் கடந்து மூன்று கண்களையுடைய சிவ பெருமானின் திருவடித்தாமரைகளை ஆதாரமாகக் கொண்டு அடைக்கலமான துறவியர்க்கு, புதுமையான வேள்விசெய்து பகைவரால் துன்பம் செய்யக் கூடாத காவலை யுடைய நன்மை கொண்டதாய் நைமிசவனம் விளங்கியது.

விளக்கம்: சிவனைப் பற்றி ஒழுகும் துறவியர்க்குத் தக்க காவலாக அந்த நைமிசவனம் விளங்கியது. வேள்வியைச் செய்து பகைவரை அழிக்கும் செயல் வேள்வியியற்றுவார்க்கு இருந்தது. அங்ஙனம் அழித்தற்கு இயலாத தன்மை உடையது அந்த நைமிசவனம்.

தருணம்-புதுமை. **கரணம் நான்கு**-மனம், புத்தி, அகங்காரம் சித்தம். **முக்கண் கடவுள்**-சிவபெருமான். **சரண வாரிசம்**-பாத தாமரை. **தாபதர்க்கு**-துறவியர்க்கு. **பகைஞர்**-பகைவர். **அரணம்**-பாதுகாப்பு தாருகாவனத்து முனிவர்கள் சிவனை அழிப்பதற்காக வேள்விசெய்து அதினின்று யானையை உருவாக்கி அனுப்பினர் என்ற செய்தி இங்குக் குறிப்பிடத் தக்கது. 6

23. பேர்அ சோகமே எனக்கொடு பிண்டிவில் மதவேள்
வீச வாளியாய் மலர்ந்துதுன் பங்களே விளைத்த
கோர பாவம் அற்று அப்பெயர் மெய்பெறக் குளிர்ந்து
வார மாதவர் சோகநீத் திடமலர் வழங்கும்.

அசோகமரம் மலர்களைத் துறவியர்க்குத் தரும்

தெளிவுரை: அசோகமரம் அசோகம் எனப்பெயர் பூண்டு, வில்லையுடைய மன்மதனின் வீரம் மிக்க அம்பைப் போன்று மலர்ந்து, துன்பங்களை விளைத்த கொடிய பாவம் அற்று, அப்பெயர் மட்டும் பெற்றுக் குளிர்ந்து துறவியின் தளர்ச்சியைப் போக்கிட மலர்களை அளிக்கும்.

விளக்கம்: பேர் அசோகமே எனக் கொடு-பெயர் மட்டும் பெயர். **அசோகம்**-துன்பம். **அற்றது**-எனக் கொண்டு. **பிண்டிவில்**-அசோகமாகிய வில்; மன்மதனுக்கு அசோகும் வில்லாக இருந்தது. **மதவேள்**-மன்மதன். **வீரவாளியாய்**-வீரத்தையுடைய அம்பாக. **கோரபாவம்**-கொடிய பாவம். **அப்பெயர் மெய்பெற**-அந்தப்பெயரை மட்டும் உடலில் பூண்டு. **வார மாதவர்**-இறைவனிடம் அன்பு கொண்ட துறவியர். **வாரம்**-அன்பு. **சோகம்**-வருத்தம்;தளர்ச்சி.7

24. அருந்த வம்பயின்று ஐம்புலக் குறும்பினை அடர்த்து
திருந்து நன்முனி வரர்வனத் தொருதனித் திகிரி
மரம்த யங்குவெண் குடைநிகர் மதிதனாது உம்பர்
பொருந்து கின்றுழிக் காம்பெனும் பெயரினைப் புதுக்கும்

திகிரி காம்பு என்ற பெயரைப் புதுப்பிக்கும்

தெளிவுரை: அரிய தவத்தைச் செய்து ஐம்புலக் குறும்பைப் போக்கித் திருந்திய நல்ல முனிவரர் வாழும் அந்த நைமிச வனத்தில் நிகர்அற்ற-திகிரி (மூங்கில்) மரம் விளங்கும் வெண்மையான குடையைப் போன்ற சந்திரன் உலவும் வானில் பொருந்தும் போது 'காம்பு' என்ற தனது பெயரைப் புதுப்பித்துக் கொள்ளும்.

விளக்கம்: அந்த வனத்தில் மூங்கில் மரம் சந்திரன் உள்ள வானம் வரை உயர்ந்துள்ளது. அதனால் காம்பு என்று தன் பெயரைப் புதுப்பித்துக்கொள்வது போல் விளங்குகிறது. மூங்கில், குடைக்குரிய காம்பாகவும், மதி, குடையாகவும் கொண்டு என உரைத்தார். **திகிரி**-மூங்கில். காம்பு என்பது மூங்கில் குடைக் காம்பு என்பது குறிப்பு

ஐம்புலக் குறும்பு-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தினால் உண்டாகும் துன்பம். **அடர்த்து**-அழித்து. **ஒருதனித்திகிரி**-

ஒரு தனியான மூங்கில். **தயங்கு**-விளங்கும். **குடைநிகர் மதி தனது உம்பர்**-குடையைப் போன்ற சந்திரன் உள்ள வான். **பொருந்து கின்றுழி**-பொருந்தும் போது. **புதுக்கும்**-புதுப்பித்துக் கொள்ளும். 8

வேறு

25. நெட்டிலை கொண்டு நிமிர்ந்துஎழு தாழை
கிட்டிஇ ணைந்துறு கின்றன தோகைப்
புள்தனை ஒக்கும் மிசைக்கதிர்ப் போது
நட்டிவர் செவ்வியின் அம்பியை ஒக்கும்.

தாழையும் அதன் பூவும்!

தெளிவுரை: நீண்ட மடல் கொண்டு உயர்ந்து எழும் தாழைச் செடிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளமை, மயில் பறவையைப் போன்று விளங்கும். அத்தாழையின் மீது உயர்ந்த பூங்கொத்து அம்மயிலை விரும்பிய செம்மை நிறமுடைய முருகப் பெருமானைப் போன்று விளங்கும்.

விளக்கம்: நீண்ட மடல்களையுடைய தாழைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பவை மயில் போல் விளங்கும். அவற்றுக்கு மேல் உயர்ந்து தோன்றிய பூங்கொத்து மயில்மீது அமர்ந்த செவ்வேளான முருகப்பெருமானைப் போல் திகழும்.
நெட்டிலை-நீண்ட இலை. **நிமிர்ந்தெழு**-உயர்ந்து எழுகின்ற. **கிட்டி**-நெருங்கி. **இணைந்துறுகின்றன**-பிணைந்திருப்பவை. **தோகைப்புள்தனை**-தோகையையுடைய பறவையை-மயிலை. **புட்டனை**-புள்+தனை. **மிசைக்கதிர்**-மேலே உயர்ந்துள்ள தாழையின் பூங்கொத்து. **நட்டு**-விரும்பி. **இவர்**-மயில் மீது ஊர்ந்துவரும். **செவ்வயின் நம்பி**-செம்மையான நிறத்தையுடைய முருகப் பெருமான். 9

26. எரிபுரை கின்ற இளந்தளிர் மாவின்
அருகுற நீல்நிறம் ஆர்தரு புன்னை
மருவுதல் செஞ்சடை வள்ளல் மருங்கு
தருமம் வளர்ப்பவள் தங்குதல் ஒக்கும்.

மாமரத்தின் பக்கத்தில் உள்ள புன்னை மரம் சிவபெருமானின் பக்கத்தில் உமையிருப்பதைப் போல் உள்ளது.

தெளிவுரை: தீயைப் போன்ற இளந்தளிரையுடைய மாமரத்தின் அருகில் பொருந்தி வளர்ந்துள்ள நீல நிறம் உடைய புன்னைமரம் வளர்ந்து பொருந்தியிருப்பது. சிவந்த சடையையுடைய சிவபெருமானின் இடப்பக்கத்தில் முப்பத்திரண்டு அறங்களை வளர்க்கும் பார்வதி தங்கியிருப்பதைப் போல் விளங்கும்.

விளக்கம்: எரிபுரை-தீயைப் போன்ற. **மா**-மாமரம். **நீல்நிறம் ஆர்தருபுன்னை**-நீல நிறம் பொருந்திய புன்னைமரம். **செஞ்சடை வள்ளல்**-சிவந்த சடையை உடைய சிவபெருமான். **தருமம் வளர்ப்பவள்**-முப்பத்திரண்டு அறங்களையும் வளர்ப்பவளான உமையம்மை. தர்மசம்வர்த்தனி. 10

27. ஒன்றினொடு ஒன்றுஇழை ஒண்கழை தம்மில்
வன்தழல் வந்து வளர்ந்தெழ மீது
சென்றுஅமர் மந்தி திடுக்கிட விண்ணின்
மன்றல் நெடுந்தரு வின்மிசை வாவும்.

குரங்கு கற்பக மரத்தில்தாவுதல்

தெளிவுரை: ஒன்றுடனே ஒன்று உராய்வதால் ஒளியுடைய மூங்கிலில் வன்மையுடைய தீயானது வளர்ந்து எழும். அம்மரத்தின் மூங்கில் மீது போய் அமர்ந்த குரங்கு அச்சம் கொண்டு தேவர் உலகில் உள்ள மணம் பொருந்திய கற்பகமரத்தின் மீது தாவும்.

விளக்கம்: மூங்கில்கள் ஒன்றுடன் ஒன்று உராய்வதால் அதனிடை தீ எழுகிறது. அதனால் அதன் மீது உட்கார்ந்திருந்த குரங்கு அஞ்சி அதைவிட்டு உயர்ந்து பாய்ந்து எழுந்து வானத்தில் உள்ள கற்பக மரத்துக்குத் தாவுகிறது.

இழை-உராயும். **ஒண்கழை**-ஒளியுடைய மூங்கில். **வன்தழல்**-வலிய தீ. **மந்தி**-குரங்கு. **மன்றல் நெடுந்தரு**-நறுமணம் உடைய நீண்ட கற்பகம் மரம். **வாவும்**-தாவும். 11

.. பாசிலை கொண்டுஉயர் பாதவம் மென்பூ
மாசறும் ஐயர் மருங்கின் உகுத்தல்
கேசவன் அன்பு கிடைத்தவர் மீது
வீசுறு மொய்ம்மலர் மாரியின் மேவும்.

மலர்மழை பொழிதல்

தளிவுரை: பசுமையான இலையுடன் கூடி உயர்ந்து வளர்ந்த ரத்தின் மென்மையான மலர்கள் குற்றம் இல்லாத துறவியர் மீது சாரிதல், திருமாலின் அன்பு கிடைத்தவர் மீது வீசப்படும் நருங்கிய மலர் மழையைப் போன்று விளங்கும்.

ிளக்கம்: பாசிலை-பசுமை+இலை பசுமையானஇலை பாதவ. **மன்பூ**-மரத்தின் மெல்லிய பூ. **மாசறும் ஐயர்**-குற்றம் அற்ற றவியர். **உகுத்தல்**-சொரிதல். **கேசவன்**-திருமால். **மாரியின்**-ழைபோல். **மேவும்**-பொருந்தும். 12

வேறு

9. இத்தகை நலம்பெற் றுள்ள
எழில்தரு வனத்தில் மேய
மெய்த்தவர் புலன்கள் ஐந்தும்
விரவுறு மனமும் மீட்டு
முத்தலை எஃகம் ஏந்து
முதற்பெருங் கடவுள் அன்பால்
உய்த்தவர் உலக வாழ்வை
ஒருபொரு ளாகக் கொள்ளார்.

உலக வாழ்வை ஒருபொருளாக மதியார்

தெளிவுரை: இத்தகைய நன்மை பல பெற்றுள்ள அழகுடைய வனத்தில் பொருந்தியுள்ள உண்மையான துறவியர் ஐம்புலன்களையும் அவற்றில் கலந்துள்ள மனத்தையும் மீட்டு, மூன்று உச்சியையுடைய சூலப்படையை ஏந்தும் முதற் பெருங்கடவுளான சிவபெருமான் மீது அன்பு செலுத்தியவர் உலகத்து வாழ்வை ஒரு பொருளாக மதிக்க மாட்டார்.

விளக்கம்: நலம்-நன்மை. **எழில்தரு வனம்**-அழகுடைய வனம். **மேய**-பொருந்திய. **புலன்கள் ஐந்து**-சுவை ஒளி ஊறு ஓசை

நாற்றம். **விரவுறு**-பொருந்திய. **முத்தலை எஃகம்**-மூன்று தலைகளை-உச்சிகளை உடைய சூலம். **முதற்பெருங்கடவுள்**-முதன்மையுடைய பெருங்கடவுள். 13

30. உலகினர் செல்வம் நந்தல்
உரைப்பொருள் இரண்டும் கோடல்
இலகுவின் மதியங் காட்ட
என்றுமோர் தகைத்தாய்ச் சேறல்
விலகுதம் செல்வம் எங்கள்
விழுப்பொருள் ஆய அண்ணல்
அலகுஇல்செஞ் சோதிப் பின்னல்
அணிமதி உணர்த்த வாழ்வார்.

சிவபெருமான் சூடிய பிறை உணர்த்துவது

தெளிவுரை: உலகத்தவர்க்குச் செல்வமானது பெருக, அறநூலால் உரைக்கப்படும் பெருள்களான அறம் இன்பம் என்னும் இரண்டும் பெறுதலும், இழப்பதும் அச்செல்வமானது குறையின் அறம் இன்பம் என்னும் இரண்டும் விலகுதலையும் வானத்தில் உலவும் சந்திரன் வளர்தலாலும் தேய்வதாலும் புலப்படுத்த இல்லறத்தார் வாழ்வர். ஆயின் அங்ஙனம் இன்றி என்றும் ஓர் தன்மையாய் செல்வமாய்ப் பெருமையுடைய அளவற்ற பேரொளியாய் உள்ள சிவபெருமானின் பிறைச்சந்திரன் உணர்த்த நைமிச வனத்து முனிவர் வாழ்பவர் ஆவார்.

விளக்கம்: **நந்த**-பெருக, தேய **உரைப்பொருள்**-அறநூலால் சிறந்தவை எனப் பாராட்டப்படுபவையான அறம், இன்பம் இலகு **விண்மதியம்**-வானில் விளங்கும் சந்திரன். வானில் விளங்கும் சந்திரன் வளரும், தேயும் ஆனால் சிவபெருமான் சடையில் உள்ள பிறைச்சந்திரன் ஒரே தன்மையாய் விளங்கும். **சேறல்**- விளங்கும் **விழுப்பொருள்**-சிறந்த பொருள் **அண்ணல்**- சிவபெருமான். **அலகில்**-அளவற்ற. **செஞ்சோதி**-சிவந்த பேரொளியான சிவபெருமான். **அணிமதி**-சூடும் பிறைச்சந்திரன். 14

31. அன்புகொண்டு அருஞ்சிவத் தோடு
அயர்ந்துஅனு பவித்து இருக்கும்
இன்பமும் முத்தி அன்று என்று
இகம்து றந் துடைய மேலோர்
துன்பம்மிக்கு எய்தி மின்னில்
தொலைந்து போம்சிற்றின் பத்தில்
தன்பரிவு அறத்து றத்தல்
சாற்றவேண் டுவதும் உண்டோ?

வீடும் வேண்டா விறலினர்

தெளிவுரை: அன்பு பூண்ட அரிய சிவபெருமானுடன் கூடி அனுபவித்திருக்கும் இன்பமும், முத்தியன்று என்று அதை நீக்கி இவ்வுலக வாழ்வைத் துறந்துள்ள மேலோர் துன்பத்தை மிகுதியாய் அடைந்து, வானில் தோன்றும் மின்னல் தோன்றி மறைவதைப் போன்ற சிற்றின்பத்தில் தம் பற்று முழுதும் துறந்து வாழ்தலைக் கூறவும் வேண்டுமோ!

விளக்கம்: அடியார்கள் சிவபெருமானிடம் வீடுபேற்றையும் விரும்பாது அன்பால் அவரைக் கும்பிடுவதையே கொள்கையாகக் கொண்டவர். இதனை 'கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலினர்' என்ற பெரிய புராணம் விளக்கும். இதனை 'அன்புகொண்டு.... முத்தியன்று' என்ற தொடர் விளங்குகிறது. **இகம்**-இவ்வுலக இன்பம். **மின்னில் தொலைந்து போம் சிற்றின்பம்**-மின்னலானது தோன்றியவுடன் மறையும். அத்தகையது உலகத்துச் சிற்றின்பம் என்பது கருத்து. 15

32. சேயரி நெடுங்கண் செவ்வாய்ச்
சிறுநுதல் கரிய கூந்தல்
வேய்அமர் வலயப் பொற்றோள்
வெற்புறழ் குவவுக் கொங்கை
ஆயிழை மகளிர் நேயத்து
அணையினும் அவரை ஈன்ற
தாய்எனக் கருதும் நீரார்
தபனியம் ஓட்டில் காண்பார்

மங்கையர் வந்து வலிய தழுவினாலும் அவரைத் தாய் எனக் கருதுவர்

தெளிவுரை: அவ்வனத்தில் வாழும் முனிவர் சிவந்த வரிகளை உடைய நீண்டகண்களையும் கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாயையும், சிறிய நெற்றியையும், கரிய கூந்தலையும், மூங்கிலைப் போன்ற வலயம் என்ற அணி அணிந்த அழகிய தோளையும், மலை போன்று விளங்கும் திரண்ட கொங்கைகளையும் உடைய ஆராய்ந்து எடுக்கப்பட்ட அணிகளை அணிந்த மடந்தையர் காதலுடன் தம்மைத் தழுவினாலும் அம்மடந்தையரைத் தம்மைப் பெற்ற தாயைப் போன்று கருதுவார். பொன்னைத் தாழ்ந்த ஓட்டிலே காண்பவர் ஆவார்.

விளக்கம்: **சேயரி**-செம்மை+அரி சிவந்த வரிகள். **செவ்வாய்**-செம்மை+வாய் கொவ்வைக்கனி போன்ற சிவந்த வாய். **வேய் அமர்**-மூங்கிலைப் போன்ற. **வலயப் பொன் தோள்**-வளை என்ற அணியை அணிந்த அழகிய தோள். **வெற்பு உறழ்**-மலையைப் போன்ற. **குவவுக் கொங்கை**-திரண்ட முலைகள். **ஆய்இழை**-ஆராய்ந்து எடுக்கப்பட்ட அணிகள். **நேயம்**-அன்பு, காதல், காதலுடன் மங்கையர் தம்மை அணைத்துக் கொண்டாலும் அவரைத் தாய்போல் எண்ணுபவர். **நீரார்**-தன்மை உடையவர் **தபனியம் ஒட்டில் காண்பார்**-தபனியம்-பொன்; உடைந்த ஓட்டையும் பொன்னையும் ஒன்றாகவே நினைப்பவர் துறவியர். இதனைப் பெரியபுராணம் 'ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்' என விளக்கும். ஒடு என்பது மட்பாண்டம் முதலியவற்றின் உடைத்த ஓடு. ஒரு மதிப்பும் அற்ற ஓடு உயர்ந்த பொன்னும் துறவியர்க்கு ஒரே தன்மையுடையன. இரண்டையும் அவர்கள் விரும்பார் என்பது கருத்து. ஓட்டை விலக்குவதைப் போன்று பொன்னையும் விலக்கி ஒதுக்குவர் என்க. 16

33. பற்றுஇகல் இலாத ஞானப்
பண்பினர் நட்டார்ப் பேண
மற்றவர்ச் செறுக்க உன்னில்
வல்லமெய்த் தவத்தின் மேலோர்
முற்றுஉறும் இன்ப துன்ப
முன்புள தொடர்பு உடற்குஎன்று
அற்றம்இல் மகிழ்ச்சி வாட்டம்
அகன்றநல் துணிவின் மிக்கார்

துறவியர் இயல்பு

தெளிவுரை : நட்பும் பகையும் இல்லாத ஞானப் பண்பை உடையவர். தாம் நட்புக் கொண்டவரைக் காப்பாற்றவும், அயலாரை- பகைவரை-அழிக்கவும் எண்ணினால் எண்ணிய வண்ணமே செய்யும் வல்லமை வாய்ந்த மெய்யான தவத்தையுடைய மேலோர் நிறையும் இன்பமும் துன்பமும் முன்னை வினைத் தொடர்பால் உடலுக்கு உண்டாகும் என்று, எல்லையற்ற மகிழ்ச்சியும் துன்பமும் ஆகிய இரண்டும் அகன்ற நல்லதுணிவில் மிக்கவராய் வாழ்வார்.

விளக்கம் : **பற்று இகல் இலாத**-நட்பும் பகையும் இல்லாத துறவியர்க்கு நண்பரும் பகைவரும் இல்லை என்பது கருத்து. **நட்டார்ப் பேண**-நண்பரைக் காக்க. **மற்றவர்**-பகைவர். **செறுக்க**-அழிக்க தண்டிக்க. **உன்னில்**-நினைத்தால். **முற்றுஉறும் இன்பம்**-நிறைந்த இன்பம். இன்பமும் துன்பமும் உடலுக்கு முன் செய்த வினையால் உண்டாவன. உயிருக்கு இல்லை என்பது துறவியர் கருத்து. **அற்றமில் மகிழ்ச்சி**-அளவில்லாத மகிழச்சி. **வாட்டம்**-வருத்தம் அளவில்லாத வாட்டம் என இயைக்க வேண்டும். 17

34. கண்டிகைக் கலனும் நீற்றுக்
களபமும் பொலிந்த யாக்கை
மண்டிதர் சடிலக் கற்றை
மவுலியர் நிறைந்த தெண்ணீர்.
குண்டிகை தண்டு தாங்கு
கையினர் குன்ற வில்லி
புண்டரி கத்தாட்கு அன்பு
பொருந்திய மனத்தர் மாதோ.

துறவியர் இயல்பு (தொடர்ச்சி)

தெளிவுரை: உருத்திராக்கமாகிய அணிகலனும், திருநீறாகிய உடற்பூச்சம் விளங்கும்படியான உடற்கோலம் கொண்டவர். சடையான கற்றை முடியினர். தெளிந்த நீர்க்கமண்டலத்தையும் தண்டையும் உடைய கைகளை யுடையவர். மேருமலையை

வில்லாகக் கொண்ட சிவபெருமானின் தாமரைமலர் போன்ற திருவடிகளுக்கு அன்புடைய மனத்தவர்.

விளக்கம்: கண்டிகைக்கலன் உருத்திரமாலையான அணிகலன். **நீற்றுக்களபம்**-திருநீறு என்ற கலவைச் சாந்து. **மண்டிதர்**-அலங்காரம் உடையவர். **சடிலக் கற்றை மவுலியர்**-கற்றையான சடைமுடியுடையவர். **மவுலி**-முடி **சடிலம்**-சடை. **குண்டிகை**-கமண்டலம். **தண்டு**-திரிதண்டு. **குன்ற வில்லி**-மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமான். **புண்டரிகத்தாள்**-தாமரைமலர் போன்ற திருவடி. **மாதோ**-அசை. 18

35. கண்புனல் துளிப்ப நெஞ்சம்
கரைந்துஉக மயிர்பொடிப்பத்
தண்புனல் தரித்த வேணித்
தம்பிரான் பூசை செய்வார்
பண்பயில் மறைகள் நான்கின்
பயத்தவாம் அஞ்சுஎ ழுத்து
நண்புடன் பகருகின்ற
நாவர்முக் குற்றம் தீர்ந்தார்.

துறவியர் இயல்பு (தொடர்ச்சி)

தெளிவுரை: துறவியர் கண்களில் நீர் துளிக்கவும் உள்ளம் கரைந்து நெகிழவும் உடலில் உள்ள மயிர் சிலிர்க்கவும் குளிர்ந்த நீரைத் தரித்த வேணியையுடைய தம் இறைவனான சிவபெருமானுக்குப் பூசை செய்வார். இசையுடன் பொருந்திய நான்கு மறைகளில் கூறப்படும் திருவைந்தெழுத்து மந்திரத்தை அன்புடன் கூறுகின்ற நாவை உடையவர். காமம் வெகுளி மயக்கம் என்ற மூன்று குற்றங்களையும் நீக்கியவர்.

விளக்கம்: கண்புனல்-கண்ணீர். **மயிர்பொடிப்ப**-உடல் மயிர் சிலிர்க்க. **தண்புனல் தரித்த வேணித்தம்பிரான**-குளிர்ந்த நீரையுடைய கங்கையாற்றைத் தரித்த முடியையுடைய சிவபெருமான். **பண்பயில் மறைகள் நான்கு**-இசைபொருந்திய நான்கு வேதங்கள். **அஞ்செழுத்து**-திருவைந்தெழுத்து. **முக்குற்றம்**-காமம், வெகுளி, மயக்கம். 19

36. வேதன்மால் தமையும் அன்னார்
வியன்பதம் தமையும் கொள்ளார்
ஆதிநா யகன்எம் ஈசன்
அருளினால் அவர்தம் செய்கை
யாதுமோர் திரணம் தன்னை
இயற்றிட நிறுவ வல்லார்
ஒதுறு துதிநிந் தைக்கண்
உவகையும் வெறுப்பும் இல்லார்.

துறவியர் இயல்பு (தொடர்ச்சி)

தெளிவுரை: நான்முகன், திருமால் போன்றவரின் பெருந் திருவடிகளையும் வணங்கமாட்டார், ஆதி இறைவனான எம் சிவபெருமான் அருளால் அவர்களின் செய்கைகளை ஒருநொடிப் போதில் செய்து முடிக்க வல்லவர். பிறரால் கூறப்படும் துதியிலும், பழியிலும் மகிழ்ச்சியையும் வெறுப்பையும் பெற்றிராதவர்.

விளக்கம்: வேதன்-நான்முகன். **மால்**-திருமால். **பதம்**-திருவடி. **ஆதிநாயகன்**-ஆதியான சிவபெருமான். **ஓர்திரணம்**-ஒரு நொடிப்போது துறவியர் தம் செய்கையை ஓர்திரணம் இயற்ற வல்லவர் என இயைக்க. **துதி**-பாராட்டு போற்றுதல். **நிந்தை**-பழி, இகழ்ச்சி. **உவகை**-மகிழ்ச்சி. 20

37. ஆதரவு இன்சொல் தூய்மை
அருள்நெறி ஒழுக்கம் மெய்ம்மை
மேதகவு உடையர் தீமை
விரகம்பொய் ஆசை கோபம்
காதரவு இலர்வே தாந்தக்
கருத்துஉணர் பெரியர் செம்பொன்
பூதரவு இல்லி தானம்
புகுந்து இறைஞ் சுதற்கு நேயர்.

துறவியர் இயல்பு (தொடர்ச்சி)

தெளிவுரை: அன்பு, இன்சொல், தூய்மை, அருள்நெறி, ஒழுக்கம், வாய்மை ஆகிய மேன்மையான தகுதி உடையவர். காமம், பொய்,

வில்லாகக் கொண்ட சிவபெருமானின் தாமரைமலர் போன்ற திருவடிகளுக்கு அன்புடைய மனத்தவர்.

விளக்கம்: கண்டிகைக்கலன் உருத்திரமாலையான அணிகலன். **நீற்றுக்களபம்**-திருநீறு என்ற கலவைச் சாந்து. **மண்டிதர்**-அலங்காரம் உடையவர். **சடிலக் கற்றை மவுலியர்**-கற்றையான சடைமுடியுடையவர். **மவுலி**-முடி **சடிலம்**-சடை. **குண்டிகை**-கமண்டலம். **தண்டு**-திரிதண்டு. **குன்ற வில்லி**-மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமான். **புண்டரிகத்தாள்**-தாமரைமலர் போன்ற திருவடி. **மாதோ**-அசை. 18

35. கண்புனல் துளிப்ப நெஞ்சம்
கரைந்துஉக மயிர்பொடிப்பத்
தண்புனல் தரித்த வேணித்
தம்பிரான் பூசை செய்வார்
பண்பயில் மறைகள் நான்கின்
பயத்தவாம் அஞ்சுஎ ழுத்து
நண்புடன் பகருகின்ற
நாவர்முக் குற்றம் தீர்ந்தார்.

துறவியர் இயல்பு (தொடர்ச்சி)

தெளிவுரை: துறவியர் கண்களில் நீர் துளிக்கவும் உள்ளம் கரைந்து நெகிழவும் உடலில் உள்ள மயிர் சிலிர்க்கவும் குளிர்ந்த நீரைத் தரித்த வேணியையுடைய தம் இறைவனான சிவபெருமானுக்குப் பூசை செய்வார். இசையுடன் பொருந்திய நான்கு மறைகளில் கூறப்படும் திருவைந்தெழுத்து மந்திரத்தை அன்புடன் கூறுகின்ற நாவை உடையவர். காமம் வெகுளி மயக்கம் என்ற மூன்று குற்றங்களையும் நீக்கியவர்.

விளக்கம்: கண்புனல்-கண்ணீர். **மயிர்பொடிப்ப**-உடல் மயிர் சிலிர்க்க. **தண்புனல் தரித்த வேணித்தம்பிரான**-குளிர்ந்த நீரையுடைய கங்கையாற்றைத் தரித்த முடியையுடைய சிவபெருமான். **பண்பயில் மறைகள் நான்கு**-இசைபொருந்திய நான்கு வேதங்கள். **அஞ்செழுத்து**-திருவைந்தெழுத்து. **முக்குற்றம்**-காமம், வெகுளி, மயக்கம். 19

36. வேதன்மால் தமையும் அன்னார்
வியன்பதம் தமையும் கொள்ளார்
ஆதிநா யகன்எம் ஈசன்
அருளினால் அவர்தம் செய்கை
யாதுமோர் திரணம் தன்னை
இயற்றிட நிறுவ வல்லார்
ஓதுறு துதிநிந் தைக்கண்
உவகையும் வெறுப்பும் இல்லார்.

துறவியர் இயல்பு (தொடர்ச்சி)

தெளிவுரை: நான்முகன், திருமால் போன்றவரின் பெருந் திருவடிகளையும் வணங்கமாட்டார், ஆதி இறைவனான எம் சிவபெருமான் அருளால் அவர்களின் செய்கைகளை ஒருநொடிப் போதில் செய்து முடிக்க வல்லவர். பிறரால் கூறப்படும் துதியிலும், பழியிலும் மகிழ்ச்சியையும் வெறுப்பையும் பெற்றிராதவர்.

விளக்கம்: வேதன்-நான்முகன். **மால்**-திருமால். **பதம்**-திருவடி. **ஆதிநாயகன்**-ஆதியான சிவபெருமான். **ஓர்திரணம்**-ஒரு நொடிப்போது துறவியர் தம் செய்கையை ஓர்திரணம் இயற்ற வல்லவர் என இயைக்க. **துதி**-பாராட்டு போற்றுதல். **நிந்தை**-பழி, இகழ்ச்சி. **உவகை**-மகிழ்ச்சி. 20

37. ஆதரவு இன்சொல் தூய்மை
அருள்நெறி ஒழுக்கம் மெய்ம்மை
மேதகவு உடையர் தீமை
விரகம்பொய் ஆசை கோபம்
காதரவு இலர்வே தாந்தக்
கருத்துஉணர் பெரியர் செம்பொன்
பூதரவு இல்லி தானம்
புகுந்து இறைஞ் சுதற்கு நேயர்.

துறவியர் இயல்பு (தொடர்ச்சி)

தெளிவுரை: அன்பு, இன்சொல், தூய்மை, அருள்நெறி, ஒழுக்கம், வாய்மை ஆகிய மேன்மையான தகுதி உடையவர். காமம், பொய்,

ஆசை, சினம், அச்சம் ஆகியவை இல்லாதவர் வேதாந்தத்தின் உட்பொருளை உணர்ந்த பெரியர். செம்பொன்னால் ஆனமேரு மலையை வில்லாக உடைய சிவபெருமான்கோயில் புகுந்து வணங்குகின்ற அன்பு பூண்டவர்.

விளக்கம்: **ஆதரவு**-அன்பு. **மேதகவு உடையர்**-மேன்மையான தகுதி உடையவர். **விரகம்**-காதல். **காதரவு**-அச்சம். **செம்பொன் பூதரவில்லி**-செம்பொன் மலையான மேருவை வில்லாகக் கொண்ட சிவபெருமான். **தானம்**-இடம், கோயில். **இறைஞ்சுதற்கு**-வணங்குதற்கு. **பூதரம்**-மலை. 21

வேறு

38. இப்பெரு முனிவர் தம்முள் முன்பு ஒருநாள்
இருந்தவர் காசிபன், வசிட்டன்,
துப்புஉறழ் சடிலக் கௌதமன், பாரத்
துவசன், கண் ணுவன்,சவு னகனே,
மெய்ப்புலத்து இயன்ற சனகன்நா ரதன்,வான்
மீகன்,சா தாதபன் ஆதி
ஒப்புஇலர் அநேகர்குழுமிஅவ் வனத்தின்
ஒருபுடை வந்துவீற் றிருந்தார்.

காசிபர் முதலிய முனிவர்கள் வந்திருத்தல்

தெளிவுரை: இத்தகைய இயல்புடைய பெருமுனிவர்கள் காசிபர், வசிட்டர், பவழம் போன்ற சடையையுடைய கௌதமர், பரத்துவாசர், கண்ணுவர், சவுனகன், மெய்யறிவையுடைய சனகர், நாரதர், வான்மீகர், சாதாதபர் முதலிய முனிவர்கள் கூடி அந்த நைமிசவனத்தில் ஒரு பக்கத்தில் வந்து அமர்ந்திருந்தனர்.

விளக்கம்: **இருந்தவக்காசிபன்**-பெரிய தவத்தையுடைய காசிப முனிவர். **துப்புஉறழ் சடிலம்**-பவளம் போன்ற சிவந்த சடை. **கௌதமன்**-கௌதம முனிவர். **கண்ணுவன்**-ஒரு முனிவர். **சனகன்**-சனக முனிவர். **வான்மீகன்**-வான்மீக முனிவர். **சாதாதபர்**-ஒரு முனிவர். 22

39. இருந்தவர் சனன சாகரம் கடத்தற்கு
இணையறும் பரசிவ கதியில்
பொருந்தினர்க்கு அன்றி அரிதுஎனத் தமது
புந்திகொண்டு அனைவரும் அதுதான்
வருந்திறம் முயல்வது எந்நெறி என்னா
மற்றதை ஆய்ந்தனர் உசாவ
அருந்ததி கொழுநன் முதுக்குறைவு அதனால்
அடிகள்கேண் மின்கள்என்று அறைவான்.

ஆராய்ச்சி செய்தனர்

தெளிவுரை: பெரிய தவத்தை உடைய முனிவர் பிறவியான கடலைக் கடத்தற்கு ஒப்பில்லாத பரசிவ கதியில் செல்பவர்க்கு அல்லாது அரிதாகும் என்று தமது அறிவினால் ஆராய்ந்தவராய் அனைவரும் அதுதான் வரும்படி முயல்வது எந்நெறி என்று அலசி ஆராய்ந்தபடி இருந்தனர். அருந்ததியின் கணவனான வசிட்ட முனிவர் தம் பேரறிவால் 'அடிகளே கேளுங்கள்' என்று உரைக்கலானான்.

விளக்கம்: **இருந்தவர்**-பெருந்தவத்தை உடையவர். **சனன சாகரம்**-பிறவிக்கடல். **அரிது**-இயலாது. **புத்தி**-அறிவு. **என்னா**-என்று. **உசாவ**-ஆராய. **அருந்ததி கொழுநன்**-வசிட்ட முனிவர். **அடிகள்**-துறவியரே, விளி. **முதுக்குறைவு**-பேரறிவு. **கேண்மின்**-கேளுங்கள். 23

வேறு

40. எவ்வகைப் பொருள்களும் ஈய வல்லது
செவ்விய தவம்அதே தெரியின் வேறிலை
இவ்வுல கினில் அஃது இயற்று கின்றதே
உவ்வுடல் எடுத்தபேர் உறுதி என்பவே.

தவமே உறுதி தருவது

தெளிவுரை: எல்லாவகைப் பொருள்களையும் தர வல்லது நல்ல தவமே அல்லாது ஆராய்ந்தால் வேறு ஒன்றும் இல்லை. இந்தவுலகத்தில் அந்தத் தவத்தை இயற்றுவதே அந்த உடல் எடுத்ததன் பெரும்பயனாகும் என்று உரைப்பர்.

விளக்கம்: செவ்விய-நல்ல. **தெரியின்**-ஆராய்ந்தால். **பேர் உறுதி**-சிறந்த பயனாகும். **என்பவே**-என்று கூறுவர். 24

41. தவத்தினில் சமர்புரி சமனை வெல்லலாம்
தவத்தினில் எழுகடல் தமையும் உண்ணலாம்
தவத்தினில் வடவரை களைந்து தாங்கலாம்
தவத்தினில் அனலமும் தரித்தல் ஆகுமே.

தவப்பயன்

தெளிவுரை: நல்ல தவத்தைச் செய்வதால் இயமனை வெல்லலாம். தவத்தைச் செய்வதால் ஏழுகடல்களையும் குடிக்கலாம். தவத்தைச் செய்வதால் வடக்கில் உள்ள மேருமலையைப்பிடுங்கிச் சுமக்கலாம். தவத்தைச் செய்வதால் தீயைத் தாங்கலாம்.

விளக்கம்:அமர்புரி-போரிடும். **சமன்**-இயமன். **உண்ணலாம்**-குடிக்கலாம். **வடவரை**-வடக்குத்திக்கில். உள்ளமேருமலை. **அனலம்**-தீ. **தரிக்கலாம்**-கையில் எடுக்கலாம். 25

42. நன்றிகொள் தவத்தில்ஐம் பூதம் நல்கவும்
துன்றிய உயிர்த்தொகை தோற்று விப்பவும்
அன்றிய உலகுஉயிர் அடவும் நண்ணினர்க்கு
ஒன்றுஅருள் புரியவும் ஒருங்கின் எய்துமால்.

செய்தற்கரியன செய்யலாம்

தெளிவுரை : நன்மை அமைந்த தவத்தால் ஐம்பூதங்களைப் படைக்கவும், நெருங்கிய உயிர்க் கூட்டங்களைத் தோற்றுவிக்கவும், பகையான உயிர்களை வெற்றி கொள்ளவும், அடைந்தவர்க்கு ஒன்றைத் தரவும் கூடும்.

விளக்கம்: நன்றி-நன்மை. **ஐம்பூதம்**-மண், விண், தீ, நீர், காற்று. **துன்றிய**-நெருங்கிய. **உயிர்த்தொகை**-உயிர்களின் கூட்டம். **அன்றிய உலகுஉயிர்**-பகையான உலகத்து உயிர்கள். **நண்ணினர்க்கு**-அடைந்தவர்க்கு. **எய்தும்ஆல்**-அடையும். **ஆல்**-அசைநிலை. 26

43. அண்டமும் பொருள்களும் அடங்கு பேர்உருக்
கொண்டிட அணுஎனக் குறுக ஆழ்புனல்
வின்தலன் மிசைச்செல விளிவுஇ லாதுற
ஒண்டவம் அன்றியாதுஉதவ வல்லதே.

பேருரு முதலியன கொள்ளல் தவத்தால் இயலும்

தெளிவுரை: உலகமும் இதில் உள்ள பொருள்களும் ஒருங்கே அடங்கும் படியாய்ப் பெரிய வடிவு கொள்ளவும், அணுப்போல் குறுகிய வடிவு கொள்ளவும் ஆழமான நீரிலும் வானத்திலும் செல்லவும் இறப்பு இல்லாது வாழவும் சிறந்த தவமே அல்லாது வேறு யாது இருக்கின்றது? எதுவும் இல்லை.

விளக்கம்: அண்டம்-உலகம். **அடங்கும்**-உள்ளே கொள்ளும் **அணு எனக்குறுக**-அணுவைப்போன்று சிறியதாய் ஆக. **விண்டலன் மிசை**-வானத்தின் மீது. **செலவு**-செல்லல். **விளிவிலாது**-அழியாது, இறவாது. **பேருருக்கொள்ளல்**-அட்டமாசித்திகளுள் ஒன்றான கரிமாசித்தி. **அணுவெனக்குறுகல்**-இலகிமா என்ற சித்தி விண்மிசை. **செல்லல்**-பிராகாமிய சித்தி. **விளவிலாதுறல்**-ஈசத்துவம். 27

44. பொன்தணி மார்பகப் புனிதன் ஆதியை
நின்றுழி தவத்தினால் நினைந்துஅ ழைத்திடல்
அன்றியும் அவர்க்குஅரி தாயவெள்ளியம்
குன்றிறை சரணமும் குறுகல் ஆகுமால்.

தெய்வங்களை வரவழைக்கலாம்

தெளிவுரை: இலக்குமி தங்கிய மார்பை யுடைய ஆதியான திருமாலை நின்றவிடத்துத் தவத்தால் நினைந்து அழைத்தலும், அவர்க்கு அரிதான வெள்ளிமலையில் வீற்றிருக்கும் கயிலைமலைத் தலைவனான சிவபெருமானின் திருவடிகளும் நாம் அடையலாம்.

விளக்கம்: பொன் தணி மார்பகம்-இலக்குமி தங்கப்பெற்ற மார்பு. **புனிதன்**-திருமால். **ஆதி**-நான்முகன். 28

45. ஆதலின் ஒப்புஉயர்வு அகன்று தன்னைநேர்
மாதவ மேசெயும் வழக்க மாம்என
ஓதினன் வசிட்டன்அங்கு உணர்த்த நின்றசா
தாதபன் இனையன சாற்றல் மேயினான்.

சாதாதபன் கூ[illegible] முதல்

தெ[illegible]: ஆதலால் ஒப்பு உயர்வு நீங்கித் தன்னையே ஒத்த மாதவம் செய்யும் வழக்கம் சிறந்ததாகும் என்று வசிட்ட முனிவர்

உரைத்தார். அங்கு அதைக் கேட்டுநின்ற சாதாதபர் பின்வருவனவற்றைக் கூறத் தொடங்கினார்.

விளக்கம்: மாதவம்-சிறந்த தவம். **செயும்**-இயற்றும். **ஓதினன்**-கூறினான். **சாதாதபர்**-ஒருமுனிவர். **சாற்றல் மேயினான்**-கூறத்தொடங்கினார். 29

வேறு

46. தரும மேஇணை யில்பொருள் தரையிடைத் தகைசால்
ஒருமை இன்பினை உதவிவிண் உலகினும் உடன்போய்
அருமை இன்பமும் உய்த்து அந்தகன் செறுமெனில் அறமே
இருமை யும்துணை யாகுவது அன்றிமற் றில்லை.

சாதாதப முனிவர் கூறுதல்

தெளிவுரை: இவ்வுலகத்தில் அறமே ஒப்பற்ற பொருளாகும். ஒருவர்க்கு அது தகுதியுடைய ஒன்றுபட்ட இன்பத்தை அளித்து விண்ணுலகத்திலும் போய் இம்மை மறுமை ஆகிய இரண்டு இன்பத்தையும் தந்து, உயிரைக் கவர்வதற்கு வரும் இயமனையும் அழிக்கும் என்றால், இம்மை மறுமை என்னும் இரண்டிற்கும் துணையாவது அதுவன்றி வேறு ஒன்று அன்று.

விளக்கம் : இணைஇல்பொருள்-நிகர் இல்லாத பொருள். **தரையிடை**-உலகத்தில். **இன்பினை**-இன்பத்தை. **அருமை இன்பம் உய்த்து**-அரிய இன்பத்திலும் செலுத்தி. **அந்தகன் செறும்**-இயமனை அழிக்கும். **மற்றுஇல்லை**-வேறு ஒன்று இல்லை. 30

47. புகழும் கல்வியும் செல்வமும் வீரமும் பொலிவும்
மகிழும் கோலமும் ஒழுக்கமும் விழுப்பமும் வழங்கி
இகழும் பாவமும் பழியும்நீத்து அரன்உமை இடத்தில்
திகழும் பூதனாய் அவர்அருள் செய்யவும் செய்யும்.

அறம் சிவனிடத்துச் சேர்க்கும்

அழகிய தோற்றத், அறமானது புகழ், கல்வி, செல்வம், வீரம், ஆகியவற்றை வழங்கி, இகழ்கின்ற பாவ[illegible] கோலம், ஒழுக்கம் மேன்மை போக்கிச் சிவபெருமான் உமையிடத்தில் திகழும் பூதனாக [illegible]கியவற்றைப் அருள் செய்யவும் செய்யும்.

விளக்கம்: பொலிவு-அழகு. **மகிழும் கோலம்**-மகிழக் கூடிய தோற்றம். **விழுப்பம்**-மேன்மை. **நீத்து**-போக்கி. **அரன்உமை**-சிவபெருமான் உமையம்மை. 31

48. ஏற்றின் மேல்வரும் எந்தைதன் எழில்உரு அறமா
மாற்றில் அன்னதே ஆற்றுக என்றுஅவர் அறைய
நீற்றின் மேனியில் கண்டிகை மாலைகள் நிரம்ப
வீற்றி ருந்திடும் **கவுதமன்** இனையன விளம்பும்

சாதாதபர் கூறி முடித்தலும் கவுதமன் கூறத்தொடங்கலும்

தெளிவுரை: காளை ஊர்தியின் மீது எம் தந்தையினது அழகு உருவான அறத்தை ஆற்றில் அறத்தையே செய்க என்று சாதாதபர் முனிவர் உரைத்தார். திருநீற்றை அணிந்த மேனியில் உருத்திராக்கமணி மாலைகளை நிரம்ப அணிந்து அவ்வனத்தில் வீற்றிருந்த கௌதம முனிவர் பின்வருவனற்றைக் கூறலானார்.

விளக்கம்: ஏறு-எருது. **எந்தை**-எம் தந்தையான சிவபெருமான். **எழில் உரு**-அழகிய வடிவம். **ஆற்றுக**-செய்க. **அவன்**-சாதாதப முனிவர். **நீற்றின் மேனியில்**-விபூதி பூசப்பெற்ற மேனியில். **கண்டிகை மாலைகள்**-உருத்திராக்க மாலைகள். **கவுதமன்**-ஒரு முனிவர். 32

49. மனைகள் தோறும்உற்று இருந்திடும் கபாலிஉள் மகிழ
அனக மால்விடை ஊர்ந்துவந்து எளிதினில் அருளக்
கனைக ருங்கடல் உலகினில் செய்வது கருதின்
வினைகள் தீர்ந்திடு **தானமே** அன்றி **வேறு உளதோ.**

செய்யத்தக்கது தானம்

தெளிவுரை: கவுதம முனிவர், வீடுகள் தோறும் போய் இரத்தலைச் செய்யவும் சிவபெருமானின் மனம் மகிழத் திருமாலான அழகிய காளை ஊர்தியில் இவர்ந்து வந்து எளிதில் அடியார்க்கு அருளும் ஒலிக்கும்படியான கடல் சூழ்ந்த உலகில் செய்யக் கூடியது ஒன்றை ஒருவர் எண்ணினால், அது தீவினைகள் நீங்கும் தானமே அல்லாது வேறு ஏதும் உள்ளதோ? இல்லை.

விளக்கம்: கபாலி-சிவபெருமான், பிரமனின் தலையேயான கபாலத்தை ஏந்திச் சிவபெருமான் வீடுதோறும் யாசித்தார்.

அனகமால்விடை-அழகிய திருமாலான காளை. **கனை கருங்கடல்**-ஒலிக்கும் கரிய கடல். **தானம்**-கொடை. 33

50. அரிய ஆகிய கலைகள்யா வையும்பயில் அறிஞர்
பெரிய மாதவர் உயர்தரு குலத்திடைப் பிறந்தோர்
உரிய தானியைப் புகழ்ந்தனர் உறுவர்அவ் வளவோ
தரிய லார்களும் உறவுசெய் தவன்புடை சார்வார்.

தானத்தைப் பலரும் புகழ்வர்

தெளிவுரை: அரியனவான கலைகள் யாவற்றையும் கற்ற அறிஞர் பெருமையுடைய மாதவம் உடையவர், உயர்ந்த குலத்தில் தோன்றியவர் ஆகியவர் சிறந்த கொடையாளர்களைப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். அம்மட்டோ, பகைவர்களும் அன்பு காட்டி அத்தகையவனிடம் சேர்வர்.

விளக்கம்: பயில் அறிஞர்-கற்ற அறிஞர். **தானியை**-தானம் செய்வரை. **புகழ்ந்தனர் உறுவர்**-புகழ்ந்து அடைவர். **தரியலார்**-பகைவர். 34

51. சூழும் வான்முகில் எனப்பயன் தூக்குறாது அளிப்போன்
பாழி மாபுகழ் படலைபோய்ப் பரந்திடும் உலகீர்
ஏழு மாமயன் மால்முதல் இமையவர் தமில்தாம்
வாழு மேம்பதம் மனையென வாக்குற மலைவார்.

நான்முகன் திருமால் பாராட்டல்

தெளிவுரை: சூழ்கின்ற வானத்து மேகம் எனப் பயனை எதிர்பாராது தம்மிடம் உள்ள பொருளைத் தருபவனின் பரவிய பெரும் புகழ்த் தொகுதியானது போய்ப் பதினான்கு உலகங்களிலும் பரவும். நான்முகன் திருமால் முதலியவர் தங்களுக்குள் அக்கொடையாளிக்கு வாழத்தக்க மேன்மையான பதத்தையும் மனைகளையும் அளித்துப் பாராட்ட முற்படுவர்.

விளக்கம்: தானம் செய்பவனின் புகழ் ஏழ் உலகங்களிலும் பரவும். அவனுக்கு நான்முகன் திருமால் ஆகியவர்கள் நல்ல பதவியையும் வீடு முதலியவற்றையும் அளிக்கத் தமக்குள் போட்டி போட்டுக்கொண்டு முற்படுவர். **சூழும்வான் முகில்**-வானத்தில் சூழும் மேகம். **பயன் தூக்காது**-பயனை எதிர்பாராது.

பாழி-அகன்ற. **படலை**-தொகுதி. **ஈர்ஏழ்உலகு**-பதினான்கு உலகம். **அயன்மால்-முதல்இமையவர்**-நான்முகனும், திருமாலும் முதலிய தேவர்கள். **தமிற்றாம்**-தமில்+தாம், தமக்குள் தாம். **வாக்குறு**-அமைத்துத்தர. **மலைவார்**- மாறுபட்டு நிற்பர், போட்டி போட்டுக் கொண்டு நிற்பர். 35

52. இகத்தில் நன்கொடைப் பெருமையை அறிந்து ளோரில் என்று
அகத்தின் நாமமும் உரைசெயார் அவர் அரிதாகத்
தொகுத்த ஓர்பொருள் நல்குவர் என்பதுஎன்ன? துணிந்து
மிகுந்த வாவியும் கொடுப்பரால் வேண்டுமுன் விரும்பி.

உயிரையும் அளிப்பர்

தெளிவுரை: இவ்வுலகத்தில் நல்ல கொடையின் பெருமையை அறிந்து தன்னிடம் வந்து இருந்தவர்க்கு இல்லை என்ற சொல்லைத் தம் உள்ளத்தினுள்ளும் கூறமாட்டார். அவர் அரி கொடையாளர் தாம் தொகுத்த பொருளைத் தருவர் என்று கூறுவது ஏன்? துணிந்து தம்மிடம் எஞ்சி நிற்கும் உயிரையும் வேண்டுவதற்கு முன்னம் விரும்பி அளித்திடுவர்.

விளக்கம்: இகம்-இம்மை, இவ்வுலகத்தில். **நாமம்**-பெயர். கொடைத்திறம் படைத்தவர் தம் பொருளைமட்டு மன்றி வேண்டின் உயிரையும் அளிப்பர் என்பது கருத்து

'இலன்' என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள'

(திருக்குறள் : 36) 36

53. புவியில் இன்கொடை இல்லவன் தோற்றத்தின் பொலிவு
கவிர்ம லர்ந்திடற்கு ஒப்புஎனக் கழறுவர் அதனால்
அவிர்பெரும் புகழ்க்**கொடையதே அதிகம்** என்று அறைந்தான்
சவிதரும் சடைக் கௌதமன் **காசியன்** சாற்றும்.

கௌதம முனிவர் பேசிமுடித்தல்

தெளிவுரை: இவ்வுலகத்தில் தானம் செய்யாதவனின் தோற்றத்தின் இயல்பு, முள்முருக்கமலர் மலர்ந்தாற் போன்றது என்று அறிஞர் உரைப்பர். ஆகவே, விளங்கும் பெரும்புகழைத் தரும் கொடையே சிறந்ததாகும் என்று அழகிய சடையையுடைய கௌதம முனிவர் கூறினார். பின் காசிப முனிவர் பேசத் தொடங்கினார்.

விளக்கம்: இன்கொடை-இனிய (சிறந்த) கொடை. **இல்லாதவன்**-கொடையைச் செய்யாதவன். **கவிர்மலர்**-முருக்கமலர். **கழறுவர்**-உரைப்பர். **அவிர்**-விளங்கும். **கொடையதே அதிகம்**-கொடையே சிறந்தது. **சவிதரும் சடைக்கௌதமன்**- அழகைத் தருகின்ற சடையையுடைய கௌதம முனிவர். **சாற்றும்**-சொல்லத் தொடங்கினார். 37

54. உவமம் தீர்ந்திடு **வாய்மை**ஒன் றேயுறின் உலகில்
தவமும் தானமும் ஒருங்குறச் செய்தலில் தலையாய்ப்
பவம்அகன்று நான் மறைமுடி வாகிய பரம
சிவன் அரும்பதம் பெறும்படி உயர்த்திடும் தெரியின்.

சிவன் திருவடியில் உய்த்திடும்

தெளிவுரை: ஆராயின் உவமை நீங்கப்பெற்ற வாய்மை என்னும் ஒன்று ஒருவனுக்கு இருப்பின். உலகில் தவமும் தானமும் ஒருங்கே செய்தலைவிடச் சிறந்ததாகிப் பிறவி நோய் அகன்று நான்கு மறைகளின் முடிவான சிவபெருமானின் அரிய திருவடிகளை அடையும்படி உயர்த்திடும் என்று கௌதம முனிவர் உரைத்தார்.

விளக்கம்: உவமம் தீர்ந்திடு வாய்மை-உவமை இல்லாத உண்மை. **உறின்**-பொருந்தியிருப்பின் தவமும் தானமும் ஒன்றாய்ச் செய்வதைவிடச் சிறந்தது வாய்மை. அதனால் பிறவி அகலும் சிவனடி சேர்க்கும் என்பதாம். **பவம்**-பிறவி. **மறைமுடிவு**-வேதங்களின் முடிவானது. **அரும்பதம் பெறும்படி**-அரிய திருவடியை அடையுமாறு. வீடுபேறு அடைதல் என்பது கருத்து. 38

55. இரவி வாள்மதி உதித்து ஒடுங்குதல் **ஒலி இயங்கல்**
பரவை தான்இகவாது உறல் பயோதரம் பொழிதல்
கருவின் ஊடுவந்து அமர்தல்பின் தோற்றுதல் காயத்து
அருவ மாம்உயிர் நிற்குதல் **வாய்மையின்** அன்றோ

வாய்மையால் நிகழ்வன

தெளிவுரை: கதிரவன், ஒளியுடைய சந்திரன் ஆகியவை தோன்றி மறைதல், காற்று வீசுதல், கடலானது கரையைக் கடக்காமல் இருத்தல், மேகம் மழை பொழிதல் தாய்க்கருவின் கண் வந்து பொருந்துதல், பின் வெளிப்படுதல் (பிறத்தல்) உடம்பில் உருவம் அற்ற உயிர் நிற்றல் என்னும் இவை வாய்மையைக் கடைப் பிடிப்பதால் நிகழ்வனவாகும்.

விளக்கம்: இரவி-கதிரவன். **வாண்மதி**-ஒளியுடைய சந்திரன் வளி. **இயங்கல்**-காற்று வீசுதல். **பரவை**-கடல்; பரந்து நிற்பதால். **பரவை இகவாது**-கரையைக் கடக்காமல். **பயோதரம்**-மேகம். 39

56. மன்னன் ஆகிஇவ் வுலகெலாம் புரந்திட வரினும்
இன்னல் தான்உழந்து உடலம்விட்டு இறந்திட வரினும்
பன்னும் வாய்மையில் பிறழ்ந்திடாது ஒழிகஇப் பவம்போய்
மின் உலாஞ்சடை எம்பிரான் பதம்புக வேண்டின்.

வாய்மையினின்று தவறாது இருக்க வேண்டும்

தெளிவுரை: இப்பிறவியானது நீங்கப்பெற்று மின்னல் போல் ஒளிரும் சடையுடைய சிவபெருமானின் திருவடிகளை அடைய நினைத்தால் மன்னன் ஆகி இவ்வுலகம் முழுவதையும் காக்க வந்தாலும், இன்னல் அடைந்து உடம்பை விட்டு இறக்கும் நிலை உண்டாயினும், உயர்வாக நூல்கள் சிறப்பாகப் பேசும் உண்மையினின்று தவறாது விளங்குதல் வேண்டும்.

விளக்கம்: புரந்திட-காத்திட. **இன்னல்தான் உழந்து**-துன்பத்துள் வருந்தி. **பன்னும்**-நூல்களால் உயர்வாகப் பேசப்படும். **பிறழ்ந்திடாது**-தவறாமல். **இப்பவம்**-இப்பிறவி. **பதம்**-திருவடி.40

57. என்று காசிப முனிவரன் வாய்மையின் இயல்பை
ஒன்ற வேவிரித்து அருந்தவர் தங்களோடு உரைப்ப,
அன்று சார்ந்துறும் **பரத்துவ சப்**பெயர் அறிஞன்
குன்று போல்உயர் குணத்தினீர் கேண்ம்எனக் கூறும்.

பரத்துவாசர் கூறத் தொடங்குதல்

தெளிவுரை: என்று இவ்வாறு காசிப முனிவர் வாய்மையின் சிறப்பைப் பொருத்தமாக விரித்து எடுத்துக் கூறினார். அங்கு அன்று அவர்களுடன் இருந்த பரத்துவாசர் என்ற பெயரையுடைய முனிவர் "மலையைப் போன்று உயர்ந்த குணம் உடையவரே! கேளுங்கள்!" எனக் கூறத்தொடங்கினார்.

விளக்கம்: அருந்தவர்-அரிய முனிவர். **சார்ந்துறும்**-பொருந்தியிருந்த. **குன்று**-மலை. **கேண்ம்என**-கேளுங்கள் என்று; 'கேளும்' என்பது 'கேண்ம்' என்று விகாரப்பட்டது. 41

58. விண்ணு ளோர்தமக்கு அவியுணா மகிழ்தர விளைத்து
மண்ணின் ஆர்உயிர்க்கு எழிலிகொண்டு உணவினை வழங்கி
எண்ணில் எவ்வுல கிற்கும் இன்பு ஈந்துநல் தானம்
புண்ணி யம்தவம் வளர்த்தலான் யாகமே பொருளாம்.

வேள்வியே சிறந்தது!

தெளிவுரை: தேவர் உலகத்தில் உள்ள தேவர்க்கு அவியுணவை அவர்கள் மகிழும்படி அளித்து உலகத்தில் உள்ள அரிய உயிர்களுக்கு மேகத்தைக் கொண்டு உணவை வழங்கி எண்ணில்லாத எந்தவுலகத்துக்கும் இன்பத்தைத் தந்து நல்ல தானம், புண்ணியம், தவம் ஆகியவற்றை வளரச் செய்தலால் வேள்வியே சிறந்த செய்யத் தக்க பொருளாகும்.

விளக்கம்: விண்ணுளோர்-தேவர்கள். **அவிஉணா**-வேள்வியில் இடப்படும் உணவு. **உணா**-உணவு. **மகிழ்தர**-மகிழ. வேள்வி இயற்றுவதால் மேகம் மழை பொழியும் என்பது நூல்துணிபு. **எழிலி**-மேகம். **இன்புஈந்து**-இன்பத்தைத் தந்து. **நற்றானம்**-நல்ல தானம் யாகம் செய்தல் தானம், புண்ணியம், தவம் முதலியன வளர்தற்குக் காரணம் ஆகின்றது என இதில் குறிப்பிடுகின்றார் ஆசிரியர். 42

வேறு

59. இரதி கொண்கன் எழில்உரு அட்டவன்
பெரிதும் உண்மகிழ் பெற்றிடச் செய்வது
சுருதி சொல்மகம் என்றவன் சொற்றிடக்
கருதி மற்றொன்று **கண்ணுவன்** கூறுவான்.

சிவபெருமானை மகிழச்செய்வது வேள்வியே!

தெளிவுரை: இரதியின் கணவனான காமனின் அழகிய உடலை அழித்த சிவபெருமான் மிகவும் உள்ளம் மகிழ்ச்சி அடைந்திடச் செய்வது வேதங்களால் கூறப்படுகின்ற வேள்வியே என்று அங்குப் பரத்துவாச முனிவர் கூறி முடித்தார். அப்போது கண்ணுவ முனிவர் தாம் எண்ணியதைக் கூறத் தொடங்கினார்.

விளக்கம்: இரதி கொண்கன்-இரதியின் கணவனான மன்மதன். **எழில்உரு**-அழகிய வடிவை. **அட்டவன்**-அழித்த சிவபெருமான். **சுருதி சொல்மகம்**-வேதத்தால் சிறப்பாகப் பேசப்படும் யாகம். **கண்ணுவன்**-கண்ணுவ முனிவர். 43

60. இல்ஒ ழுக்கம் இயைந்து பிதிர்க்கடன்
ஒல்லும் வண்ணம் உஞற்றி மரபுளோர்
செல்லும் வெந்நிர யத்துஉயர் சிந்துவான்
வல்ல மக்கள் பெறற்குஇணை மற்றிலை.

மக்கட் பேற்றுக்கு இணையில்லை

தெளிவுரை: இல்லற ஒழுக்கத்தை மேற்கொண்டு தம் மூதாதையர்க்குச் செய்யக் கூடிய கடன்களை முடிந்தபடி செய்து, தம் மரபில் தோன்றியவர் செல்ல இருக்கும் கொடிய நரகத்தை விலக்கும்படி செய்ய வல்லது மக்கட்பேறு. அதற்கு ஒப்பானது வேறு ஒன்று இல்லை.

விளக்கம்: இல்ஒழுக்கம்-இல்லற ஒழுக்கம். **பிதிர்க்கடன்**-மூதாதையர்க்குச் செய்யும் கடன். **உஞற்றி**-செய்து. **மரபுஉளோர்**-குலத்தில் உள்ளவர். **வெந்நிரயம்**-வெம்மை+நிரயம், கொடிய நரகம் **துயர்**-வருத்தம். **சிந்துவான்**-அகற்றிட, வான் ஈற்று வினையெச்சம். **மக்கள் பெறற்கு**-மக்களைப்பெறுதற்கு. **இணை**-ஒப்பு. 44

61. மெத்து கின்ற விழுமியசீர்த்தியோடு
எய்த்தல் இன்றி இருமைஇன் பும் தரும்
புத்தி ரற்பெறும் புண்ணிய வாழ்க்கைதான்
அத்த வத்தினும் ஆற்றச் சிறந்ததே. 45

மக்கட்பேறே தவத்தைவிடச் சிறந்தது!

தெளிவுரை: அன்புடன் கொஞ்சுகின்ற சிறந்த ஒழுக்கத்துடன் தளர்ச்சி இல்லாது இம்மை மறுமை இன்பமும் தருகின்ற மக்களைப் பெறும் புண்ணிய வாழ்க்கையே அந்தத் தவ வாழ்க்கையைவிட மிகவும் சிறந்தது.

விளக்கம்: மெத்துகின்ற-கொஞ்சுகின்ற **விழுமிய**-சிறந்த **சீர்த்தி**-சிறப்பு. **எய்த்தல்**-சோரல், தளர்தல். **இருமை இன்பும்**-இம்மை இன்பமும் மறுமை இன்பமும். **ஆற்ற**-மிக. 45

62. என்று நன்மகப் பேற்றை இனிது எனக்
கன்று நற்றவக் கண்ணுவன் சொற்றிடக்
கொன்றை அம்சடைக் கூத்தனைப் போற்றியே
ஒன்று மெய்த்துரு வாசன் உரைசெய்வான்.

துருவாசர் சொல்லத் தொடங்குதல்

தெளிவுரை: என்று மேற்கண்டவாறு நல்ல பிள்ளைப் பேற்றை மிகச்சிறந்தது என்று சினம் உடைய கண்ணுவ முனிவர் கூறினார். அப்போது மெய்மையுடைய துருவாச முனிவர் கொன்றை மலரின் அழகிய சடையையுடைய சிவபெருமானைத் துதித்துப் பின்வருமாறு சொல்லலானார்.

விளக்கம்: மகப்பேறு-பிள்ளைப்பேறு. **கன்று**-சினம்உடைய. **நற்றவக்கண்ணுவன்**-நல்ல தவம் உடைய கண்ணுவ முனிவர். **சொற்றிட**-கூற. **கொன்றை அம்சடைக்கூத்தன்**-கொன்றை மலர் மாலையைச் சூடிய அழகிய சடையையுடைய கூத்தப்பெருமான். 46

63. உறவு தந்தைதாய் ஒண்தொடி மாதரார்
சிறுவர் வண்புவி செல்வம் பெரும்புகழ்
பிறவி னும்படும் ஆசை பிரிந்தமெய்த்
துறவின் அல்லது துன்பும் அகலுமோ?

துறவு வாழ்க்கையால்தான் துன்பம் நீங்கும்!

தெளிவுரை: சுற்றம், தந்தை, தாய் ஒள்ளிய வளையலை அணிந்த மடந்தையர், பிள்ளைகள், வளமான உலகம், செல்வம், மிக்க புகழ் ஆகிய பிறவற்றாலும் உண்டாகும் ஆசை நீங்ப்பெற்ற உண்மையான துறவு வாழ்க்கையால் அன்றித் துன்பம் நீங்காது.

விளக்கம்: ஒண்டொடி-ஒளியுடைய வளையல். **வண்புவி**-வளமையுடைய உலகம். **ஆசை பிரித்த**-பற்று நீங்கிய. **துறவின்**-துறவு வாழ்க்கையைவிட. 47

வேறு

64. ஈட்டுறும் காலையின் ஏமம் செய்வுழிக்
கூட்டலில் துயரினைக் குறுகும் சுற்றமும்
வாட்டிடும் பகைஞராம் வகைசெய் வித்தலின்
வேட்டிடும் **வெறுக்கையை வெறுக்கை இன்பமே.**

செல்வத்தால் உண்டாகும் துன்பம்!

தெளிவுரை: செல்வமானது ஈட்டும்போதும் அதைக் காவல் செய்யும் போதும் துன்பத்தைத் தரும். அடைந்த சுற்றத்தவரும் பொருள் காரணமாகத் துன்பத்தைச் செய்வர். அச்செல்வம் நட்பினரையும் பகைஞராக ஆக்கிடும் வகையைச் செய்வித்தலால் உலகத்தவரால் விரும்பப்படும் செல்வத்தை வெறுத்துத் துறவை மேற்கொள்ளலே இன்பம் ஆகும்.

விளக்கம்: ஈட்டுறுங்காலையின்-செல்வத்தை ஈட்டும் போது. **ஏமம்**-காவல். **செய்வுழி**-செய்யும் போது. **குறுகும் சுற்றம்**-அடைந்த உறவினரும். **வாட்டிடும் பகைஞராம்**-துன்பம் செய்யும் பகைவர் ஆகுமாறு. **செய்வித்தலின்**-செய்தலால். **வேட்டிடும் வெறுக்கை**-விரும்பப்படும் செல்வம். **வெறுக்கை இன்பமே**-வெறுத்துத் துறவைமேற் கொள்ளுதல் இன்பம் தருவதாகும். 48

65. கொடும்கனல், மதுவிடம் குறுகின் உண்டிடில்
சுடுங்கருத்து அழித்திடும் தொலைவு செய்யுமால்
கடுந்துயர்க் காமமோ கருதின் அன்னசெய்து
இடும்பினும் தொடர்ந்து வெந்நிரயத் திட்டிடும்.

காமம் செய்யும் தீமை

தெளிவுரை: கொடிய தீயும் கள்ளும் நஞ்சும் ஆகியவை முறையே சுடுதலையும் கருத்தை அழித்தலையும் இறத்தலையும் உண்டாக்கும். ஆயின் கடிய துன்பம் தரும் காமம் என்பதோ எண்ணிய அளவிலே அத்துன்பங்களையெல்லாம் செய்து கொடிய நரகத்தையும் தந்திடும்.

விளக்கம் : கொடுங்கனல்-கொடியதீ. **மது**-கள். **விடம்**-நஞ்சு கனலைக் குறுகின், மதுவை அருந்தின், நஞ்சை உண்டால், என இயைக்க. தீயைத் தொட்டால் சுடும். மதுவை அருந்துவதால் கருத்தை அழிக்கும். நஞ்சை உண்பதால் இறப்பு ஏற்படும். இம்மூன்றும் செய்யும் அத்தனை துன்பங்களையும் தந்து நரகத்திலும் அவன் நினைத்த அளவிலேயே ஒருவனை இடுவது காமம் என்க. **தொலைவு செய்யும்**-இறப்பைத் தரும். **வெந்நிரயம்**-கொடிய நரகம். 49

66. ஆதலின் பெண்மயக்கு ஆதி நீங்கியே
தீதுஅறத் துறந்திடும் அரிய செய்கையே
மேதகக் கதியினில் விடும்என்று ஓதினான்
மாதவத்து உயர்துரு வாச மாமுனி.

துறவே மேற்கதியில் சேர்க்கும்

தெளிவுரை: ஆதலால் பெண் மீது கொள்ளும் காமம் முதலியவை நீங்கித் தீமைகள் எல்லாம் அகலத் துறவை மேற்கொள்ளும் அரிய செய்கையே மேன்மை யுடைய ஒரு கதியில் சேர்க்கும் என்று பெருந்தவத்தால் உயர்ந்த துருவாச முனிவர் உரைத்தார்.

விளக்கம்: பெண்மயக்காதி-பெண்ணின் மீது கொள்ளும் காமமயக்கம் முதலியன. **தீதுஅற**-தீமை நீங்க. **மேதகக் கதி**-மேன்மையான தகுதி பொருந்திய கதி. **விடும்**-செலுத்தும். 50

67. இனையன வீற்றுவீற்று இயம்பி மாதவர்
வினையறு நன்னெறி தெரியும் வேலையின்
அனையவர் தவம்உரு வாகி நண்ணல்போல்
துனியிற ஆயிடைச் சூதன் தோன்றினான்.

சூத முனிவர் வருகை

தெளிவுரை : நைமிசவனத்தில் இருந்த முனிவர்கள் இத்தகையனவற்றை வெவ்வேறாக இருந்து கூறியவண்ணம் இருந்தனர். நல்வினை தீவினை ஆகியவவை நீங்குமாற்றை ஆராய்ந்தபடி இருந்தனர். அச்சமயத்தில் அந்த முனிவர்களின் தவம் ஒருவடிவாகி வருவதைப் போன்று, அங்கு விரைவாகச் சூதமா முனிவர் வந்து தோன்றினார்.

விளக்கம்: விற்று விற்று இயம்பி-வெவ்வேறாகக் கூறி. **வினையறு நன்னெறி**-நல்வினை தீவினை ஆகிய இரண்டும் நீங்கக்கூடிய நல்ல நெறியை. **அனையவர் தவம் உருவாகி**-அவர்களின் தவம் எல்லாம் ஓர் உருவாகி வந்தது போல். **துனியின்**-விரைவில். **சூதன்**-சூதமாமுனிவர். 51

68. கண்டிகை வடம்உரம் கவின நீற்றொளிர்
புண்டர நுதல்மிசைப் பொலிய அங்கையின்
தண்டொடு கமண்டலம் தாங்கி வந்திட
அண்டவர் சூதன்நல் வரவு கண்டனர்.

சூதமுனிவர் வருகை

தெளிவுரை: உருத்திராக்கமாலை மார்பில் விளங்கி அழகுடன் ஒளிர, திருநீற்றின் ஒளி (திரிபுண்டரம் அணிந்த) நெற்றியில் விளங்க, உள்ளங்கையில் தண்டையும் கமண்டலத்தையும் கொண்டு வருவதை வளமான தவத்தை உடைய முனிவர் பார்த்தனர்.

விளக்கம்: கண்டிகை வடம்-உருத்திராக்க மாலை. **உரம்**-மார்பில் **கவின**-அழகுடன் விளங்க. **புண்டரம்**-மூன்றாக அணிந்த திருநீற்றுக்கீற்று. **நுதல்மிசை**-நெற்றியின் மீது. **பொலிய**-விளங்க. **வண்டவர்**-வண்மை+தவர், வளமான தவத்தையுடைய முனிவர். **நல்வரவு**-நல்ல வருகையை. 52

69. பொருக்என எதிர்கொடு போற்றிக் கொண்டு சென்று
உருக்கினர் ஆதனம் உதவி ஐயன்நீ
இருக்கென ஆயிடை இருத்தி மாதவர்
அருக்கியம் முதலன அளித்துக் கூறுவார்.

முனிவர் சூதமுனிவர்க்கு உபசாரம் செய்தல்

தெளிவுரை: சூதமுனிவரின் வருகையைக் கண்ட முனிவர்கள் உடனே விரைந்து எதிரே போய்த் துதித்து நன்முகமன் கூறி அழைத்துக் கொண்டு போயினர் அழகு விளங்கும் இருக்கையை அவர்க்குத் தந்தனர். 'ஐயனே, நீவிர் இங்கு இருப்பீராக' என அமரச் செய்தனர். துறவியர்க்குத் தரவேண்டிய அர்க்கியம் முதலியனவற்றைத் தந்தனர்.

விளக்கம்: பொருக்கென-விரைவாக. **எதிர்கொடு**-எதிர்கொண்டு. **உருக்கிளர் ஆதனம்**-அழகு விளங்கும் இருக்கை. **இருக்கென**-இருக்க+என, அமர்வீராக என்று. **அருக்கியம்**-தேவர்களுக்கு அதிதிகளுக்கும் தீர்த்தத்தால் செய்யும் ஒருவகை உபசாரம். 53

70. துய்யமெய்க் கதிபெறும் சூழ்ச்சி ஆய்ந்துயாம்
ஐயம்உற்று இருந்துழி அடிசில் வேட்கையான்
மையல்உற்று அழுங்குவோர் மாட்டு மூரல்கொண்டு
ஒய்எனத் தரவரு பவரின் உற்றனை.

பசிகொண்டவனுக்கு உணவு தருவதுபோல் வந்தீர்!

தெளிவுரை: தூய்மையான கதியைப் பெறும் ஆராய்ச்சியை ஆய்ந்து யாங்கள் ஐயத்தோடு இருந்தோம். இருந்தபோது உணவு உண்ணும் வேட்கையுடையவர் வருந்தி மயங்கி இருக்கும்போது அவரிடம் சோற்றையும் பிறவற்றையும் கொண்டு விரையத் தருபவரைப்போல் இங்கு வந்தீர்.

விளக்கம்: துய்ய-தூய்மையான. **சூழ்ச்சி**-ஆராய்ச்சி. **ஐயம்உற்று**-சந்தேகம் கொண்டு. **இருந்துழி**-இருந்த போது அடிசில். **வேட்கையான்**-உணவு உண்ணும் விருப்பத்தால். **மையல் உற்று அழுங்குவோர்**-மயக்கம் அடைந்து வருந்துபவர். **மூரல்**-உணவு. **ஒய்என**-விரைவில். 54

71. தொல்லையம் புராணநூல் தொகுதி யாவையும்
வல்லநன் முனிவரின் வரவின் உய்ந்தனம்
நல்லவர் தாம்பெறு நலத்த கல்வியும்
செல்வமும் யாவரும் சிறப்பில் பெற்றவாம்.

முகமன் கூறுதல்

தெளிவுரை: பழமையுடைய புராணங்களின் கூட்டம் யாவையும் ஐயம் இல்லாமல் கற்று வல்ல நல்ல முனிவரே, உம் வருகையால் யாங்கள் உயர்ந்தோம். நல்லவர் பெறுகின்ற நன்மை யமைந்த கல்வியும் செல்வமும் யாவும் நாங்கள் சிறப்புடன் பெற்றவர் ஆனோம்.

விளக்கம்:தொல்லை-பழமை. **நின்வரவின்**-உம் வருகையால். **உய்ந்தனம்**-வாழ்வுபெற்றோம். **நலத்த**-நன்மையுடைய. **பெற்றவாம்**-பெற்றனவாம். 55

72. வாதரா யணமுனி வரனை ஒத்தமெய்ப்
போதநா யகஅருள் பொழியும் செம்முகச்
சூதமா தவவினைத் தொடர்பு போய்ச்சிவன்
பாததா மரைபெறும் பரிசு கூறு என்றார்.

சிவபெருமானை அடையும் வழியை உரைத்தருளுக!

தெளிவுரை: வியாச முனிவரைப் போன்ற உண்மையான ஞானத்தையுடைய தலைவரே! அருளைப் பொழியும் சிவந்த முகத்தையுடைய சூதமாமுனிவரே! வினைத் தொடர்பானது நீங்கிச் சிவபெருமானின் திருவடித் தாமரையை அடையும் வழியின் இயல்பை எங்கட்குத் தாங்கள் உரைத்தருள வேண்டும்.

விளக்கம்: வாதராயணன்-வியாச முனிவர். **முனிவரன்**-முனிவன். **மெய்ப்போதக**-மெய்ஞ்ஞானத்தை உடையவரே. **பாததாமரை**-திருவடியாகிய தாமரை மலர். **பரிசு**-வழியின் இயல்பை. 56

வேறு

73. என்றலும் உவகை நெஞ்சத்து
எழுந்திடச் சூதன் நீர்வேறு
ஒன்றுஒரு பொருளும் உன்னா
உலப்பிலா முத்தி எய்தக்
கன்றினீர் அதனால் உம்பால்
கண்ணுதல் அருள்ப திந்தது
இன்று உமை அடைந்து யானும்
உய்ந்தனன் என்று சொல்வான்.

சூதமுனிவர் கூறத் தொடங்கல்

தெளிவுரை: என்று முனிவர்கள் கூறவும், மகிழ்ச்சி உள்ளத்தில் எழுந்திட, சூதமா முனிவர் அம்முனிவர்களைப் பார்த்து, 'நீங்கள் பொருந்தும் வேறு வழி ஒன்றையும் நினைக்காமல் அழியாத வீடுபேறு அடைய எண்ணி ஐயத்தால் வருந்தினீர். அதனால் உங்களிடம் திருவருள் பதிவு ஏற்பட்டுவிட்டது. இத்தகைய உங்களை இன்று அடைந்தமையால் யானும் உய்வு பெற்றேன்' என்று கூறத் தொடங்கினார்.

விளக்கம்: உவகை-மகிழ்ச்சி. **உன்னாது**-நினைக்காமல். **உலப்புறா முத்தி**-அழிவற்ற வீடுபேறு, அதாவது அழிவின்மையைத் தருவதான வீடுபேறு. **கன்றினீர்**-வருந்தினீர். **அருள்பதிந்தது**-பரிபக்குவ நிலை உங்கட்கு ஏற்பட்டுத் திருவருட்பதிவு வந்து பொருந்தியது ; சத்திநிபாதம். 57

74. அரியதாம் விச்சை மூவாறு
அவைமறை நான்குஆறு அங்கம்
கருமஞா னங்கள் சொல்நூல்
மிருதிகாந் தருவம் வில்நூல்
பரதம் வா கடம்பு ராணம்
பகருநல் நியாயம் என்ன
விரிதரும் இவறறுள் சிப்சால்
புராணமே மேல தாகும்.

பதினெட்டுக் கலைகள்

தெளிவுரை: அரியவை என எண்ணப்படுவனவான வித்தைகள் பதினெட்டு. அவை மறை நான்கு. அவற்றின் அங்கம் ஆறு. கருமகாண்டம் ஞான காண்டாம் எனப் பிரிவுடைய மீமாஞ்சை, அற நூல், காந்தருவ நூல், தனுர் வேதம், பரதம், வாகடம், புராணம், நியாயம் என்பன. அவற்றில் சிறந்தது புராணமே ஆகும்.

விளக்கம்: விச்சை-வித்தை. **மூவாறு**-பதினெட்டு. **மறை நான்கு**-வேதங்கள் நான்கு அவற்றில் அங்கம் ஆறு. **கருமஞானங்கள் சொல்நூல் மிருதி**-கரும காண்டத்தையும் ஞானகாண்டத்தையும் கூறும் நூல்கள் மீமாஞ்சை. **மிருதி**-ஸ்மிருதி என்ற சொல்லின் திரிந்த வடிவம். **வின்னூல்**-வில்+நூல். **பரதம்**-பரதம் பற்றிக் கூறும் நூல். **காந்தருவம்**-காந்தருவ நூல். **வாகடம்**-மருத்துவநூல். **நியாயம்**-நீதிநூல். 58

75. பன்னும்அப் புராணம் ஈர்ஒன்
பான்எனும் பாகு பாட்டான்
முன்உறு தலைமைக்கு ஏற்ப
முக்கண்எம் பிராற்கு ஈர்ஐந்து
செல்நிகர்ப் பவற்கு நான்கு
திசைமுகற்கு இரண்டு செங்கேழ்
துன்உறு கனலி என்பேர்ச்
சுடர்களுக்கு ஒவ்வொன்று ஆமே. 59

சிவபெருமான் முதலியவர்க்கு உரிய புராணங்கள்

தெளிவுரை: சிறப்பாகக் கூறப்படும் புராணங்கள் பதினெட்டு என்ற பாகுபாட்டை உடையன. மேற்பட்டு விளங்கும் தலைமைத்

தன்மைக்கு ஏற்றபடி மூன்று கண்களையுடைய சிவபெருமானுக்குப் பத்து உரியவை. மேகத்தை ஒத்த திருமாலுக்கு நான்கு உரியவை. பிரமாவுக்கு இரண்டு உரியவை. சிவந்த நிறத்தையுடைய பொருந்திய அக்கினிக்கு ஒன்று உரியது. கதிரவனுக்கு ஒன்று உரியது.

விளக்கம்: பன்னும்-சிறப்பாகப் பேசப்படும். **ஈர்ஒன்பான்**-பதினெட்டு. **முக்கண்எம்பிராற்கு**-மூன்று கண்களையுடைய சிவபெருமானுக்கு. **ஈர்ஐந்து**-பத்து **செல்நிகர்ப்பவற்கு**-மேகத்தைப் போன்ற திருமாலுக்கு. **திசைமுகன்**-நான்முகன். **கனலி**-அக்கினி. **சுடர்**-கதிரவன். **செங்கேழ்**-சிவந்தநிறம்.

எனவே இங்குக் கூறப்பட்டவை சிவபுராணங்கள் பத்து. விஷ்ணு புராணம் நான்கு. பிரம புராணம் இரண்டு. அக்கினி புராணம் ஒன்று. சூரிய புராணம் ஒன்று. 59

76. அனையவற்று அதிகம் எந்தை
அமலமாக் கதைஈர் ஐந்து
நனிசிறப் பவற்றுள் **காந்தம்**
அதனினுள் நலத்தது அம்மா
தனிவரு **சனற் குமார**
சங்கிதை அதனுள் சால
இனியது **காளி காண்டம்**
என்பர்மூ தறிவின் மேலோர்.

சிறந்தது காளிகா காண்டம்

தெளிவுரை: மேற்சொல்லப்பட்டவற்றுள் சிறந்தவை எம் தந்தையான குற்றமற்ற சிவற்குரியகதை பத்து. அவற்றுள்ளும் மிகவும் சிறந்தது 'காந்த புராணம்'. அக்காந்த புராணத்துள் சிறந்தது 'சனற்குமார சங்கிதை'. அதனுள்ளும் மிகவும் சிறந்தது 'காளிகாகாண்டம்'. இவ்வாறு பேரறிஞர் உரைப்பர்.

விளக்கம் : அமலமாக்காதை- குற்றம் அற்ற சிறந்தகதை. **ஈர்ஐந்து**-பத்து. **காந்தம்**-காந்தபுராணம். **நலத்தது**-நன்மையுடையது. **தனிவரு சனற்குமார சங்கிதை**-ஒப்பற்றதாக விளங்கும் சனற்குமார சங்கிதை. **சால இனியது**-மிகவும் இனியது. **காளி காண்டம்**-காளிகா காண்டம். 60

77. அன்னதில் வியாதன் எங்கோன்
    அருளினால் தமியேன் கேட்பத்
தன்நிகர் இலாத முத்தி
    சார்ந்திடற்கு ஏது தன்னை
முன்னம் அங்கு உரைத்தான் அன்னான்
    மொழிந்தவாறு உமக்கு யானும்
பன்னுவன் உடம்புஎ டுத்த
    பயன்பெறு முனிவர் கேண்மின்.

வியாச முனிவர் எனக்கு முத்தியை அடைய வழியை உரைத்தார்

தெளிவுரை: அந்தக் காளிகா காண்டத்துள் எம் தலைவனான வியாச முனிவர் அருளால் யான் கேட்கத் தனக்கு நிகர் இல்லாத வீடு பேற்றை அடைவதற்குரிய வழியை முன்காலத்தில் உரைத்தனன். அந்த வியாச முனிவர் உரைத்தபடியே யான் உங்களுக்குக் கூறுவேன். உடம்பு எடுத்ததன் பயனை அடைவீர்! கேளுங்கள்.

விளக்கம்: "முத்தி அடைவதற்கு உரிய வழியை வியாச முனிவர் எனக்குக் கூறினார். அதனை நான் உங்கட்குக் கூறுவேன். கேளுங்கள்" எனச் சூத முனிவர் கூறத் தொடங்கினார்.

வியாதன்-வியாச முனிவர். **தமியேன்**-தனியனான யான். முத்தி-வீடுபேறு. **மோட்சம் ஏது**-காரணம். **பன்னுவன்**-உரைப்பேன். **முனிவர்**-முனிவர்களே. **கேண்மின்**-கேளுங்கள். 61

78. இச்சிறைப் பவங்கள் நீங்கி
    இணையிலா முத்தி எய்தல்
மெய்ச்சிவ ஞானத்து அன்றி
    வேறுள கருமத்து ஆகாது;
அச்சிவ ஞானம் பெற்றோர்
    அயனது கற்ப ஈற்றில்
சச்சிதா னந்த முத்தி
    சார்குவர் என்ப மாதோ.

சிவஞானத்தைப் பெற்றவர் அடையும் பயன்

தெளிவுரை: நம்மைக் கட்டுப்படுத்திய பிறவிகள் நீங்கி நிகர் இல்லாத வீடு பேற்றை அடைதல் உண்மையான சிவஞானத்தால் அல்லாது வேறு எதனாலும் கிட்டாதது. அத்தகைய சிவஞானத்தைப் பெற்றவர் பிரமகற்பத்தின் ஈற்றிலும் உண்மையான அறிவு ஆனந்தத்தை அடைவார் என்று ஞானியர் உரைப்பர்.

விளக்கம்: சிறைப்பருவங்கள்-சிறையாகிய பிறப்பு, கட்டுப்பட்ட பிறவிகள். **வேறுளகருமத்தால்**-பிற செயலால். **அயனது கற்பம்**-பிரம கற்பம். **கற்பம்**-அது ஆயிரங்கோடி ஆண்டு, பிரமனின் வாழ்நாள். **ஈறு**-முடிவு. **சச்சிதானந்த மூர்த்தி**-சத்+சித்து+ஆனந்த மூர்த்தி; உண்மை அறிவு ஆனந்தம் உடைய மூர்த்தி 62

79. பிறைமுடிக் கின்ற முக்கண்
    பிரான்திருத் தலங்கள் தம்மில்
அறமுடிப் பவர்த்து ரந்தோர்
    அறிந்தும் அஞ் ஞான பாவத்
துறைமுடிக் கிற்போ ரேனும்
    துரிசுஎலாம் எளிதின் ஈற்று
மறைமுடிக்கு அரிய ஞான
    மன்னிமெய்க் கதியில் சேர்வார்.

சிறந்த கதியை அடைவர்

தெளிவுரை: பிறைத் திங்களைச் சடையில் முடித்த மூன்று கண்களையுடைய சிவபெருமானின் பதிகள்தோறும் அறத்தைச் செய்பவர், அறிந்தும் அஞ்ஞான பாவத்துறைகள் மேற்கொண்டு செய்தவராயினும் அவர்களின் குற்றங்களை எல்லாம் கெடுத்து வேத முடிக்கும் அரிய ஞானத்தைப் பெற்று உண்மையான சிறந்த கதியில் சேர்பவர் ஆவார்.

விளக்கம்: பிறை முடிக்கின்ற-பிறைத் திங்களை அணிகின்ற. **முக்கண் பிரான்**-மூன்று கண்களையுடைய சிவபெருமான். **அறம் முடிப்பவர்**-அறத்தைச் செய்பவர். **பாவத்துறை முடிக்கிற்போர்**-பாவநெறிகளைச் செய்பவர். **துரிசெலாம்**-துரிசு+எல்லாம், குற்றங்களை எல்லாம். **நீற்று**-கெடுத்து. **மன்னி**-அடைந்து. 63

80. வலியுக மலமெய்ஞ் ஞானம்
மருவிட வேண்டில் சார்ந்த
புலிஉக ளத்தாள் போற்றப்
பொதுநடம் புரிவோன் தானம்
கலியுகம் அதனில் சாலக்
கசிந்துற வேண்டும் பாம்பின்
எலியுகண் **நைமிசப் பேர்**
இருந்**தவ வனத்தில்** என்றான்.

மெய்ஞ்ஞானம் அடையத் தில்லையைத் தரிசனம் செய்க

தெளிவுரை: நைமிச வனத்தில் இருப்பவரே! ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்களின் வலிமை கெட ஞானத்தை அடைய வேண்டினால் வியாக்கிரபாதர் என்பார் வணங்கத் தில்லையில் நடனம் இடும் சிவபெருமானின் தலங்களில் துன்பம் நீங்க-கலியுகத்தில் மிகவும் மனம் நெகிழ்ந்து துதிக்க வேண்டும்.

விளக்கம்: வலிஉக-வன்மை கெட. **மலம்**-ஆணவம், கன்மம், மாயை. **புலி**-வியாக்கிரபாதர் புலிவடிவினரான வியாக்கிரபாதர் மீது நடராசப் பெருமான் திருவடியை ஊன்றியுள்ளார். ஆதலால் 'புலி உகள் அத்தாள்' என்றார். **உகள்**-தாவுதல் **தாள்**-திருவடி **நைமிசப்பேர்**-நைமிசம் என்ற பெயரையுடைய **எலியுகணை மிசப்பேர்**-எலி+உகள்+நைமிசம்+பேர் **பொது**-தில்லைச் சிற்றம்பலம். 64

81. சூதமா முனிவன் இன்ன
சொற்றிட உவகை பூத்துத்
தீதிலா முனிவ முத்தி
சிவனிடம் அளிக்கும் என்றாய்
வாதரா யணன்ம லர்த்தாள்
மருவுமா ணாக்கர் தம்முள்
ஓதியால் உயர்ந்தோய் சொல்வது
ஒன்றுளது என்று சொல்வார்.

முனிவர் தம் வினா

தெளிவுரை: சூதமா முனிவர் மேற்கண்டவாறு கூற, முனிவர்கள் மகிழ்ச்சி அடைந்து. குற்றமற்ற முனிவரே! முத்தி சிவதலத்தால் கிடைக்கப்பெறும் என்று உரைத்தீர். வியாச முனிவரின் மலர்

போன்ற அடியை அடைந்த மாணாக்கருள், ஞானத்தால் உயர்ந்தவரே. யாங்கள் சொல்லக்கூடியது ஒன்று இருக்கின்றது என்று கூறலானார்.

விளக்கம்:சொற்றிட-கூற உவகை. **பூத்து**-மகிழ்ச்சி அடைந்து முத்தி சிவஞானத்தால் கிட்டப்பெறும் என்று சூதமுனிவர் உரைத்தார். **வாதராயணன்**-வியாச முனிவர். **ஓதியால்**-ஞானத்தால். **சிவனிடம்**-சிவத்தலம். 65

82. தண்நிலா மலர்ந்த வேணித்
தாணுவும் உமையும் தங்கள்
கண்உலா மக்க ளோடும்
கயிலைபோல் இருப்ப தாகி
எண்நிலா அமரர் வேள்வி
இறைஅயன் முராரி என்றும்
உள்நிலா உவகை யோடும்
உவர்த்தொழுது அமர்வ தாகி.

சிவபெருமான் வீற்றிருக்கும் தலம்

தெளிவுரை: குளிர்ந்த சந்திரன் சூடப் பெற்ற முடியையுடைய சிவபெருமானும் உமையம்மையும் தங்கள் கண் போன்ற விநாயகர் முருகப்பெருமான் ஆகிய மக்களோடும் கயிலை மலையைப் போல் விளங்குவதாய், கணக்கில்லாத தேவர் வேள்வி யாசான் நான்முகன் திருமால் என்றும் உள்ளத்துள் பொருந்தும் மகிழ்ச்சியுடன் தேவர் தொழப்படும் தன்மையுடையதாகி.

விளக்கம்: தண்ணிலா-குளிர்ந்த பிறைச் சந்திரன். **மலர்ந்த**-அணிந்த. **வேணி**-முடி. **தாணுவும்**-சிவபெருமானும். **உமையும்**-உமாதேவியும். **கண்உலா மக்களோடும்**-கண்களைப் போல் சிறந்த பிள்ளைகளுடன். **கயிலை போல் இருப்பதாகி**-மயிலை மலைபோல் விளங்குவதாய். **அமரர்**-தேவர். **அயன்**-நான்முகன். **முராரி**-திருமால். **உவர்**-மேலே கூறப்பட்டவர். 66

83. அளப்பரும் அனந்த கோடி
அமலமெய்த் தலங்கள் தோறும்
கொளப்படு பயன்கள் முற்றும்
எளிதினில் கொடுப்ப தேயாய்த்
தளப்பது மத்து மேலோன்
நந்தினும் நந்தா தாகி
உளப்படு போக முத்தி
ஒருங்குற உதவும் சீர்த்தாய்.

மேற்பாடலின் தொடர்ச்சி

தெளிவுரை: அளப்பதற்கு அரிய எண்ணில்லாத கோடி குற்றமற்ற சிவத்தலங்கள்தோறும், கொள்ளப்படும் பயன்கள் யாவும் எளிதில் தருவதாய், இதழ்களையுடைய தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமன் அழியினும் அழிவற்றதாய், இன்பம் தரும் வீடுபேறு ஒருங்கே தருவதாய்.

விளக்கம்: அனந்த கோடி-அளவற்ற கோடி. **அமலமெய்த் தலங்கள்**-குற்றமற்ற உண்மையான பதிகள். **தளப்பதுமத்து**- இதழ் களை உடைய தாமரை மலர். **மேலோன்**-நான்முகன் **நந்தினும்**-கெட்டாலும். **போகம் முத்தி**-இன்பம் தரும் வீடு பேறு. 67

84. கங்கைஆ திகளின் மிக்க
காமரு புனித தீர்த்தம்
தங்குவ தாகி உன்னில்
சாற்றிடில் வினவில் செங்கேழ்ப்
பங்கயன் மாயோன் எம்மான்
பதந்தர வல்ல தாகி
இங்குஒரு தலத்தை ஐய
இயம்புதி எங்கட்கு என்றார்.

சிறந்த தலத்தைக் கூறுதல் வேண்டும்!

தெளிவுரை: 'கங்கை முதலிய ஆறுகளின் இயல்பைவிட உயர்ந்த விருப்பம் தரும் புனித தீர்த்தம் பொருந்தியதாகி, மனத்தால் நினைத்தாலும், வாயால் சொன்னாலும், செவியால் கேட்டாலும்,

சிவந்த நிறத்தையுடைய நான்முகன் திருமால் ஆகியவர்க்கும் எம் சிவபெருமான் திருவடியைத் தரவல்லதாகி விளங்கும் இவ்வுலகத்தில் உள்ள ஒரு தலத்தைக் கூறியருளால் வேண்டும்' என்று முனிவர் கூறினர்.

விளக்கம்: கங்கையாதி-கங்கை முதலிய புனித தீர்த்தம். **காமரு**-விருப்பத்தைத் தரும். **தங்குவதாகி**-இருப்பதாகி. **உன்னில்**-மனத்தால் நினைத்தாலும். **சாற்றிடில்**-பெயர் வாயால் சொன்னாலும். **வினவில்**-பிறர் சொல்லக் கேட்டாலும். **செங்கேழ்ப் பங்கயன்**-சிவந்த நிறத்தையுடைய தாமரையில் வீற்றிருப்பவன். **இயம்புதி**-உரைப்பாயாக. 68

85. என்றுஅவர் உரைத்த லோடும்
எழுந்தபேர் உவகை பொங்கக்
குன்றவில் கோலத்து எம்மான்
கூவரம் கருதி யுள்ளம்
கன்றுஉளும் அன்னை நெஞ்சில்
கரைந்துஉக மயிர்பொ டிப்ப
மென்துளி விழிஅ ரும்ப
விதிர்விதிர்த்து இனைய சொல்வான்

சூதமுனிவர் மகிழ்வுடன் சொல்லத் தொடங்கல்

தெளிவுரை: என்று நைமிச வனத்தில் இருந்த காசிபன் முதலிய முனிவர் வேண்டினர். மனத்துள் உண்டான மகிழ்ச்சி மிக மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமான் ஆன திருவிற்கோலத்தெம்மான் **கூவரம்** என்ற பதியைச் சூதமுனிவர் நினைத்துக் கன்றை நினைக்கும் தாய்ப்பசுவின் மனத்தைப் போன்று மனம் நெகிழ்ந்துக, மெய்ம்மயிர் சிலிர்க்க, மென்மையான கண்துளி துளிக்க, உடல் நடுக்கம் கொண்டு பின்வருவனவற்றைச் சொல்லலானார்.

விளக்கம்: அவர்-நைமிச வனத்துள் இருந்த முனிவர்கள் **குன்றவில்**-மேரு மலையான வில். **விற்கோலத்தெம்மான்** திருவிற்கோல நாதர் என்பது இறைவரின் பெயர். **கன்று உளும்**

அன்னை நெஞ்சின்-தன் கன்றை நினைக்கும் தாய்ப்பசுவினுடைய நெஞ்சைப் போல். **கரைந்து உக**-மனம் நெகிழ. **மயிர்பொடிப்ப**-மயிர் சிலிர்ப்ப. **விதிர்விதிர்த்து**-நடுங்கி. 69

86. அருந்தவ முனிகள் நீவிர்
அறைந்தன முழுதும் பெற்ற
பெருந்தலம் உளது ஒன்று அம்ம
அதனது பெருமை தன்னைப்
பரந்திடு முகங்கள் கோடி
பஃறலை அரவப் புத்தேள்
இருந்துரைப் பினும்அ டங்காது
யான்சிறிது அறிந்த சொல்கேன்.

சூதமுனிவர் கூறும்தலம்

தெளிவுரை: சூதமாமுனிவர், அரிய தவத்தை உடைய முனிவர்களே, நீவிர் கூறிய நன்மைகள் அனைத்தும் பெற்ற பெருமையுடைய தலம் ஒன்றுள்ளது. அதன் பெருமையைப் பரவியுள்ள கோடி யுகங்கள் பலதலைகளையுடை பாம்பாகிய ஆதிசேடன் அமர்ந்து சிறப்பை எடுத்துக் கூறினாலும் அடங்காமல் மிக்கு விளங்கும் தன்மையுடையது. நான் அறிந்த அளவிலே சிறிது உரைப்பேன்.

விளக்கம்: **முனிகள்**-முனிவர்களே. **அம்ம**-முன்னிலை அசை. **பஃறலை**-பல+தலை. **அரவப்புத்தேள்**-பாம்பாகிய தேவன், ஆதிசேடன், **சொல்கேன்**-சொல்வேன். 70

நைமி சாரணிய சருக்கம் முற்றிற்று

பாயிரம் 16 இச்சருக்கம்
70 ஆகப்பாடல் 86

3. திருத்தலச் சருக்கம்

இது திருத்தலத்தைப் பற்றிய சருக்கம் எனப் பொருள்படும். திருத்தலம் என்பது இங்குக் கூவத்தலத்தைக் குறிக்கும்.

இச்சருக்கத்தின் சுருக்கம்

நாட்டுச்சிறப்பு

சூதமா முனிவர் நைமிசவன முனிவர்க்குக் கூவப்பதியின் சிறப்பை விளக்குகிறார்.

அநாதியாய் உயிர்களுக்குத் தொடர்ந்து வரும் ஆணவம், கன்மம் மாயை என்ற முத்தளைகளை நீக்கும் சிவபெருமானின் கூவப்பதியைச் சூழ்ந்தது தொண்டை நாடு.

பாலாறு

தொண்டை நாட்டில் காராம் பசு பாலைச் சொரிவதைப் போல் பெய்த மழை நீரானது பாலாறு என்ற பெயருடன் பாய்ந்து ஓடியது. கரிய மேகமானது மலையைச் சேர்ந்து காராம் பசுவைப் போல் பாலைச் சிறப்புடைய (நந்தி) மலையில் பெய்தது. அதனால் பாலாறு என்ற பெயரைப் பெற்றது. அவ்வாறு கரைகளை உடைத்து நீர் நிலைகளில் உள்ள நீரையும் அடித்துச் சென்றது. பன்றிக்கொம்பு, மலர்கள், மணி, முத்து, யானைத் தந்தம் ஆகியவற்றை அடித்துக் கொண்டு ஓடியது. பெண்ணையாற்றை விடச் சிறந்து விளங்கியது. பம்பை ஆற்றைப் போல் திகழ்ந்தது. தன்னில் நீராடியவரின் உள்ளத்து அழுக்கைப் புறத்து அழுக்குடன் போக்கியது. எங்கும் நிறைந்து ஓடிய அவ்வெள்ளம் ஒருகாதத் தொலைவு ஓடிக் கடலில் கலந்தது.

உழவு மக்கள்

ஆற்றுநீர் நிரம்பியுள்ளதால் உழவர் பறையைக் கொட்டி ஒன்று கூடினர். பொன் ஏரைப்பூட்டினர். நிலத்தை உழுதனர். நீரை வயலில் தேக்கிச் சேறாக்கிப் பறம்படித்தனர். செஞ்சாலி முளைகளை விதைத்தனர். முளைத்து எழுந்த நாற்றுகளைப்

பிடுங்கி வேறிடத்தில் நட்டனர். களைகளாக முளைத்த நீலோற்பலம், குமுதம், தாமரை முதலியவற்றை உழத்தியர் பறித்து எறிந்தனர். களை நீங்கப் பெற்றதால் அந்நாட்டவர் செய்த புண்ணியத்தைப் போன்று பசுங்கதிர்கள் விளைந்தன. விளைந்த நெல்லைக் கண்ட உழவர் அறுத்து வானளவிய போரையிட்டனர். நெல்லை வைக்கோலை விட்டு விலக்கினர். காற்றில் நெல்லைத் தூற்றினர். நெல்லைக் குவித்தனர். விளைந்த இந்த விளைவில் மன்னனுக்கு ஆறில் ஒரு பங்கைத் தந்து எஞ்சியதில் பலவகையான அறங்களைச் செய்தனர்.

நகரம்

இங்ஙனம் சிறப்புப் பெற்ற தொண்டைநாடு நிலமகளின் மதாணி போல் விளங்கியது. அதன் நடு நாயகமணியாய் விளங்குவது கூவநகரம். அத்தலத்தைச் சுற்றியுள்ள தலங்கள் மதாணியின் பக்கங்களில் பொருத்தப்பட்ட மணிகளைப் போல் விளங்கின. முப்பத்திரண்டு அறங்களை வளர்த்த காமாட்சியம்மையின் **காஞ்சிப்பதி இக்கூவம் என்ற நகரத்தின் தெற்கே உள்ளது.**

அந்நகர் உயர்ந்த கோபுரம், பொன், மணியால் இயன்ற மாட மாளிகைகள் மேக மண்டலத்தை அளவிய மதில்கள், மண்டபங்கள் முதலியவற்றை உடையதாய் விளங்கியது. முனிவர் இயற்றும் வேள்வியினின்று எழுந்த புகை வான் உயர்ந்த மாளிகைகளின் பக்கங்களில் மேருவைச் சூழ்ந்து மேகம் போல் விளங்கியது.

தலத்தின் சிறப்பு

அக்கூவம் என்ற நகரில் போர்க் கோலம் பூண்டு திரிபுரங்களை அழிக்கப் புறப்பட்டபோது யானைமுகப்பெருமானான விநாயகர் எதிர்ப்பட்டுத் தேரின் அச்சை ஒடித்தார். மேலே போகாது தடுத்தார். அப்போது இறைவர் நகைத்து முப்புரங்கள் சாம்பலாகும்படி செய்தார்.

தேரின் அச்சினை விநாயகர் முறித்த காரணத்தால் அவருக்கு 'கூவரக்னர்' (அச்சிறுத்த பிள்ளையார்) என்று பெயர் வழங்கியது. சிவபெருமானுடன் போருக்குச் சென்றதால் உமையம்மைக்கு

'வயிரவாகாரை' (பயங்கரமான வடிவை உடையவள்) என்று பெயராயிற்று. சிவபெருமானுக்குக் கோதண்ட மண்டிதர்-திருவிற்கோல நாதர் என்று பெயர் வழங்கலாயிற்று.

முருகப்பெருமான். வயிரவன், வீரபத்திரன், கூஷ்மாண்டன், ஐயனார், காலாக்கினி ருத்திரர், ஆடகேசர், நான்முகன், திருமால், இந்திரன், தேவர்கள், முனிவர்கள் ஆகியவர்களும் அந்த நகரத்திலேயே தங்கி விட்டனர். கூவ நகரத்தில் தங்கிய கலைகளில் ஒன்றை ஆயிரம் கூறாக்கி அவற்றுள் ஒன்றை எடுத்தால் அது ஒப்பதே கயிலை மலை. அந்த நகரத்தில் தேவர்கள் வேறு பெயர் கொண்டு வாழ்ந்தனர். அந்தணர் என்றும் அரசர் என்றும் வணிகர் என்றும் சூத்திரர் என்றும் அவர்கள் பெயர் பூண்டு வாழ்ந்தனர். அறத்தை மேற்கொண்டு வாழ்ந்ததாலும் அறிவுடைமை உள்ளதாலும், கொடையாலும் அன்பு காட்டுதலாலும் கொலைகள் முதலியவற்றைத் தவிர்த்தலாலும் சிறந்து விளங்கினர் கூவ மூதூரில் வேளாளர். அவர்கள் தேவர்களே ஆவார்கள்.

யுகமுடிவில் உலகம் அழியும் போதும் அந்தக் கூவத்துக்கு இறுதியில்லை. கயிலை, கேதாரம், காசி, காஞ்சிபுரம், மதுரை, சோணசயிலம், ஆரூர், காளத்தி, தில்லை ஆகிய தலங்களில் உள்ளவர் கூறும் புகழ் எல்லாம் கூவத்தின் புகழே ஆகும். காசி முதலிய தலங்களில் செய்த பாவம் கூவத்தில் புகுந்த அளவில் நீங்கும். ஆனால் கூவத்தில் செய்த பாவம் எங்கும் அகற்றப்படாத ஒன்றாகும். அந்த நகரத்தில் செய்த ஓர் அணு அளவு அறம் மேலும் மேலும் ஓங்கி மேருமலை போல் வளரும். மேருமலை போல் செய்த பாவம் அக்கூவத்தில் சாம்பலாகிவிடும்.

மைந்தரையும், தாயையும், மங்கையரையும், பசுவையும், தந்தையையும், அந்தணரையும் துன்புறுத்திய கொடியவர் என்றாலும் கூவநகரத்தின் எல்லையில்வரின் நல்ல கதியை அவர்க்கு அளிக்கும்.

பன்றி, ஆடுகள், கோழி, நாய், அன்றில், கழுதை, காக்கை, பாம்பு முதலியவையும் சிவபெருமான் வீற்றிருக்கும் கூவத்தை அடைந்தால் சிறந்த கதியை அடையும்.

அப்பதியின் பெயரைக் கூறியவர் மனத்தினால் நினைத்தவர் அங்குள்ளவர் வயிற்றின் கருத்தங்கியவர் இறந்தவர் உண்மையான கதியை அடைவர். அந்த நகரத்தில் ஓர் நாழிகைப் போது இருந்தால் நூறு கற்பகாலம் சிவலோகத்தில் வாழ்பவர் ஆவார். ஆயிரங்கோடி நான்முகன் திருமால்கள் அங்குப் பூசை செய்துள்ளனர். தேவர், சித்தர், இயக்கர், கின்னரர், நரகர் ஆகியவர் அந்நகரத்தில் இலிங்கபூசையைச் செய்யின் புத்தி முத்தியை அடைவர். அந்த நகரத்தின் மேற்கில் மேனகை, ஊர்வசி முதலிய அரம்பையர் ஆகியவர் அழகும், இளமையும் மாறாமல் இருக்கப் பூசித்த இலம்பையங் கோட்டுரில் எழுந்தருளியுள்ளார். கிழக்குத் திக்கில் கண்ணுவர் வழிபட்ட கண்ணுவலிங்கம் இருக்கிறது. அதை வணங்கியவர் இந்திர போகத்தில் திளைத்து விளங்குவர்.

தீர்த்தச் சிறப்பும் வரலாறும்

திருவிற்கோல நாதர் சன்னிதி முன் கங்கையை விடத் தூய தீர்த்தம் ஒன்றுள்ளது. அதிலே நீராடித் தேவர்களும் தம் உள்ளும் புறமும் ஆன மாசுகள் நீங்கப் பெறுவர். வில்லோன் அம்புக்குத் தப்பும் (நீங்காதிருக்கும்) வினைகளும் உண்டோ!

திருவிற்கோல நாதரதுதேரின் அச்சை விநாயகர் ஒடித்த இடத்தில் ஓர் அழகிய தீர்த்தம் தோன்றியது. அதன் பெயர் சிறுகேணி. அதில் முறைப்படி நீராடினால் ஒவ்வொருநாளும் செய்த பாவம் அகலும், புண்ணியம் மிகும். இந்திரன், கதிரவன், பிரமன், திருமால் பதங்களும் இறுதியில் சிவகதியும் கிட்டும். ஆதிவாரம், சோமவாரம், அட்டமி, அமாவாசை, பௌர்ணமி என்ற புண்ணிய காலங்களில் அந்நீர்நிலையில் நீராடினால் நல்ல மக்களைப் பெறுவர். அரச போகத்தில் திளைப்பர். எனவே உலகத்தில் உள்ள தலங்கள் எல்லாமும் இதற்கு இணையாக மாட்டா'. இவ்வாறு சூத முனிவர் கூவத்தலத்தின் சிறப்பை விளக்கினார்.

நைமிச முனிவர் மகிழ்ந்து சூத முனிவரைப் போற்றி, 'தங்களால் கிடைத்தற்கு அரிய பயன்களைப் பெற்றோம். பிறவிப்பிணிக்கு மருந்தான கூவத்தலத்தை வழிபட்ட பயனையும் பெற்றோம். முப்புரத்து அவுணர் வரலாற்றையும், இறைவர் இவர்ந்த தேரின் அச்சை விநாயகர் ஒடிக்க நேர்ந்ததை எங்கட்கு விளக்கியருள

வேண்டும்' என்று வேண்டினர். சூத முனிவர் சொல்லத் தொடங்கினர்.

திருத்தலச் சருக்கம்

நாட்டுச் சிறப்பு

87. பண்டுள முத்தளை பறிய மெய்க்கதி
கண்டிட அனைவரும் கனக மேருகோ
தண்டமண் டிதர்உறு தலத்தைச் சூழ்தரு
தொண்டைநன் னாட்டணி தொகுத்துக் கூறுவாம்.

தொண்டை நாட்டின் வளம் கூறுவோம்

தெளிவுரை: "உயிர்க்கு முன்னரே அமைந்துள்ள ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று பந்தத்தளைகளும் அற்றுப் போதற்குரிய உண்மைக் கதியைக் கண்டிட முனிவர் அனைவரும் பொன் மலையான மேருவை வில்லாகக் கொண்ட தோற்றத்தவரான சிவபெருமான் வீற்றிருக்கின்ற கூவம் என்ற தலத்தைச் சூழ்ந்த தொண்டை என்ற நல்ல நாட்டின் இயல்பை எடுத்துக் கூறுவோம்" என்று சூத முனிவர் கூறத் தொடங்கினார்.

விளக்கம்: பண்டுள முத்தளை-உயிரில் முன்னரே பொருந்தியுள்ள மூன்று பந்தங்களான ஆணவம் கன்மம் மாயை. இம்மூன்றும் அற்றால் தான் மெய்க்கதி கிட்டப்பெறும்.
கனகமேரு கோதண்ட மண்டிதர்-பொன்மலையான மேருவை. வில்லாக் கொண்ட கோலத்தை உடையவர். **மண்டிதர்**-கோலத்தை உடையவர். தலம் என்றது கூவரத்தை. கூவரம் என்பது கூபரம் என்ற வடசொல்லின் திரிபு. வில்லையுடைமையால் இத்தலத்து இறைவர் திருப்பெயர் 'திருவிற்கோல நாதர்' என்பது. 1

வேறு

88. வாய்த்த கார்புனல் சாடியின் வெண்படாம் வயங்கத்
தோய்த்து வான்மகள் கருமைகூர் துகில்தர விரித்துப்
போர்த்த தாம்என மிளிர்தரு தவள வண்புயல்கள்
நீத்த வாரிதி படிந்து கார் நிறமொடு பரந்த.

மேகங்கள் கூடின

தெளிவுரை: வானம் என்ற மங்கை பொருந்திய கரிய நீரையுடைய சாடியில் வெண்மையான ஆடையைப் தோய்த்துக் கருமை மிக்க

ஆடையாய் ஆக்கி விரித்துப் போர்த்ததைப் போன்று விளங்கும் வெண்மையான மேகங்கள் கடலில் படிந்து கரிய நிறத்துடன் வானில் பரவின.

விளக்கம்: கார்புனல் சாடி-கரிய நிற நீரையுடைய சாடி (பாத்திரம்). **வெண்படாம்**-வெண்மையான ஆடை. **வான்மகள்**-வானம் என்ற மகள். **கூர்**-மிக. **தவள வண்புயல்கள்**-வெண்மையான வளமுடைய மேகங்கள். **வாரிதி**-கடல். **கார்நிறம்**-கரிய நிறம். 2

89. விண்உ லாவிய புழைக்கை போல் முகில்இனம் மேவிக்
கண்உ லாவிய சூல்வளை நித்திலம் கரையில்
தண்உ லாவிய அலைஎறி சலதிநீர் முகந்து
மண்உ லாவிய மதகரி போன்மென வந்த.

மதகரி போன்றன மேகங்கள்

தெளிவுரை : வானில் உலாவிய யானையைப் போல் மேகக் கூட்டங்கள் பொருந்திக் கருக்கொண்ட சங்கு முத்து ஆகியவற்றைக் கரையில் குளிர்ச்சி பொருந்திய அலையால் வீசும் இயல்புடைய கடல் நீரை மொண்டு, மண்ணுலகத்தில் உலவும் மதத்தையுடைய யானை போல் வந்தன.

விளக்கம்: புழைக்கை-துளையையுடைய துதிக்கை யானை, அன்மொழித்தொகை. **முகிலினம்**-மேகக்கூட்டம். **சூல்வளை**-கருவையுடைய சங்கு. **நித்திலம்**-முத்து. **சலதி**-கடல். **மதகரி**-மதத்தையுடைய யானை. 3

வேறு

90. சிந்துரத்திருத் தென்கயி லாயம்வாழ்
எந்தை தன்முடிக்கு ஈர்ம்புனல் ஆட்டல் போல்
நந்தி யம்பெரு நாகச் சிகரிமேல்
வந்து நின்று மழைமுகில் பெய்தவே. 4

மழை பெய்தது நந்தி மலை மீது!

தெளிவுரை: யானையானது தெற்கில் உள்ள கயிலாய மலையில் வீற்றிருக்கின்ற சிவபெருமான் தலையின் மீது நீரைச் சொரிவதைப் போல் நந்தி என்ற பெயரையுடைய பெரிய மலைமீது வந்து நின்று மேகம் பெய்தது.

விளக்கம்: சிந்துரம்-யானை. **தென்கயிலாயம்**-கூவம். **ஈர்ம்புனல்**-குளிர்ந்த நீர். **புனலாட்டல்**-நீராட்டுதல். **நந்தியம் பெருநாகச்சிகரி**-நந்தி என்ற பெயரையுடைய பெரிய மலையின் உச்சி. **நாகம்**-மலை சிகரி-சிகரம், உச்சி. **முகில்**-மழையைப் பெய்யும் மேகம். 4

91. கோடு கொண்டுஉயர் குன்றினும் நின்றுநீர்
மாடு துன்று மணியொடு இழிந்திடல்
ஆடும் அங்கத அண்ணல் முடியைவிட்டு
ஓடு கின்ற இயல்பினை ஒத்ததே.

மணியுடன் ஓடிவந்தது மழைநீர்

தெளிவுரை: மழை நீரானது உச்சியுடன் பொருந்தி உயர்ந்த மலையினின்று, பக்கத்தில் பொருந்திக் கிடந்த மணியுடனே இழிந்திடுவது தில்லையில் ஆடும் இயல்புடைய சிவபெருமானின் முடியை விட்டு ஓடும் தன்மையைப் போல் விளங்கியது.

விளக்கம்: கோடு-உச்சி. **மாடு**-பக்கம். **துன்று மணி**-பொருந்திய நவமணி. **அண்ணல்**-பெருமையுடைய சிவபெருமான். 5

92. கடிய மன்னர் கவர்ந்துகொண்டு ஏகியே
விடின் விரைந்துதம் வீழ்நகர் செல்பவர்
படியது என்னப் பயோதரம் பெய்புனல்
நெடிய மைக்கடல் நேடிந டந்ததே.

கடலைத் தேடிச் சென்றது!

தெளிவுரை: பகைமன்னர் கவர்ந்து கொண்டு சென்று விட்டதால் விரைவாகத் தாம் விரும்பும் நகரத்துக்குச் செல்பவரின் தன்மையைப் போல் மேகம் பெய்யும் நீரானது நீள்கரிய கடலைத் தேடிச் சென்றது.

விளக்கம்: கடியமன்னர்-பகை மன்னர். **விடின்**-விட்டால். **வீழ்நகர்**-தாம் விரும்பும் நகர். **படியது**-தன்மையுடையது. **பயோதரம்**-மேகம். 6

93. கார்அ டைந்து காராவின் அமுதினைச்
சீர்அ டைந்த சிலம்பிற் பொழிதலும்
ஏர்அ டைந்த பாலாறுஎன்று ஒருபெரும்
பேர்அ டைந்து புவியில் பெயர்ந்ததே.

பாலாறு என்ற பெயர் பெற்றது!

தெளிவுரை: கரிய மேகமானது மலையைச் சேர்ந்து காராம் பசுவைப் போல் பாலைச் சிறப்புடைய மலையில் பெய்தது. அதனால் அழகுடைய 'பாலாறு' என்று ஒருபெயர் பெற்று உலகில் ஓடியது.

விளக்கம்: கார்-மேகம். **காரா**-காராம் பசு. **அமுது**-பால் **சிலம்பு**-மழை. **ஏர்**-அழகு. **பெயர்ந்தது**-ஓடியது, மேகமானது காராம் பசுவைப் போன்று பால்போல் நீரைச் சொரிந்த காரணத்தால் பாலாறு என்று பெயர் பெற்றது. 7

94. மெலியர் மேவும் வியன்சிறை நீக்குபு
வலியர் வந்துமீட்டு ஏகுதல் மானவே
ஒலிகொள் நீத்தம்ஒண் கோடு உடைத்து ஒல்லையில்
பொலியும் வாவிநன் னீர்கொடு போகுமால்.

நீர்நிலைகளில் உள்ள நீரையும் கொண்டு ஓடும்

தெளிவுரை: மெலிந்தவர் அடைந்த பெரிய சிறையை நீக்குதற்காக வலியவர் வந்து சிறையினின்று விடுவித்து அழைத்துச் செல்லுதல் போல், ஒலியையுடைய வெள்ளமானது கரையை உடைத்து விரைவாக நீர்நிலைகளில் உள்ள நல்ல நீரையும் தான் கொண்டு ஓடும்.

விளக்கம்: வியன்சிறை-பெரிய சிறை. **நீக்குபு**-நீக்கி. **மானவே**-போலவே. **நீத்தம்**-வெள்ளம். **கோடு**-நீர்நிலைகளின் கரை. **ஒல்லையின்**-விரைவாக. **பொலியும்**-விளங்கும். **வாவி**-நீர்நிலை, குளம். **கொடு**-'கொண்டு' என்பதன் விகாரம். **போகுமால்**-ஆல், அசை. 8

95. வானம் மேய வலிகெழு கோள்அரா
வான ஈர்ங்கதிர் என்னஅங் காந்திடக்
கானம் ஓடிக் கருந்திரை யால்எடுத்து
ஏன மாமருப்பு எற்றும்அந் நீத்தமே.

பன்றிக் கொம்பை வானத்தில் வீசும்!

தெளிவுரை: வெள்ளமானது வானத்தில் பொருந்திய வன்மையுடைய கேது என்ற பாம்பு வானத்தில் உள்ள குளிர்ந்த

மதி என்னும்படி அதை விழுங்கிட வாயைத் திறக்கக் காட்டில் ஓடி அலையான கைகளால் எடுத்துப் பன்றியின் கொம்பை வானில் வீசும்.

விளக்கம்: வானம் மேய-வானில் பொருந்திய. **கோள்அரா**-கேது என்ற கோள் ஆகிய பாம்பு. **கோள்**-கிரகம். **அரா**-பாம்பு. **ஈர்ங்கதிர்**-குளிர்ந்த கதிரையடைய சந்திரன். **அங்காந்திட**-வாயைத் திறக்க வெள்ளம் வீசி எறியும் பன்றியின் கொம்பை வானில் வீசிட, அதைப் பிறைச் சந்திரன் என்று எண்ணிய கேது என்ற பாம்பு அதை விழுங்க வாயைத் திறந்தது என்கிறார். தற்குறிப்பேற்ற அணி **ஏனம் மாமருப்பு**-பன்றியினது சிறந்த (பெரிய) கொம்பு **எற்றும்**-வீசி எறியும். **நீத்தம்**-வெள்ளம். 9

96. சுலவு இரும்புனல் தொண்டைநன் நாட்டினில்
நிலவ ளங்கள் நிரப்புவது அன்றியும்
புலன்இ லங்கு புதுமணி ஆதிய
மலைவ வளங்களும் தந்திட வந்ததே.

மலைவளங்களை அடித்து வந்தன

தெளிவுரை: சூழ்ந்த பெரிய வெள்ளம் தொண்டை நாட்டில் நிலவளங்களில் நீரை நிரப்புவதன்றியே, அவ்விடங்களில் நிறைந்து விளங்கும் புதிய மணி முதலிய மலை வளங்களையும் அடித்துக் கொண்டு வந்தது.

விளக்கம்: சுலவு-சூழ்தல். **இரும்புனல்**-மிக்க வெள்ளநீர். **நிலவளங்கள் நிரப்புவது**-நிலத்தில் பயிர்கள் தழைத்து வளர்ந்து வளம் பெறச் செய்தல். **புலன்**-இடம். **ஆதிய**-முதலிய. 10

97. குங்கு மங்கலந் தோர்புறம் கூர்ஞ்சுனை
தங்கி நின்றுறும் தாது அளைந்து ஓர்புறம்
பொங்கு தண்புனல் போதுவது ஒண்மலை
மங்கை பாதி மணந்தவர்ப் போன்றதே.

வெள்ளம் சிவனும் உமையும் போல் விளங்கியது

தெளிவுரை: குங்குமம் ஒருபுறமும் மிக்க நீரையுடைய சுனையில் தங்கி அங்குள்ள மலர்த்தாதினை அளைந்து ஒரு புறமும் கொண்டு

பெருகும் குளிர்ந்த நீர் வெள்ளம் வருவது, ஒளியுடைய மலையின் மகள் பாதியாக விளங்கும் சிவபெருமானைப் போன்றும் விளங்கியது.

விளக்கம்: வெள்ளம் ஒரு பக்கம் குங்குமத்தையும் ஒரு பக்கம் சுனை நீரில் உள்ள மலர்த்தாதினையும் உடையதாய் விளங்கியது. அதனால் சிவபெருமானும் பார்வதியும் சேர்ந்திருப்பதைப் போல் விளங்கியது. **தாது**-குங்குமம் சிவபெருமானின் மேனியையும் தாது உமையம்மையின் மேனியையும் குறித்து நின்றன. **தாது**-மகரந்தம். **அளைந்து**-சேர்ந்து. **தண்புனல்**-குளிர்ந்த நீர்வெள்ளம். **ஒண்மலை மங்கை**-ஒளியுடைய இமய மலையின் மகள். **உமையம்மை மணந்தவர்**-சிவபெருமான். 11

98. வில்இ ருந்திரை வில்நாண் குறுக்கிடு
வல்லி ஒண்கணை செவ்விதின் வந்ததாள்
அல்லி நன்முகை யாக்கொடு வேலையோடு
ஒல்லும் வெஞ்சமர்க்கு உற்றிடல் போன்றதே.

கடலுடன் போரிட வந்தாற் போன்றது!

தெளிவுரை: வில், பெரிய அலை. வில்லில் குறுக்காகக் கட்டப்படும் நாண் கயிறு வெள்ளத்தில் குறுக்கிடும் கொடி. ஒளியுடைய அல்லியின் நல்ல முகை ஆகிய கருவிகளைக் கொண்டு கடலுடன் கொடிய போரைச் செய்ய வந்தது போல் விளங்கும்!

விளக்கம் : வெள்ளம் கடலுடன் போர் செய்ய வந்தாற் போல் விளங்கியது. வெள்ளத்துக்கு அலையே வில், கொடிகளே நாண் கயிறு, அல்லியின் அரும்பே அம்பு. இக்கருவிகளுடன் வெள்ளம் கடலுடன் போர் செய்ய வந்தது என்க. 12

99. பெண்ணை சாய்த்துப் பெருகிக்கா வேரியின்
நண்ணி ஓதிம நன்குற வைகை சேர்ந்து
எண்ணு கம்பை இயைந்து மணித்திரள்
மண்ணி ஏகும் வளம்கெழு பாலியே. 13

பாலாற்றின் மேன்மை

(இப்பாடல் சிலேடையில் அமைந்துள்ளது)

தெளிவுரை: வளமான பாலாறு, பெண்ணையாற்றைக் கீழ்ப்படச் செய்து, பெருகி காவிரியாற்றைவிட மேம்பட்டு, அன்னப் பறவைகள் நன்கு தங்குதற்கு இடம் உடையதாய், மதிக்கப்படும் கம்பை ஆற்றை ஒத்து, மணிக்கூட்டங்களைக் கழுவி ஓடும் இயல்புடையது.

பிறிதொரு பொருள்: வளமுடைய பாலாறும் ஓடும் வழியில் பனை மரங்களை வீழ்த்திச் சோலை தேனுடன் கலந்து, வைகையாற்றைப் போன்று விளங்கச் சங்குகளைப் பெற்று, மணிக் கூட்டங்களால் அலங்கரிக்கப்பட்டுச் செல்லும். 13

வேறு

100. சிலம்படி மருவிச் சந்தத்
திலகமுன் நெற்றி இட்டுப்
பொலங்கொடி இடைசூழ் காஞ்சி
பொருந்திமென் நகில்மேல் ஆரம்
இலங்குற வளைகள் கைசேர்ந்து
இரத்தினப் பணிதாங் காஉற்
பலம்பயில் அனக மோடும்
பாலியாம் மடந்தை போந்தாள். 14

பாலாற்றின் சிறப்பு

இதுவும் சிலேடையின் அமைந்தது.

தெளிவுரை: முதற்பொருள்: பாலாறு மலையைப் பொருந்தி அழகிய மஞ்சாடியை ஏற்றிவிட்டுக் கொண்டு அழகிய கொடி இடையில் சுற்றிய காஞ்சி மரத்தில் பொருந்தி மென்மையான அகில் சந்தனம் விளங்க இலகும் சங்குகள் பக்கங்களில் சேர்ந்து மணியையுடைய பாம்பு தங்கி நெய்தல் மலர் நீர் ஓடும் பாலியாறு என்ற மங்கை சென்றாள்.

பிறிதொரு பொருள்: பாலியாறு என்ற மங்கை சிலம்பை அணிந்து சாந்தத்தால் ஆன அழகிய திலகம் நெற்றியில் அணிந்து பொன் போன்ற கொடி இடையில் காஞ்சி என்ற அணியை அணிந்து

மென்மையுடைய கொங்கை மீது மாலை விளங்க வளைகள் கைளில் அணிந்து இரத்தினத்தால் ஆன அணியை அணிந்து நெய்தல் மலரைக் கூந்தலில் சூடிச் செல்வாள்.

விளக்கம்: சிலம்பு-மலை கால் அணி. **திலகம்**-மஞ்சாடி, பொட்டு முன் நெற்றியில் திலகம் இட்டு. **பொலம்**-அழகு பொன். **இடை**-நடு; இடுப்பு. **காஞ்சி**-ஒருமரம் ஒருவகை மகளிர் அணியும் அணி அகில். **ஆரம்**-அகிலும் சந்தனமும், கொங்கையும் மாலையும். **வளை**-சங்கு கைவளை. **கை**-பக்கம்; கரம். **பணி**-பாம்பு, அணி. **அளகம்**- நீர்; கூந்தல். 14

101. சேட்டிள வாளை தாக்கத்
        தெங்கிள நீர்மார்த் தாண்டன்
    பூட்டுவெம் பரித்தேர் காறும்
        விசையினில் போதத் தெண்ணீர்
    வேட்டவண் இருந்த பாகன்
        விரைவினில் பற்றி யுண்ணும்
    மூட்டுமூழ் எங்குற் றாலும்
        அனைவர்க்கும் மூட்டி டாதோ.

ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்

தெளிவுரை: அழகிய இளைய வாளை மீனானது தாக்கத், தெங்கின் இளைய நீர்க்காய் கதிரவன் தேரில் பூட்டப்பட்ட கொடிய தேரில் விசையுடனே போய்ப்பாய, அதனைத் தேர்ப்பாகனான அருணன் விரைவாய்ப் பிடித்து உண்பான். பயனை ஊட்டும் நல்லூழானது எங்கிருந்தாலும் அனைவர்க்கும் ஊட்டிடாதோ!

விளக்கம்: வாளைமீன் தென்னை மரத்தில் மோதுகிறது. அதனால் தென்னையின் இளநீர்க்காய் கதிரவனின் தேரில் உள்ள பாகன் பற்றி உண்ணும்படி போய் அடைகிறது. எனவே நல் ஊழால் ஒருவருக்கு நன்மை விளையாது! போகுமோ! போகாது.

வேடு-அழகு; பெருமை எனவும் சொல்லலாம். **வாளை**-வாளை என்ற மீன். **மார்த்தாண்டன்**-கதிரவன். **போத**-போக, அடைய தெண்ணீர், அதாவது தண்ணீரைக்குடிக்க வேண்டி விரும்பியவன், அதாவது தாகம் கொண்டவர். **பாகன்**-கதிரவனின் தேர்ப்பாகனான

அருணன். **பற்றி**-காயைப்பிடித்து. **ஊட்டும் ஊழ்**-பயனை அனுபவிக்கச் செய்யும் ஊழ். **ஊட்டிடாதோ**-ஒகாரம் உடன்பாட்டுப் பொருளில் வந்தது. 15

102. துருக்கமும் நறிய சந்தும்
        சுடர்கெழு மணியும் முத்தும்
    மருக்கிளர் மலரும் தாங்கி
        மதம் உமிழ் கரிமேல் கொண்டு
    பெருக்கம்உற்று அளவில் மாக்கள்
        பரவப்பே ரியாற்று வேந்து
    பொருக்எனக் கடலோர் காதம்
        எதிர்புகுந்து அழைப்பப் போமால்.

கடல் அழைத்துச் செல்லல்

தெளிவுரை : கத்தூரியும் நறுமணச் சந்தமும் சுடர் பொருந்திய மணியும் முத்தும் மணம் விளங்கும் மலர்களும் தாங்கி மதம் சொரியும் யானையும் தன்மீது கொண்டு, பெருகி, அளவில்லாத விலங்குகள் பொருந்தப் பெரிய யாறு என்ற மன்னன் விரைந்து போகக் கடல் ஓர்காதம் எதிர் வந்து அழைக்கச் செல்ல செல்வான்.

விளக்கம் : துருக்கம்-கத்தூரி. **சந்து**-சந்தனமரம். **மணி**-பலவகைப்பட்ட மணிகள். **மரு**-நறுமணம். **கிளர்**-விளங்கும். **மதம் உமிழ்கரி**-மதத்தைச் சொரியும் யானை. **மாக்கள்**-விலங்குகள், மக்கள் எனவும் பொருள் கொள்ளலாம். 16

103. நண்ணிய புறத்து மாசோடு
        ஆடிய நரர்க்கு மற்றை
    உள்நிகழ் மனத்த ழுக்கும்
        ஒருங்குடன் தீரும் வண்ணம்
    அண்ணுபு மறித்து நண்ணா
        வகைபுரிந்து அமலம் நல்கும்
    புண்ணிய தீர்த்தம் பாலி
        அல்லது புவியின் யாதோ?

அழுக்கைப் போக்கும் புண்ணியநதி பாலாறு

தெளிவுரை : உடல் மேல் அடைந்த அழுக்குடனே தன்னில் நீராடியவர்க்கு மற்றும் மனத்துள் ஏற்படும் அழுக்கும் ஒருங்கே நீங்கும்படி கழுவித்தூய்மை செய்து மீண்டும் அவ்வழுக்குகள் அடையாதபடி தூய்மையை அளிக்கின்ற புண்ணிய தீர்த்தம் பாலாறே அல்லாது உலகில் வேறு எதுவும் இல்லை!

விளக்கம் : புறத்தழுக்கையும் அகத்தழுக்கையும் போக்கித் தூய்மை செய்வது பாலாறு. **பாலி**-பாலாறு. **மாசு**-அழுக்கு. **நரர்க்கு**-மனிதர்க்கு. **மண்ணுபு**-கழுவி. **மறித்து**-திரும்ப. **நண்ணாவகை**-அடையாதபடி. **அமலம்**-குற்றம் இன்மை. 17

104. தன்னைஆ தரவில் கண்டோர்
தங்கட்குஆ தனமாய் நல்கப்
பொன்இதழ்க் கமலப் போதும்
பொருந்திஆ டுநர்கள் தாங்க
அந்நிலை அளிப்பச் சங்கு
மடுத்துவந்து உட்கொண்டோர்கள்
பன்னகம் மணிதற்கு ஈயப்
பரித்தொழு குறும்அந் நீத்தம்.

திரிமூர்த்திகளின் பதங்களைத் தரும்!

தெளிவுரை : தன்னை அன்புடன் காண்பவர்களுக்கு இருக்கையாய் நல்கப் பொன் இதழ்களையுடைய தாமரை மலரும், அந்நீரில் பொருந்தி நீராடுபவர்கள் தாங்க அத்தகைய நிலையை அளிக்கச் சங்கும், அவ்யாற்றை நினைத்து மனத்துள் வழிபட்டவர்கள் (திருமால் பதவியை) (சிவபதவி) பாம்பும் மனிதர்க்குத் தரச் சுமந்தபடி அன்புடன் ஓடும் அந்தப் பாலாற்றின் வெள்ளம்.

விளக்கம் : **ஆதரவு**-அன்பு. **ஆதனமாய்**-இருக்கையாய். **பொன் இதழ்க் கமலப் போது**-பொன் இதழ்களையுடைய தாமரைமலர், இங்ஙனம் சுட்டப்பட்டது பிரமபதவி. **சங்கு**-சங்குகளை உடைய திருமால் பதவி. **பன்னகம்**-பாம்பு பாம்பை அணியாக அணிந்த சிவபெருமானின் பதவி. பாலாற்றைக் கண்டவர், ஆடியவர், மனத்துள் எண்ணியவர் ஆகியோர்க்குப் பிரமபதவியும் திருமால் பதவியும், சிவபதவியும் கிட்டும் என்பதாம். 18

105. பொய்கையும் கிடங்கும் காவும்
புகுந்து உலாம் பாலி நீத்தம்
செய்களின் மள்ளர் ஆர்ப்பச்
சிரம்ஒரா யிரம்பெற் றீசன்
வைகும் ஒண் கயிலை நண்ணி
வலம்புரி முழக்கும் கம்பன்
கைகளின் நிமிரும் பாங்கர்க்
கால்களின் சிவந்து செல்லும்.

வாய்க்கால்களில் பரவிப் பாய்ந்து ஓடியது

தெளிவுரை : நீர்நிலையும் அகழியும் சோலையும் ஆகியவற்றில் புகுந்து திரியும் பாலாற்றின் வெள்ளம், வயல்களில் உள்ள உழவர்கள் ஆரவாரம் செய்ய ஆயிரம் தலைகளைப் பெற்றுச் சிவபெருமான் வீற்றிருக்கும் ஒளியுடைய கயிலை மலையை அடைந்து வலம்புரிச் சங்கை முழக்கும் பானு கம்பன் கைகளைப் போல வாய்க்கால்களில் பாய்ந்து ஓடும்.

விளக்கம் : **பொய்கை**-நீர்நிலை. **கிடங்கு**-அகழி. **கா**-சோலை. **உலாம்**-உலாவும் என்பதன் விகாரம். **பாலிநீத்தம்**- பாலியாற்று. **வெள்ளம் செய்களில்**-வயல்களில் வெள்ளத்தைக் கண்டு உழவர் ஆரவாரம் செய்வது வழக்கம். ஆதலால் 'மள்ளர் ஆர்ப்ப' என்றார். **சிரம்**-தலை. **ஈசன்**-சிவபெருமான். **வலம்புரி**-வலப்பக்கமாகச் சுழிந்துள்ள சங்கு. **கம்பன்**-பானு கம்பன். இவன் கயிலைமலையில் சங்கு ஊதும் செயலை யுடையவன். 19

106. தேஞ்சிலம்பு எழுந்த பாலித்
தெண்புனல் பரவ மள்ளர்
தாஞ்சிலம் பியமோடு ஆர்த்துத்
தலைத்தலைக் குழுமிச் செய்க்கண்
நாஞ்சில்அம் பகடு பூட்டி
நல்எழில் மாதர் தங்கால்
பூஞ்சிலம்பு எனச்சால் கீறிப்
புடைபரந்து உழுவார் அன்றே.

உழவர் கலப்பையால் உழுதனர்

தெளிவுரை : தேன்பொருந்திய நந்தி மலையினின்று தோன்றிய பாலியாற்றின் தெளிவான நீர் பரவிட, உழவர்கள் மருதப் பறைகள் ஒலிக்க ஆரவாரம் செய்தனர். அங்கங்கே ஒன்றாகக் கூடி வயல்களில் கலப்பைகளில் எருதுகளைப் பூட்டினர், நல்ல அழகுடைய மங்கையரின் காற் சிலம்பு போல் சால் வகுத்துப் பக்கத்தில் பரவி உழத் தொடங்கினர்.

விளக்கம் : **தேஞ்சிலம்பு**-தேன்+சிலம்பு தேன் அடைகள் உள்ள மலை, அம்மலை நந்தி மலை. **தெண்புனல்**-தெளிந்த நீர் **தாஞ்சிலம்பிய மோடு**-தாம்+சிலம்பு+இயமோடு. **இயம்**-மருதப்பறை. **நாஞ்சில்**- கலப்பை. **சால்**-படைச்சால்.
பாலாற்று வெள்ளத்தைக் கண்ட உழவர் மருதப் பறையை அடித்து முழக்கி ஆரவாரம் செய்து வயலில் கலப்பையில் எருதுகளைப் பூட்டி உழுதனர்.
சிலம்பு-மலை, ஒலித்தல், காலணி. **பூஞ்சிலம்பு**-அழகிய சிலம்பு, பூத்தொழிலையுடைய சிலம்பு. **புடைபரந்து**-பக்கத்தில் பரவி. **அன்றே**-அன்று, ஏ-அசைகள். 20

107. அந்தகன் இவரும் ஊர்தி
அன்னவெம் பகட்டுஏர் பூட்டி
உந்திஅங்கு உரப்பி மள்ளர்
உழும்பனை எகினம் சங்கைத்
தந்திடும் அண்டம் என்னச்
சடக்கென எடுத்து வான்போய்
நந்தென விடுப்ப வீழ்வ
நளிர்மதி தவறிற்று! ஒக்கும் 21

மதி தவறி விழுவது போன்றது!

தெளிவுரை: இயமன் ஏறிச் செல்கின்ற எருமைக் கடாவைப் போன்ற கொடிய எருமையை ஏர்க்கலப்பையில் பூட்டி உந்தி அதட்டிச் சத்தமிட்டு உழவர் வயலில் உழுதனர். அவ்வயலில் உள்ள சங்கை அன்னப் பறவை தன் முட்டை என்று எண்ணி எடுத்துக் கொண்டு மேலே சென்றது. அப்போது அது தான் எடுத்து வந்தது சங்கு

என்பதை உணர்ந்து அதைச் சடக்கெனக் கீழே விழ விட்டது. அது குளிர்ந்த மதி தவறி நிலத்தில் விழுவதைப் போன்று விளங்கியது.

விளக்கம் : **அந்தகன்**-இயமன். **இவரும் ஊர்தி**-ஏறிவரும் வாகனம். **வெம்பகடு**-கொடிய எருது. **ஏர்பூட்டி**-ஏர்க்கலப்பையில் பூட்டி. **உரப்பி**-அதட்டி. **எகினம்**-அன்னப்பறவை. **சடக்கென**-விரைந்து. **நந்து**-சங்கு. **விடுப்ப**-கைவிட்டுவிட. **நளிர்மதி**-குளிர்ச்சியுடைய சந்திரன். 21

108. சுரும்புஇனம் இரியல் போகத்
தொத்துஇதழ்க் கமலச் செப்புள்
நிரம்பு கள் கைம்ம டுத்து
நிறைய உண்டு எழுந்து மள்ளர்
வரும்புனல் தேக்கி ஆன்ற
வயல்உழுது அளைந்த சேறு
பரம்படித்து இழுது செய்து
பறித்துநாறு எங்கும் நட்டார்

நாற்றை நட்டனர்!

தெளிவுரை : வண்டின் கூட்டம் அஞ்சி ஓடிவிடக் கொத்தான தாமரையாகிய கிண்ணத்துள் நிரம்பிய கள்ளைக் கையில் எடுத்து மள்ளர் நிறைய உண்டனர். பின் ஓடிவரும் பாலாற்று வெள்ளத்தைத் தேக்கி நிறைந்த வயலை உழுது அளைந்த சேற்றில் பரம்படித்துக் குழையுமாறு செய்தனர். அதன் பின்பு ஏற்கனவே பறித்த நாற்றை எங்கும் நட்டனர்.

விளக்கம் : **சுரும்பினம்**-வண்டுக் கூட்டம். **இரியல் போக**-அஞ்சி அகல. **தொத்திதழ்**-தொத்து+இதழ், கொத்தான இதழ்களை உடைய. **கமலச் செப்புள்**-தாமரையான கிண்ணத்துள். **கைம்மடுத்து**-கையையிட்டு. **மள்ளர்**-உழவர். **இழுது செய்து**-சேற்றை மென்மை யுடையதாக்கி. **நாறு**-முளை. 22

109. களைகளை விப்ப மள்ளர்
கருதித்தம் மாதர்ப் பாரா
விளை அமிர்து அன்னீர் நுங்கள்
விழிஇதழ் வதன மோடு
முளரிஒண் குமுதம் நீலம்
முரணிநிற் கின்ற என்ன
வளைகலித் திடவே ரோடு
மற்றவை களைதல் செய்வார்.

களை பறித்தல்!

தெளிவுரை : உழவர் நெற்பயிரிடை எழுந்த களைகளைக் களைய எண்ணினர், தம் மங்கையரைப் பார்த்து, 'பாற்கடலில் விளைந்த அமுதத்தைப் போன்றவரே! நுங்கள் கண், வாய் உதடு, முகம் என்ற இவற்றுடனே தாமரை, ஒளியுடைய குமுதம், நீலோற்பலம் ஆகியவை மாறுபட்டு நிற்கின்றன!' என்று உரைத்தார்கள். அதைக் கேட்ட அம்மங்கையர் தம் கைவளைகள் ஒலிக்க வயலில் புகுந்து வேருடன் களைகளைப் பறித்து எறிந்தனர்.

விளக்கம்: உழவர் களைகளைப் பறித்தெறிய ஓர் உபாயத்தைக் கைக் கொண்டனர். 'பெண்டிரே! உங்களுடைய கண், உதடு, முகம்,ஆகியவற்றுக்கு மாறாக குமுதம், தாமரை, குவளை ஆகியவை விளங்குகின்றன!' என்று உரைத்தனர். மங்கையர்க்குச் சினம் பொங்கியது வயலில் இறங்கித் தாமரை குமுதம் நீலம் ஆகியவற்றைப் பறித்து எறிந்தனர். இவ்வாறு வயலில் செறிந்த களைகள் களையப்பட்டன.

களைவிப்ப-களைகளைப் பறித்திடச் செய்ய. **பாரா**-பார்த்து, 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். **அமிர்து**-பாற்கடலில் தோன்றிய அமிழ்தம். **இதழ்**-உதடு. **வதனம்**-முகம் குமுதம் ஆம்பல். **நீலம்**-கருங்குவளை, நீலோற்பலம், **முளரி**-தாமரை. **வளை**-கை வளையல்கள். **கலித்திட**-ஒலிக்க. 23

வேறு

110. முற்றிடு நளிர்மதி முகத்து உழத்தியர்
உற்றிட உடலின் எம் முறையில் கண்களால்
மற்றுஎமை இகலினோர் வருதல் என்என
வெற்றிடு மறிந்திட எழுந்த சேல்களே.

எம் பகைவர் இங்குவருவானேன்!

தெளிவுரை : முழுமையான குளிர்ந்த சந்திரனைப் போன்ற முகத்தையுடைய மங்கையர் வயலில் வந்தனர். அதைக் கண்ட சேல்மீன்கள், கண்களால் எமக்கு மாறுபட்டு விளங்கும் மங்கையர் என்ன காரணத்தால் இங்கு வருவது என்று அதை அறிந்து கொள்ளத் துள்ளி எழுந்தன.

விளக்கம் : முற்றிடு நளிர் மதி முகத்து உழத்தியர்-நிறைந்த குளிர்ச்சியுடைய சந்திரனைப் போன்ற முகம் உடைய உழவப் பெண்டிர். **எம்முறையில்**-என்ன காரணத்தால். **கண்களால் மற்று எமை இகலினோர்**-கண்களால் எமக்குப் பகையானவர் எதிரானவர். **என்**-என்ன காரணம். **எற்றிடும்**-மோதும். **சேல்கள்**-சேல் மீன்கள். 24

111. முண்டக நறைமலர் மொய்த்த பாங்கரில்
ஒண்தொடி மார்திரு உருவம் எண்ணில
கொண்டவை தொறும்மரீஇக் குறித்து நின்றென
மண்டுறு பெரும்புனல் வயற்கண் நிற்பரால்.

நீர் ஓடிவருதலைப் பார்த்து மங்கையர் வியத்தல்

தெளிவுரை : தாமரை என்ற தேன் பொருந்திய மலர் நெருங்கியுள்ள வயலில் ஒள்ளிய வளையலை அணிந்த மங்கையர் திருவுருவம் எண்ணற்றனவாய் விளங்க, அவற்றில் பெரும்புனல் பாய்ந்து குதித்து நிற்க, அவற்றைக் கண்டு அவர்கள் வயலில் நிற்பர்.

விளக்கம் : தாமரை படர்ந்துள்ள வயலில் மங்கையர் இறங்கினர். அவர்களின் வடிவம் பல வயலில் விளங்கின. அவற்றின் மீது வெள்ளம் பாய்ந்தது. அதனால் அவ்வடிவங்கள் குலைந்தன. அதைப் பார்த்து மங்கையர் வியந்து நின்றனர். 25

112. அலைபுனல் தண்பணை யகத்துச் செந்நெலோடு
இலைபுடை வளைவுற ஈர்ம்ப சுங்கதிர்
நிலைபெற எழுந்துமேல் நிமிர்ந்து தோன்றுவ
கொலைமத கரியின்அங் குசங்கள் போன்றவே.

அங்குசம் போல் நெற்கதிர் விளைந்தன

தெளிவுரை : அலையையுடைய நீர் குளிர்ந்த வயலில் செந்நெல் ஒரு பக்கத்தில் இலையானது வளைய குளிர்ந்த பசுமையான கதிர் நிலைபெற உயர்ந்து எழுந்து மேல் நிமிர்ந்து தோன்றின. அவை கொல்லும் தன்மையுடைய யானையைச் செலுத்துதற்குரிய கருவியான அங்குசங்களைப் போல் விளங்கின.

விளக்கம் : பணை-வயல். **புடை**-பக்கம். **வளைவுற**-வளைய. **ஈர்ம்பசுங்கதிர்**-குளிர்ந்த பசுமையான கதிர். **கொலை மதகரி**-கொல்லும் தன்மையுடைய மதம் உடைய யானை. **அங்குசம்**-யானையைச் செலுத்தற்குரிய தோட்டி என்ற ஒருகருவி. 26

113. உண்ணிய வந்துறு நாரை யோடமேல்
நண்ணிய வாளைபாய் நலத்த பண்ணையில்
பண்ணிய பயிர்பெரும் பாலி நாட்டுளோர்
புண்ணியம் தெளிவுற விளைந்த பொற்பினால்.

புண்ணியம் போல் விளைந்தன பயிர்!

தெளிவுரை : வயலில் உள்ள மீனை உண்ண வந்தன நாரைகள். அவை அஞ்சி ஓடும்படி வாளை மீன்கள் பாய்ந்தன. அத்தகைய இயல்புடைய வயலில், உழவர் பண்ணிய பயிர் பெருமையுடைய பாலிநாட்டவர் செய்த புண்ணியத்தைப் புலப்படுத்துவதுபோல நன்கு விளைந்து விளங்கின.

விளக்கம்: உண்ணிய-உண்ணுதற்காக. **வந்துறு நாரை**-வந்த நாரை என்ற பறவை. **ஓட**-அஞ்சி ஓட. **மேல் நண்ணிய**-மேலே துள்ளிய வாளை மீன். **நலத்த**-இயல்புடைய. **புண்ணியம் தெரிவுற**-புண்ணியம் புலப்பட. 27

114. மேல்நிமிர் பைஞ்சுருள் விரித்த சாலிகள்
பால்நிறை தருங்கதிர் பழுத்த கண்உறீஇக்
கூன்இரும் பினைக்கரங் கொண்டுஅரிந்தரோ
வான்அகடு உரிஞ்சு போர் வகுப்பர் மள்ளர்கள்.

நெல்லரிந்து போராகக் குவித்தல்

தெளிவுரை : மேலே நிமிர்ந்து வளர்ந்த பசிய சுருள விரியப்பெற்ற பால் நிறைந்த கதிரர் முற்றின. அவற்றைப் பார்த்த உழவர், வளைந்த இரும்பால் ஆன அரிவாளைக் கையில் கொண்டு அரிந்து வானத்தைத் தொட்டு உராயும்படி போராகக் குவித்தனர்.

விளக்கம் : பயிர் முற்றி விளைந்ததைக் கண்டனர் உழவர் அரிவாளால் அறுத்துப் போராகக் குவித்தனர். அவை வானத்தில் உராயுமாறு உயர்ந்து விளங்கின.

பைஞ்சுருள்-பசிய சுருண்ட நெற்கதிர். **சாலிகள்**-நெற்கதிர்கள். **பால்நிறை தரும்கதிர்**-பால் பொருந்தி நிறைந்த கதிர்கள். **கண்ணுறீஇ**-பார்த்து. **வானகடு**-வான்+அகடு வானின் வயிறு. **உரிஞ்சு**-உராயும். **வகுப்பர்**-குவிப்பர். 28

115. ஏர்க்கதிர் வாள்கொடே ஈர்வர் வீக்கிமெய்
வேர்க்க அங்கு எடுத்து உராய் வீழ்த்தி எற்றுவர்
சூர்க்கரும் பகட்டினால் துவைப்பித்து ஆர்ப்பரால்
போர்க்களம் புகுந்துபோர் புரிநன் மள்ளரே.

உழவர் செயல்

தெளிவுரை : நெற்போர்க்களத்தில் புகுந்து நெல்லடிக்கும் செயல் செய்பவரான உழவர் அழகிய நெற்கதிர்களை அரிவாளால் அறுப்பர் அரிந்தவற்றைக் கட்டுவர். உடல் வேர்க்கும்படி எடுத்து ஒன்றுடன் ஒன்று நெருங்க வீழ்த்தி அடிப்பர். அச்சத்தைத் தரும் எருதை விட்டு மிதிக்கச் செய்வர். செயல் முடிந்ததும் ஆரவாரம் செய்வர்.

விளக்கம் : ஏர்க்கதிர்-அழகிய நெற்கதிர். **வாள்கொடு**-அரிவாளைக்கொண்டு. **ஈர்வர்**-அரிவர். **உராய்**-நெருங்கி. **எற்றுவர்**-அடிப்பர். **சூர்க்கரும்பகடு**-அச்சத்தைத்தரும் கரிய எருது அல்லது எருமை. **துவைப்பித்து**-மிதிக்கும்படி செய்து. **மள்ளர்**- உழவர். **போர்க்களம் புகுந்து**-நெல்லடிக்கும் களத்தில் புகுந்து, வீரர் போர் புரியும் களத்தில் புகுந்து என்பதுமாம். **போர்புரி**-நெற்போர் குவிக்கும் (உழவர்) போரைச் செய்கின்ற (உழவர்). 29

116 வேறுஉறும் பலாலநீத்து உலவை மேவுழி
மாறுஅரும் பதடிகள் மாற்றி நெற்குவால்
ஆறின்ஒன்று அரையருக் களித்து மற்றஐங்
கூறுநல் அறங்களில் குலவச் செய்வரால்.

உழவர் செயல் (தொடர்ச்சி)

தெளிவுரை : வேறான வைக்கோலை நீத்துக் காற்று வந்தபோது தூற்றி மாறுபட்ட பதடிகளைப் போக்கிடுவர். விளைந்த நெல்லில் ஆறுபங்கில் ஒன்றை மன்னர்க்குத் தருவர். எஞ்சிய ஐந்து பகுதி தமக்குக் கொண்டு அதனால் நல்லறங்களை விளங்கும்படி செய்வர்.

விளக்கம் : வேறுஉறும்-வேறாகப் பிரியும். **பலாலம்**-வைக்கோல் **உலவைமேவுழி**-காற்று வீசும் போது. **பதடி**-பதர். **மாற்றி**-தூற்றிப் போக்கி. **நெற்குவால்**-நெற்குவியல். ஆறில் ஒருபகுதியை மன்னர்க்கு மக்கள் அளிக்க வேண்டும் என்ற மரபுப்படி நெல்லில் ஆறில் ஒருபங்கை மன்னர்க்குத் தந்தனர். எஞ்சியதில் நல்ல அறங்களைச் செய்தனர். **குலவ**-பொருந்த. **செய்வரால்**-ஆல், அரச. 30

வேறு

117. பிரிந்தமட வார்அளகம் குழைக்காது
விழிஅதரம் பிறங்கும் மூரல்
பொருந்துகளம் முலைபாணி உந்திமுழந்
தாள்கணைக் கால் புறந்தாள் வாவி
பரந்திடுசை வலம் வள்ளை கயல் ஆம்பல்
தரளம்மணி பணிலம் கண்ணி
விரிந்த மரை சுழிலவன் வரால் கமடம்
இளைஞர் உளம் விரும்பக் காட்டும்

இளைஞர்க்கு மகிழ்வைத் தருவன

தெளிவுரை : ஊடலால் பிரிந்த மங்கையரின் கூந்தல், காதணியணிந்த காது, கண்கள், உதடு, விளங்கும் பல், பொருந்தும் கழுத்து, கொங்கை, கை, கொப்பூழ், முழந்தாள், கணைக்கால், புறங்கால் என்னும் இவற்றை, நீர்நிலையில் பரவியுள்ள பாசி, வள்ளை மலர், கயல்மீன், ஆம்பல், முத்து, மணி, சங்கு, மொட்டு,

மலர்ந்த தாமரை, நீர்ச்சுழி, நண்டு, வரால் மீன், ஆமை ஆகியவை இளைஞரான ஆடவரின் மனம் விரும்பும்படி புலப்படுத்தி விளங்கும்.

விளக்கம் : மகளிர் ஊடலால் பிரிந்தனர். அவர்தம் கூந்தல் முதலியவற்றைப் பாசி முதலியன முறையே புலப்படுத்திக் காதலர் விரும்புமாறு செய்யும்.

கூந்தலைப் பாசியும், காதை வள்ளையும், விழியைக்கயல் மீனும், உதட்டை ஆம்பலும், பற்களை முத்தும், கழுத்தைச் சங்கும், கொங்கையைத் தாமரை மொட்டும், கையை மலர்ந்த தாமரை மலரும், கொப்பூழை நீர்ச்சுழியும், முழந்தாளை நண்டும், கணைக்காலை வரால் மீனும், புறங்காலை ஆமையும் புலப்படுத்தின.

அளகம்-கூந்தல். **குழை**-காதணி. **மூரல்**-பல். **களம்**-கழுத்து. **பாணி**-கை. **உந்தி**-கொப்பூழ். **வாவி**-நீர்நிலை.
சைவலம்-பாசி. **ஆம்பல்**-செவ்வாம்பல். **தரளம்**-முத்து. **பணிலம்**-சங்கு. **கண்ணி**-தாமரை மொட்டு. **சுழி**-நீர்ச்சுழி. **அலவன்**-நண்டு. **கமடம்**-ஆமை. 31

118. வானமெழு நிறைமதியம் தண்டகநாட்டு
அரிவை யர்தம் வதனம் போலாது
ஊனமுடன் நலம் அரவிப் பதுமமா
மலர்மலர்ந்தே ஒப்ப இங்ஙன்
தானமாவ தென்னுக்குஎன்று அழுக்காறு
மனத்தடையத் தடத்த வாவித்
தேனவிழும் இதழ்க்கமலச் செழும் போதின்
தனது அழகைச் சிதைக்கும் அன்றே.

நிறைமதி தாமரையின் அழகை அழிக்கும்

தெளிவுரை : வானத்தில் தோன்றும் முழுமதி தொண்டைநாட்டு மங்கையரின் முகத்தைப் போல் விளங்காமல், களங்கத்துடன் கலங்கித் திரிய இத்தாமரை மலரானது மங்கையர் முகத்துக்கு ஒப்பாக விளங்குவது ஏன்? என்று பொறாமை உள்ளத்தில் உண்டாகப் பரந்த நீர்நிலையில் தேன்சொரியும் இதழ்களையுடைய

தாமரையின் அழகை அந்நிறைமதி அழிக்கும். அதாவது தாமரையை குவியச் செய்யும்.

விளக்கம் : தாமரை மலர் மங்கையர் முகத்துக்கு ஒப்பாக விளங்குகிறது. தான் மட்டும் அப்படி மங்கையர் முகத்துக்கு ஒப்பாகவில்லையே என்று சந்திரன் தன்மனத்தில் பொறாமை கொண்டு, அத்தாமரையைக் குவியச் செய்கின்றது என்பது கருத்து. தாமரை சந்திரன் தோன்றக் குவியும் இது இயல்பான ஒன்று. இதனைத் தான் அதன் அழகைச் சிதைப்பதாகக் கூறினார்.
நிறை மதியம்-முழுமதி. **கண்டகநாடு**-தொண்டை நாடு. **அரிவையர்**-மங்கையர். **போலாது**-போல விளங்காது. **ஊனம்**-சந்திரனுக்கு உள்ள களங்கம். **அலமர**-சுழல, திரிய. **ஒப்ப**-ஒத்து விளங்க. **இங்ஙன் தான் அமர்வது**-இப்படி ஊனமுடன் தான் விளங்குவது. **அழுக்காறு**- பொறாமை. **செழும்போது**-செழுமையான மலர். 32

வேறு

119. தண்ணம் பாசடை துன்னுபு சார்ந்துள
கண்ண கன்புனல் காமரு பைந்தடம்
வண்ண ஒண்குமு தம்கண் மலர்ந்தன
விண்ணின் வந்தெழு மின்திரள் போன்றவே.

குமுதம் மின்னல் போல் மலர்ந்தன

தெளிவுரை : குளிர்ந்த அழகிய பசிய இலைகள் நெருங்கிச் சார்ந்துள்ள இடம் அகன்ற நீரையுடைய அழகிய பசிய நீர் நிலைகளில் அழகிய ஒளியுடைய குமுதமலர்கள் மலர்ந்தவை வானத்தில் வந்து தோன்றும் மின்னல் கூட்டம் போல விளங்கின.

விளக்கம் : **பாசடை**-பசுமையான இலை. **துன்னுபு**-நெருங்கி, 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். **கண்ணகன்**-இடம் அகன்ற. **பைந்தடம்**-பசுமையான நீர்நிலை. **மலர்ந்தன**-பூத்தன. **மின்திரள்**-மின்னலின் கூட்டம். 33

120. வாடுகின்ற மருங்குல் வருத்துபூண்
மூடுகின்ற முகிண்முலை மாதரார்
பாடுகின்ற ஞிமிறு பரந்துஎழ
வாடுகின்றன அம்புய வாவியே.

வாவி வாடுகின்றன

தெளிவுரை : வாடும் இடையை வருத்தும்படியான அணிகளால் மூடப்பெற்ற கொங்கையையுடைய மங்கையர் மீது இசைபாடும் வண்டுகள் பரந்து மொய்த்தற்கு எழ. அவ்வளவில் தாமரைகள் மலர்ந்துள்ள நீர்நிலைகள் இடை ஒடியும் என்று எண்ணியதால் வாட்டம் கொண்டன.

விளக்கம் : இடை பூண்-இடையில் அணிந்த அணிகலன். **முகிண் முலை**-தோன்றிய முலை; முகிழ் என்பது முகிண் என விகாரப்பட்டது. **ஞிமிறு**-வண்டுகள். **அம்புய வாவி**-தாமரை நீர் நிலைகள். 34

வேறு

121. வாவி அம்புனல் குடையும்மெல்
லியர்மதர் மழைக்கண்
காவி என்றுஇதழ் குமுதம் என்று
ஆனனம் கமலப்
பூவது என்றிருள் குழலினம்
என்றுபல் பொறிவண்டு
ஆவல் கொண்டுவந்து அணைதரப்
பொருக்கென வாழ்வார்.

மங்கையர் நீருக்குள் முழுகக் காரணம்!

தெளிவுரை : நீர் நிலையில் நீராடும் மென்மையான இயல்புடைய மடந்தையரின் குளிர்ந்த கண் நீலோற்பலம் என்றும், உதடு குமுத மலர் என்றும், முகம் தாமரைப் பூ என்றும், குழலினம் இருள் என்றும், எண்ணி புள்ளிகளையுடைய வண்டுகள் ஆவலுடனே வந்து கூட விரைவாக அம்மாதர் நீருக்குள் முழுகிவிடுவர்.

விளக்கம் : வாவி-நீர்நிலை. **அம்புனல்**-அழகிய நீர். **குடையும்**-நீராடும். **மெல்லியர்**-மென்மையான இயல்புடைய மங்கையர். **மதர் மழைக்கண்**-களிப்புடைய குளிர்ந்தகண். **காவி**-நீலோற்பலம். **குமுதம்**-செவ்வாம்பல். **ஆனனம்**-முகம். **பல்பொறி**-பல புள்ளிகள். **அணைதர**-வந்து சேர. **பொருக்கென**-விரைய. 35

122. கோட்டி ரும்புனல் தடத்தினில்
மூழ்கியே குடங்கை
காட்டி நின்று இரிந்து ஓடிய
ஓதிமம் காணா
வேட்டு இலங்கிய கமலமென்று
அதனிடை இவரப்
பேட்டி னங்கள் நெஞ்சு அழுங்குற
வனிதையர் பிடிப்பார்.

வனிதையர் அன்னத்தைப் பிடித்தல்

தெளிவுரை : கரையையுடைய நீர் நிலையில் மங்கையர்கள் மூழ்கி உள்ளங்கையைக் காட்டி நின்று, அஞ்சி ஓடிய அன்னப் பறவையைக் கண்டு, விருப்பத்தைத் தரும் தாமரைக் கொடியிடை மறைந்தபடி போய்ப் பெண் அன்னங்கள் இனம் வருந்தப் பிடிப்பார்கள்.

விளக்கம் : கோட்டு இரும்புனல் தடம்-கரையையுடைய பெரிய நீர்நிலை. **குடங்கை**-உள்ளங்கை. **இரிந்து ஓடிய**-அஞ்சி ஓடிய. **ஓதிமம்**-அன்னப்பறவை. **காணா**-கண்டு. **பேட்டினம்**-பெண் அன்னங்கள். **நெஞ்சு அழுங்குற**-மனம் வருந்த. 36

123. குடைந்து வாவிநீர் படியும்ஓர்
குளிர்மதி முகத்தி
அடைந்து தாமரை முகத்தியை
அலைக்கும் ஒண்மயிலாம்
மடந்தை ஓர்அரவு அல்குலைப்
பிடிக்கும்வா ரணம்போல்
நடந்த கோதையை மடங்கலா
மருங்குலாள் நலியும் 37

வருத்தும் மங்கையர்கள்

தெளிவுரை : குளிர்ச்சியுடைய சந்திரன் போன்ற முகத்தையுடைய மங்கை பொய்கை நீரில் முழுகி ஆடினாள். அவளைத் தாமரை

போன்ற முகத்தையுடைய ஒருத்தி பற்றித் துன்புறுத்தினாள். ஒளியுடைய மயில்போன்ற ஓர் மங்கையைப் பாம்பைப் போன்ற அல்குலையுடையவள் பற்றி வருத்தினாள். யானை போன்று நடந்த மடந்தையைச் சிம்மம் போன்ற சிறிய இடையை உடையவள் வருத்தினாள்.

விளக்கம் : வாவிநீர் படியும்-பொய்கை நீரில் நீராடும். **குளிர்மதி முகத்தி**-குளிர்ந்த சந்திரன் போன்ற முகத்தையுடைய மங்கை. **அலைக்கும்**-வருத்துவாள். **ஓர் அரவுஅல்குலை**-ஒரு பாம்பின் படத்தைப் போன்ற அல்குலையுடைய மங்கையை. **வாரணம்**-யானை. **மடங்கல்**-சிங்கம். **மருங்குலாள்**-இடையையுடையவள் சிங்கம் போன்ற சிறிய இடையை உடையவள் என்பது பொருள். மதிக்குத் தாமரை பகை. மயிலுக்குப் பாம்பு பகை. யானைக்குச் சிங்கம் பகை. பகைவர் மோதிக்கெண்டனர் என்ற பொருள்படப் பாடல் அமைத்துள்ளார். 37

நகரச் சிறப்பு

124. இன்ன வாகிய வளங்கெழு தொண்டைநாடு ஏமம்
தன்னி லாம்ஒளிர் மதாணி யாமற்றுள தலங்கள்
மன்ன ஞாங்கரில் சூழ்தர அழுத்திய மணியாக்
கொன்உ லாநடு நாயக மாயது **கூவம்.**

கூவ நகரச் சிறப்பு

இத்தகைய தன்மையுடைய வளம் பொருந்திய தொண்டை நாடு நிலமகளுக்குப் பொன்னால் ஆன மார்பு அணி போல் விளங்குவது. அதைச் சுற்றியுள்ள ஊர்கள் அவ்வணியின் பக்கத்தில் சூழ அழுத்திய மணியாம் அவ்வணியின் பெருமையுடைய நடுநாயக மணியாய் விளங்குவது கூவம் என்ற நகரம்.

நடுநாயகமாயது கூவம் : மதாணி என்ற அணியின் தலைமையுடைய மணியாக விளங்குவது கூவம். மதாணி என்ற அணி பொன்னால் ஆனது. சுற்றிலும் மணிகளை யுடையது. நடுவில் சிறந்த மணி உடையது. 38

125. வம்பு மாமத யானைகள் இரண்டொரு வயிரக்
கம்ப மேவுறக் கட்டுஉமை அறங்களைக் காட்டும்
செம்பொன் மாமதில் காஞ்சிதென் திக்கினில் திகழ
இம்பர் மேயது தனக்கு இணை இலாதவக் கூவம்.

கூவத்தின் தெற்கில் உள்ளது காஞ்சி நகரம்

தெளிவுரை : மார்க்கச்சு கட்டப்பட்டப்பட்ட கொங்கைகளாகிய யானைகள் இரண்டு ஒரு வயிரம் வாய்ந்த சிவத்தைப் பொருந்தக் கட்டும் காமாட்சியம்மை செய்யும் அறங்களைப் புலப்படுத்துகின்ற செம்பொன்னால் ஆன பெரிய மதில்கள் சூழ்ந்த காஞ்சி நகரம் தெற்குத் திக்கில் விளங்க, இவ்வுலகத்தில் பொருந்தியது தனக்கு ஒப்பில்லாத அந்தக்கூவம் என்ற நகரம்.

விளக்கம் : வம்பு மாமத யானைகள் இரண்டொரு வயிரக் கம்பம் மேவுறக் கட்டும். இது புதுமை பொருந்திய யானைகள் இரண்டு ஒரு கம்பத்தில் கட்டும் எனவும் பொருள் கொள்ளலாம்.
வம்பு-பெருமை; மார்க்கச்சு. **யானைகள்**-கொங்கைகள். **கம்பம்**-சிவம், கம்பை நதி.
காமாட்சி அம்மையார் காஞ்சியில் முப்பத்திரண்டு அறங்களைச் செய்தார் என்பது காஞ்சிப்புராணம். 39

126. தேங்கு சோதிமா நவமணி பொன்கொடு செய்த
ஓங்கு கோபுர மாடமா ளிகைஒளிர் வேரம்
பாங்கு சூழ்மதில் மண்டபம் தெற்றிகள் பலவும்
ஈங்கு வாழ்தரும் இந்திரன் நிகர்எனல் இலங்கும்.

கோபுரம் முதலியன

தெளிவுரை : பேரொளி பொருந்திய சிறந்த நவமணிகளும் பொன்னும் கொண்டு அமைக்கப்பட்ட உயர்ந்துள்ள கோபுரம் மாடமாளிகையில் மேகங்கள் பொருந்தும். சுற்றியுள்ள மதில் மண்டபம் திண்ணைகள் பலவும் பொருந்தி விளங்கும். ஆதலால் இந்நகரம் இந்திரன் நகரத்தைப் போல் விளங்கியது.

விளக்கம் : நவமணி-ஒன்பது வகையான கோமேதகம் முதலியன கொடு-'கொண்டு' என்பதன் தொகுத்தல் விகாரம். **வேரம்**-மேகம், மதிலின் உறுப்பு எனவும் கூறலாம். **தெற்றி**-திண்ணை. இலங்கும்-விலங்கும். 40

127. சோதி பெற்றுஒன் பான்எனும் மணிகளும் துவன்றி
மேத கப்பெருஞ் செய்குன்று பற்பல விளங்கல்
பாத லத்துஅரா இறைசிரம் பரித்தபன் மகுடம்
பூத லத்துமேல் புறப்படத் தோன்றுவ போலும்.

செய்குன்று

தெளிவுரை : மிக்க ஒளியையுடைய ஒன்பது வகையான மணிகளும் நெருங்கி மேன்மையுடைதாய் விளங்கிய செய்குன்று (செயற்கை மலை), பல விளங்கின. அத்தோற்றம். பாதல உலகத்தில் உள்ள பாம்பு மன்னனான ஆதிசேடன் ஆயிரம் தலைகளில் சுமக்கும் பல முடிகள், பூமியில் மேலே எழுந்து புறப்பட்டுத் தோன்றுவதைப் போல் விளங்கின.

விளக்கம் : துவன்றி-நெருங்கி. **செய்குன்று**-செயற்கையாய் அமைக்கப்பட்ட குன்று. **அராஇறை**-பாம்பரசனான ஆதிசேடன். **பரித்த**-சுமந்த. **பூதலம்**-பூவுலகம். செய்குன்றுகள் ஆதிசேடனின் தலையாயிரத்தில் உள்ள மணிகுடங்கள் பூமியின் மேல் தோன்றியது போல் விளங்கியன. 41

128. திங்கள் வாள்நுதல் அரிவையர் நடுநிலை செறியத்
துங்கம் ஆகிய மரகதச் சிகரிகள் தோன்றல்
பங்க யாதனப் பொறிபல மார்பகம் பயில
மங்குல் வான்முகடு அளவுநீள் முராரிகள் மானும்.

பல திருமால்கள்

தெளிவுரை : பிறைச் சந்திரனைப் போன்ற ஒளியுடைய நெற்றியை உடைய பெண்டிர் மாளிகையின் நடுப்பகுதியில் பொருந்தியிருக்க உயர்ந்த மரகத மணிகள் பதிக்கப்பட்ட கோபுரங்கள் பல விளங்குவது தாமரை இருக்கையை உடைய இலக்குமியர் பலர் மார்பில் பொருந்தியிருக்க மேகம் பொருந்திய வான் உச்சியைப் பொருந்திய நீண்ட திருமால்களைப் போல் விளங்கும்.

விளக்கம் : வாணுதல்-வாள்+நுதல், ஒளியுடைய நெற்றி. **துங்கம்**-உயர்வு. **மரகதச் சிகரிகள்**-மரகத மணி பதிக்கப்பட்ட கோபுரங்கள். **பங்கயாதனப் பொறி**-பங்கயம்+ஆதனம்+பொறி

தாமரை மலரை இருக்கையாகக் கொண்ட இலக்குமி. **பொறி**-இலக்குமி. **மார்பகம் பயில**-மார்பில் பொருந்த. **மங்குல் வான்முகடு**-மேகம் பொருந்திய வானஉச்சி. **நீள்முராரி**-திரிவிக்கிரம அவதாரம் எடுத்த போது உயர்ந்தோங்கி நின்ற திருமால். **முராரி**-முரன் என்ற அசுரனைக் கொன்ற திருமால். **மானும்**-போல விளங்கும். 42

129. தெள்நி லாஒளிர் மேனிலச் சேக்கையின் மாதர்
நண்ணி நாயகர் தங்கலை நெகிழ்த்திட நாணி
மண்ணி வாள்விடு பதுமரா கப்பணி மறைத்து
வெண்ணிலா இருள் பட்டிட நீல்அணி விரிப்பார்

மங்கையர் செயல்

தெளிவுரை : தெளிந்த நிலவின் ஒளி விளங்கும் மேன் மாடத்தில் அமைந்த படுக்கையில் படுத்திருந்த மங்கையரை அவர்தம் கணவர் நெருங்கி அவர்தம் ஆடையை நெகிழ்க்கத் தொடங்க, அம்மங்கையர் நாணங்கொண்டு, ஒளிரும் பதுமராக மணி போன்ற அல்குலை மறைத்தனர். அப்போது வெண்மையான நிலவு ஒளி உள்ளே புக இருள் அகன்றது. மங்கையர் தம் நீல ஆடையை விரித்தனர்.

விளக்கம்: தெண்ணிலா-தெளிந்த நிலவு ஒளி. **சேக்கை**-படுக்கை. **நாயகர்**-கணவர். **கலை**-ஆடை. **பதுமராகமணி**-பதுமராக மணி போன்ற அல்குல். **நீலணி**-நீல ஆடை. 43

130. தருக்கு மங்கலக் கடைத்தலை தொறுமணி தழைப்ப
நிரைக்கும் ஒண்கழை அரம்பைபூ கதம் இவை நிகழ்தல்
அரக்கு மெல் இதழ் மாதர்தோள் தொடை களத்து அழகை
இரக்கும் வண்ணம்வந் தேகடை காக்குமாறு ஏய்க்கும்.

மூங்கில், வாழை, பாக்கு மரங்களின் அலங்காரத்துக்குக் காரணம்

தெளிவுரை : பெருமிதம் கொள்வதற்குக் காரணமான மங்கலம் உடைய வீட்டின் வாயில்தோறும் பொருந்திய மணிகள் ஒளிவிட, வரிசைப்பட அமைந்த ஒளிரும் மூங்கில், வாழை, பாக்கு என்னும்

இவை பொருந்தியிருப்பது, மங்கையரின் சிவந்த மென்மையான உதட்டையுடைய மங்கையரின் தோள், தொடை, கழுத்து ஆகியவற்றின் அழகை வந்து பெற்றுக்கொள்ளும் வண்ணம் வந்து வாயிலில் காத்துக்கொண்டிருப்பதைப் போன்று விளங்கும்.

விளக்கம் : வீட்டின் வாயில்களில் மணிகள் இழைக்கப்பட்டுள்ளன. மூங்கில், வாழை, பாக்கு மரங்கள் அழகுக்காக கட்டப்பட்டுள்ளன. அவ்வாறு கட்டப்பட்டிருப்பதற்கு ஒரு காரணத்தைக் கூறுகிறார் கவிஞர். மங்கையரின் தோள், தொடை, கழுத்து ஆகியவற்றின் அழகை யாசித்துப் பெற்றுக்கொள்வதற்காக அவை கட்டப் பட்டுள்ளவை போல் தோன்றுகின்றனவாம், தற்குறிப்பேற்றம்.44

131. ஓதி மம்சின கரத்தயல் நிறுவியே உள்போய்
ஆதி யங்கழல் பணிந்து மீண்டிடு முன்அங்கு அடைந்த
மாதர் நன்னடை விழைந்துபின் சென்றிட வந்து
போதன் அங்கது கண்டிலன் தேடியே போகும்.

நான்முகன் அன்னத்தைத் தேடல்

தெளிவுரை : நான்முகன், தன் ஊர்தியான அன்னப்பறவையைக் கோயிலுக்கு வெளியே நிறுத்திவிட்டு, அக்கோயிலுக்குள் சிவபெருமானின் திருவடியை வணங்குதற்குப் போய் வணங்கித் திரும்பிவருதற்கு முன்னம் அங்கு வந்த மங்கையரின் நடையைக் கற்க விரும்பி அவர் பின் அந்த அன்னப்பறவை போனது. கோயிலுக்குப் போன நான்முகன் திரும்பி வந்து பார்த்த போது அன்னப்பறவையைக் காணவில்லை. ஆதலின் அதைத் தேடிச் சென்றான்.

விளக்கம் : ஓதிமம்-அன்னப்பறவை. **சினகரம்**-கோயில். **நிறுவியே**-இருக்குமாறு செய்து. **ஆதி**-சிவபெருமான். **கழல்**-திருவடி. **விழைந்து**-விரும்பி. **போதன்**-நான்முகன். 45

132. முன்அ னங்கன் மாட்டு எய்துபூண் முலையினாள் கண்ட
மன்னு மைந்தர்தம் காதல்கூர் மகளிரை நோக்கி
என்னை நம்எதிர் தமியளாய் நேர்ந்தவள் ஆர்கொல்
என்ன அங்குஅவர் ஊடுவர் விழைந்தனர் என்று.

ஊடல் கொண்டனர்!

தெளிவுரை : பூண் அணிந்த கொங்கையையுடைய இரதி இறைவனை வழிபடுதற்காக அங்கமில்லாத காமனுடன் வந்தாள். அதைப் பார்த்த ஆடவர் தம் காதலுக்குரிய மங்கையரைப் பார்த்து 'நம் முன் தனியளாய் வந்தவள் யார்?' என்று வினவினர். அப்போது அம்மங்கையர் அந்த ஆடவர் தம்மைவிட்டு, அங்கு வந்த பெண்ணை விரும்பினர் என்று எண்ணி ஊடல் கொண்டனர்.

விளக்கம் : மன்மதன் உடல் இல்லாதவன். அவனுடன் இரதி சென்றாள். அவளைப் பார்த்த ஆடவர் கண்ணுக்கு மன்மதன் தெரியாததால், அப்பெண் தனியாய் வருவதாக எண்ணினர். வேறொரு பெண்ணைப்பற்றி வினவியதால் இரதியின் கண்ணுக்கு மட்டும் மன்மதன் தெரிந்தான் என்பது குறிப்பு. ஆடவரிடம் அம்மங்கையர் ஊடல் கொண்டனர்.

அனங்கன்-அங்கம் இல்லாத மன்மதன் அவன் சிவனால் எரிக்கப்பட்டான். ஆதலால் அங்கமில்லாதவன் எனப்பட்டான். **மைந்தர்**-ஆடவர். **காதல்கூர்**-காதல் மிக்க. **தமியள்**-தனியள். **நேர்ந்தவள்**-வந்தவள். **விழைந்தனர்**-விரும்பினர். 46

133. மருவும் ஆடவர் எழில்மிகு வடிவினை நோக்கிப்
பொருவில் மாரவேள் தனதுஉளம் பொறாமலே வெள்கி
உருவ மாய்இவர் கண்முனம் உற்றிடா துயாம்முன்
அருவ மாயது நன்றுஎனத் தேறியே அகல்வான்.

அருவமானது நன்றென மன்மதன் கருதினான்

தெளிவுரை : மங்கையரைத் தழுவும் ஆடவரின் அழகுமிக்க வடிவினை நோக்கி ஒப்பில்லாத மன்மதனின் உள்ளம் பொறுக்கமாட்டாமல் வெட்கம் கொண்டான். கொண்டு உருவமாய் இந்த ஆடவர் கண் முன்பு தோன்றாது யாம் முன் உருவற்றுப் போனது நன்றே என்று தெளிந்து நீங்கிச் சென்றான்.

விளக்கம் : எழில்மிகு-அழகுமிக்க. **பொருவின்மாரவேள்**-பொருவு+இல்+மாரவேள்; ஒப்பில்லாத மன்மதன். **வெள்கி**-வெட்கம் கொண்டு. **அருவமாயது**-வடிவம் இல்லாமல் போனது. **தேறி**-தெளிந்து. 47

134. உள்ளம் ஆதரம் கூரஇன்சொல் புகன்று உதவும்
வள்ள லாகிய கூவமா நகர்உறை மாந்தர்த்
தெள்ளு நீர்மைகண்டு ஐந்தருத் தேனுஒண் சிந்தும்
பள்ளம் ஆர்தரு தருமுகில் இனம்பயப் படுமால்.

ஐந்தரு முதலியன பயப்படும்!

தெளிவுரை : மனத்தில் அன்பு மிக்க இனிய சொற்களைச் சொல்லும வள்ளல் தன்மையுடைய கூவம் என்ற நகரில் உள்ள மக்களின் தெளிந்த தன்மை கணடு, கற்பகம் முதலிய ஐந்து மரங்கள், காமதேனு, ஒளியுடைய கடல் ஆகிய பள்ளத்தை அடையும் கரிய மேகக் கூட்டம் ஆகியவை தரும் பழம், பால், நீர், அச்சம் என்பவை அஞ்சும்.

விளக்கம் : கற்பகம் முதலிய ஐந்து மரங்கள் பழத்தையும், காமதேனு பாலையும் கடல் அச்சத்தையும் தரும். **பயப்படும்**-பயன்படும். அச்சம் கொள்ளும் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. மாந்தரின் இன்சொல் கூறி உதவும் தன்மையைக் கண்டு அவர்தம் தன்மைக்கு ஒப்பாகாமையால் கற்பகம் முதலியவை அஞ்சும் என்க.

ஐந்து மரங்களாவன : 1. அரிசந்தானம், 2. கற்பகம், 3. சந்தானம், 4. பாரிசாதம், 5. மந்தாரம்.

உள்ளம்+ஆதரம்+இன்சொல்+புகன்று+உதவும் எனப்பிரிக்க. 48

135. மோக சாகரம் கடந்துநூல் கரைகண்ட முனிவர்
யாக சாலையின் நறும்புகைப் படலைகள் எழுந்து
பாக சாதனன் பதம்பெறு பசும்பொன்மா ளிகைப்பால்
மேக சாலங்கள் மேருவைச் சூழ்ந்தென மேவும்.

வேள்விப் புகைக் கூட்டம் சூழ்தல்

தெளிவுரை : மோகம் என்ற கடலைக் கடந்து நூல்களின் கரையைக் கண்ட முனிவர்கள் வேள்வி இயற்றும் சாலையினது நறுமணப் புகைக் கூட்டம் எழுந்து இந்திரன் வீற்றிருக்கின்ற பசும் பொன்னால் ஆன மாளிகையிடம் மேகக் கூட்டம் மேருமலையைச் சூழ்ந்தாற் போலச் சூழும்.

விளக்கம் : மோகசாகரம்-மோகம்+சாகரம்; ஆசைக் கடல்; காமம் என்ற கடல். **புகைப்படலை**-புகைக் கூட்டம். **பாகசாதனன் பதம்**-இந்திரனின் பதவி. **மேகசாலம்**-மேகக் கூட்டம். **சூழ்ந்தென**-சூழ்ந்தது போன்று. 49

தலச்சிறப்பு

136. இளைய தாகிய கூவமாம் தனிநக ரிடத்து
முனிவர் வானவர் சூழ்தர முப்புரம் முடிப்பான்
புனிதன் ஏகுழிக் கரிமுகன் புகுந்து கூவரத்தைத்
தனியு லாங்கரத்து ஒடித்தனன் செலவினைத் தடுத்தான்.

சிவபெருமானின் தேரின் அச்சைக் கரிமுகன் ஒடித்தார்!

தெளிவுரை : இத்தகைய இயல்புடைய கூவம் என்ற சிறந்த ஒப்பில்லாத நகரில் முனிவர்களும் தேவர்களும் சூழத் திரிபுரங்களை அழிக்கச் சிவபெருமான் தேரில் சென்ற போது, யானை முகத்தையுடைய விநாயகர் அத்தேரின் ஏர்க்காலுடன் ஆரையும் அச்சையும் ஒருங்கே சேர்த்துத் தன் துதிக்கையால் ஒடித்து அதன் ஓட்டத்தைத் தடுத்தார்.

விளக்கம் : முப்புரம்-திரிபுரங்கள். **முடிப்பான்**-அழிக்க; பான் ஈற்று வினையெச்சம். **புனிதன்**-சிவபெருமான். **ஏகுழி**-சென்றபோது. **கரிமுகன்**-யானை முகமுடைய விநாயகப் பெருமான். **கூவரம்**-ஏர்க்கால். ஏர்க்காலுடன் ஆரையும் அச்சையும் சேர்த்து ஒடித்தார். ஆதலால் கூவரத்தை ஒடித்ததாகக் கூறினார். **தனி உலாங்கரம்**-தனியாக உலவும் துதிக்கை.

விநாயகரை வணங்காமல் சிவபெருமான் முப்புரம் அழிக்கச் சென்றதால், அத்தேரின் கூவரத்தை ஒடித்தார். **கூவரம்**-அச்சு எனவும் கொள்ளலாம். முப்புரம் எரித்த விவரத்தை அடுத்து வரும் 'திரிபுரதகனச் சருக்கத்தில்' காண்க. 50

137. ஆன காலையின் அமரர்தம் துயர்கெட ஆண்டு
ஞான நாயகன் திரிபுரம் பொடிபட நகைத்து
வான நாடவர் வாழ்வு பெற்று உய்ந்திட வழங்கிக்
கூனல் **மேருவில் பிடித்துஅமர்க் கோலமாய் நின்றான்.**

சிவபெருமான் போர்க் கோலத்துடன் நிற்றல்

தெளிவுரை : அக்காலையில் தேவர்களின் துன்பம் கெட, அங்கு ஞான நாயகனான சிவபெருமான் அசுரரின் மூன்று புரங்களும் துகளாகச் சிரித்துத், தேவர் உலகத்தவரான தேவர் வாழ்வைப் பெற்று வாழ்ந்திடத் தந்து மேருவாகிய வில்லைப் பிடித்துப் போர்க் கோலத்துடன் நின்றான்.

விளக்கம் : அமரர்-தேவர். **ஞானநாயகன்**-சிவபெருமான். **திரிபுரம்**-வித்துன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் ஆகியோர் பெற்றிருந்த பொன், வெள்ளி, இரும்பு ஆகிய புரங்கள். **மேருவில்**-மேருமலையான வில். 51

138. நின்ற ஆதிகூ வரம்தனை ஒடித்திடு நிலையால்
அன்று **கூவரக் கினர்**எனும் பிள்ளையோடு அமரின்
சென்ற தால்உடன் வயிரவா காரையாம் தேவி
ஒன்ற மேருகோ தண்டமண் டிதர்என உறைந்தான் 52

கோதண்ட மண்டிதர் என ஆனார்.

தெளிவுரை : போர்க் கோலத்துடன் நின்ற சிவபெருமான் சென்ற தேரின் கூவரத்தை ஒடித்த காரணத்தால் அன்று கூவரக்கினர் எனும் பெயர் கொண்ட பிள்ளையான விநாயகருடன் போர் தொடுத்துச் சென்றதால் அவருடன் வயிர வாகாரை என்று பெயர் உடைய தேவி ஒன்றி நிற்க, 'மேரு கோதண்ட மண்டிதர்' என்று உரைக்குமாறு விளங்கினார்.

விளக்கம் : ஆதி-சிவபெருமான். **கூவரம்**-அச்சு. **கூவரக்கினர்**-கூவரத்தை அச்சினை ஒடித்தவர். **பிள்ளை**-விநாயகர். **வயிரவாகாரை**-பயங்கரமான வடிவத்தை உடையவள். **கோதண்டமண்டிதர்**-விற்கோல நாதர். **மண்டிதர்**-கோலம் உடையவர். 52

வேறு

139. காங்கெயன் வடுகன் தக்கன் காதிகூர்மாண்டன் காரி
ஓங்குறு காலச் செந்தீ உருத்திரன் ஆட கேசன்
பூங்கம லத்தன் மாயோன் புரந்தரன் முனிவர் விண்ணோர்
தாங்கலும் இறைவன் போற்றித் தாங்கினா் கூவ மூதூர்.

முருகன் முதலியவரும் அந்நகரிலேயே தங்குதல்

தெளிவுரை : முருகன், வயிரவன், வீரபத்திரன், கூஷ்மாண்டன், ஐயனார், காலாக்கினி ருத்திரர், ஆடகேசர், நான்முகன், திருமால், இந்திரன், தேவர்கள், முனிவர்கள் ஆகியவர்களும் சிவபெருமானை வணங்கி அந்தக் கூவநகரத்திலேயே தங்கி விட்டனர்.

விளக்கம் : காங்கேயன்-கங்கையின் மகனான முருகன். **வடுகன்**-வயிரவன. **தக்கற்காதி**-தக்கன்+காதி; தக்கனைக் கொன்ற வீரபத்திரன். **கூர்மாண்டன்**-கூழ்மாண்டன். **காரி**-ஐயனார். **காலச்செந்தீ**-காலாக்கினி ருத்திரர். **பூங்கமலத்தன்**-நான்முகன். **மாயோன்**-திருமால். **புரந்தரன்**-இந்திரன். 53

140. என்றும்இக் கூவம் மேய எந்தைதன் கலைகள் தம்மில்
ஒன்றினை ஆயிரங்கூறு இட்டவற்று ஒன்றது ஆக
மன்றலம் கயிலை மன்னும் ஆங்குஅமர் மற்று ளோரும்
துன்றிய தமது தானம் துன்னுவது அற்றே ஆகும்.

கயிலையைவிடச் சிறந்தது!

தெளிவுரை : எப்போதும் இக்கூவநகரத்தில் எம் சிவபெருமானின் தங்கிய கலைகளில் ஒன்றை ஆயிரம் கூறாக்கி அவற்றுள் ஒன்றை எடுத்தால் அதை ஒத்ததே கயிலாய மலை. அக்கயிலையில் உள்ளவர்களும் பொருந்திய தம் இடத்தில் பொருந்தியிருப்பதும் அத்தன்மை யுடையதே ஆகும்.

விளக்கம் : மேய-பொருந்திய. **எந்தை**-சிவபெருமான். **மன்றலங் கயிலை**-மணம் பொருந்திய அழகிய கயிலை மலை. **துன்னுவது**-பொருந்துவது. **அற்றே ஆகும்**-அத்தன்மை உடையதே ஆகும். 54

141. அந்நக ரத்தின் வந்த அமரர்கள் நிறைந்துக் கால்கள்
இந்நில வரைப்பில் சேர்த்தி இலங்குபேர் வேறு கொண்டு
முன்னுறு முகங்கள் நான்கு முறையின்அந் தணர்கள் மன்னர்
தொன்னிதி வணிகர் தூய சூத்தி ரர் என்ன வாழ்வார்.

தேவர்கள் மக்களாய் வாழ்ந்தனர்

தெளிவுரை : அந்நகரத்தில் வந்து சேர்ந்த தேவர்கள் நிறைந்து தம் சந்ததிகளை நிறைத்தனர். தம் தேவர் பெயரை இழந்து

விளங்கும் வேறு பெயரைக் கொண்டு (மக்கள் என) வாழ்ந்தனர். நான்கு முகங்களை யுடைய நான்முகனின் முறையில் வந்த அந்தணர், அரசர், தொன்மையான செல்வத்தையுடைய வணிகர், தூய்மையுடைய சூத்திரர் என்ற பெயர் கொண்டு வாழ்ந்தனர்.

விளக்கம் : வரப்பு-எல்லை. **இலங்குபேர்**-விளங்கும் பெயர். **தொன்னிதி**-தொன்மை+நிதி; பழைமையான செல்வம். அந்நகரத்தை அடைந்த தேவர்கள் அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் எனப் பெயர் கொண்டு வாழ்ந்தனர். 55

142. அறந்தலை நிற்ற லால்பேர்
அறிவினால் கொடையால் அன்பால்
மறந்தரு கொலைகள் ஆதி
மாற்றலால் வாய்மைச் சொல்லால்
நிறைந்தஇக் கலியுகத்து
நிலைத்தசீர்க் கூவ மூதூர்ச்
சிறந்தவே ளாளர் ஆனோர்
தேவர்என்று அறிய லாமால்

வேளாளர் தேவரே!

தெளிவுரை : அறநெறியில் நிற்பதாலும், பேரறிவு உடைமையாலும் கொடைத் தன்மையாலும், அன்பாலும், பாவத்தைத் தரும் கொலைகள் முதலியவற்றைப் போக்குவதாலும், உண்மைச் சொற்களையே பேசுவதாலும், நிறையப்பெற்ற இக்கலியுகத்தில் நிலையான புகழையுடைய கூவம் என்ற முதிய ஊரில் வேளாளர் என்று வாழ்பவர் யாவரும் தேவரே ஆவார் என்று நாம் அறியலாம்.

விளக்கம்: அறந்தலை நிற்றல்-அறநெறியில் ஒழுகுதல். **மறம்**-பாவம். **அறியலாமால்**-ஆல்-அசைநிலை. 56

143. தளங்கமழ் கமல வாசச்
சதுர்முகன் கற்ப ஈற்றில்
துளங்கிட உலகம் எல்லாம்
தொலைக்கும்அப் பிரள யத்தும்
வளங்கெழு விற்கோ லத்துஎம்
வள்ளல் ஊர்க்கு இறுதி இன்றால்
விளங்கிய கூவ நீரை
வெள்ளங்கொண்டு அகலு மோதான்.

147. சீர்உறு இணையில் கூவச் செழுநகர் இடத்து மேவி
ஓர்அணு அளவுஇ யற்றும் ஓர்அறம்மேன்மேல் ஓங்கி
மேருவின் வளரும் அன்ன மேருவிற் செய்த தீமை
நேர்அணு அதனின் நொய்தாய் நீறுபட்டு அழியும் மாதோ.

பெரும்பாவமும் அழியும்

தெளிவுரை : சிறப்புப் பொருந்திய நிகர் அற்ற கூவம் என்ற செழுமையான நகரில் பொருந்தி ஓர் அணுவளவாகச் செய்யப்படும் அறமானது மேலும் மேலும் உயர்ந்து மேருமலை போல ஓங்கி வளரும். மேருமலையைப் போல் பெரியதாகச் செய்த தீமை அணுவை ஒத்ததாய் அதைவிடச் சிறியதாய் எரிந்து சாம்பலாகி அழிந்து போகும்.

விளக்கம் : சீர்-சிறப்பு. **இணைஇல்**-ஒப்பில்லாத. **மேவி**-பொருந்தி. **மேரு**-மேருமலை. **நொய்தாய்**-அற்பமானதாய். 61

வேறு

148. மைந்தரை அன்னையை மாதரை ஆவைத்
தந்தையை அந்தணர் தம்மை வதைத்த
அந்தம்இல் பாதகர் ஆயினும் எல்லை
வந்திடின் அந்நகர் வண்கதி நல்கும்.

பாவம் பல செய்தவர்க்கு நல்லகதி அளிக்கும்

தெளிவுரை : மைந்தரையும் தாயையும் மடந்தையரையும் பசுவையும் தந்தையையும் அந்தணரையும் கொன்ற எல்லையற்ற பாவம் செய்தவரே ஆயினும் அவர் கூவம் என்ற பதியின் எல்லையை அடைந்தார் என்றால், அவர்க்கு அப்பதி நல்ல கதியைத் தரும்.

விளக்கம் : வதைத்த-கொன்ற. **அந்தம் இல் பாதகர்**-அளவில்லாத பாவத்தைச் செய்தவர். **வண்கதி**-வளப்பமான கதி; நற்கதி. 62

149. பன்றி அயங்கள் பதாயுத நாய்மா
அன்றில் கரம்கொடி அங்கதம் ஆதி
கொன்றை மிலைந்தவர் கூவ புரத்தே
ஒன்றின யாவையும் ஒண்கதி நண்ணும்.

விலங்குகளும் பறவைகளும் இந்நகரை அடைந்தால் நற்கதிபெறல்

தெளிவுரை : பன்றிகள், ஆடுகள், கோழிகள், நாய்கள் முதலிய விலங்குகளும், அன்றில் பறவைகள், கழுதைகள், காக்கைகள், பாம்புகள் முதலியவையும் கொன்றை மலர் மாலையை அணிந்த சிவபெருமானின் இக்கூவநகரத்தில் பொருந்தியதாயின் நற்கதியை அடையும்.

விளக்கம் : அயங்கள்-ஆடுகள். **பதாயுதம்**-கோழி. **அன்றில்**-ஒரு பறவை. **கரம்**-கழுதை. **கொடி**-காக்கை. **அங்கதம்**-பாம்பு. 63

150. அருத்தி மிகுந்திட அப்பதி யின்பேர்
உரைத்தவர் நெஞ்சுற உன்னினர் அங்ஙன்
கருத்தினில் வந்து கலந்து பிறந்தார்
மரித்தவா மெய்க்கதி மன்னுவர் அன்றே.

பெயர் உரைத்தவர் முதலியவர் நற்கதியை அடைதல்

தெளிவுரை : ஆசை மிகக் கொண்டு அந்தப் பதியின் பெயரை உரைத்தவரும் மனத்தில் பொருந்த எண்ணியவரும், இங்குள்ளவர் கருவில் வந்து பொருந்திப் பிறந்தவரும், இறந்தவரும் உண்மையான நற்கதியை அடைவர்.

விளக்கம் : அருத்தி-ஆசை. **உன்னினர்**-எண்ணியவர். **கருத்தனின் வந்து**-கரு + தனில்+வந்து; கருவில் வந்து பொருந்தி. **மரித்தவர்**-இறந்தவர். **மன்னுவர்**-அடைவர். 64

151. அந்நக ரத்தின்அ யற்பதி யார்ஓர்
கன்னல் இருப்பின் அயன்சத கற்பம்
மன்னுவர் மெய்ச்சிவ லோக வளத்தே
என்னின் அதற்குஇணை யாதுஉரை செய்வாம்.

கூவநகரத்துக்கு ஒப்பு இல்லை

தெளிவுரை : அக்கூவ நகரத்தின் அயல் பதியில் உள்ளவர் ஒரு நாழிகை நேரம் இருப்பாராயின் அவர் நான்முகனின் சதகற்பகாலம் உண்மை பொருந்திய சிவலோகத்தில் இருப்பர். அங்ஙனமாயின் அந்நகரத்துக்கு ஒப்பாக எதை நாம் கூறமுடியும்?

விளக்கம் : கன்னல்-சிறுபொழுது; ஒரு நாழிகை. **அயன்**-நான்முகன். **சதகற்பம்**-நூறு கற்பகாலம். **சதம்**-நூறு; **கற்பம்**-நெடுங்காலம்; நானூற்றுமுப்பத்து இரண்டு கோடி ஆண்டுகள். 65

152. ஆயிர கோடி அயன்திரு மால்தான்
மேயினர் பூசை விளைத்தனர் கூவத்
தூயனை யேவழி பாடு தொடங்கி
ஏயின இந்திர ருக்குஅளவு இன்றே.

அயன்மால் முதலியவர் வழிபட்ட தலம் கூவம்

தெளிவுரை : ஆயிரம் கோடி பிரமன் திருமால்கள் அந்நகரத்தில் பொருந்தியவராய்ப் பூசனை செய்துள்ளனர். இக்கூவத்தில் வீற்றிருக்கும் தூய விற்கோலநாதரை வழிபாடு செய்யத் தொடங்கி வந்திருந்த இந்திரர்க்கு ஓர் அளவு இல்லை.

விளக்கம் : மேயினர்-பொருந்தியவராய். **ஏயினர்**-பொருந்தி இருந்தவர். **அளவின்றே**-அளவு இல்லை. 66

வேறு

153. அண்டர்சித்தர் இயக்கர் கின்னரர்
ஆழ்பிலத்துறை நரகர்வில்
மண்டிதற்குஇடன் ஆகி வைகிய
கூவமாநகர் சூழ்தர
எண்டிசைக் கணும் வந்துஅமைத்தவர்
பூசைசெய்தஇ லிங்கமோ
கண்டவர்க்குஉயர் புத்தி முத்தி
அளித்திருப்ப கணிப்பில.

புத்தியும் முத்தியும் பெற்றவர்க்குக் கணக்கு இல்லை!

தெளிவுரை : தேவர், சித்தர், இயக்கர், கின்னரர், ஆழமான பாதல உலகத்தில் வாழும் நரகர் வில்லழகரான சிவபெருமான் வீற்றிருத்தற்கு இடமான கூவமாநகரைச் சூழ எட்டுத்திக்குகளிலுமிருந்து வந்தவர் ஆகியவர் நிறுவிப் பூசை செய்த இலிங்கங்களே கண்டவர்க்கு உயர்ந்த அறிவும் முத்தியும் அளித்தன அவைகளுக்கு கணக்கே இல்லை.

விளக்கம் : அண்டர்-தேவர். **இயக்கர்**-யட்சர். **கின்னரர்**-இசைவாணரான தேவசாதியினர். **ஆழ்பிலம்**-ஆழத்தில் உள்ள நரகர். **வின்மண்டிதர்**-விற்கோலநாதர்; வில் அழகர். **எண்டிசை**-எட்டுத்திக்குகள். **முத்தி**-வீடுபேறு. **கணிப்பில்**-கணிப்பு+இல்; கணக்கு இல்லை. 67

154. பன்னரும்புகழ் மேயகூவ
புரத்தினின்குட பாலினில்
கின்னரம்புரை கொங்கை மேனகை
கெண்டையங்கண் உருப்பசி
முன்அரம்பையர் இளமைநல்லெழின்
முற்றுஉறா துஅரம் பேசனாம்
என்னஒண்சிவ லிங்கம் ஒன்றை
இயற்றியேவழி பட்டனர்.

மேனகை, ஊர்வசி, அரம்பையர் வழிப்பட்டமை

தெளிவுரை : சொல்வதற்கரிய புகழ் பொருந்திய கூவநகரத்தின் மேற்குத்திக்கில் கின்னரம் என்ற பறவையைப் போன்ற கொங்கையையுடைய மேனகை, கயல்மீன் போன்ற கண்களையுடைய ஊர்வசி, அரம்பை முதலிய தேவமாதர் இளமையுடைய நல்ல அழகு முதுமை உறாது, விற்கோலநாதர் போல் ஒளியுடைய சிவலிங்கத்தை நிறுவி வழிபட்டனர்.

விளக்கம் : மேனகை, ஊர்வசி, அரம்பை முதலிய தேவமங்கையர் தம் இளமையும் அழகும் குன்றாமல் இருக்க விற்கோலநாதர் ஆன இலிங்கத்தை வழிபட்டனர். **அரம்பேசன்**-இக்கூவநகரத்தில் வீற்றிருக்கும் இறைவர். **கின்னரம்புரை கொங்கை**-கின்னரப் பறவையைப் போன்ற முலை, சிவபெருமான் அரம்பையால் வழிபடப்பட்டவர் ஆதலால் அரம்பேசர் எனப் பெற்றார். இது கூவத்துக்கு அடுத்துள்ளது. 'ரம்பா' என்ற வடசொல் 'லம்பா' என்றாகி தமிழ் விதிப்படி மொழி முதலில் 'இ' பெற்று, 'ஆ' என்ற ஈறு 'ஐ' எனத் திரிந்து, அம் என்ற சாரியை பெற்று, இலம்பையங் கோட்டூர் ஆயிற்று. 68

155. அந்தமெய்ச்சிவ லிங்கம்வேண்டுநர்
வேண்டியாங்கு வழங்கியே
சுந்தரத்துறு மால் அதன் குண
திசையின்முன்பு தொடங்கிய
பந்தம்அற்றிட முனிவர்பூசை
பயின்றகண்ணுவ லிங்கமுற்று
இந்திரத்திரு வந்து கண்டவர்
பெற்றிடும்படி ஈயுமே.

வேண்டியவர்க்கு வேண்டிய நல்கும் சிவலிங்கம்

தெளிவுரை : அந்த மெய்ச்சிவலிங்கம் வேண்டுவார்க்கு வேண்டியவற்றைத் தந்து அழகுடன் விளங்கியது. அதன் கிழக்கில், முன் தொடங்கிய பிறவியாகிய தளை நீங்கிடக் கண்ணுவ முனிவர் பூசை செய்த கண்ணுவலிங்கம் வந்து கண்டவர்க்கு இந்திரச் செல்வம் அடையும்படி தந்திடும்.

விளக்கம் : குணதிசை-கிழக்குத் திக்கு. **முனிவர்**-கண்ணுவ முனிவர். இலிங்கம் இந்திரச் செல்வம் ஈயும் என்று இயையும். 69

வேறு

156. செம்பொனிதழ்க் கொன்றைபுனை விற்கோலத்து
எம்பெருமான் திருமுன் னாக
அம்பவளச் சடைக்கங்கை தனில்புனித
தீர்த்தம் ஒன்று உண்டு அறையக் கேண்மின்
உம்பரும்அங்கு அதில்மூழ்கி மனக்களங்கம்
ஒழித்திடுவர் உயர்ந்த விற்கோன்
அம்புபடின் பிழைக்குமோ வினைஅனைத்தும்
அக்கணமே அகன்று போமால். 70

வினையனைத்தும் அகன்று போகும்!

தெளிவுரை : செம்பொன் போன்ற இதழையுடைய கொன்றை மாலையை அணியும் திருவிற்கோலரான எம்சிவபெருமான் கோயிலின் திருமுன்பு, அழகிய பவளம் போன்ற சிவபெருமானின் சடையில் உள்ள கங்கையைவிடத் தூய தீர்த்தம் ஒன்றுண்டு. அதனைப் பற்றிக் கூறுவதைக் கேளுங்கள். தேவர்களும்

அத்தீர்த்தத்தில் மூழ்கி உள்ளத்தில் உள்ள களங்கம் போக்கிக் கொள்வர். உயர்வான விற்கோனின் அம்பு பட்டால் (நீர் பட்டால்) தீய வினைகள் எல்லாம் அக்கணமே அகன்று போய்விடும்.

விளக்கம் : சிவந்தபொன் போன்ற நிறமுடையது கொன்றை. ஆதலால் செம்பொன் இதழ்க்கொன்றை என்றார். **விற்கோலத் தெம்மான்**-கூவத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான். **அம்பவளச்சடை**-அழகிய பவளம் போன்ற சடை. **கேண்மின்**-கேளுங்கள். **மனக்களங்கம்**-உள்ளத்தில் உள்ள மாசு. **அம்பு**-(வில்லில் இடும்) அம்பு; நீர் எனவும் பொருள் கொள்ளலாம். 'அப்பு' என்பது அம்பு என்றானது. 70

157. அத்தகைய தீர்த்தம்இவண் அவதரித்த
வகைஅவுணர் புரங்கள் மாயச்
சுத்தன்அடற் புரவிநெடுங்கொடி மணித்தேர்
மிசைஅமரர் சூழ்ந்து போற்ற
இத்தலம்நின் றிடுங் காலை இரதகூவ
ரத்தைஇப முகத்துஎம் பெம்மான்
கைத்தலம்கொண்டு இறுத்தவிடத்து எழுந்ததுநம்
பவமாசு கழுவு நீராய்.

தீர்த்தம் தோன்றிய விதம்

தெளிவுரை : அத்தகைய நீர்நிலை இங்குத் தோன்றிய விதம் வருமாறு. அசுரர்களின் மூன்று புரங்களும் அழியுமாறு தூயவரான சிவபெருமான் வலிய பூமியாகிய பெரிய கொடி கட்டப்பட்ட அழகிய தேர்மீது தேவர்கள் எல்லாம். சுற்றிலும் இருந்து துதிக்க, இத்தலத்தில் வந்த போது, அத்தேரின் கூவரத்தை யானை முகத்தையுடைய எம் விநாயகப் பெருமான் கையால் ஒடித்தபோது. இத்தீர்த்தம் இங்குத் தோன்றியது.

விளக்கம் : அவதரித்த வகை-தோன்றிய விதம். **அவுணர் புரங்கள்**-வித்துன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் ஆகிய அசுரர்கள். **சுத்தன்**-சிவபெருமான். **அடற்புவி**-வலிமையுடைய உலகம். **மணித்தேர்**-அழகிய தேர். **கூவரத்தை**-'கூபரம்' என்ற வடசொல் 'கூவரம்' தமிழில் வரும். இது ஆரைக்கால், அச்சு

எனப் பொருள்படும். அதனை விநாயகர் முரித்தார். இதற்கு ஏர்க்கால் எனவும் பொருள்உண்டு. ஏர்க்காலையும் ஆரையும் அச்சையும் சேர்த்து ஒடித்ததாகவும் கொள்ளலாம். 71

158. ஆதலின் அங்கு அதற்கு அரிய திருநாமம்
அச்சிறுகே ணியதாம் என்றே
ஓதுவர் அங்கு அதன்பெருமை உமைஒருபால்
உடையபிரான் உரைப்பது அல்லால்
போதம்இல் என் புந்தியினால் புகலஎளி
தோ?அதனைப் புகழ்ந்து போற்றின்
தீதுஅகலும் எனும்பொருட்டால் தமியேனும்
அறிந்தபடி செப்பு வேனால்.

யான் அறிந்தபடி கூறுவேன்!

தெளிவுரை : ஆதலால் அங்குத் தோன்றிய நீர்நிலையைச் சிறுகேணி என்றே உரைப்பர். அந்த நீர்நிலையின் பெருமையை உமையொருபாகனான சிவபெருமான் உரைப்பதே அல்லாமல் ஞானம் இல்லாத என் அறிவினால் கூறுவது எளிதோ! அதைப் புகழ்ந்து போற்றின் தீமைகள் எல்லாம் அகலும். ஆதலால் எளியேனும் நான் அறிந்தபடி கூறுவேன்.

விளக்கம் : அந்த நீர் நிலையின் பெயர் 'சிறுகேணி' என்பதாம். **புந்தி**-அறிவு. **தமியேனும்**-எளியேனும். 72

159. வந்துஅதனில் இருநான்கு பகல்மூழ்கின்
வரன்முறையால் ஒவ்வொர் வைகல்
கந்தம்அறும் பவம் போம்புண் ணியம்வளரும்
மகபதிதன் அரிய தானம்
முந்துபிர சாபதிதன் தானம், அயன்
உறுதானம், முகுந்தன் தானம்
எந்தைஉமை ஒருபாகன் இருந்தானம்
முத்திஇவை எய்தும் அன்றே.

சிறுகேணியில் மூழ்கினால் உண்டாகும் பயன்

தெளிவுரை : ஒருவர் அதனிடம் வந்து முறையாக எட்டு நாள் முழுகினால் ஒவ்வொரு நாளும் அவர் செய்த பாவமும் போகும்.

புண்ணியம் வளரும். இந்திரனின் அரிய பதவி, முற்காலத்தில் இருந்த பிரசாபதியின் பதவி, பிரமன்பதம், திருமால் பதவி, எம் தந்தையான உமை ஒரு பாகம் உடைய சிவபதவி, முத்தி என்னும் இவையெல்லாம் அடைவர்.

விளக்கம் : இருநான்கு பகல்-எட்டுநாட்கள். **உமையொருபாகன்**-உமையம்மையை இடப்பாகத்தில் உடைய சிவபெருமான். **வைகல்**-நாள். **மகபதி**-இந்திரன். **பிரசாபதி**-கதிரவன். **அயன்**-நான்முகன். **முகுந்தன்**-திருமால். **தானம்**-பதவி. **முத்தி**-வீடுபேறு. 73

160. செங்கதிர்வெண் கதிர்நாள்அட் டமிஅயனம்
உவாஆதி தினங்கள் நண்ணி
அங்குஅதனில் ஆடுநர்கள் அரும்புதல்வர்
அரசாட்சி ஆக்கம் எய்தித்
தங்கிஇருங் கதிஅடைவர் அதில் தோய்ந்து
போம்பறவை சார்ந்த வாவிப்
பொங்குபுனல் படிந்தவரும் வினைதீர்ந்து
மெய்க்கதியில் புகுவர் அன்றே.

சிவகதியை அடைவர்!

தெளிவுரை : ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, அட்டமி, அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களில் அத்தீர்த்தம் சேர்ந்து அதில் நீராடுபவர்கள் அரிய புதல்வர் பெற்று அரசபோகம் ஆகியவற்றை அடைந்து பெருமையுடைய சிவகதியினை அடைவர். அதில் தோய்ந்து செல்லும் பறவை போய் அடையும் நீர்நிலையின் பெருகிய நீரில் நீராடியவரும் தம்வினைகள் நீங்கப்பெற்று உண்மையான நற்கதியை எய்துவர்.

விளக்கம் : செங்கதிர்-ஞாயிற்றுக்கிழமை. **வெண்கதிர்**-திங்கட்கிழமை. **அயனம்**-அமாவசை. **உவா**-பௌர்ணமி. **ஆடுநர்**-நீராடுபவர்கள். **வாவி**-நீர்நிலை. **படிந்தவர்**-நீராடுபவர். **அன்றே**-அன்று+ஏ; அசை. 74

161. தீர்த்தம்உல குஉள எவையும் அப்புனித
    தீர்த்தத்துக்கு ஒவ்வா; எல்லா
மூர்த்திகளும் விற்கோல மூர்த்திதனக்கு
    இணையல்ல; முந்நீர் சூழ்ந்த
பார்த்திகழும் அருந்தலங்கள் எனப்பகரப்
    பட்டஎலாம் புவனம் மூன்றும்
போர்த்த பெரும் புகழ்படைத்து கூவமா
    நகரதனைப் போன்றி டாவே.

கூவத்துக்கு நிகர் இல்லை!

தெளிவுரை : உலகத்தில் உள்ள எந்தத் தீர்த்தமும் அந்தப் புனித தீர்த்தத்துக்கு நிகராகமாட்டா. உலகில் உள்ள எல்லா மூர்த்திகளும் திருவிற்கோல மூர்த்திக்கு நிகர் இல்லை. கடலால் சூழப்பட்ட உலகில் விளங்கும் புனித தலங்கள் எனக் கூறப்படுபவை எல்லாம் மூன்று உலகத்திலும் பரவிய பெரும் புகழை யுடைய கூவம் என்ற அந்த நகரத்தைப் போல் விளங்கா.

விளக்கம் : ஒவ்வா-நிகராகா. **முந்நீர்**-கடல். பகரப்பட்டவை எல்லாம் கூவத்துக்கு ஒப்பாகா. **புவனம் மூன்றும்**-மூன்று உலகமும். **போன்றிடா**-நிகராகா. 75

162. எண்ணிறந்த உகங்கள்தவம் பயின்றதனால்
    விழிநுதலின் இமைக்கும் ஈசன்
உள்நிறைந்த கூவநகர்ப் பெருமைசிறிது
    பரன்அருளால் ஒழிவுஇல் சீர்த்திப்
பண்நிறைந்த கூவநகர்ப் பெருமைசிறிது
    அறிந்துஉரைத்தேன் பவங்கள் தீரக்
கண்நிறைந்த மலபாகம் வரநீவிர்
    அதுவினவக் காதல் கொண்டீர்.

சூதமுனிவர் திருத்தலம் பற்றிக் கூறிமுடித்தல்

தெளிவுரை : எண்ணற்ற யுகங்கள் தவம் செய்ததால் நெற்றியின் கண்ணையுடைய சிவபெருமான் உள்ளத்தில் நிறைந்த கருணையால் விளங்கும் குருவின் அருளால் குறையாத புகழையுடைய பாடல் நிறைந்த கூவநகரத்தின் பெருமையைச்

சிறிது அறிந்து கூறினேன். பாவங்கள் தீர. கண்நிறைந்த மலபரிபாகம் (மலம் நீங்குதற்குரிய பக்குவம்) வர நீவிர் கேட்டிட ஆவல் கொண்டீர்!

விளக்கம் : எண்ணிறந்தவுகங் கடவம்-எண்+இறந்த+உகங்கள்+தவம். **இமைக்கும்**-விளங்கும். **உண்ணிறைந்த**-திருவுள்ளத்தில் நிறைந்துள்ள. **மலபரிபாகம்**-மலங்கள் நீங்கும் பக்குவம் உண்டாகும் காலம். 76

163. என்று இனைய சூதமுனி புகன்றிடலும்
    இருந்தவர்கள் உவகை எய்தி
இன்று எமது விழிசிறப்ப நினைக்காணும்
    பேறுஉடையேம் உலகின் எல்லா
நன்றியையும் உடையேம் வெம் பவப்பிணிக்கு
    மருந்தாகி நணுகும் கூவம்
சென்று தொழும் அரும்பயனும் பெற்றனம்என்று
    உரைத்து இதனைச் செப்புகின்றார்.

முனிவர்களின் மகிழ்ச்சிக்கூற்று

தெளிவுரை : என்று இப்படிச் சூதமுனிவர் உரைத்தார். அதைக் கேட்ட நைமிச முனிவர்கள் மகிழ்வு அடைந்தனர். 'இன்று எம் கண்கள் சிறக்க உம்மைக் காணும் பேற்றைப் பெற்றோம்' ஆதலால் உலகில் எல்லாப் பேறுகளையும் பெற்றவர் ஆனோம். பிறவிப்பிணிக்கு மருந்தாகி விளங்கும் கூவம் என்ற இப்பதியை வணங்குவதால் உண்டாகும். அரிய பயனையும் அடைந்தோம் என்று இவ்வாறு அம்முனிவர்கள் உரைத்தார்கள். பின் கீழ்க்கண்டவண்ணம் கூறலானார்கள்.

விளக்கம் : இருந்தவர்-பெரிய தவத்தையுடைய நைமிசவன முனிவர்கள். **உவமை**-மகிழ்ச்சி. **நன்றி**-நன்மை. **பவப்பிணி**-பிறவி நோய். 77

164. அருந்தவம்நீ முனம்புகன்ற திரிபுரத்தின்
    இயல்பெவன்கொல் அதிப ராகி
இருந்தவர்யார்? அவர்நாமம் எது? அமரர்
    குழுவொடும் இறைவன் சாட

வரும்திறம்யாது? ஐங்கரத்துத் தனிக்கடவுள்
    அமலன்இவர் வையத் தாழி
பொருந்துறுமார் தடித்தது என்னுக்கு? உரைத்தி! எனச்
    சூதமுனி புகல்வது ஆனான்.

முனிவர்கள் திரிபுரதகனம் பற்றி வினவுதல்

தெளிவுரை : அரிய தவம் உடைய முனிவரே! நீவிர் முன்பு கூறிய திரிபுரங்களின் இயல்பு யாது? அவற்றுக்கு உரியவர்கள் யார்? அவர்களின் பெயர் யாவை? தேவர் குழுவுடன் சிவபெருமான் அப்புரங்களை அழிக்கவந்த இயல்புயாது? ஐந்து கைகளையுடைய ஒப்பற்ற விநாயகப் பெருமான் குற்றம் அற்ற சிவபெருமான் ஏறிவந்த தேரின் அச்சு ஒடியும்படி செய்தது எதற்கு? உரைப்பீராக! என்று வினவினர். சூதமுனிவர். திரிபுரங்களை அழித்தது பற்றிக் கூறலானார்.

விளக்கம் : புகன்ற-கூறிய. **எவன்கொல்**-யாது. **அதிபராகி**-தலைவராகி; உரியவராகி. **அமரர்**-தேவர். **சாட**-அழிக்க. **ஐங்கரத்துத் தனிக்கடவுள்**-ஐந்து கைகளையுடைய நிகரற்ற விநாயகக் கடவுள் **வையம்**-தேர். **ஆழி**-சக்கரத்தில் கோக்கப்பட்ட அச்சு. **ஆர்**-அச்சு; விநாயகர் ஆரையும் அச்சையும் சேர ஒடித்தார் என்பது இங்குக் குறிக்கத் தக்கது. 78.

திருத்தலச் சருக்கம் முற்றிற்று
ஆகச் செய்யுள் - 164

4. திரிபுர தகனச் சருக்கம்

திரிபுரங்களைச் சிவபெருமான் எரித்ததைப்பற்றிக் கூறும் சருக்கம் என்பது பொருள். திரிபுரம்-தாருகனின் மைந்தர்களான வித்துன்மாலி, தாரகாக்கன், கமலாக்கன் என்ற மூவர்களும் பெற்றிருந்த பொன், வெள்ளி, இரும்பு புரங்கள். தகனம்-எரித்தல்.

இச்சுருக்கத்தின் சுருக்கம்

தாருகன் என்ற அசுரனுக்கு மைந்தர் மூவர். அவர்கள் வித்துன்மாலி, தாரகாக்கன், கமலாக்கன். அம்மைந்தர். நான்முகனை நோக்கித் தவம் செய்தனர். அளவில்லாத காலம்

தவம் செய்து இளைத்த அவர்கள் முன்பு நான்முகன் தோன்றினார். அவரைப் பணிந்து தாங்கள் வேண்டிய வரத்தைக் கூறினார். 'எம் தலைவ! மூன்று உலகங்களிலும் செல்லும்படியான பொன், வெள்ளி, இரும்பால் ஆன மூன்று மதில்களை அளித்தருளவேண்டும். ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை நாங்கள் ஒன்று கூட வேண்டும். நாங்கள் அழிவதானால் எம்மை ஒருங்கே ஒருவனே ஓர் அம்பால் அழிக்க வேண்டும்' நான்முகன் அவர்கள் வேண்டியபடியே அளித்தார்.

நான்முகன் அளித்த அம்மதில்கள் ஆயிரம் யோசனை அகலமும் உயரமும் உடையதாய் விளங்கின. விண்ணவர் உலகில் பொன் மதிலும், வானத்தில் வெள்ளியும். மண்ணுலகில் இரும்பும் மதிலைக்கொண்டு அங்கங்கு தனித்தனி நகரங்களை மயன் அமைத்துத் தந்தான். அவற்றைத் தந்த பின்பு அந்த அசுரர்களை நோக்கிப் புகழ்பொருள் கல்வி வேண்டுபவர் சிவலிங்கபூசை செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் பூசை பழி, பகை, அச்சம் வறுமை, துன்பம் முதலியவற்றைப் போக்கவல்லது. அரி, அயன் ஆகியவரும் சிவலிங்கபூசை செய்வர். மார்க்கண்டேயரும் வழிபட்ட காரணத்தால் எமபயம் நீங்கி விதியை வென்றனர். எனவே, நீங்கள் வேண்டியவற்றைப் பூசை செய்யுங்கள் என்றான். அவன் சொன்னவண்ணமே சிவலிங்கபூசனையைச் செய்து வந்தனர் அசுரர்.

பின்னர் அவர்கள் திக்குகளில் உள்ள மன்னரையும் தேவரையும் பிறரையும் தம் வலிமையால் பற்றித் தமக்கு ஏவல் செய்யப் பணித்தனர். அவர்கள் செயலால் அனைவரும் துன்பம் அடைந்தனர். இந்திரன் அசுரர் தொல்லையைப் பொறுக்க இயலாமல் மேருவில் போய் ஒளிந்து வாழ்ந்தான். கூகையைக் கொல்லத் தக்க காலம் வரும் வரை காத்திருக்கும் காக்கை போல் அமரர் காலத்தை எதிர்பார்த்திருந்தனர்.

பின் தேவர்கள் இந்திரனிடம் போய்த் தம் துன்பத்தைக் கூறி வருந்தினர். இந்திரன் நான்முகனிடம் போனான். அசுரரால்படுந் துன்பத்தை உரைத்தான். அதைச் செவியேற்ற நான்முகன் அசுரரை வெல்லும் திறம் எமக்கு இல்லை. திருமாலே இத்துன்பத்தைப்

போக்குவான் என்று கூறித் திருமாலிடம் போக்கினான். அரக்கரால் உண்டான துன்பத்தைப் போக்கிட வேண்டும், என்று வேண்டினான். திருமால் அசுரரை அழிக்க உபசத்துக்களை அனுப்பினான். அவர்கள் அசுரர்களுடன் போரிட்டனர். தோற்றனர். அதைக் கண்ட தேவர் துன்பம் அடைந்து ஓடிவந்தனர். நிகழ்ந்ததை உரைத்தனர்.

சிவபூசை செய்பவரை வெல்ல இயலாது என்று திருமால் நினைந்தார். தேவர்களைப் பார்த்துச் சிவபூசனை செய்பவரை அழித்தல் இயலாது. இயமனும் சிவபூசை செய்பவரை அணுக மாட்டான். எனவே அவுணர் சிவ பூசை செய்யும் வரை எந்தச் செயலாலும் அவர்கள் முடிவு எய்தார். ஆதலால் ஓர் சூழ்ச்சியால் அசுரர்கள் சிவபூசையைக் கைவிடும்படி செய்வோம். உங்கள் துன்பம் நீங்கும் என்றார். பின்பு அசுரர்களை அழிக்கும் உபாயத்தைக் கூறினார். 'கற்புடை மாதர் தவ வலிமையுடைய முனிவரைவிட வலியவர். ஆதலால் அவர்களின் கற்பை இழக்குமாறு செய்ய வேண்டும்' என இயம்பிப் பின்பு நாரதரை மனத்துள் நினைத்தார். நாரதர் வந்ததும் அவரை முப்புரங்களில் உள்ள மாதரின் கற்பை இழக்கும்படி செய்யுமாறு பணித்தார். நாரதரும் அதை ஏற்றுக்கொண்டு போனார். நாரத முனிவர் சென்ற பின் திருமால், புத்தர், ஜினர், அருகர் என்ற மூன்று கோலம் கொண்டு தம் நூலை அசுரர்க்கு உபதேசித்தார். அவரது உபதேசத்தால் மயங்கி அவுணர் நீறு, கண்டிகை, சிவபூசை ஆகியவற்றைக் கைவிட்டனர். நாரதர் சூழ்ச்சியாலும், நாராயணனின் பிரசாரத்தாலும் முப்புர மாதர்களும், அசுரர்களும் நெறி கெட்டனர். அதைக் கேட்ட தேவர்கள் மகிழ்ந்தனர்.

அங்ஙனம் நிகழ்ந்த பின்பு திருமால், நான்முகன் முதலியவருடன் கயிலை மலைக்குச் சென்றார். சிவபெருமானை வணங்கி அசுரர்களால் ஏற்படும் துயரத்தைக் கூறி அதனைப் போக்கியருளுமாறு வேண்டினார்.

சிவபெருமான் மாயவன் உரைத்ததைக் கேட்ட சிவபெருமான் 'அஞ்ச வேண்டா! நாம் அவுணரை அழிப்போம். ஆயின், போர்க்கருவிகள் இல்லையே' என்று கூறினார் தேவதச்சன்

மயனைக் கொண்டு ஆவன செய்யுமாறு கூறினர். அவன் பூமியைத் தேராகவும், கதிரவன் சந்திரர்களைக் தேர்ச்சக்கரங்களாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமன் தேர்ப்பாகனாகவும், மேருமலையை வில்லாகவும், ஆதிசேடனை நாண் கயிறாகவும், அக்கினி, சந்திரன், திருமால் மூவரும் அம்பாகவும் அமையத் தேவதச்சன் அமைத்துக் கொடுத்தான்.

அதனைக் கண்ட சிவபெருமான் மகிழ்ந்தார். தேவர்கள், 'வெற்றியுண்டாகுக. வெற்றியுண்டாகுக!' என முழங்கினார்கள். சிவபெருமான் பொன் பாதுகைகளை அணிந்து வெளி வந்தார். வில்லைக் கைக் கொண்டு அம்புடன் தேரில் அமர்ந்தார். அப்போது மலர் மழை பொழிந்தது. தேவர்கள் கவரி வீசினர். ஆலவட்டம் வீசினர். பானுகம்பன் தன் ஆயிரம் வாய்களிலும் சங்குகளை வைத்து ஒலி எழுப்பினான். சிவபெருமான் கயிலைமலையை விட்டுப் பல காவதம் கடந்து கூவரநகரத்தை அடைந்தார். போர்க்கோலத்துடன் சிவனார் வந்த தேரின் அச்சை விநாயகப் பெருமான் தம் துதிக்கையால் ஒடித்தார். தேர் சாய்வதால் திருமால் காளை உருக்கொண்டு தம்முதுகில் தேரைத் தாங்கினார்.

விநாயகர் தேரின் அச்சை முறித்ததால் தேவர்கள் முன்னைவிடப் பன்மடங்கு வருந்திப் பகைவரின் செயல் இதுவோ! என்று அஞ்சித் திக்குதோறும் ஓடினர்.

அவ்வமயம் ஆறுமுகப்பெருமான் தேவர்களைப் பார்த்து, 'அஞ்சவேண்டா! நில்லுங்கள், நில்லுங்கள்! அச்சினை முறித்தவர் அசுரர் அல்லர். என் தமையனான விநாயகர்!' என்று கூறி அழைத்தான். இனி எப்படிப் போரிடுவது என்று தேவர்கள் கலக்கம் கொண்டனர். சிவபெருமான் 'விநாயகரை வழிபடாது போனதால் இது நேர்ந்தது' என்று எண்ணிப்பழம் முதலியவற்றைக் கொண்டு படைத்து விநாயகரை வழிபட்டார்.

அதன்பின் அப்பெருமான் மூன்று புரங்களும் வரும்படி மனத்துள் நினைத்தார். அவ்வளவில் மூன்று புரங்களும் அங்கு வந்தன. ஒன்றாக இணைந்தன. தேவர்கள் 'திரிபுராதிகளை வெல்வதற்குரிய அமயம் இதுவே' என்றனர். சிவபெருமான்

விருப்பத்தோடு நங்கையை நோக்கி நகைத்தார். அச்சிரிப்பினின்று தீக் கொழுந்து எழுந்தது. அது அரைக் கணத்தில் திரிபுரங்களை எரித்துச் சாம்பலாக்கியது. என்றாலும். அம்மூவர் மட்டும் இறவாமல் இருந்தனர். எனவே எம்பெருமான் பொன்சிலையை வளைத்து அம்பு ஒன்றைச் செலுத்தினார் அது அம்மூவர் உயிர்களையும் உண்டு திரும்பிச் சிவபெருமானிடமே வந்தது. தேவர்கள் மலர்மழை பொழிந்தனர். விற்கோல நாதரை அர்ச்சித்தனர். அவர்களின் வேண்டுகோளின்படி இலிங்க வடிவத்தை மேற்கொண்டனர். வில் ஏந்திய கோலத்துடன் இருந்து தோன்றிய இலிங்கம் ஆதலால் விற்கோல நாதர் என்ற திருநாமம் வழங்குவதாயிற்று.

விநாயகர், திருமால், நான்முகன், இந்திரன், முனிவர் முதலியவர் அத்தலத்திலேயே தங்கினர். சிவபெருமான் உமையம்மையுடன் தங்கியதால் அத்தலத்துக்கு '**அவிமுத்தம்**' என்ற பெயர் வழங்குவதாயிற்று. விநாயகர் தேரின் அச்சை முறித்ததால் அந்நகரத்துக்குக் '**கூவரக்னர்**' எனப்பெயர் ஏற்பட்டது. மூன்று உலகங்களுக்கு நடுவில் கூவம் போன்றுள்ளதால் '**கூவம்**' எனவும் அதை அழைத்தனர்.

இத்தகைய வரலாற்றைச் சூத முனிவர் நைமிசவனத்து முனிவர்களுக்கு உரைத்தார்.

4. திரிபுரதகனச் சருக்கம்

165. தாலம்மேல் புகழ்வைத்து உள்ள தாரகன் சிறாராய்வித்துன்
மாலியே, தார காக்கன், வயக்கம லாக்கன், என்ன
வேல்உலாம் தடக்கை வென்றி வீரர்கள் மூவர் பாவம்
மூலகா ரணம தாய முக்குற்றம் போல்உண் டானார்.

தாருகனின் மைந்தர் மூவர்

தெளிவுரை : உலகத்தின் மீது புகழை ஈட்டிவைத்தவன் தாருகன் என்பான். அவனுடைய புதல்வர்கள் வித்துன்மாலி, தாரகாக்கன், **கமலாக்கன்** அவர்கள் வேல் பொருந்திய பெரிய கையையுடைய வெற்றி வீரர்கள் ஆவார்கள். அம்மூவர் பாவத்துக்கு **மூலகாரணமாகிய** ஆணவம், கன்மம், மாயை போன்று விளங்கினர்.

விளக்கம் : தாரகாக்கன்-தாரகாட்சன். **கமலாக்கன்**-கமலாட்சன். **வயம்**-வெற்றி, **வென்றி**-வெற்றி. **முக்குற்றம்**-ஆணவம், கன்மம், மாயை. 1

166. பேர்உகம் அனேகம் எண்ணில்
பெரும்புவி அண்டம் ஆண்ட
தாருகன் உயிர்கூற்று உண்ணச்
சட்டகம் கடைவாய் பெய்நெய்த்
தோர்உக அயிலின் செவ்வேள்
தொலைத்தபின் மூவ ரும்பங்
கேருக இறையை நோக்கிக்
கெடல்அருந் தவமு யன்றார்.

நான்முகனை நோக்கித்தவம் இயற்றினார்

தெளிவுரை : பெரிய யுகங்கள் ஆன எண்ணற்ற காலம் எல்லாம் பெரிய இவ்வுலகத்தை ஆண்ட தாருகனின் உயிரை இயமன் கொண்டு போனான். உடம்பின் கடைவாயினின்று இரத்தம் ஒழுகக் அவனைக் கூர்மையுடைய வேல் ஏந்திய முருகப்பெருமான் கொன்றார். அதன் பின்பு தாருகனின் மக்களான வித்துன்மாலி, தாரகாக்கன், கமலாக்கன் ஆகிய மூவரும், தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனை நோக்கி அழிவற்ற தவத்தைச் செய்தனர்.

விளக்கம் : பேருகம்-பெரிய யுகம். **கூற்று**-இயமன். **உண்ண**-கொண்டு போக. **சட்டகம்**-உடல் **நெய்த்தோர்**-இரத்தம், குருதி. **உக**-சிந்த, வழிய. **அயிலின் செவ்வேள்**-கூர்மையான வேலையுடைய முருகன். **பங்கேருகம்**-தாமரை. **இறை**-நான்முகன். 2

67. துய்த்தல்அற்று அளவில் காலம்
துயரொடு நோற்று, மேனி
எய்த்தவர்க்கு அருள, அன்னம்
உடன்இருங் கரகத் தெள்நீர்
கைத்தலம் தன்னில் கொண்டு
கமலபீ டிகையின் நேயம்
வைத்துஅமர்ந்து உலகம் ஆக்கும்
வள்ளல்முன் வந்து நின்றான்.

நான்முகன் மூவர் முன் தோன்றல்

தெளிவுரை : அம்மூவரும் உண்ணாமல் அளவில்லாதகாலம் துன்பத்துடன் தவம் செய்தனர். மேனி தளரப் பெற்றனர். அத்தகைய அம்மூவர்க்கு, அருள் செய்ய அன்னப்பறவையில் அமர்ந்து பெரிய கரகத்தில் தண்ணீர் கைக்கொண்டு தாமரை இருக்கையில் விருப்பம் உடையவராய் அமர்ந்து உலகத்தையும் உயிர்களையும் படைக்கும் வள்ளலான நான்முகன் வந்து நின்றார்.

விளக்கம் : துய்த்தல் அற்று-உண்ணவேண்டிய உணவை உண்ணாமல். **நோற்று**-தவம் செய்து. **மேனி எய்த்தவர்க்கு**-உடல் தளரப்பெற்றவர்க்கு. **அன்னம்**-அன்னப்பறவை, உணவுமாம். **இருங்கரகத் தெண்ணீர்**-பெரிய கமண்டலத்தில் உள்ள தெளிந்த நீர். உணவையும் நீரையும் நான்முகன் கைக்கொண்டு வந்தார் என்பது கருத்து. **கமலபீடிகை**-தாமரை இருக்கை **நேயம்**-அன்பு. **உலகம் ஆக்கும்**-உலகத்தைப் படைக்கும். **வள்ளல்**-நான்முகன். தவம் செய்பவர்க்கு உண்ண உணவும் அருந்த நீரும் ஆகியவற்றை அளிக்க நான்முகன் அவற்றைக் கொண்டுவந்தார். 3

168. நின்றலும் அதனைக் காணா
நிலம்உறப் பணிந்துஎ ழுந்து
வன்திறல் அவுணர் போற்ற
மால்மகன் உவகை எய்தி
என்தனை நினைந்து நோற்றது
ஏதுஉளம் விரும்பி நீவிர்
நன்றுற மொழிமின் என்ன
அஞ்சலி நவிற்றிச் சொல்வார்.

உம் விருப்பம் யாது?

தெளிவுரை : அவ்வாறு நான்முகன் அசுரர் முன் நிற்கவும் அப்பெருமான் வந்ததைக் கண்டு அவர்கள் நிலத்தில் பொருந்த விழுந்து பணிந்து எழுந்தனர். அந்நான்முகனைத் துதித்தனர். திருமாலின் மகனான அந்நான்முகன் மகிழ்வு அடைந்தான். 'நீவிர் என்னை விரும்பித் தவம் செய்தீர். உங்கள் உள்ளம் விரும்புவது யாது? நன்றாகக் கூறுங்கள்!' என்றான். அவ்வசுரர்கள் முதலில் வணங்கிக் கூறத் தொடங்கினர்.

விளக்கம் : காணா-கண்டு. **வன்திறல் அவுணர்**-வன்மையான ஆற்றலையுடையவர். **அவுணர்**-அசுரர், வித்துன்மாலி, தாரகாக்கன், கமலாக்கன். **உவகை எய்தி**-மகிழ்ச்சி அடைந்து. **நோற்ற**-தவம் இயற்றிய. **மொழிமின்**-கூறுங்கள். **அஞ்சலி**-வணக்கம். **நவிற்றி**-கூறி திருமாலின் மகன் நான்முகன். ஆதலால் 'மால்மகன்' எனப்பட்டான். 4

169. மூவுல கத்தும் ஒன்ற
மூஎயில் அளிக்க வேண்டும்
மூவரும் அவண்உ றைந்து
முடிவிலா உகங்கள் ஆண்டு
மேவலர்ச் செகுக்க வேண்டும்
பத்துநூறு ஆண்டிற்கு ஒர்கால்
மேவுற எயில்கள் மூன்றும்
கூடவும் வேண்டும் அன்றே.

மூன்று அசுரர்கள் வேண்டிய வரம்

தெளிவுரை : 'ஐயனே! நாங்கள் மூவுலகங்களிலும் போய் வருதவற்கு ஏற்ப மூன்று புரங்களை-மதில்களை அளிக்க வேண்டும். நாங்கள் மூவரும் அதில் தனித்தனியே இருந்து வாழ்ந்து முடிவற்ற உலகங்கள் எல்லாம் ஆண்டு எம் பகைவரை வெல்லல் வேண்டும். ஆயிரம் ஆண்டுக்கு ஒருமுறை நாங்கள் சேர மதில்கள் மூன்றும் ஒன்றாய்க் கூடவும் வேண்டும்.

விளக்கம்: மூவெயில்-மூன்று மதில்கள், புரங்கள் மதில் என்பது மதிலையுடைய கோட்டையை. **அவண்**-அப்புரங்களில். **உறைந்து**-தங்கி. **மேவலர்**-பகைவர். **செகுக்க**-அழிக்க, கொல்ல. **பத்துநூறு ஆண்டு**-ஆயிரம் ஆண்டு. ஆயிரம் ஆண்டுக்கு ஒருமுறை அப்புரங்களையுடைய நாங்கள் ஒன்று கூடவேண்டும். **அன்றே**-அன்று+ஏ; அசைகள். 5

170. இன்னமும் ஒன்றுஉண்டு, ஐய,
எம்தமக்கு இறுதிநாள் உண்டு
என்னினும் ஒருவனே நின்று
எளிதினில் ஆடலே போல்

174 அவ்வளம் அனைத்தும் நோக்கி அவுணர்கள் உவகை பூத்துச்
செவ்விது நங்கட்கு இந்தச் செழும்புரம் எனஇருப்ப
எவ்வம்இல் கலைகள் தேர்ந்த இருந்தவ மயன்என்று உள்ளோன்
தெவ்வடு புயவீ ரர்க்கோர் உறுதியைத் தெருட்டு கின்றான்.

மயன் அசுரர்க்கு அறிவுரை கூறல்

தெளிவுரை : அசுரர்கள் தங்கட்கு மயன் என்பவன் படைத்துத் தந்த கோட்டைகளில் அமைந்த வளங்களையெல்லாம் பார்த்து மகிழ்ச்சி அடைந்தனர். எங்களுக்கு இப்புரங்கள் சிறந்தவை யாகும் என்று மகிழ்ந்து இருந்தனர். அப்போது துன்பம் இல்லாத கலைகளை ஆராய்ந்து தெளிந்த மிக்க தவத்தையுடைய மயன் என்பவன் பகைவரை வெல்லும் வல்லமையுடைய தோள்களை யுடைய அசுரரைப் பார்த்து ஓர் நன்மைதரும் சொல்லைச் சொல்லானான்.

விளக்கம் : அவ்வளம்-கோட்டைகளில் அமைக்கப்பட்ட கோபுரம், கோயில் முதலிய வளங்கள். **அவுணர்**-அசுரர். **உவகைபூத்து**-மகிழ்ச்சி அடைந்து. **எவ்வம்**-துன்பம். **தேர்ந்த**-கற்ற. **தெவ்வடு**-பகைவரைக் கொல்கின்ற. **உறுதி**-நன்மை தருவது. 10

வேறு

175. செல்வமும் பதாதியும் செறுநர் தங்களை
வெல்வதும் வீரமும் புகழும் மேன்மையும்
கல்வியும் புதல்வரும் கதியும் வேண்டுநர்
எல்வரும் இலிங்கபூ சனைஇ யற்றுவார்.

செல்வம் முதலியவை வேண்டுபவர் சிவலிங்க பூசை செய்ய வேண்டும்.

தெளிவுரை : சிறந்த செல்வமும், நான்குவகைப் படையும், பகைவரை வெல்லும் வீரமும், புகழும் மேன்மையும் கல்வியும் புதல்வரும் நல்ல கதியும் ஆகியவற்றைப் பெற விரும்புபவர் ஒளி பொருந்திய இலிங்க பூசனையைச் செய்வர்.

விளக்கம் : பதாதி-காலாட்படை முதலியன. **செறுநர்**-பகைவர். **வேண்டுநர்**-விரும்புபவர். **எல்வரு இலிங்கம்**-ஒளியுடைய இலிங்கம், செல்வம் முதலியவற்றை விரும்புவர் இலிங்கபூசையைத் தவறாது செய்ய வேண்டும் என்பது கருத்து. 11

176. அல்லலும் பழிகளும் பகையும் அச்சமும்
செல்லலும் பிணிகளும் செயிரும் நிந்தைகள்
சொல்லலும் மிடியும்வெஞ் சோக மோகங்கள்
புல்லலும் இலிங்கபூ சனையிற் போகுமால்.

சிவபூசையால் நீங்குவன!

தெளிவுரை : துன்பமும் பழிகளும் பகையும் அச்சமும் வெறுப்பும் பலவகையான நோய்களும் சினத்தையும் பகைமையையும் உண்டாக்கும் நிந்தைகள் கூறலும் வறுமையும் கொடிய சோகம் ஆசைகள் சேர்தலும் என்பவை இலிங்கபூசனையால் அகலும்.

விளக்கம் : அல்லல்-துன்பம். **செல்லல்**-வெறுப்பு. **பிணிகள்**-நோய்கள். **செயிர் நிந்தைகள்**-சினத்தை உண்டாக்கும் பழிச் சொற்கள். **மிடி**-வறுமை. **வெஞ்சோகம்**-கொடிய வருத்தம்; மிக்க வருத்தம். **மோகங்கள்**-ஆசைகள். **புல்லல்**-அடைதல். **போகுமால்**-ஆல்-அசை. 12

177. அங்கையின் அடங்கும்நீர் இலிங்கத்து ஆட்டியே
எங்கணு உடையபச் சிலைஒன்று இட்டுமால்
பங்கயன் அடிதொழும் பரனைப் பூசியா
மங்குறு பவர்கள்தம் மடம்என் சொல்லுவாம்.

இலிங்கபூசை செய்யாதவர் அறியாதவர்

தெளிவுரை : உள்ளங்கையில் அடங்கும் அளவு நீரைக் கொண்டு இலிங்கத்தை நீராட்டி எங்கும் காணப்படும் வில்வம் போன்ற பச்சிலை ஒன்றை இட்டுத் திருமால், நான்முகன் ஆகியோர் வழிபாடு செய்யும் சிவபெருமானைப் பூசை செய்யாது தாழ்வை அடைகின்றவரின் அறியாமையை என்னவென்று சொல்வோம்?

விளக்கம் : அங்கையின் அடங்கும் நீர்-உள்ளங்கையில் அடங்கும் நீர். அதாவது நீரின் சிறுமை **ஆட்டியே**-நீராட்டி **எங்கணும் உடைய பச்சிலை**-எங்கும் எளிதில் காணப்படும் பச்சிலை. அது வில்வம் போன்ற பச்சிலை. திருமந்திரத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது.

'யாவர்க்கும் ஆம்இறைவற்கு ஒரு பச்சிலை;
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை;
யாவர்க்கும் ஆம் உண் ணும்போ து ஒரு கைப்பிடி;
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன் னுரை தானே'

மால்-திருமால். **பங்கயன்**-நான்முகன். **பூசியா**-பூசனை செய்யாது. மங்குறுபவர்கள் **மடம்**-துன்புற்று அழிபவர்களின் அறியாமை. 13

178. எய்திவாழ் வொடும்சிலர் இருப்பக் கண்டுமுன்
செய்தபூ சாபலம் என்னச் செப்புவார்
மெய்தவ இலிங்கபூ சனைவி ரும்பியே
செய்திடாது உழன்றிடும் செய்கைஎன் சொல்வாம்.

பூசை செய்யாதவர் செய்கை என்னே!

தெளிவுரை : சிலர் உயர்ந்த வாழ்வை அடைந்து விளங்குவதைக் கண்டு அதற்கு அவர்கள் முன்பு செய்த பூசையின் பயனால் உண்டாயிற்று என்று கூறுவர். உண்மையான தவம் ஆகிய இலிங்க பூசை செய்திடாது வருந்தும், செய்கையை என்னவென்று உரைப்போம்?

விளக்கம் : எய்தி வாழ்வு-வாழ்வு எய்தி என மாற்றிக் கூட்டுக. **பூசாபலன்**-பூசனை செய்ததன் பலன். ஒருவர் சிறந்த செல்வம் எய்தி வாழ்ந்தால் அது முன் செய்த 'பூஜாபலன்' என்று கூறுவது மக்கள் வழக்கம். **உழன்றிடும்**-வருந்தும். 14

179. இருள்புரி பவம்அகன்று இன்பம் எய்திட
அருள்புரி இலிங்கபூ சனையை ஆற்றிடா
மருள்புரி மனத்தினோர் மருவும் தீயுடல்
சுருள்புரி சுணங்கன்வால் தோற்றம் போலுமால்.

பூசை செய்யாதவர் உடல் நாய்வால் போன்றது

தெளிவுரை : மயக்கத்தை உண்டாக்கும் பிறவியானது நீங்கி இன்பத்தை அடைய அருளை அளித்தற்குக் காரணமான இலிங்கபூசையைச் செய்யாது மயக்கம் கொண்ட உள்ளத்தவர் பெற்றுள்ள தீய உடம்பானது சுருண்ட நாயின் வாலின் தோற்றம் போல் விளங்கும்.

விளக்கம் : இருள்புரி-துன்பத்தை ஏற்படுத்தும். **பவம்**-பிறவி. **இன்பம் எய்திட**-வீடுபேற்றை அடைய. **ஆற்றிடா**-செய்யாத. **மருள்**-மயக்கம். **மருவும்**-அடைந்துள்ள. **சுருள்புரி**-சுருண்ட. **சுணங்கன் வால் தோற்றம் போலுமால்**-நாய் வால் போல் சுருண்ட தோற்றம் உடையது. வால் வளைந்திருப்பது போல் பூசை செய்யாதவர் வாழ்வு செம்மையாய் இல்லாமல் வளைந்திருக்கும், அதாவது துன்பம் அடையும் என்பதாம். 15

180. பரசிவ லிங்கமெய் வடிவில் பட்டிட
விரைமலர் ஒன்றுஅறி யாமல் வீசிய
நரர்களே இந்திரன் நாமம் கொண்டு போய்ச்
சுரர்தொழ அனுதினம் துறக்கம் மேவுவார். 16

இந்திரனாய் வாழ்பவர்

தெளிவுரை : மேலான லிங்கத்தின் மெய்வடிவிலேபடுமாறு நறுமணம் உடைய மலரை அறியாமலேயே வீசியவர் நரர்களாக இருந்தாலும் அவர்கள் இந்திரனின் பெயர் கொண்டு போய்த் தேவர்கள் நாள்தோறும் வணங்கச் சொர்க்க வாழ்வை அடைவார்கள்.

விளக்கம் : ஒருவர் இலிங்கத்துக்கு மலரை இட்டு வழிபாடு செய்ய வேண்டும் என எண்ணாமலேயே அதை இலிங்கத்தின் மீது எறிந்தால் அவரும் சொர்க்கத்தை அடைந்து இன்புறுவர் என்பது கருத்து.
விரைமலர்-நறுமணம் உடைய மலர். **அறியாமல் வீசிய**-பூசனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் எறிந்த. **நாமம்**-பெயர். **சுரர் தொழ**-தேவர் வணங்க. **துறக்கம்**-சொர்க்கம். 16

181. வீழ்ந்தது வளைந்தது மிஞிறு தான்விழப்
போழ்ந்தது பழையது புலர்ந்த தேமயிர்
சூழ்ந்தது களைந்தொரு தூய பூமணம்
வாழ்ந்தரன் முடியிடின் மரித்து தித்திடார்.

பிறவாமையைப் பெறுவர்

தெளிவுரை : மலர்தானே கீழே விழுந்தது, வளைந்தது, வண்டுகள் மொய்க்க அதனால் பிளந்தது, பழையது, உலர்ந்தது மயிரால்

சூழப்பெற்றது, சூடிக் கழிக்கப்பட்டது ஆயினும் மலரை விரும்பிச் சிவபெருமான் முடியில் இட்டால் அத்தகையவர் இறந்து திரும்ப இவ்வுலகத்தில் பிறக்க மாட்டார்.

விளக்கம் : விழ்ந்தது-உதிர்ந்த மலர். இது இறைவர்க்குச் சூட்டுதற்குத் தகுதியற்றது என்பர். **மிஞிறு**-வண்டு. **விழ**-மொய்க்க. **போழ்ந்தது**-கிண்டிய மலர். **பழையது**-பழைய மலர். **புலர்ந்தது**-வாடியமலர். **மயிர்சூழ்ந்தது**-மயிரால் சூழப்பட்டது. அல்லது மயிரில் சூடிக் கழிக்கப்பட்டது. **மனம் வாழ்ந்து**-மனம் விரும்பி. **அரன் முடியின்**-சிவபெருமானின் திருமுடியில் சூட்டப்பட்டால். **மரித்து உதித்திடார்**-இறந்து பிறக்க மாட்டார்.

விழுந்தது முதலிய மலராயினும் அதை இறைவர்க்குச் சூட்டினால், சூட்டியவர் இறந்து பிறக்க மாட்டார்; வீடு பேற்றை அடைவர். 17

182. பொலக்கடி மலர்களால் சிவனைப் பூசியா
வலக்கயிறு எறிதரு மறலி தன்னையும்
கலக்கமில் அறிவன்மார்க் கண்டன் வென்றுமுன்
விலக்கமும் விதியையும் விலக்கி னான்அரோ.

மார்க்கண்டேயன் நற்கதி பெற்றமை

தெளிவுரை : பொன் போன்ற நறுமணம் உடைய மலர்களால் சிவபெருமானைப் பூசித்து வெற்றி யுடைய பாசக்கயிற்றை உயிர்கள் மீது எறியும் இயமனையும், கலக்கம் சிறிதும் இல்லாத அறிவனான மார்க்கண்டேயன் வென்று முற்காலத்தில் விலக்க முடியாத விதியையும் விலக்கினான்.

விளக்கம் : பொலம் கடி மலர்-பொன் போன்ற நறுமணம் உடைய பூ. **பொலம்**-பொன். **கடி**-நறுமணம். **வலக்கயிறு**-வெற்றியுடைய இயமன் கையில் உள்ள பாசக்கயிறு. **மறலி**-இயமன். **கலக்கமில் அறிவன்**-இயமனைக் கண்டு அச்சம் கொண்டிடாத அறிவுடையவன். **மார்க்கண்டன்**-மார்க்கண்டேயன். **விலக்கரும்**-விலக்க+அரும்; விலக்குதற்கு இயலாத. **அரோ**-அசை. 18

183. வேண்டிய பொருள்எலாம் வேண்டி யாங்குறக்
காண்தரு நீறுஉடல் புனைந்து கண்டிகை
பூண்டுஇலிங் கார்ச்சனை புரிமின் என்றனன்
ஏண்தரு மயன் எனும் இணைஇல் சூழ்ச்சியான்.

இலிங்க அருச்சனை செய்யுங்கள்!

தெளிவுரை : மதிக்கத் தக்க தேவதச்சனான மயன் என்ற ஒப்பில்லாத ஆராய்ச்சியையுடையவன் வேண்டிய பொருள்களை யெல்லாம் வேண்டியபடியே பெற நல்ல காட்சியைத் தரும் திருநீற்றை உடலில் பூசி உருத்திராக்க மாலையைச் சூடி இலிங்க வழிபாட்டைச் செய்யுங்கள் என இயம்பினான்.

விளக்கம் : வேண்டிய-விரும்பிய. **வேண்டியாங்கு**-விரும்பியபடி. **உற**-(ஒருவன்) பெற. **காண்டகு**-காண்+தகு; காணத்தக்க; நல்ல தோற்றத்தையுடைய. **நீறு**-விபூதி. **கண்டிகை**-உருத்திராட்ச மாலை. **பூண்டிலிங்கார்ச்சனை**-பூண்டு+இலிங்க+அர்ச்சனை. **புரிமின்**-செய்யுங்கள். **ஏண்டரு**-ஏண்+தரு; மதிக்கத்தக்க, பெருமையுடைய. **இணையில்**-ஒப்பு இல்லாத. **சூழ்ச்சி**-ஆராய்ச்சி. 19

184. அன்னவன் அறைந்தசொல் அவுணத் தீயர்கேட்டு
உன்னரும் இலிங்கபூ சனைஉ ஞற்றிடு
நன்னலம் அடைந்தனர் நஞ்சு கான்றிடும்
பன்னக மணியையும் பரிக்கு மாறுபோல்.

மயன் கூறியபடி அசுரர் ஒழுகுதல்

தெளிவுரை : அம்மயன் உரைத்ததைக் கேட்ட அசுரர்களாகிய தீயவர் கேட்டனர். அவன் சொன்னவண்ணமே நினைத்தற்கு அரிய இலிங்க பூசனையையும் செய்தனர்; நல்ல நன்மைகளை அடைந்தனர். அவர்கள் செய்த செயல் நஞ்சைக் கக்கும் ஆதிசேடனின் தலையில் உள்ள மணியையும் காத்தலைப் போல் விளங்கியது.

விளக்கம் : அன்னவன்-தேவதச்சனான மயன். **அவுணத் தீயர்**-வித்துன்மாலி, கமலாக்கன், தாரகாக்கன் என்ற மூன்று தீய அசுரர்கள். **உன்னரும்**-நினைத்தற்கு அரிய. **நஞ்சு**-விடம். **கான்றிடும்**-கக்கும், வெளிப்படுத்தும். 20

185. அன்னதின் பின்னர்அவ் அவுணர் மாதிர
மன்னரை, அமரரை, மற்று ளோர்தமைத்
துன்னிய வலியினால் கேடு சூழ்ந்து ஒறுத்து
இன்னல்உற் றிடப் பிடித்து ஏவல் கொண்டனர்.

அவுணர் செய்த இன்னல்

தெளிவுரை : அவ்வாறு அந்த அசுரர்கள் சிவலிங்க பூசையைச் செய்தமையால் பின்பு, எட்டுத்திக்குகளில் உள்ள மன்னர்களுக்கும், தேவர்களுக்கும் மற்றும் உள்ளவர்களுக்கும் தமக்குள்ள மிக்க வன்மையினால் கேட்டைச் செய்தனர். துன்புறுத்தினர், அவர்களைப் பிடித்துத் தமக்குப் பணி செய்யுமாறு செய்தனர்.

விளக்கம் : மாதிரம்-திக்கு. **அமரரை**-தேவரை. **துன்னிய**-தம்மை அடைந்த. **வலியினால்**-வலிமையால். **ஒறுத்து**-தண்டித்து. **இன்னல் உற்றிட**-துன்பம் அடைந்திட. 21

186. கான்றிடும் எரிவிழிக் கடிய மூவரும்
தோன்றிடும் உயிர்எலாம் துயரின் மூழ்குற
மூன்றுஎனும் உலகங்கள் முற்றும் வெற்றி கொண்டு
ஆன்றதம் ஆணையே நிறுவி ஆண்டனர்.

மூவுலகையும் ஆளுதல்

தெளிவுரை : தீயைக் கக்கும் விழியையுடைய கொடிய அந்த அசுரர் மூவரும் காணப்படும். உயிர்களெல்லாம். துன்பத்துள் முழுக மூன்று வகையாக உள்ள உலகங்கள் முற்றும் வெற்றி கொண்டனர். தம் ஆணையையே எங்கும் நிலைநிறுத்தி ஆண்டனர்.

விளக்கம் : கான்றிடு-வெளிப்படுத்தும். **எரிவிழ**-தீமை உடைய. **கடிய**-கொடிய. **ஆன்ற**-பொருந்திய. 22

187. புரந்தரன் அவுணர்செய் புன்மை ஆற்றிடாது
அரந்தையின் விரைந்துஅயி ராணி யைக்கொடு
வருந்திமை யோரொடு மருவி மேருவில்
கரந்தனன் இருந்தனன் கணிப்புஇல் காலமே 23

இந்திரன் மேருவில் போய் மறைந்து கொள்ளல்

தெளிவுரை : இந்திரன் அசுரர்கள் செய்யும் கொடுமையைப் பொறுக்க முடியாது துன்பம் அடைந்தான். விரைவாகத் தன் மனைவி இந்திராணியை உடன் அழைத்துக் கொண்டு வருத்தம் கொண்ட தேவர்களுடனே மேருமலையில் போய் எண்ணில்லாத காலம் மறைந்தபடி இருந்தான்.

விளக்கம் : புரந்தரன்-இந்திரன். **ஆற்றிடாது**-பொறுக்க முடியாமல். **அரந்தை**-துன்பம். **அயிராணி**-இந்திராணி. **கொடு**-கொண்டு. **மேரு**-மேருமலை. **கரந்தனன்**-மறைந்து; முற்றெச்சம். **கணிப்பில் காலம்**-கணக்கற்ற காலம். 23

188. சிறந்திடும் இந்திரன் திருவும் பொன்றியே
மறைந்துதன் மனையொடு வறியன் போய்மலை
உறைந்தனன் என்றிடின் ஒருங்கு முற்றவும்
துறந்திடும் இன்பமே துன்பம் இல்லதே.

துறந்திடும் இன்பம்

தெளிவுரை : தேவர் உலகில் சிறந்து விளங்கிய இந்திரன் தன் செல்வமானது அழிந்து மறைந்து தன் இல்லாளுடன் வறியவனாய்ப் போய் மேருமலையில் வாழ்ந்தனன். மூவுலகத்தும் இன்பத்தைத் துறந்தது; துன்பம் மிக்கது.

விளக்கம் : திருவும்-செல்வமும். **பொன்றியே**-குறையப் பெற்றே. **வறியன்**-வறியவனாக; முற்றெச்சம். **உறைந்தனன்**-தங்கினான். 24

189. வெங்கொடி வருத்துற வெருவிக் கூகைகள்
தங்கள்வன் காலம்பார்த்து ஒளித்துத் தங்கல்போல்
சிங்குற அவுணரைச் செறுக்கு நாடுளரிந்து
அங்குறு அமரர்கள் அரையற்கு ஓதுவார்.

தேவர் கூறத் தொடங்கல்

தெளிவுரை : கொடிய காக்கையானது வருத்துவதால் பேராந்தைகள் அச்சம் கொண்டு தங்களுக்கு வலிமை உண்டாகும் காலத்தைப் பார்த்து ஒளிந்து கொண்டு இருப்பதைப் போல் துன்பம் அடைந்து, அசுரரை அழிக்கும் காலத்தை ஆராய்ந்தபடி இருக்கும் தேவர்கள் தம் மன்னனான இந்திரனை நோக்கிச் சொல்லத் தொடங்கினர்.

விளக்கம் : வெங்கொடி-கொடிய காக்கை. வருத்துற-காக்கை வருத்துவதால் கூகை அஞ்சி ஓடி மறைந்து இருந்து அதனை வெல்வதற்குரிய காலத்தை எதிர்பார்த்திருக்கும். அதுபோல் தேவர் மூன்று அசுரர்க்கும் மறைந்து தக்க காலத்தை எண்ணி வாழ்ந்திருந்தனர்.

'பகல்வெல்லும் கூகையைக் காக்கை' என்ற குறளடி இங்குப் பொலிகின்றது. **தங்கள் வன்காலம்**-தங்கட்கு வலிமை ஏற்படும் காலம். **சிங்குற**-அழிவுண்டாக; தளர்ச்சியுண்டாக. **செறுக்கும்**-அழிக்கும். **அரையற்கு**-தம் அரசனான இந்திரனுக்கு. 25

190. பொய்வகை அவுணர்கள் புரியும் வெந்துயர்
எவ்வகை அகலும் என்று இதயத்து எண்ணிநீ
அவ்வகை முயன்றிலை வறிதுஅ மர்ந்தனை
உய்வகை அடியரேம் உஞற்ற வல்லமோ.

வாளா இருந்தனை!

தெளிவுரை : 'ஐயனே பொய்மையுடைய அவுணர்கள் செய்யும் கொடிய துன்பம் எப்படி அகலும் என்று நின் உள்ளத்தில் ஆராய்ந்து அதற்கு ஏற்ப நீ முயலவில்லை. இங்கே வாளா இருக்கின்றாய். நாங்கள் உய்யும் வகையைச் செய்ய வல்லமை உடையோமா!' என்று இந்திரனுக்குத் தேவர் உரைத்தனர்.

விளக்கம் : வெந்துயர்-கொடிய துன்பம். **அகலும்**-நீங்கும். **முயன்றிலை**-முயற்சி செய்யவில்லை. **உஞற்ற**-செய்ய. **வல்லமோ**-வல்லமை உடையோமோ! 26

191. என்றுஇமை யவர்பரிந்து இயம்ப இந்திரன்
பொன்திகழ் சரோருகப் பொகுட்டு வள்ளல்பால்
சென்றுநம் துயர்எலாம் தீர்த்து ஐயநீ
என்றுநாம் வேண்டுதும் வம்மின் என்றனன்.

நான்முகனிடம் கூறுவோம்!

தெளிவுரை : என்று இப்படித் தேவர்கள் வருந்தியுரைத்தனர், அதைக் கேட்ட இந்திரன், "பொன் போல் விளங்கும் தாமரை

மலரில் வீற்றிருக்கின்ற நான்முகன்பால் போய் 'ஐய' நம் துயரம் எல்லாவற்றையும் நீக்கியருள்வாயாக என்று நாம் வேண்டுவோம், வாருங்கள்!" என்று கூறினான்.

விளக்கம் : சரோருகப் பொகுட்டு-தாமரைமலர். **வள்ளல்**-நான்முகன். **தீர்த்தி**-போக்குவாயாக. **வேண்டுதும்**-வேண்டிக் கொள்வோம். **வம்மின்**-வாருங்கள். 27

வேறு

192. அம்மொழி துன்பம் கூர்இமை யோர்கேட்டு ஆர்வத்தால்
எம்இடர் போயிற்று இன்றுடன் என்ன எழுந்து எய்த
மும்மதி லோர்கட்கு அஞ்சிஒ ளித்தே முகில்ஊரும்
செம்மல் நறுங்கம லத்துஇறை தன்னுழி சென்று உற்றான்.

நான்முகனிடம் செல்லுதல்

தெளிவுரை : இந்திரன் சொன்ன சொல்லை அந்தத் துன்பம் மிக்க தேவர் கேட்டனர். இன்றுடன் என் துன்பம் எல்லாம் போயிற்று என்று எண்ணியவராய் உடன் புறப்பட்டனர். மூன்று மதில்களுக்கு அஞ்சி ஓடி ஒளிந்த மேகத்தை ஊர்தியாகக் கொண்டு ஊரும் இந்திரன் நறுமணம் பொருந்திய தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனிடம் போய்ச் சேர்ந்தான்.

விளக்கம் : துன்பம் கூர்-துன்பம் மிக்க. **இமையோர்**-தேவர். **ஆர்வத்தால்**-அன்பால். **எம் இடர்**-எம் துன்பம். **மும்மதிலோர்**-பொன் வெள்ளி இரும்பு என்ற மூன்று மதில்களையுடைய திரிபுர அசுரர்கள். **முகில் ஊரும்**-மேகத்தை ஊர்தியாக் கொண்டு இவரும். **செம்மல்**-இந்திரன். **நறுங்கமலத்து இறை**-நறுமணம் உடைய தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன். **உழி**-ஏழாம் வேற்றுமையுருபு. 28

193. உற்றவன் உம்ப ருடன்சர ணத்தில் உறத்தாழுஉ
நற்றுதி யோடுந லிந்துஅவண் நிற்ப நறுங்கஞ்சப்
பொன்தவிசு அண்ணல் தெரிந்து முகங்கள் புலர்ந்துள்ளீர்
சொற்றிடு நெஞ்சில் அடுத்து அகலாதுறு துன்புஎன்றான்.

நான்முகன் வினவல்

தெளிவுரை : அங்ஙனம் நான்முகனை அடைந்த இந்திரன் தேவருடன் கூடி அந்நான்முகனின் தாளில் பொருந்த வணங்கினான். நல்ல துதிகளையும் கூறி அசுரர்க்கு வருந்தியவர் நின்றனர். நறுமணம் உடைய தாமரையான அழகிய இருக்கையில் வீற்றிருக்கும் நான்முகன் 'நீங்கள் முகம் வாடப் பெற்றுள்ளீர்! உங்கள் மனத்தில் உண்டான அகலாத துன்பத்தை எனக்குக் கூறுங்கள்' என்று சொன்னான்.

விளக்கம் : உற்றவன்-நான்முகனை அடைந்தவன். **உம்பர்**-தேவர். **சரணம்**-திருவடி. **தாஅழூஉ**-வணங்கி; 'செய்யூ' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். **நற்றுதி**-நல்ல துதியுடன். **நறுங்கஞ்சம்**-நறுமணம் உடைய தாமரை மலர். **பொன் தவிசுஅண்ணல்**-அழகிய இருக்கையில் வீற்றிருக்கும் நான்முகன். **புலர்ந்துள்ளீர்**-வாடப்பெற்றுள்ளீர். **சொற்றிடு**-கூறுவாயாக. **நெஞ்சில் அடுத்து அகலாது உறு துன்பு**-மனத்தால் அகலாது பொருந்திய உள்ள துன்பம். 29

வேறு

194. என்றலும் மகவான் சொல்வான்
இறைவநின் அருளின் நோன்மை
அன்றுறும் அவுணர் எம்மை
அலைப்பநைந்து உள்ளம் மாழ்கி
மின்திகழ் முகில்கண்டு அஞ்சும்
வியன்சிறைக் குயிலின் பொன்னங்
குன்றிடை இன்று காறும்
குறுகினோம் கரந்து மன்னோ.

தாம் மறைந்து வாழ்ந்ததைத் தேவர் கூறுதல்

தெளிவுரை : என்று நான்முகன் கூறினான். அப்போது இந்திரன் சொல்லலானான். 'இறைவ! நின் அருளால் வலிமையை அடைந்த வித்துன்மாலி, கமலாட்சன், தாரகாட்சன் என்ற மூன்று அசுரர்கள் எம்மை வருத்தினர். அதனால் துன்பத்துள் ஆழ்ந்து மின்னல் விளங்கும் மேகத்தைக் கண்டு அஞ்சும் பெரிய இறகையுடைய குயிலைப் போன்று, பொன்மயமான மேருமலையில் இன்று நாங்கள் மறைந்து வாழ்கின்றோம்.

விளக்கம் : மகவான்-இந்திரன். **நின் அருளின் நோன்மை**-நின் அருளால் உண்டான வலிமை. அதாவது நான்முகன் தந்த வரத்தால் உண்டான வலிமை. **அன்றுறு**-துன்புறுத்தும். **அவுணர்**-வித்துன் மாலி, கமலாட்சன், தாரகாட்சன் ஆகிய அசுரர் மூவர். **அலைப்ப**-வருந்தி. **மின்திகழ் முகில்**-மின்னல் விளங்கும் மேகம். **சிறைக் குயிலின்**-இறகுகளையுடைய குஞ்சுகளைப் போல. **பொன்னங்குன்றிடை**-பொன்மயமான இந்த மேருமலையில். **இன்றுகாறும்**-இன்று வரையில். **கரந்து குறுகினோம்**-மறைந்து வாழ்ந்து வருகின்றோம். **மன்னோ**-மன், ஓ-அசைகள். 30

195. துன்னிய அசுரர் தம்மைத்
தொலைத்தினி எமைப்பு ரப்பான்
பன்னுதும் எனவந்து உற்றேம்
பாரதி உடைய நீயே
பின்னல்அம் கடல்க டத்தின்
அன்றியார் இயற்றவல்லார்
நின்அருள் புரிதி என்னச்
சதுர்முகன் நிகழ்த்து கின்றான்.

எமக்கு அருளுக!

தெளிவுரை : "எம்மை அடைந்து வருத்தும் அசுரரை அழித்து இனி எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறிக் கொள்ள இங்கு வந்தோம். கலைமகளை (மரக்கலத்தை)யுடைய நீயே ஒன்றுடன் ஒன்று பின்னி எழுந்து வரும் அலைகளையுடைய (துன்பக்) கடலைக் கடக்கச் செய்ய வல்லாய் நின்னையே அல்லாது எவர் இதை இயற்ற வல்லார். நின்னருளை எமக்குக் காட்டிடுவாயாக" என்று இந்திரன் முதலிய தேவர்கள் வேண்டினர்.

விளக்கம் : தொலைந்து-அழித்து. **எமை**-எங்களை. **புரப்பான்**-காத்தற்கு. **பன்னுதும்**-கூறுவோம். **பாரதி**-கலைமகள்; மரக்கலம். **பின்னலங்கடல் கடத்தி**-பின்னல்+அம்+கடல்+கடத்தி. ஒன்றன்பின் ஒன்றாய் பின்னிவரும் துன்பக்கடலைக் கடக்கச் செய்க. கடத்தி-தன்வினையாயினும் பிறவினைப் பொருள் கொள்ளப்பட்டது. **சதுர்முகன்**-நான்முகன். **நிகழ்த்துகின்றான்**-சொல்லத் தொடங்கினான். 31

196. புரத்தின் ஒன்று அவுணர் மிக்க
பொருவலி எம்மான் நீக்கும்
தரத்ததன்று அடைகள் மூய
தடத்தலர்ந்து இலங்குகின்ற
விரைத்ததன் குவளை அன்ன
விழியுடல் கடவுள் நுந்தம்
கருத்துவெம் துயரம் எல்லாம்
களைகுவன் கமலக் கண்ணன்.

திருமாலே துன்பத்தைப் போக்க வல்லவர்!

தெளிவுரை : 'மூன்று புரங்களையுடைய அசுரர்களின் மிக்க பெருவலிமை என்னால் நீக்கும் தன்மை உடையதன்று. இலைகள் படர்ந்த நீர்நிலையில் மலர்ந்து விளங்குகின்ற நறுமணமுடைய குளிர்ந்த குவளை மலரைப் போன்ற உடல் முழுவதும் கண்களையுடைய இந்திரனே! உம் மனத்துள் பொருந்திய கொடிய துன்பத்தையெல்லாம் தாமரைபோன்ற கண்களையுடைய திருமாலே போக்க வல்லவர் ஆவார்.

விளக்கம் : புரத்தில் ஒன்று அவுணர்-மூன்று புரங்களில் வாழும் அசுரர். **பொருவலி**-போரிடும் வலிமை. **எம்மான்**-எம்மால். **தரத்ததன்று**-தன்மையுடையது அன்று. **அடைகள்**-இலைகள். **மூய**-படர்ந்த. **தடத்து அலர்ந்து இலங்குகின்ற**-நீர்நிலையில் மலர்ந்து விளங்குகின்ற. **விரைத் தண் குவளை**-நறுமணம் உடைய குளிர்ந்த குவளை மலர். இந்திரன் உடலில் ஆயிரம் கண்கள் உள்ளன. அவை குவளை மலர் போன்றவை. **கடவுள்**-இந்திரனே. **வெந்துயரம்**-கொடிய துன்பம். **களைகுவன்**-போக்க வல்லவன். **கமலக்கண்ணன்**-தாமரை போன்ற கண்களையுடைய திருமால். என்னால் அவுணர் செய்யும் துன்பத்தைப் போக்க இயலாது. திருமாலே அதைப் போக்கும் வல்லமை உடையவர் ஆவார்.' என்று கூறினான் நான்முகன். 32

197. என்றுஅயன் இந்தி ராதி
இமையவர்க் கொண்டு மால்பால்
சென்றடி வணங்கி அன்னோர்
திருஇழந்து அவுணர் தம்மால்

வன்துயர் உழக்கு மாறு
மனம்உளைந்து இயம்பித் தீய
புன்தொழில் அசுரர்ச் சாடிப்
புரந்தருள் புனித என்றான். 33

அசுரரைச் சாடி இமையவரைக் காத்தருளுக!

தெளிவுரை : என்று நான்முகன் கூறி இந்திரன் முதலிய தேவர்களை அழைத்துக் கோண்டு திருமாலிடம் போனான். அப்பெருமான் அடிகளில் வணங்கினான். தேவர்கள் தம் செல்வத்தை இழந்து அவுணரால் அடையும் துன்பத்தை அடையும் விதத்தையெல்லாம் எடுத்து விளக்கமாகக் கூறி 'இழிந்த செயலையுடைய அரக்கரை அழித்து அருளவேண்டும் புனித' என்று நான்முகன் உரைத்தான்.

விளக்கம் : இந்திரனாதி-இந்திரன் முதலிய. **மால்பால்**-திருமாலிடம். **திருஇழந்து**-செல்வத்தை இழந்து. **வன்துயர்**-வலிய துன்பம். **உழக்குமாறு**-வருந்தும் தன்மையை. **மனம் உறைந்து**-உள்ளம் வருந்தி. **புன்தொழில்**-இழிந்த செயலையுடைய. **புரந்தருள்**-காத்தருளுக. புனித-தூயவனே. 33

198. நாரணன் இதனைக் கேளா
நவிலும்பற் றலர்கள் தம்மைப்
போரினில் உபசத் துக்கள்
பொருதுஅழித் திடுவர் என்ன
ஆரணம் உரைத்தல் தன்னால்
அனையரை விடுத்து மூன்று
வீரரும் மடியச் செய்தும்
விரையஎன்று இதனைச் செய்வான்.

உபசத்துக்களை அசுரரை அழிக்க அனுப்புதல்

தெளிவுரை : திருமால் பிரமன் கூறியதைக் கேட்டான். 'நீவிர் கூறும் பகைவரை உபசத்துக்கள் போரிட்டு அழித்திடுவர்' என்று உரைத்தார். உரைத்து 'வேதத்தால் உரைக்கப்பட்ட முறைப்படி அந்த உபசத்துக்கள் என்ற மந்திர.தேவதைகளை அனுப்பி மூன்று அசுரர்களையும் விரைவாக மடியச் செய்து விடுவோம்' என்று கூறிப் பின்வரும் இதைச் செய்யலானார்.

விளக்கம் : கேளா-கேட்டு; வினையெச்சம். **நவிலும்**-கூறப்படும். **பற்றலர்கள் தம்மை**-மூன்று பகைவரை. **உபசத்துக்கள்**-மந்திரங்கள். இங்கு அம்மந்திரத்திற்குரிய தேவதைகள். **பொருது அழித்திடுவர்**-போரிட்டு அழித்து விடுவர். **ஆரணம் உரைத்தல் தன்னால்**-வேதத்தில் கூறப்பட்ட முறைப்படி. **அனையரை**-அந்த உபசத்துக்களை. **விடுத்தும்**-அனுப்புவோம். **செய்தும்**-செய்வோம். **செய்வான்**-செய்யலானார். 34

199. மனத்தினில் உபசத் துக்கள்
வருகஎன்று உன்ன மாயோன்
நினைத்தனன் என்ன அன்னோர்
நேர்ந்தனர் நிற்ப நீவிர்
சினத்துஎயில் அவுணர் தம்மைச்
செற்றுவா னவர்கள் இன்னல்
அனைத்தையும் அகற்றும் என்றான்
படிஅளந்து அளிக்கும் அண்ணல்.

உபசத்துக்களுக்குத் திருமால் கட்டளை இடல்!

தெளிவுரை : உலகத்தை அளந்தருளிய திருமால் தன் மனத்துள் உபசத்துக்கள் இங்கு வருவாராக என்று எண்ணினான். நம்மைத் திருமால் நினைத்து அழைத்தனர் என்று உபசத்துக்கள் எண்ணி அவர் முன் வந்து நின்றனர். அவர்களைத் திருமால் நோக்கி, 'சினத்தையுடைய எயில் மூன்றையுடைய அவுணரை அழித்துத் தேவர்களின் துன்பத்தைப் போக்குவீர்' என்று உரைத்தான்.

விளக்கம் : உன்ன-நினைக்க. **மாயோன்**-திருமால். **நேர்ந்தனர்**-திருமாலின் முன் வந்தனர். **அன்னோர்**-உபசத்துக்கள். **சினத்து எயில் அவுணர்**-எயிலையுடைய சினம் கொண்ட அசுரர். **செற்று**-அழித்து. **இன்னல்**-துன்பம். **அகற்றும்**-போக்குவீர். **படிஅளந்து அளிக்கும் அண்ணல்**-உலகத்தை அளந்த திருமால். **அண்ணல்**-பெருமையுடையவன். 35

200. அன்னவர் அதனைக் கேளாச்
செல்லுதும் அவுணர்ச் சாட
என்னலும் மகிழ்ந்து தன்பால்
இருங்கணந் தனில்எண் ணில்லார்

துன்னிய அனிக மாகத்
தூண்டினன் சென்மின் என்னப்
பன்னக சயனன் பொன்தாள்
பணிந்தனர் போயி னாரால்.

உபசத்துக்கள் செல்ல விழைதல்

தெளிவுரை : அந்த உபசத்துக்கள் என்ற மந்திரத் தேவதைகள், 'தாங்கள் சொன்ன வண்ணமே அவுணர்களை அழித்து வரப் போகிறோம்' என்று உரைத்தனர். அப்போது அதைக் கேட்டு மகிழ்ந்து. திருமால் தன்னிடம் உள்ள பெரிய பூதகணங்களில் எண்ணற்றவற்றைப் பொருந்திய படையாகத் தூண்டி 'இவர்களுடன் செல்லுங்கள்' என்று இயம்பினான். அவர்கள் பாம்புப்படுக் கையையுடைய திருமால் அழகிய திருவடியை வணங்கிச் சென்றனர்.

விளக்கம் : கேளா-கேட்டு. **செல்லும்**-போவோம். **இருங்கணம்**-பெரிய பூத கணங்கள். எண்ணில்லார் துன்னிய **அனிகமாக**-எண்ணற்றவர் பொருந்திய படையாக. **தூண்டினன்**-தூண்டி. **சென்மின்**-செல்லுங்கள். **பன்னகசயனன்**-பாம்புப்படுக் கையை உடைய நாராயணன். **பொற்றாள்**-அழகிய திருவடி. **போயினரால்**-போயினர்+ஆல்; ஆல்-அசை. **பணிந்தனர்**-வணங்கி; முற்றெச்சம். 36

201. தண்டு,வேல்,வயிர ஒள்வாள்,
சரம் பொழி சாபம், ஆழி,
பிண்டிபா லங்கள், சூலம்,
பேர்எழுக் கணிச்சி, ஆதி
கொண்டபா ணிகளோடு அண்டம்
குலுங்கஆர்த்து எழுந்து வேக
சண்டமா ருதம்போல் நேர்ந்து
சமர்த்தொழில் புரியச் சென்றார்.

உபசத்துக்கள் படைக்கலங்களுடன் போதல்

தெளிவுரை : தண்டு, வேல், வயிரம் பதித்த ஒளியுடைய வாள், அம்பு எய்யும் வில், சக்கரம், பிண்டி, பாலங்கள், சூலம், பெரிய

எழு, கணிச்சி முதலிய படைக்கருவிகள் கொண்ட கைகளுடன் உலகம் நடுங்க ஆர்த்து எழுந்து வேகத்தையுடைய சண்டமாருதம் போன்று எதிர்த்துப் போர்ச் செயல் செய்யப் போயினர்.

விளக்கம் : தண்டு-தண்டாயுதம். **ஒள்வாள்**-ஒளியுடைய வாள். **சரம்பொழி சாபம்**-எய்யும் வில். **ஆழி**-சக்கரம். **பிண்டிபாலம்**-ஒருவகை ஆயுதம். **பாணிகளோடு**-கைகளுடனே. **ஆர்த்து எழுந்து**-ஆரவாரித்து எழுந்து. **வேக சண்டமாருதம்**-மிக்க வேகம் உடைய சூறைக்காற்று. **சமர்த்தொழில்**-போர்ச் செயல். 37

202. பேர்எயில் மீதில் நேமிப்
பிரான்விடு தானை நீத்தம்
வாரிதி தன்னை நாடி
வருநதி போலச் செல்ல
வேர்உறு கடல்எ திர்த்தால்
என்னஆண் டமரும் செங்கண்
காருடல் அவுணர் கேட்டுக்
கதும்எனச் சமரின் நேர்ந்தார்.

அவுணர் போரிட வருதல்

தெளிவுரை : பெரிய மும்மதில் மீது திருமால் அனுப்பிய படை வெள்ளம் கடலை நாடி வரும் ஆற்றைப்போல் செல்லக் கடலானது எதிர்த்து வந்தாற்போல் அப்புரங்களில் உள்ள சிவந்த கண்ணையுடை கரியவுடலையுடைய அவுணர் கேட்டு விரைவாகப் போரிட வந்தனர்.

விளக்கம் : பேர் எயில்-பெரிய மூன்று மதில்கள் பொருந்திய முப்புரங்கள். **நேமிப்பிரான்**-சக்கரப்படையை உடைய திருமால். **தானைநீத்தம்**-படை வெள்ளம். **வாரிதி**-கடல். **வருநதி**-வருகின்ற ஆறு. **ஆண்டு அமரும்**-திரிபுரங்களில் வாழ்கின்ற. **செங்கண் கால் உடல் அவுணர்**-சிவந்த கண்ணையுடைய கரிய உடல் பொருந்திய அவுணர். **கதும்என**-விரைய; **கதும்**-விரைவுக் குறிப்பு. **சமர்**-போர். **நேர்ந்தார்**-எதிர்த்தார், வந்தார். 38

203. வில்உமிழ் சரமும் தண்டும்
வேல்களும் மழுவும் வாளும்
கல்உறழ் எழுவும் தாளும்
கரங்களும் தலையும் சிந்தச்
செல்உமிழ் முகிலின் இன்று
சிந்தினர் அவுணர் அன்ன
மல்லலம் படைகள் ஆர்த்து
மற்றவர் தாமும் தூர்த்தார்.

படைக்கருவிகளை எறிதல்

தெளிவுரை : வில்கள் எய்யும் அம்புகளும், தண்டும், வேல்களும் மழுவாயுதமும் வாளும், கல்லை ஒத்த எழுவும் தோளும், கைகளும், தலையும் சிந்துமாறு இடியை உமிழும் மேகத்தினின்று சிந்தினர் அவுணர் என்னும்படி வளப்பம் பொருந்திய படைகள். ஆரவாரம் செய்து உபசத்துக்கள் தாமும் படைக்கருவிகளை எய்தனர்.

விளக்கம் : சரம்-அம்பு. **செல்**-இடி. **முகில்**-மேகம். **மல்லல் அம் படைகள்**-வளம் பொருந்திய அழகிய படைக்கருவிகள். **தூர்த்தார்**-படைக்கருவிகளை எறிந்து நிறைத்தார். 39

204. இத்தகை உடன்று வெம்போர்
இருதிறத் தவரும் ஆற்ற
மத்தவெங்களிறு போலும்
மறவருக்கு உலகம் உண்ட
வித்தகன் விடுத்த சேனை
வெந்இட அதனைக் காணா
அத்தலை நின்ற வானோர்
அலக்கண்உற்று ஓடிவந்தார்.

தேவர் படை தோற்றது!

தெளிவுரை : இப்படி இருதிறத்துப் படைகளும் எதிர்த்துக் கொடிய போரைச் செய்தன. மதத்தையுடைய ஆண் யானை போன்ற வீர அவுணர்க்கு, கண்ணனாக அவதரித்த போது உலகத்தை உண்டருளிய திருமால் அனுப்பிய படைகள் தோற்று ஓடின. அதைக் கண்ட அங்கு நின்ற தேவர்கள் துன்பத்தை அடைந்து ஓடி வந்தார்கள்.

விளக்கம் : வெம்போர்-கொடிய போர். **உடன்று**-எதிர்த்து. **மறவர்**-அவுணர். **வெங்களிறு**-கொடிய ஆண் யானை. **உலகம் உண்ட வித்தகன்**-திருமால். **வெந்இட**-முதுகாட்டி ஓட; தோற்க. **காணா**-கண்டு. **அலக்கண்**-துன்பம். **அத்தலை**-அங்கு; போர்க்களத்தில். 40

205. வந்தவர் உயங்கி மாயோன்
மலர்அடித் தலத்து வீழ்ந்து
சுந்தர வரவில் துஞ்சும்
தோன்றல்நீ விடுப்பப் போனார்
வெந்திறல் அவுண ரோடும்
போர்த்தொழில் விளைத்து வன்மை
சிந்தினர் இரியல் போனார்
செயும்செயல் இனியாது என்றார்.

நிகழ்ந்ததைத் திருமாலுக்குக் கூறுதல்

தெளிவுரை : அவ்வாறு வந்தவர் திருமாலின் மலர் போன்ற அடியில் வீழ்ந்து வணங்கினர். 'அழகிய ஆதிசேடன் என்ற பாம்பில் அறிதுயில் கொள்ளும் பெருமானே! நீ அனுப்பச் சென்ற உபசத்துகள் முதலியவர் கொடிய ஆற்றலையுடைய அவுணரோடு போர்த் தொழிலைச் செய்து இளைத்து வலிமை குன்றித் தோற்றனர். இனிச் செய்யக் கூடிய செயல் யாது?' என்று இந்திரன் முதலிய தேவர்கள் உரைத்தனர்.

விளக்கம் : உயங்கி-வருந்தி. **மலரடித் தகைத்து**-தாமரை மலர் போன்ற அடிகளில். **சுந்தர அரவில்**-அழகிய ஆதிசேடன் என்ற பாம்பில். **துஞ்சும்**-அறிதுயில் கொள்ளும். **விடுப்ப**-அனுப்ப **வெந்திறல்**-கொடிய ஆற்றல். **விளைத்து**-செய்து. **வன்மை சிந்தினர் போனார்**-வலிமை குன்றப் பெற்றுத்தோற்று ஓடினர். **செயும்**-செய்யும்.

206. மாயவன் வினவி உள்ளம்
மாழ்கி வெய்து உயிர்த்து வன்கண்
தீயவர் சிவலிங் கத்தை
அருச்சனைச் செயலால் யாவர்

ஆயினும் வெல்லற்கு ஒண்ணா
எனநினைந்து அழுங்கி நிற்கும்
சேயுயர் விசும்பி ருக்கும்
தேவரை நோக்கிச் சொல்வான்.

திருமால் கூறத் தொடங்குதல்

தெளிவுரை : திருமால் இந்திரன் முதலியவர் கூறியதைக் கேட்டார். மனம் வருந்தினார். வெப்பமாகப் பெருமூச்சுவிட்டார். வலிய கொடிய அசுரர் சிவலிங்கத்தை வழிபட்ட செயலால் யாவராயினும் வெல்வதற்கு முடியாது என்று எண்ணி வருந்தி நிற்கும் மிக வுயர்ந்த வானத்தில் வாழும் இயல்புடைய தேவரைப் பார்த்துத் திருமால் கூறலானார்.

விளக்கம் : மாயவன்-திருமால். **வினவி**-கேட்டு. **மாழ்கி**-வருந்தி. **வெய்து உயிர்த்து**-பெருமூச்சு விட்டு. **வன்கண் தீயவர்**-அஞ்சாத கொடிய அசுரர். **அருச்சனை**-வழிபாடு. **ஒண்ணா**-இயலாத. **சேயுயர்**-மிக உயர்ந்த. **விசும்பு**-வானம். 42

207. பன்ன கத்தினால், அடுஞ்சின விலங்கினால், பசாசால்,
துன்ன வக்கிர கங்களால், பிணிகளின் தொடர்பால்,
மன்ன ரின்கொடி யோர்களால், கரவரால் மருவும்
இன்னல் மெய்ச்சிவ லிங்கபூ சனையினோர்க்கு இயையா.

சிவபூசை செய்பவர்க்குப் பாம்பு முதலியவற்றால் துன்பம் உண்டாகாது

தெளிவுரை : பாம்பினாலும், மிக்க சினம் கொண்ட விலங்குகளாலும், பிசாசுகளாலும், கொடிய வக்கிரங்களாலும் நோய்களின் தொடர்பாலும், மன்னராலும், கொடியவராலும், வஞ்சகராலும் உண்டாகும் துன்பங்கள் உண்மையான சிவலிங்க பூசை செய்பவர்க்கு உண்டாக மாட்டா.

விளக்கம் : பன்னகம்-பாம்பு. **அடுஞ்சின விலங்கினால்**-கொல்லும் சினம் உடைய விலங்கால். **பசாசு**-பேய். **துன்னவக்கிரம்**-துர்வக்கிரம். **கரவரால்**-வஞ்சகரால். **இன்னல்**-துன்பம். **இயையா**-பொருந்தார். சிவலிங்க பூசை செய்பவர்க்குப் பாம்பு முதலியவற்றால் துன்பம் உண்டாகா. 43

208. பாவ கோடிகள் பயின்றிடு பதகரே எனினும்
தேவ தேவனைச் சிவலிங்கத்து அருச்சனை செய்வோர்
தாவில் மாதவப் புண்ணிய ரேஅவர் தம்பால்
மேவு வானலன் அந்தகன் தனது உளம்வெருவி.

தெளிவுரை

பாவங்கள் கோடிக்கணக்கானவற்றைச் செய்யும் பாவிகளாயினும் தேவதேவனான சிவலிங்க வழிபாடு செய்பவர் குற்றம் அற்ற சிறந்த தவத்தையுடைய புண்ணியரே ஆவார். அவர்களிடம் இயமன் உள்ளம் கலங்கி அஞ்சி உயிரைக் கொண்டு போதற்கு வாரான்.

விளக்கம் : பதகர்-பாவியர். **தேவதேவனை**-தேவர்க்குத் தலைவனான சிவபெருமானை. **தாவில்**-தா+இல்; குற்றம் அற்ற. **அந்தகன்**-இயமன். **மேவுவானலன்**-பொருந்தமாட்டான்; நெருங்கமாட்டான். **வெருவி**-அஞ்சி. 44

209. ஆத லால்எயில் மூன்றுடை அவுணர்தாம் அரனைப்
பூதி சாதனம் புனைந்துபூ சனை செயும் அளவும்
யாதும் ஓர்செய லான்முடி வெய்திலர் யாம்ஓர்
போத சூழ்ச்சியின் அவர் அருச்சனைவிடப் புரிதும்.

அவுணர்பூசை செய்வதைக் கைவிடச் செய்வோம்

தெளிவுரை : 'ஆதலால் மூன்று கோட்டைகளையுடைய அசுரர்கள் சிவபெருமானை விபூதி முதலியன பூண்டு கொண்டு பூசை செய்யும் அளவும் யாதும் ஓர் செயலால் முடிவினை அடையமாட்டார். ஆகவே, யாங்கள் ஓர் தந்திரத்தால் அக்கொடியவர் சிவபூசை செய்வதைக் கைவிடச் செய்வோம்' என்று திருமால் உரைத்தார்.

விளக்கம் : எயில்மூன்று உடை-மூன்று மதில்கள் பொருந்திய கோட்டைகளையுடைய. **அரன்**-சிவபெருமான். **பூதிசாதனம் புனைந்து**-திருநீறு, உருத்திராக்கம் முதலிய சிவசாதனங்களை அணிந்து கொண்டு. **பூசனை**-சிவலிங்க வழிபாடு. **முடிவு எய்திலர்**-முடிவை அடையமாட்டார். **போதசூழ்ச்சியின்**-அறிவு பொருந்திய தந்திரத்தால். **அருச்சனைவிட**-பூசனையைக்கைவிட. **புரிதும்**-செய்வோம்; தன்மைப்பன்மை, வினைமுற்று 45

210. நீங்கு நும்மனத் துயர்சுரர் காள்என நிகழ்த்தி
ஓங்கு மாமர கதக்கிரி ஒன்றுஇரு சுடரும்
பாங்கு வைத்தெனக் குருமணியாழி வெண்பணிலம்
தாங்கு மாயவனார் அதற்கு இனையன சாற்றும்.

திருமால் உபாயம் கூறத் தொடங்குதல்

தெளிவுரை : 'எனவே, தேவர்களே! உங்கள் மனத்துள் கொண்ட துன்பத்தைக் கைவிடுங்கள்' என்று திருமால் உரைத்தார். உயர்ந்த பெரியமரகதத்தால் ஆன மலை ஒன்று இருபக்கங்களிலும் இருசூரிய சந்திரர்களையும் பக்கத்தில் வைத்தாற் போன்ற நிறம் பொருந்திய சக்கரமும் வெண்மையான சங்கும் தாங்கும் திருமால் அசுரரைக் கொல்வது பற்றிப் பின்வருமாறு உரைக்கலானார்.

விளக்கம் : மனத்துயர்-உள்ளத்தில் உண்டாகும் துன்பம். **சுரர்கள்**-தேவர்களே. **மாமரகதக்கிரி**-சிறந்த மரகதமணியால் ஆன மலை. மரகதமலையின் இருபக்கங்களிலும் கதிரவனும் சந்திரனும் பொருத்திவைத்தாற் போல் சக்கரம் சங்கும் பொருந்தி விளங்கின. **பாங்கு**-பக்கம். **ஆழி**-சக்கரம். **வெண்பணிலம்**-வெண்மையான சங்கு. **தாங்கும்**-சுமக்கும். **மாயவனார்**-திருமால். **அதற்கு**-அசுரரைக் கொல்வதற்கு. **இனையன**-பின் வருவனவற்றை. 46

வேறு

211. அற்புடை மகிணர்தம் ஆவி யாகிய
கற்புடை மங்கையர் கருதிற் பலவகைப்
பொற்புடை உலகெலாம் பொன்று மாறுமாம்
வற்புடை முனிவரின் வலியர் அன்னரே.

முனிவரை விட வலியவர் கற்புடை மங்கையர்

தெளிவுரை : அன்புகொண்ட கணவரின் உயிர் போன்ற கற்புடைய மங்கையர் எண்ணினால், பலவகையான அழகான உலகம் எல்லாம் பொன்றுதற்குரிய அழிவு நீங்கும். அவர்கள் தவவலிமையுடைய முனிவரைவிட வலியவர் ஆவார்.

விளக்கம் : அற்புடை-அன்பு+உடை. **மகிணர்**-'மகிழ்நர்' என்பது 'மகிணர்' என வந்தது. கணவர் என்பது பொருள். **ஆவி**-உயிர். **கருதின்**-நினைப்பாராயின். பொற்புஉடை அழகு உடைய. பொன்றும் **ஆறுமாம்**-அழியும் வழியாகும். **வற்புடை**-வன்மையுடைய. **அன்னர்**-கற்புடை மங்கையர். 47

212. கணவரைத் தொழப்படும் கடவுள் என்றுளும்
பணஅரவு அல்குலார் பணித்தது ஒன்றையான்
மணமலர்த் தவிசுஅயன் மகிழ்ந்து இழைத்தலோ
இணையில் எம் கருத்தனாம் இறையும் செய்யுமால்.

கற்புடைய மங்கையர் இடும் கட்டளையை இறைவரும் செய்வார்

தெளிவுரை : தம் கணவரை வழிபடும் கடவுள் என்று நினைத்து வணங்கும் பாம்பின் படம் போன்ற அல்குலையுடைய கற்புடைய மங்கையர் பணித்த ஒன்றைத் திருமாலான யானும் தாமரை மலரை இருக்கையாகக் கொண்ட நான்முகனும் செய்தல் மட்டுமோ! நிகர் அற்ற எம் தலைவனான சிவபெருமானும் செய்யக் கடவன்.

விளக்கம் : கணவரே தெய்வம் என்று வணங்குபவர் கற்புடை மங்கையர். அத்தகையவர் இடும் கட்டளையைத் திருமாலான யானும் நான்முகனும் மட்டுமோ, சிவபெருமானும் செய்து முடிக்கும் கட்டுப்பாடு உடையவன் ஆவான் என்பது கருத்து.

> *"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்*
> *பெய்எனப் பெய்யும் மழை"*

என்றகுறள் இங்குப் பொலிவுறுகிறது.

பணவர வல்குலார்-பணம்+அரவு+அல்குலார். பாம்பின் படத்தைப் போன்ற அல்குலையுடைய மங்கையர். **செய்யுமால்**-செய்யும்+ஆல்; ஆல்-அசை. 48

213. புனிதமெய்க் கற்புஅறாப் பொருவுஇல் மாதரார்
மனமகிழ்வு உற்றிடின் வராத நன்குஇலை
சினமுறப் பெற்றிடில் தீங்கும் அன்னதே
அனையவர் தன்மையார் அறியக் கூறுவார்?

மாதரால் விளைவன

தெளிவுரை : தூய மெய்யான கற்பு நீங்கப் பெறாத ஒப்பில்லாத மங்கையர் உளளம் மகிழ்ந்தாரானால் ஒருவனுக்கு வாராத நன்மை

ஏதுமில்லை அவர்கள் சினம் கொள்வாராயின் விளையும் தீமையும் அத்தன்மையுடையதே ஆகும். அவர்கள் தன்மை முழுவதையும் யார் அறியக் கூறிட வல்லார்?

விளக்கம் : கற்பறா-கற்பு+நீங்காத. பொருவில்மாதரார்-பொருவு+இல்+மாதரார்; ஒப்பில்லாத மங்கையர். **நன்கு இலை**-நன்மை இல்லை. 49

214. மிடியினர் குணமிலர் விருத்தர் நோயினர்
வடிவிலர் உறுப்புஇலர் வஞ்சர் மூடர்வெங்
கொடியவர் ஆயினும் கொழுநர் தம்மிடை
மடிவிலர் அன்புகற் புடைய மாதரே.

கற்புடை மங்கையர் இயல்பு

தெளிவுரை : வறுமையுடையவர், நற்குணம் இல்லாதவர், முதியவர், பிணியுடையவர், அழகற்றவர், நல்ல உறுப்பு இல்லாதவர் (முடம் பட்டவர்) வஞ்சர், மூடர், மிகக் கொடியவர் ஆயினும் கற்புடைய மங்கையர் தம் கணவரிடை அன்பு குறையப்பெற்றார்.

விளக்கம் : மிடியினர்-வறியவர். **குணமிலர்**-நற்குணம் இல்லாதவர். **விருத்தர்**-முதியவர். **கொழுநர்**-கணவர். **மடிவிலார் அன்பு**-அன்பு காட்டுவதில் குறையார். 50

215. இத்திறக் கற்பினர் எயில்கள் மூன்றுடைக்
குத்திரக் கொடியவர்க் குறுகும் மாதரார்
அத்திறத் தினும்அடற்கு அரியர் அன்னகற்பு
எத்திறத் தினும் ஒழித்து எய்துஎன்று ஏவினான்.

நாராயணன் கூறி முடித்தல்

தெளிவுரை : "இத்தகைய கற்புடைய மங்கையர் மூன்று மதில்களையுடைய கொடிய அவுணரை அடைந்துள்ளனர். அதனால் அவர்கள் வெல்லுதற்கு அரியவர். அம்மங்கையரின் கற்பை எப்படியேனும் கெடுத்துவிடுக!" என்று நாராயணன் கூறினான்.

விளக்கம் : எயில்கள் மூன்றுடை-மூன்று மதில்களை உடைய. **குத்திரர்**-வஞ்சகர். **அத்திறத்தினும்**-அக்காரணத்தாலும். **அடற்குவுரியர்**-வெல்வதற்கு அரியவர் ஆவர். **எத்திறத்தினும்**-எப்படியேனும். 51

216. நாரணன் இவைசொல நார தப்பெயர்
ஆரண முனிவரன் அரும் புணர்ப் பினால்
வாரணம் அனையவர் மாதர் கற்பெலாம்
காரண அகற்றுவன் கடிது என்று ஏகினான்.

நாரதன் கூறுதல்

தெளிவுரை : திருமால் மேற்கண்டவாறு கூற, நாரதன் என்ற பெயரையுடைய முனிவர், "காரணனே! அரிய மாயத்தால் யானையைப் போன்ற அசுரரின் கற்பு முழுவதையும், நான் விரைவில் போய் அகற்றி விடுவேன்" என்று கூறிப்போனான். 52

வேறு

217. முனிசென்று அதன்பின் இமையோர் துவன்றும்
அவைஉற்ற மாயை முதல்வன்
தனிஅங்கு எழுந்து புரவாணர் தங்கள்
சிவலிங்க பூசை தவிரும்
வினை ஒன்று இழைப்பல் எனவே நினைந்து
மறைகட்கு வேறு தருநூல்
மனம் ஒன்றும் வண்ணம் உரைசெய்து புத்த
வடிவோடு கொண்டு வருவான்.

திருமால் புத்த வடிவு கொள்ளல்

தெளிவுரை : நாரத முனிவர் அகன்று போன பின்பு தேவர்கள் நெருங்கிய அவ் அவையில் இருந்த மாயையில் வல்ல திருமால் தனியே போய் "மூன்று புரங்களில் வாழும் அவுணர்கள் சிவலிங்க பூசையைச் செய்யாமல் கைவிடும்படி செயல் ஒன்றைச் செய்வேன்" என்று நினைந்து வேதங்களுக்கு மாறுபட்ட நூல் மனத்தில் பொருந்தும் வண்ணம் உரை கூறிப் புத்தர் வடிவு கொண்டு சென்றார்.

விளக்கம் : முனி-நாரத முனிவர். **இமையோர் துன்று அவை**-தேவர்கள் கூடியுள்ள சபை. **மாயை முதல்வன்**-திருமால், மாயவன். **புரவாணர்**-முப்புரங்களில் வாழும் அவுணர். **தவிரும்**-நீங்கும். **இழைப்பல்**-செய்வேன். **மறைகட்கு வேறு தருநூல்**-வேதங்களுக்கு மாறுபட்ட கருத்தைத் தரும் நூல். **உரைசெய்து**-மனம் கொண்டு. 53

218. மறம்ஒன்று கின்ற வாரணங்கள் தம்மில்
வரும்அம் புயக்கண் இறைவன்
திறம்ஒன்று புத்தன் அருகன் தயங்கு
சினன்என்ன அங்கண் அடையா
அறம்என்று வஞ்ச மதிநூல் மருட்டி
அறைகின்ற காலை அவுணர்
நிறம்ஒன்று பூதி மணியோடு இலிங்கம்
நிலைவிட்டுஅ கன்ற னர்அரோ.

அவுணர் சிவபூசையைக் கைவிடல்

தெளிவுரை : பாவம் பொருந்திய முப்புரங்களில் வாழும் தாமரை மலர் போன்ற கண்களையுடைய திருமால் திறம் பொருந்திய புத்தன், அருகன், சினன் என்ற வடிவு கொண்டு அப்புரங்களை அடைந்து, 'இது அறமாகும்' என்று வஞ்சம் உடைய அறிவு நூலால் மயங்கச் செய்து கூறும் போது, அந்த அவுணர் மூவரும் நல்ல நிறம் பொருந்திய விபூதி உருத்திராக்க மணிமாலையுடன் இலிங்க வழிபாட்டையும் கைவிட்டனர்.

விளக்கம் : திருமால் புத்தனாகவும், அருகனாகவும், **சினனாகவும்** சென்றார். வேதத்துக்கு மாறுபட்ட கருத்துக்களை அவர்களுக்குப் புகட்டினார். அன்னார் விபூதி, உருத்திராக்கம் ஆகியவற்றை அணிவது, ஆகியவற்றையும் சிவலிங்க பூசையையும் கைவிட்டனர். **அரோ**-அசை. **மறம் ஒன்றுகின்ற**-பாவம் பொருந்திய; வீரம் பொருந்திய எனவும் கொள்ளலாம். **அம்புயக்கணிறைவன்**-அம்புயம்+கண்+இறைவன். **அங்கண் அடையடி**-அங்கு அடைந்து. **மருட்டி**-மயக்கி. **பூதி**-விபூதி. **மணி**-உருத்திராக்கமணி. 54

219. விதிஎன்று மாயன் வினயத்து உரைத்த
வெறும்வஞ்ச நூலின் விதியைக்
கதிஎன்று கொண்டு மனமால் அடைந்து
கதிஅற்ற தீய கயவர்
நிதிஎன்று கொண்ட திருநீறு இழந்த
நிலைபாழ் உடம்பு நிலவும்
மதிநின்று சென்று மறைகால் இருண்டு
வளம்அற்ற கங்குல் புரையும்.

செல்வத்தை இழந்தனர் கயவர்

தெளிவுரை : கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் என்று திருமால் விநயமாக உரைத்த முற்றும் வஞ்சம் உடைய நூலின் விதியையே உய்வதற்குரிய கதியாகும் என்று கொண்டு உள்ளத்தில் மயக்கம் அடைந்து, நற்கதியை இழந்து விட்ட தீயவரான அக்கயவர்கள், செல்வம் எனக் கருதப்பெறும் திருநீற்றை இழந்த நிலையில் உள்ள பாழான உடம்பு வானத்தில் நிலவும் சந்திரனானது மறைந்த போது இருண்ட வளம் இல்லாத இரவைப் போல் விளஙகும.

விளக்கம் : திருநீறு இழந்த அசுரர்களின் உடலானது சந்திரன் மறைந்த இருள்உடைய இரவு போல் விளங்கும்.
விநயம்-வஞ்சம். **மனமால்**-மன மயக்கம். **கதியற்ற**-நற்கதியை இழந்து விட்ட. **நிதி**-செல்வம். **திருநீறு**-விபூதி. **பாழ் உடம்பு**-பாழாக இருக்கும் உடம்பு. **மதிநின்று சென்று மறைகால்**-வானில் சந்திரன் இருந்து பின் மறைந்த போது. **கங்குல் புரையும்**-இரவைப் போல் விளங்கும். 55

220. புரம்ஒன்று தீயர் மடமாத ராரும்
முனம்வந்து புக்க முனிவன்
விரகம் கலந்து மிகுதிட்ப நெஞ்சின்
இகழும் படிக்கு வினயம்
தருகின்ற சொல்லின் மயல்செய்ய உம்பர்
தம்புண்ணி யத்தின் வலியின்
திரம்ஒன்று கற்பு நிலைபோய் அகன்று
தெறுகாமம் உற்று மெலிய.

திரிபுரமாதர் கற்புநிலை கெட்டனர்

தெளிவுரை : திரிபுரங்களில் இருந்த தீயரான இளைய அசுர மடமங்கையரும், தங்கட்கு முன் வந்து புகுந்த முனிவன், காமவுணர்வு கலந்து மிக்க திண்மையான மனத்துள் இகழும்படியான வஞ்சம் உடைய சொல்லால் மயக்கம் செய்யத் தேவர் செய்த நல்வினையினால் உறுதியான கற்புத் தன்மைகெட்டு அழிக்கும் காமம் கொண்டு வருந்தினர்.

விளக்கம் : புரம்-திரிபுரம். **மடமாதர்**-இளைய மங்கையர். **புக்க முனிவன்**-புகுந்த நாரத முனிவர். **விரகம் கலந்து**-காமவுணர்வு கலந்து. **வினயம்**-வஞ்சம். **மயல்**-மயக்கம். **உம்பர்தம் புண்ணியம்**-தேவர்களின் நல்வினை. **திரம்**-உறுதி. **தெறுகாமம்**-நல்லுணர்வு களை அழிக்கும் காமம்.
நாரத முனிவன் அசுர மடந்தையரின் கற்பைக் கெடுப்பதற்காக வந்தார். காமம் கலந்த சொல்லால் அம்மங்கையரை மயக்கம் கொள்ளச் செய்தார். அதனால் அம்மங்கையர் கற்பிழந்தனர். கற்பிழந்ததால் அவரால் உண்டாக இருந்த துன்பமும் தேவர்க்கு அகன்றது. 56

வேறு

221. இனிமாய் குவர்தா னவர்இன் றொடுஎனா
முனிமா தவன்ஆர் வமும் முகிழ்க்கவரா
நனிமா யையின் ஆயிடை நண்ணியவாறு
உனிமா கர்உவப் பஉரைத் தனரால்

வானவர் மகிழ்ச்சி

தெளிவுரை : முனிவரான நாரதர் திரிபுரத்துக்கு வந்து மாயையால் அங்கு நிகழ்த்தியவற்றை எண்ணி, வானவர், அசுரர் இன்றோடு மடிவர், என்று மகிழ்ந்து உரைத்தனர்.

விளக்கம் : மாய்குவர்-இறப்பர்; அழிவர். **தானவர்**-அசுரர். **எனா**-என்று. **முனிமாதவன்**-நாரத முனிவர். **ஆர்வம் முகிழ்ப்ப**-மகிழ்ச்சி ஏற்பட. **வரா**-வந்து **நனிமாயையின்**-மிக்க மாயத்தால்.

நண்ணிவாறு-நிகழ்ந்தது. **உனி**-நினைத்து. **மாகர்**-தேவர். **உரைத்தனரால்**-கூறினர், **ஆல்**-அசைநிலை. **உவப்ப**-மகிழ்ந்து. 'உவப்ப' என்பதை 'உவந்து' எனத் திரிக்க. 57

222. அக்கா லையின் அரணனஞ் சரணம்
முக்கால் வலம்வந்து முடிக்கு அணியா
நக்கா டுவர்பா டுவர்நம் பகைஞர்
உக்கார் எனஉள் மகிழ்உம் பரெலாம்.

தேவர் மகிழ்ச்சி

தெளிவுரை : மனம் மகிழும் தேவர் எல்லாம் அச்சமயத்தில் சிவபெருமானின் திருவடியை மூன்று முறை வலமாக வந்து முடிக்கு அணிந்து மகிழ்ந்து ஆடுவார்; பாடுவார்; நம் பகைவர் அழிந்தார் என்று கூறலாயினர்.

விளக்கம் : அரணன் அஞ்சரணம்-காவலான சிவபெருமானின் அழகிய திருவடிகளை. **முக்கால்**-மூன்று முறை. வலம் வந்து-வலமாகச் சுற்றி வந்து. **முடிக்கணியா**-முடிக்கு+அணியா; தம் தலைக்கு அணியாகச் சூடிக் கொண்டு. **அணியா**-அணிந்து. **நக்காடுவர்**-நக்கு+ஆடுவர்; மகிழ்ந்து ஆடுவர்; அல்லது சிரித்து ஆடுவர். **பகைஞர்**-பகைவரான திரிபுர அவுணர். **உக்கார்**-கெட்டார்; இறந்தார். 58

223. அம்மா கருவப் பரிகண்டு அருளி
நும்ஆ குலம்முற் றையும் நூறிடஎம்
பெம்மா னொடுபே சுதும்வம் மின்எனா
எம்மான் மலைஎய்து வன்யா வரொடும்.

சிவபெருமானிடம் போதல்

தெளிவுரை : அத்தேவர்களின் மகிழ்ச்சியைத் திருமால் கண்டார். அவர்களை நோக்கி, 'உங்கள் துன்பம் முழுவதையும் அழித்திட எம் பெருமானான சிவபெருமானுடன் பேசலாம் வாருங்கள்' என்று கூறி அவர்கள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு சிவபெருமானின் கயிலைமலையை அடையலானார்.

விளக்கம் : அம்மாகருவப்பு-அ+மாகர்+உவப்பு, அத்தேவரின் மகிழ்ச்சி. **மாகர்**-தேவர். **அரி**-திருமால். **நும்மாகுலமுற்றையும்**-நும்+

ஆகுலம்+முற்றையும். உம் துன்பம் முழுவதையும். **ஆகுலம்**-துன்பம். **பேசுதும்**-பேசுவோம். **வம்மின்**-வாருங்கள். **எனா**-என்று. **எம்மான் மலை**-எம் சிவபெருமானின் கயிலைமலை. 59

224. அந்நா ரணன்வா னவர்ஆகுலம் என்று
தன்நா யகன்ஒண் சரணம் தொழுது
சொன்னால் அஃது இன்று தொலைப் பன்எனா
உன்னா வரும்வெற்பு அணிஒ தியிடின.

திருமாலின் எண்ணம்

தெளிவுரை : அந்தத் திருமால் தேவரின் துன்பத்தை என் தலைவனான கயிலைமலையில் வீற்றிருக்கும் சிவபெருமானின் ஒள்ளிய திருவடியைத் தொழுது கூறிக்கொண்டால் அத்துன்பத்தை இன்று போக்கியருள்வான் என்று நினைந்தபடி சென்றார்.

விளக்கம் : நாரணன்-நாராயணன், திருமால். **ஆகுலம்**-துன்பம். **வானவர்**-தேவர். **சரணம்**-திருவடிகள். **அஃது**-அத்துன்பம். **தொலைப்பன்**-போக்கியருளுவான். **எனா**-என்று. **உன்னா**-நினைத்தவண்ணம். **வெற்பணி**-வெற்பு+அணி; கயிலை மலைக்கு அணியாய் விளங்கும் சிவபெருமான், **ஒதியிடின்**-வேண்டிக் கொண்டோமானால். 60

225. பண்டு தற்கம் பரித்த பரமனை
மண்டுதன் தலை வைப்பத் தவத்தினால்
விண்தலம் தொட வெண்மதி பேருருக்
கொண்டுஎ ழுந்தென நின்றதுஅக் குன்றமே.

சந்திரன் பேருருக் கொண்டது போல் கயிலை மலை விளங்குதல்

தெளிவுரை : முன்பு சந்திரனாகிய தன்னைத் தலையில் தரித்துக் கொண்ட சிவபெருமானைப் பொருந்திய தன் தலையில் வைத்துக் கொண்டதால் வானைத்தொட வெண்மையான சந்திரன் வேறுவடிவம் கொண்டு எழுந்தாற்போல் அக்குன்றம் தோன்றியது.

விளக்கம் : கயிலாலய மலையானது சந்திரன் பேருருக் கொண்டு விளங்கியதைப் போல் தோன்றியது. சிவபெருமான் தலையில்

சூடிக் கொண்ட மகிழ்ச்சியால் சந்திரன் மகிழ்ந்து பெருருக் கொண்டு விளங்கியது போல் கயிலைமலை விளங்கியது என்பதாம் பரித்ததற்கம்-பரித்த+தன்+கம்; சந்திரனான தன்னைத் தலையில் சூடிய. கம்-தலை. பரமனை-சிவபெருமானை. தன் தலையில் வைப்ப-தனது தலையில் வைத்துக்கொள்ள. விண்டலம்-விண்+தலம்; வானம். தொட-தொடுமாறு. வெண்மதி-வெண்மையான சந்திரன். பெருருக் கொண்டெழுந்தென-பெரிய வடிவு கொண்ட எழுந்தது போல். 61

226. வருணம் மிக்கபால் வாரிதி சிற்கன
புரண னுக்கும்ஓர் பொன்தவி சாஉளித்
திரணம் ஒத்த திருவன்அ லாமையால்
பரிண மித்துஎழும் பண்பனது அவ்வரை.

பாற்கடல் கயிலை மலை

தெளிவுரை : வெண்மை நிறம் கொண்ட பாற்கடல் மென்மையான பழைமையுடைய திருமாலுக்கும் ஓர் படுக்கையாக விளங்கியிருந்தது. அது இப்போது மென்மையான திருமால் இல்லாத காரணத்தால் பாற்கடலை விட்டுச் சிவபெருமானிடம் வந்து விட்டமையால் அப்பாற்கடல் கயிலை மலையாக மாறியது போல் விளங்கியது.

விளக்கம் : வருணம்-நிறம். பால்வாரிதி-பாற்கடல், புரணன்-புராணன் என்பதன் விகாரம், பழைமையானவன் என்பது பொருள். பொன்தவிசு-அழகிய இருக்கையாக; பொன் இருக்கையாக. 62

227. இத்தி றத்தின் இலங்கு கயிலையாம்
வித்த கத்தனி வெற்புழி இந்திரை
அத்தன் உம்பர் குழுவொடும் அஞ்சலிக்
கைத்த லம்தலை காட்டினன் ஏகினான்.

கூப்பிய கையினராய்ச் செல்லல்!

தெளிவுரை : இவ்வாறு விளங்கும் கயிலை மலையாம் ஞான இருப்பிடமான ஒப்பில்லாத கயிலைமலையில் இந்திராணியின் கணவனான இந்திரன் தேவர் கூட்டத்துடன் கூப்பிய கை மேற் கொண்டவனாய்ச் சென்றான்.

விளக்கம் : இலங்கு-விளங்கும். கயிலையாம்-கயிலை மலையான. வித்தகத் தனி வெற்புழி-ஞானத்துக்கு இருப்பிடமான மலையில். உழி-ஏழாம் வேற்றுமையுருபு. இந்திரை-இந்திராணி; இந்திரனின் மனைவி. அத்தன்-கணவன். உம்பர்குழு-தேவர் கூட்டம். அஞ்சலிக்கைத்தலம் காட்டினராய்-கூப்பிய கையினராய். ஏகினான்-சென்றான். காட்டினன்-காட்டியவனாய் 63

228. என்இ கந்த இருங்கணம் ஏத்துற
அண்ணல் நம்திரு நந்திஅ மர்ந்தருள்
வண்ண ஒண்கடை வந்தவ னைத் தொழாக்
கண்ணன் நின்றுஇது கட்டுரைக் கின்றனன்

திருமால் நந்தியிடம் கூறத் தொடங்கல்

தெளிவுரை : கயிலை மலையில் கணக்கில்லாத கரிய பூதகணம் துதித்துக் கொண்டிருக்க நந்தியம் பெருமான் அமர்ந்துள்ள அழகிய ஒளியுடைய வாயிலில் வந்து அந்நந்தியைத்தொழுது திருமால் நின்று பின்வருமாறு கூறத் தொடங்கினான்.

விளக்கம் : திருமால் கயிலையின் வாயிலில் வந்தான். அங்குப் பூதகணங்கள் நந்தியம் பெருமானைத் துதித்த வண்ணம் இருந்தன. அந்நந்தியைக் கண்ட திருமால் வணங்கிப் பின்வருமாறு கூறலானான்.
எண்ணிகந்த-என் இல்லாத. இருங்கணம்-பெரிய பூத கனம். ஏத்துற-துதிக்க. நந்தி-கயிலை மலையில் நந்தி தேவர் காவல் செய்பவர். வண்ண ஒண்கடை-அழகிய ஒளியுடைய வாயில், தொழா-வணங்கி; 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். கண்ணன்-திருமால். கட்டுரைக்கின்றனன்-கூறத்தொடங்கினான். 64

229. சென்று தெய்வ சிகாமணிக்கு இங்ஙன்யாம்
ஒன்றும் வண்ணம் உரைத்தருள் ஐயநீ
என்று கண்ணன் இயம்ப அருளியே
நன்று நின்ம்எனப் போயினன் நந்தியே.

திருமால் நந்தியிடம் கூறுதல்

தெளிவுரை : 'ஐயனே! நீவிர் போய், தெய்வங்களுக்கெல்லாம் தலைவனான சிவபெருமானிடம் யாங்கள் இங்கு வந்துள்ள திறத்தை உரைத்தருள வேண்டும்!' என்று திருமால் உரைத்தார்.

அவர்க்கு நந்தி அருள்செய்து, 'நல்லது நீவிர் இங்கே நில்லுங்கள்' எனப் போனார் நந்தி தேவர்.

விளக்கம் : தெய்வசிகாமணி-தெய்வங்களுக்கெல்லாம் தலைவனான சிவபெருமான். யாம் ஒன்றும் வண்ணம்-யாம் இங்கு வந்துள்ள தன்மை. கண்ணன்-திருமால். நின்ம் என-நில்லுங்கள் என. 65

230. அளவுஇல் ஒண்புவ னாதிபர் பல்கணம்
அளவுஇல் நன்முனி வோர்நிறை வாம்அவை
அளவுஇல் சோதி அவிர்மணிப் பீடம்வாழ்
அளவுஇல் பேரரு ளாளிமுன் எய்தினான்.

நந்தி சிவபெருமானிடம் செல்லல்

தெளிவுரை : அளவு இல்லாத உலகத் தலைவர்களும் பல பூதகணங்களும் அளவில்லாத நல்ல முனிவர்களும் நிறைந்த அவையில், அளவற்ற பேரொளி விளங்கும் மணிகள் பதித்த பீடத்தில் அளவில்லாத பேரருளாளியான இறைவன் திருமுன்பு நந்தி தேவர் போய்ச் சேர்ந்தார்.

விளக்கம் : ஒண்புவனாதிபதி-ஒளியுடைய புவனத்தலைவர்கள். பல்கணம்-பலபூதகணங்கள், எண்ணற்ற நல்ல முனிவர்கள். சோதி-பேரொளி. அளவில் பேரருளாளி-அளவில்லாத மிக்க அருளையுடைய சிவபெருமான். 66

231. எந்தை தாள்முன் இறைஞ்சி, மலர்அயன்
இந்தி ராதி இமையவர் சுற்றமால்
வந்து ளான்மணி வாய்தலின் என்றலும்
நந்தி கூவுதி என்றனன் நாயகன்.

சிவபெருமான் 'திருமால் முதலியவரை அழைத்து வருக' எனல்

தெளிவுரை : எம் தந்தையான சிவபெருமானின் திருவடியை வணங்கி 'தாமரை மலரில் வீற்றிருக்கின்ற நான்முகனும், இந்திரன் முதலிய தேவர்களும் சூழத் திருமால் வந்து அழகிய வாயிலில்

காத்து நிற்கின்றனர்' என்று நந்தி தேவர் கூறவும் சிவபெருமான், 'அவர்களை அழைத்து வருக' எனறு திருவாய் மலர்ந்தார்.

விளக்கம் : எந்தை தாள்-எம் தந்தையான சிவபெருமானின் திருவடி. இறைஞ்சி-வணங்கி. மலரயன்-தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன். சுற்ற-சூழ. மால்-திருமால். மணிவாய்தல்-அழகிய வாயிலில். கூவுதி-அழைப்பாயாக! 67

232. இறையி னில்கடை எய்தி, 'உமைப்பரன்
உறஅ ழைத்திளன்று ஓதினன் வம்' எனச்
சிறைவி டுத்ததெண் ணீர்என ஓடினார்
நிறைம கிழ்ச்சி நெடியவன் ஆதியோர்.

உம்மை இறைவர் அழைக்கிறார் எனல்

தெளிவுரை : நந்தி தேவர், இமைப்போதில் வாயிலை அடைந்து அங்கே காத்திருந்த திருமால் முதலியவரைப் பார்த்து 'உம்மைச் சிவபெருமான் அழைத்து வருமாறு கூறினான். வாருங்கள்!' என்றார். அணை உடைபட்ட நீரைப் போன்று மிக்க மகிழ்ச்சியுடன் திருமால் முதலியவர் விரைவாகச் சென்றனர்.

விளக்கம் : இறையினில்-இமைப்போதில். கடை-வாயில். பரன்-சிவபெருமான். அழைத்தி-அழைப்பாயாக. வம்மின்-வருவீர்களாக. சிறைவிடுத்த-அணையினின்று விடுபட்ட. தெண்ணீர்-தெளிந்த நீர். நெடியவன்-திருமால். 68

233. மின்உ லாம்சடை வித்தகன் என்பெறும்
அன்னை யோடு அமர்ந்த அவைக்களம்
தன்னின் ஏகிமுன் சாயும் பணைமரம்
என்ன வேபணிந்து அன்பின் எழுந்தனர்.

திருமால் முதலியவர் சிவபெருமானை வணங்குதல்

தெளிவுரை : மின்னல் போன்ற சடையையுடைய ஞானியான இறைவன் என்னைப் பெற்ற தாயான உமையம்மையுடன் வீற்றிருக்கின்ற அவைக்களத்தில் போய், முன்னால் சாய்ந்து விழும் பனைமரத்தைப் போன்று கீழே விழுந்து வணங்கி எழுந்தனர்.

விளக்கம் : மின்உலாம் சடை-மின்னல் போன்று ஒளியுடைய சடை. **வித்தகர்**-ஞானி, சிவபெருமான். **அன்னை**-உமையம்மை, திருமால் முதலியவர் இறைவனைத் தரையில் விழுந்து வணங்கினர். அது முன்சாயும் பனைமரம் போல் விளங்கியது. 69

234. கூர்ந்த அன்பின் குவித்தகை யுச்சிகொண்டு
ஓர்ந்த சொல்தளர் வுற்று மனன்நெக
வார்ந்த கண்புனல் மார்பு நிரம்பமெய்
சோர்ந்து நின்று துதித்திடல் மேயினார்.

மால் முதலியவர் சிவபெருமானை வணங்கல்

தெளிவுரை : மிக்க அன்புடன் குவித்த கையை உச்சி மீது கொண்டு, தளர்ந்த சொல் உடையராய், உள்ளம் நெகிழ, வடியும் கண்ணீர் மார்பில் வழிந்து நிறைய, உடல் தளர்ந்து நின்று துதிக்கலானார்.

விளக்கம் : கூர்ந்த அன்பின்-மிக்க அன்புடன். **குவித்த கை**-கூப்பியகை. **சொல்தளர்வுற்று**-சொல் தடுமாற்றத்தை அடைந்து. **மனனெக**-மனன்+நெக; உள்ளம் நெகிழ. **கட்புனல்**-கண்ணீர். **மேயினார்**-பொருந்தினார். 70

வேறு

235. நிறைந்தநின் தொல்லை உண்மை
நிலைதிரிவு இன்றி யாங்கள்
பிறந்து இறந் திடுதல் தீர்ப்பான்
பேர் அருள் உருவு கொண்டுஇங்கு
உறைந்தநின் கருணை போற்றி
உயிர்க்குஉடல் அளித்துஇ யக்கிச்
செறிந்தமுன் வினைஅ ருத்தித்
தீர்த்திடும் பரிவு போற்றி

துதித்தல்!

தெளிவுரை : நிறைவான நின் பழைமையான உண்மையான நிலையினின்று மாறுபடாமல் யாங்கள் பிறந்து இறந்திருத்தல் ஆகியவற்றைப் போக்கியருளப் பேருருவு கொண்டு இங்கு

வீற்றிருக்கின்ற நின் கருணை போற்றி! உயிர்க்கு உடலை அளித்து இயக்கிப் பொருந்திய வினையின் பயனை அனுபவிக்கச் செய்து அதைப் போக்குகின்ற கருணை போற்றி.

விளக்கம் : தொல்லை-பழமை. **திரிவுஇன்றி**-மாறுபாடு இல்லாது. **தீர்ப்பான்**-தீர்க்க. **உறைந்த**-வீற்றிருக்கின்ற. **போற்றி**-வணக்கம். இறைவன் உயிர்களுக்குத் தக்க உடல்களைத் தந்து இயக்கி முன் வினைப்பயனை அனுபவிக்கச் செய்து அதைப் போக்கியருளும் கருணை யுடையவன். **பரிவு**-அன்பு, கருணை. 71

236. உலகுஉயிர் இன்பம் துய்ப்ப
உனதுபே ரருளை மாதுஎன்று
இலகுற இடத்து இருத்தி
இருந்திடும் கருணை போற்றி
விலகிஅவ் இன்பம் சில்லோர்
விடுக்கஅவ் உருவு அகன்ற
அலகுஇல் அருள் கொண்டுஉற்ற
அமல,அக் கருணை போற்றி.

துதித்தல் (தொடர்ச்சி)

தெளிவுரை : இவ்வுலகத்தில் உள்ள உயிர்கள் இன்பத்தை அனுபவிக்கச் செய்யத் தக்க பேரருளை மங்கை என்று இடப்பக்கத்தில் இருக்கச் செய்து கொண்டுள்ள அருள் போற்றி. விலகிய அந்த இன்பம் சிலர் விடுக்க, அவ்வடிவுகுறைய அளவு இல்லாத நல்ல அருளை மேற்கொண்டு விளங்கும் குற்றமற்றவனே! அக்கருணை போற்றி!

விளக்கம் : இறைவன் உலகத்து உயிர் மாட்டுக் கருணைகொண்டு இன்பம் துய்க்குமாறு செய்கின்றான். அந்தப் பேரருளை அவர் தன் இடப்பாகத்தில் உமையம்மை என்று கொண்டுள்ளான். இறைவன் அருளே உமையம்மை. அவ்வம்மை இறைவனின் இடப்பாகத்தில் அமர்ந்துள்ளாள். ஆதலால் இலகுற இடத்திருத்தி, என்றார். **சில்லோர்**-சிலர். **கன்ற**-அகல; **குறைய. அமல**-குற்றம் அற்றவனே! 72

237. ஐம்பெரும் பூதம் ஆதி
ஆயதத் துவசா லங்கள்
தம்பெருகு அறிவொ டுக்கும்
தனி இருள் மலம்வே றாக
நம்பநின் அருளின் நின்ற
நற்றவர் தம்மின் வேறா
இம்பரின் அறிந்து கூடாது
இருந்தவாறு இருப்போய் போற்றி.

துதித்தல் (தொடர்ச்சி)

தெளிவுரை : நம்பனே! மண் முதலிய ஐந்து பூதங்கள் முதலிய கொள்கைக் கூட்டங்கள் தம் பெரிய நெறியில் ஒடுக்குகின்ற. ஒப்பற்ற இருளாகிய மலம் வேறாகவும் நின் அருளில் நின்ற நற்றவர் வேறாகவும், இவ்வுலகத்தில் அறிந்து அவற்றுடன் கூடாது முன் இருந்தபடி இருப்பவனே! போற்றி.

விளக்கம் : ஐம்பெரும்பூதம்-மண், விண், காற்று, தீ, நீர் ஆகிய ஐந்து பூதங்கள். **தத்துவ சாலங்கள்**-தத்துவக் கூட்டம். அவைமுப்பத்தாறு. **சாலங்கள்**-கூட்டம். தத்துவங்களை அறிவுடன் ஒடுக்கும். **தனிஇருள்மலம்**-ஒப்பற்ற இருளான மலம். **இம்பரின்**-இம்மையின். 73

237. அருவும்நல் உருவும் மற்றை
அருவுரு வதுவு மாகப்
பரவும்ஒன் பதிற்றுப் பேதப்
பகுதியுஞ் சத்தி ஐந்தின்
விரிவும்அன் றாய உன்தன்
மேனிலை தமதே யாகப்
பொருவரும் அன்பர்க்கு ஆக்கும்
பொருவிடைப் பாக போற்றி.

துதித்தல் (தொடர்ச்சி)

தெளிவுரை : அருவமும் நல்ல உருவமும் மற்றமுள்ள அருவுருவமும் அதுவாகத் துதிக்கும் ஒன்பது பேதமான பகுதியும் சக்தி ஐந்தின் விரிவும், அல்லாத உன் மேல் நிலைஉம்முடையதாக

அன்பருக்கு ஆக்கும் ஒப்பில்லாத காளையூர்தியை யுடையனே, போற்றி.

விளக்கம் : அரு-நாதம் விந்து, சத்தி சிவம். **உரு**-பிரமன், திருமால், ருத்திரன், மகேசுவரன். **அருவுரு**-சதாசிவன். **ஐந்து சத்தி**-பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி.

பொருவரு-ஒப்பற்ற. **பொருவிடைப்பாக**-போர் செய்யும் எருதினை ஊர்தியாக உடையவனே. **ஒன்பதிற்றுப்பேதம்**-இறைவன் ஒன்பது வடிவபேதம் உடையவன். நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவம், சிவம், சத்திநாதம். 74

239. இனையன பகர்ந்து போற்ற
எங்கள்நா யகன்மு ராரி
தனையருள் கொண்டு நோக்கிச்
சததளக் கமலக் கோயில்
வனிதைஅம் குவட்டுக் கொங்கை
முகடுஉமிழும் வயிரத் தோளாய்
துனியுறும் அமர ரோடும்
வந்ததுஎன் சொல்நீ என்றான்

திருமால் வந்த காரணத்தைக் கூறல்

தெளிவுரை : இத்தகையவற்றைக் கூறிச் சிவபெருமானைத் திருமால் துதித்தார். அப்போது எம் தலைவனான சிவபெருமான், திருமாலை அருட்பார்வை பார்த்து, 'நூறு இதழ்த் தாமரைக் கோயிலில் உள்ள பெண்ணான இலக்குமியின் மலை போன்ற கொங்கையின் உச்சியைத் தழுவும் வயிரம் போன்று உறுதியான தோள்களையுடையவனே! துன்பம் கொண்ட தேவருடன் நீ இங்கு வந்ததன் காரணம் யாது? நீ கூறுவாயாக!' என்றான்.

விளக்கம் : இனையன-இத்தகையவை. **எங்கணாயகன்**-எங்கள் தலைவனான சிவபெருமான். **முராரி**-திருமால். அவர் முரன் என்ற அசுரனைக் கொன்றார். ஆதலால் இப்பெயர் பெற்றார். **சததளக் கமலக் கோயில்**-நூறு இதழ்களையுடைய தாமரையாகிய கோயில். **வனிதை**-திருமகள். **அங்குவட்டுக் கொங்கை**-அழகிய மலை போன்ற

கொங்கை. **முகடு**-உச்சி, **உழும்**-தழுவும். **துனியுறும் அமரர்**-துன்பம் அடைந்த தேவர். **சொன்னீ**-சொல்+நீ; நீ கூறுவாய். 75

240. என்றலும் திகிரிப் புத்தேள்
இயம்புவன் ஐய விண்ணோர்
வன்திறல் எயில்கள் மூன்றும்
மலர்அயன் தரப்பெற் றுள்ள
புன்தொழில் அவுணர் இன்னல்
புரியநொந்து அரைய னோடும்
இன்றள எல்லை காணா
இருந்துயர்க் கடலின் ஆழ்ந்தார்.

தேவர்கள் துன்பம் அடைதல்

தெளிவுரை : என்று சிவபெருமான் உரைத்தார். அப்போது சக்கரப் படையையுடைய தேவரான திருமால் சொல்லலானார். 'ஐயனே! வலிமையுடைய மூன்று மதில்களை நான்முகனால் பெற்ற இழிந்த செயலையுடைய அவுணர் மூவர், தேவர்க்குப் பலவகையான துன்பங்களை உண்டாக்கினார்கள். அதனால் அவர்கள் தம்மன்னனான இந்திரனுடன் அதற்கு ஓர் எல்லையைக் காணாது பெருந்துன்பக்கடலில் முழுகினர்.

விளக்கம் : திகிரிப்புத்தேள்-சக்கரப்படையையுடைய திருமால். **வன்திறல்**-வலிய ஆற்றல். **எயில்கள்**-மதில்களையுடைய கோட்டைகள். **மலர்அயன் தரப்பெற்றுள்ள**-நான்முகனால் அளிக்கப்பெற்றுள்ள. **புன்றொழில்**-இழிந்த செயல், கொடிய செயல். **இன்னல் புரிய**-துன்பத்தைச் செய்ய. **காணா**-காணாமல். **இருந்துயர்க்கடல்**-பெரிய துன்பமான கடல். 76

241. "கருணைஅம் கடல்நீ விண்ணோர்
கலங்குஅஞர் விடுத்து நின்பொன்
சரணபங் கயங்கட்கு ஏவல்
சந்ததம் இயற்றும் வண்ணம்
அரணவெங் கொடியோர் ஆற்றல்
அழித்தருள் புரிதி!" என்ன,
வருணகுங் குமப்பு யத்து
மாயவன் வழங்கி நின்றான்.

அவுணரை அழித்தல் வேண்டும்!

தெளிவுரை : 'கருணைக்கடலே! தேவர்கள் அச்சம் கொள்வதற்குக் காரணமான துன்பத்தைப் போக்கி உம் அழகிய திருவடித் தாமரைகளுக்குப் பணி நாள்தோறும் நாங்கள் செய்யும்படி மூன்று எயில்களை யுடைய கொடிய அவுணர் முற்றும் நீவிர் அழித்தருள வேண்டும்' என்று நிறம் பொருந்திய குங்குமம் பூசப்பெற்ற தோள்களை உடைய திருமால் உரைத்தருளினார்.

விளக்கம் : கருணைஅம்கடல்நீ-அருள் கடலாக உள்ள நீவிர், **கலங்குஅஞர்**-கலக்கம் அடைவதற்குக் காரணமான துன்பம். **சரணபங்கயம்**-திருவடித் தாமரை. **சந்ததம்**-நாள்தோறும். **அரணவெங்கொடியோர்**-மூன்று மதில்களையுடைய கொடிய அவுணர். **அழித்து அருள்புரிதி**-அழித்திடுவாயாக. **வருணம்**-நிறம். **குங்குமப்புயம்**-கலவைச் சாந்து அணிந்த தோள். **வழங்கி நின்றான்**-கூறிநின்றான். 77

242. படைக்கலம் ஐந்து பெற்றோன்
பகர்ந்துஇவை நிற்கும் எல்லை,
தொடைக்கலன் பயிலும் பொன்தோள்
சதமகன், "சுரர்க ளோடு
புடைக்கலம் சுழலும் காகம்
போன்றனம்; தமியேம் உன்றன்
அடைக்கலம் கருணை செய்!" என்று
அமலநா யகன்ப ணிந்தான்.

அடைக்கலம் ஆனோம்! அருளுக!

தெளிவுரை : சங்கு சக்கரம் முதலிய ஐந்து படைகளையுடைய திருமால் இவ்வாறு கூறி நின்றான். அப்போது இயற்றப்படும் அணிகள் அணிந்த அழகிய தோள்களையுடைய இந்திரன், 'தேவர்களுடன் சுழலும் மரக்கலத்தில் உள்ள காக்கை போன்று யாங்கள் துன்பம் அடைந்துள்ளோம். ஆதரவற்ற யாங்கள் உமக்கு அடைக்கலம் ஆனோம். அருள்புரிக!' என்று குற்றமற்ற சிவபெருமானைப் பணிந்து கூறினான்.

விளக்கம் : படைக்கலம் ஐந்து-திருமால் ஐந்து படைக்கலங்களை உடையவர்; ஐந்து படைக்கலங்களாவன : சங்கு, சக்கரம், தண்டு, வில், வாள். **படைக்கலம் ஐந்து பெற்றோன்**-திருமால். **எல்லை**-சமயத்தில். **தொடைக்கலன்**-செய்யப்படும் அணிகள். **பொற்றோள்**-பொன்+தோள்; அழகிய தோள். **சதமகன்**-இந்திரன். **சுரர்கள்**-தேவர்கள். **புடைக்கலம் சுழலும்**-கலம் புடை சுழலும். **கலம்**-மரக்கலம். சுழலும் மரக்கலத்தில் அமர்ந்த காக்கை துன்பம் அடைவது போல் யாங்கள் துன்பம் அடைகிறோம் என்றான் இந்திரன் **தமியேம்**-ஆதரவு இல்லாத யாம். **அடைக்கலம்**-அடைக்கலம் அடைந்தோம். **அமல நாயகன்**-குற்றம் இல்லாத தலைவனான சிவபெருமான். 78

243. வானுளோர் மனத்து மிக்க
வன்துயர் அகற்ற உன்னி
ஞானநா யகன்ந கைத்து
"நாம்எழுந் தருளி வந்து
மானவேல் அவுணர் தம்மை
மாய்க்குதும்; அதற்கு நம்பால்
ஆனபோர்க் கருவி இல்," என்று
அறைந்தனன் அருளின் மாதோ.

போரிடக் கருவிகள் இல்லை எனச் சிவன் கூறல்

தெளிவுரை : தேவர் உலகத்தவரின் உள்ளத்தில் உள்ள மிக்க வலிய துன்பத்தைப் போக்க நினைந்தான் 'ஞானவடிவினான சிவபெருமான், நகைத்து, நாமே வந்து பெருமையுடைய வேற்படை ஏந்திய அந்த அவுணரை அழிப்போம். அதற்கு நம்மிடம் போர்க்கருவிகள் இல்லையே!' என்று சிவபெருமான் உரைத்தருளினார்.

விளக்கம் : வானுளோர்-தேவர். **வன்றுயர்**-வலியதுன்பம். **உன்னி**-நினைத்து. **ஞானநாயகன்**-பூரண ஞானம் உடைய சிவபெருமான். **மானவேல்**-பெருமையுடைய வேல். **மாய்க்குதும்**-அழிப்போம்; கொல்வோம், தன்மைப்பன்மை வினை முற்று. **நம்பால்**-நம்மிடம். **மாதோ**-மாது, ஓ-அசைகள். 79

244. கண்ணுதல் உரைத்த தன்மை
கடவுளர் கேட்டுஉ வப்பால்
எண்ணரும் உலகம் எல்லாம்
இமைப்பினில் படைத்த ளித்து
நண்ணுற ஒடுக்கும் அண்ணல்
நவின்றதுஓர் ஆடல் என்னப்
பண்ணமை தங்கள் தச்சன்
பார்த்திது பகரல் உற்றார்.

தேவதச்சன் மயனைப் பார்த்துக் கூறுதல்

தெளிவுரை : நெற்றியில் கண்ணையுடைய சிவபெருமான் சொன்னதன் இயல்பைத் தேவர் கேட்டனர். பின்பு எண்ணில்லாத உலகம் முழுவதும் இமைப் போதில் படைத்துக் காத்து அவை எல்லாவற்றையும் ஒடுக்கும் இறைவர் செய்ததான திருவிளையாடல் என்ன, சிறந்த செயலாற்றலையுடைய தங்களின் தேவதச்சன் மயனைப் பார்த்துப் பின்வருமாறு கூறலானார்.

விளக்கம் : கண்நுதல்-நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான். **கடவுளர்**-தேவர். **அப்பால்**-பின்பு. **எண்ணரும்உலகம்**-எண்ணுதற்கு அரிய உலகம். **இமைப்பினில்**-இமைப்போதில். **ஒடுக்கும்**-அழித்தருளும். **அண்ணல்**-சிவபெருமான். **ஆடல்**-திருவிளையாடல். **தங்கள் தச்சன்**-தங்கள் தச்சனான மயன். **பகரலுற்றார்**-கூறத் தொடங்கினார். 80

245. பெருந்தகைக்கு ஏற்ற வையம்
பெருமிதம் பெறச்செய் என்ன
விரைந்துநற் புவிதேர், ஆழி
இருசுடர், வேதம் வாமான்,
அருந்திறல் கமலன் பாகன்,
மேருவில், அனந்தன் நாரி,
சரம்தழல் சசிமா லாகச்
சமைத்தனன் தெய்வத் தச்சன்

மயன் அமைத்த தேர்

தெளிவுரை : 'மயனே! நீ சிவபெருமானுக்கு ஏற்றபடி பெரிய தேரைச் செய்வாயாக!' என்று மயனைப் பார்த்துத் தேவர்

உரைத்தனர். அத்தேவ தச்சனான மயன் விரைவாக நல்ல **பூமியைத்** தேராகவும், இரண்டு கதிர்களாகிய கதிரவன், சந்திரன் **சக்கரங்களாகவும்**, நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், அரிய **ஆற்றலையுடைய** நான்முகன் தேர்ப்பாகனாகவும், மேருமலை **வில்லாகவும்**, வாசுகி நாண் கயிறாகவும், அக்கினி, சந்திரன் மால் அம்பாகவும் அமைத்தனர்.

விளக்கம் : **பெருந்தகை**-சிவபெருமான். **வையம்**-தேர். **நற்புவிதேர்**-நல்ல பூமி தேர். **ஆழி**-சக்கரம். **இருசுடர்**-கதிரவன், சந்திரன். **வேதம் வாமான்**-வேதங்களே தாவிச் செல்லும் குதிரைகள். **வாமான்**-தாவிச்செல்லும் குதிரை. **கமலன்**-நான்முகன். **பாகன்**-தேர் ஓட்டுபவன். **மேருவில்**-மேருமலை வில். **அனந்தன்**-வாசுகி என்ற பாம்பு; ஆதிசேடனான பாம்பு. **நாரி**-நாண்கயிறு. **சரம் தழல், சசி, மால் ஆக**-அக்கினி, சந்திரன், திருமால் அம்பாகவும். **சமைத்தனன்**-அமைத்தான். **தெய்வத்தச்சன்**-தேவதச்சனான மயன். 81

246. விண்ணவர் அவைகண்டு ஆர்வம்
மிக்குஎழும் மனத்த ராகி,
அண்ணலை வணங்கி, "நின்தன்
அருளின்நாம் இவைகொண்டு ஆதிப்
பண்ணவ கமல, முக்கண்
பராபர எமைஅ ணக்கும்
நண்ணலர் தமைமு ருக்கி
நங்களைப் புரத்தி," என்றார்.

அவுணரை அழித்து எம்மைக் காக்க வேண்டும்.

தெளிவுரை : தேவர்கள், தேவ தச்சன் அமைத்த தேரைக் கண்டனர், ஆர்வம் மிக்க மனத்தை உடையவராகிச் சிவபெருமானை வணங்கி 'உம் அருளால் இவற்றைக் கைக் கொண்டு, ஆதியங் கடவுளே! குற்றம் அற்றவனே! மூன்று கண்களையுடைய மேலானவனே! எங்களுக்குத் துன்பம் செய்யும் பகைவரான அவுணர்களை அழித்து எங்களைக் காத்தருள வேண்டும்' என்று கூறினார்.

விளக்கம் : **அவை**-தேர் முதலியவை. **ஆர்வம் மிக்கு**-அன்பு மிகப் பெற்று. **அண்ணலை**-சிவபெருமானை. **இவை கொண்டு**-தேர் முதலிய இவற்றை ஏற்றுக் கொண்டு. **ஆதிப்பண்ணவ**-ஆதியங் கடவுளே. **அமல**-குற்றம் அற்றவனே! **முக்கண் பராபர**-மூன்று கண்களையுடைய மேலானவர்க்கு மேலானவனே. **அணக்கும்**-வருத்தும். **நண்ணலர்**-பகைவரான வித்துன்மாலி, கமலாட்சன், தாரகாட்சன். **முருக்கி**-அழித்து. **புரத்தி**-காத்தருளுக. **நங்களை**-நம்மை. 82

247. சங்கரன் அதுகேட்டு எங்கள்
தாயுடன் எழுந்து துன்றி,
அங்குறும் அனைவ ரும்சூழ்ந்து
அன்பினில் "சய, சய" என்னப்
பங்கய அடிம ணிப்பொன்
பாதுகை மிசைஇ ருத்திப்
பொங்குஒளி விரிக்கும் கோயில்
புறத்துஎழுந் தருளி னான்ஆல்.

சிவபெருமான் புறப்படல்

தெளிவுரை : சிவபெருமான் அதைக் கேட்டார். எங்கள் தாயான உமையம்மையுடன் எழுந்தார். அங்குள்ளவருடன் கூடிப் புறப்பட்டார். அனைவரும் 'சய சய' என்று போற்றினர். தாமரை போன்ற திருவடியை மணியைப் பதித்த பாதுகையின் மீது இருத்திப் பொங்கும் ஒளியை விரிக்கும் கோயிலின் வெளியே வந்தருளினார்.

விளக்கம் : **சங்கரன்**-சிவபெருமான். **எங்கள் தாய்**-எங்களுடைய அன்னையான உமையம்மையார். **சய,சய**-வெற்றியுண்டாகுக, வெற்றியுண்டாகுக. **பங்கயஅடி**-தாமரை போன்ற அடி. **மணிப் பொன் பாதுகை**-மணிபதித்த பொன் பாதுகை. **கோயில்**-கயிலாயத்தில் சிவபெருமான் வீற்றிருக்கும் இடம். 83

248. ஆண்டுறு திகிரிப் பொன்தேர்
அணிநலம் திருக்கண் சாத்தி
ஏண்தரு மலைமா தோடும்
இவர்ந்துகூர்ங் கணையும் மற்றை
மாண்தரு தனுவும் செங்கேழ்
மரைமலர்க் கரங்கள் பற்றிக்
காண்தரும் அழகுஎ றிப்ப
நின்றனன் கருணை வள்ளல்.

சிவபெருமான் தேரில் அமர்தல்

தெளிவுரை : கருணைவள்ளலான சிவபெருமான், அங்கு வந்து நிறுத்தப்பட்ட சக்கரங்களையுடைய அழகிய தேரின் அழகைப் பார்த்தார். பெருமையுடைய இமவானின் மகளான உமையம்மையுடன் தேரில் ஏறியருளினார்; கூர்மையான அம்பையும் மற்றச்சிறந்த வில்லையும் சிவந்த நிறம் உடைய தாமரைமலர் போன்ற கைகளில் பற்றினார். காணத் தக்க அழகு வெளிப்பட்டு விளங்கத் தேரில் நின்றார்.

விளக்கம் : **ஆண்டுஉறு**-அங்கு வந்து நிறுத்தப்பட்ட. **திகிரிப் பொற்றேர்**-சக்கரப்படையையுடைய தேர். **அணிநலம்**- அழகின் நன்மை. **ஏண்தரும் மலைமாது**-பெருமையுடைய இம்மலையின் மகளான உமையம்மை. **இவர்ந்து**-ஏறி. **கூர்ங்கணை**-கூர்மையான அம்பு. **தறு**- ஆண்மையுடைய, வீரம் வாய்ந்தவில். **செங்கேழ்**-சிவந்தநிறம். **மரைமலர்**-தாமரைமலர். **காண்தகு அழகு**- காணத்தக்க அழகு. **எறிப்ப**-ஒளிர. **கருணை வள்ளல்**- சிவபெருமான். 84

249. மருஉலாம் குவளை வென்று
வண்கயல் மருட்டி நீள்காது
உருவஒடு அரித்த டங்கண்
உமைமணம் புணரும் கோமான்
பொருவுஇல் தோள் கண்டு மிக்க
பொலிவுபெற் றிருந்த மேரு
வருவில்நாண் அடைந்து சால
வன்தலை வளைந்தது அம்மா.

மேருமலை நாணம் கொண்டது!

தெளிவுரை : நறுமணம் உடைய குவளை மலரை வென்று வளம் பொருந்திய கயல் மீனை மயக்கி, (தோல்வியடையச் செய்து), நீண்ட காதுகளை ஊடுருவி வரிகளையுடைய கண்களையுடைய உமையம்மையாரை மணம் செய்துகொண்ட சிவபெருமானின் ஒப்பில்லாத தோளைக் கண்டு மிக்க அழகுடைய மேருமலை நாணம் கொண்டதாய் மிகவும் வளைந்து நின்றது.

விளக்கம் : மேரு மலை வில்லாக வளைந்ததைச் சிவபெருமானின் தோளின் அழகைக் கண்டு நாணம் கொண்டு வளைந்ததைப் போல் விளங்கியது என விளக்கினார். **தற்குறிப்பேற்றம்.**

உமையம்மையின் கண் அழகு முதல் இரண்டு அடிகளில் விளக்கப்படுகின்றது. அக்கண் குவளை மலரை வென்றது; கயல்மீனைத் தோற்கச் செய்தது. நீண்ட காதுவரை விளங்கியது. வரிகளை உடையது. **மருஉலாம்**-நறுமணம் உடைய. **வண்கயல்**-வளமையுடைய கயல்மீன். **உருவ**-உருவிச் செல்ல; ஊடறுக்க; அதாவது பொருந்தியிருக்க. **அரித்தடங்கண்**-சிவந்த வரிகளையுடைய பெரிய கண். **கோமான்**-சிவபெருமான். **மணம் புணரும்**-மணத்தில் கொண்டு சேரும். **பொருவிறோள்**-பொருவு+இல்+தோள்; ஒப்பில்லாத தோள். **மேருவருவில்**-வில்லாக அமைந்த மேருமலை. **சால**-மிக. **அம்மா**-அசை. 85

250. தன்மனை இரத மாகத்
தன்மகன் வலவ னாகத்
தன்மகன் பேர னோடு
தனக்குமைத் துனன்கா லாகத்
தன்மலர் அணைநா ணாகத்
தான்நெடும் பகழி ஆனான்
தன்மனம் இடம்கொண்டு உற்ற
சங்கரன் தவக்கும் மாயன்.

தேர், பாகன், சக்கரம் முதலியன

தெளிவுரை : திருமால், தன் மனத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானுக்குத் தன் மனைவியான பூமி தேராகவும், தன்

மகனான நான்முகன் தேர்ப்பாகனாகவும், தன் மகன் பேரனுடன், கதிரவனுடன், தன் மைத்துனன் சந்திரன் சக்கரமாகவும், தன் மலர் அணையான ஆதிசேடன் வில்லின் நாண்கயிறாகவும், தான் அம்பாகவும் ஆயினார்.

விளக்கம் : தன் மகன் என்றது நான்முகனை. நான்முகனின் மகன் காசிபன். அவனுடைய மகன் கதிரவன். எனவே கதிரவன் திருமாலுக்குப் 'பேரன்' எனப்பட்டான். பாற்கடலில் திருமகளுடன் சந்திரன் தோன்றினான். ஆதலால் அச்சந்திரன் மைத்துனன் எனப்பட்டான்.

இரதம்-தேர். **வலவன்**-தேரோட்டி. **கால்**-சக்கரம். **நாண்**-வில்லின் நாண்கயிறு. **பகழி**-அம்பு. **சங்கரன்**-மங்கலத்தைச் செய்பவன். **மலர்அணை**-மலர் அணை போன்ற ஆதிசேடன் என்ற பாம்பு. 86

251. இளங்கதிர் விரிக்கும் கோடி
இரவியோர் உருவம் கொண்டு
வளங்கெழும் இரதம் ஒன்றின்
வந்தென நிற்க, ஐயன்
களங்கமில் அமரர் கண்கள்
களிப்பக்கண் டுவகை எய்தி
உளங்கவல் ஒருவி விண்ணின்று
ஒண்மலர் மாரி தூர்த்தார்.

மலர் மழை பொழிந்தனர்.

தெளிவுரை : இளைய கதிர்களைப் பரப்பும் கோடிக்கணக்கான கதிரவர்கள் ஓர் வடிவம் கொண்டு வந்தாற் போன்று வளம் பொருந்திய தேர் ஒன்றில் சிவபெருமான் ஏறியமர்ந்தருளினார். அதனால் களங்கம் இல்லாத தேவர்கள் அதனைக் கண்டு கண்கள் களிப்புக்கொள்ளப் பார்த்து மகிழ்ந்து உள்ளத்தை வருத்தும் கவலையை ஒழித்து வானினின்று ஒளியுடைய மலர் மழையைப் பொழிந்தனர்.

விளக்கம் : கோடி இரவி-கோடிக்கணக்கான கதிரவன். **வந்தென**-வந்தாற் போல; தோன்றினாற் போல. **ஐயன்**-சிவபெருமான். **களங்கம் இல் அமரர்**-குற்றம் இல்லாத தேவர்.

களிப்ப-மகிழ. **உவகை**-மகிழ்ச்சி. **உளம்கவல் ஒருவி**-மனத்தில் உள்ள கவலையை ஒழித்து. **மலர்மாரி**-பூமழை. **தூர்த்தார்**-பொழிந்து நிறைத்தார். 87

252. பாடினர் பரமன் சீர்த்தி,
பாதபங் கயங்கள் சென்னி
சூடினர், எழுந்து துள்ளித்
தொடைபுடைத் தனர்து ணங்கை
ஆடினர் துகில்எ றிந்து
பற்றினர், ஆசை தோறும்
ஓடினர் உவகை என்னும்
உததியில் படிந்த விண்ணோர்.

தேவர்களின் மகிழ்ச்சிச் செயல்கள்

தெளிவுரை : மகிழ்ச்சி என்னும் கடலில் மூழ்கிய தேவர்கள் மகிழ்ச்சி கொண்டு ஆடினார்கள்; சிவபெருமானின் புகழைப் பாடினார்கள்; சிவபெருமானின் தாமரைத் திருவடிகளைத் தலையில் சூடிக்கொண்டார்கள்; எழுந்து துள்ளித் தொடையைத் தட்டினர்; துணங்கைக் கூத்தாடினார்கள். மேலே துணியை வீசிப் பின் அதைப்பிடித்தார்கள். திக்குகள் தோறும் ஓடினார்கள்.

விளக்கம் : பரமன் சீர்த்தி-சிவபெருமானின் புகழ். **பாதபங்கயம்**-திருவடிகளாகிய தாமரைமலர்கள். **சென்னி**-தலை. **தொடைபுடைத்து**-தொடையைத் தட்டி. **துணங்கை**-கைகளைக் கோத்து ஆடும் ஆடல். **ஆசை**-திக்கு. **உவகை என்னும் உததி**-மகிழ்ச்சி என்ற கடல். **படிந்த**-முழுகிய. 88

253. மன்னுதன் நிலைபி ரிந்த
மயிரென இகழ்வுஇ லாதுஎன்
தன்னைநன் புனிதம் ஆக்கிச்
சகம்புகழ் சிறப்ப ளித்தான்
மின்னுசெஞ் சடையோன் என்னும்
மிகும்உவப்பு எய்தி ஆடல்
என்னநின்று இரும ருங்கும்
இரட்டினர் கவரி பல்லோர்.

குறைவிலா னந்த ஞானக்
கூத்துடை யாளி வந்தான்;
கறையுலாம் மிடற்றோன் வந்தான்;
என்றுஎழும் காக ளங்கள்.

கட்டியம் கூறப்பட்டது

தெளிவுரை : அறிவுவடிவான இறைவன் வந்தார். நம்மிடம் அன்பு கொண்டவர் வந்தார். பிறவி என்னும் மரத்தை வேருடன் அழிப்பவர் வந்தார். மிக்க அருள்உடைய மூர்த்தி வந்தார். குறைவு இல்லாத ஆனந்த ஞானக்கூத்து இயற்றும் பெருமான் வந்தார். கடுமையான நிறம் கொண்ட கழுத்தை உடையவர் வந்தார் என்று காகளங்கள் எங்கும் முழங்கின.

விளக்கம் : கறை-களங்கம்; நஞ்சுண்டதால் கறை ஏற்பட்டது. **மிடற்றோன்**-கழுத்தையுடைய சிவபெருமான். **காகளம்**-எக்காளம்; இசைக்கருவிகள். நீண்ட வங்கியம் என்ற கருவி என்பர். 92

257. நஞ்சுஉகும் எயிற்றுப் பேழ்வாய்
நாகமது அணிந்த எங்கோன்
வெஞ்சமர் புரியச் செல்வன்
மேருவில் பிடித்துஎன் றிட்ட
கஞ்சுகம் கிழிய வீங்கக்
கல்உறழ் குவவுத் திண்தோள்
நெஞ்சுகு உவகை விம்மப்
பாரிடம் நீத்தம் சூழ்ந்த.

பூதகணங்களின் களிப்பு

தெளிவுரை : நஞ்சை வெளிப்படுத்தும் பற்களையுடைய பிளவுபட்ட வாயையுடைய பாம்புகளை அணிந்து கொண்டிருக்கின்ற எம் சிவபெருமான், கொடிய மேருவில்லைப் பிடித்துக் கொண்டு போரை அவுணருடன் செய்யச் செல்கின்றான் என்று கல்போன்ற திண்மையான திரண்டதோள்களுடைய பூதகணங்கள் எல்லாம் தம் உடலில் அணிந்த சட்டை கிழியுமாறு பெருக்க, மனத்துள் மகிழ்ச்சி மிக ஒன்று கூடிச் சூழ்ந்து கொண்டன.

விளக்கம் : சிவபெருமான் மேருமலையை வில்லாகப் பற்றி அவுணருடன் போர் செய்யச் செல்கின்றான் என்பதால் பூதகணங்கள் உடல் சட்டை கிழியப் பூரித்தன. **நஞ்சுஉகு**-விடத்தைக் கக்கும். **எயிறு**-பல். **பேழ்வாய்**-பிளவு உடையவாய். **வெஞ்சமர்**-கொடியபோர். **இட்டகஞ்சுகம்**-அணிந்த சட்டை மிகழ்ச்சியால் உடல் பெருக்கச் சட்டை கிழிந்தன என்க. **வீங்க**-பெருக. **கல்உறழ்**-கல் போன்ற. **குவவுத் திண்தோள்**-திரண்ட திண்மையான தோள். **நெஞ்சுஉகு உவகை**-மனத்தில் பெருகும் மகிழ்ச்சி. **விம்ம**-பெருக. **பாரிட நீத்தம்**-பூதகணமான வெள்ளம். 93

258. வெள்ளிவெண் கொடுவாள் மாறி
வைத்தென விளங்கும் பல்ல,
பள்ளவெம் பிலன்நி கர்த்த
வாயின பருப்ப கத்தின்
உள்உறும் முழைகள் அன்ன
உள்துளைப் பெருந்துண் டத்த,
மெள்ளஇன் சொல்பு விக்கண்
விழும்இடி போலச் சொல்வ.

பூதகணங்களின் இயல்பு

தெளிவுரை : அந்தப் பூதகணங்கள் மிக்க வெண்மையான கொடிய வாள்களை இருபக்கங்களிலும் வைக்கப்பட்டது போல் விளங்கும் பற்களை உடையவை. பள்ளமான கொடிய பாதலம் போன்ற வாய்களை உடையவை. மலைகளின் உள்ளே உள்ள குகைகளைப் போன்ற உள்ளே துளைகளை உடைய பெரிய மூக்குகளை உடையவை. அவை மெள்ளக் கூறும் இன்சொற்கள் உலகத்தில் இடி இடிப்பவை போல் கூறும் இயல்புடையவை.

விளக்கம் : வெள்ளி வெண்கொடுவாள்-வெள்ளியால் ஆன வெண்மையான கொடிய வாள்கள். **மாறிவைத்தென**-எதிர் எதிராக மாற்றிவைத்தாற் போல். **பிலன்**-பாதலம்; குகையுமாம். **வாயின**-வாய்களை உடையன. **பருப்பதத்தின் உள்உறு**- மலையின் உள்ளே பொருந்திய. **முழைகள்**-குகைகள். **துண்டத்த**-மூக்குகளை உடையன. பூதகணங்கள் மெல்லக் கூறும் சொல்லும் புவியின் மீது இடி விழுவதைப் போல் விளங்குமாம். **சொல்வ**-கூறுவன. 94

259. மண்டல ஆடி என்ன
    வயங்குளரி சிதறுண் கண்ண,
ஒண்தழல் நிமிர்ந்து எழுந்தது
    ஒத்தகுஞ் சியின இந்த
அண்டமது இடினும் ஆற்றா
    அகட்டின, குறுகும் தாள,
பண்டுள பூதம் ஐந்தும்
    படைத்தளித்து அழிக்கவல்ல.

பூதங்களின் வயிறு, தலைமயிர், கால் முதலியன

தெளிவுரை : அப்பூதங்களின் கண்கள் கதிரவனைப் போன்ற விளங்கும் தீ சிதறியதைப் போல் கண்களையுடையன. ஒள்ளிய தீக்கொழுந்து நிமிர்ந்து எழுந்ததைப்போன்ற தலை மயிரை உடையன. இந்த உலகத்தை உணவாக உண்டாலும் நிரம்பப் பெறாத வயிற்றை உடையவை. குறுகிய கால்களை உடையவை. பழமையுடைய மண், விண், நீர், தீ, காற்று என்ற ஐந்து பூதங்களையும் படைத்துக் கொடுக்கவல்ல ஆற்றலை உடையவை.

விளக்கம் : மண்டலஆடி-கதிரவன். **வயங்குளரி**-சுடர்விடும் தீ. **கண்ண**-கண்களை உடையன. **ஒண்டழல்**-ஒளியுடைய தீ. **குஞ்சியின**-தலை மயிரை உடையன. பூதங்களின் தலை மயிர் தீக்கொழுந்து உயர்ந்து எழுந்தது போல் விளங்கின. தீயின் செந்நிறமும் உயர்ந்து நிற்றலும் தலை மயிர்க்கு உவமை. **ஆற்றா**-போதா. **அகட்டின**-வயிற்றை உடையன. **குறுகும் தாள**-குறுகிய கால்களை உடையன. **பூதம் ஐந்து**-மண், விண், தீ, நீர், காற்று. **வல்ல**-வல்லமை உடையன. 95

260. "அத்தன்என் தன்னை நீயே
    அவுணரைக் கொல்எ னானோ,
இத்திரள்த னில்எற்கு இன்றி
    யார்க்குஅமர் கிடைக்கு மோஎன்
ஒத்தவர் அடநான் பார்த்து
    வறிதுறு குவனோ, என்று
தத்தமில் நினைந்து வாடும்
    தன்மைய பூதம் முற்றும்.

பூதங்களின் நினைவு

தெளிவுரை : சிவபெருமான் என்னை நோக்கி, 'நீயே அவுணரைக் கொல் என்று கூறமாட்டாரோ!' இத்தகைய கூட்டத்தில் எனக்கே அல்லாது எவர்க்கு இத்தகைய போர் கிடைக்குமோ? என்னைப் போன்றவர் போரிட நான் பார்த்துக் கொண்டு வீணே இருப்பேனோ?' என்று பூதங்கள் ஐந்தும் தங்களுக்குள் நினைந்து வாட்டம் அடையும் இயல்பை உடையன.

விளக்கம் : அத்தன்-தலைவரான சிவபெருமான். **எனானோ**-எனக் கூறமாட்டாரோ. **இத்திரள் தனில்**-இக்கூட்டத்தில். **எத்தவர் அட**-எனக்குச் சமமானவர் போரிட. **வறிது**-வீணே. **தத்தமில்**-தங்களுக்குள். 96

261. விண்ணகம் நிறைந்த, ஆதி
    விதியகம் நிறைந்த, மாயோன்
கண்ணகம் நிறைந்த, ஓதைக்
    கடலகம் நிறைந்த பாழி
மண்ணகம் நிறைந்த, மேவி
    வரையகம் நிறைந்த, எங்கும்
மண்ணகம் நிறைந்த, ஓசைப்
    பரிசில் நிற்பனக ணங்கள்.

பூதகணங்கள் நிறைந்தன

தெளிவுரை : ஓசைத்தன்மையையுடையமையால் பூதகணங்கள் வானில் எல்லாம் நிறைந்தன. பழமையுடைய பிரம உலகத்திலும் நிறைந்தன. திருமால் வைகுத்திலும் நிறைந்தன. ஓசையையுடைய ஏழு கடல்களிலும் நிறைந்தன. அகன்ற மண் உலகத்திலும் நிறைந்தன. மலையிலும் பொருந்தி நிறைந்தன. மற்றும் எங்கும் நிறைந்தன.

விளக்கம் : விண்ணகம்-வானம்; தேவர் உலகுமாம். **விதியகம்**-நான்முகனின் உலகம். **மாயோன் கண்ணகம்**-திருமாலின் வைகுந்தம். **வரையகம்**-மலை.

பூதகணங்கள் எழுப்பிய ஓசை விண்ணகம் முதலியவற்றில் நிறைந்தன என்க. ஓசையையுடைய பூதகணங்கள் விண்ணகம் முதலியவற்றில் நிறைந்தன எனவும் கூறலாம். 97

262. குதிப்பன, வயிரத் திண்தோள்
கொட்டுவ தம்மைத் தாமே
துதிப்பன அமர்வேட்டு அண்ணல்
தொழுவன, தங்கள் ஆற்றல்
மதிப்பன வரைக ளைந்து
தாங்குவ, வாரி உட்க
அதிர்ப்பன மகிழ்வ ஆகி
அடற்கணம் சென்ற அம்மா.

பூதகணச் செயல்கள்

தெளிவுரை : வன்மையுடைய பூதகணங்கள் குதித்தன; வயிரம் போல் சிறந்த தோள்களைத் தட்டின; தம்மைத் தாமே வணங்கிக் கொண்டன; போரை விரும்பிய சிவபெருமானைத் தொழுதன. தங்கள் ஆற்றல்களைப் பாராட்டிக் கொண்டன. மலைகளைப் பிடுங்கிக் கையில் தாங்கின. கடலானது அஞ்சும்படி ஆரவாரம் செய்தன. மகிழ்ந்தனவாய் இறைவருடன் சென்றன.

விளக்கம் : வயிரத்திண்தோள்-வயிரம் போன்று சிறந்த திண்ணிய தோள். **கொட்டுவ**-தட்டின. **அமர்வேட்டு**-போரை விரும்பிய. **அண்ணல்**-சிவபெருமான். **வரை களைந்து**-மலைகளைப் பிடுங்கி. **வாரி**-கடல். **உட்க**-அஞ்ச. **அடல்கணம்**-வன்மையுடைய பூதகணம். 98

263. கற்புயம் கொட்டி, அண்ட
கடாகமும் அதிர ஆர்த்து,
வற்புறும் பூத வெள்ளம்
வந்திட உம்பர் எண்ணில்
பொற்புறு கவிகை ஓங்கிப்
புணரிகள் ஏழும் ஆர்ப்பப்
பற்பல மதிஎ ழுந்த
பரிசுஎன நிகழ்ந்த மாதோ.

தேவர்களின் பல்லக்குகள் வந்தன

தெளிவுரை : கல் போன்ற தோள்களைத் தட்டி உலகங்களும் புறவுலகங்களும் அதிர்ச்சி கொள்ள ஆரவாரம் செய்து

வன்மையுடைய பூதகணம் என்ற வெள்ளம் வந்தது. வரவும், எண்ணில்லாத தேவர்கள் ஏறிய அழகிய பல்லக்குகள் ஓங்கிக் கடல்கள் ஏழும் ஆரவாரம் செய்து எழப்பலபல சந்திரன்கள் எழுந்து தோன்றியதைப் போல விளங்கின.

விளக்கம் : கற்புயம்-கல்லைப் போன்ற தோள். **அண்டகடாகம்**-அண்டகோள ஓடு. **அதிர**-அதிர்ச்சி அடைய. **ஆர்த்து**-ஆரவாரம் செய்து. **பூதவெள்ளம்**-பூதகணங்களாகிய வெள்ளம். **உம்பர்**-தேவர். **கவிகை**-பல்லக்கு. தேவரின் பல்லக்கு எழுந்த தோற்றம் சந்திரன்பல தோன்றியதைப் போல் விளங்கியது. **புணரிகள்**-கடல்கள். கடல்கள் சந்திரனின் தோற்றத்தால். பொங்கி எழும். அதுபோல் தேவர்களின் பல்லக்குகள் சென்றன. கடல்கள் ஏழு. அவையாவன : நீர்க்கடல், பாற்கடல், தேன்கடல், தயிர்க்கடல். **பரிசு**-தன்மை. **மாதோ**-அசை நிலை. 99

264. பொன்உலகு இகழும் என்னைப்
பொருவம்என்று அகிலம் போவது
என்னநுண் துகள்சென்று ஏற
எதிர்த்துஅது மலைதல் ஒப்ப
துன்உறும் அமரர் தம்பொன்
சுண்ணம்வந்து உடன்க லப்ப
மின்உறும் கொடிஅ டித்து
விலக்குவ போல ஆடும்.

கொடிகள் அசைதல்

தெளிவுரை : பொன் உலகம் என்னை இகழும். ஆதலால் அதனுடன் போர் செய்வேன் என்று மண்ணுலகம் செல்வதைப் போன்று, படைகள் சென்றதால் உண்டான நுண்மையான மண்துகள் போய் ஏற அதை எதிர்த்து போரிடுவது போல், பொன் உலகத்தவரின் பொன்போன்றச் சுண்ணம் வந்து கலந்தது. அதை மின்னல் என்ற கொடியால் அடித்து விடுவது போல் கொடிகள் அசைந்து விளங்கும்.

விளக்கம் : பொருவன்-போரிடுவேன். **அகிலம்**-மண்உலகம் பூவுலகம் பொன்னுலகத்துடன் போரிடப் போவது போல் நுண்துகள்

மேலே சென்றது. அங்ஙனம் சென்ற அதைத் தேவர் உலகத்து சுண்ணம் எதிர்த்துக. கலந்தது. அக்கலப்பைப் படையில் உள்ள கொடிகள் விலக்கின என்க! **நுண்துகள்**-நுண்மையான தூசி. அத்தூசி படைகள் செல்வதால் உண்டாயது. **மலைதல் ஒப்ப**-போரிடுவதைப் போன்று. **பொற்சுண்ணம்**-தேவரது அழகிய நறுமணம் உடைய சுண்ணப்பொடி. **மின்உறும்கொடி அடித்து**-மின்னல் போல் ஒளிரும் கொடியால் அடித்து. **விலக்குவ போல ஆடும்** விலக்குவதைப் போன்று அசையும். 100

வேறு

265. இந்த வாறுஎழும் பூதவெள்ளங் களின் இடையே
அந்தி வானிறம் அனையவன் ஆழிஅம் தடந்தேர்
கந்த வாரிசப் பண்ணவன் தென்திசைக் கடவ
வந்த வானவர் அனைவரும் துவன்றுற வந்தான்.

தேர் தென்திசையில் செலுத்தப்படல்

தெளிவுரை : இவ்வாறு எழுந்த பூதகணங்களாகிய வெள்ளம் நடுவே, மாலை நேர வானைப் போன்ற சிவபெருமான், சக்கரத்தையுடைய பெரிய தேரை நறுமணம் உடைய தாமரைமலர் மேல் வீற்றிருக்கும் நான்முகன் தெற்குத்திசையில் செலுத்த அங்கு வந்த தேவர் அனைவரும் நெருங்கியபடி வர வந்தான்.

விளக்கம் : நான்முகன் தேரைச் தென்திசையில் செலுத்தச் சிவபெருமான் தேவர்கள் அனைவரும் வந்தனர்.

பூதவெள்ளங்கள்-பூதகணங்களின் கூட்டம். **அந்திவான் நிறம் அனையவன்**-மாலையில் தோன்றும் வானின் நிறத்தையுடைய சிவபெருமான். **தடந்தேர்**-பெரியதேரை. **கந்தவாரிசப்பண்ணவன்**-நறுமணம் பொருந்திய தாமரைமலர்மீது வீற்றிருக்கின்ற இயல்புடைய நான்முகன். தடந்தேர் தென்திசைக்கடவ என இயையும். **கடவ**-செலுத்த. **துவன்றுற**-நெருங்கிவர. 101

266. பூத நாயகன் கயிலைஅம் பொருப்புவிட்டு அலகில்
காதம் ஓர் இறைப் பொழுதினில் கடந்துவந் தருளிச்
சீத வார்பொழில் கூவம்என் திருநகர் அடைந்தான்
பாத தாமரை வணங்கிவிண் ணவர்குழாம் பரவ.

கூவநகரை அடைதல்

தெளிவுரை : பூதங்களுக்குத் தலைவனான சிவபெருமான் கயிலை என்ற அழகிய மலையை விடுத்து அளவில்லாத காததொலைவை ஓர் இமைப்போதில் கடந்து வந்து அப்பெருமானின் திருவடித் தாமரைகளை வணங்கியபடி தேவர்கூட்டம் துதித்தபடி வர குளிர்ந்த நீண்ட சோலைகள் சூழப்பெற்ற கூவம் என்ற அழகிய நகரை அடைந்தான்.

விளக்கம் : கூவம் என்ற நகரைச் சிவபெருமான் அடைந்தார். கூவம் என்பது கூவரம் என்பதன் விகாரம். இதன் காரணம் முன்னர்க் கூறப்பட்டது. பின்னும் கூறப்படும்.
அலகில் காதம்-எல்லையற்ற காத தொலைவு. **ஓர் இறைப் போதில்**-ஓர் இமைப்பொழுதில். **சீதம்**-குளிர்ச்சி. **வார் பொழில்**-நீண்ட சோலை. **பரவ**-துதிக்க 102

267. அங்குஅப் போதினில் கடம்எனும் திருவருள் அறாத
துங்கப் போதக முகப்பிரான் இதழியம் தொடையோன்
தங்கப் போதிர தத்தின்ஆர் தன்புழைக் கரத்தால்
சிங்கப் போய்ஒடித் திட்டனன் திடுக்கிட எவரும்.

விநாயகர் சிவபெருமானின் தேரின் அச்சை ஒடித்தல்

தெளிவுரை : அங்கு அப்போது, மதம் என்ற திருவருள் நீங்கப் பெறாத உயர்ந்த யானைமுகம் உடைய விநாயகப் பெருமான், கொன்றை மலர் மாலையை அணிந்து சிவபெருமான் வந்து தங்கிய அப்போது சிவபெருமானின் அச்சினைத் தன் துளையுடைய கையால் அழியும்படி அருகில் போய்ப் பற்றி எல்லாரும் திடுக்கிட ஒடித்தார்.

விளக்கம் : **கடம்**-மதம். **தூங்கப் போதகமுகப்பிரான்**-உயர்ந்த யானை முகம் உடைய விநாயகர். **இதழி அம்தொடையோன்**-அழகிய கொன்றை மாலையை அணிந்த சிவபெருமான். **தங்கப்போது**-தங்கு+அப்போது; கூவநகரில் வந்து தங்கிய அப்போது. **புழைக்கரம்**-துளையையுடைய துதிக்கை. **சிங்க**-அழிய. சிவபெருமான் கூவத்தில் வந்து தங்கியபோது விநாயகர் அருகில போய் யாவரும் திடுக்கிடச் தேர்ச்சக்கரத்தின் அச்சை ஒடித்தார். தந்தையின் தேர் அச்சை மகன் ஆன விநாயகர் ஒடித்ததால் எல்லோரும் திடுக்கிட்டனர். 103

268. பொருக்எனச் சினவிடை உருக் கொண்டுஇடை புகுந்தான்
நிரைக்கும் நற்கொடி வையம்வென் தாங்கினன் நெடும்பாம்பு
அரைக்கு அசைத்தவன் அன்பினில் நிகரிலாது அமரர்
வருக்கம் முற்றும்வந்து இறைஞ்சுபொன் பதாம்புய மாயன்.

திருமால் தேரைத் தாங்குதல்

தெளிவுரை : உடனே நீண்ட பாம்பை இடையில் கட்டிய சிவனிடம் நீங்காத அன்பினில் நிகர் இல்லாது, விளங்குபவனும், தேவர்கள் இனம் முழுதும் வந்து வணங்கும் திருவடிகளை உடையவனுமான திருமால் சினம் கொண்ட எருதின் வடிவம் கொண்டு இடையில் புகுந்து வரிசையாய் அமைந்த கொடிகளையுடைய தேரைத் தன் முதுகிலே தாங்கினான்.

விளக்கம் : **பொருக்கென**-உடனே. **சினவிடைஉருக்கொண்டு**-சினம் உடைய எருதின் வடிவம்கொண்டு. **நிரைக்கும் நற்கொடி வையம்**-வரிசைப்படக்கொடிகள் கட்டப்பட்ட தேர். **வென்றாங்கினான்**-வென்+தாங்கினன்; முதுகில் தாங்கினன். **நெடும்பாம்பு அரைக்கசைத்தவன்**-பெரிய பாம்பை இடையில் கட்டிய சிவபெருமான். **அமரர் வருக்கம்**-தேவர் இனம். **பொன் பதாம் புய மாயன்**-அழகிய திருவடியாகிய தாமரையை உடைய திருமால். தேர் ஒடிந்ததும் திருமால் எருதாய் வடிவு கொண்டு தன் முதுகில் சுமந்தான். 104

269. தந்தை யுற்றருள் இரதகூ வரத்தினைத் தனயன்
வந்து இறுத்தலும் இமையவர் மனம்பதைத்து இன்னல்
முந்தை யின்பதின் மடங்குஉறீஇ முகத்துஅறைந்து அழல்உற்று
எந்தம் ஒட்டலர் செயல்எனத் திசைதொறும் இரிந்தார்.

தேவர்கள் அஞ்சி ஓடல்

தெளிவுரை : தன் தந்தையான சிவபெருமான் ஏறியிருந்த தேரின் ஏர்க்காலுடன் கூடிய அச்சையும் ஆரையும் மகனான விநாயகர் ஒடித்தார். ஆதலால் தேவர்கள் உள்ளம் பதைத்தனர். முன்னைவிட மிக்க பத்து மடங்கு துன்பம் அடைந்தனர். தம் முகத்தில் அடித்துக் கொண்டு அழுதனர். 'எம் பகைவரின் செயலோ!' என்று கூறி திக்குகள் தோறும் அஞ்சி ஓடினர்.

விளக்கம் : **கூவரம்**-ஏர்க்கால்; ஏர்க்காலுடன் ஆரையும் அச்சையும் ஒருசேர ஒடித்தார். இதுபொதுவாக அச்சை ஒடித்தார் என்றே கூறப்படுகிறது. **தனயன்**-மகனான விநாயகர். **இறுத்தலும்**-ஒடிக்கவும். **பதின்மடங்கு**-பத்துமடங்கு; பல மடங்கு. **இன்னல்**-துன்பம். **உறீஇ**-அடைந்து. **எந்தமொட்டலர்**-எம்தம்+ ஒட்டலர்;எம் பகைவர். **இரிந்தார்**-ஓடினார்கள். 105

270. அருள்உ லாம்திரு முகங்கள்ஓர் ஆறும்ஒள் அலங்கல்
புரளும் மார்பமும் புயங்களும் அருமறைப் பொருளாய்த்
தெருள்உ லாம்பத மலரும்கொண்டெனதுளம் திகழ்வான்
வெருள்உ லாமனத்து இரியல்போம் விண்ணவர்க் கண்டான்.

அஞ்சி ஓடும் தேவரை முருகன் பார்த்தல்

தெளிவுரை : அருள் பொருந்திய திருமுகங்கள் ஆறும் ஒளியுடைய மலர் மாலை புரளும் மார்பும் தோள்களும் அரிய வேதத்தின் பொருளாய்த் தெளிவு பொருந்திய திருவடிமலரும் கொண்டு என் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற முருகப் பெருமான் அச்சம் பொருந்திய உள்ளத்துடன் அஞ்சித் திசைதோறும் ஓடும் தேவர்களைக் கண்டருளினார்.

விளக்கம் : **அருள்உலாம்**-கருணை நிலவும். **ஒள்அலங்கல்**-ஒளியுடைய மலர் மாலை. **புயங்கள்**-தோள்கள். **தெருள்உலாம்**-தெளிவு பொருந்திய. **பதமலர்**-திருவடியாகிய தாமரைமலர். **எனதுளம்**-இந்நூலாசிரியரின் உள்ளம். **வெருள் உலாம்**-அச்சம் பொருந்திய. **உலாம்**- 'உலாவும்' என்பதன் தொகுத்தல் விகாரம். **இரியல்போம்**-அஞ்சி ஓடும். **போம்**-'போகும்' என்பதன் விகாரம். **விண்ணவர்**-தேவர். 106

271. நின்மின் நின்மின்நீர் அஞ்சலிர் நிகழும்என் தந்தை
பொன்மி ளிர்ந்திடு தேரின் ஆர் ஒடித்தவர், புலவீர்
என்முன் வந்திடும் கரிமுகத்து அண்ணல்அவ் எயில்சேர்
வன்ம னம்பெறும் அவரல வம்மின் என்று அழைத்தான்.

அபய மொழி கூறுதல்

தெளிவுரை : அஞ்சி ஓடும் தேவர்களைக் கண்டருளிய முருகப்பெருமான், அவர்களைப் பார்த்து, 'நில்லுங்கள்!

நில்லுங்கள்! அஞ்சாதீர், இங்கு வந்தருளிய என் தந்தை சிவபெருமானின் பொன் போன்று விளங்கும் தேரின் ஆர்க்காலை ஒடித்தவர், அறிவுடையீரே, எனக்கு முன்பு இங்கு வருபவர் யானை முகத்தையுடைய விநாயகர் ஆவர். அந்தக் கொடிய வலிய மனம் படைத்த பகைவர் அல்லர். ஆதலால் அஞ்சி ஓட வேண்டா! வாருங்கள்!' என்று உரைத்தருளினார்.

விளக்கம் : பகைவர் சிவபெருமானின் தேர் அச்சை ஒடித்தார் என்பதால் அஞ்சி ஓடிய தேவரைப் பார்த்து முருகன் அவர்களுக்கு உண்மையைக் கூறி நிற்கும்படி அருளுகின்றார்.

நின்மின்-நில்லுங்கள். **அஞ்சலிர்**-பயப்படாதீர். **பொன்மிளிர்ந்திடு தேர்**-சிவபெருமானுக்குரிய தேர் பொன்மயமானது. ஆதலால், பொன் மிளிர்ந்திடு தேர் என்றார். **பொன்**-அழகு. **புலவிர்**-விளி. **வன்மனம் பெறும் அவரலர்**-தேர் ஆரை ஒடித்தவர் கொடிய மனம் கொண்ட அவுணர் அல்லர். **வம்மின்**-வாருங்கள். 107

272. மீண்டு வானவர் குகன்புடை அடைந்துஇனி வெம்போர்
ஆண்ட நாயகன் புரிவதுஎவ் வாறுஎன வையம்
பூண்டு நின்றனர் நம்இறை புதல்வன்முன் தனையாம்
வேண்டி வந்துஇர தம்புகாமையில் இது விளைத்தான்.

விநாயகர் தேரின் அச்சை ஒடித்ததற்குக் காரணம்

தெளிவுரை : தேவர்கள் அச்சம் நீங்கப்பெற்றுத் திரும்பி முருகப்பெருமானை அடைந்தனர். இனிச் சிவபெருமான் கொடிய போரைப் போர் ஆற்றுவது எங்ஙனம்? என்றனர். தேரில் அமர்ந்தருளிய சிவபெருமான் 'முதலில் நம் முதல்மகன் விநாயகனை வணங்கிய பின்பு தேரில் ஏறாததால் இதை அவர் செய்தார்' என்றார்.

விளக்கம் : **முருகன்புடை**-முருகப்பெருமானின் அருகில். **வெம்போர்**-கொடிய போர். **நாயகன்**-சிவபெருமான். **வையம்**-தேர். **வேண்டி**-வழிபட்டு வேண்டி. **புகாமையில்**-புகாததால். **இது விளைத்தான்**-இதைச் செய்தான். 108

273. என்று உளம்கொடு மலைமகள் ஈன்றருள் யானைக்
கன்றை வந்தனை செய்கிலார் முயல்தரும் கருமம்
பொன்றும் என்பது காட்டிடக் கூவமா புரத்தில்
அன்றுஅ வன்கழல் கனிமுதல் கொண்டுஅருச் சித்தான்.

சிவபெருமான் விநாயகரை வழிபடல்

தெளிவுரை : சிவபெருமான் என்று மனத்தில் எண்ணி மலைமகளான உமையம்மையார் ஈன்றருளிய யானைக் கன்று போன்ற விநாயகரை வழிபடாது செய்ய முயல்கின்ற செயல் அழிந்து விடும் என்பதைக் காட்டக் கூவமாநகரில் அன்று அவனது அடியைக் கனி முதலியவற்றைக் கொண்டு வழிபட்டார்.

விளக்கம் : **கொடு**-கொண்டு. **மலைமகள்**-இமயமலையின் மகளான உமை. **யானைக்கன்று**-யானைக் கன்றைப் போன்ற விநாயகர். **முயறருங்கருமம்**-முயல்+தரும்+கருமம்; செய்யும் செயல். **பொன்றும்**-அழியும். **காட்டிட**-யாவரும் அறியப் புலப்படுத்த. **கூவமாபுரத்தில்**-கூவநகரில். **அவன்கழல்**-விநாயகர் திருவடியை. **கனிமுதல் கொண்டு**-பழங்கள் முதலியற்றைக் கொண்டு. **அருச்சித்தான்**-வழிபட்டார். 109

274. பின்பு விண்ணவர் மனத்துயர் பெயர்ந்திடத் தனது
முன்பு மும்மதில் வந்துற முன்னினன் முதல்வன்,
அன்பு கொண்டுஒரு நூறியோ சனைஅகல் மதில்கள்
துன்பு பெற்றிட அனைவரும் துண்என அடைந்த

முப்புரங்கள் வந்தன

தெளிவுரை : சிவபெருமான் பின்னர் தேவர்களின் உள்ளத் துயரம் நீங்கத் தம் முன்பு மூன்று புரங்களும் வரும்படியாக அன்புடன் எண்ணினார். ஒருநூறு யோசனை அகன்ற அம்மதில்கள் மூன்றும் அனைவரும் அச்சம் கொள்ள துன்பம் பெற்றிட வந்தன.

விளக்கம் : **பெயர்ந்திட**-நீங்க. **மும்மதில்**-முப்புரங்கள். **முன்னினன்**-நினைத்தான். **துன்பம் பெற்றிட**-துன்பம் கொள்ள. **துண்ணென**-அச்சம் கொள்ள. **அடைந்த**-வந்தன. 110

275. கரிக ளோடுமா ருதந்தனில் விரைந்துபாய் கவனப்
பரிக ளோடும்விண் முகடுஉழும் படுமணி இரதக்
கிரிக ளோடும்வெண் கனலினும் கிளர்சினக் கழற்கால்
அரிக ளோடும் வந்து அமர்செய்வான் சமைந்தனர் அவுணர்.

அவுணர் வந்தனர் போரிட!

தெளிவுரை : போர் செய்யும் ஆனைகளோடும், காற்றைப் போன்று விரைவாகப் பாய்ந்து ஓடும் ஓட்டத்தையுடைய குதிரைகளோடும் வானின் உச்சியைத் தொடும்படி ஒலிக்கும் மணிகட்டிய மலைபோன்ற தேர்களோடும் வெண்மையான தீயை விடக்கிளர்ச்சி பெற்று எழும் சினம் உடைய கழல் அணிந்த காலையுடைய காலாட்படைகளோடும் வந்து போர் செய்தற்காக அமைந்தனர்.

விளக்கம் : **கரிகள்**-யானைகள். **மாருதந்தனின்**-காற்றைவிட. **கவனம்**-நடை;ஓட்டம். **அரி**-காலாட்படை. **படுமணி**-ஒலிக்கும் மணி. **இரதக்கிரி**-தேராகிய மலை; மலை போன்ற தேர். **கழற்கால்**-கழல் என்னும் அணியை அணிந்த கால். **செய்வான்**-செய்தற்காக. **சமைந்தனர்**-போருக்குத் தயாராய் வந்தனர். 111

276. கண்டு மற்றது விண்ணவர் கலக்கம்உற்று உயிர்கோ
தண்டம் வைத்தலைச் சுடுசரம் இடம்வலத் தடக்கை
கொண்டு நிற்பவன் குறுகிநல் வேலைஈது அடுதற்கு
எண்தயித் தியர்ச் சமர்புரிந் தட்டுஅருள் என்றார்.

அவுணரைக் கொன்றருளுக!

தெளிவுரை : அங்ஙனம் அவுணர் வந்து நிற்பதைத் தேவர் பார்த்தனர். கலக்கம் அடைந்தனர். உயர்ந்த வில்லை இடக்கையில் கூர்மையான சுடும் அம்பைப் பெரிய வலக்கையிலும் கொண்டு நிற்கும் சிவபெருமானிடம் வந்தனர். 'இது தக்க சமயம் போர் செய்தற்கு! போர் செய்ய வந்த அவுணரைப் போரிட்டு அழித்தருளுக!' என்றனர்.

விளக்கம் : **கண்டு**-போரிட வந்த அவுணரைப் பார்த்து. **விண்ணவர்**-தேவர். **கலக்கம் உற்று**-கலக்கத்தை அடைந்து. **உயர்**

கோதண்டம்-நீண்ட வில். **வைத்தலை**-கூர்மையான உச்சியை உடைய. **சுடுசரம்**-சுடுகின்ற (கொல்லுகின்ற) அம்பு. **தடக்கை**-பெரியகை. **நிற்பவன்**-போரிட ஆயத்தமாய் நின்ற சிவபெருமான். **எண்டயித்தியர்**-எண்+தயித்தியர்; கருதத்தக்க அவுணர். **அட்டருள்**-அட்டு+அருள்; கொன்றருளுக. 112

277. என்று விண்ணவர் இயம்பியது எம்பிரான் வினவி,
நன்றில் நங்கையை நோக்கினன் நகைக்க, அந்நகையின்
நின்று வன்தழல் கொழுந்து ஒரு நிமிடத்தில் பாதி
சென்றுஒ டுங்கும்முன் புரங்களில் சென்றுபற் றியதே.

சிரிப்பினின்று எழுந்த தீ முப்புரங்களில் பற்றியது!

தெளிவுரை : என்று தேவர் கூறியதைச் சிவபெருமான் கேட்டருளினார். நன்மையுடைய விருப்புடன் உமையம்மையைப் பார்த்தார். பார்த்து நகைத்தார். நகைக்க அந்த நகையினின்று வலிய தீக்கொழுந்து ஓர் அரை இமைப்போதில் சென்று ஒடுங்குவதற்கு முன்பு திரிபுரங்களில் போய்த்தீ பற்றியது.

விளக்கம் : **இயம்பிது**-கூறியதை. **வினவி**-கேட்டருளி. **நங்கையை**-பக்கத்தே இருந்த உமையம்மையை. **நோக்கினன் நகைக்க**-பார்த்துச் சிரிக்க. **நன்றின்**-விருப்புடன். **வன்தழல் கொழுந்து**-வன்மையுடைய தீக்கொழுந்து. **நிமிடத்தில்பாதி**-அரை இமைப்போதில். **ஒடுங்குமுன்**-அடங்குதற்கு முன்னம். **புரங்களில்**-அவுணர்களின் கோட்டைகளில். 113

278. பகவன் வாய்மலர் வைத்திருந்து உமிழ்ந்ததெனப் பற்றித்
திகுதிகு என்றுஎரிந்து எழும் அழல்கொழுந்துசேண் அளப்பத்
தகுவர் மென்புழு எனப்பதை பதைத்துஉயிர் தணந்தார்
நிகரில் நீறுபட் டிடாவுடல் நீறுபட் டனவே.

புரங்களும் அவுணரும் சாம்பலாதல்

தெளிவுரை : சிவபெருமான் வாய்மலரில் வைத்துக் கொண்டிருந்து உமிழ்ந்ததைப் போல் அத்தீ திரிபுரங்களில் பற்றித் திகு திகு என்று எரிந்து எழும் அழற்சுடர் நெடுந்தொலைவு வரை போய்ப்

பொருந்த, அவுணர் மென்மையுடைய புழுவைப் போன்று துடிதுடித்து உயிர் தளரப் பெற்றார். ஒப்பில்லாத திருநீற்றை அணியாத அவர்களின் உடல் சாம்பலாகியது.

விளக்கம் : பகவன்-சிவபெருமான். **உமிழ்ந்தென**-உமிழ்ந்ததைப் போன்று. **வாய்மலர்**-மலர் போன்ற வாய். **திகு திகு**-ஒலிக்குறிப்பு. **சேண்**-தொலைவு. **தகுவர்**-அவுணர்; தக்கவர் அல்லாதவரைத் தகுவர் என்றது இகழ்ச்சிக் குறிப்பு. **நீறுபட்டிடா உடல்**-விபூதியை அணியாதவுடல் முன்னம் விபூதியை அணிந்து பின்பு விபூதியை அணியாத உடல் என்க. **உயிர் மென்புழு**-மென்மையான புழு. **உயிர்தளந்தார்**-தளரப் பெற்றார். **நீறுபட்டன**-சாம்பலாயின. விபூதியை அணியாத உடல் சாம்பலாகும் என்பது குறிப்பு. 114

279. தேர்எ ரிந்தன, புரவிகள் எரிந்தன, செழுங்கைக்
கார்எ ரிந்தன, சிகரமும் எரிந்தன, கழகச்
சார்எ ரிந்தன, பொழில்இனம் எரிந்தன, தகுவர்
ஊர்எ ரிந்தன, எரிந்தன அடங்கலும் ஒருங்கு.

எரிந்தன! எரிந்தன! எரிந்தன யாவும்!

தெளிவுரை : அச்சமயத்தில் அவுணர்களின் தேர்கள் எரிந்தன. அவர்களின் குதிரைகள் எரிந்தன. செழுமையான கைகளையுடைய யானைகள் எரிந்தன. மலை போன்ற தேர்கள் எரிந்தன. கழக இடங்கள் எரிந்தன. சோலைக்கூட்டங்கள் எல்லாம் எரிந்தன. அவுணர்களின் ஊர்கள் எரிந்தன. அவர்க்கு உரியவை எல்லாம் ஒருங்கே எரிந்து போயின.

விளக்கம் : புரவி-குதிரைகள். **செழுங்கைக்கார்**-செழுமையான கைகளையுடைய யானைகள். கார்கரிய நிறம் உடைய யானைகள்; ஆகுபெயர். **சிகரம்**-மலை போன்ற தேர்கள்; உவமையாகு பெயர். **கழகச்சார்**-பொதியில்; மன்ற இடங்கள். **சார்**-இடம். **பொழிலினம்**-சோலைக் கூட்டம். **தகுவர்ஊர்**-அவுணரின் திரிபுரங்கள். **அடங்கலும்**-முழுவதும். 115

280. திருத்தம் ஒன்று எயில் மூன்றுநெக்கு உருகுபு சிதைந்த
கருத்தர் என்றுஅவண் உறையும்முக் கயவரும் அடைந்த
வரத்தின் நின்றனர் மரித்திடாது அளிவர மலர்ந்து
விரைத்த தண்பணை இழந்துறும் வெறியபா தவம்போல்.

கிளைகளை இழந்து மரம் போன்று விளங்கினர்

தெளிவுரை : திருத்தம் பொருந்திய (செவ்வையான) மூன்று புரங்களும் தீயால் நெகிழ்ந்து உருகிச் சிதைந்தன. அவற்றுக்கு உரியவர் என்ற அவுணர்களும் அங்கு வாழ்ந்த மூன்று கயவர்களும் பெற்றிருந்த வரத்தின் பலத்தால் இறக்காமல் இருந்தனர். அத்தோற்றம் வண்டு மொய்க்க மலர்ந்து நறுமணம் மலர் பொருந்திய குளிர்ந்த கிளைகளை எல்லாம் இழந்து வெறுமையாக விளங்கும் மரம் போல் விளங்கியது.

விளக்கம் : திருத்தம் ஒன்று-திருத்தமாய் அமைந்த; மயன் என்ற தேவதச்சனால் நன்கு அமைக்கப்பட்டவை திரிபுரங்கள். ஆதலால் 'திருத்தம் ஒன்று' என்றார். **உருகுபு**-உருகி. 'செய்பு' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். **கருத்தர்**-முதல்வர்; உரியவர்; அவுணர். **அவண்**-அந்த முப்புரங்களில். **முக்கயவர்**-மூன்று அவுணர்கள். **அடைந்த வரத்தின் நின்றனர் மதித்திடாது**-அவுணர் நான் முகனிடம் பெற்ற வர பலத்தினால் இறந்து போகாமல் இருந்தனர்.

தளிவரமலர்ந்து விரைத்த தண்பணை-வண்டுமொய்க்க மலர் மலர்ந்து நறுமணத்துடன் விளங்கும் இயல்புடைய குளிர்ந்த கிளைகள். **வெறிய பாதவம்**-கிளைகளை இழந்ததால் வெறுமையாய் நிற்கும் மரம். தமக்கு உரியவற்றையெல்லாம் இழந்து தனித்து நிற்கும் அவுணர்க்குக் கிளைகளை இழந்து நிற்கும் மரம் உவமை. **பாதவம்**-மரம். 116

281. பகைஞர் ஒன்றுமுப் புரங்களில் செஞ்சடைப் பகவன்
நகையி னின்றுசென்று உற்றதீ யிடத்துஎழு நறிய
புகைப ரந்தகல் விசும்பிடம் அடங்கலும் போர்த்து
முகில்கள் என்றிடப் பட்டுநின் றனஇன்று மொழியின்.

புகை மேகம் போல் விளங்கியது!

தெளிவுரை : பகைவரான அவுணர்களின் முப்புரங்களில் சிவந்த சடையையுடைய சிவபெருமானின் சிரிப்பினின்று எழுந்து போய் அடைந்த தீயினால் எழுந்த நல்ல புகை பரவி அகன்ற வானம் எங்கும் கவிந்து போர்த்து மேகங்கள் என்று கூறும்படியாய் விளங்கிற்று.

விளக்கம் : பகைஞர்-பகைவரான அவுணர். **ஒன்று**-பொருந்திய. **செஞ்சடைப்பகவன்**-சிவந்த சடையையுடைய சிவபெருமான். **நகை**-சிரிப்பு. **நறிய புகை**-அசுரரை அழிக்க எழுந்த புகை ஆதலால் 'நறிய புகை' என்றார். **நறிய**-நல்ல. **அகல் விசும்பு**-அகன்ற வானம். **அடங்கலும்**-முழுவதும். **முகில்கள்**-மேகங்கள். **என்றிடப்பட்டு**- என்று கூறும்படி. நின்றன-விளங்கின. மொழியின்-கூறப்போனால். 117

282. நெறித்த குஞ்சியம் தானவர் எயில்களின் நிமலன்
எறித்த வெண்ணிலா நகையினின்று எழுந்தபேர் எரிசென்று
உறைத்து வெள்ளிமா மதில்கரைந்து உருகுழிச் சிதறித்
தெறித்த போலும்விண் ணிடைச் செழுந் திங்களும் உடுவும்.

வெள்ளிமதில் உருகிச் சந்திரனாகவும் நட்சத்திரமாகவும் ஆயின

தெளிவுரை : வளைந்த தலைமயிரையுடைய அவுணர்களின் மதில்களில் குற்றமற்ற சிவபெருமான் உண்டாக்கிய (சிரித்த) வெண்மையான நகையினின்று எழுந்த பெருந்தீ போய்ப் பொருந்தித் திரிபுரங்களில் உள்ள வெள்ளியால் ஆன பெரிய மதில் கரைந்து உருகும் போது சிதறித் தெறித்ததைப் போல வானில் உள்ள சந்திரனும், விண்மீன்களும் விளங்கின.

விளக்கம் : சிவபெருமானின் சிரிப்பினின்று எழுந்த தீ முப்புரத்தில் உள்ள வெள்ளி மதிலை உருக்கியது. அப்போது எழுந்து தெறித்த தீப்பொறிகளே சந்திரனாகவும் விண்மீனாகவும் விளங்குகின்றன என்பது கற்பனை.

நெறித்த குஞ்சி-சுருண்ட தலைமயிர். **தானவர்**-அவுணர். **எயில்களில்**-முப்புரங்களில். **நிமலன்**-மலங்கள் அற்ற சிவபெருமான். **வெண்ணிலா நகையின்**-வெண்மையான நிலவைப் போன்ற சிரிப்பினின்று. **பேர்எரி**-மிக்க தீ. **உறைந்து**-பொருந்தி. **வெள்ளிமாமதில்**-வெள்ளியால் ஆன பெரிய மதில். **உருகுழி**-உருகும் போது. **செழுந்திங்கள்**-செழுமையான சந்திரன். **உடு**-விண்மீன். 118

283. பரிந்து தற்பதம் குறுகினர் பழையதீ வினைபோல்
எரிந்து முப்புரம் பொடிபட இறந்திடாது உயிர்கொண்டு
இருந்த அப்பெருங் கொடியரை எம்பிரான் கண்டு
பொருந்து பொற்சிலை வாங்கினன் சிலீமுகம் பூட்டி.

வில்லில் அம்பைப் பூட்டினார்.

தெளிவுரை : அன்புகொண்டு தன் அடியை அடைந்தவரின் பழைய தீவினை அகன்று போவது போல் மூன்று புரங்களும் எரிந்து சாம்பலாயின. ஆயின் உயிர் போகாது இருந்தனர் அந்த முப்புரக்கொடியவர். அவரைச் சிவபெருமான் பார்த்தார். தன்னிடம் உள்ள மேருவாகிய வில்லில் அம்பைப் பூட்டி வளைத்தார்.

விளக்கம் : பரிந்து-அன்புபூண்டு. **தற்பதம்**-இறைவனின் திருவடியை. **பொடிபட**-சாம்பலாக. **இறந்திடாது**-சாவாமல். **எம்பிரான்**-சிவபெருமான். **பொற்சிலை**-பொன் மலையான மேருமலையான வில். **வாங்கினான்**-வளைத்தார். **சிலீமுகம்**-அம்பு. 119

284. குனித்த பொன்சிலை வலிகெழும் குணவுரு அணையின்
நுனித்த அப்புருக் கொண்டுநிற் கின்றநோன் அரிக்குத்
தனித்த பொன்திரு வாசிகை போன்றுஒளி தழைத்தது
இனித்த சொற்கொடி இடத்தினன் மலர்க்கரம் இசைந்து.

திருமாலுக்கு மாலை போல் விளங்கியது வில்

தெளிவுரை : இனிய சொல்லைப் பேசும் பார்வதியை இடப்பாகத்தில் கொண்ட சிவபெருமான் கையில் உள்ள வளைந்த மேருமலையான வில், வலிமையுடைய நாணாக வடிவுடைய ஆதிசேடன் என்ற பாம்பில் தொடுக்கப்பட்ட அம்பு வடிவமாய் விளங்கும் திருமாலுக்குச் சூட்டப்பட்ட மாலையைப் போல் விளங்கியது.

விளக்கம் : குனித்த-வளைக்கப்பட்ட. **பொற்சிலை**-பொன்மயமான மேருமலை. **வலிகெழுங்குணவுரு அணையில்**-வலிமையுடைய நாணாகிய வடிவுடைய பாம்பில். **வாசிகை**-மாலை. **மலர்க்கரம்**-சிவபெருமானின் மலர் போன்ற கை. **அணை**-ஆதிசேடன் என்ற பாம்பு. **இனித்த சொற்கொடி இடத்தினன்**-இனிய சொல்லைப் பேசும் உமையை இடப்பாகத்தில் உடைய சிவபெருமான். 120

285. பொருவில் கொண்டிடு நெடுநுதிப் பகழியைப் புனிதன்
விரைவில் சென்றவர் உயிர்குடித்திடுகஎன விடுத்தான்
மருவிக் குன்றுஎன நின்றிடு மூவர்மார் பினும்பட்டு
உருவிச் சென்றதுஅப் புறத்தினில் ஒருகணப் பொழுதின்.

அவுணர் உயிரைக் கவர்ந்தது அம்பு

தெளிவுரை : போர் செய்யும் வில்லில் கொண்ட நீண்ட நுனியுடைய அம்பைச் சிவபெருமான் விரைவில் போய் அந்த அவுணர் மூவரின் உயிரைக் குடித்திடுக என்று விடுத்தான். அப்போது அங்கு மலைபோல் நின்ற வித்துன்மாலி, கமலாட்சன், தாரகாட்சன் ஆகிய மூவரின் மார்பிலும் பட்டு ஊடுருவிச் சென்று அப்புறத்தே போயது ஒருகணப் போதில்!

விளக்கம் : சிவபெருமான் அவுணர் உயிரைக் கவரும்படி அம்பை எய்தான். அது ஓர் கணத்தில் பகைவரான அவுணர் உயிரைக் குடித்தது. **பொருவில்**-போர் செய்யும் வில். **நெடுநுதிப்பகழி**-நீண்ட நுனியையுடைய அம்பு. **அவர்**-அவுணர். **மருவி**-எதிரே பொருந்தி. **குன்றென**-மலையைப் போல். **உருவி**-ஊடறுத்து. **அப்புறத்தினின்**-அப்பக்கத்தில் வெளியே. 121

286. மீண்டு சங்கரன் வலக்கரம் அடைந்தது விசிகம்
ஆண்டு புங்கம்முன் பட்டபோது அவுணர்கள் அலறிச்
சேண்தொ டும்படி துள்ளிவீழ்ந்து உணர்வுகள் சிதைந்து
மாண்டு போயினர் இமையவர் மனத்துயர் மாள.

அவுணர் மாய்தல்

தெளிவுரை : திரும்பவும் அந்த அம்பு சிவபெருமானின் மலர்க்கரத்தை அடைந்தது. அந்த அம்பு அவுணர் மீதுபட்ட போது அவர்கள் அலறித் தொலைவில் போய்த் தொடும்படி துள்ளி வீழ்ந்து உணர்வுகள் அழிந்து தேவரின் துன்பம் அழிய அழிந்து போயினர்.

விளக்கம் : விசிகம்-அம்பு. **வலக்கரம்**-வலக்கை. **புங்கம்**-அம்பு. **சேண்தொடும்படி**-தொலைவான இடத்தை அடையுமாறு; அல்லது உயர்ந்த இடத்தை அடையுமாறு. **மாள**-அழிய. **மனத்துயர்**-உள்ளத்துத் துன்பம். 122

287. அம்பு பட்டிடும் அசுரர்கள் மார்பகப் புழையில்
செம்பு னல்புறம் பெருக்கெடுத்து இரைந்துஅலை திரைத்துக்
கம்பம் உற்றெழுத்து ஓடின களேபரம் அலைப்பால்
சம்பு பற்பல ஆண்டிற்குஉண்டிடு இரைஎனச் சார்ந்த.

வெள்ளப்பெருக்கெடுத்து ஓடுதல்

தெளிவுரை : அம்பு பாயப்பெற்ற அவுணர்களின் மார்பின் துளையில் இரத்தமான செந்நீர் வெளிப்பட்டுப் பெருக்கெடுத்து ஒலித்து அலையுடன் கூடி யாவரும் நடுக்கம் கொள்ள எழுந்து ஓடியது. அந்தவெள்ளத்தில் அடித்துவரும் உடலை நரிகள் பலப்பல தமக்கு உண்ணத் தக்க உணவு என்று கருதி ஓடிவந்தன.

விளக்கம் : புழை-துளை. **செம்புனல்**-செந்நிற நீரான குருதி. **இரைந்து**-சத்தம் இட்டு. **அலைதிரைத்து**-அலைபுரண்டு. **கம்பம்**-நடுக்கம். **களேபரம்**-உடல்கள். **அலைப்பால்**-வெள்ளம் அடித்துவருவதால். **சம்பு**-நரி. **உண்டு இரை என**-உண்ணும் உணவாகும் என்று. 123

288. திருந்து தேவரும் பணிசெயத் திரிபுவனமும் ஆண்டு
இருந்த மூவெயில் அரக்கரும் இறந்துசெய் கடன்கள்
புரிந்து காணவும் ஒருவர்அற்று இகலனாய்ப் புரட்டி
அருந்தவேகிடந் தனர்எனின் வாழ்வுஉவப்பு அறிவோ.

வாழ்வு மகிழத்தக்க ஒன்றோ!

தெளிவுரை: சிறந்த தேவரும் தமக்குத் தொண்டு செய்ய மூன்று உலகங்களையும் ஆண்டு கொண்டிருந்த மூன்று புரங்களையுடைய அவுணர்கள் இறந்து அவர்களுக்கு இறுதிக் கடன்களைச் செய்திடவும் ஒருவரும் இன்றிப் போயினர். நரிகளால் புரட்டி உண்ணுமாறு கிடந்தனர் என்றால் வாழ்வு என்பது மகிழ்தற்குரியது என்பது அறிவுடைமையாகுமோ?

விளக்கம் : திரிபுவனம்-மூன்று உலகங்கள். **மூவெயில் அரக்கர்**-மூன்று மதில்களால் சூழப்பட்ட கோட்டைகளையுடைய அரக்கர்மூவர். **செய்கடன்கள்**-ஒருவர் இறந்த பின்பு செய்யத் தக்க இறுதிச் சடங்குகள். **இகலன்**-நரிகள். **வாழ்வு உவப்பு அறிவோ**-வாழ்வானது மகிழ்வுக்குரியது என்பது அறிவுடைமையோ. 124

289. கதம்ப டைத்தபூ தர்க்குஅமர் கொடாதுஅரன் கடிது
மதம்ப டைத்தவர் சாடிய தோதனம் வறியர்க்கு
இதம்ப டைத்திடு குவம்எனக் கொண்டுபோ யின்பால்
பதம்ப டைக்கிலம் போம்எனப் பகர்ந்ததுஒத் ததுவே.

உணவு அளிக்காத செயல் போன்றது சிவன்செயல்

தெளிவுரை : சினம் பொருந்திய பூதகணங்களுக்குப் போர் செய்ய இடம் தராது, சிவபெருமான் விரைந்து செருக்குடைய அவுணரை அழித்த செயல், வறியவர்க்கு உணவு இனிதாய் அளித்திடுவோம் என்று கூறி அழைத்துக் கொண்டு போய்ப் பின்பு உமக்கு இனிய சோறு படைக்கிலோம்; போவீர்! எனக் கூறியதைப் போல் விளங்கியது.

விளக்கம் : கதம்படைத்த பூதர்க்கு-சினம் உடைய பூத கணங்களுக்கு. **அமர்கொடாது**-போர் செய்யவிடாது. **அரன்**-சிவபெருமான். **மதம் படைத்தவர்**-செருக்குக் கொண்டவர். **ஓதனம்பதம்**-உணவு. **சாடியது** பகர்ந்தது ஒத்தது என இயையும். **இதம் படைத்திடுகுவம்**-இனிதாகப் படைப்போம். வறியவரை உணவு தருவோம் என்று அழைத்துக் கொண்டுபோய்ப் பின் உமக்கு உணவு தரமாட்டோம் போவீர் என்பதுபோல் சிவன் பூதகணத்தவர்க்குப் போர் செய்ய வாய்ப்புத் தரவில்லை என்பதாம். 125

290. மருளை ஒத்தன முப்புரம் அப்புரம் மருவும்
இருளை ஒத்தனர் அவுணர் அவ்இருளினை இரிக்கும்
அருளை ஒத்தனன் முகுந்தன் அவ் அருளினை யுடைய
பொருளை ஒத்தனன் அப்பொருள் ஆகிய புராரி.

முப்புரம், அவுணர், முகுந்தன், சிவன் இயல்பு

தெளிவுரை : விபரீத உணர்வை ஒத்தவை முப்புரங்கள். அப்புரங்களைப் பொருந்திய இருளை ஒத்தனர் அவுணர். அத்தகைய இருளை விரட்டுகின்ற அருளினைப் போன்றவர் திருமால். அந்த அருளை உடைய பொருளைப் போன்றவர் சிவபெருமான்.

விளக்கம் : புராரி-புரங்களை அழித்த சிவபெருமான். **மருள்**-விபரீதவுணர்வு; ஒன்றை மற்றொன்றாக நினைப்பது **மருவும்**-பொருந்தும். **இரிக்கும்**-ஓட்டும்; அகற்றும். **முகுந்தன்**-திருமால். **அருள்**-சத்தியுமாம். 126

291. செப்பு உரம்பதித் தன்னமா துமைமுலை திளைக்கும்
துப்புரம்பெறு பராபரன் தூநகைக் கணையான்
முப்பு ரம்பொடி பட்டது முதல்வர்தம் உயிர்போய்
அப்பு ரம்பொடி பட்டதும் கண்டனர் அமரர்.

அமரர் முப்புரம் எரிந்ததைக் காணல்

தெளிவுரை : சிமிழைப் பதித்தாற்போன்ற உமையம்மையின் முலையில் இன்பம் துய்க்கும் தன்மையால் உரம்பெறும் சிவபெருமானின் தூய்மையான சிரிப்பான அம்பினால் மூன்று புரங்களும் அழிந்து தூளாயினதும், அப்புரங்களுக்குரிய அவுணர்களின் உயிர் நீங்கி அவர்களின் உடல்கள் பொடிபட்டதும் ஆகியவற்றைத் தேவர்கள் கண்ணால் கண்டனர்.

விளக்கம் : செப்பு-சிமிழ்; கிண்ணம். **உமை**-உமையம்மையார். **முலைதிளைக்கும் துப்புதம் பெறு பராபரன்**-உமையம்மையின் கொங்கை இன்பத்தைத் துய்ப்பதால் வன்மைபெறும் சிவபெருமான். உமை சத்தி; ஆகையால் அச்சத்தியை அப்பெருமான் அடைந்தான் என்க. **தூநகைக்கணை**-தூய்மையான சிரிப்பான அம்பு. **முதல்வர்**-முப்புரங்களுக்குரிய அவுணர். **அப்புரம்**-அந்த உடல்கள். 127

வேறு

292. ஆர்த்தனர், முகில்இனம் அஞ்சப் பூமழை
தூர்த்தனர், மகிழ்ச்சியில் துணங்கை ஆடிமெய்
வேர்த்தனர், அருகுபோய் வெய்யர் மெய்களைப்
பார்த்தனர் குதித்தனர் பரமன் பாடினார்.

தேவர்களின் செயல்கள்

தெளிவுரை : முப்புரங்களும் அவற்றுக்குரிய அவுணர்களும் அழிந்ததைக் கண்ட தேவர்கள் மேகங்களும் அஞ்சுமாறு பூமழை

விற்கோல நாதன் எனப் பெயர் பெறல்

தெளிவுரை : சிவபெருமான் பொருந்திய அரிய வில் ஏந்திய கோலம் மேற்கொண்டு முன்பு விளங்கியதால், அப்பெருமான் இலிங்கமாகிய பின்பும், நன்மையை அளிக்கும் பெயர் 'விற்கோல நாதன்' என்று உலகத்தவர் உரைக்குமாறு மலம் அற்ற இறைவர் விளங்கினார்.

விளக்கம் : விற்கோலம்-வில் ஏந்திய போர்க்கோலம். **இலகுஉற**-விளங்க. **நாமம்**-பெயர். **உரைசெய**-கூறுமாறு. **அமலன்**-மலமற்ற இறைவர். 132

297. ஐங்கரக் கடவுள்வேல் அரசன் மால்அயன்
புங்கவர்க்கு இறையவன் புவன நாயகர்
துங்கமெய்த் தவர்முதல் துவன்றி னோர்எலாம்
எங்களுக்கு உறும்இடம் இஃதுஎன்று உற்றனர்.

விநாயகர் முதலியவர் தம் இருப்பிடமாகக் கூவத்தை ஏற்றல்

தெளிவுரை : ஐந்து கைகளையுடைய விநாயகப் பெருமான், வேல் ஏந்திய முருகப் பெருமான், திருமால், நான்முகன், தேவரின் தலைவனான இந்திரன், உலகத்தலைவர்கள், மேலான மெய்மையான தவத்தையுடையவர் முதலாக அங்குக் கூடியவர் அனைவரும் எங்களுக்கு ஏற்ற இடம் இதுவே ஆகும் என்று அங்குப் பொருந்தியிருந்தனர்.

விளக்கம் : ஐங்கரக்கடவுள்-ஐந்து கைகளையுடைய விநாயகப் பெருமான். **வேல்அரசன்**-முருகப் பெருமான். **மால்அயன்**-திருமால், நான்முகன். **புங்கவர்க்கு இறைவன்**-தேவர்க்கு அரசனான இந்திரன். **புவன நாயகர்**-உலகத்தலைவர்கள். **துங்கமெய்த்தவர்**- மேலான தவத்தை உடையவர். 133

298. எழில்தரும் உமையொடும் எங்கள் நாயகன்
ஒழிவுஅற நிரந்தரம் உற்ற தன்மையால்
பொழில்திகழ் கூவமா புரத்திற்கு எங்கணும்
மொழிதரு பெயர்அவி முத்தம் ஆகுமால்.

அவிமுத்தம் ஆகும் கூவம்

தெளிவுரை : அழகுடைய உமையம்மையுடன் எங்கள் தலைவரான சிவபெருமான் ஒழிவின்றி நிலையாகப் பொருந்திய தன்மையால் சோலைகள் சூழ்ந்து விளங்கும் கூவமாபுரத்திற்கு எங்கும் கூறும்படியான பெயர் 'அவிமுத்தம்' என விளங்கலாயிற்று.

விளக்கம் : அவிமுத்தம்-காசியின் பெயர்களுள் ஒன்று. **பொழிறிகழ்**-பொழில்+திகழ்; சோலைவிளங்கும். **மொழிதருபெயர்**-வழங்கப்படுகின்ற பெயர். சிவபெருமான் உமையம்மையை மணந்து காசியை அடைந்து சிவலிங்கத்தை காட்டிய தலம். அது போன்றது இத்தலம் என்க. 134

299. அலங்குறும் இதரகூ வரத்தை ஆயிடை
வலம்கிளர் கிம்புரிக் கோட்டு மாமுகன்
இலங்குறு புழைக்கரத்து இறுத்த தன்மையான்
நலம்கிளர் கூவர நாமம் பெற்றதே.

கூவரம் என்ற பெயர் பெற்றது

தெளிவுரை : விளங்கும் தேர் அச்சு முறியப் பெற்ற கூவரத்தை அங்கு வெற்றி பொருந்திய கிம்புரிப் பூண் அணிந்த கொம்பையுடைய யானை முகம் உடைய விநாயகர் துளையை யுடைய துதிக்கையால் முறித்த தன்மையால் அழகு விளங்கும் கூவரம் என்ற பெயர் பெற்றது.

விளக்கம் : அலங்குறு-விளங்கும். **இரதகூவரம்**-தேரின் அச்சினை கூவரம் என்பது ஏர்க்கால். ஏர்காலுடன் ஆரையும் அச்சையும் சேர்த்து விநாயகர் ஒடித்தார். **வலம்**-வெற்றி. **கிம்புரி**-யானைத் தந்தத்தில் கட்டப்படும் பூண். **புழைக்கரத்து இறுத்த**-துளையுடைய துதிக்கையால் ஒடித்த. விநாயகர் தேரின் கூவரத்தைத் துதிக்கையால் ஒடித்ததால 'கூவரம்' என்ற பெயர். இத்தலத்துக்கு வழங்கியது. 135

300. ஒவில்ஒண் பதிநடுக்கூவம் ஒப்பவே
மூவுல கங்களும் முன்னி வந்தரோ
காவில்இன்பு எய்துறு தன்மை யால்எழில்
கூவம் என்று ஒருபெயர் கொண்டது அந்நகர்.

கூவம் என்ற பெயரும் வழங்கப் பெறல்

தெளிவுரை : நீர் குறைவு படாத நகரின் நடுவே உள்ள கிணற்றைப் போன்று மூவுலகங்களும் நினைந்து வந்து காவல் பொருந்திய இன்பத்தை அடையும் இயல்பால் அழகுடைய கூவம் என்ற ஒரு பெயரையும் அந்நகரம் பெற்றது. 136.

301. மேலைநாள் இழைத்த தீவினைகட்கு எங்கள்விற்
கோலநா யகன்திருக் கூவம் உள்குதல்
ஆலநா கங்களுக்கு அரும்புள் வேந்தினைத்
தாலமேல் நினைக்குறும் தன்மை போலுமால்.

இந்நகரை நினைக்கத் தீவினைகள் நீங்கும்

தெளிவுரை : முன்நாளில் செய்த தீவினைகளுக்கு எங்கள் திருவிற்கோல நாயகனின் திருக்கூவத்தலத்தை நினைத்தல் நஞ்சையுடைய நாகங்களுக்கு அரிய அரசனான கருடனை உலகத்தில் நினைக்கின்ற தன்மையைப் போன்றதாகும்.

விளக்கம் : இழைக்க-செய்த. **தீவினைகட்கு**-பாவங்களுக்கு. **உள்குதல்**-நினைத்தல். **ஆலநாகங்கள்**-நஞ்சையுடைய பாம்புகள். **அரும்புள் வேந்து**-அரிய பறவை அரசனான கருடனை. பாம்பினால் உண்டாகும். துன்பம் கருடனை நினைக்கப் போகுமாறு போல் முன்செய்த தீவினைகள் கூவத்தை நினைத்த அளவில் நீங்கும் என்க. 137

302. என்றுஇவை பற்பல இயம்பி வண்டுஉ மும்
கொன்றையம் சடையினோன் கூவ மாநகர்ச்
சென்றுஅடைந்து அருங்கதி சேர்மின் என்றனன்
வன்திறல் புலன்நெறி மறித்த சூதனே.

சூதமுனிவர் கூறி முடித்தல்

தெளிவுரை : என்று இப்படிப் பலப்பல கூறி 'வண்டுகள் கிண்டுகின்ற கொன்றையாகிய அழகிய சடையை உடைய சிவபெருமானின் கூவம் என்ற சிறந்த நகரைச் சென்று அடைந்து அரிய கதியைப் பெறுவீராக!' என்று வலிய ஆற்றலை யுடைய ஐம்புல நெறிகளை அடக்கிய சூதமா முனிவர் உரைத்தார்.

விளக்கம் : வண்டு உமும்-வண்டுகள் கிண்டுகின்ற. **கொன்றையஞ் சடையினோன்**-கொன்றை மாலையை அணிந்த சிவபெருமான். **சேர்மின்**-சேருங்கள், பெறுவீர். **புலன்நெறி**-ஐம்புலன் செல்லும் வழியை. **மறித்த**-அடக்கிய. **சூதன்**-சூதமா முனிவர். 138

திரிபுரதகனச் சருக்கம் முற்றிற்று.
இச்சருக்கச் செய்யுள் 138 ஆக செய்யுள் 302

5. சந்தான கிரி சந்தானச் சருக்கம்

இப்பகுதியில் சூதமுனிவர் கூவப்பதியின் சிறப்பை மேலும் விளக்குகிறார்.

சிவபெருமான் திரிபுரம் எரித்த பின்பு கூவநகரில் வீற்றிருந்தார். தேவர்களும் அங்குத் தங்கியிருந்தனர். அத்தேவர்களை நோக்கி நான்முகன் கூறினார். 'திருமால் தம் சூழ்ச்சியால் திரிபுர அசுரர்களைச் சிவபூசை செய்யாதிருக்கும்படி செய்தார். பின் சிவபெருமானின் வில்லின் அம்பாக இருந்து அசுரர்களை அழித்தார். எனவே, சிவபூசையைச் செய்யும் வரை அவரை அழிக்க இயலாது. அப்பூசையைச் செய்யாதவர் மாதவராயினும் அவர் அழிவது உறுதி. யானும் திருமாலும் செருக்குக் கொண்டு சிவனை மதிக்காமல் போரிட்ட பாவத்தைச் சிவபூசைசெய்தே போக்கிக் கொண்டோம். எனவே, நீங்களும் சிவபூசை செய்வீராக!' என்று தேவர்க்கு உரைத்தார். தேவர்கள் நான்முகனின் சொற்படி சிவலிங்கத்தை வழிபட்டனர். அந்தச் சிவலிங்கம் ஒன்றில் இன்றும் இறைவர் வீற்றிருந்து அருள் செய்கின்றார். தன்னை வழிபடு பவர்க்குச் சந்தான கிரி சந்தானன் என்று அருட்கிரி தோன்றிக் கூவ நகரத்தார்க்கு அருளுடன் உபதேசம் செய்து நற்கதி அடையச் செய்வர். என்று இங்ஙனம் சூத முனிவர் கூறினார். உடனே தேவர்கள் அந்த அருட்குருவின் இயல்பை விவரிக்க வேண்டினார்.

சூத முனிவர் சந்தான கிரி சந்தான குருவின் இயல்பை விளக்கலானார்.

'அரி, அயன், முனிவர் முதலியவர் இறையருள் பதியைப் பெற்றுத் தம் உடலை வெறுத்து ஞானானந்தம் பெற விரும்பினர். அவர் கயிலைப் பரமனை அணுகித் தமக்குப் பதிபசு பாசம் என்ற

உண்மையை உபதேசித்தருளல் வேண்டும் என்றனர். அவர் வேண்டுகோளை ஏற்ற இறைவர் கயிலாலய மலையைச் சூழ்ந்துள்ள ஆமர்த்த கிரியில் ஆசானாய்த் திருமேனி கொண்டு உபதேசம் செய்தருளினார். நான்முகனுக்குப் புட்பகிரியிலும், முனிவர்க்குக் கோளகிரியிலும், தேவர்க்குச் சந்தான கிரியிலும் வீற்றிருந்து அருளுரை வழங்கினார். அம்மலை காரணமாக இறைவருக்குச் சந்தான கிரி சந்தானன் என்ற பெயர் வந்தது. கூவப்பதியில் வாழ்பவர் தேவர்கள் ஆதலால் சிவபெருமான் சந்தானகிரி சந்தானன் என்ற பெயர் கொண்டு விளங்கி அருளுரை வழங்கி வருகின்றார். இக்காரணத்தால் இத்தலத்துக்கு ஒப்பான நகர் வேறு ஒன்று இல்லை'

இங்ஙனம் சூதமுனிவர் சந்தானகிரி சந்தானன் என்ற ஆசானின் இயல்பை விளக்கியுரைத்தார்.

5. சந்தானகிரி சந்தானச் சருக்கம்

303. சூதமுனி வரன்புகன்ற மொழிவினவி
உலகமயல் துரக்கும் மேன்மை
மாதவர்நெஞ்சு உவகைபெறீஇக் கூவபுரத்து
இயல்கேட்ப வளரும் எங்கள்
காதலமை வுற்றதிலை, புராணமுனி,
இன்னும்உளம் கருணை கூர
ஓதுகஎன்று உரைத்தனர்அவ் வுரைக்குமிகக்
களித்து இதனை உரைப்ப தானான்

சூதமுனிவர் மேலும் கூறுதல்

தெளிவுரை : சூத முனிவர் கூறிய சொல்லைக் கேட்டு, உலகத்தின் மீது கொள்ளும் பற்றினைத் துறக்கும் மேன்மை உடைய துறவியர், மனம் மகிழ்ந்து, 'கூவப்பதியின் இயல்பைக் கேட்க எங்கள் ஆவல் வளர்கின்றது! அது தணிவதில்லை. பழைய முனிவரே, மேலும் அருள் கொண்டு அதன் சிறப்பை விரிவாகக் கூறுக!' என்று வேண்டிக் கொண்டனர். அந்தச் சொல்லைக் கேட்டு மகிழ்ந்த சூத முனிவர் பின் வருமாறு கூறலானர்.

விளக்கம் : சூத முனிவரன்-சூதமுனிவர். **வினவி**-கேட்டு. **உலகமயல் துரக்கும்**-உலகத்தின் மீது கொள்ளும். **பற்றை**-மயக்கத்தை விட்டும். **உவகை பெறீஇ**-மகிழ்ச்சி கொண்டு. **அமைவுற்றதிலை**-குறைவதில்லை. **புராணமுனி**-பழைய முனிவரே. புராணங்களில் வல்ல முனிவரே. **களித்து**-மகிழ்ந்து. 1

304. அன்றுவிறல் கொடுமதில்கள் தழல்எழப்புன்
முறுவல்புரிந்து அசுரர்ச் சாடித்
தென்திசைக்கூ வரநகரின் நரசிங்கம்
தொழத்தேவ சிங்கம் வாழ்நாள்
துன்றுதுயர்க் கடல்நீந்தி ஆர்வநெடுங்
கடல்படிந்த சுரரை நோக்கிப்
பொன்திகழ்நற் கமலமலர்த் தவிசின்வீற்
றிருக்கும்இறை புகலு கின்றான்

நான்முகன் கூறத் தொடங்குதல்

தெளிவுரை : முன்பு ஆற்றல் கொண்டு மும்மதில்களில் தீயானது எழப் புன்னகை புரிந்து அசுரர் மூவரையும் அழித்துத் தெற்குத் திக்கில் உள்ள கூவர நகருக்குள் நரசிங்கவடிவு கொண்ட திருமால் தொழ, தேவர்களின் மன்னன் இந்திரன் வாழ்நாளில் அடையும் துன்பக்கடலை நீந்தி, இன்பம் என்ற பெரிய கடலில் படிந்த தேவரைப் பார்த்துப் பொன் விளங்கும் நல்ல தாமரை மலர் இருக்கையில் வீற்றிருக்கும் நான்முகன் கூறலானான்.

விளக்கம் : விறல்கொடு-ஆற்றலைக் கொண்டு. **மதில்கள் அழல் எழ**-மூன்று மதில்களிலும் தீயுண்டாக. **முறுவல் புரிந்து**-புன்னகை கொண்டு. **அசுரர் சாடி**-அசுரரைக் கொன்று. **துயர்க்கடல்**-துன்பமான கடல். **நெடுங்கடல்**-பெரிய கடல். **ஆர்வம்**-இன்பம். **பொன்திகழ் நற்கமலம்**-பொன் போன்று விளங்கும் நல்ல தாமரைமலர். **தவிசு**-இருக்கை. **இறை**-பிரமன். 2

305. வண்டுகிளைத்து ஒழுகுநறை மதுப்பருகி
இசைகூரும் மலர்மந் தாரத்
தண்தெரியல் புலவிர் மிகவல்லவன் இம்
மாயவன்இத் தலத்தில் சூழ்ச்சி

கொண்டுபகைப் பினர்கரவாள் போக்கிவதைப்
பதுபோலக் கொடியர் நீறு
கண்டிகை மெய்ச்சிவன்உருவம் அகற்றியரன்
துணையாகிக் கடிந்திட் டானால்.

திருமாலின் செயல்கள்!

தெளிவுரை : வண்டுகள் கிண்டலால் ஒழுகும் தேனினைக் குடித்துப் பாடும் இசை மிக்க மந்தாரமாகிய குளிர்ந்த மலர் மாலையை அணிந்த தேவர்களே! இத்திருமால் மிகவும் வல்லவன் ஆவான். இங்குச் சூழ்ச்சியால் பகைவரின் கைவாளை வஞ்சனையால் அகற்றி அழிப்பதைப் போலக் கொடியவர் அணிந்த விபூதியைக் கண்டிகை முதலிய அணியும் சிவக்கோலம் கொள்ளாமல் செய்து சிவபெருமானின் வில்லுக்கு அம்பாய் விளங்கி அசுரரை அழித்தான்.

விளக்கம் : கிளைத்து-கிண்டி. **நறைமது**-தேன்; ஒரு பொருட்பன் மொழி. **இசைகூரும்**-இசைமிகும். **மலர் மந்தாரத்தின் தெரியல்**-மந்தார மலரால் ஆன குளிர்ந்த மாலை. மந்தாரம் என்பது தேவர் உலக ஐந்து மரங்களுள் ஒன்று. **புலவிர்**-தேவர்களே. **மாயவன்**-திருமால். **கரவாள்**-கையில் கொண்டிருந்த வாள். வள் என்றது படைக்கலங்களை. **போக்கி**-அகற்றி. **நீறு**-திருநீறு. **கண்டிகை**-உருத்திராக்க மாலை. **சிவன் உருவம்**-சிவபெருமானின் கோலம், சைவக்கோலம். **அரன் கணையாகி**-சிவபெருமானின் வில்லின் அம்பாகி. 3

306. ஆதலினால் அமலசிவ லிங்கபூ
சனைபுரிவோர் அறிவுஇகந்த
பாதகரே எனினும்அழி கிலர்என்றும்
அஃதிலர்இப் படியின்வல்ல
மாதவர்கள் எனினும்அழி குவர்என்று
மறிந்தமான் மனம்வி ழைந்து
நீதிகொடு பரமசிவ பூசைபுரி
வோர்பெருமை நிகழ்த்தற் பாற்றோ?

சிவலிங்கபூசைச் சிறப்பு

தெளிவுரை : ஆதலால் குற்றம் அற்ற சிவலிங்கபூசை செய்பவர், அறிவு அற்ற பாவியராயினும் அழியாமாட்டார் என்றும், அவ்வாறு

இல்லாதவர் இவ்வுலகத்தில் வல்லவரான முனிவர் என்றாலும் அழிந்து போவார் என்றும் அறிந்தோம். ஆதலால் மனம் விரும்பி முறையுடன் பரமசிவலிங்க பூசையைச் செய்பவர் பெருமை எடுத்துக் கூறும் தன்மை கொண்டதோ!

விளக்கம் : அமல சிவலிங்கபூசை-குற்றம் இல்லாத சிவலிங்கபூசை. **அறிவுஇகந்த**- அறிவு அகன்ற. **பாதகர்**-பாவியர். **இப்படியின்**-இந்தவுலகத்தில். **அழிகுவர்**-அழிந்து போவார். **அறிந்தனமால்**-அறிந்தோம். **நீதிகொடு**-முறைப்படி. **நிகழ்த்தற் பாற்றோ**-உரைக்கும் தன்மை யுடையதோ. 4

307. இம்மைமறு மைப்பயனும் மறையின்முடி
தெருட்டுறுபேர் இன்பவீடு
மெய்ம்மைபெறத் தரவல்லது அச்சிவபூ
சனைஅன்றி வேறும் உண்டோ?
செம்மைமனத்து இலிங்கபூ சனைபுரியாது
அருங்கதியில் செறியக் காதல்
தம்மனம்வைத் திடல்சிறகில் ஒருசிறுபுள்
பறக்கவிழை தகைமை போலும்!

சிவலிங்கபூசை செய்யாதவர் நற்கதி அடைய முடியாது.

தெளிவுரை : இப்பிறவியில் அடையும் பயனும் மறுமையில் அடையத் தக்க பயனும், வேதத்தின் முடிவு தெளிவுறுத்தும் பேரின்பம் அளிக்கும் வீடுபேறும் உண்மையாய்த் தரவல்லது சிவலிங்க பூசையே அன்றி வேறும் உண்டோ! செம்மையான உள்ளத்துடன் சிவலிங்க பூசையைச் செய்யாமல் அரிய கதியை அடைய மனத்துள் நினைத்தல் எத்தகையது என்றால், சிறகு இல்லாத ஒரு சிறிய பறவை பறக்க விரும்பிய தன்மையைப் போன்றதாகும்.

விளக்கம் : மறையின் முடி தெருட்டுறும்-வேத முடிவு தெளிவுபடுத்தும். **பேரின்பவீடு**-பேரின்பத்தைத்தரும் மோட்சம். **மெய்ம்மைபெற**-மெய்மையாய். **செம்மைமனத்து இலிங்கபூசனை**-நல்ல மனத்துடன் இலிங்க பூசை. **அருங்கதியில் செறிய**-அரிய கதியை அடைய. **சிறகில் ஒரு சிறுபுள்**-சிறகு இல்லாத ஒருசிறிய பறவை. **தகைமை**-தன்மை. 5

308. திரைஎறியும் சடைக்கங்கைத் துளிதெறிப்ப
நனைந்தகுளிர் சிறுவெண் திங்கள்
கரமலரின் இருந்துஎழு செங் கனல்கொழுந்தின்
காய்ந்துஒழிக்கும் கடவுள் தன்னை
பரமன்என உணர்கிலா தனியனும்அவ்
அரியுமாய்ப் பயின்ற தீமை
பொருவில் புகழ்க் கூவபுரத்து இலிங்கபூ
சனைபுரிந்து போக்கி உய்ந்தேம்.

சிவபூசை புரிந்து பாவத்தைப் போக்கிக்கொண்டோம்.

தெளிவுரை : அலைவீசும் சடையையுடைய கங்கை நீர்த்துளி தெறிப்ப அதனால் நனைந்த சிறிய வெண்மையான திங்கள், கையில் இருந்த செங்கனல் கொழுந்தால் காய்ந்து போக்கும் இயல்புடைய சிவபெருமானை, பரம்பொருள் என்று உணராத எளியேனும், அந்தத் திருமாலும் செய்த தீமை ஒப்பில்லாத புகழையுடைய கூவபுரத்து இலிங்க பூசையைச் செய்து போக்கிக் கொண்டோம்.

விளக்கம் : திரை எறியும்-அலைவீசும். **தெறிப்ப**-தெறித்தலால். **கரமலர்**-கையாகிய மலர். **செங்கனல் கொழுந்து**-சிவந்த தீயின் கொழுந்து. **கடவுள் தன்னை**-சிவபெருமானை. **பரமன் என**-பரம்பொருள் என்று. **தனியன்**-தனியனான பிரமன். **அவ்வரி**-அந்தத்திருமால். **பயின்றதீமை**-செய்த தீமை. **பொருவுஇல் புகழ்**-ஒப்பு இல்லாத புகழ். **உய்ந்தேம்**-உயிர் பிழைத்தோம்; வாழ்ந்தோம். 6

309. "பூதமணிக் கலன்புனைந்து சிவலிங்க
பூசனையைப் புரிந்தி டாதோர்
பாதகரில் பாதகர்;எங் கட்குஅவர்கள்
புறமானோர்; பகரில், என்றும்
ஆதலின்புங் கவர்நீவிர் சிவலிங்க
பூசனையை அகன்றி டாது
காதலில் செய்திடுதிர் எனப் புகன்றனன்ஆ
ரணம்அனைத்தும் கரைகண் டோனே

சிவபூசை செய்யாதவர் பாவியரில் பாவியர்!

தெளிவுரை : திருநீறு ருத்திராக்க மாலை ஆகியவற்றை அணிந்து சிவலிங்கபூசையைச் செய்யாதவர் பாவியரில் பாவியர் ஆவார். கூறப்போனால் என்றும் எங்களுக்கு அத்தகையவர் புறம்பானவர் ஆவார். ஆதலால் தேவர்களாகிய நீவிர் சிவலிங்கபூசையை விலக்கிடாது அன்புடன் செய்வீராக!' என்று வேதங்கள் அனைத்திலும் முழுமையாக வல்லவனான நான்முகன் கூறி முடித்தான்.

விளக்கம் : பூதி-விபூதி. **மணிக்கலன்**-உருத்திராக்க மாலையான அனிகலன். **பாதகர்**-பாவியர். **புறமானோர்**-அயலவர் ஆவார். **புங்கவர்**-உயர்ந்தவரே; தேவரே. **காதலின் செய்திடுதிர்**-காதலுடன் செய்வீராக. **ஆரணம் அனைத்தும்**-வேதங்கள் அனைத்தையும். **கரைகண்டோன்**-எல்லை கண்டவன்; முற்றும் அறிந்தவன். 7

310. அண்டர்அயன் உரைத்தமொழி வினவிமனம்
மகிழ்ந்தவன் மெல் அடியில் தாழ்ந்து
கொண்டல்தவழ் மணிமாடக் கூவபுரத்து
இலிங்கஉருக் குலவச் செய்தே
மண்டுமனத்து அன்பின்வழி பட்டனர்அச்
சிவலிங்க வடிவந் தோறும்
புண்டரிக அதள்திருவிற் கோலநா
யகன்இன்று புரப்பன் மாதோ.

இறைவன் காத்தருளுவான்

தெளிவுரை: தேவர்கள் பிரமன் கூறிய சொல்லைக் கேட்டனர். உள்ளம் மகிழ்ந்து அப்பிரமனின் மென்மையான அடிகளில் வணங்கினர். மேகங்கள் தவழும் அழகிய மாடங்களையுடைய கூவபுரத்து இலிங்கவ்வடிவு பொருத்தச் செய்து, பொருந்திய மனத்தில் சிவனை அன்புடன் வழிபட்டனர். அந்தச் சிவலிங்க வடிவந்தோறும். புலித்தோலை உடுத்த கோலத்தையுடைய திருவிற்கோலநாதன் இன்று உம்மைக் காத்தருளுவான்.

விளக்கம் : அண்டர்-தேவர்கள். **அயன்**-நான்முகன். **வினவி**-கேட்டு. **தாழ்ந்து**-வணங்கி. **கொண்டல் தவழ்**-மேகம் தவழுகின்ற.

மணிமாடக்கூவபுரம்-மணிகள் இழைக்கப்பட்ட மாடங்களையுடைய கூவபுரம். **புண்டரிக அதள்**-புலித்தோல். **திருவிற்கோல நாயகன்**-கூவபுரத்து இறைவனின் திருப்பெயர். **புரப்பன்**-காப்பான். **மாதோ**-முன்னிலை அசை. 8

311. இத்தகைய இணையில்திருக் கூவபுரத்து
எவரேனும் எய்தின் அம்ம
சுத்தபர ஞானம் அடைந்து அரிய சிவா
னந்தசுகம் துய்ப்பர், விண்ணோர்
மெய்த்தவம் ஒருகோடி புரிந்துநர
உருவாகி விமலன் நல்கும்
அத்தலனில் அவதரித்து வாழ்வர் எனின்
அதன்பெருமை அளக்கல் பாற்றோ.

கூவபுரத்தை அடைவதால் அடையும் பயன்

தெளிவுரை : இத்தகைய இயல்பு பொருந்திய ஒப்பில்லாத திருக்கூவபுரத்தினை எவரேனும் அடைந்தால் தூய்மையான பரஞானம் அடைந்து அருமையான சிவானந்த சுகத்தை அனுபவிப்பர். தேவர் உண்மையான தவம் ஒரு கோடியை இயற்றி மனித வடிவாகிக் குற்றமற்ற இறைவன் அருள் செய்யும் அத்தகைய அந்தப்பதியில் அவதரித்து வாழ்வார் என்றால் அதன் பெருமை அளத்தற்கு உரியதோ!

விளக்கம் : இணைஇல் கூவபுரம்-ஒப்பு இல்லாத கூவப்பதி. **அம்ம**-அசை. **சுத்த பரஞானம்**-தூய்மையான மேலான ஞானம். **சிவானந்தசுகம்**-சிவானந்தமான இன்பம். **துய்ப்பர்**-அனுபவிப்பர். தேவர்கள் பல தவங்களைச் செய்து அந்தக் கூவபுரத்தில் மனிதராகப் பிறந்துள்ளனர். **அளக்கற்பாற்றோ**-அளக்கும் தன்மையுடையதோ. 9

312. தன்னைமனத்து அமைத்த வர்க்கு மலம்அகற்றும்
சந்தான கிரிசந் தானன்
என்னும்அருள் குரவன்எழில் கூவமா
நகரினிடை இருக்கின் றோர்கட்கு

உன்னரு நற்கருணையினில் உபதேசித்
திடஉலகின் ஒழிவில் இன்பம்
மன்னிமவுக் களிப்பொடு இருந்து அழிவில் பர
கதிஅடைவில் மருவுவாரால்.

சந்தானகிரி சந்தான அருட்குரவன் அருள்

தெளிவுரை : தன்னை மனத்தில் கொண்டவர்க்கு அவர்தம் பாவத்தைப் போக்கும் சந்தான கிரி சந்தானன் என்ற ஆசான் அழகுடைய கூவநகரில் இருப்பவர்க்கு நினைத்தற்கரிய நல்ல கருணையுடன் உபதேசம் செய்திட உலகத்தில் ஒழிவில்லாத இன்பம் பொருந்தி உள்ள மகிழ்வுடன் இருந்து அழிவற்ற மேலான கதியை முறைப்படி அடைவர்.

விளக்கம் : கூவ நகரில் சந்தானகிரி சந்தானன் என்ற குரு இருந்து மக்களுக்கு அருள் உபதேசம் செய்து அவர்கள் மேலான கதியை அடையுமாறு செய்து வந்தார்.
மலம் அகற்றும்-குற்றங்களைப் போக்கும்; ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்கள். **எழில் கூவமாநகர்**-அழகு பொருந்திய கூவம் என்ற சிறந்த நகரம். **உன்னரு**-நினைத்தற்கு அரிய. **ஒழிவுஇல்இன்பம்**- ஒழியாத இன்பம். **மன்னி**-பொருந்தி. **அழிவில்**-அழிவற்ற. **மருவுவர்**-அடைவார். 377860/481148

313. என்றினைய சூதமுனி இணையில்திருக்
கூவபுரத்து இயல்பு கூற,
"மன்றல்மலர்க் கரங்குவியா அருந்தவரெம்
செவிக்குஅமுதம் வழங்க வந்தோய்,
கொன்றைமலர்த் தொடைபுனையும் சடாமகுடத்து
அண்ணல் மகிழ் கூவ மூதூர்
ஒன்றும் அவர்க்கு அருள்புரியும் குரவன் யார்?
இயம்புக"என உரைப்ப தானான்.

கூவத்தில் வாழ்பவர்க்கு அருள் செய்பவர் யார்?

தெளிவுரை : என்று இங்ஙனம் சூத முனிவர் நிகர் இல்லாத கூவபுரத்து இயல்பை உரைத்தார். உரைக்க, மனம் பொருந்தி மலர்க்கை குவித்து, அருந்தவத்தவர் எல்லாம். 'எங்கள் செவிக்கு

அமுதம் வழங்க வந்த முனிவரே! கொன்றை மலர் மாலையைச் சூடும் சடை முடியையுடைய சிவபெருமான் மகிழ்கின்ற கூவம் என்ற மூதூரில் வாழ்பவர்க்கு அருள்செய்யும் அம்முனிவர் யார்? கூறுக!' என. அதற்குச் சூதமுனிவர் கூறத் தொடங்கினார்.

விளக்கம் : **இனைய**-இத்தகைய. **இணையில்**-ஒப்புஇல்லாத. **மன்றல்மலர்**-மணம் உடைய மலர். **மலர்க்கரம்**-மலரைப் போன்ற கை. **குவியா**-குவித்து. **ஒன்றுபவர்க்கு**-இருப்பவர்க்கு. **குரவன்**-ஆசான். **இயம்புக என**-கூறுவீராக என்று. 11

314. "முன்னமோர் காலத்து ஆதி முகுந்தனும் அயனும் பின்தாழ்
பின்னல்மா தவரும் செம்பொன் பிறழ்முடிச் சுரரும் ஈசன்
தன்னதாம் சத்தி பாதம் சார்தலால் உடல்வெறுப்புற்று
உன்னரு ஞானா னந்தம் உறுவதற்கு உவகையுற்றார்"

திருமால் நான்முகன் தேவர் ஆகியோர் ஞான ஆனந்தம் அடைய எண்ணுதல்

தெளிவுரை : முன் ஒரு காலத்தில் ஆதியான திருமாலும் நான்முகனும் பின்பக்கத்தில் தாழ்ந்த சடையுடைய முனிவரும் செம்பொன் முடியுடைய தேவரும் சிவனின் அருள் பதிவு ஏற்படுதலால் உடலை வெறுத்து நினைத்தற்கு அரிய ஞான ஆனந்தம் அடைவதற்கு விரும்பினர்.

விளக்கம் : **முகுந்தன்**-திருமால். **அயன்**-நான்முகன். **மாதவர்**-துறவியர். **சத்திபாதம்**-சத்திநிபாதம்; திருஅருள் பதிவு. **சார்தலால்**-உண்டாதலால்; மலபரிபாகம் அடைந்த உயிர்க்கு இறைவன் திருவருட் பதிவு உண்டாகும். **உவகையுற்றார்**-விரும்பினார். 12

315. "உற்றவர் கயிலை நண்ணி, உமைஒரு பாகன் போற்றிச்,
சிற்றறிவு உடையேம் புன்மைச் சிறையுடல் பொறை தணந்து
பற்றறி உருவ மாகப் பதிபசு பாசத்து உண்மை
முற்றும்எங் கட்கு உணர்த்தி முதல்வநீ புரத்தி" என்றார்.

பதி, பசு, பாச உண்மையை உணர்த்த வேண்டும்.

தெளிவுரை : அவ்வாறு விரும்பிய அவர்கள், கயிலைமலையை அடைந்தனர். உமையொருபாகனான சிவபெருமானைத்

துதித்தனர். 'சிறிய அறிவுடைய யாம் அற்பமான உடலின் சுமையைப் போக்கிப் பற்று அறிவடிவாகப் பதி பசு பாசம் (இறையுயிர் தொடர்பு) என்ற இவற்றின் உண்மை முழுவதையும் எங்கட்கு உணர்த்தி எங்களைக் காத்தருள வேண்டும் என்று வேண்டினர்.

விளக்கம் : **கயிலை**-கயிலைமலை. **நண்ணி**-அடைந்து. **உமைஒருபாகன்**-உமையம்மையை ஒருபாகத்தில் கொண்டவன். **புன்மைச் சிறையுடல்**-அற்பமான சிறைப்பட்டுக்குகிடக்கும் உடல். **பதி பசு பாசம்**-இது சைவசமய உண்மை. **பதி**-இறைவன். **பசு**-உயிர். **பாசம்**-உலகத் தொடர்பு. **புரத்தி**-காத்தருளுக. 13

316. என்று அவர் இயம்ப எங்கோன் எல்லைஇல் கருணை எய்தி
நன்றுஎனக் கயிலை சூழ்ந்த நாற்பெருங்கிரிகள் தம்முள்
அன்றுஅரி தனக்குச் சீர்சால்ஆமர்த்த கிரியின் உச்சி
ஒன்றிநல் குரவன் ஆகி உண்மையை உணர்த்து கின்றான்

ஆமர்த்தகிரி உச்சியில் உபதேசம் செய்தல்

தெளிவுரை : என்று மேற்கண்டவாறு அவர்கள் கூறவும், எம் பெருமான் அளவில்லாத அருள் மிகக் கொண்டு நல்லது என்று கயிலை மலையைச் சுற்றியுள்ள நான்கு மலைகளுள் அன்று திருமாலுக்குச் சிறப்புடைய ஆமர்த்த கிரியில் ஆசான் திருமேனியைக் கொண்டு பதி பசு பாச உண்மையைச் சொல்லானார்.

விளக்கம் : சிவபெருமான் ஆமர்த்தகிரி என்ற மலையில் ஆசாரியானாகக் கோலம் கொண்டு திருமால் முதலியவர்க்கு உபதேசம் செய்தார்.

எல்லை இல் கருணை-அளவில்லாத அருள். **கயிலை சூழ்ந்த**-கயிலை மலையைச் சூழ்ந்துள்ள. **ஆமர்த்தகிரி**-கயிலை மலையைச் சூழ்ந்த மலைகளுள் ஒன்று. **உண்மை**-பசு, பதி, பாச உண்மை. 14

317. ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஆகும்
பேதமும் அளவும் இன்றிப் பேரறிவி உருவம் ஆகி
வேதமும் உணர்வும் எட்டா விமலமாய் நிறைவ தாகிச்
சாதலும் பிறப்பும் அற்றோர் தன்மையாம் பதியின் தன்மை.

பதியின் இயல்பு

தெளிவுரை : முதலும், நடுவும், ஈறும் அருவமும் உருவமும் ஆகும் வேறுபாடும் அளவும் இல்லாத பேர் அறிவுருவாகி, வேதங்களும் உணர்வும் எட்டாத குற்றமற்றதாய் நிறைந்துள்ளதாகி இறப்பும் பிறப்பும் இல்லாததான இறைவனின் இயல்பே பதியின் இயல்பாகும்.

விளக்கம் : பதி, ஆதி, நடு, ஈறு, அற்றது; உருவமானது; அருவமானது; அளவு அற்றது; பெரிய அறிவு வடிவானது. வேதங்களுக்கும் ஞானியர் உணர்வுக்கும் எட்டாதது; குற்றம் அற்றது. நிறைவானது. இறப்பும் பிறப்பும் அற்றது. இதுவே பதியின் இயல்பு.

அருவம்-உருவம் அற்றது. **பேதம்**-அருவுருவம் எனவும் கொள்ளலாம். இறைவனின் எட்டுக் குணங்களுள் ஒன்று பேரறிவுடைமை. **விமலம்**-மலம் அற்றது; தூயது. இப்பாடலில் பதியிலக்கணம் கூறப்பட்டுள்ளது. 15

318. மூலமா மலத்தால் அன்றே மூயபேர் அறிவ தாகிச்
சீலமா யையினால் தோன்றும் சிற்றறி வுடைய தாகி
மேலைநாள் வினையால் தோற்றம் விளிவுடைத்தாகி வானம்
போலவே அடுத்த தாகிப் புணர்வது பசுவின் தன்மை.

பசுவின் இலக்கணம்

தெளிவுரை : மூலமான மலமுடையதாய்ப் பொருந்திய அறிவுடையதாகி, சிறந்த மாயையினால் தோன்றும் சிற்றறிவுடையதாகி, முன்நாள் செய்த வினையினால் பிறப்பும் இறப்பும் உடையதாகி வானத்தைப் போல அடுத்துள்ளதாகிப் பொருந்துவது பசுவின் இலக்கணம்.

விளக்கம் : உயிருடன் பிணைந்தது மலம், எனவே மூலமா மலத்தால் என்றார். **அன்றே**-முன்பே. **மூய**-பொருந்த.

அறிவதாகி-அறிவுடையதாகி. **மேலைநாள்**-முன்நாளில். **வினையால்**-செய்த வினையால். **தோற்றம் விளிவுடைத்தாகி**-பிறப்பும், இறப்பும் உடையதாகி. **பசுவின் தன்மை**-உயிரின் இலக்கணம். 16

319. ஆதியன் றாகி, ஒன்றாய், அளப்பருஞ் சத்தி யாகி,
ஓதரும் பலவாம் ஆவி உணர்வுஎலாம் தடுப்பதாகிப்
பேதமில் அருஞ்சிற் சத்தி பிறழ்தரும் உயிர்க்கு நீங்கி
போதும்அத் தன்மைத் தாகும் புகலிருள் ஆண வந்தான்.

பாசத்தின் இலக்கணம்

தெளிவுரை : முதல் என்பது இல்லையாகி, நிகரற்ற அளத்தற்கரிய சத்தியாய் விளங்கி, பலவான உணர்வு எல்லாவற்றையும் தடுப்பதாகி, பேதம் இல்லாத அரிய சிற்சத்தி விளங்கும் உயிரைவிட்டு நீங்கி விளங்கும் அத்தன்மையையுடையது ஆணவம் என்பதாகும்.

விளக்கம் : ஆணவத்துக்கு முதல் என்பதில்லை எனவே 'ஆதியன்றாகி' என்றார். அளவற்ற ஆற்றல் உடையது. ஆதலால் 'அருஞ்சத்தியாகி' என்றார். உயிரின் உணர்வையெல்லாம் தடுப்பது ஆணவம். ஆதலால் 'பல வாமாவி உணர்வெல்லாம் தடுப்பதாகி' என்றார். இது முன் வினைத் தொடர்பு காரணமாகத் தோற்றமும் அழிவும் உடையது. 17

320. சுத்தமோடு அசுத்த மூலப்பகுதிஎன் தொடர்பு பெற்றுத்
தத்துவம் ஐந்துஓர் ஏழு தகும்இருபத்து நான்காய்
இத்தகை யிற்பிரேரம், போக்கியம், போகம் என்ன
முத்தகைக் காண்ட மாக உதவிமும் மாயை நிற்கும்.

மாயைகளின் இயல்பு

தெளிவுரை : சுத்தத்துடன் அசுத்தம் என்ற மூலப்பிரகிருதியுடன் தொடர்பு கொண்டதாய், தத்துவம் முப்பத்தாறனுள் ஐந்து சுத்த மாயையும், ஏழு அசுத்த மாயையும் இருபத்து நான்கு பிரகிருதிமாயையும், இருக்கும் என்பதும் அவை பிரேரம், போக்கியம், போகம் என்று மூன்று காண்டமாக உதவி மும்மாயையும் விளங்கும்.

விளக்கம் : மாயை மூன்று அவை சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை. தத்துவம் முப்பத்தைந்து. **பிரேரம்**-ஏது. **போக்கியம்**-அநுபவப் பொருள்கள். **காண்டம்**-கூட்டம். **போகம்**-அநுபவம். 18

321. மனமொழி மெய்இயற்ற வருவதாய் அறம்பா வங்கள்
எனஇரு வகைத்தாய்ச் சஞ்சிதாதி மூன்று இயல்பாய்ப்புத்தி
தனில்உறு நிலைய தாகித் தகையின்துய்த்து ஒழிப்ப தாகி
வினைஎனும் பேர்பெற்று ஒத்துவிடும் இருங் கன்மம் அன்றே.

கன்மம் நீங்குமாறு

தெளிவுரை : மனமும் சொல்லும் மெய்யும் இயற்ற உருவதான அறம் பாவங்கள் என்ற இருவகையுடையதாய் சஞ்சிதம் பிராரப்தம் ஆகாமியம் என்ற மூன்று இயல்பு உடையதாய் அறிவில் பொருந்துவதாகித் தடையற்று உய்த்து ஒழிப்பதாகி, வினையெனும் பேர் பெற்றது. இருவினையும் ஒத்த காலத்தில் கன்மம் உயிரை விட்டு நீங்கும்.

விளக்கம் : அறம் பாவம் என்பவை. மனம் மொழி மெய்யால் வருவன. **சஞ்சிதாதி மூன்று இயல்பாய்**-வினையான சஞ்சித வினை, பிராரப்த வினை, ஆகாமிய வினை என்று மூன்று இயல்புடையதாய். **தகையிற்று**-தகுதியின்றி. **ஆகாமியம்**-இப்பிறப்பில் செய்யும் புண்ணிய பாவங்கள். **சஞ்சிதவினை**-அனுபவித்தது போக எஞ்சிய வினை. **பிராரப்தம்**-இம்மையில் பலனளிக்கும் பழவினை. 19

322. என்றுமுப் பொருளின் தன்மைஇயம்பிஇம் மலங்கள் எல்லாம்
உன்தனக்கு அயல்என்று ஓர்வித்து ஒழித்துஅறி வுருவ மாகி
நின்றநிற் பார்என்று ஆன்மா நிலையினை யுணர்த்தி மீது
வன்துணை யாகி நின்ற மல்குதன் அருளைக் காட்டி

தெளிவுரை : என்று மூன்று பொருள்களின் தன்மைகளைக் கூறி இம்மலங்கள் யாவும் முன்பு தனக்கு அயல் என்று உணர்வித்து ஒழித்து அறிவுருவாகி நிற்பார் என்று ஆன்மாவின் நிலையை

உணர்த்தி மேலும் வலிய துணையாகி நின்ற தன் அருளைப் புலப்படுத்தி.

விளக்கம் : முப்பொருள்-பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருள். **தன்மை**-இயல்பை, இலக்கணத்தை. **இம்மலங்கள் எல்லாம்**-இந்தக் குற்றங்கள் எல்லாம். **ஓர்வித்து**-உணரச் செய்து. **ஆன்மா**-உயிர். 20

323. சென்றுபுல் குறுவது அன்றிச் சேர்ந்து நிற்பதுவுமின்றி,
ஒன்றிரண்டு என்பது அன்றி, உணர்வுசுட்டு ஒழிந்து நீயாய்
என்றும் நின் றிடும்என்று, அன்னை இருந்தவா காண்டிஎன்று,
துன்றுதன் நிலைசொல்லாத சொல்லினால் உபதே சித்தான்.

குறிப்பால் உபதேசித்தல்

தெளிவுரை : ஒரு பொருளிடம் போய் அடைவதின்றி ஒன்றுடன் சேர்ந்து நிற்பதும் இன்றி ஒன்று இரண்டு எனச் சுட்டுவதின்று உணர்வினால் சுட்டுதல் இன்றி நீ என்னை ஆராய்க என்று நின்றிடும் என்னை இருந்தபடியே காண்பாயாக! என்று பொருந்திய தன் நிலை சொல்லாத சொல்லால் உபதேசித்தான்.

விளக்கம் : சொல்லாத சொல்-குறிப்பு, சின் முத்திரை. **புல்குதல்**-அடைதல். **சேர்ந்து நிற்பதன்றி**-ஒன்றின் சார்பால் நிற்பதின்றி. எண்ணால் ஒன்று என்றும் இரண்டு என்றும் எண்ணிக்கைக்குட்பட்டுக் கருதப்படாமல். **நீயாய்**-நீ ஆராய்வாக. **காண்டி**-காண். **தன்நிலை**-சிவபெருமான் தான் வந்து தோன்றிய நிலை.

இதுகாறும் சிவபெருமானான சந்தான கிரி சந்தானன் திருமாலுக்கு உபதேசம் செய்தான். இனி அயனுக்கும் முனிவர்கட்கும் கூறுவது வருமாறு. 21

324. இன்னவாறு அயற்கும் புட்ப கிரியிடை இருடி கட்கும்
மன்னுவான் அளவு கோள கிரியிடை வானவர்க்கும்
தன்னைநேர் கின்ற பொற்பிற் சந்தான கிரியின் நண்ணி
முன்னைவான் பொருள்கள் மூன்றும் மொழிந்தனன் குரவனாகி.

அயன் முனிவர் முதலியவர்க்கு உபதேசம்

தெளிவுரை : திருமாலுக்கு உபதேசம் செய்த அப்படியே புட்பகிரியில் நான்முகனுக்கு உபதேசம் செய்தார். முனிவர்கட்குப் பொருந்திய வான்வரை உயர்ந்த கோளகிரியில் உபதேசம் செய்தார். தேவர்களுக்குத் தன் போல் விளங்கும் அழகுடைய சந்தானகிரியில் போய்ப் பழையதான சிறந்த பொருள்களான பதி பசு, பாசம் என்ற மூன்றையும் ஆசாரியனாய் வந்து சிவபெருமான் உபதேசம் செய்தார்.

விளக்கம் : சிவபெருமான் திருமாலுக்கு உபதேசம் செய்தாற் போல் நான்முகனுக்குப் புட்பகிரியில் இறைவர் உபதேசம் செய்தார். கோளகிரியில் முனிவர்கட்கு உபதேசம் செய்தார். சந்தானகிரியில் தேவர்கட்கு உபதேசம் செய்தார். உபதேசம் செய்தது பதி, பசு, பாசம். இருடி-முனிவர். **பொற்பு**-அழகு. **வான் பொருள்**-சிறந்த பொருள்களான பதி, பசு, பாசம். **குரவனாகி**-ஆசானாக வந்து. புட்பகிரி, கோளகிரி, சந்தானகிரி என்பவை கயிலை மலையைச் சார்ந்த மலைகள். 22

325. அப்பெருங் கிரியின் நாமத்து அடுத்து ஆரியற்கு நாமம்
செப்பரும் கூவத் துள்ளோர் தேவ ராதலின் அவர்க்குத்
தப்பில்பே ரருளின் ஆசான் சந்தான கிரிசந் தானன்
இப்பெருங் குரவன் அங்கண் என்றும் வீற் றிருப்பன் மாதோ.

சந்தான கிரி சந்தானன் என்ற பெயருடன் இறைவர்

தெளிவுரை : சந்தானகிரி என்ற அந்த மலையின் பெயரைச் சார்ந்து, இறைவர்க்குப் பெயர் சந்தானகுரவன் ஆயிற்று. சொல்வதற்கரிய பெருமையுடைய கூவநகரத்தில் உள்ளவர் தேவராதலால் அவர்களுக்கு, குறைவுபடாத பேரருளையுடைய ஆசனான சந்தான கிரி சந்தான குரவன் என்றும் அந்நகரில் வீற்றிருப்பவன் ஆவான்.

விளக்கம் : சந்தான கிரியில் தேவர்க்கு இறைவர் உபதேசம் செய்தார். கூவம் நகரில் உள்ளவர் தேவரே. ஆதலால் சந்தான கிரி சந்தானன் என்ற பெயருடன் இறைவர் உபதேசம் செய்தபடி என்றும் இருப்பார் என்பதாம். அப்பெருங்கிரி **நாமத்து**-அச்சந்தானகிரி என்ற பெயரால். **ஆரியற்கு**-சிவபெருமானுக்கு. மாதோ-அசை. 23

326. கொத்தலர் இதழி எம்மான் குருவுரு வாகி நேயம்
வைத்துஉப தேசம் செய்யும் வளங்கெழு கூவமூதூர்க்கு
ஒத்ததென்று அயன்மற் றொன்றை ஒப்புரை செயலாகாது என்று
அத்தலத்து இயல்பு முற்றும் அறைந்தனன் சூதன் அன்றே.

அப்பதிக்கு வேறொன்றை நிகராகக் கூற இயலாது!

தெளிவுரை : கொத்தான கொன்றை மாலை சூடிய சிவபெருமான் குருவடிவம் கொண்டு அன்புடன் உபதேசம் செய்யும் வளம் உடைய கூவம் என்ற முதுமையுடைய ஊர்க்கு நிகரானது என்று அயனாலும் வேறொரு பதியையும் கூற இயலாது என்று அத்தலத்தின் இயல்பு முழுவதையும் சூத முனிவர் உரைத்தார்.

விளக்கம் : கொத்துஅலர் இதழி-கொத்தாக மலரும் கொன்றை மாலை. **எம்மான்**-எம் சிவபெருமான். **நேயம்**-அன்பு. **ஒத்தது என்று**-நிகரானது என்று. உலகங்களைப் படைக்கும் நான்முகனாலும் கூவம் என்ற நகரத்துக்கு ஒப்பானது என்று வேறொன்றைக் கூற இயலாது. **சூதன்**-சூத முனிவர். 24

இச்சருக்கத்தின் பாடல் எண் 24
சந்தானகிரி சந்தானச் சருக்கம் முற்றியது. ஆகப்பாடல் 326.

6. அடிமுடி தேடிய சருக்கம்

சிவபெருமான் தீத்தூணாக உயர்ந்து நின்றபோது அப்பெருமானின் அடியையும் முடியையும் தேடிச் சென்றனர் நான்முகனும், திருமாலும். அச்செய்தியை விளக்குவது இச்சருக்கம்.

முன்னொரு காலத்தில் ஊழிவெள்ளம் உண்டாயிற்று. அப்போது நான்முகன் உறங்கிக் கொண்டிருந்தார். அவனைப் பிரம உருப்பெற்ற அந்தணர் எழுப்பினர். நான்முகன் மதம் கொண்டு எழுந்தார். எழுந்தவன் நீரில் விளையாடினான். பின் அவர் திருமாலை விழித்தெழச் செய்தார். 'நீ யார்?' என்று வினவினான். 'நான் பரம்பொருளான நாராயணன்' என்று விடையிறுத்துச் செருக்குக் கொண்டு எழுந்தார். அதைக் கேட்ட நான்முகன் 'பரம்பொருள் நீ அல்லை. யானே!' என்று கூறினான். அதைக் கேட்டுச் சினத்துடன் நான்முகன் மார்பில் அடித்தான். இருவரும்

சினத்துடன் மற்போர் செய்தனர். வில்லால் போரிட்டனர். வாட்போரும் ஆற்றினர். இங்ஙனம் போர் செய்த இருவர் செருக்கையும் ஒழிக்கச் சிவபெருமான் எண்ணினார். அவர்கள் நடுவில் தீ வடிவான சிவலிங்கமாகச் சிவபெருமான் உயர்ந்து நின்றார்.

தங்கள் நடுவில் தீத்தம்பம் தோன்றியதைக் கண்ட நான்முகனும் திருமாலும் போரை நிறுத்தினர். இந்தச் சோதியின் அடி அல்லது முடி காண்பவரே பரம்பொருள் ஆவார் என்று அவர்கள் தமக்குள் ஒரு முடிவு செய்து கொண்டனர். நான்முகன் அன்னப் பறவையின் வடிவை எடுத்து வானில் பறந்து இறைவனது முடியைக் காணச் சென்றார். திருமால் பன்றி வடிவு கொண்டு அடியைக் காணச் சென்றார்.

அரிதில் முயன்றும் அவ்விருவராலும் அடியையோ முடியையோ காண இயலவில்லை. அதனால் அவர்களின் செருக்கு அடங்கியது. 'இத்தீத்தம்பம் இறைவராய் இருக்குமோ?' என்று அவ்விருவரும் நினைத்தனர்.

அவ்வமயத்தில் இறைவர் மான்மழு ஏந்திப் புன்னகை கொண்ட முகத்துடன் அந்தத் தீமலையின் நடுவே அருட்காட்சி வழங்கினார். செருக்குக் கொண்ட அவ்விருவரும் செருக்கு அடங்கப்பெற்றுச் சிவலிங்கபூசையைச் செய்து உய்தி பெற்றனர். அந்த இலிங்கத்தை வழிபட்டவர் பன்னிரு கோடி சிவலிங்கங்களை வழிபட்டதால் உண்டாகும் பலன் கிட்டப் பெறுவர்.

திருவிற்கோல இறைவர்க்குப் பல திருப்பெயர்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றையேனும் கூறித் துதித்தால் ஒரே கணத்தில் பிறவிக்குக் காரணமான இருவினைகளும் அகன்று போய்விடும். அப்பெருமானின் திருநாமங்கள் : 1. இரட்சகர், 2. தியாகர், 3. சந்ததாரர், 4. தீர்க்கசடா நிர்த்தர், 5. சகந்நாதர், 6. அஞ்சநாபகண்டர், 7. கிலாநிக்கினர், 8. புவனநாயகர், 9. திரிபுரக்கர், 10. அப்பிரதிஷ்டர், 11. கூவரநாதர், 12. நீவாரதர்.

இப்பெயர்களை அன்புடன் உரைத்தவர், இவற்றுள் ஒன்றையேனும் தம் மக்கட்குப் பெயராயச் சூட்டியவர், ஆகியவர் இம்மையில் அழியாப் போகமுடன் வாழ்வார்; மறுமையில் இறைவனடியை அடைவர்.

இவ்வாறு சூதமா முனிவர் உரைத்தார்.

6. அடிமுடி தேடிய சருக்கம்

327. சூதன்இ யம்பமகிழ்ந்துஅற வோர்அரி தொல்வேதன்
ஆதிஅ கம்பரம் என்றுத மில்பகை ஆனார்என்று
ஓதினை பின்பர னைப்பரம் என்றுஅவர் ஓர்வுற்ற
ஏதுஎன் இங்குஅது இயம்புக என்ன இயம்புற்றான்.

முனிவர்கள் சூதமுனிவரிடம் வினவியது

தெளிவுரை : சூதமுனிவர் மேற்கண்டவண்ணம் கூற, முனிவர்கள் மகிழ்ந்து 'திருமால், பழைமையுடைய நான்முகன் ஆகிய இருவரும் தாமே பரம் பொருள் என்று பகை கொண்டனர் என்று உரைத்தீர்! பின் அவுணர்கள் சிவபெருமானைப் பரம்பொருள் என்று உணரக் காரணமான நிகழ்ச்சி யாது? இப்போது அதனை எங்கட்கு உரைத்தருளுக,' என்று சொன்னார்கள். அப்போது சூதமுனிவர் கூறலானார்.

விளக்கம் : அறவோர்-முனிவர்கள். **அரி**-திருமால். **தொல்வேதன்**-பழைமையுடைய நான்முகன். **பரம்**-பரம்பொருள். **தமில்**-'தம்மில்' என்பதன் விகாரம். **ஓர்வுற்ற**-உணர்ந்த. **ஏது**-காரணமான நிகழ்ச்சி.
1

328. மேனாள் மண்டு பிரளயம் வந்து விரவுங்கால்
கானார் கஞ்சன் துஞ்சுறும் அவ்வுழி கண்ணுற்றே
ஆனா இன்பத்து அந்தணர் கைவைத்து அங்கத்தின்
மானாம் மங்கைக்கு ஆவியின் ஆய்துயில் மாறுஎன்றார்.

உறங்கும் நான்முகனை அந்தணர் எழுப்பதல்

தெளிவுரை : முற்காலத்தில் பெரும்பிரளய வெள்ளம் வந்து உலகை அழித்தது. அப்போது நறுமணம் பொருந்திய நான்முகன் உறங்கலானான். அப்போது அவன் உறங்குவதைப் பார்த்த பிரம பதவி பெற்ற அந்தணர். அந்நான்முகன் மீது கைவைத்துக் 'கலைவடிவான கலைமகளுக்கு உயிர் போன்றவனே! உறக்கத்தின்று விழித்தெழு' என்றனர்.

விளக்கம் : பிரளயம்-உலக அழிவு காலம்; பெரு வெள்ளம். **விரவுங்கால்**-பொருந்தும் போது. **கான்ஆர்கஞ்சன்**-நறுமணம்

பொருந்திய தாமரைமலரின் வீற்றிருப்பவனான நான்முகன். **துஞ்சுறுமவ்வுழி**-தூங்கிய போது. **ஆனா இன்பத்து அந்தணர்**-குறையாத இன்பத்தையுடைய அந்தணர். **அங்கத்தின் மானா மங்கை**-கலைவடிவான மங்கையான கலைமகள். 2

329. என்றலும் வேதன், எழுந்து, களிப்போடு, எறிநீரில்
சென்றுஉல வாநின்றனன்,அது போதில் திகழ்வாகம்
ஒன்றுஉறு மேகம் தங்குத லேபோய் உததிக்கண்
மென்துயில் மேவும் கண்ண பிரானை விழியுற்றான்.

திருமாலைப் பிரமன் எழுப்புதல்

தெளிவுரை : என்று அந்தணர் கூறவும் நான்முகன், விழிப்புற்று எழுந்து செருக்குடன் அலைவீசும் வெள்ள நீரில் போய் உலவலானார். பின்பு விளங்கும் உடல் மேகம் போல் விளங்கும் திருமால் பாற்கடலில் மென்மையாய்த் துயிலும் கண்ண பிரானை எழுப்பினார்.

விளக்கம் : வேதன்-நான்முகன். **களிப்போடு**-செருக்குடன். **எறிநீர்**-அலைவீசும் நீர். **உலவா நின்றனன்**-உலவினான். **திகழ்வாகம் ஒன்றுறு மேகம் தங்குதல்**-விளங்கும் உடல் ஒன்றை உடைய மேகம் தங்கியிருப்பதைப் போன்று. **உததிக்கண்**-பாற்கடலில். மென்துயில் மேவும்-மென்மையாய் உறங்கும். 3

330. மாலான் மாலை மாலஅ டித்தே "மணிநீரின்
பாலா, நீயார்?" என்றுவி னாவப் "பதியாகும்
மேலாம் நாரா யணன்நான்," என்று விரைந்து ஓதி
ஏலா தாகும் அகந்தைகொடு அங்கண் எழுந்தானால்.

நான்முகனின் வினாவும் திருமாலின் விடையும்

தெளிவுரை : செருக்குற்று மயங்கிய நான்முகன் திருமாலை மயங்கும்படி அடித்து "அழகிய பாற்கடலில் உள்ளவனே, நீ யார்?" என்று வினவினார். "பதிப் பொருளாகும் நாராயணன் யானே" என்று விரைந்து திருமால் கூறினார். பின்பு அடையக் கூடாத அகந்தையை மேற்கொண்டு எழுந்தார்.

விளக்கம் : மாலான்-செருக்கால் மயங்கிய நான்முகன். **மாலை**-திருமாலை. **மாலஅடித்தே**-மயக்கம் கொள்ளும்படி அடித்து. **பதியாகு மேலா நாராயணன்நான்**-நான் யாவர்க்கும் மேலான பதியான பரம்பொருள் கடவுளான நாராயணன். **ஏலாதாகும் அகந்தை கொடு**-அடையக்கூடாத செருக்கை கொண்டு. **எழுந்தானால்**-ஆல் அசை. 4

331. மாயன் உரைத்தெழு கின்றமை கண்டே மலர்வேதன்
"நீஅல, நற்பரம் யான்என" ஓதிமுன் நின்றானால்,
ஆயிடை அச்சுதன் மிக்கெழு கோபத் தவனாகிப்
போய்அயன் விற்பொலி மார்பின்எதிர்ந்து புடைத்தானால்.

திருமாலை நான்முகன் அடித்தல்

தெளிவுரை : திருமால் தனக்குப் பதில் கூறி எழுகின்றதைக் கண்டு தாமரையில் வீற்றிருக்கும் நான்முகன், "பரம்பொருள் நீ அல்லை. பரம்பொருள் நானே!" என்று கூறி அவர் முன்பு நின்றார். அப்போது திருமால் மிக்க கோபத்தையுடையவராய் போய் நான்முகனின் காந்தியுடைய மார்பில் ஓங்கி அடித்தார்.

விளக்கம் : மாயன்-திருமால். **மலர்வேதன்**-தாமரைமலரில் வீற்றிருக்கின்ற நான்முகன். **நீயல நற்பரம்**-நீ பரம்பொருள் அல்லை. **யான்**-யானே பரம்பொருள். **ஆயிடை**-அப்போது. **அச்சுதன்**-திருமால். **அயன்**-நான்முகன். **விற்பொலி**-சாந்தி விளங்கும்; ஒளி விளங்கும். **புடைத்தானால்**-அடித்தான். **ஆல்**-அசை. 5

332. முண்டக வேதனும் நெய்சொரி தீயின் முனிவுற்றே
அண்டக டாகம் உடைந்ததுஎ னும்படி அங்கையான்
விண்டுவின் மார்புஎதிர் எற்றினன்; இத்திறம் வெம்போர்கள்
மண்டுஇரு வோர்கள் தமக்கும் விளைந்தன வந்து அம்மா.

கொடிய போர்கள் நிகழ்ந்தன

தெளிவுரை : தன்னைத் திருமால் அடித்ததால், தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனும் நெய்யைப் பெய்த தீயைப் போல் சினந்து உலகத்தின் மேல் முகடு உடைந்தது என்னும்படி

விளக்கம் : மின்னாம்என-மின்னல் என. **மிளிர்வாள் ஒளி**-விளங்கும் வாளினின்று எழும் ஒளி. வாள் வீசும் போது எழுந்த ஒளியே அல்லாது இவர் இங்கு இருக்கின்றார் என்று அறிய இயலாதபடி விளங்கியது. **இமையா அந்நாகர்**-இமைக்காத அத்தேவர்கள். **கறங்காம் என**-காற்றாடி போல. **முறை வட்டணை வந்தார்**-முறையாக வட்டமாய்ச் சுழன்று போரிட்டனர். 10

337. வரைஏகுவர், அமராபதி நகர்ஏகுவர், மலையும்
திரைஏகுவர், பிலம் ஏகுவர், திசைஏகுவர் என்று ஊழ்
தரைஏகுவர், விடைஆளியை அறியாது சமழ்ந்தே
புரையேகொடு சனனந்தொறும் உழல்கின்றவர் புரைய.

பலவிடங்களிலும் போய்ப் போரிடல்

தெளிவுரை : அவ்விருவரும் போரிட்டபடி மலையில் செல்வர். தேவரின் தலைநகரான அமராபதிக்குச் செல்வர். மோதும் அலையுடைய கடலில் செல்வர். பாதளத்துக்குட் போவர். எட்டுத்திசைகளிலும் செல்வர். கதிரவனின் உலகுக்குச் செல்வர். தன் எதிரில் போரிடுபவரைக் காணாது மயங்கிக் குற்றத்துடன் பிறவிதோறும் பிறந்து துன்புறுகின்றவரைப் போல்!

விளக்கம் : வரை-மலை. **அமராபதி**-பொன்னுலகின் தலைநகர். **மலையும் திரை**-வீசும் அலைகளையுடைய கடலில். **புரைய**-ஒப்ப. **புரையே கொடு**-குற்றம் செய்து; பாவத்தைச் செய்து. **சனனந்தொறும்**-பிறவி தோறும். 11

338. தாள்நாடுவர், கரம்நாடுவர், தலைநாடுவர், மலரும்
தோள்நாடுவர், களம்நாடுவர், தொடைநாடுவர், சுடரும்
பூண்ஆடுறும் உரன்நாடுவர், வயின்நாடுவர், பொலியும்
வாள்ஆடுறு விழிநாடுவர், இவ்வாறு மலைந்தார்.

கால் முதலியவற்றைத் தேடிப் போரிடல்

தெளிவுரை : எதிராளியின் காலைத் தேடுவர்; கையைத் தேடுவர்; தலையைத் தேடுவர்; பெரிய தோள்களைத் தேடுவர்; கழுத்தைத் தேடுவர்; தொடையைத் தேடுவர்; ஒளிவிடும் அணிகலன் அசையும் மார்பைத் தேடுவர்; வயிற்றைத் தேடுவர்; விளங்கும் ஒளியுடைய கண்களைத் தேடுவர்; இப்படி அவர்கள் போரிடலாயினர்.

விளக்கம் : தாணாடுவர்-தாள்+நாடுவர்; காலைத் தேடுவர். **மலரும் தோள்**-பூரித்து எழும் தோள். **களம்**-கழுத்து. **பூண் ஆடுறு உரன் நாடுவர்**-அணிகள் அசையும் மார்பைத் தேடுவர். **வயின்**-வயிறு. **வாணாடுறு**-வாள்+நாடுறு; ஒளி பொருந்தியுள்ள. **மலைந்தார்**-போரிட்டார். 12

339. கொந்துஉ லாமலர் முடிஅண்ட கோள்அதை கடப்ப
வந்து பாதலம் முழுவதும் மலர்ப்பதம் இகப்ப
வந்த வேலையின் இருவர்தம் அகந்தையும் அறுப்பான்
எந்தை ஆயிடை சூழல்வடிவு இலிங்கமாய் எழுந்தான்.

சிவன் அழல்வடிவாய்த் தோன்றல்

தெளிவுரை : மலர்க்கொத்துகள் பொருந்திய தலை முடியானது உலகத்தின் உச்சியைக் கடக்க, பின்பு வந்து பாதாளம் முழுவதும் மலர்போன்ற அடி கடக்க, அவர்கள் மேலும் கீழும் சென்று போரிட்டனர். அப்போது அந்தத் திருமால் நான்முகன் ஆகிய இருவருடைய செருக்கையும் போக்குதற் பொருட்டு எம் இறைவனான சிவபெருமான் அங்குத் தீயின் வடிவான இலிங்கமாய் உயர்ந்து தோன்றினார்.

விளக்கம்: கொந்துலாமலர்-கொத்தாக விளங்கும் மலர். **அண்டகோளகை**-உலகத்தின் மேற்பகுதியை. **இகப்ப**-கடப்ப. **இருவர்**-திருமால், நான்முகன். **அறுப்பான்**-போக்கும் பொருட்டாக. **எந்தை**-எம் தந்தையான சிவபெருமான். **தழல் வடிவு இலிங்கமாய்**-தீயின் வடிவான இலிங்கமாய். 13

340. ஆதி மால்அயன் அன்பகத்து இருள்அற அமைத்த
தீதில் மாமணி விளக்கெனத் திகழ்வதுஅவ் இலிங்கம்
மேதை யாம்அவர் அகத்துஇருள் ஒருசிறு விளக்கின்
சோதி போக்குமோ அப்பெருஞ் சோதியே அல்லால்.

அகத்திருள் போக்குவது அப்பேரொளி

தெளிவுரை : அந்த இலிங்கம் பழமையுடைய திருமால் நான்முகன் ஆகியவர் தம் உள்ளத்தின் இருள் நீங்க அமைக்கப்பட்ட குற்றமற்ற சிறந்த மணி விளக்கைப் போல் விளங்கியது. பேரறிவினரான அவர்களில் உள்ளத்தில் உள்ள அந்தப் பேரொளியே அல்லாது ஒருசிறு விளக்கினது ஒளி போக்கிவிடுமோ?

விளக்கம் : மால்அயன்-திருமால் நான்முகன். **இருள்அற**- இருள் விலக. **அப்பெருஞ்சோதி**-அந்தப் பேரொளியானது. 14

341. அங்கு வந்துஎழும் அருள்கனல், தாணுவை அயன்மால்
தங்கள் வெஞ்சமர் தணந்தனர் நோக்கி, "இத் தாணு
இங்கு வந்தது?"என் என்றனர், தாணுஎன்று அறியார்
கங்க ரன்தனை அவன்கணால் அன்றியார் காண்பார்?

இருவரும் போரை நிறுத்துதல்

தெளிவுரை : அவ்விடத்தே வந்து தோன்றிய அருள் தீயான தூணைப் பார்த்ததும் நான்முகன் திருமால் ஆகிய இருவரும் தாம் செய்து கொண்டிருந்த போரை நிறுத்தினர். அத்தீத் தூணைப் பார்த்து அதனைச் சிவபெருமான் என்று அறியாது, 'இஃது இங்கு வந்தது ஏன்?' என்று கூறினர். கபாலத்தைக் கையில் உடைய இறைவனை அவனது கண்ணால் அல்லாது காண வல்லார் யார்?.

விளக்கம் : அருள்கனல் தாணுவை-அருளையுடைய நெருப்புத் தூணை. **வெஞ்சமர் தணந்தனர்**-கொடிய போரைக் கைவிட்டனர். **தாணு**-சிவபெருமான். **கங்கரன் தனை**-கம்+கரன்+தனை; பிரமனின் தலையோட்டை உடையவனை. 15

342. மண்டு வெஞ்சமர் தணந்து, "இனி இருவரும் மலர்வு
கொண்ட அங்கியின் அடிமுடி பார்ப்பம், அக் குறிமுன்
கண்ட வன்பரம்" எனத்தமில் இயைந்தனர் களிகூர்
வண்டு உழும் கமல ஆதனக் கடவுளும் மாலும்.

அடி அல்லது முடிக்குறி காண்பவன் பரமன் என முடிவு செய்தல்

தெளிவுரை : அவ்விருவரும் தமக்குள் ஏற்பட்ட கொடிய போரைக் கைவிட்டுப் புதியதாய்த் தோன்றிய தீத்தூணின் அடிமுடி காணலாம். அவ்வாறு அடி அல்லது முடியின் குறியைக் கண்டவனே பரம்பொருள் ஆவான் என்று, மகிழ்ச்சியுடைய வண்டுகள் கிண்டும் தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனும் திருமாலும், தமக்குள் முடிவு செய்து கொண்டனர்.

விளக்கம் : வெஞ்சமர்-கொடிய போர், **தணந்து**-கைவிட்டு. **மலர்வுகொண்ட**-புதியதாய்த் தோன்றிய. **அங்கி**-தீத்தம்பத்தின். **பார்ப்பம்**-காண்போம். **அக்குறி முக்கண்டவன்**-அடி அல்லது முடியின் குறியை முதலின் காண்பவன் பரம்பொருள் ஆவான். **தமில்**-தம்மில் என்பதன் விகாரம். **இயைந்தனர்**-தீர்மானித்தனர். **களிகூர்**-களிப்பு மிக்க. **கமலாதனக் கடவுள்**-தாமரை இருக்கையை உடைய நான்முகன். 16

343. ஏன மாய் அரி, மலர் அயன் எகின மாய்ப் பிலமும்
வானும் ஏகுபு, மனமொழி தனிலுமே மருவா
ஞான நாயகன் அடிமுடி விழிகொடு நாடப்
போன மூதறிவு உடைமையின் நினைந்து போயினரால்.

அடிமுடி தேடப் பன்றியாயும் அன்னப்பறவையாயும் போதல்

தெளிவுரை : திருமால் பன்றியாகவும், நான்முகன் அன்னப் பறவையாகவும் முறையே பாதலத்திலும், வானிலும் சென்று, மனம், வாக்கு ஆகியவற்றில் தட்டுப்படாத ஞானநாயகனின் அடியையும் முடியையும் கண்களால் தேட எண்ணிச் சென்றனர்.

விளக்கம் : ஏனமாய் அரி-திருமால் பன்றியாய். **மலரயன்**-தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன். **எகினமாய்**-அன்னப்பறவையாய். **பிலம்**-பாதலம். **மனமொழி தனிலுமே மருவா ஞான நாயகன்**-மனத்துக்கும் வாக்குக்கும் அப்பாற்பட்ட ஞான நாயகனான சிவபெருமான். **மருஉற**-தட்டுப்படாத. **விழிகொடு**-கண்ணைக் கொண்டு. **போனமூதறிவு**-நீங்கிய பேரறிவு; அதாவது அறிவு இல்லாமை. 17

344. குன்று போல்வரு மும்மதக் கோட்டுவா ரணத்தை
அன்று வாய்குடர் சொரிந்திட வேமிதித்து அழுத்திக்
கொன்ற தாள்மலர் என்றுஅறி யாதுஅதைக் குறுகிக்
கன்றி யோர்சிறு பன்றிகீழ்ப் பட்டது கடிதின்.

யானையைக் கொன்ற திருவடியைக் காண விரும்பல்

தெளிவுரை : மலையைப் போல் வரும் மூன்று மதமும் கொம்பும் உடைய யானையை முன்பு வயிற்றுக்குடல், வாய்வழியாகச்

சொரிந்திடும்படி மிதித்துக் கொன்ற சிவபெருமானின் திருவடியாகும் என்று அறியாமல் அப்பெருமானின் திருவடியைக் காணப் புறப்பட்டு நெருங்கி அதன் கீழ் விரைவாகச் சென்றது.

விளக்கம் : மும்மதம்-மூன்று மத நீர்கள். அவை, கன்னமதம், கபோலமதம், பீஜமதம். **கோட்டு**-கொம்பையுடைய. **வாரணத்தை**-யானையை.

ஒருகாலத்தில் சிவபெருமானைக் கொல்லத் தாருகாவன முனிவர்கள் வேள்வியினின்று யானையை உருவாக்கி அனுப்பினர். அதனைச் சிவபெருமான் கொன்றார். அத்தகைய சிவபெருமானின் திருவடி என்று அறியாத திருமாலான பன்றி அந்தத் திருவடியைத் தேட அதன் கீழ்ச் சென்றது. **வாய்குடர் சொரிந்திட**-வயிற்றுக் குடல் வாய்வழியாக வெளிப்பட. **மிதித்து அழுத்திக் கொன்றதாள்**-மிதித்து அழுத்திக் கொன்ற சிவபெருமானது திருவடி. கடிதின் ரைவாக. **கன்றி**-விரும்பி. 18

345. முளைத்த வெண்பிறை எனும்முடக் கோடு தேய்வுறமண்
கிளைத்து வெம்பிலம் அனைத்தையும் இகந்தும்இக்கே ழல்
இளைத்த தன்றிவான் தொடையையும் கடந்து அதில் இன்பம்
விளைந்த எந்தைதாள் விலங்குறப் பட்டதோ விளம்பீர்

பன்றியால் காண இயலாமை

தெளிவுரை : முளைத்த வெண்மையான பிறைத்திங்கள் என்ற வளைந்த கொம்பானது தேய மண்ணைத் தோண்டிக் கொடிய பாதலம் அனைத்தையும் கடந்தும் இந்தப் பன்றி இளைத்தது. பெரிய தொடைப்பகுதியையும் கடந்து அதில் இன்பம் உண்டாக்கிய எம்பெருமானின் திருவடி பன்றியான விலங்கால் காணப்பட்டதோ. கூறுவீர்.

விளக்கம் : வெண்பிறை எனும் முடக்கோடு-வெண்மையான பிறைச்சந்திரன் என்று கூறுமாறு வளைந்த கொம்பு. **தேய்வுற**-தேய. **மண்கிளைத்து**-மண்ணைத் தோண்டி. **வெம்பிலம் அனைத்தையும் இகந்து**-கொடிய பாதலம் யாவற்றையும் கடந்து. **இளைத்ததன்றி**-தளர்ச்சியடைந்ததே அல்லாது. **விலங்குறப்பட்டதோ**-விலங்கான பன்றியால் காணப்பட்டதோ. **வான்தொடை**-பெரிய தொடை. **எந்தைதாள்**-சிவபெருமான் திருவடி. **விளம்பீர்**-கூறுவீர். 19

346. வருந்தி மெய்இருங் கேழலின் உருவுகொள் மாயன்
திருந்து நம்குறி கண்டிலம் மலர்அயன் சென்று
பொருந்து பொன்முடி கண்டுறின் புகல்வதுஎன் என்னும் நாண்
அருந்து நெஞ்சொடு ஒருவகைப் புவியின் மீண்டு அடைந்தான்.

திருவடியைக் காண இயலாமல் திரும்பிவருதல்

தெளிவுரை : கரிய பன்றியின் வடிவுகொண்டு திருமால் மெய் வருந்தி 'நாம் காண வேண்டிய குறியைக் காணவில்லை. மலரில் இருக்கும் நான்முகன் உயரச் சென்று இதன் பொன் முடியைக் கண்டானாயின் கூறுவது யாது?' என்று எண்ணி வருந்திய மனத்துடன் ஒருவகையாகப் பூமியில் மீண்டும் வந்து சேர்ந்தான்.

விளக்கம் : இருங்கேழல்-பெரிய பன்றி; கரிய பன்றியுமாம். **மாயன்**-திருமால். **நம் குறி**-நாம் காண வேண்டிய அடையாளம். **மலரயன்**-நான்முகன். **பொன்முடி**-அழகிய முடி. **புகல்வதுஎன்**-யான் கூறக்கூடியது யாது?. 20

347. விண்ணின் ஏகிய வியன்சிறை ஓதிமம் விரைந்தே
அண்ணல் மாமுடிக் கங்கையின் துறைபடிந்து ஆடக்
கண்ணி ஏகுதல் எனச்செழுங் கதிரிடம் முதலா
எண்ணும் யாவையும் பரந்து இவர்ந்து இகந்துபோ யினதால்.

அன்னமான நான்முகன் கதிரவன் முதலியவற்றைக் கடந்து போதல்

தெளிவுரை : வானத்தில் முடியைக் காணச் சென்ற பெரிய சிறகையுடைய அன்னப்பறவை விரைவாய்ச் சிவபெருமானின் சிறந்த முடியில் உள்ள கங்கையாற்றின் நீரில் ஆடிட எண்ணிச் செல்கின்றது எண்ணுமாறு செழுமையான கதிரவன் முதலிய யாவற்றையும் கடந்து போயினன்.

விளக்கம் : வியன் சிறை ஓதிமம்-பெரிய இறகுகளையுடைய அன்னப்பறவை. **அண்ணல்**-சிவபெருமான் **மாமுடிக் கங்கையின் துறை**-சிறந்த முடியில் உள்ள கங்கைத் துறை நீரில். **படிந்தாட**-முழுகியாட. **கண்ணி**-நினைத்து. **செழுங்கதிர்**-செழுமையான கதிரவன். 21

348. "விண்டு காண்குவன் அடியினை, முடியினை விரைந்து
கண்டு நாம்இணை ஆகுவம்" எனஅயன் கருத்தில்
கொண்டு தேவமா வருடம்ஓர் ஆயிரம் குலவும்
அண்டம் ஏறியும் அடைந்திலன் அமலன்மார் பளவும்.

நான்முகன் ஓராயிரம் தேவ வருடம் கடந்தும் சிவனின் மார்பையும் காண இயலாமை

தெளிவுரை : நான்முகன், 'திருமால் திருவடியைக் காண்பான்; நாம் முடியை விரைந்து போய்க் காண்போம். அதனால் திருமாலுக்கு நிகராவோம்' என்று எண்ணி ஓராயிரம் தேவ வருடம் வானில் ஏறியும் குற்றமற்ற சிவபெருமானின் மார்பையும் அவர் அடைந்திலர்.

விளக்கம் : விண்டு-திருமால். **அயன்**-நான்முகன். **தேவமா வருடம்**-365 மனிதவருடம் கொண்டது ஒரு தேவ வருடம். **குலவும் அண்டம்**-பொருந்திய உலகங்கள்.
தேவர் ஆண்டு ஓர் ஆயிரம் கடந்தும் சிவபெருமானின் மார்பளவு கூட நான்முகனால் கடக்க முடியவில்லை. 22

349. சிறகு நொந்து இளைத் திடுதலான் அப்புறம் சேணில்
குறுகு கின்றதன் செயல்ஒழிந்து எகின்உருக் கொண்டோன்
இறுகு திண்புயத்து அரிசெயல் என்கொலோ என்று
மறுகு நெஞ்சொடு மீண்டுவந்து அடைந்தனன் மண்ணில்.

அயன் மேலே செல்ல முடியாமல் திரும்புதல்

தெளிவுரை : அன்னப் பறவையின் வடிவுடைய நான்முகன், சிறகு நோவப் பெற்று இளைத்தலால், அதன் பின்பு மேலே உயரச் செல்லுதலைக் கைவிட்டு, திண்மையான திருமாலின் நிலைமை என்னவோ' என்று எண்ணி மயங்கிய மனத்துடன் மீண்டும் பூமியை வந்து சேர்ந்தார்.

விளக்கம் : அப்புறம்-மேலே. **சேணில்**-தொலைவில். **குறுகுகின்ற செயல் ஒழிந்து**-அடைகின்ற செயலைக் கைவிட்டு, **எகின் உரு**-அன்னப்பறவையின் வடிவம். **இறுகுதிண்புயத்து அரி**- மிக வன்மை யுடைய தோள்களை உடைய திருமால். **மறுகு நெஞ்சோடு**-மயங்கும் நெஞ்சத்தோடு. 23

350. இட்ட தம்குறி கண்டுதாம் பரம்என இச்சைப்
பட்டுஅ னேகநாள் படாதபா டுகள்எலாம் பட்டார்
இட்டம் ஒன்றிலர் எம்பிரான் அடிமுடி யினைப்பூப்
பட்ட கண்ணினர் காண்பரோ எத்தனை படினும்?

நான்முகனால் சிவன் முடியைக் காண இயலாமை

தெளிவுரை : தாம் காண விரும்பிய அடையாளத்தைக் கண்டு 'பரம்பொருள்' என விளங்க வேண்டும் என விரும்பி அனேக நாட்கள் படமுடியாத துன்பங்களைப் பட்டனர். ஆயினும் விருப்பம் நிறைவேறவில்லை. எம்பெருமானின் அடியையும் முடியையும் பூப்பட்ட கண்ணை உடையவர் காண இயலுமோ? இயலாது.

விளக்கம் : இட்ட தங்குறி-காணவிரும்பிய தம் குறி. **இட்ட**-'இஷ்ட' என்பதன் விகாரம். **இட்டம் ஒன்றில்**-விருப்பம் நிறைவேறப் பெற்றிலர். **பூப்பட்ட கண்ணினர்**-கண்ணில் பூ விழப்பெற்றவர்; பார்வை இழந்த கண்ணினர். **எத்தனை படினும்**-எத்தனைத் துன்பம் பட்டாலும். 24

351. வந்து கூடியங்கு இருவரும் மனத்துஎழும் அகந்தை
சிந்தி வாள்முகம் புலர்ந்துநின் றிடுதலால், சிந்தை
தந்திடும்குறி காண்கிலா தமைத்தமில் அறிந்தே
உந்து கின்றநாள் இருவரும் ஒத்தலின் ஒழிந்தார்.

நான்முகனும் திருமாலும் நாணம் கொள்ளல்

தெளிவுரை : பூமியில் வந்து அந்த இருவரும் மனத்தில் எழுந்த செருக்கு நீங்கப்பெற்று ஒளியுடைய முகம் வாட்டம் அடையப் பெற்று நின்றனர். அதனால் உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்தும் குறி காணாததைத் தாம் அறிந்து கொண்டனர். உறுத்தும் நாணம் கொண்டு ஒத்தவராய் விளங்கினர்.

விளக்கம் : அகந்தை-கருவம். **புலர்ந்து**-வாடி. **வாண்முகம்**-ஒளியுடைய முகம். அடியையும் முடியையும் காணமாட்டாத குறியை இருவரும் கொண்டிருந்தனர். அதனால் இருவரும் தமக்குள் தாமே அடி முடி காணவில்லை என்பதை உணர்ந்தனர்.

இங்குள்ள கதை, அருணாசல புராணத்தில் வேறுவிதமாய்க் கூறப்பட்டுள்ளது.

திருமால் அடியைக் காண இயலாது திரும்பி வந்து உண்மையை ஒப்புக் கொண்டான். நான்முகன் சிவபெருமான் திருமுடியினின்று விழும் தாழம்பூவைக் கண்டு, தான் சிவபெருமானின் முடியினைக் கண்டதாகவும் அதற்கு அத்தாழம்பூ சாட்சி எனக் கூறிவிடலாம் என்றும் எண்ணினான். தான் கூறப்போகும் பொய்க்குத் தாழம்பூ சாட்சியாகும்படி அதனை வேண்டினான். தாழம்பூ ஒப்பியது. திரும்பிவந்த அவர் தான் முடியைக் கண்டதாக உரைத்தார். அதற்குச் சான்றாய்த் தாழம்பூ நின்றது. எனவே பொய் சொன்ன நான்முகனுக்கு உலகில் கோயில் இல்லாமற் போகக் கடவது என்றும். பொய்க்குச் சான்றாய் நின்ற தாழம்பூவை எவரும் தலையில் சூடாமல் போகக் கடவது என்றும் சிவபெருமான் சபித்தார். 25

352. எங்க ணாயகன் அருள்சிறிது உறுதலின் இனையோர்
தங்கண் ஆகிய மயக்கு ஒழிந்து அற்புதத் தாணு
நங்கள் நாயகன் ஆகியே நமக்குஅருள் நெற்றிச்
செங்க ணான்உறும் உருவமோ என்று சிந்தித்தார்.

இந்தத் தாணு சிவபெருமானோ என நினைத்தல்

தெளிவுரை : எம் இறைவனான சிவபெருமானின் அருள் சிறிது இருத்தலால், நான்முகன் திருமால் ஆகிய இருவரும் தம்மிடத்து இருந்த மயக்கம் ஒழியப் பெற்று, அற்புதத் தாணுவானது நம் இறைவனாகியே நமக்கு அருள் செய்ய நெற்றியில் கண்ணையுடைய சிவபெருமானின் உருவமோ என்று எண்ணினர்.

விளக்கம் : எங்கணாயகன்-எங்கள்+நாயகன்; எம் இறைவனான சிவபெருமான். **தங்கணாகிய**-தம்மிடத்து இருந்த. **மயக்கு ஒழிந்து**-அறியாமை நீங்கி. **நெற்றிச் செங்கணான்**-நெற்றியில் கண்ணையுடைய சிவபெருமான். 26

353. ஆன காலையின் மணியிடத்து ஆடுறு ஒளிபோல்
ஞான நாயகன் அழல்நெடுந் தாணுவின் நடுவண்
மானும் மாமழு வும்திகழ் கரமும்ஒண் மார்பும்
தூநி லாநகை வதனமும் தோன்றுற நின்றான்.

சிவபெருமான் மான்மழு முதலியவற்றுடன் விளங்குதல்

தெளிவுரை : இங்ஙனம் அயனும் திருமாலும் அப்படி எண்ணியபோது மணியில் பொருந்திய ஒளியைப் போன்று ஞானமுடைய சிவபெருமான், தீவடிவான கம்பத்தின் நடுவில் மானும் சிறந்த மழுவும் விளங்கும் கைகளும் ஒளியுடைய மார்பும் தூய்மையான நிலவைப் போன்ற முகமும் வெளிப்பட நின்றான்.

விளக்கம் : மணியிடத்து ஆடுறும்ஒளி போல்-மணியில் பொருந்தி விளங்கும் ஒளியைப் போல். **அழல்நெடுந்தாணு**-அழல் மயமான பெரிய தூண். **நடுவண்**-நடுவில். **மழு**-சூலம். **ஒண்மார்பு**-ஒளியுடைய மார்பு. **தூநிலா நகை வதனம்**-தூய்மையான நிலவைப் போன்ற வெண்மையான நகையுடைய முகம். 27

354. நின்ற காலையில் மிடற்றணி நீலமும், உரத்தில்
துன்று மாலிகைத் தலைகளும், கண்டுஉளம் துணுக்குற்று
ஒன்று நாணுடன் அச்சமும் ஒருங்குஎழ, அயன்மால்
சென்று நாயகன் திருவடி சிரம்பட விழுந்தார்.

திருமால் நான்முகன் ஆகிய இருவரும் சிவபெருமானை வணங்குதல்

தெளிவுரை : அங்ஙனம் எம்பெருமான் நின்றபோது, கழுத்தில் அணிந்த நஞ்சின் நீல நிறமும், மார்பில் பொருந்திய தலைகளாகிய மாலைகளும், கண்டு உள்ளம் அஞ்சி, பொருந்திய நாணமுடன் அச்சமும் ஒருங்கே உண்டாக. நான்முகன், திருமால் என்ற இருவரும் போய்ச் சிவபெருமானின் திருவடியில் தலைப்படுமாறு விழுந்து வணங்கினர்.

விளக்கம் : மிடற்று அணிநீலமும்-கழுத்தில் பொருந்திய நீல நிறமும். **உரத்தில்**-மார்பில். **மாலிகைத் தலைகள்**-மாலைகளாக உள்ள தலைகள் தலைகளால் ஆன மாலை. **துணுக்குற்று**-நடுங்கி. **சிரம்பட**-தலை பொருந்த. 28

18

355. எழுதிர் அஞ்சலிர் என்றுஉமை நாயகன் இயம்பத்
தொழுத கையொடும் எழுந்துநின்று அறிந்தவா துதித்தே
இழுதை யேம்உனைப் பரம்என அறிந்திடாது இயற்றும்
பழுது தீர்த்தருள் என்றிடப் பராபரன் பகரும்.

திருமால் நான்முகனின் வேண்டுதல்

தெளிவுரை : உமையம்மையின் கணவனான சிவபெருமான் 'எம்மை வணங்குபவரே! எழுந்திருங்கள்' என்று கூறினார். திருமாலும் நான்முகனும் வணங்கிக் கூப்பிய கையுடன் எழுந்து நின்று தாம் அறிந்தபடி துதித்து, 'அறிவற்றவராகிய யாங்கள் உம்மைப் பரம்பொருள் என்று அறிந்து கொள்ளாமல் செய்த குற்றத்தைப் போக்கியருள வேண்டும்' என்று இறைஞ்சினர். மேலான இறைவன் கூறலானான்.

விளக்கம் : எழுதிர்-எழுவீராக. **அஞ்சலிர்**-வணங்குபவரே. **உமைநாயகன்**-உமையம்மையின் கணவன் சிவபெருமான். **அறிந்தவா**-அறிந்தபடி. **இழுதையேம்**-அறிவில்லாதேம். **பரம்**-பரம்பொருள். **பழுது**-குற்றம். **பராபரன்**-மிகமேலான சிவபெருமான். 29

356. "நும்மை நாம்படைத்து, இருதொழில் நுங்களுக்கு உதவ,
எம்மை நீர்என உமதுஅறிவு ஒன்றியும் வேறாய்க்
கொம்மை மாமுலை உமையொடு வடிவுகொண்டிருக்கும்
எம்மை நீர்மறந்து உமைமதித்து அமர்புரிந்து இளைத்தீர்.

வீணே போரிட்டீர்!

தெளிவுரை : உம்மை யாங்கள் படைத்து இரண்டு தொழில்களை உங்களுக்கு உதவினேன். நீவிர் வெம்மை நீர் என உமது அறிவு ஒன்றியும் வேறாய், திரண்ட சிறந்த முலையுமையுடன் வடிவு கொண்டு இங்கு இருக்கும் எம்மை நீங்கள் மறந்து உம்மையே பரம்பொருள் என்று எண்ணிக் கொண்டு போர் செய்து கொண்டீர்.

விளக்கம் : இருதொழில்-படைத்தல் காத்தல் என்ற இரண்டு தொழில். **வெம்மை நீர் என**-வெப்பமும் நீரும் வேறன்று; **ஒன்றே** என்பதற்காகக் காட்டும் எடுத்துக்காட்டு. **உமது அறிவு ஒன்றியும்**

வேறாய்-நும் அறிவு ஒன்றியும் வேறாகி விளங்கி. **கொம்பை மாமுலை**-திரண்ட பெரிய முலை. **உம்மை மதித்து**-உம்மையே பரம்பொருள் என மதித்து. **அமர்**-போர். 30

357. நீவிர் நம்மையே பரம்என நினைந்திடாது, அமர்செய்
பாவம் நந்திநும் பதநிலை பண்டுபோல் அடைய
ஆவல் கொண்டுநம் வடிவமாம் இலிங்கம்நன்கு அமைத்துக்
கூவம் நண்ணிஅர்ச் சியும் எனப் புகன்றுஇனும் கூறும்.

இலிங்க வழிபாடு செய்யுங்கள்

தெளிவுரை : "நீங்கள் நம்மையே பரம்பொருள் என்று நினைக்காது போரைச் செய்த பாவம் குறைந்து நும் பதவியின் நிலை முன் போல அடைய ஆவல்கொண்டு நம் வடிவமான இலிங்கம் நன்கு அமைத்துக் கூவம் என்ற பதியை அடைந்து வழிபாடு செய்வீர்," என்று கூறினார். கூறி மேலும் கூறலானார்.

விளக்கம் : அமர்செய்பாவம்-போரைச் செய்த பாவம். **நந்தி**-குறைந்து. **பதநிலை**-பதவியின் நிலை. **நண்ணி**-அடைந்து. **அர்ச்சியும்**-வழிபாடு செய்யுங்கள். 31

358. நீறு கண்டிகை புனைந்து நம் நிகழ்வடிவு என்ன
கூறுஇ லிங்கபூ சனைபுரி குணத்தனர் நாமாத்
தேறு கின்றவர் ஒழிவுஇல்பேர் இன்பமெய்த் தேவர்
வேறு கண்டவர் வெந்துயர் விடாததீ நரகர்

வழிபாட்டால் வரும் பயன்

தெளிவுரை : விபூதி, உருத்திராக்க மாலை ஆகியவற்றைப்பூண்டு நம் வடிவமாகும் என்று கூறி இலிங்க வழிபாடு செய்யும் குணம் உடையவரை, நாமாகவே நினைப்பவர் ஒழிவில்லாத பேரின்பம் எய்தும் தேவர் ஆவார். அதற்கு மாறாகக் கண்டவர் கொடிய துயரம் நீங்கப் பெறாத தீய நரகர் ஆவார்.

விளக்கம் : நீறு-விபூதி. **கண்டிகை**-உருத்திராக்க மாலை. **பேரின்பமெய்த்தேவர்**-பேரின்பத்தை அடையும் தேவர். **வேறு கண்டவர்**-இலிங்க பூசை செய்யாதவர். **வெந்துயர்**-கொடிய துன்பம். **விடாத**-நீங்காத இலிங்க வழிபாடு செய்பவரைச் சிவமாகக் கருதுபவர் தேவர் ஆவர். அவ்வாறு கருதாதவர் நரகர் என்பதாம். 32

359. கலைகள் யாவையும் உணர்ந்தவர் ஆயினும் கருதி
இலகு நாம்மகிழ் இலிங்கபூ சனைதனை இயற்றா
நிலையர் ஒன்றையும் உணர்கிலார்; அஃதுடை நெறியர்
உலகின் ஒன்றையும் உணர்கில ரேனும்முற்று ணர்ந்தோர்.

இலிங்க பூசை செய்பவர் முற்றும் உணர்ந்தவர்.

தெளிவுரை : கலைகள் யாவற்றையும் உணர்ந்தவர் என்றாலும் எண்ணி விளங்கும் நாம் மகிழடையும் இலிங்க பூசனையைச் செய்யாமல் உள்ளவர் ஒன்றையும் அறியாதவர் ஆவார். இலிங்க பூசையைச் செய்பவர் உலகில் ஒன்றையும் உணராதவர் ஆயினும் எல்லாவற்றையும் உணர்ந்தவர் ஆவார்.

விளக்கம் : இலகு-விளங்கும். இலிங்கபூசை செய்யாதவர் ஒன்றையும் உணராதவர் ஆவார். இலிங்கபூசையைச் செய்பவர் முற்றும் உணர்ந்தவர். **அஃது**-அப்பூசை. 33

360. நரரில் நீசரே ஆயினும் நல்இலிங்கத்தில்
பரிவினான் நமைப் பூசனை புரிகுவர் பகரின்
சுரரின் மேலவர் அஃதிலர் சுரர்களின் சிறந்த
வரர்கள் ஆயினும் புலையரே மெய்ம்மை இம்மாற்றம்.

இலிங்கபூசை செய்பவர் தேவரைவிட உயர்ந்தவர்

தெளிவுரை : அன்பு இல்லாத நீசராக இருந்தாலும் நல்ல இலிங்கத்தில் பக்தியுடன் நம்மைப் பூசை செய்பவர். கூறப்போனால் தேவரைவிட மேலானவர் ஆவார். அப்படிச் செய்யாதவர் தேவர்களைவிடச் சிறந்தவராயினும் புலையரே ஆவார். இது உண்மையான சொல்லாகும்.

விளக்கம் : நாரினீசர்-நார்+இல்+நீசர்; அன்பு இல்லாத நீசர். **பரிவின்**-அன்புடன். **புரிகுவர்**-செய்பவர். **பகரின்**-கூறப்போனால். **சுரரின்**-தேவரைவிட. **புலையர்**-கீழானவர். 34

361. மகிழ்ந்து இலிங்கபூ சனைசெய்வோன் எக்குலம் வரினும்
புகழ்ந்த வன்தனை நாம்என வந்தனை புரிவோர்
திகழ்ந்த நம்பதம் பெறுகுவர் அவன்குலம் சிந்தித்து
இகழ்ந்த புன்மையன் நீசனாய் நரகில் வீழ்ந்து இகவான்.

நீசன் ஆவான்

தெளிவுரை : மகிழ்வு கொண்டு இலிங்க பூசை செய்பவன் எந்தக் குலத்தில் தோன்றிவரினும் அவனை நாம் என்று புகழ்ந்து வழிபாடு செய்வர். அவர் நம் திருவடியை அடைவர். அவனது குலத்தை எண்ணி இகழ்ந்து கூறியவன் நீசனாய் நரகத்தில் விழுந்து அதனின் நீங்காது ஆழ்வான்.

விளக்கம் : எக்குலத்தில் பிறந்தவனாயினும் இலிங்கபூசையைச் செய்பவரை நாம் என்று எண்ணி வணங்குவர். நம் அடியை அடைவர் அவரது குலத்தை நினைத்து இகழ்ந்தவன் நீசனாய் நரகத்தில் விழுவான்; அதினின் மீளமாட்டான்.

நம்பதம்-நம் திருவடி. **பெறுகுவர்**-அடைவர். **புன்மையன்**-அற்பன்; கீழானவன். 35

362. என்று கூறிஅத் தாணுவின் மறைந்தனன் இறைவன்
நின்றமால் அயன் உவகைபூத்து அண்ணல்சொல் நினைந்து
சென்று கூவமா நகரிடைச் சிவலிங்கம் அமைத்து
மன்றல் மாமலர் மஞ்சனம் கொடுவழி பட்டார்.

சிவலிங்கம் அமைத்து வழிபடுதல்

தெளிவுரை : என்று சிவபெருமான் கூறி அந்த அழல் தம்பத்தில் மறைந்தருளினார். அங்கே நின்ற அயன் திருமால் ஆகிய இருவரும் மகிழ்வு கொண்டு சிவபெருமான் கூறிய சொல்லை எண்ணியபடி கூவநகரத்துக்குள் போய்ச் சிவலிங்கம் அமைத்தனர். நறுமணமுடைய சிறந்த மலர்களையும் நீராட்டும் நீரையும் கொண்டு வழிபட்டனர்.

விளக்கம்: தாணுவில் மறைந்தனன்-அழல் கம்பத்தில் மறைந்தான். **உவகை**-மகிழ்ச்சி. **அண்ணல்**-சிவபெருமான். **கொடு**-கொண்டு என்பதன் விகாரம். 36

363. வினைகள் தீர்ப்பது புனிதன்மெய்ஞ் ஞானமே விளைப்பது
அன்கன் நேயமோடு இருப்பதுஅக் கூவம் ஆதலினால்
கனவில் ஆயினும் இந்நகர் கடக்கொணாது என்று அங்கு
இனிய மேருவிற் கோலநா யகன்தொழுது இருந்தார்.

நான்முகனும் திருமாலும் கூவத்தில் இருத்தல்

தெளிவுரை : எனவே, வினைகளைத் தீர்ப்பது புனிதமான சிவமெய்ஞ் ஞானமே ஆகும். அழகுடைய இறைவன் வீற்றிருப்பது கூவ நகரே. ஆதலால், கனவிலாயினும் இந்நகரைக் கடக்க ஒண்ணாது என்று அங்கு இனிய மேருவிற்கோல நாதனைக் தொழுத வண்ணம் நான்முகன் திருமால் என்னும் இருவரும் அந்நகரத்தில் இருந்து வந்தனர்.

விளக்கம் : வினைகள் தீர்ப்பது-ஒருவர்க்கு வினைகளைப் போக்குவது. **புனிதன்**-சிவபெருமான். **அனகன்**-அழகன்; சிவபெருமான். **நேயம்**-அன்பு. **மேருவிற்கோல நாயகன்**-மேரு மலையை வில்லாகக் கொண்ட கோலத்துடன் வீற்றிருக்கும் சிவபெருமான். 37

364. மாலும் நான்முகக் கடவுளும் வழிபடும் எழில்விற்
கோல நாயகர்க் கண்டிடின் பன்னிரு கோடி
மூல மாம்இலிங் கங்களை முறைமையின் சென்று
சீல மோடுகண் டுறுபலன் அக்கணம் செறியும்.

திருவிற்கோல நாதரைத் தரிசிப்பதால் அடையும் பயன்

தெளிவுரை : திருமாலும் நான்முகனும் வழிபடுகின்ற எழிலுடைய திருவிற்கோல நாயகரைத் தரிசித்தால், பன்னிரண்டு கோடி மூலமாம் இலிங்கங்களை முறைமையில் போய், ஒழுக்கமுடன் கண்டு அடையும் பயன் அக்கணமே வந்து சேரும்.

விளக்கம் : எழில்-அழகு. **கண்டிடின்**-தரிசித்தால். **சீலமொடு**-ஒழுக்கத்துடன்; தூய்மையுடன். **அக்கணம்**-தரிசித்த அப்போதே. 38

365. அருவிப் பூதரம் எனவரும் மதகரி அட்ட
திருவிற் கோலநா யகன்பெயர் பலஉள செப்பின்
கருவிற் போக்குறும் இருவினை களையும்அக் கணத்தின்
விரைவிற் போக்குவ அவற்றினில் சிலபெயர் விளம்பின்.

கருவில் உள்ள வினைகளும் போகும்

தெளிவுரை : அருவியையுடைய மலையைப் போல வரும் மதமுடைய யானையை வென்ற திருவிற்கோல நாயகனின் திருப்பெயர்கள் பல உள்ளன. அவற்றில் சில பெயர்கள் கூறின் கருவில் போய் அமைந்தள்ள இருவினைகளும் அந்தக் கணத்திலேயே விரைவில் அவை போக்கிவிடும்.

விளக்கம் : அருவிப்பூதரம்-அருவியையுடைய மலை. **பூதரம்**-மலை; பூமியைத் தாங்குவது எனக் காரணப்பெயர். **மதகரி அட்ட**-மதம் கொண்ட யானையைக் கொன்ற. சிவபெருமான் தம் மீது ஏவப்பட்ட யானையைக் கொன்ற செய்கை முற்காலத்து நிகழ்ந்தது. இங்கு அது எடுத்துக் கூறப்பட்டது. **கருவில் போக்குறு**-கருவிலே பொருந்திய. **போக்குவர்**-அகற்றுவார். **விளம்பின்**-கூறினால். 39

வேறு

366. இரக்ககர், தியாகர், இசைச்சந்த தாரர்,
எழில்மிக வளர்சடைக் கூத்தர்,
அருள்சக நாதர், அஞ்சனா பகண்டர்,
அருங்கிலாநிக்கினரோடும்
திருக்கறு புவன நாயகர், திரிபு
ரக்கினர், அப்பிர திட்டர்,
தெரித்திடு கூவ நாதர் அன்பர்க்குச்
செந்நெல் வைத் தவர் எனல் ஆமால்.

இறைவரின் திருநாமங்கள்

தெளிவுரை : திருவிற்கோல நாதர்க்கு இரக்ககர், தியாகர், சந்ததாரர், அழகுமிக வளர்சடைக் கூத்தர், அருட்ஜகநாதர், அஞ்சனாப கண்டர், அரிய கிலானிக்கினர் என்பதுடன் துன்பத்தைப் போக்கும் புவன நாயகர், திரிபுரக்கர், அப்பிரதிட்டர், கூவநாதர், அன்பர்க்கு நெல் வைத்தவர் என்று பலபெயர்கள் கூறலாம்.

விளக்கம் : இரக்ககர்-இரட்சகர். **சந்ததாரர்**-அடியார்களை இல்லற அபாயத்தினின்று காத்தவர் என்பது பொருள். **வளர்சடைக்**

கூத்தர்-நீண்ட சடையை உடைய நடனம் ஆடுபவர். **ஜகநாதர்**-சர்வகருத்தர். **அஞ்சனாபகண்டர்**-நஞ்சினால் கரியமை போன்ற கழுத்தை உடையவர். **கிலானி**-கிலேசம்; கலிகாலத்தில் உண்டாகும். கிலேசத்தை அழித்துப் புவனங்களைக் காத்தவர். **திரிபுரக்கர்**-முப்புரங்களை அழித்தவர். **அப்பிரதிட்டர்**-பிரதிஷ்டை இல்லாதவர்; சுயம்பு என்பது கருத்து; ஒருவரால் செய்யப்படாதவர் என்க. **கூவ நாதர்**-கூபரநாதர். **செந்நெல் வைத்தவர்**-செந்நெல்லை அடியார்க்கு வைத்தவர். இது அடுத்து வரும் செந்நெல் வைத்த சருக்கத்தால் உணரலாம். 40

367. இப்பெரும் பெயர்கள் பன்னிரண் டினையும்
இயம்புவோர் இவற்றினுள் ஒருபேர்
செப்பரும் புதல்வற்கு இடுபவர் புவியிற்
சிதைவின்மெய்ப் போகங்கள் துய்த்தே
ஒப்பரும் குளிர்வெண் திங்கள்வண் கடுக்கை
உள்நுழைந்து இனியதாது அளைந்து
மெய்ப்பசும் பொன்னில் திகழ்சடா மவுலி
விமனலது அடியின்மே வுவரால்.

இத்திருப்பெயர்களைக் கூறுபவர் அடையும் பயன்

தெளிவுரை : இந்தப் பெயர்கள் பன்னிரண்டையும் கூறுபவர். இவற்றுள் ஒரு பெயரைத் தம் மகற்கு இடுபவர் இவ்வுலகத்தில் அழிவற்ற உண்மையான இன்பங்களை அனுபவித்து, ஒப்பில்லாத குளிர்ச்சியையுடைய வெண்மையான திங்களையும் வளமான கொன்றை மலருள் நுழைந்து இனிய அதன் தாதினைப் பொருந்தப் பெற்று மெய்யான பசும் பொன் போல் திகழும் சடையாகிய முடியுடைய குற்றம் அற்ற சிவபெருமானின் அடியில் சேர்வர்.

விளக்கம் : இப்பன்னிரண்டு பெயர்களையும் கூறுபவர் இப்பெயர்களுள் ஒன்றைத் தம் மைந்தர்க்கு இடுபவர் சிவபெருமானின் திருவடியை அடைவர். **செப்பரும்**-கூறுதற்கு அரிய. **சிதைவில் மெய்ப் போகம்**-அழிவு அற்ற உண்மையான இன்பம். **வண்கடுக்கை**-வளப்பமான கொன்றை. **தாது**-மகரந்தம். **அளைந்து**-பொருந்தப்பெற்று. **பொன்னின் திகழ் சடா மவுலி**-பொன்போல் விளங்கும் சடையான முடி. **விமலன்**-குற்றமற்ற சிவபெருமான். **மேவுவர்**-அடைவர். 41

வேறு

368. என்று கூவத்து இறைவன் பெரும்புகழ்
துன்றும் ஆசையில் சூத முனிவரன்
அன்று மேவும் நயிமிச மாவனத்து
ஒன்றும் மாதவர்க்கு ஓதினன் என்பவே.

சூதமுனிவர் கூறி முடித்தல்

தெளிவுரை : என்று கூவத்தின் வீற்றிருக்கும் இறைவனின் பெரும்புகழ் பொருந்தும் ஆசையுடன் சூதமா முனிவர் அன்று நைமிசவனத்தில் இருந்த முனிவர்க்குக் கூறினான்.

விளக்கம் : கூவத்து இறைவன்-கூவப்பதியின் இறைவனான திருவிற்கோல நாதர். **துன்று மாசையில்**-பொருந்திய ஆசையுடன். **நயிமிசமாவனத்து**-நைமிச வனத்தில். 42

இச்சருக்கப் பாடல் எண். 42

அடிமுடி தேடிய சருக்கம் முற்றிற்று. ஆகச்செய்யுள் 368.

7. செந்நெல் வைத்த சருக்கம்

சிவபெருமான் அன்பர் ஒருவர்க்குச் செந்நெல் வைத்த நிகழ்ச்சியைக் கூறுவதால் இச்சருக்கம் 'செந்நெல் வைத்த சருக்கம்' எனப் பெயர் பெறுகிறது.

இப்பகுதியில் சூத முனிவர், சிவபெருமான் தருமசீலர் என்ற அந்தணர்க்கு நாள்தோறும் நெல்வைத்த வரலாற்றைக் கூறுகிறார்.

கூவநகரத்தில் ஓர் அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரது பெயர் தருமசீலர். அவர் சிவனிடமும் சிவனடியாரிடமும் பக்தி கொண்டு ஒழுகிவந்தார். அறநெறியில் ஈட்டிய செல்வத்தை உடையவர் அவர். அச்செல்வத்தை அடியவர்க்கு அறுசுவை உணவை அளித்து எஞ்சியதை உண்ணுபவராய் விளங்கினார்.

சிறந்த இத்தொண்டைச் செய்து வந்து அவர்க்கு வறுமை வந்தடைந்தது. அப்போதும் அவர் தாம் செய்யும் தொண்டில் குன்றாது தன்னிடம் இருந்த பொருள்களை விற்றும் மனைவியின் தாலியை விற்றும் அடியார்க்கு உணவை இடும் தொண்டை

232 சிவப்பிரகாசர்

கூத்தர்-நீண்ட சடையை உடைய நடனம் ஆடுபவர். **ஜகநாதர்**-சர்வகருத்தர். **அஞ்சனாபகண்டர்**-நஞ்சினால் கரியமை போன்ற கழுத்தை உடையவர். **கிலானி**-கிலேசம்; கலிகாலத்தில் உண்டாகும். கிலேசத்தை அழித்துப் புவனங்களைக் காத்தவர். **திரிபுரக்கர்**-முப்புரங்களை அழித்தவர். **அப்பிரதிட்டர்**-பிரதிஷ்டை இல்லாதவர்; சுயம்பு என்பது கருத்து; ஒருவரால் செய்யப்படாதவர் என்க. **கூவ நாதர்**-கூபரநாதர். **செந்நெல் வைத்தவர்**-செந்நெல்லை அடியார்க்கு வைத்தவர். இது அடுத்து வரும் செந்நெல் வைத்த சருக்கத்தால் உணரலாம். 40

367. இப்பெரும் பெயர்கள் பன்னிரண் டினையும்
இயம்புவோர் இவற்றினுள் ஒருபேர்
செப்பரும் புதல்வற்கு இடுபவர் புவியிற்
சிதைவின்மெய்ப் போகங்கள் துய்த்தே
ஒப்பரும் குளிர்வெண் திங்கள்வண் கடுக்கை
உள்நுழைந்து இனியதாது அளைந்து
மெய்ப்பசும் பொன்னில் திகழ்சடா மவுலி
விமனலது அடியின்மே வுவரால்.

இத்திருப்பெயர்களைக் கூறுபவர் அடையும் பயன்

தெளிவுரை : இந்தப் பெயர்கள் பன்னிரண்டையும் கூறுபவர். இவற்றுள் ஒரு பெயரைத் தம் மகற்கு இடுபவர் இவ்வுலகத்தில் அழிவற்ற உண்மையான இன்பங்களை அனுபவித்து, ஒப்பில்லாத குளிர்ச்சியையுடைய வெண்மையான திங்களையும் வளமான கொன்றை மலருள் நுழைந்து இனிய அதன் தாதினைப் பொருந்தப் பெற்று மெய்யான பசும் பொன் போல் திகழும் சடையாகிய முடியுடைய குற்றம் அற்ற சிவபெருமானின் அடியில் சேர்வர்.

விளக்கம் : இப்பன்னிரண்டு பெயர்களையும் கூறுபவர் இப்பெயர்களுள் ஒன்றைத் தம் மைந்தர்க்கு இடுபவர் சிவபெருமானின் திருவடியை அடைவர். **செப்பரும்**-கூறுதற்கு அரிய. **சிதைவில் மெய்ப் போகம்**-அழிவு அற்ற உண்மையான இன்பம். **வண்கடுக்கை**-வளப்பமான கொன்றை. **தாது**-மகரந்தம். **அளைந்து**-பொருந்தப்பெற்று. **பொன்னின் திகழ் சடா மவுலி**-பொன்போல் விளங்கும் சடையான முடி. **விமலன்**-குற்றமற்ற சிவபெருமான். **மேவுவர்**-அடைவர். 41

திருக்கூவப் புராணம் 233

வேறு

368. என்று கூவத்து இறைவன் பெரும்புகழ்
துன்றும் ஆசையில் சூத முனிவரன்
அன்று மேவும் நயிமிச மாவனத்து
ஒன்றும் மாதவர்க்கு ஓதினன் என்பவே.

சூதமுனிவர் கூறி முடித்தல்

தெளிவுரை : என்று கூவத்தின் வீற்றிருக்கும் இறைவனின் பெரும்புகழ் பொருந்தும் ஆசையுடன் சூதமா முனிவர் அன்று நைமிசவனத்தில் இருந்த முனிவர்க்குக் கூறினான்.

விளக்கம் : கூவத்து இறைவன்-கூவப்பதியின் இறைவனான திருவிற்கோல நாதர். **துன்று மாசையில்**-பொருந்திய ஆசையுடன். **நயிமிசமாவனத்து**-நைமிச வனத்தில். 42

இச்சருக்கப் பாடல் எண். 42

அடிமுடி தேடிய சருக்கம் முற்றிற்று. ஆகச்செய்யுள் 368.

7. செந்நெல் வைத்த சருக்கம்

சிவபெருமான் அன்பர் ஒருவர்க்குச் செந்நெல் வைத்த நிகழ்ச்சியைக் கூறுவதால் இச்சருக்கம் 'செந்நெல் வைத்த சருக்கம்' எனப் பெயர் பெறுகிறது.

இப்பகுதியில் சூத முனிவர், சிவபெருமான் தருமசீலர் என்ற அந்தணர்க்கு நாள்தோறும் நெல்வைத்த வரலாற்றைக் கூறுகிறார்.

கூவநகரத்தில் ஓர் அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரது பெயர் தருமசீலர். அவர் சிவனிடமும் சிவனடியாரிடமும் பக்தி கொண்டு ஒழுகிவந்தார். அறநெறியில் ஈட்டிய செல்வத்தை உடையவர் அவர். அச்செல்வத்தை அடியவர்க்கு அறுசுவை உணவை அளித்து எஞ்சியதை உண்ணுபவராய் விளங்கினார்.

சிறந்த இத்தொண்டைச் செய்து வந்து அவர்க்கு வறுமை வந்தடைந்தது. அப்போதும் அவர் தாம் செய்யும் தொண்டில் குன்றாது தன்னிடம் இருந்த பொருள்களை விற்றும் மனைவியின் தாலியை விற்றும் அடியார்க்கு உணவை இடும் தொண்டை

இடைவிடாது செய்து வந்தார். அவரிடம் இருந்த பொருள்கள் அனைத்தும் நீங்கின. ஆதலால் நெல்லை யாசித்து வந்து அடியவர்க்கு உணவை அளித்து எஞ்சியதை உண்ணலானார்.

நெல்லை யாசிக்கச் சென்ற அவர்க்கு இடுபவர் இல்லாமற் போயினர். எட்டு நாட்கள் இங்ஙனம் நிகழ்ந்தது. அவர் எட்டு நாட்கள் பசித்திருந்தார். அவருடைய மனைவியார் தம் கணவரின் இந்நிலையைக் கண்டு வருந்தினார். தளர்ச்சி அடைந்தார். தருமசீலர் உடல் தளர்ந்தார். ஆயினும் உள்ளம் தளரவில்லை. நாளும் நதியில் நீராடிச் சிவபெருமானை வணங்கி வீடு வருவது வழக்கமாய்க் கொண்டிருந்தார். ஒன்பதாம் நாள். அன்று வழிபாட்டை முடித்து வரும்போது மயக்கம் ஏற்பட்டுக் கீழே விழுந்து விட்டார். அவரைப் பார்த்த அவர்தம் மனைவியார் வருத்தம் அடைந்தார்.

நிலைமை இவ்வாறாக, அடியார் ஒருவர் பசித்த நிலையில் தருமசீலரின் இல்லத்துக்கு வந்தார். தருமசீலர் அவரை அழைத்துக் கொண்டு போய் இருக்கை ஒன்றில் அமரச் செய்தார். 'இப்போது யான் என்ன செய்வேன்! எனக் கலங்கினார். பின்பு இனியும் நகரத்துக்குள் போய் நெல்லை இரந்து வருவேன்' என்று எண்ணினார். இருநாழி நெல் அவர்க்குக் கிடைத்தது. அதைத் தம் மனைவியரிடம் தந்து உணவு சமைக்கும்படி சொன்னார். அவரும் அதைக் குற்றி நன்கு சமைத்தார். அதை அடியார்க்கு இட அவர் உண்டு மகிழ்ந்து விடைபெற்றுப் போனார். அவர் உண்டு மிஞ்சியதை அந்தணரும் அவர்தம் மனைவியாரும் உண்டனர்.

தருமசீலரின் தொண்டின் மேன்மையை விளக்க எண்ணிய திருவிற்கோல நாதர் முதியவர் கோலம் கொண்டார். தருமசீலரிடம் வந்தார். அவர் வந்த நேரம் அந்தணர் உணவு உண்ண இருந்த நேரம். முதியவரான சிவபெருமான் 'அடியவனான நான் பசியுடன் உள்ளேன்.! ஒருபிடி உணவை அளித்தால் உமக்கு மிக்க புண்ணியம் உண்டாகும்!' என்று உரைத்தார். அந்தணர் மகிழ்ந்தார். 'நாம் உண்பதற்கு இவர் முன்வந்தார்' என்று மனம் களித்தார். தம் மனைவியை நோக்கி அடியார்க்கு உணவைப் பரிமாறுமாறு உரைத்தார். உணவை முதியவரான சிவபெருமான் மறைந்து 'உம்

வறுமை நிலையிலும் எட்டு நாட்கள் பசியுடன் இருந்தும் அடியார்க்கு உணவளிப்பதில் தவறவில்லை. உங்கள் அன்பு பெரிது. உமக்கு ஏற்பட்ட இந்த வறுமை நீங்கும் வரை நம் ஆலயத்தில் நாள்தோறும் ஓர் அழகிய குடத்தில் செந்நெல் வைப்போம். பெற்றுக்கொள்வீர்' என்று உரைத்தருளினார். அதைக் கேட்ட தருமசீலர் கைகள் தலைமேற்குவித்துக் கண்ணீர் வர 'எளியேனை ஆளவந்தவன் திருவிற்கோல நாதனோ!' என்று கருதித் துதித்தார்.

ஆண்டவர் அருளியபடியே அவர் ஆலயத்துள் வைக்கப்பட்ட நெல்லைக் கொண்டு வந்து அடியார்க்கு உணவை அளித்து எஞ்சியதை உண்டு வாழ்ந்து வரலானார். இறுதியில் சிவகதி பெற்றார். இங்ஙனம் தருமசீலர்க்குத் திருவிற்கோல நாதர் செந்நெல் வைத்த காரணத்தால் அவர்க்குச் செந்நெல்வைத்தவர் என்ற திருப்பெயர் வழங்கலாயிற்று. எனவே இத்திருப்பெயரை அன்புடன் கூறுபவர் அழியாத செல்வத்தையும் நிறைந்த கல்வியையும் பெற்றுச் சிவகதியையும் அடைவர். இறைவன் கயிலாயத்தில் பிரதோட நடனமும், தில்லைப் பொன்னம்பலத்தில் ஆனந்த நடனமும், திருவாலங்காட்டில் சண்ட தாண்டவமும், கூவத்தில் தருக்க மாதா வாதிட்ட அன்னை காண இரட்சா நடனமும் ஆடியருளினார். இப்பெருமானைக் கண்டு வழிபடுபவர் இப்பிறவியிலே கல்வியும் செல்வமும் புகழும் பெற்று மறுமையில் பரகதியும் அடைவர். இப்பதியில் செய்யும் எல்லா அறங்களும் பல கோடி மடங்கு பலனை அளிக்கும்!'

இவ்வாறு சூதமுனிவர் நைமிசவன முனிவர்க்கு உரைத்தார்.

369. மறுஅறு தவத்தின் முனிவரர் மிக்க
மகிழ்ச்சியில் மறித்தும்அச் சூதன்
நறுமலர்க் கமலத் திருவடி பரவி
"நங்களுக்கு ஐயவிற் கோலச்
சிறுநுதல் குமரி யிடத்தின்வைத் தவற்குச்
'**செந்நெல்வைத் தவன்**'எனும் பெயர்எம்
முறைமையின் அடுத்தது? உரைத்தி" என்று இயம்ப,
முனிவன் நன்று எனஅது மொழிவான்.

செந்நெல் வைத்தவன் என்ற பெயர்க்காரணத்தை வினவுதல்

தெளிவுரை : குற்றம் அற்ற தவத்தினையுடைய முனிவர்கள் மிகுந்த மகிழ்ச்சி கொண்டு மீண்டும் அந்தச் சூதமுனிவரின் தாமரை போன்ற திருவடிகளைத் துதித்து, 'ஐயனே! எங்களுக்குச் சிறிய நெற்றியையுடைய உமையம்மையை இடப்பாகத்தில் வைத்த திருவிற்கோல நாதர்க்கு செந்நெல் வைத்தவன்' என்ற பெயர் உண்டான காரணத்தைக் கூறுவீர்!' என்று வேண்டினர். அப்போது அவர்களுக்குச் சூதமுனிவர் கூறலானார்.

விளக்கம் : மறுவறு-குற்றம் அற்ற. **முனிவரர்**-நைமிசவனத்தில் இருந்த முனிவர்கள். **மறித்தும்**-திரும்பவும். **நறுமலர்க் கமலத்திருவடி**-நறுமணம் வாய்ந்த தாமரைமலர் போன்ற திருவடி. **ஐய**-விளி. **விற்கோலச் சிறுநுதல் குமரி**-வில்லினது தோற்றத்தை யுடைய சிறிய நெற்றி பொருந்திய குமரியான உமையம்மை. **இடத்தின் வைத்தவற்கு**-இடப்பாகத்தில் வைத்த இறைவனுக்கு. **எம் முறையின்**-எப்படி. **அடுத்தது**-பொருந்தியது; ஏற்பட்டது. 1

370. முன்னர்அக் கூவ புரத்திடைக் காமம்
முதலிய முக்குறும்பு எறிந்தோர்
புன்னெறி படும்ஐம் புலன்களும் தடுத்தோர்
பொய்யினை மெய்யினில் கண்டோர்
சென்னியில் பிறைகொண் டவன்தனக்கு அன்பு
செறிந்தமை அடியர்கள் திகழ்த்தும்
நன்னிலை தருமசீலனார் எனஓர்
நாமஅந் தணர்உளர் ஆனார்.

தருமசீலர் இயல்பு

தெளிவுரை : முன்னர் கூவநகரத்தில் காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்று குற்றங்களைப் போக்கியவர் சிவநெறியில் செல்லும் ஐம்புலன்களைத் தடுத்தவர், நிலையாமையை உடலில் கண்டவர், தலையில் பிறைத்திங்களை அணிந்தவர் தனக்கு அன்பு செறிந்துள்ளமையை அடியார்களிடத்துக் காட்டும் நல்ல நிலையையுடையவரான தருமசீலர் என்று ஓர் பெயர் கொண்ட அந்தனர் உள்ளவரானார்.

விளக்கம் : கூவத்தில் அந்தணர் ஒருவர் வாழ்ந்தார். அவர் சிவபெருமானிடத்து அன்புடையவர்; காமம், வெகுளி, மயக்கத்தை விட்டவர்; ஐம்புலன் அடக்கம் உடையவர். அவர் பெயர் தருமசீலர்.

காமம் முதலிய முக்குறும்பு-காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்கள். **எறிந்தோர்**-போக்கியவர். **புன்னெறி**-தீயநெறி. **ஐம்புலன்களும் தடுத்தோர்**-அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்களும் தீய நெறிப்படாமல் தடுத்தவர். **பொய்யினை மெய்யினில் கண்டோர்**-நிலையாமையை உடலில் கண்டவர். **பொய்**-நிலையாமை. **மெய்**-உடம்பு. **சென்னி**-தலை. **அடியர் திகழ்த்தல்**-அடியவரிடம் புலப்படுத்தல். **நாம அந்தணர்**-பெயரையுடைய அந்தணர். 2

371. உருவநல் அறமாக கறைமிடற்று இறைஅன்பு
உயிர்என வந்ததே அனையார்
பொருவுஇல் நல்நெறியின் வரும்பெருஞ் செல்வர்
புரம்எரி படுத்தவிற் கோலத்து
ஒருவனது அடிமுப் பொழுதும்வந் தனைசெய்து
உறுசுவை அடிசின் மாதவர்க்குப்
பரிவொடும் அளித்து மிச்சில்கொண்டு "எமக்குப்
பயன்இது" எனஒழு குறுநாள்

தெளிவுரை : அவர் வடிவம் நல்ல அறமாக உடையவர், நஞ்சுக்கறையைக் கழுத்தில் உடைய சிவபெருமானிடம் கொண்ட அன்பே உயிராக அமைந்தாற்போன்றவர். ஒப்பில்லாத நல்ல நெறியில் ஈட்டப்பட்ட பெருஞ்செல்வத்தை உடையவர். முப்புரங்களையும் எரித்த திருவிற்கோல நாதரின் திருவடியை முப்போதும் வழிபாடு செய்து வந்தவர்; மிக்க சுவையுடைய உணவு முனிவர்க்கு அன்புடன் அளித்து எஞ்சியதைத் தாம் உண்டு. எமக்குப் பயன் இதுவாகும்' என்று வாழ்ந்தார். அங்ஙனம் வாழ்ந்த ஒரு நாளில்.

விளக்கம் : உருவம்-வடிவம். **கறைமிடற்று இறை**-நஞ்சின் களங்கமான கருமையுடைய கழுத்துப் பொருந்திய சிவபெருமான். தருமசீலர்க்கு அறமே உடல். இறைவனிடம் கொண்ட அன்பே

உயிர். அறநெறியில் தீதின்றி வந்த பொருள் அந்தணரின் பொருள். ஆதலால் பொருவில் நன்னெறி வரும் பெருஞ்செல்வர் என்றார். பொருவு+இல்-ஒப்பில்லாத. **புரம் எரிபடுத்த**-மூன்றுபுரங்களையும் தீயில் எரித்த. **விற்கோலத்தொருவனதுஅடி**-போர்க்கோலம் கொண்ட ஒப்பற்ற இறைவனது திருவடி. **உறுசுவை**-மிக்க சுவை. **அடிசில்**-உணவு.

தருமசீலர் மாதவர்க்கு நல்ல உணவை அளித்து எஞ்சியதைத் தாம் உண்டு வாழ்ந்து வந்தார். **மிச்சில்**-எஞ்சியது. **ஒழுகுறுநாள்**-வாழ்ந்து வந்த நாளில். 3

வேறு

372. கோதுஇல்நம் தருமசீலர் கொடை கண்டு நாண்உட் கொண்டோ
மேதகும் அவர்தம் மேன்மை விளக்கவோ அறிந்தி லேமால்
ஓதம்உண் முகில்ஒ டுங்கிற்று ஒருபுடை அதனால், யாரும்
பேதுறு பசிநோய் கூரப் பெருமிதம் இழந்து நைந்தார்.

மழை பெய்யாமை

தெளிவுரை: குற்றம் அற்ற அந்தத் தருமசீலரின் கொடைத் தன்மையைக் கண்டு நாணம் கொண்டோ மேன்மையுடைய அவர்தம் மேன்மையைப் புலப்படுத்தவோ, யாம் அறியோம். இடிஓசையை உடைய மேகம் மழை பெய்யாது ஒடுங்கியது. அதனால் யாரும் மயக்கம் அடைதற்குக் காரணமான பசிநோய் மிக்கது. அதனால் அந்தணர் தருமசீலர் தமது பெருமையை இழந்து வருந்தினார்.

விளக்கம் : கொடைகண்டு-கொடைத் தன்மையைக் கண்டு அறச்செயலைக் கண்டு. **நாணுட்கொண்டு**-நாணத்தைக் கொண்டு, நாணம் கொண்டது மேகம். **மேதகும் அவர்**-மேன்மையுடைய அவர். **அறிந்திலேமால்**-அறியோம். **ஓதம் உண் முகில்**-கடல் நீரினை உண்ட மேகம் (நீராவி). **ஒருபுடை ஒருடுங்கிற்று**-மேகம் பெய்யாது ஒரு பக்கத்தில் போய் ஒதுங்கியது. **பேதுறு**-மயங்கும்படியான. **பசி நோய் கூர**-பசிப்பிணி மிக. **பெருமிதம்**-பெருமை. 4

373. வறியஅக் காலம் போத, மறுஅறும் தருமசீலர்
செறியும்மெய்த் தவர்கட்கு எல்லாம் செழுங்கறி அமுதினோடு
நறியமென் புழுக்கல் அன்பால் நற்சுவை அளித்து அளித்து அந்
நெறியினில் பெறும்பேறு ஒன்றே நிற்கநின்றிலது செல்வம்.

வறுமையிற் செம்மை

தெளிவுரை : வறிய அக்காலமானது வந்து அடைய, குற்றம் அற்ற தருமசீலர் என்ற அந்தணர், தம்மிடம் வந்து சேரும் அடியவர்கட்கெல்லாம் செழுங்கறி அமுதோடு நல்ல மென்மையான சோறு ஆகியவற்றை அன்புடன் நல்ல சுவை வாய்ந்த உணவைத் தந்து அந்நெறியில் பெறும்பேறு ஒன்றே அவரிடம் நின்றது. நிற்கவும், அவரது செல்வமானது அவரை விட்டு அகன்று போனது.

விளக்கம் : போத-வர. **மறுஅறுந்தருமசீலர்**-குற்றம் அற்ற தருமசீலர். **செழுங்கறி**-செழுமையான கறிவகைகள். **நறிய மென் புழுக்கல்**-நல்ல மென்மை வாய்ந்த சோறு. **பேறு**-பயன். **நின்றிலது செல்வம்**-செல்வம் நிற்கவில்லை; அகன்று போனது. 5

374. பழகுதம் செல்வம் எல்லாம் பயன்தரு கதலி யாக
அழகுதம் பெருகு கற்பின் அளவலாது அளவுஇ லாமல்
ஒழுகுநன் மனைவி யார்தம் உரியபொன் தாலி யாதி
முழுதும்விற்று அடியார்க்கு அன்பால் முதிர்சுவை அமுது அளித்தார்.

தாலியை விற்று அடியார்க்கு உணவு அளித்தல்

தெளிவுரை : அவரிடம் பொருந்திய செல்வம் எல்லாம் பயன் தரும் வாழையாக விளங்கியது. தன் கற்பினையே அல்லாது அதனை விட மேம்பட்ட அழகுகுடைய நல்ல மனைவியார்க்கு உரிய பொன் தாலி முதலிய யாவற்றையும் விற்று அடியார்க்கு அன்பினால் மிக்க சுவையுடைய அமுதை அந்தத் தருமசீலர் அளித்து வந்தார்.

விளக்கம் : பழகுதம் செல்வம்-பொருந்திய செல்வம். **பயன்தரு கதலியாக**-பயனைத் தரும் வாழையாய். **தம்பெருகு கற்பின் அளவலாது அழகு ஒழுகும்**-கற்பின் அளவே அல்லாது அதைவிட

மேம்பட்ட அழகு. **அளவலாது**-அளவு+அலாது. **பொற்றாலியாதி**-பொன் தாலி முதலிய அணிகள். **முழுதும்விற்று**-முழுவதையும் விற்று, **முதிர்சுவை அமுது**-மிக்க சுவையுடைய உணவு. 6

375. மனையில்உள் ளஅ னைத்தும் மாண்டிடச் செயல் ஒன்று இன்றி
இனிஅருந் தவர்கட்கு அந்தோ என்செய்கேன் எனத்துளங்கி
அனைவர்க்கு இரப்புற் றேனும் அமுதம்இட்டு ஒழிந்தது உண்பேன்
எனமனம் துணிந்த வாறு நெற்பலி இரந்து செய்தார்

நெற்பிச்சையை மேற்கொள்ளல்

தெளிவுரை : அந்தணர் தம் வீட்டில் உள்ள செல்வம் அணி முதலிய அனைத்தும் ஒழிய, செய்யக் கூடிய செயல் ஒன்றும் இல்லாது, 'அந்தோ, இனி அரியதவர்க்கு உணவு உண்பிக்க என்ன செய்வேன்' என்று நடுக்கம் கொண்டார். அவர்க்கு இரந்தேனும் உணவை இட்டு எஞ்சியதை உண்ண உள்ளத்தில் துணிவு கொண்டார். துணிவு கொண்டபடியே நெற்பிச்சையை மேற்கொண்டு அடியார்க்கு உணவளித்து எஞ்சியதைத் தாம் உண்டு வந்தார்.

விளக்கம் : மனை-வீடு. **மாண்டிட**-வற்றிட. **என் செய்வேன்**-என்ன செய்வேன். **துளங்கி**-நடுங்கி. **அனைவர்க்கு**-அத்தகையவர்க்கு. **இரப்புற்றேனும்**-யாசித்தேனும். **அமுதம் இட்டு**-உணவை அளித்து. **நெற்பலி**-நெற்பிச்சை. 7

376. இத்திறம் ஒழுகும் நாளில் இன்மைமேல் மேல்வந்து எய்த
எய்த்திடு பவர்கள் இன்றி எண்பகல் பலிக்கு உழன்றே
உத்தமர் வறிது மீண்டங்கு உடற்றும்வெம் பசிநோய் கூர
மைத்தடங் கண்மா தோடும் வருந்திமெய் தளர்ந்தி ருந்தார்.

உடல் தளர்ந்தார் அந்தணர்

தெளிவுரை : இப்படி அந்தத் தருமசீலர் ஒழுகிவந்த நாளில் வறுமையானது மேலும் மேலும் வந்து சேர்ந்தது. அவர் நெல் இடுபவர் இல்லாமையால் சோர்ந்தார். எட்டு நாட்கள் பலிக்குத் திரிந்து வருந்தினார். அப்போதும் ஏதும் கிட்டாமையால் வீணே மீண்டு, வருத்தும் கொடிய பசித்துன்பம் மிக மை தீற்றப் பெற்ற கண்ணையுடைய மனைவியோடும் வருந்தி உடல் தளர்ந்தார்.

விளக்கம் : இன்மை-வறுமை. **எய்த்து**-சோர்ந்து. **இடுபவர்கள் இன்றி**-உணவு அளிப்பவர் இல்லாது. **எண்பகல்**-எட்டு நாள்கள். **பலிக்கு**-பிச்சைக்கு. **உடற்றும்**-வருத்தும். **வெம்பசி**-கொடியபசி. **கூர**-மிக. **மைத் தடங்கண்மாதொடு**-மை தீற்றப்பெற்ற பெரிய கண்ண்ணயுடைய மனைவியோடு. 8

377. கொழுநர்தம் மெய்வ ருத்தம் காண்தொறும் குறைந்து நெஞ்சம்
விழிபொழி வெள்ளம்ஓட, வெய்துயிர்த்து, 'என்செய்கோம்' என்று
எழுதுயர் மனத்தில் ஓங்க, இல்லினுக்கு உரியார் செந்தீ
மெழுகுஎன உருகி நைந்தார் 'வினைகொலோ இது' என்று எண்ணி.

மனைவியார் வருந்துதல்

தெளிவுரை : அந்தணரின் மனைவியார் தம் கணவரின் உடல் வருத்தத்தைப் பார்க்குந்தோறும் மனம் வருந்திக் கணகள் பொழியும் நீர் வெள்ளம் ஓட, கொடிதாய்ப் பெருமூச்சு விட்டு, 'என்ன செய்வோம்!' என்ற எண்ணத்தால் உண்டாகும் துன்பம் மனத்தில் எழுந்திட, சிவந்த தீயிடைப்பட்ட மெழுகைப் போல உருகி 'இது முன்செய்த வினையால் நேர்ந்ததோ' என எண்ணி வருந்தினார்.

விளக்கம் : கொழுநர்-கணவர். **மெய்வருத்தம்**-உடல் வருத்தம். பலவிடத்தும் திரிந்து பிச்சை கேட்டதால் ஏற்பட்ட உடல் வருத்தம். **காண்டொறும்**-பார்க்குந்தோறும். **வெய்துயிர்த்து**-வெப்பமாய் பெருமூச்சு விட்டு. **என் செய்வோம்**-என்ன செய்வோம். **இல்லினுக்குரியார்**-வீட்டுக்குரிய மனைவியார். **செந்தீமெழுகென**-சிவந்த தீயில் இடப்பட்ட மெழுகைப் போல. **நைந்தார்**-வருந்தினார். **வினைகொலோஇது**-இது முன்செய்த தீவினையால் விளைந்ததோ. 9

378. அன்பர்தாம் உடல்த ளர்ந்து அகம்தளர்வு இன்றிச் சென்று
முன்பென நதிநீர் மூழ்கி மொய்ம்மலர் புனல்கொண்டு எய்திப்
பொன்புரை திருவிற் கோலப் புனிதனை வழிபட்டு ஏத்திப்
பின்புதன் மனையின் மெல்லப் பெயர்ந்துவந் திருந்தார் எய்த்தே.

நீராடல் முதலியவற்றைச் செய்தல்

தெளிவுரை : தருமசீலரான அந்தணர் உடல் தளர்ச்சியடைந்து, உள்ளம் தளர்ச்சியடையாது போய் முன்பு நதியில் முழுகி நெருங்கிய மலர் நீர் ஆகியவற்றைக் கைக்கொண்டு பொன்னை ஒத்த திருவிற்கோல நாதனை வழிபட்டுத் துதித்துப் பின்பு தன் வீட்டிற்கு மெல்லத் திரும்பி வந்து தளர்ச்சியுடன் இருந்தார்.

விளக்கம் : அன்பர்-தருமசீலர். **மொய்ம்மலர்**-நெருங்கிய மலர். **புனல்**-மஞ்சனநீர். **பொன்புரை**-பொன்னை ஒத்த. **திருவிற்கோலப் புனிதனை**-திருவிற்கோல நாதரை. **பெயர்ந்து**-திரும்பி. **எய்த்து**-தளர்ந்து. பசியுடன் இருந்தார் என்க. 10

379. இம்முறை அந்த ணாளர் எண்தினம் உணவுஒன்று இன்றித்
தம்உடல் தளர்ந்து ஒன் பான்நாள் தையல்பா கனைப்பூ சித்தே
அம்மனை வருகு வார்மெய் அயர்ந்துவந்து அருகு வீழ்ந்தார்
மைம்மலி குழலின் னார்தம் மதிமுகத்து அறைந்து அழுங்க.

அந்தணர் உடல் தளர்ந்து விழுதல்

தெளிவுரை : இவ்வாறு தருமசீலர் எட்டுநாட்கள் உணவு என்பது ஒன்று இல்லாது தம் உடல் தளர்ந்து இருந்தார். ஒன்பதாம் நாளில் மங்கை ஒரு பாகனான சிவபெருமானை வழிபட்டுத் தம் இல்லத்தின் அருகில் வரும்போது கருமைமிக்க கூந்தலை உடைய மனைவி மதி முகத்தில் அடித்துக்கொண்டு வருந்தி அழ, உடல் தளர்ந்து விழுந்தார்.

விளக்கம் : ஒன்பான் நாள்-ஒன்பதாம் நாளில். **எண்டினம்**-எண்+தினம்; எட்டு நாள்கள். **தையல் பாகனை**-உமையம்மையை ஒருபாகத்தில் வைத்துள்ள சிவபெருமானை. **மெய் அயர்ந்து**-உடல் தளர்ந்து. **வருகுவார்**-வருபவர். **மைம்மலி குழலினார்**-கருமை மிக்க கூந்தலையுடைய மனைவியார். **மதிமுகம்**-சந்திரனைப் போன்ற முகம். **அழுங்க**-வருந்த. 11

380. அவ்வமையத்தில் ஈசன் அடியவர் ஒருவர் யாண்டும்
துவ்அரி தாக மேனி துவண்டுகண் உள்வி ழுந்து
செவ்விதழ் புலர்ந்து வாடும் திருமுக மோடு முன்றில்
'வெவ்விய பசியின் வந்தேன், வினையிலீர்' என்று சென்றார்.

அடியார் ஒருவரின் வருகை

தெளிவுரை : அச்சமயத்தில் சிவனடியார் ஒருவர் எங்கும் உண்ணல் என்பது அரிதாக (இல்லையாக) மேனிவாட்டம் அடைந்து கண் குழி விழுந்து சிவந்த உதடு புலரப் பெற்று வாடிய முகத்தோடு வீட்டு முன்பக்கத்தில் வந்து 'கொடிய பசியால் வாடி வந்துள்ளேன். வீட்டில் உள்ளவரே!' என்று கூறினார்.

விளக்கம் : அமையம்-சமையம். **ஈசன் அடியவர்**-சிவனடியார். **யாண்டும்**-எங்கும். **துவ்வரிதாக**-உண்டது அரிதாக. **துவ்வு**- உண்ணல். **துவண்டு**-வாடி. **செவ்விதழ்**-சிவந்த உதடு. **புலர்ந்து**- வாடி உலர்ந்து. **வாடும் திருமுகம்**-வாட்டம் உடைய முகத்துடன். 12

381. தொண்டர்வந்து உரைத்த மாற்றம் சுடுதழல் காய்ந்த வெவ்வேல்
புண்துளை படப்புக் கென்னச் செவிப்புலம் புக்கு நெஞ்சம்
உண்டிட எழுந்து போகி உரியநல் மனையா ரோடும்
வண்தவர் தமைவணங்கி மனையினுள் கொண்டு புக்கார்.

தருமசீலர் பசியால் வாடிய துறவியை அழைத்துக் கோண்டு உள்ளே போதல்

தெளிவுரை : அங்ஙனம் தொண்டர் உரைத்த சொல்லானது சுடும் நெருப்பில் காய்ந்த கொடிய வேல் புண்துளையிலே படும்படி புகுந்தாற்போல், செவியில் புகுந்து மனத்தை வருத்த, தருமசீலர் எழுந்து போய்த் தமக்குரிய மனைவியுடன் வளம் உடைய தவத்தவரைத் வணங்கித் தம் இல்லத்துக்குள் அழைத்துக் கொண்டு போனார்.

விளக்கம் : தொண்டர்-பசியுடன் வந்த சிவத்தொண்டர். **சுடுதழல் காய்ந்த**-சுடும்படியான தீயில் காய்ந்த. **வெவ்வேல்**-கொடியவேல். **புண்துளைபடப் புக்கென்ன**- புண்துளையில் புகுந்தாற்போல். தீயில் காய்ந்த கொடியவேல் புண்துளையில் நுழைதல் போன்று தவத்தவர் சொல் செவியில் புகுந்து வருத்தியது. **நன்மனையார்**-நல்ல மனைவியார். **வண்டவர்**-வண்மை+தவர். **கொண்டு**-அழைத்துக் கொண்டு. **புக்கார்**-புகுந்தார். 13

382. ஆதனத்து இருத்தி மேனி அயர்வுகண்டு அழுங்கிக் கெட்டேன்
மாதுஇடத் தவர்தம் அன்பர் வருந்தஇவ் வாறு கண்டேன்
ஏதுஇனிச் செய்வேன் என்னா இணைவிழி அருவிபாய
மூதுஅழல் படும் அரக்கின் மும்மைநெஞ்சு உருகி நைந்தார்.

அந்தணர் வருந்துதல்

தெளிவுரை : தருமசீலர் அந்தச் சிவத்தொண்டரை அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் புகுந்தார். அச்சிவத் தொண்டரின் உடல் தளர்ச்சியைப் பார்த்து வருந்தினார். 'நான்கெட்டேன்! உமையம்மையை இடப்பக்கத்தில் கொண்ட சிவபெருமானின் அடியார் இங்ஙனம் வருந்துதலைக் கண்டேன். நான் செய்வது இனி ஏது?' என்று இரண்டு கண்களினின்று நீர் அருவி பாய முதிர்ந்த தீயில் இட்ட அரக்கு உருகுவதைப் போல் மும்மடங்கு உருகி வருந்தினார்.

விளக்கம் : ஆதனம்-இருக்கை. **அயர்வு**-தளர்ச்சி; வாட்டம். **மாதிடத்தவர்**-உமை மங்கையை இடப்பக்கத்தில் உடையவர். **என்னா**-என்று,; 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். **இணைவிழி**-இருகண்கள். **மூதழல்**-முதுமை+அழல்; மிக்க அழல். **அரக்கின்**-அரக்கைவிட; 'இன்' உறழ் பொருளில் வந்தது. **நைந்தார்**-வருந்தினார். 14

383. அன்னைபங்கு உடையோன் அன்பர் அயர்வுகண்டு ஆற்றல் ஆகாது
'இன்னும்இந் நகர் முற்றும் இரந்து காண் குவன்பு குந்து
செந்நெல்வந் திலதேல் ஆவி தீர்ப்பன்' என்று இல்லிற்கு ஓதித்
தன்நிகர் இலாதார் அன்பு தரும்வலி கொண்டு சென்றார்

உயிரைவிடுவேன் எனல்

தெளிவுரை : உமையம்மையை ஒருபாகத்தில் கொண்ட சிவபெருமானின் அடியார் அடைந்த தளர்ச்சியைக் கண்டு பொறுக்க இயலாது, 'இன்னும் இந்த நகரத்துக்குள் போய் நெல்லை இரந்து பார்ப்பேன். செந்நெல் கிடைக்கப்பெறாது போயின் உயிரைவிட்டுவிடுவேன்!' என்று தம் மனைவிக்குத் தருமசீலர் கூறினார். ஒப்பில்லாத அவர் அன்பு தரும் வலிகொண்டு நெல்லை இரப்பதற்காகக் கூவ நகரத்துக்குள் போனார்.

விளக்கம் : அன்னைபங்கு உடையோன்-உமையம்மையை இடப்பாகத்தில் உடைய சிவபெருமான். **அன்பர் அயர்வு**-சிவனடியாரின் தளர்ச்சியை. **ஆற்றலாகாது**-பொறுத்துக்கொள்ள இயலாது. **காண்குவன்**-காண்பேன். **செந்நெல் வந்திலதேல்**-செந்நெல் கிடைக்காது போனால். **ஆவி தீர்ப்பன்**-என் உயிரை விட்டுவிடுவேன். **இல்லிற்கு ஓதி**-மனைவியிடம் கூறி. **அன்புதரு வலி கொண்டு**-அன்பு அளிக்கின்ற வலியைக் கொண்டு. 15

384. நனைஅவிழ் இதழி யார்க்கு நல்லவர் இளைத்தார் என்ன
இனைவுறு மனத்தோடு அங்கங்கு இருந்து இருந்து எழுந்து மெல்ல
மனைதொறும் பலிக்குப் புக்கார் வடிவுறு வருத்தம் சற்று
நினைகிலர் அன்பு பற்றாய் நின்றதுஅந் தணருக்கு ஆவி.

நகருக்குள் நெல் இரக்கச் செல்லுதல்

தெளிவுரை : தருமசீலர் தேன் பொருந்திய கொன்றை மலர் மாலையை அணிந்த சிவபெருமானுக்கு அன்பரான நல்லார் பசியால் வாடினார் என்று வருந்தும் உள்ளத்தோடு உடலில் தளர்ச்சியிருந்ததால் அங்கங்கே அமர்ந்து அமர்ந்து எழுந்து மெல்ல வீடுதோறும் நெல் பிச்சைக்குப் போனார். உடம்பில் உண்டான வருத்தத்தைச் சற்றும் அவர் எண்ணவில்லை. அன்பையே பற்றுக் கோடாகக் கொண்டு அந்தணருக்கு உயிர் நின்றது.

விளக்கம் : நனைஅவிழ் இதழியார்க்கு-தேன் சிந்தும் கொன்றை மாலையுடைய சிவபெருமானுக்கு. **இனைவுறு**-வருந்தும். **பலிக்கு**-பிச்சைக்கு. **வடிவுஉறு**-உடல் அடைந்த தருமசீலர்க்கு உடல் தளர்ந்து வாட்டம் ஏற்பட்டிருந்தது. ஆதலால் அவர் அங்கங்கு அமர்ந்து இளைப்பாறிச் செல்ல நேர்ந்தது. ஆதலால் 'அங்கங்கு இருந்து இருந்து எழுந்து' என்றார். **நினைகிலர்**-நினைக்காதவராய். **அன்பு பற்றாய்**-அன்பையே பற்றுக் கோடாகக் கொண்டு. அந்தணருக்கு ஆவி நின்றது என்று இயைக்க. 16

385. எம்மையாள் திருவிற் கோலத்து இறையவன் கருணை தன்னால்
செம்மையா மனத்தர்க்கு எய்தச் செந்நெல்அங்கு இரண்டு நாழி
நம்மை ஆளுடைய தொண்டர் நனிபெருஞ் செல்வம் உன்னின்
மும்மையாய் அடைந்தது என்ன முதிர்மகிழ் புற்று மீண்டார்.

நெல் பெற்றுத் திரும்புதல்

தெளிவுரை : எம்மை ஆளும் திருவிற்கோலத்து இறையவன் அருளால் செம்மையான மனத்தையுடைய அந்தத் தருமசீலர்க்கு இரண்டு நாழி நெல் கிடைத்தது. நம்மை ஆள்கின்ற தொண்டர் மிக்க பெருஞ்செல்வம் முன் இருந்ததை விட மும்மடங்கு அடைந்தாற் போல் மிக்க மகிழ்ச்சி கொண்டு திரும்பி வந்தார்.

விளக்கம் : செம்மையாம் மனத்தர்க்கு-நல்ல மனத்தை உடைய அந்தணர் தருமசீலர்க்கு. **செந்நெல் அங்கு இரண்டுநாழி**-இரண்டு நாழி செந்நெல். **நாழி**-ஒரு முகத்தல் அளவை. இரண்டு நாழி நெல்லை அந்தணர் பெற்றது முன்பு தாம் பெற்றிருந்த செல்வதைப் போல் மூன்று மடங்கு அடைந்தது போல் விளங்கியது. **முதிர்மகிழ்வு**-முதிர்ந்தமகிழ்ச்சி. மிக்க மகிழ்ச்சி. 17

386. அந்தணர் செல்ல நங்கை அருந்தவர் அயர்வு காணா
வந்துஎழும் துயரம் ஓர்பால் மனத்து எழுந்து அலைப்பக் கேள்வர்
தம்தளர்வு உள்நின்று ஓங்கும் தனிப்பெரும் துயரம் ஓர்பால்
முந்துற வழுமி ரங்கு முலைமுகட்டு எற்றி வீழும்.

மனைவியாரின் துயரம்

தெளிவுரை : அந்தணர் தம் வீட்டுக்குள் சென்றார். அவர்தம் மனைவியார் சிவத்தொண்டரின் தளர்ச்சியைக் கண்டு மூண்டு எழும் துயரம் ஒருபக்கமும் மனத்தில் உண்டாகி வருத்த, தம் கணவர் தம் தளர்ச்சி உள்ளே நின்று எழும் தனிப் பெருந்துயரம் ஒருபக்கம் முற்பட அழுவார்; இரங்குவார்; கண்ணீர் கொங்கை முனையில் தெறித்து விழும்.

விளக்கம் : நங்கை-தருமசீலரின் மனைவி. **அயர்வு**-தளர்ச்சி. **காணா**-கண்டு. **ஓர்பால்**-ஒருபக்கம். **அலைப்ப**-வருத்த. **கேள்வர்**-கணவர். **உள்நின்று ஓங்கும்**-மனத்துள் இருந்து எழுகின்ற. 18

387. இன்னல் அம் கடலின் மூழ்கி எழுந்திடாது அழுங்கு கின்றார்
செந்நெல்கொண்டு அந்தோ நங்கள் திருத்தொண்டர் பசித்தார் என்று
துன்னுறு துயரம் நூக்கத் துணவனார் வருதல் கண்டு
மின்என எதிர்வ ணங்கி விரைந்துவாங் கினள்அச் செந்நெல்.

மனைவியார் நெல்லை வாங்கல்

தெளிவுரை : துன்பக் கடலில் முழுகி எழுந்திடாது வருத்தம் அடைகின்ற மனைவியார் 'அந்தோ நம் திருத்தொண்டர் பசித்தார்' என்று பொருந்திய துயரம் செலுத்த, தம் கணவர் வருதலைக் கண்டு மின்னல் போல் விரையச் சென்று வணங்கிச் செந்நெல்லை விரைந்து வாங்கினார்.

விளக்கம் : இன்னல் அம்கடல்-துன்பமாகிய அழகிய கடல். **அழுங்குகின்றார்**-வருந்துபவர். **நூக்க**-செலுத்த. **துணைவனார்**-கணவர். **மின்என**-மின்னலைப் போன்று. 19

388. வாங்கிய செந்நெல் குத்தி மாதவர் பசிநோய் தீரப்
பாங்கொடு அமுதம் ஆக்கிப் படைத்திட வேண்டும் என்ன
ஓங்குறு மனத்துஅன் பால்தம் உடல்தளர்வு எண்ணாது அம்பொன்
பூங்கொடி அனையார் போனம் பொருக்கென அமைத்துப் பின்னர்.

மனைவியார் உணவு சமைத்தல்

தெளிவுரை : அழகிய பூங்கொடியைப் போன்ற மனைவியார் தாம் கணவரிடமிருந்து வாங்கிய செந்நெல்லைக் குத்தி, மாதவர் பசிநோய் நீங்க நன்கு உணவு சமைத்துப் பரிமாறவேண்டும் என்று எண்ணி மனத்தில் அன்பினால் தம் உடல் தளர்ச்சியையும் எண்ணாமல் விரைய அமைத்தார். பின்பு.

விளக்கம் : பாங்கொடு-நன்கு. **அமுதம் ஆக்கி**-உணவைச் சமைத்து. **படைத்திட**-பரிமாற. **உடற்றளர்வு**-உடலின் தளர்ச்சி. **பொருக்கென**-விரைவாக. 20

389. "திருந்திய கொழுநர்க்கு ஆயிற்று அமுது" எனச் செப்பி, "நம்பால்
அருந்துயர் கெடவந் தாரை அமுதுசெய் விப்பீர்" என்ன,
விருந்தினர் தமைவ ணங்கி அமுதுசெய் வித்தவேலை
மருந்துஎதிர் பவரின் மிக்க மறையவர் மகிழ்ச்சி கொண்டார்.

அந்தணர் உணவு உண்டு மகிழ்தல்

தெளிவுரை : மனைவியார் தம் கணவருக்குத் 'திருத்தமான அமுது சமைத்தாயிற்று' என்று உரைத்தார். 'நம்மிடம் அரிய துயரம்

கெடுமாறு வந்த தொண்டரை உணவு உண்ணச் செய்வீர்' என்றும் உரைத்தார். அவர்கள் விருந்தினரான சிவனடியாரை வணங்கி, உணவு உண்ணுமாறு செய்தபோது. தம்நோய்க்குத் தக்க மருந்தைக் கண்டவரைப் போன்று அந்தணர் மகிழ்ச்சி அடைந்தார். 21

390. மாதவர் அமுது செய்து மகிழச்சிகொண்டு எய்தப் பின்போய்
ஆதர வொடும்வ ணங்கி அவர் அருள் விடைகொண்டு ஏகித்
தீதகல் அன்பின் மிக்கார் சேடித்த அமுதுஉண் பாக்குப்
போதும் அவ் வமையம் தன்னில் புகுந்தவர் பதம் உரைப்பாம்.

அந்தணர்க்கு விடைகொடுத்தபின் தருமசீலரின் செயல்

தெளிவுரை : அந்தணர் உணவை உண்டு மகிழ்ந்து புறப்பட அவர்பின்பு தருமசீலர் மனைவியாரும் போய் விடைகொண்டு திரும்பினர். குற்றம் அற்ற அன்பினை உடைய அந்தணர் உண்டு எஞ்சியிருந்த உணவை உண்ணும் பொருட்டாகச் சென்ற சமயத்தில் அந்தத் தருமசீலரின் நிலைமையக் கூறுவோம்.

விளக்கம் : மாதவர்-சிவனடியார். **அமுது செய்து**-உணவை உண்டு. **ஆதரவொடும்**-அன்புடன். **தீது அகல் அன்பின்**-குற்றம் அற்ற அன்பால். **மிக்கார்**-மிக்கவர். **சேடித்த அமுது உண்டு**-எஞ்சியிருந்த உணவு. **உண்பாக்கு**-உண்ணும் பொருட்டாக. **புகுந்தவர்**-வந்த சிவனடியார். 22

வேறு

391. அந்த ணாளர்தம் அன்பினை உலகிடை அலர்த்த
நந்தி லாஅருள் கூவநா யகன்உளம் நாடித்
தந்த மாவுரி போர்த்து அதன் தனியுரு மறைத்து
முந்து தொண்டர்கள்போல் ஒரு மூப்புருவு எடுத்தான்

திருவிற்கோல முதியவர் கோலம் கொள்ளல்

தெளிவுரை : தருமசீலர் என்ற அந்தணர் சிவனடியாரிடம் காட்டும் அன்பை உலகத்தில் யாவருக்கும் தெரிவிக்க. குறைவற்ற அருளை உடைய கூவநாதர் உள்ளத்தில் விரும்பினார். யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்த தன் ஒப்பில்லாத வடிவை மறைத்து அன்பு மிக்க தொண்டரைப் போன்று ஒரு முதிய வடிவத்தைக் கொண்டார்.

விளக்கம் : அந்தணாளர்-தருமசீலர். **அலர்த்த**-பரவச்செய்ய. **நந்திலா அருள்**-குறையாத அருள். **கூவநாயகன்**-கூவத்தில் எழுந்தருளியிருக்கும் திருவிற்கோல நாயகன். **நாடி**-விரும்பி. **தந்தமாவுரி போர்த்த**-யானையின் தோலைப் போர்த்துக்கொண்ட. **தனிஉரு**-ஒப்பில்லாத கோலம். **முந்து தொண்டர்கள்**-அன்புமிக்க சிவத்தொண்டர்கள். **மூப்புஉரு**-முதியவடிவம். 23

392. அன்று மேவிய காரைக்கால் அம்மையே அம்மை
என்ற வாசகம் மெய்பெற அவள்உருவு என்னத்
துன்று மேனியில் தசைஒழிந்து என்பெலாம் தோன்ற
மன்றுள் ஆடிய திருவடி மலர்நடை தளர.

சிவபெருமான் கொண்ட கோலம்

தெளிவுரை : முற்காலத்தில் தோன்றிய காரைக்கால் அம்மையே என்று தாம் விதந்து கூறிய காரைக்கால் அம்மையாருக்கு இவர் பிள்ளை எனல் மெய்ம்மையே என்று எண்ணும்படி அவர்போல் இளைத்து எலும்பு தோன்ற வடிவு கொண்டு வந்து தில்லையம் பலத்தில் ஆடிய திருவடிமலர் நடைதளர.

விளக்கம் : காரைக்கால் அம்மையார் கயிலைக்குச் சென்ற போது அவரைச் சிவபெருமான் 'அம்மையே' என்று கூறி வரவேற்றார். அம்மை என்ற சொல்லானது நிரூபணம் ஆகுமாறு அவரது பிள்ளையைப் போல் இளைத்து எலும்பெல்லாம் வெளிப்பட்டுத் தோன்றச் சிவபெருமான் வந்தார். **மேனிதசை ஒழிந்து**-உடலில் தசைவற்றி. **என்புஎலாம் தோன்ற**-எலும்புமுழுவதும் வெளிப்பட்டுத் தோன்ற. 24

393 பொருவுஇல் தன்னைவிற் கோலத்தன் எனும் பெயர் புதுக்க
உருவம்உள் வளைந்து ஒருகழைத் தண்டுமுன் ஊன்றித்
திருவி றைஞ்சுபொன் பையர வல்குலாள் சிரிப்பத்
தரும சீலர்தம் மனையிடைப் புகுந்தனன் தலைவன்.

தருமசீலர் வீட்டில் இறைவர் புகுதல்

தெளிவுரை : ஒப்பு இல்லாத சிவபெருமானான தன்னை வில்கோலத்தன் என்று கூறும் பெயரைப் புதுப்பிக்க, வடிவம் உள்ளே வளைந்து. ஒரு மூங்கில் தண்டை முன்னால் ஊன்றி,

திருமகளும் வணங்கும்படியான பாம்பின் படம் போன்ற அல்குலையுடைய உமையம்மை சிரிக்க, தருமசீலரின் மனையில் சிவபெருமான் புகுந்தார்.

விளக்கம் : பொருவுஇல்-ஒப்பு இல்லாத. **தன்னை**-சிவபெருமானை. விற்கோலநாதர் என்பது கூவத்து இறைவர் பெயர். அப்பெயரைப் புதுப்பிப்பதைப் போல் உடல் வளைந்து கோல் ஊன்றியபடி தருமசீலர் வீட்டுக்குள் சிவபெருமான் புகுந்தார். **திருஇறைஞ்சும்**-திருமகள் துதிக்கும். **பையரவல்குலாள்**-பாம்பின் படம் போன்ற அல்குலையுடைய உமையம்மை. **சிரிப்ப**-உமையம்மையார் சிவபெருமானின் முதியவடிவைக் கண்டு சிரித்தாள் என்பதாம். **தலைவன்**-சிவபெருமான். 25

394. புகுந்துஇளைத்தனம் ஒருபிடி போனகம் இடிலோ
மிகுந்த புண்ணியம் உமக்குஎன விளம்பினன் விமலன்
பகர்ந்த வாசகம் கேட்டலும் பதமுண இருந்தார்
நுகர்ந்தி டாமுனம்அடியவர் ததுதவ நோன்மை.

தருமசீலர் அடியார் வரவால் மகிழ்தல்

தெளிவுரை : குற்றம் அற்ற சிவபெருமான் தருமசீலர் வீட்டுக்குள் புகுந்து, 'யான் பசியால் வாடினேன். ஒருபிடி உணவு இட்டால் உங்களுக்கு மிக்க புண்ணியம் உண்டாகும்!' என்று கூறினார். அவர் அங்ஙனம் கூறிய சொல்லைக் கேட்கவும் உணவு உண்ண இருந்த தருமசீலர் உண்பதற்கு முன் இங்குச் சிவனடியார் வந்தது நம் தவலிமை யாகும்.

விளக்கம் : ஒருபிடி போனகம்-ஒருபிடி உணவு. **விமலன்**-குற்றம் அற்ற சிவபெருமான். **பகர்ந்த**-கூறிய. **பதம் உண இருந்தார்**-உணவு உண்ண இருந்த தருமசீலர். **தவநோன்மை**-நம் தவவன்மையாகும். 26

395. என்றுஅ கம் களித்து எழுந்து போய் எம்பிரான் இளைத்து
நின்ற அந்நிலை கண்டுஉளம் பொறாதுநெக்கு உருகித்
துன்றுஅ ருந்துயர் கூர்ந்துஇரு கண்கணீர் சொரியப்
பொன்றுஇல் அன்பொடு வணங்கி உள் கொண்டுபுக் கனரால்.

வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு போதல்

தெளிவுரை : என்று மனம் களித்து எழுந்து சென்று, முதியவர் இளைப்புடன் நின்ற அந்த நிலையைக் கண்டு மனம் பொறுக்காமல் அன்பால் நெகிழ்ந்து உருகி, அடைவதற்கு அரிய துன்பத்தை அடைந்து இரு கண்களும் நீர் சொரியக் குறைவுபடாத அன்புடன் சிவபெருமானான முதியவரை வணங்கி வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு போயினர்.

விளக்கம் : அகம் களித்து-உள்ளம் மகிழ்ந்து. **எம்பிரான்**-சிவபெருமான். **பொறாது**-பொறுக்காமல். **அருந்துயர்**-பெரிய துன்பம். **கூர்ந்து**-மிக்கு. **பொன்றில் அன்பொடு**-குறைவுபடாத அன்புடன். **புக்கனர்**-புகுந்தனர். 27

வேறு

396. ஐயனை ஆதனத்து இருத்தி "இங்குநாம்
உய்யவந் தவர்தமக் குள்ள போனகம்
பைஅரவு அல்குலாய் படைத்தி," என்னலும்
மையல்இல் மங்கையர் மகிழ்வுற் றிட்டனர்.

அம்மையார் உணவைப் பரிமாறுதல்

தெளிவுரை : தலைவனான சிவபெருமானை இருக்கையில் அமரச் செய்து. 'இங்கு நாம் உய்ய வந்தவர்க்கு நமக்கு இருந்த உணவை, பாம்பின் படம் போன்ற அல்குலை உடையவளே, பரிமாறுக!' என்று தருமசீலர் உரைக்கவும், மயக்கம் அற்ற அம்மையார் மகிழ்வுடன் உணவைப் பரிமாறினார்.

விளக்கம் : ஆதனத்து-இருக்கையில். **இருத்தி**-அமரச் செய்து. **உள்ள போனகம்**-எஞ்சியுள்ள உணவு. **படைத்தி**-பரிமாறுவாயாக. **என்னலும்**-என்று கூறவும். **மையல் இல் மங்கையர்**-தமக்கு உள்ள உணவினை முதியவர்க்குப் பரிமாறநேர்ந்ததே என்ற மயக்கம் இல்லாமல். **இட்டனர்**-பரிமாறினார். 28

397. இட்டலும் இறையவன் எண்தினம் கண்நீர்
பட்டினி யொடுமிகப் பரிந்து தொண்டுசெய்
நிட்டையின் வழுவுறா நுங்கள் நெஞ்சிடை
மட்டிலை அன்புஎன மறைந்து கூறுவான்.

உங்கள் அன்புக்கு அளவு இல்லை!

தெளிவுரை : அவ்வாறு உணவு பரிமாறவும், எட்டுநாட்கள் நீங்கள் பட்டினியொடும் மிகவும் பரிந்து கொண்டு செய்து உறுதியினின்று வழுவாமல் உங்கள் நெஞ்சில் உள்ள அன்புக்கு அளவு இல்லை என்று மறைவாக இருந்து கூறலானான்.

விளக்கம் : இட்டலும்-உணவைப் பரிமாறவும். **இறையவன்**-சிவபெருமான். **எண்தினங்கள்நீர்**-எட்டுநாள்கள் நீங்கள். **பரிந்து**-இரங்கி. **நிட்டை**-உறுதி. **பழுவுறா**-தவறாத. **மட்டுஇலை**-அளவு இல்லை. 29

398. கலிமிகு சிறுவிலைக் காலம் செல்வரை
மெலிவுறும் நமக்கு நம் விளங்கும் ஆலயத்து
உலைவு அற அனுதினம் ஒரும ணிக்குடம்
மலிவுறு செந்நெல்முன் வைத்தும் கொண்ம்என.

நெல் எம் ஆலயத்தில் வைப்போம்! கொள்க!

தெளிவுரை : 'துன்பம்மிக்க பஞ்சகாலத்தில் செல்வரைப் போய் இரக்கும் உங்கட்கு நம் விளங்கும் ஆலயத்தில் தவறாது நாள்தோறும் ஓர் அழகிய குடம் நிறைய செந்நெல் முன் வைப்போம். அதை எடுத்துக் கொள்வீராக!' என்று உரைத்தார்.

விளக்கம் : கலிமிகு-துன்பம் மிகும். **சிறுவிலைக்காலம்**-பஞ்சகாலம். **உலைவற**-குறைவின்றி. **ஒருமணிக்குடம்**-ஒரு அழகிய குடம். **வைத்தும்**-வைப்போம். **கொண்ம்என**-கொள்ளுங்கள். 'கொள்ளும்' என்பது 'கொண்ம்' என விகாரப்பட்டது. 30

399. அண்ணல் சொற்றிட அதை அந்தணாளர்கேட்டு
உள்நெகிழ் வொடு கரம் உச்சி கூப்பியே
கண்இணை புனல்உகக் கடைய னேனையும்
எண்ணிவந் தருளிய இறைவ னோஎன.

வந்தவர் சிவபெருமான் என எண்ணி மகிழ்தல்

தெளிவுரை : மறைந்திருந்து சிவபெருமான் இவ்வாறு சொல்ல அதைத் தருமசீலர் ஆன அந்தணர் கேட்டு மனம் நெகிழ்ந்து

கைகளை உச்சியில் குவித்துக் கண்ணினின்று நீர் வடிய, இழிந்த என்னையும் எண்ணி வந்தருளியவர் சிவபெருமானோ! என்று எண்ண.

விளக்கம் : அண்ணல்-சிவபெருமான். **சொற்றிட**-உரைக்க. **உள்நெகிழ்வொடு**-உள்ளம் மகிழ்ந்து. **கரம் உச்சி கூப்பியே**-கைகளைத் தலையுச்சி மீது குவித்து. **கண்இணை புனல்வர**-இருகண்களினின்று நீர் வெளிப்பட 31

400. ஆலயம் தனில்அடைந்து அன்பு வேண்டுவிற்
கோலஅங் கணர் தமைக் குறுகித் தாழ்ந்துஎழுங்
காலையின் அங்கு ஒரு கடம்நி ரம்புசெஞ்
சாலிகண்டு உவந்தனர் தரும சீலரே.

ஒரு குடம் நெல் காணப்படல்

தெளிவுரை : தருமசீலர் கோயிலில் போய் அடைந்து அன்புடன் திருவிற்கோல இறைவனைக் குறுகி வணங்கி எழும் போது அங்கு ஒரு குடம் நிரம்பச் செஞ்சாலி நெல் இருக்கக் கண்டு மகிழ்ந்தார்.

விளக்கம் : விற்கோல அங்கணர்-திருவிற்கோல நாதரான அழகிய கண்ணையுடையவர். **கடம் நிரம்பு செஞ்சாலி**-ஒரு குடம் நிறைந்த செஞ்சாலி நெல். **உவந்தனர்**-மகிழ்ந்தார். 32

401. கொண்டு போய் மனையின்அக் குடம்நி ரம்புநெல்
அண்டர்நா யகர் திருவடியர் எண் இலார்
உண்டிட நல்லமுது உதவிச் சேடம் உண்டு
ஒண்டொடி அவரொடும் உவப்புற் றார்அரோ.

தருமசீலர் மகிழ்தல்

தெளிவுரை : எடுத்துக்கொண்டு சென்று இல்லத்துள் அக்குடத்தில் நிரம்பியிருக்கும் நெல்லை அண்டர் தலைவரான சிவபெருமானின் அடியார் எண்ணற்றவர் உண்டிட, நல்ல அமுதத்தை உதவி எஞ்சியதை உண்டு ஒளியுடைய வளையலை அணிந்த மனைவியுடன் மகிழ்ந்தார் தருமசீலர்.

விளக்கம் : அண்டர் நாயகர்-தேவர் தலைவரான சிவபெருமான். **திருவடியார்**-அடியார்கள். **எண்இலார்**-அளவற்றவர். **சேடம்**-எஞ்சிய உணவு. **ஒண்டொடியவர்**-ஒளியுடைய வளையலை அணிந்த தருமசீலரின் மனைவி. 33

402. இத்திறம் நாடொறும் இறைவன் ஆலயம்
வைத்த செந் நெற்கொடு வரும் தொண் டர்க்கெல்லாம்
துய்த்திட அமுதுஅறு சுவையொடும் படைத்து
உத்தமர் சிவன்அரும் பதத்தில் ஒன்றினார்.

அடியார்க்கு உணவிட்டு மகிழ்தல்

தெளிவுரை : இவ்வாறு நாள்தோறும். இறைவனின் கோயிலில் வைக்கப்பட்ட செந்நெல்லைக் கொண்டு அரிய தொண்டர்க் கெல்லாம் உணவை அறுசுவையோடும் படைத்து உத்தமரான சிவபெருமானின் திருவடியில் வணங்கி ஒழுகினார்.

விளக்கம் : வரும் தொண்டர்க்கெலாம்-தம்மிடம் வரும் அடியார்க்கெல்லாம். **துய்த்திட**-உண்ண. **அமுது**-உணவு. **படைத்து**-பரிமாறி. **பதம்**-திருவடி. 34

வேறு

403. மறையவர் தமக்குஇம் முறைமையின் செந்நெல்
வைத்தலான் அரியவிற் கோலத்து
இறையவன் உலகில் செந்நெல்வைத் தவனாம்
என்னும் மெய்ப் பேரடைந் தனனால்
அறையும்அப் பெயரை மனம் விழைந்து உரைப்போர்
அழிவுஇலா மிக்கசீர்ச் செல்வம்
நிறைபெருங் கல்வி பெருகுவர் பின்னும்
நிகர்இல்பேர் இன்பவீடு அடைவார்.

இறைவர் பெயரை உரைப்பவர் பெறும் பயன்

தெளிவுரை : அந்தணர்க்கு இம்முறைமைப்படி செந்நெல் வைத்தலால் அருமையான விற்கோலத்து இறைவன் உலகில் செந்நெல் வைத்தவனாம் என்னும் மெய்ப்பேர் அடைந்தனன்; கூறப்பட்ட அப்பெயரை உள்ளம் விரும்பி உரைப்பவர் அழிவற்ற

மிக்க சிறப்புடைய செல்வம் நிறைந்த பெருங்கல்வி பெருகப் பெறுவர். பின்பு ஒப்பற்ற பேரின்ப வீட்டையும் அவர் அடைவர்.

விளக்கம் : மறையவர் தமக்கு-தருமசீலரான அந்தணர்க்கு நாள்தோறும் இறைவன் நெல்வைத்ததால். அவர் 'செந்நெல் வைத்தவர்' என்ற பெயரைப் பெற்றார். அப்பெயர் உள்ளம் விரும்பி உரைப்பவர் செல்வமும் கல்வியும் அடைவர். பின்பு வீடுபேற்றையும் அடைவர்.

அழிவிலா-குறையா. **பெருகுவர்**-பெருகப் பெறுவர். **பேரின்ப விடு**-பேரின்பத்தைத் தரும் மோட்சம். 35

404. அந்தவிற் கோலத்து இறைசெயும் வெள்ளி
அடுக்கலில் சந்தியா நிருத்தம்,
நந்துபொன் பொதுவில் அரியஆனந்த
நடம், இலங் குறுவட வனத்தில்
உந்துநற் சண்ட தாண்டவம், கூவத்து
உலைவறு தருக்கமாது எனவே
வந்தஅச் சத்தி அனுதினம் காண
மகிழ்ந்துஇரக் காநடம் புரிவன்.

சிவகதியை அடைவர்

தெளிவுரை : அந்த விற்கோல நாதர் கயிலைமலையில் பிரதோடசந்தியில் நிருத்தம் செய்தார். ஆதலால் அந்நடனம் சந்தியாநிருத்தம், பொருந்திய பொன் சபையான தில்லையில் செய்த நடனம் ஆனந்த நடனம், பக்கத்தில் உள்ள திருவாலங்காட்டில் சண்ட தாண்டவமும், இக்கூவத்தில் தருக்க மாதா காண இரட்சா நடனமும் செய்தருளுவார்.

விளக்கம் : சிவபெருமான் கயிலை மலையில் சந்தியாநிருத்தம், தில்லைப் பொன்னம்பலத்தில் ஆனந்தக்கூத்து, திருவாலங்காட்டில் சண்ட தாண்டவம், கூவப்பதியில் தருக்கமாதா காண இரட்சா நடனமும் செய்தருளுவார்.

வெள்ளியடுக்கல்-வெள்ளிமலை. **சந்தியாநிருத்தம்**-பிரதோட நடனம். **பொன்பொதுவில்**-தில்லையில் உள்ள பொன்னம்பலத்தில்.

இலங்குறு-விளங்கும். **வடவனம்**-திருவாலங்காடு. **தருக்கமாது**-வாதிட்ட மங்கை (உமையாள்) **உலைவறு**-குலைதல் அற்ற. **அனுதினம்**-நாள்தோறும். **இரக்காநடனம்**-இரட்சா நடனம். 36

405. சாற்றரும் பெருமைக் கூவமா நகரில்
'தருக்கமா தா' எனும் பெயராள்
போற்றுற நடம் செய் எம்பிரான் நாமம்
போற்றுற வளர்சடைக் கூத்தன்
கால்துணைக் கமலம் ஒருபகல் சென்று
கண்டவர் அளப்பருங்கல்வி
மாற்றருஞ் செல்வம் பெரும்புகழ் படைத்து
மறுமையிற் சிவகதி அடைவார்.

சிவபெருமானின் திருவடியைத் தரிசித்தவர் அடையும் பயன்

தெளிவுரை : வாயால் கூறுவதற்கு அரிய பெருமையுடைய கூவப்பதியில் தருக்க மாதா என்ற பெயரையுடைய உமையம்மையார் கண்டு போற்ற, நடனம் செய்யும் எம் சிவபெருமானின் பெயர் போற்றும்படியான வளர்சடைக்கூத்தர் என்பதாம். அவன் கால் துணைக் கமலம் ஒரு பகல் சென்று தரிசித்தவர் அளவிட அரிய பெருங்கல்வியையும் அழியாத செல்வத்தையும் பெரும் புகழையும் படைத்து மறுமையில் சிவகதியை அடைவார்கள்.

விளக்கம் : சாற்றரும்-சாற்ற+அரும்; கூறுதற்கு அரிய. **தருக்கமாதா**-இறைவனிடம் உமையாள் வாதிட்டார். ஆதலால் அவர்க்குத் "தருக்கமாதா" என்பதாம். **போற்றுற**-போற்ற. **கால்துணைக்கமலம்**-திருவடியாகிய இரண்டு தாமரைகள். **ஒருபகல்**-ஒருநாள். **கண்டவர்**-பார்த்தவர்; தரிசித்தவர். **மாற்றருஞ்செல்வம்**-அழியாத செல்வம். **சிவகதி**-வீடுபேறு. 37

406. எம்பிரான் நடம் செய் கூவமா நகரின்
இருப்பவர்க்கு ஒருதினை அளவு
செம்பொன்ஈ குறில்ஒண் காசியா திகளாய்ச்
சிறந்திடும் தலங்களில் சென்றே

அம்பொன்ஆ யிரநூல் மறையவர்த் தேடி
அளித்திடு பலன்நிகர்த் திடுமால்
தம்பிரான் அடியார் கரத்ததை அளிக்கும்
தனிப்பலன் உரைப்பதற்கு எளிதோ.

அடியார்க்கு அளிக்கும் கொடையின் பயனைச் சொல்ல முடியுமா?

தெளிவுரை : எம் சிவபெருமான் நடனம் செய்கின்ற கூவமா நகரத்தில் வாழ்பவர்க்கு ஒருதினை அளவு செம்பொன் தருவதால் உண்டாகும் பலன் ஒளியுடைய காசி முதலிய (சிறந்திடும்) தலங்களில் போய் நான்மறையில் வல்லவரைத் தேடி ஆயிரம் பொன் அளித்திடும் பலனை ஒத்ததாகும். சிவபெருமானின் அடியவர் கைகளில் அளிக்கும் கொடையால் உண்டாகும் பலன் சொல்வதற்கு எளிதோ!

விளக்கம் : ஒருதினை அளவு-மிகச்சிறிய தினையின் அளவு. **ஈகுறில்**-தந்தால். **காசியாதி**-காசி முதலியன. **அம்பொன்**-அழகிய பொன்; சிறந்த பொன். **நிகர்த்திடுமால்**-நிகர்த்திடும்+ஆல்; ஒக்கும். **தம்பிரான்**-தம்+பிரான். 38

407. கூவமா நகரில் பிடிஅடங்கு அடிசில்
கொடுத்திடின் அந்தணர் தமக்குத்
தேவர்மூ வரும்உள் மகிழ் மகம் நூறு
செய்பலன் அக்கணம் செறிவர்
ஓவில்மா தவருக்கு ஒருபகல் நிரம்ப
ஓதனம் அத்தலத்து இடுவோர்
பூவினோன் திருமால் பதங்களோ அடைவர்
புராரிதன் பதம்பெறு குவரால்.

உணவு அளிப்பவர் அடையும் பயன்

தெளிவுரை : கூவம் என்ற அந்த நகரத்தில் பிடி அளவு அந்தணர்க்கு உணவைக் கொடுத்தால், தேவர்களும் நான்முகன் முதலிய மூவரும் உள்ளம் மகிழும் வேள்வி நூறு செய்த பலனை அக்கணமே அடைவர். ஒழியாத தவத்தைச் செய்யும் முனிவர்க்கு ஒருநாள் நிறைய உணவு அத்தலத்தில் இட்டவர் தாமரையில் வீற்றிருக்கின்ற நான்முகன் திருமால் ஆகியவர் பதங்களை அடைவதுடன் முப்புரங்களை எரித்த சிவபெருமானின் திருவடியையும் அடைவர்.

விளக்கம் : பிடியடங்கு அடிசில்-பிடியளவு உணவு. **மூவர்**-நான்முகன், திருமால், சிவபெருமான். **மகநூறு**-நூறு யாகங்கள். **அக்கணம்**-உணவு அளித்த அப்போதே. **செறிவர்**-அடைவர். **ஒவில் மாதவர்**-ஒழியாமல் செய்யும் தவத்தை யுடையவர். **ஒருபகல்**-ஒருநாளில். **ஓதனம்**-அன்னம். **பூவினோன்**- நான்முகன். **பதம்**-பதவி. **புராரி**-முப்புரங்களை அழித்த சிவபெருமான். **பதம்**-திருவடி, மோட்சம். 39

408. மாதவர்க்கு இனிய கூவமா புரத்தோர்
மடம் அமைத்து உதவுவோர் தம்பால்
போதுறு மடம்விட்டு இன்பவீடு அடைவர்
பொன்றுறு பதங்களில் புகுதார்
ஆதர வினில்ஓர் சிவனடி யவருக்கு
அங்கையின் துணைவிளை நிலம் ஒன்று
ஈதல்செய் பவர்எக் காலமும் அகலாது
இருப்பர் ஒண் கயிலை மால் வரையில்.

வீட்டை அடைவர்

தெளிவுரை : துறவியர்க்கு நல்ல மடத்தைக் கூவநகரில் அமைத்து அளிப்பவர் தம்மிடம் உள்ள மடமை விட்டு இன்பம் தரும் வீட்டை அடைவர். அவர் அழியும் பதங்களில் போய்ப்புக மாட்டார். அன்புடன் ஒரு சிவன் அடியவருக்கு உள்ளங்கை அளவு விளையும் நிலம் ஒன்றைக் கொடுப்பவர் எக்காலமும் கயிலைமலையில் அகலாமல் இருப்பர்.

விளக்கம் : மாதவர்-முனிவர்; அடியார். **மடம் அமைத்து உதவுபோர்**-மடத்தைக் கட்டித் தருபவர். **போதுறு**-பொருந்தும். **மடம்விட்டு**-அறியாமை விட்டுவிட்டு. **புகுதார்**-புகமாட்டார். **ஆதரவினில்**-அன்புடன். **அங்கையின் துணை**-உள்ளங்கையின் அளவு. **விளைநிலம்**-பயிர் விளையும் நிலம். **ஒண்கயிலை மால் வரை**-ஒள்ளிய கயிலையாகிய பெரிய மலை. 40

409. அருந்தவர் தமக்குக் கூவமா நகரில்
ஆடை-ஒன்று அளித்திடில் அதனில்
திருந்திழை ஒன்றிற்கு ஒருசத கோடி
தேவர்ஆண்டு அருஞ்சிவ லோகத்து

இருந்துபின் பரமன் திருவடிக் கமலம்
எய்துவர் பெற்றம் ஒன்று உதவின்
பொருந்துறு பலன் இவ் வளவு எனக் கணித்துப்
புகன்றிடற்கு அரிது அரிது அம்மா.

ஆடை பசு அளிப்பதால் ஏற்படும் பயன்

தெளிவுரை : அரிய தவத்தவர்க்குக் கூவப்பதியில் ஆடை ஒன்றை அளித்தால், அதில் ஓர் இழை ஒன்றிற்கு நூறு கோடி தேவர் ஆண்டு அரிய சிவலோகத்தில் இருந்து பின்பு சிவபெருமானின் திருவடியை அடைவர். அந்தணர்க்கு ஒரு பசுவைத் தானம் செய்தால் பொருந்திய பலன் இவ்வளவு என்று கணக்கிட்டுக் கூறுதற்கு அரிது அரிது.

விளக்கம் : அருந்தவர்-அரிய தவம் செய்பவர்; சிவன் அடியார். ஆடையை அந்தணர்க்கு அளித்தால், அதில் உள்ள ஒவ்வோர் இழைக்கு நூறு கோடி தேவர் ஆண்டு அளவு சிவலோகத்தில் இருப்பர். பின் திருவடியை அடைவர். **பெற்றம்**-பசு. **கணித்து**-கணக்கிட்டு. **புகன்றிடற்கு**-கூறுவதற்கு. 41

410. கொன்றையங் கண்ணி மிலைந்தவன் மகிழும்
கூவமா நகரிடத்து இயற்றும்
ஒன்றொரு தருமம் அனந்தகோ டிகளாய்
உலப்பறு பலன்களை உதவும்
என்றுஅதன் இயல்பை முனிவரர் உவப்ப
இயம்பினன் புலன்நெறி கடந்து
சென்றுஅரும் பரமா னந்தவா ரிதியில்
திளைத்திடும் சூதன்என் பவனே. 42

ஒவ்வொரு தருமமும் பலவாய் விளங்கும்

தெளிவுரை : கொன்றை மலர் மாலையைச் சூடிய சிவபெருமான் மகிழும் கூவநகரில் இயற்றும் ஒவ்வொரு தருமமும் அனந்த கோடிகளாய் அழியாத பலன்களை உதவும் என்று அதன் இயல்பை முனிவர்கள் மகிழ, ஐம்புலன் நெறியைக் கடந்து சென்று அரிய பரமானந்த கடலில் திளைக்கும் சூத முனிவர் கூறினான்.

விளக்கம் : கொன்றையங் கண்ணி-கொன்றை மலர் மாலை. **மிலைந்தவன்**-சூடியவன். **ஒன்றொரு தருமம்**-ஒவ்வொரு அறச் செயலும். **அனந்த கோடிகளாய்**-அளவற்ற கோடிகளாக. **உலப்பறு**-உலப்பு+அறு; அழியாத. **முனிவரர்**-நைமிசவனத்து காசிபர் முதலிய முனிவர்கள். **புலனெறி கடந்து**-ஐம்புலன் நெறிகளை அடக்கி. **பரமானந்த வாரிதி**-பரம+ஆனந்த+வாரி; மிக்க ஆனந்தக் கடல. 42

செந்நெல் வைத்த சருக்கம் பாடல்-42
செந்நெல் வைத்த சருக்கம் முற்றிற்று
ஆகப்பாடல் 410.

8. தாருகன் வதைச் சருக்கம்

நைமிச வனத்து முனிவர்கள் சூத முனிவர் உரைத்த கூவநகர்ச் சிறப்பை எல்லாம் கேட்டு மகிழ்ந்தனர். பின் அவரை நோக்கி, 'நீவிர் தருக்கமாதா என்று உரைத்தீர். அவளது தோற்றமும் அவள் கூவத்துக்கு வந்த வரலாறும் ஆகியவற்றை விளங்க எமக்கு உரைத்தருள வேண்டும்' என்றனர்.

தாருகன் என்ற ஓர் அசுரன் முன்காலத்தில் வாழ்ந்தான். அவன் தன்னை எவரும் அழிக்கலாகாது என்றும், தன் உடலிலிருந்து சிறிது சிந்தும் செந்நீர்த்துளிகள் முழுதும் தன்னை ஒத்த அசுரர்களாகப் பிறக்க வேண்டும் என்னும் வரத்தைத் தவத்தால் பெற்றான். அதனால் திசைக்காவலர்களையும் கீழ் ஏழ்உலகங்களில் உள்ளவரையும் பிறரையும் கொணர்வித்துத் தனக்குக் குற்றேவல் செய்யுமாறு செய்தான். அரம்பையர் காமதேனு முதலியவர்க்கும் துன்பம் செய்தான். அவன் செய்த கொடுமையால் இறைவர்க்குரிய அருச்சனையும் பூசையும் கெடலாயின.

அவனது கொடுமை பொறுக்க முடியாத வண்ணம் போயிற்று. எனவே தேவரும் இந்திரனும், அயனும், அரியும் கயிலாமலைக்குப் போய்ச்சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர்களின் துன்பத்தைப் போக்கச் சிவபெருமான் எண்ணினார். தம் பக்கத்தில் இருந்த உமையம்மையினைப் பார்த்த வண்ணம் தம் கழுத்தில்

உள்ள ஆலகால நஞ்சில் கையை வைத்தார். அவ்வளவில் எட்டுத் தோள்களும் பருத்த கொங்கைகளும் சிவந்த கூந்தலும் கரிய கண்களும் பிளவுபட்ட வாயும், கரிய மேனியும் உடைய சூலத்தைக்கையில் கொண்ட காளி தோன்றினாள். பயங்கரமான அக்காளியைக் கண்டாள் உமையம்மை. பெருத்த அச்சம் கொண்டு இறைவரைத் தழுவிக் கொண்டாள். அங்கு வந்திருந்த திருமால் முதலிய தேவர்கள் எல்லாம் நடுங்கிக் கண்களை மூடிக்கொண்டனர்.

காளி இறைவரையும் இறைவியையும் பார்த்து "எம்மைப் படைத்தவர்களே! யான் செய்யக் கூடியாது யாது?" என்று வினவினாள். "யாமளையே! தேவர்க்குத் துன்பம் செய்பவன் தாருகன் என்ற அசுரன். அவனைக் கொல்லவே நின்னைப் படைத்தேன். அவனது உடலினின்று ஒரு சொட்டு இரத்தம் விழுந்தாலும் அது அவனது உருவைக் கொண்டு விடும். எனவே அவனைச் சூலத்தினால் குத்தி இரத்தம் கீழே சிந்தாமல் நீ குடித்து விடு" என்று சிவபெருமான் மொழிந்தருளினார். பின் அப்பெருமான் அருளால் காளியின் உருவினின்று யோகினிப் பெண்கள் அளவற்றவர் தோன்றினர்.

அவளைக் கண்ட தேவர்கள் அச்சம் நீங்கப்பெற்றனர். காளியை வணங்கி மலர் மழை பொழிந்தனர். அவளுக்குத் தேவ தச்சனைக் கொண்டு ஒரு தேரைச் செய்வித்துத் தந்தனர். யோகினி ஒருத்தி அத்தேரைச் செலுத்தினாள். காளி அத்தேரில் ஏறத் தேவர்கள் 'சய, சய' என்று முழக்கம் இட்டனர்.

காளி தாருகனின் நகரத்துக்கு அருகே போனாள். அவளது வருகையைத் தாருகனின் ஒற்றர் அறிந்தனர். தம் மன்னனான தாருகனிடம் சென்று உரைத்தனர். அவன் சினங்கொண்டான்; பெரும்படையுடன் வந்து போரிட வந்தான். இருபெரும் படைகளும் எதிர்த்தன.

தாருகன் எய்த அம்புகளால் யோகினியர் பலர் மாய்ந்தனர். காளி எய்த அம்புகளால் தாருகனின் கரி, பரி, காலாட் படைகள் சுருங்கின. தாருகனின் தேர் காளியின் முன் வந்தது. தாருகன்

காளியின் பயங்கர வடிவைக் கண்டு வியந்தான். "நீ யார்? என்னுடன் போருக்கு வந்தது ஏன்?" என்று வினாவினான். "அசுரனே! கேட்பாயாக! நீ தேவர்களுக்குத் துன்பத்தைச் செய்தாய், சிவபெருமான் உன்னைக் கொல்ல என்னை அனுப்பினார். ஆதலால் யான் வந்தேன்!" என்று காளியுரைத்தாள். அதைக் கேட்ட தாருகன் மிக்க சினம் கொண்டான். "நீ சொல்வது பெரிய வானத்தைக் கையால் பற்றி விழுங்குவதைப் போன்றது. நீ பெண்! ஆதலால் நின்னை இதுவரை கொல்லாது விட்டேன்!" என்று சீறினான். காளி, "இழிந்தவனே! உலகம் எல்லாம் ஒரு கணத்தில் மாற்றி ஒடுக்குவது இறைவரின் சக்தி என்பதை அறியாயோ!" என்று உரைத்தாள். தாருகனின் வில்லை வளைத்து ஆர்ப்பரித்தான. அப்போது அண்டமெல்லாம் நடுக்கம் அடைந்தன. காளியும் வில்லை வளைத்துப் பேரொலி எழுப்பினாள். அந்த ஒலி தாருகன் எழுப்பிய நாண் ஒலியை அடக்கியது. பின்பு அவ்விருவரும் பல அம்புகளை எய்தனர். தாருகன் காற்றுக்கணையை எய்ய அதனைக் காளி பாம்புக்கணையால் தடுத்தாள். தாருகனும் நாகக்கணையை விடக் காளி கருடப் படையை எய்தாள். தாருகனும் கருடப்படையை விடத் தேவி நந்திக் கணையை எய்தாள். அப்போது அத்தாருகனும் நந்திக் கணையை எய்ய இரண்டும் சற்றும் நேரம் போரிட்டுப் பின்பு தம்மை எய்தவரிடமே போய்ச் சேர்ந்தன. தாருகன் சிவக்கணையை எய்வேன் என்று அதை விடுத்தான். அவளும் அச்சிவக்கணையை விடுத்தாள். அவையும் சிறிது நேரம் போரிட்டு விட்டுப் பின்பு எய்தவரிடமே போய்ச் சேர்ந்தன. இறுதியாய் காளி ஓர் சூலப்படையை விட்டாள். அப்படை தாருகனின் உடலில் படவே குருதி பொங்கியது. அவன் மயங்கி நின்றான். அவனது இரத்தம் பூமியில் சிந்தக் கூடாது என்று இறைவர் கூறிய அதைக் காளி மறந்தாள். தாருகன் குருதி மண்ணில் படப்படப் பல அசுரர்கள் அத்தாருகனைப் போல் தோன்றினர். அவர்கள் எல்லாம் காளியைச் சூழ்ந்து கொண்டனர். தேவர்கள் கலக்கம் கொண்டனர். சிறிது நேரத்தில் காளிக்கு இறைவர் கூறியது நினைவுக்கு வந்தது. அசுரன் வடிவுடன் பிறந்தவர்களை எல்லாம் பிடித்து விழுங்கலானாள். அதைப் பார்த்த

தாருகன் காளியைப் புடைப்பதற்கு வந்தான். அப்போது காளி சூலத்தால் தாருகனின் மார்பில் குத்தினாள். பெருகிய குருதியைக் கபாலத்தில் பிடித்துக் குடித்தாள் அதன் பின்பு அந்த அசுரனையும் விழுங்கி விட்டாள். பூமியின் சுமை இறங்கியது. தேவர்கள் மலர் மழை பெய்தனர். அதன் பின்பு காளி தன்னுடன் வந்து மாய்ந்த படையினரை எழுப்பினாள். இறந்தவர் எல்லாம் உயிர் பெற்றெழுந்து அவளைப் போற்றினர்.

அவுணன் உடலை உண்ட காளி அறிவு மயங்கிச் செருக்குக் கொண்டாள். யாழைக்கையில் கொண்டு பாடினாள்; ஆடினாள். அவளுடைய படையினரும் அவ்வாறே ஆடியும், பாடியும் களித்தனர்.

அச்செயல்களைக் கண்ட திருமாலும், நான்முகனும், தேவர்களும் போய்ச் சிவபெருமானிடம் முறையிட்டுக் கொண்டனர். காளியின் செருக்கைப் போக்கியருளுமாறு வேண்டிக்கொண்டனர்.

காளியின் செருக்கை அடக்க நினைந்த எம்பெருமான் திருவாலங்காட்டை அடைந்தார். தேவர்களும் உடன் வந்தனர். அங்கு அப்பெருமான் ஆடத் தொடங்கினார். அதைக் கண்ட காளி, "ஐயனே! ஏன் வீணாக ஆடுகின்றீர்! என்னோடு வாதிட்டு ஆடுவீர்" என்று இயம்பினாள்.

இறைவன் சடையில் பிறையைச் சுற்றிக் கொண்டு பாம்பு அசைய, வேதச் சிலம்பு திருவடிகளில் ஒலிக்க நடனம் ஆடினார். தேவர்கள் அவ்வாடலைக் கண்டு நெஞ்சுருகினர். காளியும் சிவனுடன் ஆடினாள்.

அவ்வமயத்து எம்பெருமான் அண்டகூடம் வரை காலைத்தூக்கி ஆடினார். காளி பெண் ஆயிற்றே! காலை உயரத் தூக்கி ஆட இயலாது நாணம் கொண்டாள், தலைகுனிந்தாள். அஞ்சினாள். இறைவனை வணங்கி, "எம்பெருமானே யான் தங்களை மதியாது செய்த செயலை மன்னிக்கவேண்டும்" என்றாள். தேவர்கள் மகிழ்ந்தனர். எம்பெருமான், "இத்திருவாலங்காட்டை அடுத்துத் தென்திசையில் கூவம் என்ற பதியுள்ளது. அது கயிலை

மலைக்கு ஒப்பானது. அங்கு உலகத்தை இரட்சிக்க நாம் நடம் இடுவோம். அதைத் தரிசிக்கும் அத்தலத்தவர் நந்தி கணத்தில் ஒருவர் என எண்ணுக. நீயும் பிணி, வறுமை, பேய், விலங்குகளால் வரும் துயர் நீங்கப்பெறுவாய் என்னுடன் தருக்கமிட்டு ஆடினாய். ஆதலால் உனக்குத் "தருக்க மாதா" என்ற பெயர் வழங்கும். நீ தென் திருக்கூவ நகரைக் காவல் கொண்டு பீடைகளை அழிப்பதால் "பீடாரி" (பிடாரி) என்ற பெயர் வழங்குக!' என்றார்.

காளி அப்பெருமானை வணங்கி விடை பெற்றுக் கூவத்துக்குப் போனாள். அங்கு இறைவன். வகுத்துக் கூறிய வண்ணமே இறைவரை வணங்கி அந்நகர்க்குக் காவலாய் அமைந்தாள்.

இவ்வரலாற்றை வியாச முனிவர் எனக்குக் கூறியபடி யான் உரைத்தேன். இதை ஒருமுறை கேட்டார் நான்முகன் ஆவர். இருமுறை கூறக் கேட்டவர் நாராயணன் ஆவர். மும்முறை கேட்டால் சிவ சாரூபம் பெறுவர்.

இப்புராணத்தை ஓதுவார்க்கும் கேட்போருக்கும் பேய், விலங்கு, கிரகக் கோளாறுகள் ஏற்படா. அகால மரணம், தீய கனா, வறுமை, பிணி உண்டாக மாட்டா. இதை எழுதுவோர் வினையை இமயன் தன் கணக்கேட்டில் எழுதமாட்டான். அன்புடன் படிப்பவர் கேட்பவர் மக்கட்பேறும் அழியா வாழ்வும் எண்பெருஞ்சித்திகளும் அக்கணமே பெறுவர். ஏழ் உலகங்களிலும் அவர்க்கு ஒப்பு இராது.

இதைப் படித்து விரிவுரை கூறும் விற்பனைரத்தொழுது நல்ல ஊர்திகளில் ஏற்றிப் பல இசைக்கருவிகள் முழங்க நகர்வலம் வருமாறு செய்ய வேண்டும். இவ்வாறு செய்பவர், கோடி பாவங்களைச் செய்திருந்தாலும் நீங்கி எண்ணியபடியே எண்ணியவற்றை அடைவர். பின் சிவகதியையும் அடைவர்.

இவ்வாறு சூதமுனிவர், நைமிசவனத்து முனிவர்களுக்குக் கூறினார். நைமிசவனத்து முனிவர்களும் திருவிற்கோல நாதனை வணங்கி ஞானம்பெற்றுப் பரமுத்தியை அடைந்தனர்.

411. கருக்கம்இல் அறிவுடைச் சூத மாதவன்
திருக்கிளர் கூவமா நகர்ச்சி றப்புஎலாம்
உரைக்கஉள் மகிழ்ந்துகை உச்சி கூப்பிமால்
இரிக்கும்நன் முனிவரர் இயம்பல் மேயினார்.

நைமிச முனிவர் கூறுவது

தெளிவுரை : கருக்கம் அற்ற அறிவையுடைய சூதமா முனிவன் தெய்வத்தன்மை விளங்கும் கூவநகரின் சிறப்பை எல்லாம் கூற, நைமிசவனத்தில் இருந்த மயக்கத்தைப் போக்கும் நல்ல முனிவர்கள் மகிழ்ந்து கைகளைத் தலைமீது கூப்பிக் கூறலானார்கள்.

விளக்கம் : சூத முனிவர் கூவத்தின் சிறப்பை எல்லாம் கூற நைமிசவனத்து முனிவர் கூறலானார்கள்.

கருக்கம் இல் அறிவு-பேரறிவு **திருக்கிளர்**-தெய்வத்தை விளக்கும், செல்வம் விளங்குகின்ற. **கைஉச்சி கூப்பி**-கைகளைத்தலையில் உச்சி மீது குவித்து. **மால் இரிக்கும்**-மயக்கத்தைப் போக்கும். 1

412. "முன்னம்நீ 'தருக்க மாது'என மொழிந்தவள்
தன்னது தோற்றம்என்? தனிப்பொன் கூவமா
நன்னகர் இடைநட மாட வந்தவாறு
என்னகொல்? இயம்பு"என இசைத்தல் மேயினான்.

முனிவர் தருக்கமாது பற்றி வினவல்

தெளிவுரை : முன்பு நும்மால் "தருக்க மாது" என்று மொழியப்பட்டவளான உமையம்மையார் தோற்றத்துக்குக் காரணம் யாது? ஒப்பற்ற பொன்கூவமா நல்ல நகரத்திடையில் நடனம் ஆடவந்த விதம் யாது? கூறுக" என்று முனிவர் வினவினர். அப்போது சூத முனிவர் கூறலானார்.

விளக்கம் : **தருக்க மாது**-இறைவனுடன் வாதிட்ட மங்கையான உமையம்மை. **தனிப்பொன் கூவமாநன்னகர்**-ஒப்பற்ற பொன்னால் ஆன நல்ல கூவநகர். 2

413. பேர்அறங் களும்நிலை பெயரக் காமநோய்
ஆருதல் எனநிகழ் அகிலம் யாவையும்
கூர்இடர் மூழ்குபு குலைய மேலைநாள்
தாருகன் எனஒரு தகுவன் தோன்றினான்.

தாருகன் தோற்றம்

தெளிவுரை : அந்தத் தாருகன் என்ற அசுரனால் பெரிய அறங்களும் நிலைகுலையக் காமநோய் கொண்டு உலகம் இயங்கியது. மேல்நாளில் இத்தகைய உலகம் யாவையும் மிக்க துன்பத்துள் முழுகி அழியும்படி செய்த தாருகன் என்ற ஓர் அசுரன் தோன்றினான்.

விளக்கம் : பெயர-மாற. காமமே இன்பம் தருவது என்று உலகம் இயங்கியது. **மூழ்குபு**-முழுகி. **கூர்இடர்**-மிக்க துன்பம். **தகுவன்**-அசுரன். 3

414. சேண்தொடு தனதுஉடல் சிந்து செம்புனல்
காண்துளி முழுதும்தற்கு அடுத்து எழுந்திட
ஆண்தகை யோர்களால் அழிவு றாதுஉற
மாண்தகு தவத்தினால் வரம்படைத் துளான்.

தாருகன் பெற்ற வரம்

தெளிவுரை : அத்தாருகன் உயர்ந்து வானைத் தொடும் தனது உடல் சிந்தும் படியான சிவந்த இரத்தத் துளி ஒவ்வொன்றும் தன்னை ஒத்த அசுரர்களாய்த் தோன்றும்படியான வரத்தைத் தெய்வங்களால் பெற்றான். எத்தகைய வீரர்களாலும் அழியாத வரத்தையும் சிறந்த தவத்தால் பெற்றான்.

விளக்கம் : சேண்தொடு-உயர்ந்து மிகத்தொலைவான இடத்தையும் தொடும். **தனது உடல் சிந்து செம்புனல் காண்துளி முழுதும் தற்கடுத்து எழுந்திட**-அவனது உடலினின்று சிந்தும் இரத்தத் துளி ஒவ்வொன்றும் அவனைப் போன்ற ஒவ்வொரு அசுரராகத் தோன்றிட. **ஆண்டகையோர்களால் அழிவுறாது**-எத்தகைய வீரர்களாலும் அழியாது இருக்க. **மாண்டகு**-மாண்பு மிக்க. **வரம் படைத்துளான்**-வரத்தைப் பெற்று விளங்கினான். 4

415. எண்திசை அரையரை எழுபி லத்தினில்
விண்தலம் மிசையுறு வேந்தர் தங்களை
மண்டிதன் சேனைகா வலர் ளால்வயம்
கொண்டுஅனு தினமும்குற் றேவல்கொள்பவன்.

யாவரையும் ஏவல் கொள்ளல்

தெளிவுரை : அந்தத் தாருகன் எட்டுத்திக்குப் பாலகரையும் ஏழு பாதலத்திலும் வானத்திலும் உள்ள வேந்தர்களைப் போய்த் தன் சேனைக் காவலர்களாய்த் தன் வெற்றி கொண்டு, நாள்தோறும் தனக்குக் குற்றேவல் செய்யும்படி செய்தான்.

விளக்கம் : எண்டிசை யரையரை-எட்டுத்திக்குப்பாலகரை. **எழுபிலத்தினில்**-ஏழு பாதலத்திலும். **விண்டலமிசை**-வானவர் உலகிலும். **மண்டி**-வலியக்கொணர்ந்து. **தன்சேனைக் காவலர்களால்**-தன் படைக்குத் தலைவர்களாய். 5

416. தறுகண்வெஞ் சினக்கொடுந் தாருகன்திசை
உறுகரி தினந்தொறும் ஒரோஒன்று ஆகவே
குறுகிய தூதரால் கொணர்வித்து ஏறியோர்
மறுகுஎன உலகுஎலாம் பவனி வந்துளான்.

திக்குயானை மீது உலாவருதல்

தெளிவுரை : அஞ்சாமையுடைய கொடிய சினம் உடைய தாருகன் என்ற அசுரன் ஐராவதம் முதலிய எட்டுத் திக்குகளிலும் உள்ள யானைகள் நாள்தோறும் ஒவ்வொன்றாய்த் தன் தூதரால் கொண்டு வரும்படி செய்து அவற்றில் ஏறி உலகம் எல்லாம் உலா வந்தான்.

விளக்கம் : தறுகண்-அஞ்சாமை. **வெஞ்சினம்**-கொடியசினம். **கொடுந்தாருகன்**-கொடிய தாருகன் என்ற அசுரன். **திசையுறுகரி**-எட்டுத்திக்குளிலும் உள்ள ஐராவதம் முதலிய யானைகள். **ஒரோ ஒன்று**-ஒவ்வொன்றின் மேல். **மறுகுஎன**-உலாவைப் போல். **பவனிவந்தான்**-உலாவந்தான். 6

417. ஒள்ஒளி இரவிதேர்க் கிள்ளை ஒத்தஏழ்
கிள்ளைகள் மீதும் ஒண் கிண்கி ணிச்சரண்
பிள்ளைஏழ் தினத்தினும் ஏற்றிப் பேரெழில்
ஞெள்ளலின் உலாவரு வித்து நீக்குவான்.

உலா வரச் செய்தல்

தெளிவுரை : மிக்க ஒளியுடைய கதிரவனின் தேரில் பூட்டப்படுகின்ற ஏழு குதிரைகள் போன்ற குதிரைகள் மீது ஒளிபொருந்திய கிண்கிணி என்ற அணியை அணிந்த அடியையுடைய பிள்ளைகளை வாரத்தில் உள்ள ஏழு நாளிலும் ஏற்றி மிக்க அழகுடனும் ஆரவாரத்துடனும் வீதியில் பவனி வரும்படி செய்து பின் அக்குதிரைகளை விலக்குவான்.

விளக்கம் : ஒள் ஒளி-மிக்க ஒளி. **இரவிதேர்க்கிள்ளை**-கதிரவனின் தேரில் பூட்டப்படும் குதிரை. **கிள்ளை**-குதிரை. **ஒத்த**-போன்ற. **ஒண்கிண்கிணிச்சரண்**-ஒளியுடைய கிண்கிணி என்ற அணியை அணிந்த காலை. **ஏழ்தினம்**-வாரத்தின் ஏழு நாட்கள். **ஞெள்ளல்**-வீதி. 7

418. கொம்எனப் புறவடி கொண்டொர் ஏற்றினான்
மைம்மலி திரைக்கடல்வறப்ப எற்றுவான்;
செம்மக மேருவி னொடு சிற்சிலம்பு
அம்மனை எனஎடுத்து ஆடும் ஆற்றலான்.

தாருகனின் ஆற்றல்

தெளிவுரை : வேகமாகத் தன் கால் புறவடி கொண்டு ஓர் வீச்சால்-அடியால்-கருமைமிக்க அலைகடல் வற்றிபோகச் செய்வான். மேருமலையுடன் சில சிறு மலைகளையும் அம்மனைக் காய் போல் எடுத்து வீசி ஆடும் ஆற்றல் உடையவனாய் விளங்கினான்.

விளக்கம் : கொம்மென-ஒலிக்குறிப்பு. **ஓர்எற்ற**-ஓர் உதை; ஓர் அடி. **மைம்மலி**-கருமைமிக்க. **வறப்ப**-நீர் வற்றுமாறு. **எற்றுவான்**-அடிப்பான். **அம்மனை என**-அம்மானைக் காய்போல். 8

419. வான்நிதி நந்துதா மரைதன் வாவியின்
பால்நிகழ் வளையொடு பதுமம் ஆகவே
ஆண் நிரை தனிப்பசு வாகத் தேனுவைங்
காநகர் மலர்ப்பொழில் ஆகக் கண்டுளான்.

செல்வச் செருக்கு

தெளிவுரை : தேவர் உலகில் உள்ள செல்வமான சங்கநிதி, பதுமநிதி ஆகியவற்றைத் தன் நீர்நிலையில் தோன்றும் சங்கோடு தாமரைமலராக எண்ணுவான். தன் பசுக்கூட்டத்துள் ஒன்றாகக் காமதேனுவை எண்ணிக் கற்பகச் சோலையைத் தன் சோலையாகக் கருதுவான்.

விளக்கம் : தேவர் உலகில் உள்ள சங்கநிதி பதுமநிதி ஆகியவற்றைத் தன் நீர்நிலையில் தோன்றும் சங்குபோலவும் தாமரைபோலவும் தாருகன் எண்ணினான். அதாவது அவற்றை அவன் பொருட்படுத்தவில்லை. காமதேனுவைத் தன் பசுக்கூட்டத்துள் ஒன்றாய் இருக்கச் செய்தான். தேவலோகச் சோலை தன் சோலை போல் அவனுக்கு விளங்கியது.

வான்நிதி-தேவலோகத்துச் செல்வமான. **நந்து**-சங்கநிதி. **தாமரை**-பதுமநிதி. **ஆன்நிரை**-பசுக்கூட்டம். **வாவி**-நீர்நிலை. **வளை**-சங்கு. **பதுமம்**-தாமரைமலர். **தேனு**-காமதேனு. **ஐங்கா நகர்**-கற்பகம் முதலிய ஐந்து மலர்ச்சோலைகள் பொருந்திய அமராவதி. 9

420. வித்தக விடையினோன் வில்லின் பொன்கவர்ந்து
அத்தனு வளைவுற அசைத்த நாரியின்
மெத்தொளி மணிகொளா வியப்ப ஆக்கிய
புத்தணி அவயவம் புனைந்த மாட்சியான்.

தாருகன் அணி

தெளிவுரை : அவன், வியக்கத்தக்க காளை ஊர்தியையுடைய சிவபெருமான் மேருவாகிய வில்லினின்று பொன்னை எடுத்து, அந்த வில்லின் வளையக் கட்டப்பட்ட ஆதிசேடன் என்ற பாம்பின் மிக்க ஒளியுடைய மணியைக் கொண்டு வியக்கும்படி செய்யப்பட்ட புதிய அணிகளை உடல் உறுப்புகளில் அணிந்து கொண்டுள்ள சிறப்புடையவன்.

விளக்கம் : சிவபெருமான் வில்லான மேருமலையினின்று எடுத்த பொன்னாலும் ஆதிசேடன் தலையினின்று எடுக்கப்பட்ட மணியாலும் ஆர அணியை அணிந்தவன் தாருகன் என்க.

விடையினோன்-காளையூர்தியையுடைய சிவபெருமான். **வில்லின் பொன் கவர்ந்து**-வில்லான மேருமலையினின்று பொன்னை எடுத்து. மேருமலை பொன்மயமானது. **அத்தனு**-அந்த வில். **அசைத்த**-கட்டிய. **நாரியின்**-கயிறான ஆதிசேடனின். **மணிகொளா**-மணியைக் கொண்டு. **புத்தணி**-புதிய அணிகலன். **மாட்சியான்**-சிறப்பை யுடையவன். 10

421. மணங்கமழ் குழல்அர மகளிர்ப் பற்றிவந்து
இணங்குறு தகுவியர்க்கு ஏவல் செய்வியா
உணங்குறு சிறைபுரிந்து உடன்று அணக்கியே
அணங்கியர் எனும்பெயர் அவன்இட் டான்அரோ.

அணங்கியர் என்பதன் பெயர்க்காரணம்

தெளிவுரை : நறுமணம் கமழும் கூந்தலையுடைய தேவ மங்கையரைப் பிடித்து வந்து அசுரமகளிர்க்கு ஏவலைச் செய்யும்படி செய்து. வருந்துகின்ற சிறையிலிட்டு வருந்திய காரணத்தால், அணங்கியர் என்னும் பெயரை அவர்க்கு அவன் இட்டனன்.

விளக்கம் : குழல்-கூந்தல். **அரமகளிர்**-தேவ மங்கையர். **தகுவியர்க்கு**-அசுரமகளிர்க்கு. **செய்வியா**-செய்வித்து. **உணங்குறு சிறை**-வருந்துகின்ற சிறை. **அணக்கி**-வருத்தி. **அரோ**-அசை. 11

422. மேயதன் திகழ்அவை விளங்குஅ ராஇறை
மாயிருந் தலைகளே வனைந்த தம்பமா
மீஇலங்கு ஒளிமணி இருள்வி ழுங்குறு
மாயிருஞ் சுடர்களாய் அமர வைத்துளான்.

தாருகனின் அவை

தெளிவுரை : பொருந்திய விளங்கும் தன் அவையானது சிறந்து விளங்கப் பாம்பு அரசனான ஆதிசேடனின் மிகப் பெரிய தலைகளே பொருத்தி வைக்கப்பட்ட தூணாக, அந்த ஆதிசேடனின் தலையில் விளங்கும் மணியே இருளைப் போக்குகின்ற மிகப்பெரிய விளக்குகளாக அமையும்படி வைத்துள்ளான் தாருகன்.

விளக்கம் : தாருகனின் அவையில் ஆதிசேடன் தலைகளே தூண்கள் ஆதிசேடனின் தலையில் உள்ள மணியே விளக்குகள் இப்படி அவனது அவை அமைந்திருந்தது.

மேய-பொருந்திய. **திகழ்அவை**-விளங்கும் சபை. **அரா இறை**-பாம்புகளுக்கு மன்னனான ஆதிசேடன். **வனைந்த தம்பமா**-அமைக்கப்பட்ட தூணாக. **மீ இலங்கு ஒளிமணி**-ஆதிசேடன் தலையில் உள்ள ஒளியுடைய மணி. **மாஇருஞ்சுடர்களா**-மிகப்பெரிய விளக்குகளாக. 12

423. ஒல்லையில் பொழுது உணர்ந்து ஒலக் கத்துஉறும்
எல்லையில் புகுந்திடாது இருந்த தேவரைக்
கொல்உலைக் கனல்வழிக் கொடிய தூதரால்
வல்லியிட்டு அருஞ்சிறைப் படுத்த வன்மையான்.

தேவரைத் தண்டித்தல்

தெளிவுரை : தாருகன், பொழுதையுணர்ந்து விரைவாகக் கொலு மண்டபத்தில் புகும்போது அந்த அவைக்கு அப்போது வாராது இருந்த தேவரைக் கொல்லன் உலைக்களத்தில் உள்ள தீயைப்போன்ற விழியுடைய கொடிய தூதரால் விலங்கையிட்டு அரிய சிறைக்குள் இடுகின்ற வன்மை யுடையவனாய் இருந்தான்.

விளக்கம் : தாருகன் அவைக்குச் செல்லும் போது அங்கு அவைக்கு வந்திராத தேவரைச் சிறையிலிட்டுத் தண்டிப்பான்.

ஒல்லை-விரைவு. **ஒலக்கத்துறு**-ஒலக்கத்து+உறு, அவையை அடையும். **எல்லையில்**-நேரத்தில். **புகுந்திடாதிருந்த தேவரை**-வாராத தேவரை. **கொல்உலைக் கனல் விழி**-கொல்லனின் உலைக்களத்தில் உள்ள தீயைப் போன்ற கண். **வல்லியிட்டு**-விலங்கையிட்டு. 13

424. கனவினும் அவன்தனைக் காணின் இந்திரன்
மனம்நடு நடுங்கிவாய் குழறி வல்லையின்
நனவினை அடைந்துபின் நடுங்கு நெஞ்சகத்து
இனைவுறல் ஒருபகல் எலாம்மொ ழிந்திடான்.

இந்திரன் நடுங்குதல்

தெளிவுரை : இந்திரன் அத்தாருகனைக் கனவிலே காண்பானாயினும் உள்ளம் நடுங்கி வாய் குழறிடுவான். பின்விரைவாக நனவை அடைந்து நடுங்கும் மனம் வருந்துதலை ஒரு நாள் எல்லாம் ஒழியான்.

விளக்கம் : இந்திரன் தாருகனைக் கனவில் கண்டாலும் மனம் நடுங்குவான். பின் விழித்து ஒரு நாள் எல்லாம் துன்பம் அடைவான். **அவன்தனை**-அத்தாருகனை. **வல்லையின்**-விரைவாக. **இனைவுறல்**-வருந்துதல். **ஒருபகல்**-ஒருநாள். 14

425. ஒருங்குஉல கலங்களின் உயிர்க ளுக்குஎலாம்
வருங்கொடு நோய்என வரும்அ வன்தனால்
அருங்கட வுளர்அருச் சனைஅ றங்கள்வான்
தரும்கலை நெறிமகம் தவம்அ கன்றதே.

வழிபாடு அறங்கள் முதலியன அழிந்தன

தெளிவுரை : இவ்வுலகத்தில் உள்ள உயிர்களுக்கு எல்லாம் ஒருங்கே உண்டாகும் கொடிய நோயைப் போல் தோன்றிய அவனால் அரிய தெய்வங்களுக்கு வழிபாடு, அறங்கள், மோட்சத்தைத் தரும் அரிய கலைநெறி, வேள்வி, தவம் ஆகியவை எல்லாம் அகன்றன.

விளக்கம் : கொடுநோய்-கொடிய நோய். **அருங்கடவுளர்**-அரிய தெய்வங்கள். **அருச்சனை**-வழிபாடு. **வான்தரும்கலை**-முத்தியை அளிக்கும் கலை. **மகம்**-யாகம். 15

426. அக்கொடுந் தயித்தியன் ஆணை யிற்படா
உக்குநெஞ்சு இடர்ப்படும் காலத்து ஓர்பகல்
மிக்கவிண் ணவர்அரி, விரிஞ்சன், இந்திரன்
தொக்குஒருங்கு ஒருபுடை துயரொடு ஈண்டினார்.

நான்முகன், திருமால், இந்திரன் முதலியோர் கூடுதல்

தெளிவுரை : அந்தக் கொடிய அசுரரின் ஆணைக்கு உட்பட்டு நெகிழ்ந்து மனம் இடர்ப்படும் காலத்தில் ஒருநாள். மிக்க தேவர், திருமால், நான்முகன், இந்திரன் ஆகியோர் ஒன்றாகக் துயரத்துடன் கூடினார்கள்.

விளக்கம் : தயித்தியர்-அசுரர். **படா**-பட்டு; அகப்பட்டு. **உக்கு**-நெகிழ்ந்து. **ஓர்பகல்**-ஒருநாள். **விண்ணவர்**-தேவர். **அரி**-திருமால். **விரிஞ்சன்**-நான்முகன். **ஒருபுடை**-ஒருபக்கத்தில். **ஈண்டினார்**-கூடினார். 16

427. தங்கள்வெந் துயரும்அத் தகுவன் ஆவியும்
அங்குஒருங்கு அழியும்நாள் அடுத்தது ஆதலால்
சங்கரன் தனைஇனிச் சரண்என்று எய்திடின்
மங்கும்நம் துயர்என மனம்து ணிந்தனர்.

திருமால் முதலியவர் எண்ணம்

தெளிவுரை : தேவர்களின் கொடிய துயரமும் தாருகன் என்ற அசுரனின் அந்த ஆவியும் ஒன்றாக அழியும் நாள் வந்து கூடியது. ஆதலால் சிவபெருமானை இனி நாம் அடைக்கலமாக அடைந்தால் நம் துன்பம் யாவும் மடியும் என்று மனத்தில் துணிவு கொண்டனர்.

விளக்கம் : அத்தகுவன்-அந்த அசுரன்; தாருகன். **அடுத்தது**-வந்து பொருந்தியது. **சங்கரன்**-சிவபெருமான்; யாவருக்கும் மங்கலத்தைச் செய்பவன் என்பது பெயர்க்காரணம். **மங்கும் நம் துயரம்**-நம் துன்பம் குறையும். 17

428. துணிந்தவர் கயிலையைத் தொழுதுஅங்கு எய்துபு
தணிந்தமெய்ம் மனனுடைத் தவத்தவர் சென்னிமீது
அணிந்திடு நந்திதாள் அரண்அ டைந்து நேர்
பணிந்தனர் இனையன பகர்தல் மேயினார்.

நந்தியை அடைதல்

தெளிவுரை : இவ்வாறு மனத்தால் துணிந்த நான்முகன் முதலியவர் கயிலை மலையைத் தொழுது அங்கு அடைந்து துயரம் சற்றுக் குறைந்த மெய்மை பொருந்திய மனம் உடைய தவத்தவர், தலைமீது அணியும் நந்திதேவனிடம் போய்ச்சேர்ந்து நேரில் வணங்கிப் பின்வருமாறு கூறலானார்.

விளக்கம் : எய்துபு-அடைந்து. **சென்னிமீது**-தலையின் மீது. **நந்திதாள்**-நந்திதேவரின் அடி. **இனையன**-இத்தகையன. **பகர்தல் மேயினார்**-கூறத்தொடங்கினார். 18

429. 'தடுத்தசெங் கோலுடைத் தாருகன்தனால்
அடுத்தவெந் துயர்உரைத்து அகற்ற வந்தனம்
படைத்துஎமை அளித்திடும் பராப ரன்முனம்
விடுத்துஅருள் ஐயநீ!' என்று வேண்டினார்.

தேவர்களின் வேண்டுகோள்

தெளிவுரை : கொடுங்கோன்மை உடைய தாருகனால் உண்டான கொடிய துன்பத்தைச் சிவபெருமானிடம் கூறிப் போக்கிக் கொள்ள வந்துள்ளோம். ஐயனே! நீ எங்களைப் படைத்துக் காத்திடும் மேலான சிவபெருமானின் திருமுன்பு செல்ல எங்களை அனுமதிப்பாயாக என்று வேண்டிக் கொண்டனர்.

விளக்கம் : தடுத்த செங்கோல் உடைத் தாருகன்-கொடுங்கோன்மையுடைய தாருகன். **வெந்துயர்**-கொடிய துன்பம். **அகற்ற**-(எம் துன்பத்தைப்) போக்கிக் கொள்ள. **படைத்து எமை அளித்திடும்**-எம்மைப் படைத்துக் காக்கும். **பராபரன்முனம்**-சிவபெருமான் திருமுன்பு. 19

430. தன்னைநேர் கின்றவன் சைவ தேசிகன்
என்னைஆ ளுடையநந் தீசன் 'சென்ம்' என
மின்உலாம் சடையினோன் வீற்றி ருந்துழித்
துன்னுவா னவர்எலாம் தொழுது போயினார்.

நந்தியை வணங்கி நீங்குதல்

தெளிவுரை : தன்னை ஒத்தவன், சைவ தேசிகன், என்னை ஆளுடைய நந்தியம் பெருமான் நான்முகன் முதலியவரைப் பார்த்து 'செல்லுங்கள்' என்றார். மின்னல் போல் ஒளிவீசும் சடையையுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் இடத்தில் அங்கு வந்து நெருங்கிய தேவர்கள் எல்லாம் நந்தியை வணங்கி விட்டுப் போயினர்.

விளக்கம் : நந்தீசன்-நந்திதேவன். **சென்மென**-செல்வீர் என்று. **மின் உலாம் சடையினோன்**-மின்னலை ஒத்த சடையுடைவன்.20

431. வருணமா மணிஒளிர் மண்டபத்திடைத்
தருணவா ரணப்பகைத் தவிசின் மீமிசை
அருணகோ டிகள்திரண்டு அமர்ந்தது என்னவாழ்
கருணைவா ரிதிதனைக் கண்டுஇ றைஞ்சினார்.

நான்முகன் முதலியவர் சிவபெருமான் இருப்பிடத்தை அடைதல்

தெளிவுரை : நல்ல நிறம் பொருந்திய சிறந்த மணிகள் விளங்கும் மண்டபத்தில் இளமையுடைய யானையின் பகையான சிங்க ஆதனத்தின் மீது, கதிரவர் கோடிகள் திரண்டு பொருந்தியதைப் போல் விளங்கும் அருள் கடலினைக் கண்டு நான்முகன் முதலியவர் வணங்கினர்.

விளக்கம்:வருணம்-நிறம். **தருணம்**-இளமை. **வாரணப் பகைத்தவிசு**-யானையின் பகையான சிங்காதனம். **மீமிசை**-மீது; ஒருபொருட்பன் மொழி. **அருணகோடிகள் திரண்டு அமர்ந்த**-கோடி கதிரவர் கூடி அமர்ந்த **கருணை வாரி**-அருட்கடல், சிவபெருமான். 21

432. விழிப்புனல் துளிப்பமெய் விதிர்ப்ப, வாள்எரி
உழிப்படும் அரக்கின் நெஞ்சு உருகி, வெந்துயர்ச்
சுழிப்படும் எனக்கருள் சுரக்கும் ஈசனை
மொழிப்பயன் பெறத்திரு முன்நின்று ஏத்துவார்.

தேவர் சிவபெருமானைத் துதித்தல்

தெளிவுரை : தேவர்கள். தம் கண்களினின்று நீர் சிந்த, உடல் புளகிக்க, ஒளியுடைய எரியில் பட்ட அரக்கைப்போன்று மனம் உருகிக் கொடிய துன்பத்துள்பட்டுள்ள எனக்கு அருள் செய்யும் ஈசனை, மொழியின் பயனைப் பெற இறைவனின் திருமுன்பு நின்று துதிக்கலானார்.

விளக்கம் : விழிப்புனல்-கண்ணீர். **துளிப்ப**-துளிக்க. **மெய் விதிர்ப்ப**-உடல் புளகிக்க. **வாள் எரியுழிப்படும் அரக்கின்**-ஒளியுடைய தீயில் இட்ட அரக்கினைப் போல. **வெந்துயர்**-கொடியதுன்பம். **திருமுன்**-திருமுன்பு; சந்நிதி முன்பு. **ஏத்துவார்**-துதிக்கலாயினார். 22

வேறு

433. வானா திகளாய் நிகழ்வாய், சரணம்,
மறைமா முடியின் பொருளே, சரணம்
ஊன்ஆர் உயிரே, சரணம், சரணம்,
உணர்வுக்கு உணர்வே, சரணம், சரணம்,
தேன்ஆர் மொழிபங் கினனே, சரணம்
சிவசங் கரனே, சரணம், சரணம்,
ஆனா அமுதே, சரணம், சரணம்,
அருள்ஆ கரனே, சரணம், சரணம்.

தேவர்கள் துதி

தெளிவுரை : வான் முதலிய ஐம்பூதங்களாய் உள்ளவனே, அடைக்கலம்! வேதங்களின் முடிந்த பொருளானவனே, அடைக்கலம்! உடம்புகளின் உயிராய் உள்ளவனே, அடைக்கலம்! வணங்குகிறோம். உணர்வுக்கு உணர்வாக விளங்குபவனே அடைக்கலம், அடைக்கலம். தேன் போன்ற சொல்லையுடையவனே அடைக்கலம்! சிவசங்கரனே அடைக்கலம், அடைக்கலம். அரிய அமுதமே அடைக்கலம், அடைக்கலம். அருளுக்கு இருப்பிட மானவனே அடைக்கலம், அடைக்கலம்.

விளக்கம் : வான் ஆதிகளாய் நிகழ்வாய்-வானம் முதலிய ஐந்து பூதங்களாய் விளங்குபவனே. **சரணம்**-அடைக்கலம். **மறைமாமுடி**-வேதத்தின் முடிவு. **ஊன்**-உடல். **தேனார் மொழிபங்கினனே**-தேன் போன்ற சொல்லைப் பேசும் உமையம்மையை ஒரு பங்கில் கொண்டவனே. **அருளாகரன்**-அருளுக்கு இருப்பிடமானவன்.23

434. மருவே, மலரே, சரணம், சரணம்,
மணியே, ஒளியே, சரணம், சரணம்;
திருவே, பொருளே, சரணம், சரணம்;
தேனே, அமுதே, சரணம், சரணம்;
இரவே, பகலே, சரணம், சரணம்;
எமைஆ ளுடையாய், சரணம், சரணம்;
மருவே, உருவே, சரணம், சரணம்;
அருள்ஆ கரனே சரணம், சரணம்;

தேவர்கள் துதித்தல் (தொடர்ச்சி)

தெளிவுரை : மலராய் விளங்குப வனே, மணமாய் விளங்குபவனே, அடைக்கலம், அடைக்கலம்! மணியாய் விளங்குபவனே, ஒளியாய் விளங்குபவனே! அடைக்கலம், அடைக்கலம். செல்வமானவனே, சிறந்த பொருளானவனே, அடைக்கலம், அடைக்கலம். தேனானவனே, அமுதானவனே அடைக்கலம், அடைக்கலம். இரவாய்த் திகழ்பவனே, பகலாய்த் திகழ்பவனே, அடைக்கலம, அடைக்கலம். எங்களை அடிமையாய்க் கொண்டவனே, அடைக்கலம், அடைக்கலம். அருவமாய்த் திகழ்பவனே, உருவமாய்த் திகழ்பவனே, அடைக்கலம், அடைக்கலம். அருளின் இருப்பிடமானவனே, அடைக்கலம், அடைக்கலம்.

விளக்கம் : மரு-மணம். **திரு**-செல்வம். **எம்மை ஆள் உடையாய்**-எம்மை அடிமையாக உடையவனே. **அருவம்**-உருவம் அற்ற தன்மை. **அருள் ஆகரன்**-அருளுக்கு இருப்பிடமானவன். 24

வேறு

435. என்றிவை புகன்று போற்றி இணைமலர்க் கரம்கு வித்து
நின்றவர் தமைமென் கொன்றை நெடுஞ்சடைக் கடவுள் நோக்கிப்
பொன்திகழ் மரைதீப் பட்டபோல் முகம் புலர்ந்தஉங்கட்கு
ஒன்றிநெஞ்சு அகன்றி டாததுயரமேது உரைத்திர் என்றான்.

உங்கள் துன்பம் யாது? உரைப்பீர்!

தெளிவுரை : என்று இவற்றைக் கூறிப் போற்றி இரண்டு தாமரை மலர் போன்ற கைகளைக் குவித்து நின்ற தேவர்களை, மென்மையான கொன்றை மலர் மாலை சூடிய நீண்ட சடையை உடைய சிவபெருமான் பார்த்துப் 'பொன் போன்ற தாமரை மலர் தீயில் பட்டது போல் முகம் வாடிய உங்கட்கு ஒன்றி மனத்தை விட்டு அகலாத துன்பமானது எது? உரைப்பீர்!,' என்றார்.

விளக்கம் : புகன்று-கூறி. **இணை மலர்க்கரம்**-இரண்டு தாமரைமலர் போன்ற கை. **நின்றவர்தமை**-நின்ற தேவர்களை. **பொன்திகழ் மரை தீப்பட்ட போல்**-பொன்போன்று விளங்கும் தாமரை மலர் தீயில் பட்டது போல். **உரைத்திர்**-கூறுவீராக.

தம்மை வணங்கி நின்ற தேவரைப் பார்த்து "உங்கட்கு நேர்ந்த துன்பம் யாது?" என்று சிவபெருமான் வினவினார். 25

436. பெருந்தகை இயம்ப, மாயோன் பெயர்வின்றிப் பொருள்கள்தோறும்
இருந்துஉடல் இயக்குகின்ற எந்தைநீ எங்கள் நெஞ்சின்
அருந்துயர் அறியாய் போல வினவியது அடியேம் உய்யப்
பொருந்திய கருணை என்று போற்றிநின்று உரைப்ப தானான்.

திருமால் கூறுதல்

சிவபெருமான் அவ்வாறு வினவியதும், திருமால் அசைவின்றி அடக்கமாக நின்று பொருள்கள்தோறும் இருந்து அவற்றை இயக்கும் எம் தந்தையே! நீ எங்கள் நெஞ்சில் உள்ள அரிய துன்பத்தை அறியாய் போல் வினவினீர். இஃது அடியேம் உய்யத்தாங்கள் கொண்ட கருணையே ஆகும்," என்று போற்றி நின்று கூறுலானான். 26

437. தாருகன் என்ன வெய்ய தயித்தியன் ஒருவன் தோன்றிப்
பாரிடை முன்னை வேதம் பகர்மக மறத்தின் பேதம்
சீரிய தங்கள் தானம் சிதைந்தன துன்பம் எய்தி
ஆர்உயிர் தரித்தி ருந்தார் அமரர்ஆ கையினால் விண்ணோர்.

தேவர் துன்பத்துடன் வாழ்ந்தனர்

தெளிவுரை : தாருகன் என்ற கொடிய அசுரன் ஒருவன் தோன்றியதனால் உலகத்தில் பழைய வேதம் கூறும் வேள்வி, பலவகை அறங்கள், சிறந்த தவங்கள், தானம் ஆகியவை சிதைந்தன. தேவர் இறவாத இயல்பினர் ஆதலால் துன்பத்தை அடைந்தும் அரிய உயிரைத் தரிவத்தவராய் விளங்கினார்.

விளக்கம் : வெய்ய தயித்தியன்-கொடிய அசுரன். **தோன்றி**-தோன்றியதால். **பாரிடை**-உலகத்தில். **வேதம்பகர்மகம்**- வேதத்தில் கூறும்படியான வேள்வி. **சீரிய**-சிறந்த. **தானம்**-கொடை. **அறத்தின் போதும்**-அறத்தின் வேறுபாடுகள். **அமரர் ஆகையினால் உயிர் தரித்திருந்தார்**-தேவர்கள் அமிழ்தத்தை உண்டவர். அதனால் இறவாத தன்மை உடையவர். எனவே துன்பத்தைத் தாங்கியபடி தேவர் இருந்தனர் என்றார். 27

438. சற்றும்உள் கருணை கொள்ளாத் தாருகன் இழைத்த தீமை
இற்றுஎனக் கிளக்க எம்மால் முடிவுறாது எம்பிரானே!
மற்றுஇனிப் புகல்வது என்கொல் வலிகெழும் அவன்தனக்குஉன்
சிற்றடிக்கு ஏவல் செய்யும் செயல்எனத் தினமும் செய்தோம்.

தாருகன் செய்த தீமை சொல்ல இயலாது

தெளிவுரை : எம்பிரானே! சிறிதும் மனத்துள் கருணை கொள்ளாத தாருகன் செய்த தீமை இன்ன தன்மையுடையது என்று சொல்ல எம்மால் முடியாது. வேறு என்ன சொல்வது? வலிமையுடைய அந்தத் தாருகனுக்கு நின் திருவடிக்குச் செய்யும் தொண்டுச் செயலைப் போன்று நாள்தோறும் செயலைச் செய்தோம்.

விளக்கம் : இழைத்த-செய்த. **இற்றுஎன**-இன்ன தன்மையுடையது என்று. **கிளக்க**-கூற. **புகல்வது என்கொல்**-யாம் கூற என்ன இருக்கிறது. **வலிகெழு**-வன்மையுடைய. **ஏவல் செய்யும்**-பணியைச் செய்யும் 28

439. அந்தவேல் அவுணன் தீமைஆற்றரிது எங்கட்கு உன்றன்
கந்தவா ரிசப்பொன் தாளே காப்பென அபயம் புக்கேம்,
எந்தைநீ, எம்மைத் துன்பக் கடலினின்று எடுத்து ஆட்கோடி!
தந்தையே அன்றி வேறார் தனயர்தம் இன்னல் தீர்ப்பார்?

எம்மை ஆட்கொள்ள வேண்டும்

தெளிவுரை : அந்த வேலையுடைய தாருகன் என்ற அசுரன் செய்த தீமையைப் பொறுக்க இயலாது. எங்கட்கு உம்மணம் பொருந்திய தாமரைப் பொன் திருவடியே காப்பாகும் என்று அடைக்கலம் ஆனோம். எம் தந்தையே, எம்மைத் துன்பக்கடலினின்று எடுத்தாட்கொள்வாயாக! மக்களின் துன்பத்தைத் தந்தையே அல்லாமல் வேறு எவர் போக்குவார்?

விளக்கம் : வேல் அவுணன்-வேலையுடைய அசுரன். **ஆற்றரிது**-ஆற்றுதல் அரிது. **அபயம் புக்கேம்**-அடைக்கலமாக அடைந்தோம். **எடுத்தாட்கோடி**-எடுத்தாட்கொள்வாய். **கோடி**-கொள்வாய். **தனயர்**-மக்கள். **தீர்ப்பார்**-போக்குவார். 29

440. அச்சுதன் எனும்என் நாமத்து அமரர்என் சுரர்கள் நாமத்து
இச்சகம் அறிய நின்ற முதல்எழுத்து இகவாது ஒன்ற
நச்சினை மிடற்று அடக்கும் நாத, அந்நஞ்சின் தீயன்
கைச் செமத் தினம்ஒ றுக்கும் கடுந்திறல் தாரு கன்தான்.

436. பெருந்தகை இயம்ப, மாயோன் பெயர்வின்றிப் பொருள்கள்தோறும்
இருந்துஉடல் இயக்குகின்ற எந்தைநீ எங்கள் நெஞ்சின்
அருந்துயர் அறியாய் போல வினவியது அடியேம் உய்யப்
பொருந்திய கருணை என்று போற்றிநின்று உரைப்ப தானான்.

திருமால் கூறுதல்

சிவபெருமான் அவ்வாறு வினவியதும், திருமால் அசைவின்றி அடக்கமாக நின்று பொருள்கள்தோறும் இருந்து அவற்றை இயக்கும் எம் தந்தையே! நீ எங்கள் நெஞ்சில் உள்ள அரிய துன்பத்தை அறியாய் போல் வினவினீர். இஃது அடியேம் உய்யத்தாங்கள் கொண்ட கருணையே ஆகும்," என்று போற்றி நின்று கூறுலானான். 26

437. தாருகன் என்ன வெய்ய தயித்தியன் ஒருவன் தோன்றிப்
பாரிடை முன்னை வேதம் பகர்மக மறத்தின் பேதம்
சீரிய தங்கள் தானம் சிதைந்தன துன்பம் எய்தி
ஆர்உயிர் தரித்தி ருந்தார் அமரர்ஆ கையினால் விண்ணோர்.

தேவர் துன்பத்துடன் வாழ்ந்தனர்

தெளிவுரை : தாருகன் என்ற கொடிய அசுரன் ஒருவன் தோன்றியதனால் உலகத்தில் பழைய வேதம் கூறும் வேள்வி, பலவகை அறங்கள், சிறந்த தவங்கள், தானம் ஆகியவை சிதைந்தன. தேவர் இறவாத இயல்பினர் ஆதலால் துன்பத்தை அடைந்தும் அரிய உயிரைத் தரிவத்தவராய் விளங்கினார்.

விளக்கம் : வெய்ய தயித்தியன்-கொடிய அசுரன். **தோன்றி**-தோன்றியதால். **பாரிடை**-உலகத்தில். **வேதம்பகர்மகம்**- வேதத்தில் கூறும்படியான வேள்வி. **சீரிய**-சிறந்த. **தானம்**-கொடை. **அறத்தின் போதும்**-அறத்தின் வேறுபாடுகள். **அமரர் ஆகையினால் உயிர் தரித்திருந்தார்**-தேவர்கள் அமிழ்தத்தை உண்டவர். அதனால் இறவாத தன்மை உடையவர். எனவே துன்பத்தைத் தாங்கியபடி தேவர் இருந்தனர் என்றார். 27

438. சற்றும்உள் கருணை கொள்ளாத் தாருகன் இழைத்த தீமை
இற்றுஎனக் கிளக்க எம்மால் முடிவுறாது எம்பிரானே!
மற்றுஇனிப் புகல்வது என்கொல் வலிகெழும் அவன்தனக்குஉன்
சிற்றடிக்கு ஏவல் செய்யும் செயல்எனத் தினமும் செய்தோம்.

தாருகன் செய்த தீமை சொல்ல இயலாது

தெளிவுரை : எம்பிரானே! சிறிதும் மனத்துள் கருணை கொள்ளாத தாருகன் செய்த தீமை இன்ன தன்மையுடையது என்று சொல்ல எம்மால் முடியாது. வேறு என்ன சொல்வது? வலிமையுடைய அந்தத் தாருகனுக்கு நின் திருவடிக்குச் செய்யும் தொண்டுச் செயலைப் போன்று நாள்தோறும் செயலைச் செய்தோம்.

விளக்கம் : இழைத்த-செய்த. **இற்றுஎன**-இன்ன தன்மையுடையது என்று. **கிளக்க**-கூற. **புகல்வது என்கொல்**-யாம் கூற என்ன இருக்கிறது. **வலிகெழு**-வன்மையுடைய. **ஏவல் செய்யும்**-பணியைச் செய்யும் 28

439. அந்தவேல் அவுணன் தீமைஆற்றரிது எங்கட்கு உன்றன்
கந்தவா ரிசப்பொன் தாளே காப்பென அபயம் புக்கேம்,
எந்தைநீ, எம்மைத் துன்பக் கடலினின்று எடுத்து ஆட்கோடி!
தந்தையே அன்றி வேறார் தனயர்தம் இன்னல் தீர்ப்பார்?

எம்மை ஆட்கொள்ள வேண்டும்

தெளிவுரை : அந்த வேலையுடைய தாருகன் என்ற அசுரன் செய்த தீமையைப் பொறுக்க இயலாது. எங்கட்கு உம்மணம் பொருந்திய தாமரைப் பொன் திருவடியே காப்பாகும் என்று அடைக்கலம் ஆனோம். எம் தந்தையே, எம்மைத் துன்பக்கடலினின்று எடுத்தாட்கொள்வாயாக! மக்களின் துன்பத்தைத் தந்தையே அல்லாமல் வேறு எவர் போக்குவார்?

விளக்கம் : வேல் அவுணன்-வேலையுடைய அசுரன். **ஆற்றரிது**-ஆற்றுதல் அரிது. **அபயம் புக்கேம்**-அடைக்கலமாக அடைந்தோம். **எடுத்தாட்கோடி**-எடுத்தாட்கொள்வாய். **கோடி**-கொள்வாய். **தனயர்**-மக்கள். **தீர்ப்பார்**-போக்குவார். 29

440. அச்சுதன் எனும்என் நாமத்து அமரர்என் சுரர்கள் நாமத்து
இச்சகம் அறிய நின்ற முதல்எழுத்து இகவாது ஒன்ற
நச்சினை மிடற்று அடக்கும் நாத, அந்நஞ்சின் தீயன்
கைச் செமத் தினம்ஒ றுக்கும் கடுந்திறல் தாரு கன்தான்.

தாருகன் நாள்தோறும் எம்மை வருத்திகிறான்.

தெளிவுரை : அச்சுதன் என்னும் பெயரிலும் அமரர் என்ற பெயரிலும் இவ்வுலகம் அறிய நின்ற முதல் எழுத்தான 'அ' நீங்காது விளங்க. நஞ்சைக் கழுத்தில் அடக்கிக் கொண்ட நாதனே! விடத்தை விடக் கொடியவனான தாருகன் வெறுத்து எம்மை நாள்தோறும் துன்புறுத்தும் கொடிய ஆற்றல் உள்ளவானாக உள்ளான்.

விளக்கம் : அச்சுதன் எனும் நாமத்து அமரர் என்ற சுரர்நாமத்து இச்சகம் அறிய நின்ற முதல் எழுத்து இகவாது ஒன்ற -அச்சுதன் என்ற பெயரில் முதல் எழுத்தான 'அ' என்பது நீங்கின் சுதன் என்றாகும். ஆயின் அழியும் மகன் என்று பொருள்படும். அப்படியே அமரர் என்ற பெயரின் முதல் எழுத்து நீங்கின் 'மரர்' என்றாகும் ஆயின் அது இறப்பவர் என்ற பொருள்படும். ஆதலால் அவ்வாறு ஆகாமல் எங்களைக் காக்க வேண்டும் என வேண்டினன் திருமால்.

இகவாது-நீங்காது. **இச்சகம்**-இ+சகம்; இந்தவுலகம். **நச்சினை மிடற்று அடக்கும்**-விடத்தைக் கழுத்தில் அடக்கிய பாற்கடலில் எழுந்து நஞ்சு யாவற்றையும் துன்புற்றுத்தச் சிவபெருமான் அத்துன்பத்தைப் போக்க நஞ்சினை உண்டார். உண்ட நஞ்சு உள் செல்ல வொட்டாது சிவன் கழுத்தை உமையம்மையார் பிடித்து அழுத்தினார். நஞ்சு கழுத்தில் நின்று விட்டது. **அந்நஞ்சிற்றீயன்**-அ+நஞ்சின்+தீயன்; நஞ்சைவிடக் கொடியவன். நஞ்சை உண்டவர்க்குத் தான் ஊறு உண்டாகும். ஆனால் தாருகன் தொடர்பு அற்றவர்க்கும் தீமை செய்பவன். ஆதலால் நஞ்சின் தீயன்' என்றார். **கைச்செமத்தினம் ஒறுக்கும்**-கைச்சு+எமத்து+இனம்+தெறுக்கும்; வெறுத்து எம் இனத்தை வருத்தும். **கடுந்திறல்**-கொடிய ஆற்றல். 30

441. எம்உயிர் ஒழியாது என்றும் இருந்திடர்ப்படவ ருத்தும்
அம்மற வனைஅட்டு ஆட்கொள் அஃதுஇன்றேல் அடியேம் எல்லாம்
இம்என இமைப்பின் மாள எமை முனம் புரக்கவைத்த
வெம்மைகொள் மணிமிடற்றின் விட்த்தை விட்டிடுதி ஐயா.

எம்மைக் காவாது போனால் விடமே எம்மை அழித்துவிடும்

தெளிவுரை : 'ஐயா! எம் உயிர் நீங்காது இருந்து மிக்க துன்பப்படத் துன்புறுத்தும் அக்கொடிய தாருகனை அழித்து எங்களை ஆட்கொள்ளல் வேண்டும். அஃது இல்லை என்றால் அடியவர்களாகிய நாங்கள் அனைவரும் இமைப்போதில் மடிய எம்மை முன்புகாக்கச் செய்த கொடிய நும் அழகிய கழுத்தில் அடக்கிய விடத்தை எம்மீது விடுத்திடுவீராக!'

விளக்கம் : இடர்ப்பட-துன்பப்பட. **வருத்தும் அம்மறவன்**-துன்புறுத்தும் அந்தக் கொடிய தாருகன். **அஃது இன்றேல்**-தாருகனை அழித்து ஆட்கொளவில்லையானால். **இம்என**-இம் என்ற அளவில். **மாள**-யாங்கள் இறந்து போக. **புரக்க வைத்த**-காத்தற்பொருட்டு நும் நெஞ்சில் வைத்துக் கொண்ட. **வெம்மை கொள் மணிமிடற்றின் விடத்தை**-அழகிய கழுத்தில் அடக்கிய கொடிய நஞ்சினை. **விட்டிடுதி**-எம்மீது விடுவாயாக. 31

442. என்றுஅர வணையில் துஞ்சும் எழில்அரி இயம்பக் கேட்டுப்
பின்திகழ் சடிலக் கற்றைப் பெருந்தகை அருள் மீதூர
வன்திறல் அவுணன் தன்னை மாய்த்துவா னவர்கள் நெஞ்சம்
துன்றுறு துயர்அ னைத்தும் தொலைத்திட உளம்கொண் டானால்.

சிவபெருமான் தேவர்களைக்காக்க நினைத்தல்

தெளிவுரை : என்று மேற்கண்டவாறு பாம்புப்படுகையில் உறங்கும் அழகுடைய திருமால் கூறினார். பின்னால் தாழ்ந்து விளங்கும் சடைக்கற்றையையுடைய சிவபெருமான் கருணை மிக, வலிய ஆற்றலை உடைய அசுரனான தாருகனை அழித்து வானவர்கள் மனத்தில் பொருந்திய துயரம் அனைத்தையும் அழித்திட நினைத்தருளினார்.

விளக்கம் : அரவணையில்-பாம்புப்படுக்கையில். **துஞ்சும்**-அறிதுயில் கொள்ளும். **எழில்அரி**-அழகுடைய திருமால். **சடிலக் கற்றை**-சடைக்கற்றை. **பெருந்தகை**-சிவபெருமான். **மீதூர**-மிக. **வன்திறல் அவுணன்**-வலிய ஆற்றலையுடைய அசுரனான தாருகன். **மாய்த்து**-அழித்து. **துன்றுறு**-பொருந்திய. **தொலைந்திட**-அழித்திட. **உளங்கொண்டான் ஆல்**-மனத்தில் நினைத்தருளினார். 32

இந்த உலகம் போல் கோடி உலகங்களைப் படைத்திடும் ஆற்றல் கொண்டவள், ஆற்றலால் எல்லாவுலகங்களிலும் மகிழ்ச்சி கொள்ளாதவள்.

விளக்கம் : செந்தழல்-செந்நிறத்தீ. **சீற்றம்**-சினம். **அந்தம்இல்**-எல்லை இல்லாத. **இந்த அண்டங்கள் கோடி**-இந்த உலகங்கள் கோடி. **உந்துறும் ஆற்றல்**-முற்படச்செலுத்தும் ஆற்றல். **உவகை**-மகிழ்ச்சி. 36

447. மைந்நக நடுவண் சூழ்ந்த மாலையின் செக்கர் போலத்
தன்அரை விரித்து உடுத்த தயங்குசெந் துகிலின் பொற்பாள்,
கொல்நுனை வடுகன் சூலக் கொடும்படை நிகர்த்த சூலம்
மன்னிய மலர்க்க ரத்தாள் மணிச்சிலம்பு அரற்றும் தாளாள்.

காளியின் இயல்பு (தொடர்ச்சி)

தெளிவுரை : நீலமலைகள் நடுவில் பொருந்திய மாலையின் மாலைக்காலச் சிவந்த வானம் போல் தன் அரையில் விரித்து உடுத்த விளங்கும் செந்நிற ஆடையை உடைய தன்மையு டையவள். வைரவனின் கூர்மையான முனையையுடை சூலமான கொடிய படையைப் போன்ற சூலத்தை மலர் போன்ற கையில் கொண்டவள். அழகிய சிலம்பு ஒலிக்கின்ற அடியை உடையவள்.

விளக்கம் : மைநகம்-நீல மலை. **நடுவண்**-நடுவில். **செக்கர்**-செம்மை. **தன்அரை**-தன் இடுப்பில். **பொற்பாள்**- அழகை யுடையவள். **அரற்றும்**-ஒலிக்கும். **தாள்**-கால். 37

448. ஞாலத்தின் உயிர்கள் எல்லாம் நடுங்குறக் கரத்தில் கொண்ட
சூலத்தின் நுதியில் குத்திச் சோரிஉண் டிடக்கு றிப்பாள்
வேலைத்திண் திரையில் தோன்றி உலகெலாம் விழுங்க வந்த
ஆலத்தின் உதித்தாள் என்றால் அஃது அவட்கு அடுத்தது அன்றோ.

காளியின் இயல்பு (தொடர்ச்சி)

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் நடுங்கிடக் கையில் கொண்ட சூலத்தின் முனையில் குத்தி ஊனை உண்ண எண்ணுவாள். திண்மையான கடல் அலையில் தோன்றி உலகெலாம் விழுங்க வந்த ஆலகால நஞ்சைப் போல் தோன்றினாள் என்றால் அஃது அவளுக்குப் பொருத்தமானது அன்றோ.

விளக்கம் : ஞாலம்-உலகம். **கரத்தில்**-கையில். **சூலத்தின் நுதியில்**-சூலத்தின் முனையில். **சோரி**-குருதி; இங்குக் குருதியையுடைய ஊனைக் கொள்க. **ஆலம்**-ஆலகால நஞ்சு. **அடுத்தது அன்றோ**-பொருத்தமானது அன்றோ. 38

449. உன்னஅரு முதிர்சூல்மேகம் ஒத்தஅதிர்த்து எழுந்தசெங்கண்
கன்னியை யுமைகண்டு ஏங்கிக் கைவிரல் நெரித்துச் சென்று
தன்நிகர் அமலன் மார்பில் பண்டுறு தன்த ழும்பில்
பொன்அவிர் சுணங்கு பூத்த முலைபடப் புல்லிக் கொண்டாள்.

உமையாள் இறைவனைத் தழுவிக் கொள்ளல்

தெளிவுரை : நினைத்தற்கு அருமையான மேகம் போன்று ஆரவாரித்து எழுந்த சிவந்த கண்ணையுடைய காளியைப் பார்த்து ஏங்கிக் கைவிரலை நெரித்துச் சென்று தன்னைத் தானே ஒத்த சிவபெருமான் மார்பில், முன்பு உண்டான முலைத் தழும்பில் பொன் போல் விளங்கும் அணங்கையுடைய தன் முலைபடத் தழுவிக் கொண்டாள்.

விளக்கம் : காளியைப் பார்த்த உமை அஞ்சிச் சிவபெருமானைத் தழுவிக்கொண்டாள். **உன்அரு**-நினைத்தற்கு அரிய. அதிர்த்து எழுந்த-ஆரவாரித்து. எழுந்த. பண்டுஉறுதன் தழும்பில் முன்னம் தன்னால் சிவபெருமான் மார்பில் ஏற்படுத்திய அடையாளத்தில். பொன் அவிர் அணங்கு-பொன்போல் விளங்கும் அணங்கு (தேமல்) 39

450. அன்னவள் எழுதல் கண்ட அச்சுதன் எம்பி ரான்முன்
பின்னுரை செய்த வாறே பெருவிடத் தினைமா தாக்கி
இந்நிலை எமைவ தைப்ப விடுத்தனன் என்ன மாழ்கித்
தன்னகம் மருண்டு நின்றான் சதுர்முகன் உடல்கம் பித்தான்.

திருமாலும் நான்முகனும் நடுங்குதல்

தெளிவுரை : அவள் எழுவதைப் பார்த்த திருமால் எம் இறைவனின் முன்பு இனிய சொல்லைச் சொல்லியவாறே, பெருநஞ்சினைப் பெண்ணாக்கி இப்போது எம்மைத் துன்புறுத்த அனுப்பினான் சிவபெருமான் என்று மனம் வருந்தித் தன் உள்ளம் மயங்கி நின்றான். நான்முகன் உடல் நடுக்கம் கொண்டான்.

விளக்கம் : அன்னவள்-காளி. **அச்சுதன்**-திருமால். **இன்னுரை**-இனிய உரை. **பெருவிடத்தினை மாதாக்கி**-பெருநஞ்சைப் பெண்ணாக்கி. **வதைப்ப**-வருத்த. **விடுத்தனன்**-சிவபெருமான். **அகம் மருண்டு**-உள்ளம் மயங்கி. **சதுர்முகன்**-நான்முகன். 40

451. இந்திரன் மனம்த ளர்ந்தான், எரியுடன் வெயர்த்தான், கொல்லும்
அந்தகன் நாஉ லர்ந்தான், நிருதிமெய் அயர்ந்தான், ஒதைச்
சிந்துவின் இறைவெ ருண்டான், சமீரணன் திகைத்தான், மூர்ச்சித்து
உந்துறு குபேரன் வீழ்ந்தான், உயங்கிஈ சானன் நின்றான்.

அட்ட திக்குப் பாலகர் வருத்தம்

தெளிவுரை : இந்திரன் உள்ளம் தளர்ச்சி அடைந்தான். அக்கினி உடல் வியர்த்தான். உயிர்களைக்கவரும் கூற்றுவன் நா உலரப்பெற்றான். நிருதி உடல் தளர்ந்தான். ஓசையையுடைய கடல் மன்னனான வருணன் அஞ்சினான். வாயு திகைப்பு அடைந்தான். குபேரன் மூர்ச்சை அடைந்து விழுந்தான். ஈசானன் தளர்ந்து போனான்.

விளக்கம் : இந்திரன் முதலிய எட்டுத்திக்குக் காவலர் அடைந்த நிலையை இப்பாடல் விளங்குகிறது.

எரி-அக்கினி. **கொல்லும் அந்தகன்**-உயிர்களைக் கொல்லும் இயமன். மெய் அயர்ந்தான். **ஒதை**-ஓசை. **சிந்துவின் இறை**-கடல் மன்னனான வருணன். **வெருண்டான்**-அஞ்சினான். **சமீரணன்**-வாயு தேவன். **உயங்கி**-வாடி. 41

452. ஏனைய உம்பர் எல்லாம் எழுந்தமா காளிகோர
மேனியை எதிர்கண்டு ஏங்கி விழிபுதைத் தனர்,அவ் வேலைக்
கூனல் வெண் பிறைமிலைந்த குரிசிலோடு அகிலம் ஈன்ற
ஞானநா யகியைத் தாழ்ந்து நவிலும்அச் சூலி மாதோ.

காளி இறைவன் இறைவியைப் பார்த்துக் கூறுதல்

தெளிவுரை : மற்றத் தேவர் எல்லாம் தோன்றிய மாகாளியின் கோர மேனியை எதிரே பார்த்து ஏங்கிக் கண்ணைக் கையால் மூடிக் கொண்டனர். அப்போது வளைந்த வெண்மையான பிறையைச் சூடிய சிவபெருமானுடன். உலகம் எல்லாவற்றையும்

ஈன்றருளிய ஞானநாயகியான உமையம்மையை வணங்கி அக்காளி தேவியானவள் கூறலானாள்.

விளக்கம் : உம்பர்-தேவர். **எழுந்த**-தோன்றிய. **கோரமேனி**-கொடூரமான மேனி. **அவ்வேலை**-அந்தச் சமயத்தில். **கூனல்வெண் பிறை**-வளைந்த வெண்மையான பிறைச் சந்திரன். **மிலைந்த**-அணிந்த. **குரிசில்**-சிவபெருமான். **அகிலம் ஈன்ற**-உலகங்களைப் பெற்றெடுத்த. **அச்சூலி**-அந்தக்காளி. 42

வேறு

453. "பரம, என்னைப் படைத்தவ, நான் இவண்
புரியும் ஏவல் புகன்றருள்! அன்னதுஉன்
அருளின் ஆற்றுவன்," என்ன, அரன்சுரர்
வெருவு நெஞ்சம் மகிழ விளம்புவான்.

காளி இறைவனிடம் வினாதல்

தெளிவுரை : மேலானவனே! என்னைப் படைத்தவனே! நான் இப்போது செய்யக் கூடிய பணி யாது? தெரிவித்தருளுக! அதை நின் அருளால் யான் செய்து முடிப்பேன். என்ன, வானத்தில் வாழ்பவரான வருந்தும் தேவர் மனம் மகிழும்படி இறைவன் கூறத் தொடங்கினான்.

விளக்கம் : பரம!-மேலானவனே. **படைத்தவ**-படைத்தவனே. **புரியும்** ஏவல்-செய்ய வேண்டிய செயல், **புகன்றருள்**-கூறியருளுக. **ஆற்றுவன்**-செய்து முடிப்பேன். **வான்சுரர்**-வானத்தில் உள்ளவரான தேவர். **வெருவும் நெஞ்சம்**-அச்சம் கொண்டிருந்த உள்ளம். 43

454. "தேவர் என்றும் செயத்தக அல்லகுற்
றேவல் செய்ய இடர்புரி தாருகன்
ஆவி கொண்டுஅ வர்க்கு ஆக்கம் உதவுவான்
பாவை நின்னைப் படைத்தனம்," என்றரோ.

தாருகனை அழிக்க உன்னைப் படைத்தோம்

தெளிவுரை : தேவர்கள் எக்காலத்தும் செய்யத் தகாத சிறிய குற்றேவல்களைச் செய்யச் செயும் தாருகன் என்ற அசுரனின் ஆவியைக் கவர்ந்து தேவர்க்கு ஆக்கம் உதவுதற் பொருட்டாக,

பெண்ணே நின்னை யாம் படைத்தோம் என்று சிவபெருமான் காளியை நோக்கிச் சொன்னார்.

விளக்கம் : செயத்தக வல்ல குற்றேவல்-செய்யக் கூடாத குற்றேவல். **இடர்புரி தாருகன்**-துன்பம் செய்யும் தாருகன். **ஆவிகொண்டு**-உயிரைக் கவர்ந்து. **அவர்க்கு**-தேவர்க்கு. **ஆக்கம் உதவுவான்**-அவருடைய செல்வம் முதலியவற்றை அவர்க்கே தந்து உதவுதற் பொருட்டாக. **உதவுவான்**-வான் ஈற்று வினையெச்சம். **பாவை**-பெண்ணே. **படைத்தனம்**-படைத்தோம். 44

455. காரி பட்ட கடுந்தொழில் தாருகன்
சோரி பட்ட துகளும் அனையவன்
மாரி பட்ட வடிவு கொண்டு உற்றுஎழும்
மூரி பட்ட முகிழ்முலைக் காளியே.

தாருகனின் சிந்தும் இரத்தம் ஒவ்வொன்றும் அவனைப் போன்று உருக்கொள்ளும்

தெளிவுரை : வன்மையான கொங்கையையுடைய காளியே! நஞ்சைப் போன்ற கடுந்தொழிலையுடைய தாருகனின் உடலினின்று விழும் இரத்தத் துளி ஒவ்வொன்றும் அந்த அசுரனின் மேகம் போன்ற வடிவு கொண்டு தோன்றும்.

விளக்கம் : காரிபட்ட-நஞ்சு போன்ற கரிய. **காரி**-நஞ்சு; அது கருநிறம் உடையதால் காரி எனப்படும். **சோரிபட்டதுகள்**-இரத்தமான ஒவ்வொரு துளியும். **அனையவன்**-அந்தத் தாருகனின் **மாரிபட்டன்ன**-மேகம் போல் கரிய. **வடிவுகொண்டு**-உருவத்தை உடையதாய். **உற்றுஎழும்**-தோன்றும். 45

456. "சூலத் தான்குத் துபுசொரி சோரிக
பாலத்து ஏற்றுப் பருகி அவன்நெடு
நீலத்து ஆக்கையை நீயே விழுங்குதி
ஆலத் தோடுஉதித் தாய்" என்று அறைந்தான்.

தாருகன் இரத்தத்தைக் குடித்து அவன் உடலையும் விழுங்கி விடு

தெளிவுரை : 'நஞ்சினின்று தோன்றியவளே! கேள்! நின் சூலத்தால் குத்திட வடியும் இரத்தத்தைக் கபாலத்தில் பிடித்துக் குடித்துவிடு.

அவனது பெரிய நீல நிற உடலையும் நீயே உண்டுவிடு!' என்று கூறினான்.

விளக்கம் : சூலத்தால் குத்துபு-சூலத்தால் குத்தி. **சொரி**-வடியும். **சோரி**-இரதத்தத்தை. **கபாலத்து ஏற்று**-கபாலத்தில், மண்டையோட்டில், ஏற்று. **நீலத்தாக்கை**-நீலநிறமான உடல். **விழுங்குதி**-உண்பாய். **அறைந்தனன்**-கூறினான். 46

457. குனித்த வார்சிலைக் குன்றினன் தம்மனம்
நினைத்த வாறு நிகழ்த்தினன் ஆதலால்
கனத்த வார் முலைக் காளி மகிழ்வுறீஇ
நுனித்தோர் மாற்றம் நுவலுதல் மேயினாள்.

காளி கூறத் தொடங்குதல்

தெளிவுரை : வளைந்த நீண்ட சிலையாக மேருவைக் கொண்ட சிவபெருமான் தன் உள்ளம் நினைத்தவாறு உரைத்தனன். ஆதலால் கனமான கச்சு அணிந்த முலையை உடைய காளி மகிழ்வுற்றுச் சுருக்கமான ஒருசொல்லைச் சொல்லானாள்.

விளக்கம் : குனித்த-வளைந்த. **வார்சிலை**-நீண்டவில். **கனத்தவார் முலை**-கனமான கச்சு அணிந்த முலை. **மகிழ்வுறீஇ**-மகிழ்ந்து. **நுனித்து ஓர் மாற்றம்**-சுருக்கமான ஒருசொல். 47

458. "அண்டர் நாத, அளியன் தனக்குநீ
உண்ட லேபணி யாக உதவினை;
தொண்ட ராகநின் சூழ்ந்திடு வோர்தமுள்
கொண்ட நின்அருள் என்னிடைக் கூர்ந்ததே.

எனக்குச் செயல் பெரிது!

தெளிவுரை : தேவர்க்குத் தலைவனே! எளிய எனக்கு நீ உண்ணும் செயலையே செய்யத்தக்க செயலாக உரைத்தருளினீர். நும் தொண்டர்களாகச் சூழ்ந்துள்ளவர்களுள் என்னிடை கொண்ட அருள் மிக்கதாகும்.

விளக்கம் : அண்டர்நாத-தேவர்க்குத் தலைவனே! **அளியன் தனக்கு**-எளியவளான எனக்கு. **உண்டலே பணியாக**-உணவு உண்பதையே யான் செய்யும் பணியாய். **கூர்ந்ததே**-மிக்கதாகும். 48

459. "ஐய, நீஎன் பணித்தனை, அன்னதே
செய்ய நான்கட வேன்," எனச் செப்பியே
கையில் மான்மழுக் கொண்ட கடவுள்தன்
துய்ய தாளைத் தொழுதுநின் றாள் அரோ.

நீவிர் பணித்ததைச் செய்து முடிப்பேன் எனல்

தெளிவுரை : 'ஐயனே! நீவிர் எதைப் பணித்தீரோ அதைச் செய்ய நான் கடமைப்பட்டவள் ஆவேன்!' என்று சொல்லிவிட்டுக் கையில் மானையும் மழுவையும் கொண்ட கடவுளின் தூய்மையான திருவடியைத்தொழுது நின்றாள்.

விளக்கம் : என்னை பணித்தனை-எதைச் செய்யும்படி கட்டளையிட்டீரோ. **கடவேன்**-கடமைப்பட்டவள். **செப்பியே**-கூறி. **கையில் மான் மழுக்கொண்ட கடவுள்**-கையில் மானையும் மழுவாயுதத்தையும் உடைய கடவுள். 49

460. அன்ன காலைஅ னீகம தாகவே
கன்னி யோகினி வெள்ளம் கணிப்பில
மன்னும் காளி வடிவில் உதித்துஎழ
என்னை ஆளுடை ஈசன் நினைந்தனன்.

யோகினியரைத் தோற்றுவித்தல்

தெளிவுரை : அப்போது சிவபெருமான் காளிக்கு உடன் செல்லத்தக்க படையாய்க் கன்னி யோகினிப் பேய்க்கூட்டம் அளவில்லாமல் விளங்கக் காளியின் வடிவிலேயே தோன்றிட நினைத்தருளினாள்.

விளக்கம் : அனீகம்-படை. **யோகினி வெள்ளம்**-காளிக்கு ஏவல்செய்யும் மகளிர். **கணிப்பில**-அளவற்றவை. காளி வடிவில் பல யோகினியர் தோன்றினர். 50

461. அக்கு மாரி அனைய வடிவொடு
கைக்க பாலம் கழுமுள் திகழ்தர
மிக்க யோகினி வெள்ளம் அசனியேறு
ஒக்க ஆர்த்துஅவள் மெய்ந்நின்று உதித்ததே.

காளியைப் போன்ற வடிவுடன் யோகினி வெள்ளம் தோன்றியது

தெளிவுரை : அந்தக் குமரி காளியைப் போன்ற வடிவுடன் கையில் கபாலத்துடன் கழுமுள் விளங்க மிக்க யோகினிக் கூட்டம் இடியேற்றைப் போன்று ஆரவாரித்து அவளுடைய மெய்யினின்று உதித்தன.

விளக்கம் : கைக் கபாலம்-கையில் உள்ள கபாலம், மண்டையோடு. **கழுமுள்**-சூலம். **திகழ்தர**-விளங்க. 51

462. எந்தை சென்னி இளம்பிறை ஒத்தபல்
அந்த ரத்தில் கடுவை நிகர்த்த மெய்
செந்த ளிர்க்கைச் செழுங்கனல் போன்றகண்
உந்து முத்தலை யோகினிகட்கு அரோ.

யோகினிகளின் தோற்றம்

தெளிவுரை : எம் தந்தையான சிவபெருமானின் தலையில் உள்ள பிறைச் சந்திரனைப் போன்ற பற்களும், கழுத்தின் நஞ்சைப் போன்ற உடலும், சிவந்த தளிர்போன்ற கையில் உள்ள செழுமையான தீயைப் போன்ற கண்களும் மூன்று தலைகளையுடைய சூலமும் கொண்டு விளங்கும் தோற்றம் யோகினியர்க்கு விளங்கின.

விளக்கம் : எந்தை சென்னி-எம் தந்தையான சிவபெருமானின் தலை. **இளம்பிறை யொத்தபல்**-பிறைச்சந்திரனைப் போன்ற பற்கள். **கந்தரம்**-கழுத்து. கடு-நஞ்சு யோகினிகளின் உடல் நஞ்சு போன்ற கருநிறம் உடையது. அரோ-அசை. 52

வேறு

463. கண்ணு தல்பர மன்,பினர்க் காளியை நோக்கி,
"எண்ணில் இத்திறல் யோகினி வெள்ளமோடு ஏகிப்
புண்ணியப் பகைத் தாருகன் ஆவியைப் போக்கிப்
பண்ணவர்க் கருள் செய்,"என ஏவினன் பணித்து.

இறைவன் ஆணையிடல்

தெளிவுரை : நெற்றியில் கண்ணையுடைய சிவபெருமான் பின்பு அக்காளியை நோக்கி எண்ணற்ற ஆற்றல் உடைய யோகினி

வெள்ளமோடு சென்று, புண்ணியப் பகைத் தாருகனின் ஆவியைப் போக்கித் தேவர்க்கு அருள் செய்வாயாக என்று ஆணை தந்து அனுப்பி வைத்தான்.

விளக்கம் : பினர்-பின்னர் என்பதன் தொகுத்தல் விகாரம். **ஏகி**-சென்று. **புண்ணியப்பகைத் தாருகன்**-புண்ணியத்துக்குப் பகையான தாருகன் உயிரை. **பண்ணவர்க்கு**-தேவர்க்கு. 53

464. எம்பி ரானையும் அகிலநா யகியையும் இறைஞ்சிக்
கும்ப மாமுலைத் தறுகண்யா மளைவிடை கொண்டு
செம்பொன் ஆலயப் புறத்துவந்து அடைந்தனள் செறிந்த
உம்பர் ஆங்கது கண்டனர் மனம்பயம் ஒழிந்தார்.

காளி விடைபெற்று வெளியே வரல்

தெளிவுரை : குடத்தைப் போன்ற பெரிய முலைகளையுடைய அஞ்சாமையுடைய காளியானவள் எம் சிவபெருமானையும் அகில நாயகியையும் வணங்கி விடைபெற்றுச் செம்பொன்னால் ஆன கோயிலின் வெளியே வந்தாள். அதைக்கண்டு அங்குக் கூடியிருந்த தேவர்கள் தம் பயத்தை ஒழித்தார்கள்.

விளக்கம் : அகில நாயகி-எல்லாவுலகங்களுக்கும் தலைவியான உமையம்மை. **கும்பமாமுலை**-குடம் போன்ற கொங்கை. **தறுகண் யாமளை**-அஞ்சாமையுடைய காளி. **செம்பொன் ஆலயம்**-சிவபெருமானின் செம்பொன்னால் ஆன கோயில், அது கயிலைமலையில் உள்ளது. **உம்பர்**-தேவர். 54

465. தேறி னார்மனம் எம்பிரான் திருவருள் செயலைக்
கூறி னார்;மகிழ்ந்து ஒருவர்மேல் ஒருவர்தாம்குப்புற்று
ஏறி னார்;கரம் கொட்டினார்;பாடினார்;இருகால்
மாறி னார்;சுழன்று ஆடினார்;அரன்புடை வந்தார்.

தேவர்களின் மகிழ்ச்சி செயல்

தெளிவுரை : தேவர்கள் மனத்தெளிவு அடைந்தார்கள். சிவபெருமானின் அருட்செயலைக் கூறினார்கள். மகிழ்ந்து ஒருவர் மீது ஒருவர் குப்புற்று ஏறினார்கள். கைகளைக் கொட்டினார்கள்;

பாடினார்கள்; இருகால்கள் மாறிச் சுழன்று ஆடினார்கள்; சிவபெருமானிடம் வந்தார்கள்.

விளக்கம் : தேறினார்-தெளிவு அடைந்தனர். **குப்புற்று**-தலைகீழாக. **அரன்புடை**-சிவபெருமானின் பக்கத்தில். 55

466. அந்த ணர்எமது ஆருயிர் போக்கஅன்று அதிர்த்து
வந்த காளத்தில் காளியை வருவித்து இங்கு அவளை
எந்தம் ஆவியை நிறுவிடப் பணித்தனை இன்று
நுந்தம் ஆரருள் பெருமையார் அறிபவர் நுவலின்.

நும் பெருமையை யார் அறிவார்?

தெளிவுரை : அருள் உடையவரே! முற்காலத்தில் எம் ஆருயிரைப் போக்க ஆரவாரத்துடன் வந்த நஞ்சினின்று இன்று காளியை விடுவித்து, இங்கு அவளை எம் உயிர்களை நிலைபெறச் செய்ய ஏவியுள்ளாய். எனவே உம் அரிய அருள் பெருமையைச் சொல்லப் போனால் யார் அறிவார்?

விளக்கம் : ஒருகாலத்தில் பாற்கடலினின்று எழுந்து எம் உயிரை அழிக்க வந்தது நஞ்சு. அதை நும் கழுத்தில் நிறுத்தி எம்மைக் காத்தருளினீர். இன்று அதே கண்ட நஞ்சினின்று காளியைப் படைத்து எம்மைக் காக்க அருள் செய்தீர். நும் அருள் இருந்த வாறு என்னே என்க.

அன்று-பாற்கடலைக்கடைந்த அக்காலத்தில். **அதிர்ந்து**-ஆராவரம் செய்து. **காளத்தில்**-கழுத்தில் உள்ள நஞ்சினின்று. **ஆவியை நிறுவிட**-உயிரை நிலைபெறுத்த. **பணித்தனை**-கட்டளை இட்டாய். **ஆர் அருள் பெருமையை**-உம் அரிய அருளினது பெருமையை. **நுவலின்**-கூறப்போனால். 56

467. என்ன ஈசனது அருள்துதித்து இறைஞ்சுபு விடைகொண்டு
அன்னை யாகிய யாமளை புடையின் வந்து அடைந்து
மன்னும் வானவர் அனைவரும் தனித்தனி வணங்கித்
துன்னு மாமலர் மழைஅவள் முடிமிசைச் சொரிந்தார்.

பூமாரி பொழிதல்

தெளிவுரை : என்று இப்படிச் சிவபெருமானது அருளைத் துதித்து வணங்கி விடைபெற்று, பின்பு அன்னையான யாமளை பக்கத்தில் வந்து பொருந்திய தேவர்கள் அனைவரும் தனித்தனியே வணங்கி நெருங்கிய மாமலர் மழை அங்கு அப்பெருமான் முடிமீது பெய்தனர்.

விளக்கம் : இறைஞ்சுபு-வணங்கி. **யாமளை**-காளி. **புடையின்**-பக்கத்தில். **மாமலர் மழை**-சிறந்த மலர் மழை. **முடிமிசை**-காளியின் முடிமீது. 57

468. சொரிந்த விண்ணவர் தங்கள்கம் மியன்கொடு, சூலம்
இருந்த கையுடை யாமளைக்கு ஏற்றதோர் இரதம்
விரைந்து நன்குற ஆக்குவித்து, அளித்து, "இதன் மீது
பொருந்தி நண்ணலன் செகுத்திடப் போதுதி," என்னா.

தேவர்கள் காளிக்கு ஏற்ற தேரைச் சமைத்துத்தருதல்

தெளிவுரை : 'அப்படிப் புகழ்ந்து தேவர்கள் தங்கள் கொல்லனைக் கொண்டு சூலம் இருந்த கையையுடைய காளியின் தகுதிக்கு ஏற்றதோர் தேரினை விரைவாக நன்கு பொருந்தச் செய்வித்து அளித்து, இதன்மீது பொருந்திப் பகைவரைக் கொல்வதற்குச் செல்வாயாக!' என்று கூறினார்.

விளக்கம் : விண்ணவர்-தேவர். **தங்கள் கம்மியன்கொடு**-தங்கள் தச்சனான மயனைக் கொண்டு. **யாமளை**-காளி. **நன்குற**-நன்கு பொருந்த. **ஆக்குவித்து**-உருவாக்கி. **நண்ணலன்**-பகைவனான தாருகன். **செகுத்திட**-கொல்ல. **போதுதி**-செல்வாயாக. **என்னா**-என்று. 58

469. புகழ்ந்து நிற்பஅவ் இரதத்தின் பொலிவினை நோக்கி
மகிழ்ந்து மற்றதைக் கடவஓர் யோகினி மாதைப்
பகர்ந்துஇ ருத்திஎண் தோளிஆ யிடைஅதில் பாய்ந்தாள்
நிகழ்ந்த நன்முனி வரர் 'சய,சய' என நிகழ்த்த.

காளி தேரில் அமர்தல்

தெளிவுரை : என்று தேவர்கள் புகழ்ந்து நிற்ப, அந்தத் தேரின் அழகினைப் பார்த்து மகிழ்ந்து அத்தேரை ஓட்ட ஓர் யோகினிப் பெண்ணை இருத்தி முனிவர் கூட்டம் 'சய சய' என்று துதிக்க எட்டுத் தோள்களையுடைய காளி அத்தேரில் அமர்ந்தாள்.

விளக்கம் : காளி தனக்குத் தரப்பட்ட தேரின் அழகைப் பார்த்தாள்; யோகினி ஒருத்தியைத் தேர் ஓட்டும்படி செய்து தேவர் துதிக்கத் தேர் மீது விரைவாய் ஏறி அமர்ந்தாள். **கடவ**-ஓட்ட. **பகர்ந்து**-கட்டளையிட்டு. **எண் தோளி**-எட்டுத் தோள்களையுடைய காளி. **சய சய**-வெற்றியுண்டாகுக, வெற்றியுண்டாகுக. 59

470. தலைவி யாகிய யாமளை இவரஅத் தடந்தேர்
வலவி பாரிடைத் தூண்டினள்காற்றுஎன வலிதின்
நிலவி மூவிலைப் படையொடு யோகினி நீத்தம்
சுலவி வேலையின் எண்மடங்கு ஆர்த்தன சூழ்ந்து.

யோகினியர் ஆரவாரம் செய்தனர்

தெளிவுரை : தலைவியான காளி தேரில் அமர, பெரிய தேர்ப்பாகராகிய வலவி, பாரில் காற்றைப் போல விரைவாக ஓட்டினாள். யோகினிக் கூட்டம் கூடிக் கடல் போல் எண்மடங்கு ஆரவாரம் செய்தது.

விளக்கம் : யாமளை-காளி. **இவர**-தேரில் அமர. **வலவி**-தேர் ஓட்டும் யோகினி. **மூவிலைப்படைகொடு**-மூன்று இலைவடிவுடைய சூலப்படையைக்கொண்டு. **சுலவி**-சுழன்று. 60

471. நிலத்தின் ஏகின, வானத்து ஏகின, நிமிர்பா
தலத்தின் ஏகின, முகில்இடத்து ஏகின், தடத்த
புலத்தின் ஏகின, கடலகத்து ஏகின, பொருப்புக்
குலத்தின் ஏகின, குமரிதன் பெண்படை குழுமி.

பலவிடங்களிலும் படை சென்றன

தெளிவுரை : குமரியான காளியின் அப்படைகள் பூமியின் பலவிடங்களிலும் சென்றன. வானத்தில் சென்றன. நிமிர்ந்த

தன்மையுடைய இடங்களில் சென்றன, மேகத்தில் சென்றன, மேடான இடங்களில் சென்றன, கடலில் சென்றன, மலைக் கூட்டங்களில் சென்றன.

விளக்கம் : ஏகின-சென்றன. **நிமிர்பால்தலம்**-உயர்ந்த இயல்புடைய இடம். **முகிலிடத்து**-மேகத்தில். **தடத்தபுலத்தின்**-பெரிய இடங்களில். **பொருப்புக்குலம்**-மலைக்கூட்டம். **குழுமி**-கூடி. 61

472. துடிஅ திர்ந்தன, பதலைகள் அதிர்ந்தன, துளைச்சங்கு
இடிஅ திர்ந்தன, காகளம் அதிர்ந்தன, இரலை
வெடிஅ திர்ந்தன, முரசுஅதிர்ந்தன, பணி வேந்தின்
முடிஅ திர்ந்தன, அதிர்ந்தன தரணியும் முழக்கால்.

போர் முரசுகள் ஒலித்தல்

தெளிவுரை : துடி என்ற கருவிகள் ஒலித்தன, பதலை என்ற கருவிகள் ஒலித்தன, துளையையுடை சங்குகள் இடியைப் போன்று ஆரவாரித்தன, எக்காளம் என்ற கருவிகள் முழங்கின. இரலை என்ற கருவிகள் ஆர்த்தன, முரசுகள் முழங்கின இவற்றால் படத்தையுடைய ஆதிசேடனின் தலைகள் நடுங்கின. உலகமும் இவ்வகை ஒலிகளால் நடுக்கம் கண்டது.

விளக்கம் : துடி-ஒரு தோற்கருவி. **பதலை**-ஒரு வகைத் தோற்கருவி. **துளைச் சங்கு**-துவாரம் பொருந்திய சங்கு. **இரலை**-ஒருகருவி. **காகளம்**-எக்காளம் என்ற ஊது கருவி. **பணிவேந்தன்**-ஆதிசேடன். **தரணி**-உலகம். 62

473. மிக்க யோகினிப் படைசெலப் பொடிவிசும்பு இவர்தல்
இக்கு மேவிஎன் காலொடும் தொடத்தகாது எனவே
புக்கு றார்முடி இவர்ந்து இமை யவர்எனல் போக்கி
மக்கள் போல்புரி கிற்பன்என்று ஏகுதல் மானும்.

துகளின் செய்கை

தெளிவுரை : மிகுந்த யோகினிப் படைசெல்வதால் எழும் துகள் வானில் செல்லுதல், இம்மண்ணுலகில் பொருந்தி என் காலொடும் தொடத் தகாது என்று நினைத்துப் புகாத தேவர்களின் முடியை

அடைந்து, அவர்கள் இமையவர் கண் இமைக்காதவர் என்று கூறுவகைப் போக்கி மக்கள் போல் விளங்கிடச் செய்வேன் என்று செல்வதைப் போல் விளங்கும்.

விளக்கம் : இமையவர் கண் இமைக்காதவர். அத்தகையவர் மீது தூசி சென்று கண்ணை இமைக்கச் செய்து, கண் மூடி இமைக்கும் மக்களைப் போல் ஆக்குகிறது மேலே எழுந்து போகும் தூசி. இக்கு-இ+கு; இந்தவுலகம். **மக்கள்போல்**-மக்கள் கண் இமை இமைப்பதைப் போல் தேவரை விளங்கச் செய்தல். 63

474. கார்மறைத்தன, திசைகளை மறைத்தன, கதிரின்
தேர்மறைத்தன, குலகிரி மறைத்தன, திரைமுந்
நீர்மறைத்தன, உடுக்கள் மறைத்தன, நெடுவான்
ஊர்ம றைத்தன மறைத்தன உலகெலாம் பூழி.

புழுதியால் மறைந்தவை.

தெளிவுரை : எழுந்த தூசிகள் மேகங்களை மறைத்தன. திக்குகளை மறைத்தன. கதிரவன் ஏறிய தேரை மறைத்தன. எட்டுக் குலமலைகளை மறைத்தன. அலைகளையுடைய கடலை மறைத்தன. விண்மீன்களை மறைத்தன. பெரிய வான் உலகில் உள்ள ஊர்களை மறைத்தன. உலகம் எல்லாம் மறைத்தன.

விளக்கம் : கார்-மேகம். **கதிரின் தேர்**-கதிரவனின் தேர். குலகுரி-எட்டுக்குல மலைகள். **திரைமுந்நீர்**-அலையையுடைய கடல். **பூழி**-தூசி; புழுதி; யோகினிப் படை செல்வதால் எழுந்த தூசி. 64

475. தொடுக்கும் மாலையங் குவிமுலைச் சூலி தாரணியை
எடுக்கும் நாகம்மெய் நெளித்தலம் அரவுஅதிர்த் தெழுந்து
நடக்கும் யோகினிவெள்ள மோடு அமரர்நன் நதிமட்டு
அடுக்கும் மாமதில் தாருக புரத்தயல் அடைந்தாள்.

காளி தாருகன் நகரத்தை அடைதல்

தெளிவுரை : தொடுக்கப்பட்ட மாலைகளைச் சூடிய குவிந்த முலையையுடைய காளி, இவ்வுலகத்தைச் சுமக்கும் ஆதிசேடன் உடல் நெளிந்து வருந்தப் பலவகை ஒலியை எழுப்பிப் போகும்

யோகினி வெள்ளத்தோடு தேவரின் நல்ல நதி வரை பொருந்திய மாமதிலையுடைய தாருகனது பதியின் பக்கத்தை அடைந்தாள்.

விளக்கம் : சூலி-சூலத்தையுடைய காளி. **தாரணியை எடுக்கும் நாகம்**-உலகத்தைத் தாங்கும் ஆதிசேடன் என்ற பாம்பு. **அமரர்**-தேவர். 65

வேறு

476. ஒற்றர் அன்னது உணர்ந்தனர் ஓடினார்,
கொற்ற மன்னன் குருமணிப் பொன்தவிசு
உற்ற பேரவை யுற்று, வணங்குபு
முற்றும் வெஞ்சினம் மூண்டுஎழக் கூறுவார்.

ஒற்றர் தாருகனிடம் படையெடுப்பைக் கூறல்

தெளிவுரை : ஒற்றர் அதை அறிந்தனர் தம் மன்னனின் நல்ல நிறம் பொருந்திய பொன் ஆதனம் உள்ள பேரவையை அடைந்து வணங்கி முழுவதும் கொடிய சினம் உண்டாகக் கூறலானார்.

விளக்கம் : அன்னது-காளி படையுடன் வருவதை. **கொற்ற மன்னன்**-வெற்றியையுடைய மன்னன். **குருமணி பொன்தவிசு**-நல்ல நிறம் பொருந்திய மணிகள் பதிக்கப்பட்ட பொன் ஆதனம். 66

477. 'ஐய, நீவிண் ணவர்ப்பணி கோடலால்
கைஉ லாம்படைக் காளி எனஒரு
தையல் யோகினித் தானைக ளோடுஅமர்
செய்ய இவ்வுழிச் சேர்ந்தனள்,' என்றனர்

காளி போரிட வந்ததைக் கூறுதல்

தெளிவுரை : ஐயனே, நீ தேவரை ஏவல் கொள்வதால் படைகளைக் கையில் கொண்ட காளி என்ற பெயரையுடைய ஒரு மங்கை யோகினி படைகளுடன் போர் செய்ய இவ்விடத்தே சேர்ந்தனள் என்று ஒற்றர் தாருகனிடம் உரைத்தனர்.

விளக்கம் : விண்ணவர்-தேவர். **பணிகோடலால்**-ஏவல் செய்யும்படி செய்தலால். **கைஉலாம் படைக்காளி**-படைகளையுடை கையையுடைய காளி. **தையல்**-மங்கை. **யோகினித் தானைகள்**-யோகினிப் படைகள். **அமர்செய்ய**-போரிட. 67

478. அந்த ஒற்றர் அறைந்திடும் அவ்வுரை
சந்த னப்புயத் தாருகன் சீற்றமா
முந்தும்உள்கனல் மூண்டுஎழக் கூறிய
மந்தி ரத்தை நிகர்த்தது வந்தரோ.

தாருகன் சினம் கொள்ளல்

தெளிவுரை : அந்த ஒற்றர் கூறிடும் அந்தச் சொல்லைச் சந்தனம் பூசிய தோள்களையுடைய தாருகன் சினமான உள்ளத்தின் உள்ள தீ மூண்டு எழக் கூடிய மந்திரத்தை ஒத்தது.

விளக்கம் : அவ்வுரை-அந்தச் சொற்கள். **சந்தனப்புயத் தாருகன்**-சந்தனத்தைப் பூசிய தாருகன். 68

479. பன்னும் அம்மொழி பாதி செவிபுகு
முன்னம் தீச்சினம் மூண்டது அவனகம்
துன்னு றும்புகை துண்டத்து எழுந்தன
வன்னி வெம்பொறி வாட்கண் சிதறின

தாருகன் சினம் கொள்ளல்

தெளிவுரை : கூறும் அம்மொழி பாதி செவியிலே நுழைவதற்கு முன்னமேயே, அவனது உள்ளத்துள் சினம் மூண்டது. மூக்கில் புகை எழுந்தது. தீயாகிய கொடிய பொறி ஒளியுடைய கண்ணினின்று சிதறின.

விளக்கம் : பன்னும்-ஒற்றர்கூறும். **செவிபுகு முன்னம்**-செவியில் நுழைவதற்கு முன்பு. **அவன் அகம்**-தாருகனது உள்ளத்தில். **தீச்சினம் மூண்ட**-தீயாகிய சினம் மூண்டது. மூக்கினின்று புகை தோன்றியது. 69

480. மட்டில் வெஞ்சின வன்னி அறிவினைச்
சுட்டது; இவ்வள வில்தொலை கின்றதோ!
கிட்டி னோரையும் கேளையும் தன்னையும்
அட்டிடும் துணை யும்அ வியாததே.

சினத்தால் உண்டாகும் தீமைகள்

தெளிவுரை : அளவற்ற கொடிய சினம் ஆகிய தீ அறிவைச் சுட்டது. இந்த அளவில் அது தொலைகின்றதோ! அன்று. நெருங்கிய வரையும் சுற்றத்தாரையும் தன்னையும் அழிக்கும் வரை அச்சினத்தீ அவியாது!

விளக்கம் : மட்டுஇல் வெஞ்சின வன்னி-அளவு இல்லாத சினமான தீ. **தொலைகின்றதோ**-அழிகின்றதோ. **கேளை**-உறவினரை. **அட்டிடுந்துணையும்**-அழியும் அளவும். **அவியாததே**-அணையாது. 70

481. இதழ்அ துக்கி எயிறு கறித்தனன்
நுதல்மிசைச் செலநூக்கு புருவியாய்
மதர்அ ரிக்கண் மலர விழித்தனன்;
முதிர்சி னத்தினன் மீசை முறுக்கினான்.

தாருகனின் சினச் செயல்

தெளிவுரை : சினத்தான் தாருகன் உதட்டை அதுக்கிப் பற்களைக் கடித்தான் நெற்றிமீது செல்லச்செலுத்தும் புருவத்தை உடையவனாய் மதர்த்த விழிகளை மலர விழித்தான். முதிர்ந்த சினம் உடையவனாய் மீசையை முறுக்கினான்.

விளக்கம் : இதழ் அதுக்கி-உதட்டைக் கடித்து. **எயிறு**-பற்கள். **கறித்தனன்**-கடித்தான். **நுதன்மிசை**-நெற்றிமீது. **நூக்கு புருவியாய்**-உயர்த்தும் புருவத்தை உடையவனாய். **மதர் அரிக்கண்**-மதர்த்த வரிகளையுடைய கண். **மலர**-அகலமாக. 71

482. பொன்றில் கற்பகப் புட்டிகள் எழக்கரம்
ஒன்றொடு ஒன்றுறத் தாக்கி உருமுவீழ்
கின்ற தென்ன நகைத்தனன் கேட்ட சொல்
நன்று நன்றுஎனச் சீறி நவிலுவான்

தாருகன் சிரித்துக் கூறுதல்

தெளிவுரை : அழிவு என்பது இல்லாத கற்பகப் பொழிலில் உள்ள பறவைகள் எல்லாம் எழும்படி தாருகன் தன் கைகளை ஒன்றுடன்

ஒன்ற அடித்து இடியானது வீழ்வதைப் போன்றது எனக் கூறும்படியாய்ச் சிரித்தான். 'நான் கேட்ட சொல் நன்று, நன்று' எனச் சினந்து சொல்லலானான்.

விளக்கம் : பொன்றில் கற்பகப்புட்கள்-அழியாத கற்பகச் சோலையில் உள்ள பறவைகள். **உருமு விழ்கின்றதென்ன**-இடி இடித்தாற் போன்றது என. **சீறி**-சினந்து. **நவிலுவான்**-கூறத் தொடங்கினான். 72

483. அடிஒன் றால்உலகு யாவும் அளந்தமால்
நெடியன் தானும்என் ஏவலின் நின்றிடும்
படியன் ஆற்றும்என் பால்அமர்க்கு என்று பெண்
கொடி ஒன்று எய்தில்என் கொற்றநன்று ஆகுமால்.

என் ஆட்சி நன்று!

தெளிவுரை : 'தன் அடி ஒன்றால் உலகம் யாவற்றையும் அளந்த திருமாலான நெடியவனும் எனது ஏவலில் கட்டுப்பட்டு நிற்கும் படியான தன்மை கொண்டவன்; இத்தகைய என்னிடம் போர் செய்ய என்று பெண் கொடி ஒன்று வருவதானால் என் ஆட்சி நன்று!'

விளக்கம் : அளந்தமால்-உலகத்தை அளந்த திருமால். **நெடியன்**-உயர்ந்து நின்ற திருமால். **என்பால்**-என்னிடம். **அமர்க்கு**-போர்க்கு. **என் கொற்றம்**-என் ஆட்சி என் வெற்றி. 73

484. இந்தி ராதிகள் யாரையும் வென்றிடும்
அந்தமே வரும் ஆற்றல்உண்டு என்னிடை;
வந்துளாள் ஒருமாது அமர்க்கு என்னும்இந்
நிந்தை தான்உயிர் நீங்கினும் நீங்குமோ.

என்னிடம் போரிட மங்கை வந்தது எனக்குப் பழியாகும்!

தெளிவுரை : இந்திரர் முதலியவரையும் வெல்லும் ஆற்றல் உண்டு என்னிடம். இத்தகைய என்னிடம் போரிட என்று ஒரு மங்கை வந்துள்ளாள் என்ற இந்தப் பழி என் உயிர் நீங்கினாலும் நீங்குமோ? நீங்காது!

விளக்கம் : இந்திராதிகள்-இந்திரன் முதலியவர். **மேவரும்**-மேலான. **இந்நிந்தை**-இந்தப்பழி. 74

485. புவனம் யாவினும் போர்த்தொழில் வந்துசெய்
பவர்இ லாமையின் தோள்பயன் இன்றியே
கவலும் நெஞ்சினன் காரிகை யோடுஅமர்
நவிலில் ஓர்பழி நண்ணினன் ஆவனால்.

பழி வந்து சேரும்

தெளிவுரை : 'உலகம் யாவினும் என்னிடம் வந்து போர்ச் செயலைச் செய்பவர் இல்லாமையால் தோளின் பயனைப் பெறாது கவலை கொள்கின்ற நெஞ்சினன் யான் பெண்ணோடு போர் என்று கூறினால் யான் ஓர் பழி அடைந்தவன். ஆவேன்!'

விளக்கம் : புவனம்-உலகம். **தோள்பயன்**-தோளினது பயன். **கவலும்**-கவலை கொள்ளும். **காரிகை**-பெண். **நவிலின்**-கூறினால். 75

486. என்னை வெல்லஇங்கு ஏந்திழை எய்தலால்
மின்னை வெல்ல உரகமும் மேவுமால்
மன்னை வெல்ல மலையும் வரும்புலி
தன்னை வெல்ல உழைகளும் சாருமால்.

தாருகன் கூற்று

தெளிவுரை : என்னை வெல்ல இங்கு ஒரு பெண் வருதலால் மின்னலோடு கூடிய இடியை வெல்ல பாம்பும் இனிச் செல்லும். தம் மன்னனான இந்திரனை வெல்ல மலையும் வரும், புலிகளை வெல்ல மான்களும் சேரும்.

விளக்கம் : ஏந்திழை-அணிந்த அணியையுடைய பெண். **எய்தலான்**-வந்ததால். **மின்னை**-மின்னலுடன் கூடிய இடியை. **உரகம்**-பாம்பு. **மேவுமால்**-பொருந்தும். **மன்னை**-இந்திரனை. **உழைகள்**-மான்கள். **சாரும்**-செல்லும். 76

487. கண்ணன் வேதன் கடவுளர் இந்திரன்
அண்ணல் மாமுனி வோர்கள் அபயம்ஓர்
பெண்ணின் பால்புகும் பெற்றிமை யால்அவர்
நண்ணும் அண்மை நனிசிறந் திட்டதால்.

திருமால் முதலியவர் வீரம் நனிசிறந்தது

தெளிவுரை : "திருமால் நான்முகன் தேவரின் மன்னன் இந்திரன் பெருமையுடைய முனிவர்கள் ஆகியோர் அடைக்கலம் என்று ஒரு பெண்ணிடம் புகுந்தார்கள். இத்தன்மையால் அவர்களின் வீரம் மிகவும் சிறந்தது".

விளக்கம் : கண்ணன்-திருமால், **வேதன்**-நான்முகன். **அண்ணல் மாமுனிவோர்கள்**-பெருமையுடைய முனிவர்கள். **அபயம்**-அடைக்கலம். **பெற்றிமையால்**-தன்மையால். **ஆண்மை**-வீரம். **நனிசிறந்திட்டதால்**-மிகவும் சிறந்தது. 77

வேறு

488. இந்திரன் பிடித்துஎடுத்து எற்றி வீழ்ப்பனோ,
வந்தகற் படைத்திட அடித்துக் கொல்வனோ,
சந்திரன் கதிரொடும் எடுத்துத் தங்குபூம்
பந்துஎனப் புடைப்பனோ படியிற் பாணியால்.

தாருகன் செய்ய நினைத்தவை

தெளிவுரை : நான் கையால் இந்திரனைப் பிடித்து எடுத்துத் தாக்கி வீழ்த்துவேனோ! இயமனைப் பிடித்து அடித்துக் கொல்வேனோ! சந்திரனைக் கதிரவனுடன் எடுத்து பூப்பந்து போல் எறிவேனோ!

விளக்கம் : விழ்ப்பனோ-வீழ்த்துவேனோ. **அந்தகன்**-இயமன். **சந்திரன் கதிரொடு**-சந்திரனைக் கதிரவனோடு. **பாணியால்**-கையால். 78

489. கனலியை விழுங்கிஏழ் கடலும் உண்பனோ
சினமற அமரரைப் பதத்தில் தேய்ப்பனோ
முனிவரர் குலம்எலாம் முடிப்ப னோஎன
இனையன பலபகர்ந்து எரியின் சீறினான்.

தாருகனின் சினத்தீ

தெளிவுரை : அக்கினியை விழுங்கி ஏழ்கடல்களையும் உண்பேனோ! என் சினம் நீங்கும்படி தேவரைக் காலால் தேய்த்து அழிப்பேனோ! முனிவர் கூட்டம் அனைத்தையும் கொல்வேனோ! என இப்படிப் பலவற்றையும் சொல்லிச் சினந்தான் தாருகன்.

விளக்கம் : கனலி-அக்கினி. **உண்பேனோ**-குடிப்பேனோ. **பதத்தில்**-காலில். **தேய்ப்பனோ**-தேய்ப்பேனோ. **முடிப்பேனோ**-கொன்று முடிப்பேனோ. **எரியின்**-தீயைப் போல். **இனையன**-இத்தகையன. 79

490. சீறிய தாருகத் தீயன் 'யாமளை
வீறிய எனைத்தொழ மேவி னாள்கொலோ!
மாறுஅமர் புரிந்திட வந்துளாள் கொலோ!
கூறுதிர் ஒற்றினிர் குறிப்புஎன்?' என்றனன்.

தாருகன் ஒற்றரை வினவுதல்

தெளிவுரை : சினங்கொண்டு மேற்கண்டபடி கூறிய தாருகன் என்ற தீயவன், காளியானவள் வீரம் வாய்ந்த என்னைத் தொழுதற்கு வந்தாளோ அல்லது மாறாகப் போர்செய்திட வந்துள்ளாளோ, ஒற்றவரே! நும் எண்ணத்தைக் கூறுக! என்றான்.

விளக்கம் : சீறிய-சினந்த. **யாமளை**-காளி. **வீறிய எனை**-வீரம் உடைய என்னை. **மாறு அமர் புரிந்திட**-எதிர்த்துப் போரிட. **கூறுதிர்**-கூறுவீராக. **குறிப்பு**-கருத்து. 80

491. என்றலும் ஒற்றர்கள் இறைஞ்சி, "ஐய,கேள்!
வன்திறல் யாமளை மறலி" தன்னையும்
வென்றிகொள் படையொடும் பொருதல் வேண்டியே
ஒன்றினள்; ஐயம் இன்று; உண்மை, உண்மையே.

இயமனையும் வெற்றி கொள்பவள்!

தெளிவுரை : என்று தாருகன் வினவவும், ஒற்றர்கள் அவனை வணங்கினர், 'ஐயனே! கேட்பீராக! வலிய ஆற்றலை உடைய காளிதேவி இயமனையும் வெற்றி கொள்ளும் படையுடன் போரிட வேண்டி வந்துள்ளாள். இதில் ஐயம் இல்லை! உண்மை, உண்மையே!' என்றனர்.

விளக்கம் : இறைஞ்சி-வணங்கி. **வன்திறல்**-வலிய ஆற்றலையுடைய காளி. **மறலி**-இயமன். **வெற்றிகொள்**-வெற்றியையுடைய. **பொருதல்**-போரிடல். **ஒன்றினாள்**-வந்துள்ளாள். 81

492. "மாதுஎன உளம்கொளேல் அவளை! மன்னநீ,
போதரும் அசுரரும் சுரரும் உட்கமுன்
மோதுறு திரைக்கடல் முகட்டுஎ ழுந்தஅப்
பாதக நஞ்சமே படிவம் கொண்டதால்.

நஞ்சின் வடிவமானவள் காளி

தெளிவுரை : 'மன்ன! நீ அவளைப் பெண் என்று நினைக்க வேண்டா! நின் அசுரரும் தேவர்களும் அஞ்ச முன்பு அலைமோதும் பாற்கடல் மேல் எழுந்த அந்தக் கொடிய நஞ்சமே வடிவம் கொண்டு இங்கு வந்துள்ளதாக நினைப்பாய்!'

விளக்கம் : உளம் கொளேல்-மனத்தில் எண்ணவேண்டா. **சுரர்**-தேவர். **உட்க**-அஞ்ச. **முன்**-முன்காலத்தில்; அதாவது பாற்கடலில். **முகடு**-உச்சி. **அப்பாதக நஞ்சமே**-அந்தக் கொடிய விடமே. **படிவம் கொண்டதால்**-வடிவு கொண்டு வந்துள்ளது போன்றவள் காளி. 82

493. "உம்என அவள் உரப்பு ஒலிகொல் கின்றதீ
வெம்மைகொள் நமனையும் வீட்டும்; ஆயுதம்
கைம்மலை பரித்தஅக் கண்ணற்கு ஓர்தலைச்
சும்மைகொள் சுமை அவள் எடுத்த சூலமே"

காளிதேவியின் கையில் உள்ள ஆயுதச் சிறப்பு

தெளிவுரை : உம் என்று அவளது வன்மையுடைய ஆயுதம் கொல்கின்ற தீ வெப்பம் உடைய நமனையும் அழித்து விடும் ஆயுதம். கையாகிய மலையைத் தாங்கிய கண்ணனுக்கு ஓர் தலைச் சுமையாகக் கருதும் சுமையையுடைய சுமை அவள் கையில் எடுத்துள்ள சூலமாகும்.

விளக்கம் : உம்மென-ஒலிக்குறிப்பு விரைய என்பது பொருள். **உரப்பு ஒலி**-வன்மையுடைய ஆயுதம். **ஒலி**-ஆயுதம்.

வெம்மைகொள்-வெப்பத்தையுடைய. **நமனையும்**-இயமனையும். **வீட்டும் ஆயுதம்**-அழிக்கும் ஆயுதம் ஆகும். **கைம்மலை**-யானை. **சும்மை**-'சுமை' என்பதன் விரித்தல் விகாரம். 83

வேறு

494. இனையன ஒற்றர் கூறும் எல்லையில் கடைநாள் பொங்கிக்
கனைகடல் உடைந்தது என்னக் காளிதன் தானை யார்க்கு
நனிபொலி செவிப்புலத்து நடந்தது தாரு கன்தன்
சினஎரிக்கு இழுதும் அன்றிச் சமிதையும் சொரிந்த தேபோல்.

படையொலி தாருகன் செவியில் கேட்டது

தெளிவுரை : இத்தகையவற்றை ஒற்றர் கூறினர். அப்போது யுகத்தின் முடிவில் பொங்கி எழுந்து ஒலிக்கும் கடல் உடைந்தாற் போல் காளியின் படையினர் எழுப்பும் ஆரவார ஒலி, தாருகனின் சினமான தீயினுக்கு நெய்யையே அல்லாது சமிதையையும் சொரிந்ததைப் போல் அவனது செவியில் போல் ஒலித்தது.

விளக்கம் : கடைநாள்-ஊழியின் முடிவில். **கனைகடல்**-ஒலிக்கும் இயல்புடைய கடல். **காளிதன் தானை**-காளியின் படை. **சின எரிக்கு**-சினம் என்ற தீயினுக்கு. **இழுது அன்றி**-நெய்வார்த்தலே அன்றி. **சமிதையும்**-வேள்வியில் இடும் சுள்ளி. 84

495. ஆயது காலை தன்னில், அழலின்எண் மடங்கு சீறிச்
சேயிழை மகளிர்ப் பற்றிச் சிறைபுரிந் திடுவன், தூதீர்,
போய்எனது அனிகம் முற்றும் பொருக்எனத் தருதிர்,' என்ன
ஏயினன் அவரும் நன்றுஎன்று இறைஞ்சுபு விரைந்து சென்றார்.

தன்படைகளைக் கொணரத் தாருகன் கட்டளையிடல்

தெளிவுரை : அந்த வேலையில், "தீயைவிட எட்டு மடங்கு சினம் கொண்டு சேயிழை மகளிரைப் பற்றிச் சிறையில் இடுகின்ற வன்மையுடைய தூதுவரே, நீவிர் சென்று எனது படை முழுவதையும் விரையக் கொண்டு வாருங்கள்," என்று ஏவினான். அவர்களும் நல்லது என்று வணங்கி விரைந்து போனார்கள்.

விளக்கம் : ஆயது காலை-அச்சமயத்தில். **அழலின் எண்மடங்கு**-தீயைவிட எட்டுமடங்கு. **சீறி**-சினந்து. **சேயிழை மகளிர்**-செம்மையான அணிகளை அணிந்த மங்கையர். 85

496. சென்றபின் அவுணர் செம்மல் செருத்தொழில் கோலம் கொள்வான்
கன்றிஅங்கு எழுந்துஉள் போகிக் கதிர்இளம் பரிதி நீலக்
குன்றின்வந்து எழுந்தது என்னக் குருமணி மகுடம் ஒன்று
தன்தலை கவித்தான் யாரும் சயசய என்று எடுத்தவாழ்த்த.

மகுடத்தைச் சூடிக்கொண்டான் தாருகன்

தெளிவுரை : அவர்கள் சென்ற பின்பு அவுணரின் மன்னனான தாருகன் போர்த் தொழிலுக்குரிய கோலம் கொள்ளச் சினத்துடன் உள்ளே எழுந்து போனான். கதிர்களையுடைய இளங்கதிரவன் நீல மலை மீது வந்து தோன்றினாற் போன்று நிறம் வாய்ந்த மணி மகுடம் ஒன்றை தனது தலையில் கவித்துக் கொண்டான். எல்லாரும் அப்போது,'வெற்றி உண்டாகுக வெற்றி உண்டாகுக' என்று வாழ்த்தினர்.

விளக்கம் : அவுணர் செம்மல்-அசுரரின் தலைவனான தாருகன். **செருத்தொழில் கோலம்**-போர்க்கோலம். **கொள்வான்**-கொள்ளும் பொருட்டு. **கன்றி**-சினந்து. **கதிர்இளம் பரிதி**-கதிரையுடைய இளஞாயிறு. இளஞாயிறு நீல மலைமீது தோன்றல் உவமை. தாருகன் மணி மகுடத்தைத் தலையில் கவித்துக் கொள்ளல் பொருள். **சய சய**-வெற்றியுண்டாகுக, வெற்றி உண்டாகுக. 86

497. கல்என மிழற்றும் வீரக் கழல்அடித் தலத்தில் ஆர்த்தான்
மல்லல் அங்கச்சு வீக்கி மருங்கினில் சுரிகை சேர்த்தான்
புல்லுறு மங்கி மேனிப் புறம்தெரி யாது போர்த்தான்
வில்உமிழ் சரம்பொய் தூணி வெரினிடைத்தூக்கி னானால்.

வீரக்கழல், உடைவாள், அம்பறாத்தூணியைக்கட்டல்

தெளிவுரை : கல் என்று ஒலிக்கும் வீரக்கழல் என்ற அணியைக் காலில் கட்டினான். வளம் உடைய அழகிய அரைக் கச்சினைக்கட்டி இடையில் உடைவாளைக் கட்டினான். அங்கியை மேனியின் புறம் தெரியாது போர்த்துக் கொண்டான். வில் உமிழும் அம்புகளை இடும் அம்பறாத் துணியை முதுகில் கட்டினான்.

விளக்கம் : கல் என மிழற்றும்-கல் என ஒலிக்கும். **அடித்தலத்தில்**-கால்களில். **கச்சு**-இடைப்பட்டிகை. **சுரிகை**-உடைவாள். **வீக்கி**-கட்டி. **புல்லுறு**-பொருந்துகின்ற. **அங்கி**-போர்வை. **புறம்**-வெளி. **வில்உமிழ் சரம் பெய் தூணி**-வில் எய்யும் அம்பு இடப்பட்ட தூணி. **தூணி**-அம்புகளை இடும் புட்டில். **வெரின்**-முதுகு. 84

498. அங்கையில் கோதை சேர்த்தான், அணிவிரல் புட்டில் இட்டான்,
கொங்கலர் தும்பை மாலை குருமணி மவுலி சூழ்ந்தான்,
புங்கஅப் படைஅ னந்தம் பூசனை புரிந்துஎ டுத்தான்,
செங்கையில் தொழுது மேரு சிலை நிகர் சிலையும் கொண்டான்.

தாருகன் கைக்கவசம் முதலியவற்றை அணிந்து கொள்ளல்

தெளிவுரை : முன் கையில் தோலைக் கட்டினான். அழகிய விரலில் புட்டிலை இட்டான். தேன் சிந்தும் தும்பை மாலையை நல்ல நிறம் உடைய முடியுடைய தலையில் சூடினான். சிறந்த படைக்கலத்தை பல பூசை செய்து எடுத்தான். சிவந்த கையினால் தொழுது மேருவான வில்லையும் கைக் கொண்டான்.

விளக்கம் : அங்கையில் கோதை-முன்கைத் தோல். **விரற்புட்டில்**-விரல் கவசம். **மவுலி**-முடி; தலை. தும்பை மாலையைத் தலையில் சூடுதல் அதிரப் பொருதல் குறிப்பு. **புங்கம்**-மேன்மை. **மேருச்சிலை நிகர்**-மேருவான வில்லைப் போன்ற. **சிலை**-வில். 88

499. இம்முறை அமரின் கோலம் எய்திஒள் இலைவேல் மன்னன்
கொம்எனத்தனது கோயில் புறத்தினில் குறுகும் முன்னம்
தெம்முனை முருக்கும் சேனை தரமுனம் சென்ற தூதர்
தம்மனம் தனில்வி ரைந்து தலைத்தலை பரவிச் சென்றார்.

தூதர் படையுடன் வருதல்

தெளிவுரை : இப்படிப் போர்க் கோலம் கொண்டு ஒளியுடைய வேலையுடைய தாருகன் என்ற மன்னன் விரைவாகத் தன் அரண்மனையின் முன் வெளியே வருதற்கு முன்பு பகைவரை அழிக்கும் ஆற்றல் வாய்ந்த சேனையை அழைத்து வரச் சென்ற தூதர் தம் மனத்தின் விரைவைவிட விரைவாக இடந்தோறும் இடந்தோறும் பரவிச் சென்றனர்.

விளக்கம் : அமரின் கோலம்-போர்க்கோலம். **ஒள் இலைவேல். மன்னன்**-ஒளியுடைய இலைபோன்ற வேலையுடைய மன்னான தாருகன். **கொம் என**-விரைய. **கோயில்**-அரண்மனை. **தெம்முனை முருக்கும்**-பகைவரை அழிக்கும். **முனம்**-முன்பு. **தம் மனந்தனில் விரைந்து**-தம் மனத்தைவிட விரைவாக வந்து. **தலைத்தலை**-இடந்தோறும்; அவ்வவ்விடங்களில். 89

500. சென்றுஅவர் ஒட்ட கத்தில் செழும் முரசு எறிந்து, "நுங்கட்கு
இன்றுஒரு பெரும்போர் வந்து கிடைத்தது, இங்கு எழுக சேனை!"
என்றலும் அவுணர் வேழம் இரதம் அம்புரவி என்னத்
துன்னுறும் அனிக வெள்ளம் தொகையில எழுந்த மாதோ.

அவுணர் படை எழுந்தது!

தெளிவுரை : அங்ஙனம் சென்றவர் ஒட்டகத்தில் வைக்கப்பட்ட செழுமையான முரசினை எறிந்து, 'உங்கட்கு இன்று பெரும்போர் வந்து கிட்டியது. படைகளே இங்கிருந்து எழுக,' என்று கூறவும், அவுணரின் யானைப் படை, தேர்ப்படை, குதிரைப்படை என்ற நெருங்கிய படையாகிய வெள்ளம் எண்ணற்றனவாய் எழுந்தன.

விளக்கம் : முரசு எறிந்து-முரசை அடித்து. **நுங்கட்கு**-உங்களுக்கு. **கிடைத்தது**-கிட்டிற்று. **வேழம்**-யானைப் படை. **இரதம்**-தேர்ப்படை. **புரவி**-குதிரைப்படை. **துன்று உறும் அனிகம்**-நெருங்கிய படை. **தொகையில**-எண்ணற்றவை. **மாதோ**-மாது+ஓ; அசைகள். 90

501. போர்எனச் செந்நெல் சூட்டுப் பெயரினைப் புகலுற்றாலும்
மேருறு தடந்தோள் வீங்கி எங்ஙன்என்று எழுந்து துள்ளும்
வீரர்கள் அவுணர் தூதர் 'வெஞ்சமர்க் குஎழுமின்' என்ன
வார்உறு பணைமு ழக்க மகிழ்ச்சிகொள் வதைஎன் சொல்வாம்.

போர் என்பதைக் கேட்டு வீரர் மகிழ்தல்

தெளிவுரை : போர் என்று செந்நெல் சூட்டுப் போரைக் குறித்தாலும் எங்கே என்று பெருக்கும் பெரிய தோள் பெருத்துத் துள்ளும் வீரர்கள் தூதர் 'கொடிய போர்க்கு எழுக,' என்ற அளவில், வார் கட்டப்பட்ட முரசின் ஒலி கேட்டு அவர்கள் அடைந்த மகிழ்ச்சியை என்ன சொல்வோம்!

விளக்கம் : செந்நெல் சூட்டுப்பெயர்-செந்நெல் தாள் குவிக்கப்பட்டபோர். **புகல் உற்றாலும்**-சொல்லலானாலும். **ஏர் உறு தடந்தோளும்**-உயர்ந்து எழுச்சியுடன் விளங்கும் பெரிய தோள். **விங்கி**-பெருத்து. **வெஞ்சமர்க்கு எழுமின்**-கொடிய போர் செய்ய எழுவீராக. **வார்உறு பணை**-தோல்வார் கொண்டு கட்டப்பட்ட முரசு. 91

502. வீங்கினர் புயங்கள் நெஞ்சம் விம்மினர் அமரின் துன்பம்
நீங்கினர் எழுவும் வாளும் நேமியும் மழுவும் வில்லும்
தாங்கினர் பகைஞர் எங்ஙன் சார்ந்தனர் காட்டும் என்ன
ஓங்குறும் அண்டகூடம் உடைந்தென ஆர்த்துச் சூழ்ந்தார்.

அவுணர் ஆரவாரத்துடன் சூழ்தல்

தெளிவுரை : வீரர்கள் தோள்கள் பூரிக்கப்பெற்றனர். மனம் மகிழ்ந்தனர். போர் இல்லாமையால் ஏற்பட்டிருந்த துன்பம் நீங்கினர். எழுவும், வாளும் சக்கரமும் மழுவும் வில்லும் கைக் கொண்டவராய், 'நம் பகைவர் எங்கே வந்துள்ளனர்? அவர்களைக் காட்டுங்கள்!' என்ன உயர்ந்துள்ள உலகத்தின் உச்சி உடைந்தாற் போல் ஆரவாரத்துடன் கூடிச் சூழ்ந்தார்.

விளக்கம் : வீங்கினர் புயங்கள்-தோள் பூரிக்கப் பெற்றனர். **அமரின் துன்பம் நீங்கினர்**-போர் இல்லாமையால் உண்டான துன்பம் நீங்கப் பெற்றனர். **எழு**-ஒரு படைக்கலம். **நேமி**-சக்கரம். **அண்ட கூடம்**-உலகத்தின் மேல் பகுதி. **ஆர்த்து**-ஆரவாரம் செய்து. 92

503. இந்திரன் வயிரந் தன்னால் சிறகர்முன் ஈரப் பட்ட
அந்தம்இல் கிரிகள் எல்லாம் அனையவன் பகைஞ னான
நந்துறும் அவுணன் தன்பால் நட்புற நடந்த என்னச்
சுந்தரத் திகிரிப் பொற்றேர் திசைதொறும் சூழ்ந்த அம்மா.

தேர்கள் வந்த தோற்றம்

தெளிவுரை : இந்திரன் தன் வச்சிராயுதத்தால் சிறகை முன்பு அறுக்க எல்லையற்ற மலைகள் எல்லாம் அவனுடைய பகைவனான அழியப் போகும் அசுரனிடம் நட்புக்கொண்டு நடந்தது போல அழகிய சக்கரத்தையுடைய பொன்தேர்கள் திக்குதோறும் சூழ்ந்தன.

விளக்கம் : இந்திரன் ஒருகாலத்தில் மலைகளின் சிறகை அரிந்தான். ஆதலால் அவனிடம் சினம் கொண்ட அம்மலைகள் அசுரர்க்குப் பகையான தாருகனிடம் நட்புடன் நடப்பது போலத் தேர்கள் சென்றன.

வயிரம்-வச்சிரப்படை. **சிறகர்**-சிறகு. **ஈரப்பட்ட**-அறுக்கப்பட்ட. **அந்தமில் கிரிகள்**-எண்ணற்ற மலைகள். **அனையவன் பகைவனான**-அந்த இந்திரனின் பகைவனான. **நட்புற நடந்த**-நட்புடன் போரில் அவனுக்குத் துணையாகச் சென்றன. **சூழ்ந்த**-சூழ்ந்து கொண்டன. **சுந்தரத்தி கிரிப் பொற்றேர்**-அழகிய சக்கரங்களை யுடைய பொன்தேர். 93

504. சோர்ந்துறு கற்பின் மாதர் துணிவுறும் உள்ளம் வேறாய்ச்
சேர்ந்திடு கொழுநர் ஏவல் திருந்துறச் செய்யு மாபோல்
ஊர்ந்திடு பாகர் தம்பால் உளத்திடை முனிவு கொண்டு
கூர்ந்தவர் குறித்தல் செய்யும் கொடுமத மாக்கள் சூழ்ந்த.

யானைகள் செல்லல்

தெளிவுரை : கற்புக்குணம் இல்லாத மங்கையர் துணிகின்ற உள்ளத்துக்கு வேறாக அன்னாரைச் சேரும் கணவரின் ஏவலைச் செய்வது போல் ஊரும் பாகரிடம் உள்ளத்தில் சினம் கொண்டு கூர்ந்து அவர் குறித்தல் செய்யும் கொடிய யானைகள் சூழ்ந்தன.

விளக்கம் : கற்பின் மாதர்-கற்பு+இல்+மாதர்; **துணிவுறும்**-துணிகின்ற. **கொழுநர்**-கணவர். **செய்யுமாபோல்**-செய்வதைப் போல். **பாகர்**-யானைப் பாகர். **குறித்தல் செய்யும்**-குறிப்பிடும் குறிப்பையே செய்யும். **கொடுமத மாக்கள்**-கொடிய மதத்தையுடைய யானைகள். 94

505. நிலத்திடைப் பாயும் சென்று நெடுவிசும்பு அகட்டில் பாயும்
பிலத்திடைப் பாயும், பாழிப் பெருங்கடல் முகட்டில் பாயும்,
உலத்திடைப் பாயும், ஞான ஒருநெறி ஓங்கு றாமல்
புலத்திடைப் பாயும், புல்லர் மனம் எனப் புரவி ஈட்டம்.

குதிரைகளின் செயல்கள்

தெளிவுரை : அற்பரின் மனத்தைப் போல் குதிரைகளின் கூட்டம் நிலத்தில் ஓடும்; சென்று வானத்தின் நடுவில் பாயும்; பாதலத்தில் பாயும்; பெரிய கடல் மீது பாயும்; திரண்ட கல்லின் மீது பாயும்; ஞான நெறி உயர்ந்து விளங்காமல் புலத்தில் பாயும்.

விளக்கம் : நெடுவிசும்பு அகட்டில்-பெரிய வானத்தின் நடுவில். **பிலம்**-பாதலம். **பாழி**-வன்மை. **பெருங்கடல் முகடு**-பெரிய கடல் உச்சி. **உலம்**-திரண்ட கல். **புல்லர்**-அற்பர். **புரவியீட்டம்**-குதிரைகளின் தொகுதி. 95

506. ஈண்டிய அனிகம் நான்கும் எழுந்தன, அவுணர் கோமான்
காண்டலும் உவகை பூத்துக் கவனவாம் புரவி கோடி
பூண்டுறும் இரதம் ஒன்றில் பொருக்என வாவிப் புக்குத்
தூண்டுறு வலவன் பாரா இனையன சொல்வ தானான்.

தேரில் தாருகன் அமர்தல்

தெளிவுரை : நெருங்கிய படைகள் நான்கும் எழுந்தன. அசுரரின் மன்னன் தாருகன் அவற்றைக் காணவும் மகிழ்ச்சி கொண்டு மிக்க விரைவையுடைய கோடிக் குதிரைகள் பூட்டப்பட்ட தேர் ஒன்றில் பொருக்கெனத் தாவிப்புகுந்தான். தேரைச் செலுத்தும் தேரோட்டியைப் பார்த்துப் பின்வருவனவற்றைக் கூறலானான்.

விளக்கம் : ஈண்டிய-வந்து கூடிய. **அனிகம் நான்கும்**-படைகள் நான்கும். **எழுந்தன**-புறப்பட்டனவற்றை. **அவுணர் கோமான்**-அசுரர் மன்னனான தாருகன். **காண்டலும்**-கண்டதும். **உவகை பூத்து**-மகிழ்ச்சி கொண்டு. **கவனவாம் புரவி**-கவனம்+வாம்+புரவி; விரைந்து தாவிஓடும் குதிரை. **பூண்டுறு இரதம்**-பூட்டப்பட்டுள்ள தேர். **பொருக்கென**-விரைவாக. **வாவி**-தாவி. **வலவன்**-குதிரை ஓட்டுபவன். **பாரா**-பார்த்து. 96

507. பாகன்நீ நொடிப்பின் மாதின் படைஎதிர் நமது பொற்றேர்
ஏகுற விடுத்தி என்ன இறைஞ்சிநின்று ஐய என்ன
மாகவாம் பரிகள் தம்மை மத்திகைத் தொழிலால் உந்திச்
சேருலாம் உருளைத் திண்தேர்ச் செலுத்தினன் விரைந்து செல்ல.

பாகனுக்குத் தாருகன் இட்ட கட்டளையும் பாகன் செயலும்

தெளிவுரை : தாருகன் பாகனைப் பார்த்து, 'பாகனே! நீ நொடிப் பொழுதில் (காளி) மாதின் படைக்கு எதிர் நம் பொன் தேர் செல்லும்படி செலுத்துவாயாக', என்றான். அப்போது பாகன் அவனை வணங்கி, 'ஐய அப்படியே' என்று கூறி வானத்தில் தாவிச் செல்லும் குதிரைகளை சம்மடியின் செயலால் உந்தி வயிரம் உடைய சக்கரத்தை உடைய திண்ணிய தேரை விரையுமாறு செலுத்தினான்.

விளக்கம் : பாகனீ-பாகன்+நீ. **நொடிப்பின்**-ஓர் இமைப்போதில். **ஏகுற**-செல்லும்படி. **விடுத்தி**-செலுத்துவாய். **ஐய**-தங்கள் குறிப்பின் படி செலுத்துகிறேன் என்பது பொருள். **மாகவாம் பரிகள்**-மாகம்+வா(வு)ம்+பரிகள்; வானில் தாவிச்செல்லும் குதிரைகள். **சேகுஉலாம் உருளை**-வயிரம் பொருந்திய சக்கரம். 97

508. அடைப்பை, கோடிகம், களாஞ்சி, ஆலவிட் டங்கள், ஒள்வாள்
எடுப்பவர் பலரும் சூழ, விழிக்குறி காட்ட வந்து
படைப்புறம் மொய்க்கும் ஈக்கள் அகற்றுறும் பரிசு போலப்
புடைப்பரி சனங்கள் நின்று பொலியும் வெண்கவரி வீச.

பரிவாரம் சூழ்தல்

தெளிவுரை : வெற்றிலைப்பாக்குப் பை, தட்டு, காளாஞ்சி (தாம்பூல எச்சில் துப்பும் கலம்) ஆலவட்டம் (விசிறி) ஆகியவற்றைக் கைக்கொள்பவர் எடுப்பவர் ஆகிய பலரும் சூழ்ந்து தலைவன் விழிக்குறி காட்ட வந்து படையின் வெளியே சூழும் ஈக்களை அகற்றும் தன்மையைப் போல் பக்கத்தே பரிவாரங்கள் நின்று வெண்ணிறக் கவரியை வீசினர்.

விளக்கம் : அடைப்பை-வெற்றிலைப் பாக்குப்பை. **கோடிகம்**-தட்டு. **களாஞ்சி**-எச்சிலைத் துப்புதற்குரிய கலம். **ஆலவட்டம்**-பெரிய விசிறிகள். **விழிக்குறி**-கண்ணின் குறிப்பு. படையின் புறத்தே மொய்க்கும் ஈக்களைப் போல ஆலவட்டம் வீசினர். **வெண்கவரி**-வெண்மையான கவரி. **பரிசனங்கள்**-பரிவாரம். வெண் கவரி வீசப் பொலியும் என இயையும். 98

509. தாருக மன்னன் ஏகும் தன்மை கண்டு, அனிக வெள்ளம்
வாரிதி ஏழும் உட்க, வல்லிதின் ஆர்த்து எழுந்து
சீர்உறும் அனந்தன் நாமப் பணிஇறை சென்னி மாற்றப்
பாரம் போழ்பட்டு ஏங்கப் படர்ந்தன திசைகள் முற்றும்.

படைகள் சூழ்தல்

தெளிவுரை : தாருக மன்னன் போகும் தன்மையைக் கண்டு படைவெள்ளம் கடல்கள் எழும் அஞ்ச, விரைந்து ஆரவாரித்து எழுந்து, சிறப்புப் பொருந்திய அனந்தன் என்ற பெயர் பூண்ட ஆதிசேடன் படத்தில் கொண்ட தலையினின்று சுமையை மாற்றப் பிளவுபட்டு ஏங்கத் திசைகளில் எல்லாம் படைகள் சூழ்ந்தன.

விளக்கம் : அனிகவெள்ளம்-படைவெள்ளம். **வாரிதி ஏழும்**-கடல் ஏழும். **உட்க**-அஞ்ச. **ஆர்த்து எழுந்து**-ஆரவாரித்து எழுந்து. **போழ்பட்டு**-பிளவுபட்டு. 99

510. படிமகள் அசுர நீசப் பரிசனம் செய்த பாவம்
முடிவுறக் கடவுள் கங்கை மூழ்குவான் படர்தல் என்னக்
கொடியவெம் படைகள் ஆர்த்துக் கொம்என நடக்கும் ஏல்வைப்
பொடிவிசும்பு அடங்க நுங்கி மீமிசை போயிற்று அம்மா.

தூசி மேலே எழுதல்

தெளிவுரை : நிலமகள் அசுரர்கள் என்ற நீசப் பரிவாரம் செய்த பாவம் முடியுமாறு தெய்வத்தன்மையுடைய கங்கை மூழ்கச் செய்திட வந்தது போல, கொடிய படைகள் ஆரவாரித்துக் கொம் என நடக்கும் போது எழுந்த தூசியால் வானம் அடங்க விழுங்கி மேலே போயிற்று.

விளக்கம் : படிமகள்-நிலமகள். **பரிசனம்**-பரிவாரம். **முடிவுற**-முடிய. **கடவுள் கங்கை** தெய்வத்தன்மையுடைய கங்கையாறு. **மூழ்குவான்**-முழுகிட. ஆர்த்து-ஆரவாரம் செய்து அசுரப்படை செய்த பாவத்தைப் போக்கக் கங்கையில் முழ்கச் சென்றதைப் போல் படை சென்றது. **ஏல்வை**-பொழுது. படை சென்றதால் எழுந்த தூசி வானம் முழுவதும் மூடச் சென்றது. **நுங்கி**-விழுங்கி. **மீமிசை**-மிகவுயரம்; ஒரு பொருட்பன்மொழி. **பொடி**-தூசி. **அம்மா**-அசை. 100

511. விண்எழும் பூழி மாலை வெண்குடை அடைந்து அப்பால்போய்க்
கண்ணகன் கதிரின் மேனிக் கவின்அழியாத வண்ணம்
நண்ணுபு தடுத்த ஆழி நஞ்சுதான் அருந்தி முக்கண்
பண்ணவன் அமரர்க் காத்த பேர்அருள் பான்மை யேபோல்.

புழுதி அழுக்கடையாது கதிரவனின் அழகைக் காத்தது

தெளிவுரை : வானத்தில் எழும் புழுதி மாலையிலும் வெண்குடையிலும் அடைந்து அப்பாற் போய் இடம் அகன்ற கதிரவனின் மேனி அழகு அழியாதபடி அடைந்து தடுத்தது, பாற்கடலில் தோன்றிய நஞ்சை அருந்தி முக்கண் இறைவன் சிவபெருமான் தேவர்களைக் காக்கப் பேரருள் தன்மையைப் போல்!

விளக்கம் : பூழி-புழுதி. **கண்ணகன்**-இடம் அகன்ற. **கதிரின்**-கதிரவனின். **கவின் அழியாத வண்ணம்**-அழகு அழியாதபடி. **நண்ணுபு**-அடைந்து. **தடுத்த**-தடுத்தன. **ஆழி நஞ்சு**-பாற்கடலில் தோன்றிய நஞ்சு. **முக்கட்பண்ணவன்**-மூன்று கண்களையுடைய சிவபெருமான். 101

512. நீங்கிய நாணுப் பெற்று நிறைஅழி கணிகை மாதர்
தாங்களோர் உழியில் கூடித் தத்தமில் மலைத லேபோல்
பூங்கழல் மிழற்றச் செல்லும் பொருநர் கைப்பற்ற விண்ணின்
ஓங்கியே கொடிகள் ஒன்றோடு ஒன்று தாக் குற்றஅன்றே.

கொடிகளின் தோற்றம்

தெளிவுரை : நீங்கப் பெற்ற நாணத்தைப் பெற்றுக் கற்பிழந்த கணிகை மாதர் போல் தாங்கள் ஓர் ஊழியில் கூடித் தமக்குள் போரிட்டுக் கொள்வதைப் போல் அழகிய கழல் ஒலிக்கச் செல்லும் போர்வீரர் கையில் பற்றி வானத்தில் உயர்ந்த கொடிகள் ஒன்றுடன் ஒன்று தாக்கிக் கொண்டன.

விளக்கம் : கணிகையர் தமக்குள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதைப் போல் வீரர் கையில் உள்ள கொடிகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன. **நாணு**-நாணம். **நிறையழி கணிகை**-கற்பு கெட்ட கணிகை. **தத்தமில்**-தங்கள் தங்களுக்குள். **மலைதலே போல்**-போரிடுவதைப் போல். **பொருநர்**-வீரர். **தாக்குற்ற**-தாக்கிக் கொண்டன. **அன்றே**-அன்று, ஏ-அசைகள். 102

513. தழங்கின முரசம் ஆர்ந்த தண்ணுமை கலித்த மொந்தை
முழங்கின படகம் எல்லாம் மொய்ம்பினின் இனியவர் தாக்கும்
செழுங்கர விசைகட்கு ஏற்பச் சிலம்பின புவனி மாந்தர்
அழும்குரல் ஓசை யேற்றும் அடுக்கியன்று எழுதலேபோல்.

கருவிகள் முழங்கின

தெளிவுரை : முரசுகள் ஒலித்தன தண்ணுமை ஆரவாரித்த சிறுகண் பறை ஒலித்தது. முழவு எல்லாம் முழங்கின. வன்மையுடன் கருவிகளை இசைப்பவர் தாக்கும் செழுங்கர விசைக்கு ஏற்றபடி உலக மாந்தர் அழும் குரல் ஓசையை ஏற்று அடுக்கடுக்காய் கூடி எழுதலைப் போல் விளங்கி ஒலித்தன.

விளக்கம் : தழங்கின-ஒலித்தன. **ஆர்த்த**-ஒலித்தன. **கலித்த**-முழங்கின. **மொந்தை**-ஒருகண்பறை; ஒரு தோற்கருவி. 103

514. இவ்வகை அனிகம் என்னும் இருங்கடல் விரைந்து சூழத்
தெவ்அடு குவவுத் திண்தோள் திருகுஉளத்து அவுணர் கோமான்
கொவ்வையம் கனிவாய்ச் செங்கண் குமரிதன் படைவந்து எய்தும்
அவ்வுழி எதிர்சென்று ஏற்றான் அமரர்கள் நடுங்கி ஏங்க.

தாருகன் காளிப்படையை எதிர்த்தல்

தெளிவுரை : இவ்வாறு படைகள் என்னும் பெரிய கடல் விரைந்து வந்து சூழ்ந்து கொள்ளப் பகைவரைக் வெல்லும் திரண்ட திண்ணிய தோளையும் மாறுபட்ட உள்ளத்தையுமுடைய அசுரர் தலைவன் தாருகன் கொவ்வைக் கனிபோன்ற அழகிய வாயையும் சிவந்த கண்ணையும் உடைய குமரியான காளியின் படை வந்து சேரும் அப்போது எதிரே போய் அப்படையைத் தேவர்கள் நடுங்கி ஏங்க எதிர் ஏற்றான்.

விளக்கம் : அனிகம் என்னும் இருங்கடல்-படை என்ற பெரிய கடல். **குவவுத் திண் தோள்**-திரண்ட திண்ணிய தோள். **திருகு உளத்து அவுணர்**-மாறுபட்ட உள்ளத்தை உடைய அசுரர். **கொவ்வையங்கனிவாய்**-கொவ்வைக் கனியைப்போன்ற அழகிய வாய். **குமரி**-காளி. **ஏற்றான்**-எதிர்த்தான். 104

515. மண்டுறும் அவுண வெள்ளம் மலிந்துஎதிர் வந்த தன்மை
கண்டனா வடவை யேபோல கனன்றியோ கினிகள் சூலம்
திண்திற லோடு செங்கை விரல்களால் திரித்து மிக்க
அண்டகோ ளகைவெடிப்ப ஆர்த்துஎதிர் சென்று புக்கார்.

காளியின் படைகள் அவுணர் படைமுன் செல்லல்

தெளிவுரை : பொருந்திய அசுரர் வெள்ளம் மிக்கு எதிர்வந்த தன்மையைக் கண்டனர் வடவைத் தீயைப் போல் சினந்து யோகினியர் சூலம், சூலம், திண்மையான ஆற்றலுடன் சிவந்த விரலால் சுழற்றி உலகத்தின் மேல் முகடு வெடிக்க ஆரவாரித்துச் சென்று சேர்ந்தனர்.

விளக்கம் : மண்டுற-நெருங்கிய, பெருகிய. **அவுண வெள்ளம்**-அசுரர் படைகள். **கண்டனர்**-கண்டவர் காளியின் படையினர். **வடவையேபோல்**-வடவாமுகாக்கினியைப் போல். யோகினியர் சூலத்தை விரல்களால் சுழற்றியபடி அசுரர் படையை எதிர்த்தனர். **அண்டகோளகை**-உலக உருண்டை. **வெடிப்ப**-வெடிக்கும்படி. **திண்டிறல்**-மிக்க ஆற்றல். 105

வேறு

516. எழுக்களும் உசலமும் இலைகொள் வேல்களும்
மழுக்களும் வளைகளும் வாளும் வாளியும்
கழுக்களும் மலைகளும் கதையும் காளிகள்
குழுக்களும் அவுணர் மேல் கொதித்து வீசினார்.

காளியின் படையினர் எழு முதலியவற்றை எறிதல்

தெளிவுரை : எழுவும் உலக்கையும் இலைப்பகுதியை யுடைய வேல்களும், மழுக்களும், வளைதடிகளும், வாளும் அம்பும், சூலங்களும், மலைகளும், கதையும் ஆகியவற்றைக் காளியின் படையினர் அசுரர் மீது சினம் கொண்டு வீசினர்.

விளக்கம் : எழு-ஒருவகை ஆயுதம். **முசலம்**-உலக்கை. **இலைகொள்வேல்கள்**-இலையைப் போன்ற உறுப்பையுடைய வேல்கள். **மழு**-ஓர் ஆயுதம். **வளைகள்**-வளைதடிகள் என்ற ஆயுதம். **கதை**-தண்டு என்ற கருவி. **கொதித்து**-சினந்து. 106

517. தோமரம் ஒளிறுவாள் சுரிகை முத்தலை
நேமிகள் சிலைஉமிழ் நெடுஞ்சி லீமுகம்
நாமவேல் முதலின நஞ்சின் தீய்வர்
தாமும்யோ கினிகள்மேல் தருக்கி வீசினார்.

அசுரர் படைகளை எறிதல்

தெளிவுரை : இரும்பு உலக்கை ஒளிறும் வாள். (உடைவாள்), சுரிகை மூன்று தலைகளை யுடைய சூலம். சக்கரங்கள், வில்கள் எய்யும் நீண்ட அம்புகள் அச்சம் தரும் வேல் முதலியவற்றை நஞ்சைவிடத் தீயவர் ஆகிய அசுரரும் யோகினிப்படை மீது தருக்கி எறிந்தனர்.

விளக்கம் : தோமரம்-இரும்பு உலக்கை. **சுரிகை**-உடைவாள். **முத்தலை**-மூன்று தலைகளையுடைய சூலம். **நேமிகள்**-சக்கரங்கள். **சிலை**-வில். **சிலீமுகம்**-அம்பு. **நாமவேல்**-அச்சம் தரும் வேல். **நஞ்சின் தீயர்**-நஞ்சைவிடத் தீயவர். **தருக்கி**-செருக்குடன். 107

518. கரங்களின் முசலமும் கதையும் நல்கியே
உரங்கிளர் சொரிமதம் ஒருத்தல் உந்தினார்
மருங்குற ஒளிறுகை வாள்வி திர்த்துவன்
துரங்க ராசிகள் தமைத் தூண்டி ஈண்டினார்.

காளிப்படையினர் செயல்

தெளிவுரை : கைகளில் இருப்புலக்கையும், தண்டும் ஆகியவற்றைத் தந்து வன்மை விளங்கும் மதத்தையுடைய யானையைச் செலுத்தினர். பக்கத்தில் விளங்கிய கைவாள் விதிர்த்து வலிய குதிரைகளைத் தூண்டி நெருங்கி எதிர்த்தனர்.

விளக்கம் : முசலம்-இரும்பு உலக்கை. **கதை**-தண்டு. **உரம்கிளர்**-வன்மையுடைய. **சொரிமத ஒருத்தல்**-மதத்தைச் சொரியும் யானை. துரங்க+ராசிகள்+தமை; குதிரைக் கூட்டத்தை **ஈண்டினார்**-நெருங்கினார். 108

519. தார்கெழு தடம்புயத் தகுவர் ஆழியந்
தேர்களை முடுக்கிஎண் திசையும் சூழ்ந்து கொண்டு
ஏர்கிளர் கொடுமரம் இமைப்பின் வாங்கிவிண்
கார்களின் மும்மைவெங் கணைகள் சிந்தினார்.

அசுரர் அம்புகளை எய்தனர்

தெளிவுரை : மாலையைச் சூடிய பெரிய தோள்களை உடைய அசுரர் சக்கரத்தையுடைய தேர்களைத் தூண்டி எட்டுத் திசைகளிலும் சூழ்ந்து கொண்டு அழகு விளங்கும் வில் இமைப்போதில் வளைத்து வானின்று பெய்யும் மேகத்தைவிட மூன்று மடங்கு கொடிய அம்புகளை எய்தனர்.

விளக்கம் : தார்-மாலை. **தகுவர்**-அசுரர். **ஆழிஅம்தேர்கள்**-சக்கரத்தையுடைய அழகிய தேர்கள். **விண்கார்**-வானில் உலவும் மேகம். **ஏர் கிளர்**-அழகு விளங்கும். **கொடுமரம்**-வளைவான வில். **மும்மை**-மூன்று மடங்கு. 109

520. விழுந்தன தலையுடல் வேறு வேறதாய்;
அழுந்திட வரைகளின் ஆற்றின் செம்புனல்
எழுந்தன இருதிறத் தினும்எண் இல்லவர்
உழுந்துஉருள் பொழுதினில் உலந்து போயினார்.

எண்ணற்றவர் மடிந்தனர்

தெளிவுரை : தலைகளும் உடல்களும் வெட்டப்பட்டு விழுந்தன. வேறு வேறாய் அழுந்திட மலைகளினின்று வரும் ஆற்றினைப் போல் செம்புனல்கள் எழுந்தன. இருபக்கங்களிலும் எண்ணற்றவர் உழுந்து உருள் பொழுதில் அழிந்து போயினர்.

விளக்கம் : வரைகளின் ஆற்றின்-மலையினின்று விழும் ஆற்றைப் போல். **செம்புனல்**-செந்நீர்; குருதி. **உழுந்து உருள் பொழுதினில்**-உழுந்து உருளும் நேரத்தில். 110

521. கண்டனர் அவுணர்தம் களிப்பும் ஆற்றலும்
ஒண்டழல் எனஉளம் உருத்துப் பொங்கினார்
அண்டமும் இடிபட அதிர்த்து வல்லையின்
மண்டியோ கினிகள்தாம் மலைதல் மேயினார்.

யோகினிப்படை நெருங்கிப் போரிடலானார்

தெளிவுரை : அசுரர்களின் களிப்பையும் ஆற்றலையும் காளியின் படையினர் கண்டனர். ஒள்ளிய அழல் என்று உள்ளம் வருந்திப்

பொங்கினார். அண்டமும் இடியும்படி ஆரவாரித்து விரைந்து நெருங்கிப் போரிடலானார்.

விளக்கம் : களிப்பு-செருக்கு; மகிழ்ச்சி. **ஆற்றல்**-போர்த்திறம். **ஒண்டழல்**-ஒண்+தழல் ஒளியுடைய தீ. **உருத்து**-சினந்து. **அதிர்த்து**-ஆரவாரித்து. **வல்லையின்**-விரைவில். **மலைதல் மேயினர்**-போரிடலானார். 111

522. பரியொடு பரிகளும், பனைக்கை மும்மதக்
கரியொடு கரிகளும், கதிரு லாமணி
இரதமொடு இரதமும், எடுத்து வீசினார்
சுரர்உளம் மகிழ்வொடு துணங்கை ஆடவே.

தேவர் மகிழப் போரிடல்

தெளிவுரை : குதிரைகளுடன் குதிரைகளும், பனைமரம் போன்ற கைகளையுடைய மூன்று மதம் உடைய யானைகளுடன் யானைகளும், ஒளிபொருந்திய மணி பதிக்கப்பட்ட தேர்களுடன் தேர்களும் மோதின புல்வகைப் படைகளை யோகினிப் படையினர் எடுத்து எறிந்தனர். அதைக் கண்டு தேவர் மனம் மகிழ்ந்தனர். துணங்கைக் கூத்தாடினர்.

விளக்கம் : பரி-குதிரை. **பனைக்கை மும்மதக்கரி**-பனைபோன்ற கையையுடைய மூன்று மதங்கள் பொருந்திய யானை. **துணங்கை**-கைகோத்து ஆடும் ஆட்டம். 112

523. சிறந்திடு நெடுமணித் திகிரித் தேர்களை
உறைந்தவ ரொடும்எடுத்து உம்பர் வீசினார்
மறந்தரு பெருவலி மாரு தம்பறித்து
எறிந்திடு மேருவின் முடிகள் என்னவே.

தேர்களை எடுத்தெறிதல்

தெளிவுரை : வீரத்துடன் கூடிய பெரியவன்மையுடைய சூறைக்காற்று மேருமலையின் முடிகளைப் பறித்து எறிவதைப் போன்று, சிறந்த மணிகள் பதித்த பெரிய சக்கரங்களையுடைய தேர்களை அதில் ஏறியிருப்பவருடன் எடுத்து வானில் வீசினார்கள்.

விளக்கம் : நெடுமணித்திகிரித் தேர்கள்-மணிகள் பதித்த சக்கரத்தையுடைய பெரிய தேர்கள். **உம்பர்**-வானில். **மறந்தரு பெருவலி மாருதம்**-வீரம் பொருந்திய பெரிய வன்மைகொண்ட சூறைக்காற்று. **மேருவின் முடிகள் என்ன**-மேருமலையின் முடிகளை ஒரு காலத்தில் பிடுங்கி எறிந்தது மாருதம். அதுபோல் தேர்களை வீரர்கள் எடுத்து எறிந்தனர். **மாருதம்**-சூறைக்காற்று. 113

524. கொய்யுளை மாவும்வெண் கோட்டு வேழமும்
ஒய்என வேஎடுத்து உகைக்கின் றோருடன்
மையலில் சூரர மகளிர் வீசினார்
வெய்யவன் தேரொடு விலங்க விண்ணின்மேல்.

கதிரவன் விலகிப் போதல்

தெளிவுரை : கொய்யப்படும் தலை மயிரை உடைய குதிரையும் வெண்மையான கொம்புகளையுடைய யானைகளும் விரைய அவற்றில் அமர்ந்து செலுத்துபவருடன் குற்றமற்ற காளிப்படை மகளிர் வீசினார்கள் அதனால் கதிரவன் வானில் தன் தேருடன் விலங்கிப் போனான்.

விளக்கம் : கொய் உளை மா-கத்தரிக்கப்படும் தலைமயிர் (குதிரை). **வெண்கோட்டு வேழம்**-வெண்மையான கொம்பையுடைய யானை. **உகைக்கின்றோருடன்**-செலுத்துபவருடன். **சூராமகளிர்**-தெய்வமங்கையர். **வெய்யவன்**-கதிரவனுடன். **விலங்க**-விலகிப்போக. 114

525. அருகுறும் அவுணரை அடர்ந்து பற்றியே
கருகுறும் மிடற்றினைக் கடித்துக் கொக்கிடைத்
திருகுறு கனிஎனச் சுவைத்துச் செம்புனல்
பருகினர் முனிவொடு பசிசற்று ஆற்றினார்.

யோகினியர் அசுரரின் இரத்தத்தைக் குடித்தல்

தெளிவுரை : யோகினிப் படையினர் அருகில் உள்ள அசுரரை நெருங்கிப் பற்றிக் கரிய கழுத்தினைக் கடித்து மாமரத்தில் பறிக்கின்ற பழத்தைப் போன்று சுவைத்துச் செந்நீரை, குருதியைக் குடித்தனர் கோபத்துடன் சிறிது தம் பசியை ஆறினார்.

விளக்கம் : அருகுறு-பக்கத்தில் பொருந்திய. **கருகுறு பிடர்**-கருமையுடைய கழுத்து. **கொக்கிடை**-மாமரத்தில். **திருகுறுகனி**-பறிக்கப்படுகின்ற பழம். **செம்புனல்**-குருதியை. **பருகினர்**-குடித்தனர். யோகினியர் அசுரரின் கழுத்தைக் கடித்து இரத்தத்தைக் குடித்தனர் என்பதாம். 115

526. பிடித்தனர் குருதிநீர் பிலிற்றக் கைகளால்
அடித்தனர், அவுணர்தம் ஆக்கை என்புஎலாம்
ஒடித்தனர், நகநிரை உதிரத் தண்டினால்
இடித்தனர், உயிரைவிண் ஏற்றினார்அரோ.

அவுணர் உயிர்களைப் பறித்தல்

தெளிவுரை : யோகினியர் கைகளால் அவுணரின் உடலினின்று பெருகும் குருதியைப் பிடித்தனர். அவுணர்களின் உடம்பு எலும்பு ஆகியவற்றை அடித்து ஒடித்தனர். குருதி ஒழுகும் தண்டினால் இடித்தனர். உயிரை வானில் ஏற்றினர்.

விளக்கம் : குருதிநீர்-இரத்தம். **பிலிற்ற**-வெளிப்பட. **ஆக்கை**-உடல். **என்புஎலாம்**-எலும்பை எல்லாம். **உதிரத் தண்டினால்**-இரத்தத்தை யுடைய தண்டால். **அரோ**-அசை. 116

வேறு

527. வெருட்டினர், உதைத்தனர், மிதித்தனர், துகைத்தார்,
மருட்டினர், இடித்தனர், வளைத்தனர், செறுத்தார்,
புரட்டினர், எடுத்தனர், புடைத்தனர், அறுத்தார்,
உருட்டினர் தயித்தியர் உயிர்க்குஇடர் இழைத்தார்.

யோகினியர் பகைவரைத் தாக்கிய திறம்

தெளிவுரை : பகைவரை வெருட்டினர்; உதைத்தனர்; மிதித்தனர்; துவைத்தனர்; மயங்கச் செய்தனர்; இடித்தனர்; வளைத்தனர்; சினந்தனர்; புரட்டினர்; மேலே எடுத்தனர்; புரட்டினர்; உருட்டினர்; அவுணரின் உயிர்க்குத் துன்பத்தைச் செய்தனர்.

விளக்கம் : யோகினியர் அவுணரை வெருட்டுதல் முதலியன செய்தனர். **வெருட்டினர்**-அஞ்சச் செய்தனர். விரட்டினர் எனவும்

கொள்ளலாம். **துகைத்தார்**-துவைத்தார். **மருட்டினர்**-மயங்கச் செய்தனர். **செறுத்தார்**-பகைத்தார். **புடைத்தனர்**-அடித்தார். **கறுத்தார்**-சினந்தார். **தயித்தியர்**-அசுரர். 117

528. அடுத்தஅ சுரக்குழு எடுத்து அதிர் உறுங்கார்
இடத்தினும் நகத்தினும் நிலத்தினும் எறிந்தார்
நொடித்திடு வரைப்பினுள் நொறுக்கினர் அனந்தம்
படைத்தலை வரைப்பதை பதைத்திட அறைந்தே.

நொடிப் பொழுதில் அழிவு செய்தல்

தெளிவுரை : வந்து பக்கத்து இருந்த அசுரப்படைக் குழுவை எடுத்து அதிரும் மேகத்திலும், மலையிலும் பூமியிலும் எறிந்தார்கள். அளவற்ற படைத் தலைவரைப் பதைபதைக்க அறைந்து நொடிப்பொழுதில் அழித்தனர்.

விளக்கம் : அசுரக்குழு-அசுரக் கூட்டம். **அதிர்உறும்**-அதிர்ச்சி அடையும். **காரிடம்**-மேகம். **நகம்**-மலை. **நொடித்திடு வரைப்பினுள்**-ஓர் இமைப்போதில். **அனந்தம்**-அளவற்ற. 118

529. இத்திறம் யோகினிகள் எங்கணும் நெருங்கிக்
கொத்தசுர வெள்ளம் அயுதம்கடிது கொன்றார்
அத்திறம் அனைத்தும்ஓர் அடற்புய அமைச்சன்
நெய்த்தழல் எனக்கனலும் நெஞ்சமொடு கண்டான்.

அமைச்சன் ஒருவன் படையழிவைப் பார்த்தல்

தெளிவுரை : இங்ஙனம் யோகினியர் போர்க்களத்தில் எல்லாவிடங்களிலும் நெருங்கிக் கூட்டமான அசுரப் படைப் பதினாயிரத்தை விரைவில் கொன்றார்கள். அவர்கள் போர் செய்த ஆற்றல் எல்லாவற்றையும் ஓர் தோள் வன்மையுடைய அமைச்சன் நெய் வார்த்த தீயைப் போன்று சினம் கொண்ட மனத்துடன் பார்த்தான். 119

530. கண்டவன் இலங்குஇரதம் அங்குஎதிர் கடாவி
விண்டுமக மேருவும் வெடித்திட அதிர்த்து
வண்டுபொழி கின்றதனி வார்சிலை வளைத்துக்
கொண்டுஒரு கணத்தினில் அடைந்துஅடல் குறித்தான்.

539. திகிரி மாய்வுறக் கனன்றனள் திகிரிஒன்று ஒழியின்
பகரும் ஆதிஅப் பெயர்த்தினை ஒல்லையில் பறித்து
நிகரில் வீரன்மேல் எறிந்தனள் அஃது அவன் நீக்கான்
அகல வாகுவில் ஏற்றனன், ஆர்த்து எதிர்புகுந்து.

யோகினி மலையைப்பிடுங்கி எறிதல்

தெளிவுரை : தான் செலுத்திய சக்கரப்படையானது அழிந்து போனதால் சினந்து திகிரி என்ற பெயரையுடைய மலை என்ற ஒன்றை விரைவாகப் பறித்து ஒப்பில்லாத வீரன் மீது எறிந்தாள். அஃது அவன் நீக்காமல் ஆரவாரித்து எதிரே போய் அகன்ற தோளில் ஏற்றான்.

விளக்கம் : திகிரி-சக்கரம். அதன் மூன்று எழுத்துள் ஆதியான ஓர் எழுத்து (தி) என்பது நீங்கின் 'கிரி' என்றாகும். எனவே யோகினி மலையைப் பிடுங்கி அசுரன் மீது எறிந்தாள். **ஆதியப் பெயர்த்தினை**-முதல் எழுத்து நீங்கப் பெற்ற பெயரினையுடைய மலையை (கிரியை). **ஒல்லை**-விரைந்து. **நிகர்இல் விரன்**-ஒப்பில்லாத வீரனான அமைச்சன். **அகல்வாகு**-அகலமான தோள். 129

540. அந்த வெற்புஅவன் அடற்புயம் தாக்கிமீண்டு அதிர்ந்து
வந்து பட்டுஅவள் முலைத்தடத்து இற்றது வறிதே
முந்துமற்றவர் புயமுலைக் குடைந்திடுமுனிவால்
உந்த உற்றவை யொடும்பொருது இறந்தவாறு ஒப்ப.

மலை பொடியாதல்

தெளிவுரை : யோகினியால் வீசப்பட்ட அம்மலை அந்த அசுர அமைச்சனின் வன்மையுடைய தோளில் தாக்கி மீண்டு அதிர்ந்து வந்து அவளது கொங்கையிடத்தில் தாக்கி அழிந்தது வீணே! முந்தும் வீரர் தோள் எப்போதும் முலைக்குத் தோற்றுவிடும். சினத்தினால் முலைகளுடன் போரிட்டுத் தோற்றது போல் விளங்கியது.

விளக்கம் : வெற்பு-மலை. **அடற்புயம்**-வன்மையுடைய தோள். **முலைத் தடத்து**-முலையில். **அற்றது**-அழிந்தது. **வறிதே**-வீணே. மலை மங்கையர் மார்பில் மோதி உடைந்தது. முலைக்குத் தோள் தோற்கும். அதனால் அதன் மீது சினந்து போரிட்டு இறந்தது போல் விளங்கியதாம். 130

541. வெய்ய ஒண்கிரி இற்றலும், விரைந்துவில் வணக்கி,
ஐஇ ரண்டுவெம் பகழிகள் அவன்நுதல் அழுத்திக்,
கையில் வன்கதை ஒன்றுஎடுத்து இமைப்பினில் கலந்து
மொய்இ லங்கு அவன் முடிமிசை மோதினள்; முடிந்தான்.

அசுரன் அழிதல்

தெளிவுரை : கொடிய ஒளியுடைய மலை அழிந்ததும், விரைவாக வில்லை வளைத்துப் பத்துக்கொடிய அம்புகளை அந்த அசுரனின் நெற்றியில் அழுத்தக் கையில் வன்மையான தண்டாயுதம் ஒன்றை எடுத்து இமைப்போதில் நெருங்கி அவனது முடிமீது தாக்கினாள் யோகினி. அவன் மாய்ந்தான்.

விளக்கம் : வெய்ய ஒண்கிரி-கொடிய ஒளியுடைய மலை. **இற்றலும்**-அழியவும். **வணக்கி**-வளைத்து. **ஐஇரண்டு பகழி**-பத்து அம்புகள். **நுதல்**-நெற்றி. **வன்கதை**-வலிய தண்டு. **முடிந்தான்**-இறந்தான். 131

542. முன்னர் மெய்யொடும் விசும்பிடை ஏற்றினாள் முனிந்து
பின்னர் மந்திரக் கிழமையோன் தனைஉடல் பிரித்து
மன்னும் உம்பரின் மீண்டிடாது ஏற்றிட மகிழ்ந்து
துன்னு புங்கவர் குரவையாட் டயர்ந்தனர் துள்ளி.

தேவர்கள் மகிழ்தல்

தெளிவுரை : முன்னம் அமைச்சன் உடலை வானத்தில் ஏற்றியவள் முனிந்து பின்பும் அவளது உடலைப் பிரித்துப்பொருந்திய தேவர் உலகில் மீண்டு வராமல் ஏற்றினாள். அதைக் கண்டு மகிழ்ந்து தேவர்கள் துள்ளிக் குதித்துக் குரவை ஆடினர்.

விளக்கம் : முனிந்து-சினந்து. **மந்திரக்கிழமையோன்**-அமைச்சவைக்குரியவன்; அமைச்சன். **உடல் பிரித்து**-உடலைப் பிரித்து. **உம்பரில்**-மேல் உலகத்தில். **துன்னுபுங்கவர்**-பொருந்திய தேவர். **குரவையாட்டு அயர்ந்தனர்**-குரவையாட்டம் ஆடினர். வெற்றியைக் கொண்டாடக் குரவை ஆடுதல் வழக்கம். 132

543. ஆன காலையின் அமைச்சன் அங்குஇறந்தமை அறிந்து
தான மாறிகர் அவுணர்கள் சீறிஅச் சண்டி
சேனை நாயகி மீதுபல் படைக்கலம் சிதறி
மீன வேலைகள் முழக்கமும் மழுங்கமிக்கு ஆர்த்தார்.

அசுரர் படை தேவர்படையைத் தாக்குதல்

தெளிவுரை : அச்சமயத்தில் அமைச்சன் இறந்துவிட்டதை அறிந்து மதத்தையுடைய யானையைப் போன்ற அசுரர்கள் சினந்து அந்தக் கிரிப்படையின் தலைமீது பல படைக்கலங்களை எய்து மீனையுடைய கடல் ஒலியும் அடங்க மிகுதியாய் ஆரவாரித்தனர்.

விளக்கம் : அமைச்சன்-அசுரர் அமைச்சன். **தானமா**-மதத்தையுடைய யானை. **அச்சண்டி**-அக்காளி. **படைக்கலம் சிதறி**-படைக்கலங்களை எய்து. **மீன வேலைகள்**-மீனையுடைய கடல்கள். **முழக்கம்**-ஒலி. 133

544. அன்ன தன்மைகண்டு யோகினி கடிதின்ஓர் அடல்வாள்
தன்னை அங்கைகொண்டு அப்படை அனைத்தையும் தடிந்து
பன்ன லின் குவை பாற்றிடும் சூறைமா ருதம் போல்
மன்னு வெந்தொழில் அவுணருள் புகுந்தனள் மலைந்தாள்.

யோகினி வாளைக்கைக் கொண்டு படைக்குள் புகுதல்

தெளிவுரை : அன்னார் செயலின் தன்மையைக் கண்டு, யோகினி, விரைவாக ஓர் வலிய வாளைக் கைக் கொண்டு அப்படை அனைத்தையும் அழித்துப்பருத்திக் குவையைச் சீய்க்கும் சூறைக்காற்றைப் போன்று பொருந்திய கொடிய தொழில் உடைய அவுணர்படைக்குள் புகுந்து போரிட்டாள்.

விளக்கம் : கடிதின்-விரைவாக. **அடல்வாள்**-வன்மையுடைய வாள். **தடிந்து**-அழிந்து. **பன்னலின் குவை**-பருத்திக்குவியல். **பாற்றாடும்**-குலைக்கும். **சூறைமாருதம்**-சூறைக்காற்று. **வெந்தொழில் அவுணர்**-கொடிய தொழிலை யுடைய அசுரர். 134

545. தாள்து ணித்தனள், தலைகளைத் துணித்தனள், சயங்கூர்
தோள்து ணித்தனள், கரங்களைத் துணித்தனள், சுடரும்
வாள்து ணித்தனள், கொடுமரம் துணித்தனள், வயம்சொல்
சூள்து ணித்தனள், இமைப்பினில் கறங்குஎனச் சுழன்று.

யோகினி போரிடல்

தெளிவுரை : யோகினி ஓர் இமைப்பினில் காற்றாடி போல் சூழன்று அசுரப் படையினரின் கால்களைத் துண்டித்தாள்; தலைகளைத் துண்டித்தாள்; வெற்றி மிக்க தோள்களைத் துண்டித்தாள்; கைகளைத் துண்டித்தாள்; ஒளிவிடும் வாள்களைத் துண்டித்தாள்; வளைந்த வில்லைத் துண்டித்தாள்; வெற்றியுரைக்கும் சூளைத் துண்டித்தாள்.

விளக்கம் : தாள் துணித்தாள்-கால்களைத் துண்டித்தாள். **துணித்தனள்**-துண்டித்தாள். **கொடுமரம்**-வளைந்த மரமானவில். **வயம் சொல் சூள் துணித்தனள்**-அசுரரின் வெற்றியடைவேன். என்று கூறிய சபதத்தைத் துண்டித்தாள். **கறங்கென**-காற்றாடியைப் போல். 135

546. சிலைகள் அற்றன உடம்பிடி அற்றன செழுமு
இலைகள் அற்றன நெடுங்கரம் அற்றன எழில்தோள்
மலைகள் அற்றன துணைப்பதம் அற்றன வயவர்
தலைகள் அற்றன தகுவியர் தாலியும் அற்றார்.

வில்முதலியன அழிதல்

தெளிவுரை : யோகினி நிகழ்த்திய போரால் வில்கள் அழிந்தன, வேல்கள் ஒடிந்தன; செழுமையான மூன்று இலைகளையுடைய சூலங்கள் முரிந்தன. நீண்ட கைகள் துண்டாயின. அழகிய தோள் மலைகள் குலைந்தன. இரண்டு அடிகள் துண்டாயின. வீரர் தலைகள் அறுப்பட்டன. அசுரர் மனைவியர் தாலியையும் இழந்தனர்.

விளக்கம் : சிலைகள்-வில்கள். **உடம்பிடி**-வேல்கள். **செழுவிலைகள்**-செழுமையான சூலங்கள். **நெடுங்கரம்**-நீண்ட கைகள். **எழில் தோள்**-அழகிய தோள். **துணைப்பதம்**-இரண்டு கால்கள். **வயவர்**-வீரர். **தகுவியர்**-அசுர மகளிர். 136

547. குன்றம் எண்இல போலவே களேபரம் குவிந்த
துன்றும் ஓங்கலில் தொடங்கிஓடு ஆறுஎனச் சோரி
ஒன்றி வீழ்பிணக் குவாலினும் நின்றுஇழிந்து ஒலித்துச்
சென்று வேலைபுக் கனகருங் கடல்பெயர் தீர.

பிணமலையினின்று இரத்த ஆறு ஓடுதல்

தெளிவுரை : எண்ணில்லாத மலைகளைப் போல் பிணங்கள் குவிந்தன. பொருந்திய மலையில் தொடங்கி ஓடும் ஆற்றைப்போல் இரத்தம் பொருந்தி, விழும் பிணக்குவியலினின்று இழிந்து ஒலித்துக்கொண்டு போய்க் கடலில் புக்குக் கருங்கடல் என்ற பெயர் நீங்க! (சிவந்த கடலாயிற்று).

விளக்கம் : எண்ணில்லாத பிணக்குவியல். அதிலிருந்து இரத்தம் ஒடிக்கடலில் கலந்து அதன் கருங்கடல் என்ற பெயரை மாற்றும். இரத்தம் செந்நிறம். ஆதலால் அது கலத்தலால் கருங்கடல் என்ற பெயர் மாறிச் செங்கடல் ஆயிற்று.

களேபரம்-பிணம். **ஓங்கல்**-மலை. **சோரி**-இரத்தம். **பிணக்குவால்**-பிணக்குவியல். **வேலைபுக்கு**-கடலில் புகுந்து. 137

548. படர்ந்த காகமும் எருவையும் வன்சிறைப் பருந்தும்
அடைந்த ஞாளியும் இகலனும் அளைக்குறு நரியும்
குடைந்து மூளையும் நிணங்களும் தின்றுபேய்க் கூத்தாய்க்
கிடந்த தெங்குமவ் விறலியோ கினிபொருங் களமே.

பேய்க் கூத்தாய்க் கிடந்தது களம்

தெளிவுரை : அந்த ஆற்றலையுடைய யோகினி போரிட்ட களம், பறந்து பரவிய காகங்களும் கழுகுகளும் வலிய சிறகையுடைய பருந்தும் அடைந்த நாய்களும் நரியும் குறுநரியும் குடைந்து மூளையும் நிணங்களும் தின்று பேய்க் கூத்தாய்க் கிடந்தது எவ்விடத்தும்!

விளக்கம் : எருவை-கழுகு. **வன்சிறைப்பருந்து**-வலிய இறகையுடைய பருந்து. **ஞாளி**-நாய். **இகலன்**-நரி. **பேய்க்கூத்தாய்**-பேய்க்கூத்தாடியது போல். **பொருங்களம்**-போரிடும் களம். 138

549. பிறங்கல் போல்உயர் பிணக்குவை உண்டவெம் பேயின்
திறங்கள் ஓர்பெரும் பேய்அரசு என்று செங் களத்து
நிறம்கொள் மாமுடி கவித்திடும் கவிகைகள் நிழற்றும்
கறங்கு பம்பையும் இயம்புறும் கவரிகள் இரட்டும்.

பேய்கள் முடிசூடல்.

தெளிவுரை : மலைபோல் உயர்ந்த பிணக்குவியலையுண்ட கொடிய பேயின் திறங்கள் பெரும் பேய் அரசென்று செங்களத்து நிறம்உடைய சிறந்த முடியைச் சூடிக்கொள்ளும் 'குடைகள் நிழல் செய்யும், சுழலும் பம்பையும் ஒலிக்கும்,' கவரிகள் வீசப்பெறும்.

விளக்கம் : போர்க்களத்தில் பேய்கள் தம்மை அரசு என்று முடிசூடிக் கொள்ளும். குடைநிழற்றும். பம்பையும் ஒலிக்கும். கவரிகள் வீசப்பெறும். 139

550. சோரி வாய்மடுத்து உண்டுமெல் நிணங்களைச் சுவைத்துப்
பேரி ஆதிய களத்துள அதிர்த்துவெம் பேய்கள்
மூரி வேலுடைக் காளிஎம் மிடிகளை முடித்தாள்
போரின் மேவிஎன்று அவள்தனைப் புகழ்ந்து நின்றாடும்.

காளியைப் புகழ்தல்

தெளிவுரை : கொடிய பேய்கள் இரத்தத்தைக் குடித்து மென்மையான நிணங்களைச் சுவைத்துப் பேரிகை முதலிய களத்தில் உள்ளவற்றை அதிர்த்து வன்மையான வேலையுடைய காளியானவள் எம் துன்பத்தைப் போக்கினாள் என்று போர்க்களத்தில் பொருந்தி அவளைப் புகழ்ந்தபடி நின்றாடும்.

விளக்கம் : சோரி-இரத்தம். **நிணம்**-ஊன். **பேரி**-பேரிகை. **வெம்பேய்கள்**-கொடிய பேய்கள் காளி போர்க்களத்தில் வந்து பகைவரை அழித்து எம் துன்பத்தைப் போக்கினாள் என்று புகழ்ந்து நின்று ஆடின. 140

551. நீங்கு போர்வையம் பணையினை நிறுவிவேல் நிருதர்
ஓங்கும் மூரல்கள் அரிசியின் பெய்துநீள் உலக்கை
ஆங்கு வேழவெண் மருப்பும், ஒண் உசலமு மாகத்
தாங்கி மாஎன இடித்தன தருக்கு பெண் பேய்கள்.

பேய்கள் அசுரரின் பற்களை இடித்தல்

தெளிவுரை : மகிழ்ந்த பெண் பேயர், போர்வை நீங்கும் அழகிய முரசினை உரலாக நிறுவி வேலை யுடைய அசுரரின் சிறந்த

பற்களாகிய அரிசியை இட்டு. நீண்ட உலக்கை போல் உயர்ந்ததாக யானையின் வெண்கொம்பை ஒளியுடைய உலக்கையாகக் கொண்டு மாவை இடிப்பதைப் போல் இடித்தனர்.

விளக்கம் : நீங்கு போர்வை அம்பணை-விலக்கப்படும் தன்மையுடைய போர்வை போர்த்தப்பட்ட அழகிய முரசு. **வேல்நிருதர்**-வேலையுடைய அசுரர். **ஓங்குமூரல்**-உயர்ந்து வளர்ந்த பற்கள். **அரிசியின்**-அரிசியாக இட்டு. **நீள் உலக்கை ஓங்குவேழ வெண்மருப்பு**-நீண்ட உலக்கை போல் உயர்ந்து வளர்ந்த யானையின் வெண்மையான கொம்பு. **உசலமுமா**-உலக்கையாக. **மாஎன இடித்தன**-மாவாகும்படி இடித்தன. **தருக்கு பெண்பேய்கள்**-மகிழ்ச்சி அடைந்த பெண் பேய்கள்.
பெண் பேய்கள் அசுரரின் பற்களை முரசாகிய உரலில் இட்டு யானைக் கொம்பால் இடித்தன. 141

552. மிக்க மென்தசை இருந்திட வெற்றுஎலும்பு அதனைத்
தக்கது என்றுபுன் ஞமலிகள் கறித்தன தளர்ந்து
துக்கம் ஒன்றும்இல் தம்மனை துறந்துபோய்ப் பிறரில்
புக்கு வெந்துயர்க் கடற்படும் இழுதைகள் போல.

நாய்கள் எலும்பை உண்ணல்

தெளிவுரை : துனபம் ஏதும் இல்லாத தம் மனைவியைத் துறந்து சென்று பிறர் வீட்டில் பிறர் மனைவியை விரும்பிப் புகுந்த கொடிய துன்பக்கடலுள் முழுகும் அறிவற்றவரைப் போல், மிக்க மென்மையான தசை பிணத்தில் இருக்க அதை உண்ணாது வெறுமையான எலும்பை உண்ணக் கூடியது என்று நாய்கள் கடித்துத் தின்றன.

விளக்கம் : மென்றசை-மென்மையான ஊன். **புன்ஞமலிகள்**-அற்ப நாய்கள். **கறித்தன**-கடித்துத் தின்றன. **துக்கம் ஒன்றும் இல்தம்மனை**-துன்பம ஏதும் இல்லாத தம் மனைவி. **பிறர் இல்**-பிறர் **மனையில். வெந்துயர்**-கொடிய துன்பம். 142

553. **இன்ன தன்மைய தா**கியசெங் களத்திடை எடுத்த
மின்னல் வாளினால் யோகினி அவுணரை வீசிச்
சின்ன பின்னம தாகவே துணிந்திடச் சிலர்தாம்
வெந்அளித்தனர் உயிரினைக் காப்பது விழைந்தார்.

அசுரரில் சிலர் முதுகுகாட்டினர்

தெளிவுரை : இத்தகைய இயல்புடைய சிவந்த போர்க்களத்தில் எடுத்த மின்னலை ஒத்த வாளால் யோகினி அசுரரை எறிந்து சின்னாபின்னமதாகத் துணித்திடச் சிலர் தாம் புறமுதுகு காட்டி உயிர்காக்க விரும்பினர்.

விளக்கம் : செங்களத்திடை-போர்க்களத்தில். **மின்னல் வாளினால்**-மின்னல் போல் ஒளிவீசும் வாளால். **துணித்திட**-துண்டாக்கிட. **சிலர்தாம் வெந் அளித்தனர்**-சிலர் முதுகு காட்டினர். **விழைந்தார்**-விரும்பினார். 143

554. அதனைத் தாருக மன்னவன் அவ்விடைக் கண்டான்
கதுவிப் புக்குஉலைக் கடுங்கன லாம்எனக் கதமுற்று
இதழைக் கவ்வி வன் பல்கறித்து எனது இருஞ்சேனை
சிதையக் கொல்பவர் மாதரோ நன்றுஎனச் சிரித்தான்.

என்படையை அழிப்பவர் பெண்களோ! எனச் சினத்தல்

தெளிவுரை : அவ்வாறு தம் படைகள் அழிவதையும் புறங்காட்டி ஒடுவதையும் தாருக மன்னன் அங்குப் பார்த்தான். சீறிப்புகுந்து உலையில் இடப்பட்ட கொடிய தீயாம் எனச் சினந்து உதட்டைக் கடித்து வலியபற்களைக் கடித்து,'என் பெரிய படை அழியக் கொல்பவர் மங்கையரோ! நன்று!' எனச் சிரித்தான்.

விளக்கம் : அவ்விடை-அந்த இடத்தில். **உலைக்கடுங்கனல்**-உலையில் உள்ள கொடிய தீ. **கதமுற்று**-சினம் கொண்டு. **இதழைக் கவ்வி**-தன் உதட்டைக் கடித்து. **வன்பல் கறித்து**-வன்மையான பற்களைக் கடித்து. **இருஞ்சேனை**-பெரிய படை. 144

555. சிரித்த தீயவன் 'யோகினித் திரள்தனைச் செழும்தீப்
பருத்தி வான்குவைப் புக்கெனப் படுப்பன்', என்று எண்ணிக்
கரத்தில் ஓர்பெருங் கதைகொடு கலினமான் தேர்விட்டு
உருத்து மாநில வரைப்பினில் ஒய்எனப் பாய்ந்தான்.

தாருகன் தேரைவிட்டு இறங்கல்

தெளிவுரை : என மேற்கண்டவாறு கூறிச் சிரித்த தீயவனான தாருகன். யோகினிப் படைக் கூட்டத்தைச் செழுமையான தீ

பருத்திக்குவியலில் புகுந்தாற் போன்று அழித்து விடுவேன் என்று எண்ணிக் கையில் பெரிய தண்டாயுதத்தை எடுத்துக் கொண்டு கடிவாளத்தை உடைய குதிரை பூட்டப்பட்ட தேரைவிட்டுச் சினந்து நில எல்லையில் தரையில் விரையப் பாய்ந்தான்.

விளக்கம் : தீயவன்-கொடிய தாருகன். **யோகினித் திரள்தனை**-யோகினியர் படைத் தொகுதியை. **பருத்தி வான் குவை**-பருத்தியான பெரிய குவியல். **படுப்பன்**-அழிப்பேன். **பெருங்கதை**-பெரிய தண்டு. **கொடு**-கொண்டு. **கலினமான்**-கடிவாளத்தை உடைய குதிரை. **உருத்து**-சினந்து. **ஒய்என**-விரைவாக. 145

556. பாய்ந்த காலையில் பெரும்புவி வெடித்தது; பணிகள்
ஓய்ந்த மாதிரக் கடகளிறு ஓடின வெருண்டு,
சாய்ந்த மேருமால் வரைமுதல் ஆயின சயிலம்,
ஏய்ந்த வானவர் என்கோலோ முடிவதுஎன்று இனைந்தார்.

பூமிமுதலியவை அடைந்த நிலைகள்

தெளிவுரை : அவ்வாறு தாருகன் தரையில் பாய்ந்த போது பெரிய தரையானது வெடித்தது. பாம்புகள் தளர்ந்தன. எட்டுத் திக்குகளில் உள்ள மதமுடைய யானைகள் வெருண்டு தம் திசைகளைவிட்டு ஓடின. மேருமலை முதலியன சாய்ந்தன. மலையில் இருந்த அசுரர்கள் எப்படி முடியுமோ என்று வருந்தினர்.

விளக்கம் : பணிகள்-பாம்புகள். **மாதிரக் கடகளிறு**-திசைகளில் உள்ள மதத்தையுடைய யானைகள். **வெருண்டு**-அஞ்சி. **சயிலம் ஏய்ந்த வானவர்**-மலையில் உள்ள தேவர்கள். **என்கொலோ முடிவது**-எப்படி முடியுமோ! **இனைந்தார்**-வருந்தினார். 146

557. தேரி னின்றுகுப் புற்றவன் செயல்தனைத் தெரிந்து
போரில் வென்றிகொள் யோகினி காற்றெனப் புகுந்து
தாரின் மல்கிய அசுரர்கோன் தடம்புயம்மீது
மூரி நல்வசி ஓச்சினள் உரும்என முழக்கி.

யோகினி தாருகன் மீது வாளை வீசுதல்

தெளிவுரை : தேரினின்று இறங்கிய தாருகனின் செயலைத் தெரிந்து போரில் வெற்றி அடையும் யோகினி காற்றைப் போல் புகுந்து

மாலைகள் சூடிய அசுரர் மன்னனான தாருகனின் பெரிய தோள்மீது இடியைப் போல் முழங்கி வன்மையுடைய நல்ல வாளை வீசினர்.

விளக்கம் : குப்புற்றவன்-இறங்கியவன். **செயல்தனை**-செயலை. **வென்றிகொள்**-வெற்றி கொள்ளும். **தாரின் மல்கிய**-மாலைகள் சூடிப்பெற்ற. **தடம்புயம்**-பெரிய தோள். **மூரி நல்வசி**-வன்மையுடைய நல்ல வாள். **ஓச்சினள்**-வீசினாள். **உரும் என முழக்கி**-இடியைப்போல் முழக்கி. 147

558. தரிய லார் புகழ் விறலினோன் தடம்புயம் தாக்கும்
அரியவாள் சிறி தேனும்உற்று அற்றிடாது அதிலே
பெரிய ரோடு இகல் அறிவறு பேதையர் போல
முரிய ஆங்கது கண்டனன் தாருக முதல்வன்.

தாருகன் வாள் முரிவதைக் கண்டான்

தெளிவுரை : பகைவரும் புகழ்ந்து கூறும் ஆற்றல் உடையவனான தாருகனின் பெரிய தோளைத் தாக்கும் அரிய வாள் சிறிதேனும் தாக்காது, அதிலே பெரியவருடன் பகை கொள்ளும் அறிவற்றவரைப் போல் முரிவதை அங்குத் தாருகனான முதல்வன் கண்டான்.

விளக்கம் : தரியலார் புகழ் விறலினோன்-பகைவரும் புகழ்ந்து கூறும் ஆற்றலை உடையவன். **தடம்புயம்**-பெரிய தோள். **பெரியரோடு இகல்**-பெரியவருடன் பகை கொள்கின்ற. **பேதையர்**-அறிவற்றவர். **முரிய**-வாள் அழிய. **தாருக முதல்வன்**-தாருகனான முதல்வன், மன்னன். 148

559. கண்ட தீயவன் அவள்உரத்து எடுத்ததோர் கரத்துத்
தண்டி னால்புடைத் தானலன் தனதுஇடக் கரத்தால்
அண்ட கூடமே உடைந்ததுஎன்று அயிர்த்திட அடித்தான்
விண்டு மார்பகம் குருதிவாய் சொரிந்திட வீழ்ந்தாள்.

யோகினி விழுதல்

தெளிவுரை : வாள் முரிவதைக் கண்ட தீயவன் அவளது மார்பில் எடுத்து தண்டினால் அடிக்கவில்லை தனது இடக்கையால் அண்டவுருண்டடையே உடைந்தது என்னும்படி அடித்தான். மார்பு

பிளவுபட்டுக் குருதி வாய்வழியாக வெளிப்பட யோகினி விழுந்தாள்.

விளக்கம் : அவள் உரத்து-அந்த யோகினியின் மார்பில். **இடக்கரத்தால்**-இடக்கையால். **அயிர்த்திட**-ஐயம் கொள்ள. **விண்டு**-பினந்து. **குருதிவாய் சொரித்திட**-இரத்தம். வாய்வழியாய் வெளிப்பட. 149

560. தலைவி வீழ்தலும் யோகினித் தானைகள் அனைத்தும்
சுலவி வேல்மழுத் தண்டுவாள் சூலம்ஆ திகளாம்
பலவும் ஓவற தாருகப் பதகன்மேல் தூர்த்தார்
நிலவும் ஆர்அழல் மீதுஎறி துரும்புகள் நிகர்ப்ப.

வேல் முதலிய ஆயுதங்களைத் தாருகன் மேல் எறிதல்

தெளிவுரை : தம் தலைவி விழவும் யோகினிப் படைகள் அனைத்தும் சுழன்று வேல், மழு,தண்டு, வாள், சூலம் முதலியவைகளாம் பலவும் இடைவிடாது பொருந்திய அரிய அழல் மீது எறியும்படியான துரும்புகளைப் போல். தாருகப் பாவியின் மேல் எறிந்தனர்.

விளக்கம் : சுலவி-சுழன்று. **ஓவுஅற**-ஒழியாது. **தாருகப் பதகன்**-தாருகன் என்ற பாவி. **தூர்த்தார்**-எறிந்தனர். **ஆர்அழல்**-அரிய அழல். அரிய தீயில் எறியும் துரும்புகளைப் போல வேல் முதலிய ஆயுதங்களைத் தாருகன் மீது எறிந்தனர். 150

வேறு

561. ஒடிந்தன சிற்சில, உடைந்த சிற்சில,
பொடிந்தன சிற்சில, போழ்ந்து சிற்சில,
மடிந்தன சிற்சில, மறிந்து வந்துமண்
படிந்தன சிற்சில படைக்க லஙகளே.

அழித்தன

தெளிவுரை : அப்போரில் ஆயுதங்கள் சிற்சில ஒடிந்தன. சிற்சில உடைந்தன. சிற்சில தூளாயின. சிற்சில பிளவுபட்டன. சிலமடிந்தன. மடிந்து வந்த சிற்சில ஆயுதங்களே. மண்ணில் வீழ்ந்தன. 151

562. வீடின படைகள் இவ் விதத்தில், ஆயிடைக்
கூடிய அவுணர்கோன் கொதித்து, "மாதருள்
ஓடினர் ஒழிய இங்கு உற்று ளோர்தமைச்
சாடுவல்" எனஎதிர் தலைப்பட டான்அரோ.

தாருகன் யாவரையும் அழிப்பேன் எனப்

தெளிவுரை : படைகளில் சிற்சில இப்படி அழிந்தன. இவ்விதமாக ஆயின. அப்போது அங்குக் கூடிய அசுரர் தலைவன் தாருகன் கொதித்து மாதருள் ஓடியவ போக இங்குள்ளவர் தமைச் சாடுவன் எனத் தலைப்பட்டான்.

விளக்கம் : தாருகன் அஞ்சி ஓடி மாதரிடம் போனவர் தவிர மற்றவரை அழிப்பேன் எனத் தாருகன் கூறினான். **வீடின படைகள்**-ஆயுதங்கள் அழிந்தன. 152

563. அடிகளும், கரங்களும், அறுவை சூழ்தரு
கடிகளும், புயங்களும், காளி மாதர்தம்
முடிகளும், சிதறிட மோதி னான்கருங்
கொடிகளும் களிப்புறக் கொடியன் தண்டினால்.

தாருகன் தாக்குதல்

தெளிவுரை : கரிய காக்கைகளும் களிப்பு அடையக் கொடியவனான தாருகன் தண்டினால் கால்களும், கைகளும் ஆடைசூழ்ந்து விளங்கும் நிதம்பங்களும் தோள்களும் காளி மங்கையின் முடிகளும் சிதறிடத் தாக்கினான்.

விளக்கம் : அடிகள்-கால்கள். **அறுவை சூழ்தரு கடிகள்**-ஆடை அணியப்பெற்ற அல்குல்களும். **கருங்கொடிகள்**-கருமையான காக்கைகள். **களிப்புற**-மகிழ்ச்சி அடைய காக்கைகள் மகிழ்வதற்குக் காரணம் பிணங்கள் விழுதல். 153

564. ஆயிரம் நீலிகள் அடிஒன் றால்அகன்
மாயிரு ஞாலமேல் மறிந்து வீழ்ந்திடப்
போயருங் கதையினால் புடைத்து வீட்டினான்
தீயுரும் ஏறுஎனத் தெழிக்கும் ஆர்ப்பினான்.

தாருகன் யோகினியரைத் தாக்குதல்

தெளிவுரை : தீய வடிவுடைய இடியேறு என அதட்டும் ஆரவாரத்தையுடைய தாருகன் ஆயிரம் யோகினியரின் அடி ஒன்றால் அகன்ற பெரிய உலகம் மேல் மறிந்து வீழ்ந்திடுமாறு சென்று அரிய தண்டினால் அடித்து வீழ்த்தினான்.

விளக்கம் : ஆயிரக்கணக்கான மங்கையர் ஓர் அடியால் விழும்படி தாருகன் தண்டினால் அடித்தான்.

நீலிகள்-யோகினிப் பெண்கள். **மறிந்து விழ்ந்திட**-மடிந்து விழும்படி. **புடைத்து வீட்டினான்**-தாக்கி அழித்தான். 154

565. சிலவரைக் கதையினால் சிரங்கள் போக்கினான்;
சிலவரைக் கரத்தினால் செருக்கு நீக்கினான்;
சிலவரைப் புயத்தினால் திகைப்பது ஆக்கினான்;
சிலவரைப் பதத்தினால் சினத்துத் தாக்கினான்.

தாருகன் மேலும் தாக்குதல்

தெளிவுரை : அத்தாருகன் சிலரைத் தண்டினால் தாக்கித் தலைகளை நீக்கினான். சிலரைக் கையால் தாக்கி அவர்தம் செருக்கைப் போக்கினான். தோள்களால் சிலரை அவர்கள் திகைக்கும்படி தாக்கினான். சிலரைக் காலால் சிதைத்துத் தாக்கினான்.

விளக்கம் : சிலவரை-சில யோகினிப் படையினரை. **கதை**-தண்டு. **திகைப்ப**-வியப்படைய. **பதத்தினால்**-காலால். 155

566. உதைத்தனன் சிலவரை, உதிரச் சேற்றிடைப்
புதைத்தனன் சிலவரை, பொறிக லங்கிடச்
சிதைத்தனன், சிலவரைத் திருகிச் சென்னிகள்
வதைத்தனன் சிலவரை, மடங்கல் போன்றுளான்.

தாருகன் போர் (தொடர்ச்சி)

தெளிவுரை : சிங்கம் போன்ற, தாருகன் யோகினிப்படையினர் சிலரை உதைத்தான். சிலரைக் குருதிச் சேற்றில் புதையுமாறு

செய்தான். சிலரைப் பொறிகலங்கும்படி அழித்தான். சிலரைத் திருகித் தலைகளை வருத்தினான்.

விளக்கம் : உதிரச் சேறு-இரத்தச் சேறு. **பொறிகலங்கிட**-ஐம்பொறிகளும் நிலைகுலைய. **சென்னிகள்**-தலைகள். **திருகி**-அறுத்து. **மடங்கல்**-சிங்கம். 156

567. பற்றினன் சிலவரைப் படுக்கும் வானிடைச்
சுற்றினன் சிலவரைத் தொலைக்கும் கால்களால்
தெற்றினன் சிலவரைச் செறுக்கு மார்பிடைக்
குற்றினன் சிலவரைக் குமைக்கும் தாருகன்.

தாருகன் போர் (தொடர்ச்சி)

தெளிவுரை : தாருகன் சிலரைக் கொன்றான்; வானில் சிலரைச் சுழற்றி எறிந்தான்; சிலரை அழித்தான்; கால்களால் எடுத்துதைத்தான். சிலரை மார்பில் குற்றினான், சிலரைக் குமைத்தான்.

விளக்கம் : பற்றினன்-பிடித்தான். **படுக்கும்**-கொல்வான். **தொலைக்கும்**-அழிப்பான். **தெற்றினான்**-உதைத்தான். **குமைக்கும்**-வருத்துவான்; அழிப்பான். 157

568. பாரினில், வரையினில் பாத லத்தினில்,
காரினில், உவரியின், கடத்தின், மாலயன்
ஊரினின், மகபதி உழியில் ஆதபன்
தேரினில் உலகினில் சிலரை வீசினான்.

தாருகன் போர் (தொடர்ச்சி)

தெளிவுரை : உலகத்தினிலும் மலையிலும் பாதலத்திலும் மேகத்திலும், கடலிலும், காட்டிலும், திருமால் அயன் ஆகியவரின் ஊரிலும், இந்திரனின் அமராவதியிலும், கதிரவன் தேரிலும், உலகத்திலும் தாருகன் சிலரை எடுத்து வீசினான்.

விளக்கம் : வரையினில்-மலையில். **காரினில்**-மேகத்தில். **உவரியில்**-கடலில். **கடத்தின்**-காட்டில். **மால் அயன்**-திருமால், நான்முகன். **மகபதி**-இந்திரன். **ஆதபன்**-கதிரவன். 158

569. முரிந்தன என்புகள்; முரிந்த பல்நிரை;
முரிந்தன பாணிகள்; முரிந்த வான்தொடை
முரிந்தன தாள்இணை; முரிந்த தோள்துணை
முரிந்தன கந்தரம் முரிந்த நாசியே.

தாருகன் போர் (தொடர்ச்சி)

தெளிவுரை : அவன் தாக்குதலால் யோகிவிப்படையில் சிலரின் எலும்புகள் முரிந்தன. பல்வரிசைகள் முரிந்தன. கைகள் முரிந்தன. சிறந்த தொடைகள் முரிந்தன. இருகால்கள் முரிந்தன. இரு தோள்கள் முரிந்தன. கழுத்துகள் முரிந்தன. மூக்குகள் உடைந்தன.

விளக்கம் : என்புகள்-எலும்புகள். **பன்னிரை**-பல்+நிரை. **பாணிகள்**-கைகள். **வான்தொடை**-சிறந்த தொடைகள். **தாள் இணை**-இருகால்கள். **தோள்துணை**-இருதோள்கள். **கந்தரம்**-கழுத்து. **நாசி**-மூக்கு. 159

570. ஓடின குருதியாறு எங்கும், வெற்பென
நீடின களேபரம், நிறைந்த ஞாளிகள்
பாடின, கழுதுகள் பறந்த லைக்கண் நின்று
ஆடின கவந்தமோர் அயுதம் என்பவே.

தாருகன் போர் (தொடர்ச்சி)

தெளிவுரை : குருதியாறுகள் எங்கும் ஓடின. எங்கும் மலையைப் போல் பிணக்குவியல் பெருகின. நாய்கள் அங்கு வந்து குழுமின. பேய்கள் பாடின. போர்க்களத்தில் தலையற்ற உடல் ஆயிரம் நின்று ஆடின.

விளக்கம் : குருதியாறு-இரத்த ஆறு. **வெற்பு என**-மலைபோல. **களேபரம்**-பிணங்கள். **ஞாளிகள்**-நாய்கள். **கழுதுகள்**-பேய்கள். **பறந்தலை**-போர்க்களத்தில். **கவந்தம் ஓர் அயுதம்**-தலையற்ற உடல் ஓர் ஆயிரம். **அயுதம்**-ஆயிரம். 160

571. மொழிந்திடு புகழினோன் முருக்க வெல்வகை
ஒழிந்திடும் யோகினி மகளிர் ஓடினார்
வழிந்திடு புனல்விழி வ்தனத்து எற்றியே
அழிந்திடும் உணர்வொடும் அமரர் தேம்பினார்.

யோகினியர் ஓடலும் தேவர் வருத்தமும்

தெளிவுரை : சிறப்பித்துக் கூறப்படும் புகழையுடைய தாருகன், தாக்க, அவனை வெல்லும் வகையை அறியாமல் ஒழிந்திடும் யோகினி மகளிர் களத்தைவிட்டு ஓடிப் போனார்கள். புனல் வழியும் விழியுடைய முகத்தில் அடித்துக் கொண்டு அழியும் உணர்வுடன் தேவர்கள் வருந்தினர்.

விளக்கம் : புகழினோன்-வீரப்புகழையுடைய தாருகன். **முருக்க**-தாக்க. **வெல்வகை**-வெல்லும் வழியை. **புனல்விழி**-நீர் வடியும்கண். **வதனத்து எற்றியே**-முகத்தில் அடித்துக்கொண்டு. **தேம்பினார்**-வாடினார். 161

572. கண்டனன் யோகினிக் கணங்கள் சிந்தியது
ஒண்திறல் அவுணர்கோன் உருள்பொன் தேரின்மேல்
தண்டொடும் ஒய்எனத் தாவி னான்சினம்
மண்டுறு பெருவலி மடங்கல் என்னவே.

தாருகன் தேரில் ஏறுதல்

தெளிவுரை : சினம் மிக்க பெருவன்மையுடைய பெருவலி சிங்கத்தைப் போன்ற அசுரர் மன்னன் யோகினிப் பேய்கள் அஞ்சி ஓடுவதைக் கண்டான். சக்கரத்தையுடைய தன் பொன் தேரின் மீது தண்டினுடன் விரைந்து பாய்ந்து ஏறினான்.

விளக்கம் : யோகினிக் கணங்கள்-யோகினிக் கூட்டம். **சிந்தியது**-அஞ்சித் தோற்று ஓடியது. **ஒண்திறல் அவுணர்கோன்**-ஒள்ளிய ஆற்றலையுடைய அசுரர் மன்னன் தாருகன். **பெருவலி மடங்கல்**-பெருவன்மையுடைய சிங்கம். 162

573. தானவப் படைஎலாம் தருக்கிச் சிந்துபு
போனஅப் படைகளைத் தொடர்ந்து போக்கியே
மானவப் படைபுலால் மழுக்கள் வாள்முதல்
ஆனவப் படைஎலாம் ஆர்த்து வீசினார்.

தோற்று ஓடிய படைகள் திரும்பி வந்தன.

தெளிவுரை : அசுரப்படை எல்லாம் தருக்கித் தோற்று ஓடிய அப்படைகளைத் தொடர்ந்து கொணர்ந்து, பெருமையுடைய அப்படைமீது புலால் நாற்றம் உடைய மழுக்கள் வாள் முதலிய அப்படைகளை எல்லாம் ஆரவாரித்து வீசினார்.

விளக்கம் : தாவைப்படை-அசுரப்படை. **சிந்துபு**-சிந்தி; தோற்று. **மாவைப்படை**-பெருமையுடைய படை. **புலால் மழுக்கள்**-புலால் நாற்றத்தையுடைய மழுவாயுதங்கள். **ஆர்த்து**-ஆரவாரித்து. 163

574. எஞ்சல்இல் தன்படை இரிதல் காளிகண்டு
அஞ்சலிர் அஞ்சலிர் அவுணர் யாரையும்
புஞ்சம்என் சிறுபுழுப் போல இவ்விடைச்
செஞ்சிலம் படியினால் தேய்ப்பன் என்றனள்.

காளி தன்படையைத் தேற்றல்

தெளிவுரை : காளி, தன் தன்படைகள் தோற்று ஓடுவதைக் கண்டாள். அப்படையினரைப் பார்த்து, 'நீங்கள் அஞ்ச வேண்டா! அஞ்ச வேண்டா! அசுரர் எல்லாரையும் கூட்டமான மென்சிறு புழுக்களைப் போன்று இங்கு என் சிலம்பணிந்த காலால் தேய்த்து விடுவேன்,' என்று உரைத்தருளினாள்.

விளக்கம் : எஞ்சல் இல்-குறைதல் இல்லாத. **இரிதல்**-தோற்றலை. **அஞ்சலிர்**-அஞ்சாதீர். **புஞ்சம்**-கூட்டம். **செஞ்சிலம்பு அடியினால்**-சிவந்த சிலம்பு அணிந்த காலால். **தேய்ப்பன்**-தேய்த்து அழித்து விடுவேன். 164

575. என்றவள் வலவியை நோக்கி, "இம் எனத்
துன்றுறும் அவுணர்தம் சூழல் முன்னரே
சென்றுற நமது தேர்ச் செலுத்துவாய்!" என்றாள்
'நன்று'என அவள் தொழா நடத்தி னாள்அரோ.

காளி, தன் தேரோட்டிக்குக் கூறுதல்

தெளிவுரை : என்று கூறிய காளி, தன் தேர் ஓட்டி மங்கையைப் பார்த்து, 'இம்மென அசுரரின் சூழல் முன்னமே போய் அடைய நம் தேரைச் செலுத்துவாயாக!' என்று உரைத்தாள். அவள் 'நன்று' என்று காளியை வணங்கித் தேரை ஓட்டினாள்.

விளக்கம் : வலவி-தேரைச் செலுத்துபவள். **இம்என**-விரைய. **துன்னுறு**-நெருங்கிய. **சூழல்**-இருக்கை. **தொழா**-தொழுது. 165

576. கடங்கவிழ் கவுள்நெடுங் களிறு வவ்வுறு
மடங்கலின் மிசைவரும் சிம்புள் மானவே
விடம்கதுவுறுமொழி விமலை தேரொடும்
அடங்கலர் எதிர்புகுந்து அடுதல் மேயினாள்.

காளி போரைத் தொடங்கல்

தெளிவுரை : மதம் சொரியும் கன்னத்தையுடைய பெரிய ஆண் யானையைக் கவரும் சிங்கத்தின் மேல் வருகின்ற சிம்புள் பறவையைப்போல் விடம் போன்ற சொல்லையுடைய காளி தேருடன் பகைவர் எதிர் புகுந்து போரிடும் தொழிலை மேற்கொண்டாள்.

விளக்கம் : சிம்புள்-சரபப்பறவை. **மடங்கல்**-சிங்கம். **மானவே**-போலவே. **விடம் கதுவுறு மொழி**-விடத்தைக் கக்கும் சொல். **அடங்கலர்**-பகைவர். **அடுதல் மேயினாள்**-போரிடத் தொடங்கினாள். 166

577. முதிர்ந்திடு சினமொடு மூரி வில்எடுத்து
எதிர்த்திடும் அவுணர்முன்பு எய்தி, மேதினி
அதிர்ந்திட மேருவும் அலைய, வானமீன்
உதிர்ந்திட உகிரின் நாண் ஒலிக்கொண்டாளரோ.

வில்லின் நாண் ஒலியை எழுப்புதல்

தெளிவுரை : முதிர்ந்த சினத்தொடு வலிய வில்லைஎடுத்து எதிர்க்கும் அசுரர்முன் போய் உலகம் அதிர்ந்திட மேரு மலை வானத்தில் உதிர்ந்திட நகத்தால் நாணினைத் தெறித்து ஒலியை எழுப்பினாள்.

விளக்கம் : மூரி-வன்மை. **மேதினி**-உலகம். **மேருவும் அலைய**-மேருமலையும் தூள் ஆகுமாறு. **உகிரின்**-நகத்தால். **நாண் ஒலிக்கொண்டாள்**-வில் நாணினைத் தெறித்து ஒலியை எழுப்பினாள். 167

578. வெருண்டனர் சிற்சிலர், வீழ்ந்து மண்ணின்மேல்
புரண்டனர் சிற்சிலர், செவிகள் பொத்தியே
மருண்டனர் சிற்சிலர், மணிப்பொன் தேரொடும்
உருண்டனர் சிற்சிலர் உலவும் தானவர்.

நாண் ஒலி கேட்டவரின் நிலை

தெளிவுரை : அங்கு உலவும் அசுரர் அப்போது, சிற்சிலர் வெருண்டனர். சிற்சிலர் விழுந்து மண்ணின் மீது புரண்டனர். செவிகளை மூடியே சிற்சிலர் மருண்டனர். மணிபதித்த பொன் தேருடன் சிற்சிலர் உருண்டனர்.

விளக்கம் : பொத்தி-மூடி. **உலவும் தானவர்**-களத்தில் உலாவும் அசுரர். 168

579. நாண்ஒலி செவிப்புக நடுங்கும் தானவர்
நாண்உமிழ் சுடுசரம் நணுகும் முன்னரே
நாண்உளம் முழுவதும் நழுவி னோடுவான்
நாணொரு சிறிதுறா நலிய நின்றனர்.

நாண் ஒளியின் விளைவு

தெளிவுரை : நாணின் ஒலி புகுந்திடவும் அசுரர் நடுங்குவர். நாணியானது எய்யும் சுடுசுரம் அணுகும் முன்பே நாணம் முழுவதும் நழுவுதலால் ஓடிவிட எண்ணி நாண் சிறிதும் இன்றித் தம்மை வருத்த நின்றனர்.

விளக்கம் : நாணின் ஒலி செவியில் புகுந்திட நடுங்கும் அசுரர் அந்தக்காளி செலுத்தும் அம்பு தம்மை அடைதற்கு முன்னமேயே ஓடலாயினர். ஓடாதவர் அதனால் வருந்தி நின்றனர்.

நாண் ஒலி-வில்லின் நாண் ஒலி. **தானவர்**-அசுரர். **ஓடுவான்**-ஓடுதற்கு எண்ணி. **சிறிதுஉறா**-சிறிது அடைந்து. 169

580. நின்றலும் அனல்உமிழ் நெடிய வாளிகள்
குன்றுஎனும் வரிசிலை குனித்துச் செண்டுபோல்
பின்றலில் அவுணர்மெய் விடாது பெய்தனள்
சென்றுறு குருதிஆறு உததி செல்லவே.

அவுணரின் இரத்தம் கடல் நோக்கிச் சென்றது.

தெளிவுரை : அங்ஙனம் அவுணர் நிற்கவும் தீயை உமிழும் நீண்ட அம்புகள் குன்று போன்ற கட்டப்பட்ட வில்லை வளைத்துச் செண்டைப்போல் பிற்பட்டதால் அவுணரின் உடல் ஒன்றையும்

விடாது எய்தாள். அதனால் பெருகும் இரத்தம் கடல் நோக்கிச் சென்றது.

விளக்கம் : அனல் உமிழ்-தீயைக் காக்கும். **நெடிய வாளிகள்**-நீண்ட அம்புகள். **வரிசிலை**-கட்டப்பட்ட வில். **குனித்து**-வளைத்து. **உததி**-கடல். 170

581. ஆழிமான் தேரினும், அயங்கள் மீதினும்,
சூழிமால் கரியினும், சுடுசரங் கள்தாம்
ஊழிமால் முகில்களும் உடையச் சிந்தியே
பாழிமா நிலமிசைப் படுத்தி னாள்அரோ.

அம்புகளை எய்து தேர் முதலியவற்றை வீழ்த்துதல்

தெளிவுரை : சக்கரத்தையுடைய தேரிலும் குதிரைகள் மீதும் முகபடாத்தையுடைய யானையிலும் சுடும்படியான அம்புகளை ஊழிக்காலத்தில் வரும் முகில்களும் உடைய எய்து வன்மையுடைய நிலத்தில் விழச் செய்தாள்.

விளக்கம் : ஆழிமான் தேர்-சக்கரத்தையுடைய தேர். **அயங்கள் மீதினும்**-குதிரைகள் மீதும். **சூழிமால் கரி**-முகபடாத்தையுடைய மதம் பொருந்திய யானை. **சுடுஞ்சரம்**-கொல்லும் அம்பு. **மாமுகில்**-பெரிய மேங்கள். **உடைய**-அழிய. **பாழி**-வன்மை. **அரோ**-அசை. 171

582. உரங்களை அறுத்தன, உடல்அ றுத்தன,
வரங்களை அறுத்தன, வயின்அ றுத்தன,
சிரங்களை அறுத்தன, சிலைஅ றுத்தன,
கரங்களை அறுத்தன, காளி வாளியே.

காளி அம்புகளால் நிகழ்ந்தவை

தெளிவுரை : காளி எய்த அம்புகள் அவுணரின் மார்புகளை அறுத்தன. உடல்களைத் துண்டித்தன. பகைவரின் ஆயுதங்களை அறுத்தன. வயிற்றை அறுத்தன. தலைகளை அறுத்தன. விற்களைத் துண்டுபடுத்தின. கைகளை அறுத்தன.

விளக்கம் : உரங்கள்-மார்புகள். **வயின்**-வயிறு. **சிரங்கள்**-தலைகள். **சிலைகள்**-விற்கள். **வாளி**-அம்பு. 172

583. அறுத்தன, கரிகளை, அறுத்த தேர்களை,
அறுத்தன, பரிகளை, அவுணர் கோன்புகழ்
அறுத்தன, புரையவே அறுத்த, வெண்குடை
அறுத்தன கொடிகளை ஆசு கங்களே.

காளியின் அம்பு செய்தவை (தொடர்ச்சி)

தெளிவுரை : காளி எய்த அம்புகள், யானைகளை அறுத்தன. தேர்களைச் சிதைத்தன. குதிரைகளை அழித்தன. அசுரர் தலைவனின் வன்மையான புகழைப் போக்கியது போல் வெண்மையான குடைகளை அழித்தன. கொடிகளை அழித்தன.

விளக்கம் : கரிகளை-யானைகளை. **பரிகள்**-குதிரைகள். **அவுணர் கோன்புகழ் அறுத்தன புரைய**-அசுரரின் மன்னனான தாருகனின் புகழை அறுத்தாற்போல். **ஆசுகங்கள்**-அம்புகள். 173

584. சுரங்களில் ஓடின, சுறவு மோதுசா
கரங்களில் ஓடின, கடவு ளோர்கள்தம்
புரங்களில் ஓடின, புழைக்கை தங்குமா
திரங்களில் ஓடின, சிலீமு கங்களே.

காளியின் அம்புகளின் செயல்கள்

தெளிவுரை : காளி எய்த அம்புகள் காடுகளில் ஓடின. சுறா மீன்கள் மோதிக் கொள்கின்ற கடல்களில் ஓடின. தேவர்களின் ஊர்களில் ஓடின. துளையுடைய துதிக்கை யானைகள் தங்கும் எட்டுத் திசைகளிலும் ஓடின.

விளக்கம் : சுறவு-சுறா மீன். **சாகரங்கள்**-கடல்கள். **கடவுளோர்**-தேவர்கள். **புரம்**-ஊர்கள். **புழைக்கை**-துளையையுடைய துதிக்கையையுடைய யானைகள். **சிலீமுகம்**-அம்புகள். 174

585. அறைதரு கழலொடும் அடிகள் ஓர்திசை
கறைகெழு படையொடும் கரங்கள் ஓர்திசை
சிறைஅளி மலரொடும் சிரங்கள் ஓர்திசை
பிறைமுக நெடுங்கணை பிடுங்கி வீசுமால்.

காளியின் அம்புகளின் செயல்கள் (தொடர்ச்சி)

தெளிவுரை : பிறை போன்ற தலையையுடைய நீண்ட அம்புகள் ஒலிக்கின்ற கழல் என்ற அணியுடன் கால்கள் ஒரு திக்கிலும் இரத்தக் களங்கம் உடைய படையுடன் கைகள் ஒரு திக்கிலும், சிறகையுடைய மலர்களுடன் தலைகள் ஒரு திக்கிலும் பிடுங்கி வீசின.

விளக்கம் : அறைதருகழல்-ஒலிக்கும் கழல் என்ற அணி. **அடிகள்**-கால்கள். **கறைகெழுபடை**-இரத்தக்கறையுடைய ஆயுதங்கள் **சிறையளி**-இறகுகளையுடைய வண்டுகள். **சிரங்கள்**-தலைகள். **பிறைமுக நெடுங்கணை**-பிறை போன்ற முகம் கொண்ட நீண்ட அம்புகள். **வீசுமால்**-ஆல், அசை. 175

586. கூற்றுஉறழ் தனதுகைச் சாபம் கொண்டவர்
சாற்றிடு பழுதில்வாய்ச் சாபம் எண்ணில
மாற்றினள் எனநொடி வரையில் தாருகன்
போற்றுறு படைகள் ஒன்றில்ல போக்கினான்.

பல படைகளையும் அழித்தாள்

தெளிவுரை : இயமனைப் போன்ற தன் கை வில்லைக் கைக் கொண்டவர் கூறும்படியான குற்றம் அற்ற வாய்ச் சூள் எண்ணில்லாதவற்றை மாற்றினாள் என்னும்படி நொடிப்பொழுதில் தாருகன் பாராட்டும் படைகள் ஒன்றும் இல்லாமல் அழித்தாள்.

விளக்கம் : கூற்றுஉறழ்-இயமனை ஒத்த. **கைச்சாபம்**-கையில் உள்ள வில். **சாற்றிடும்**-கூறும். **வாய்ச் சாபம்**-வாயால் கூறும் சூள்கள். **நொடிவரையில்**-நொடிப் பொழுதில். **போற்றுறு**-போற்றும்படியான. 176

587. வரிசிலை ஈர்த்தன, வாள்கள் ஈர்த்தன,
எரிவிழி அவுணர்மெய் ஈர்த்த, தேரொடும்
பரிகளை ஈர்த்தன, பணைகள் ஈர்த்தன,
கரிகளை ஈர்த்தன கறைவெள் ளங்களே.

இரத்த வெள்ளத்தின் செயல்

தெளிவுரை : போரில் உண்டான இரத்த வெள்ளங்கள் கட்டப்பட் விற்களை இழுத்துக்கொண்டு சென்றன. வாள்களை அடித்து கொண்டு போயின. தீப்போன்ற விழியையுடைய அசுரர்களி உடல்களை இழுத்துக் கொண்டு ஓடின. இறந்த குதிரைகளை கவர்ந்து சென்றன. முரசுகளை இழுத்துச் சென்றன. யானைகளை இழுத்துச் சென்றன.

விளக்கம் : வரிசிலை-கட்டப்பட்ட வில். **ஈர்த்தன**-இழுத்துச் சென்றன. **எரிவிழி அவுணர்**-தீயைப் போன்ற விழியையுடைய அசுரர். **மெய்**-உடல்கள். **பரிகள்**-குதிரைகள். **பணைகள்**-முரசுகள். **கரிகள்**-யானைகள். **கறை வெள்ளங்கள்**-இரத்த வெள்ளங்கள். 175

588. காளிவா ளிகள்விடுங் காலை வீரமில்
கோள்அராம் அவுணர்கள் குலைந்த நெஞ்சராய்த்
தோள்உலாம் படைகளைத் துறந்துஇங்கு அன்னைநீ
ஆளுவாய் எமைஎன அறைகின்றார் சிலர்.

வீரமற்ற அவுணர் செயல்

தெளிவுரை : காளி தேவி அம்பு எய்யும் போது வீரம் இல்லாத சிற்சிலர் அவுணர் நிலைகுலைந்து மனத்தினராய்த் தோளில் பொருந்திய படைக்கருவிகளைக் கைவிட்டு, 'தாயே! நீவிர் எம்மை ஆட்கொள்வீராக!' என்று உரைத்தனர்.

விளக்கம் : வாளிகள்-அம்புகள். **அரா அவுணர்**-பாம்பைப் போன்ற அசுரர். **ஆளுவாய்**-ஆட்கொள்வாய். 178

589. குடைஅறக் காம்பினைக் குமரி வன்கதைப்
படைஎனத் தெறும்எனப் படிவிட் டார்சிலர்
அடுகளத்து இறுகுடை அதனை யீட்டிஇக்
கடைகொளு வுதும்எனக் கைக்கொண் டார்சிலர்.

போர்க்களித்தில் சிலர் செயல்

தெளிவுரை : குடையானது நீங்கிடக் காம்பைப் பற்றியிருந்தால் காளியானவள் இவர் படையைக் கொண்டுள்ளார் என்று

எண்ணுவாள் எனக் கருதித் தரையில் அக்காம்பினைக் கைவிட்டார்கள் சிலர் போர்க்களத்தில் காம்பை இழந்த குடையை எடுத்துக் காம்புடன் சேர்ப்போம் என்று சிலர் கைக் கொண்டனர்.

விளக்கம் : குடை அற-குடை நீங்க. **காம்பு**-குடையின் காம்பு. **வன்கதைப்படை**-வலிய தண்டு என்ற படைக்கலம். **தெறும்**-கொல்வாள். **படி**-நிலத்தில். **இறுகுடை**-காம்பு அற்ற குடை. **ஈட்டி**-சேர்த்து எடுத்து. **கொளுவுதும்**-கொள்வோம். போரில் குடை அழிந்து போது அதன் காம்பைப் பிடித்தனர் சிலர். அவர் பின்பு அதைக் கதை என்ற படைக்கலம். கைக்கொண்டுள்ளதாகக் காளி நினைத்துத் தண்டிப்பாள் என்று எண்ணிக் கைக்கொண்ட குடைக் காம்பைக் கீழே விட்டு விட்டனர்.

சிலர் அறுப்பட்ட குடையைக் காம்பில் செருகிக் கையில் கொண்டனர். 179

590. பூங்கதிர் வாளினைப் போக்கி வாம்பரி
நீங்கிஅங்கு அதுபிடீஇ நிற்கின் றார்சிலர்,
ஆங்குறு புரவிவாய் அடுத்த புல்லினை
வாங்குபு தமதுவாய் வைக்கின்றார் சிலர்.

சில வீரர்கள் செயல்கள்

தெளிவுரை : வாளுடன் இருந்தால் காளி கொல்வாள் என எண்ணி அழகிய கதிரையுடைய வாள்படையைக் கைவிட்டுக் குதிரையினின்று இறங்கி, அதனைப் பிடித்தபடி சில அவுண வீரர் நின்றனர். சிலர் அங்குள்ள குதிரையின் வாயில் உள்ள புல்லை எடுத்துத் தம் வாயில் வைத்துக் கொண்டனர்.

விளக்கம் : சிலர் காளிக்கு அஞ்சிக் கையில் வாளை விட்டு, குதிரையினின்று இழிந்து அதைப்பிடித்த வண்ணம் நின்றனர். கையில் படைக்கலத்துடன் நில்லாது போனால் அவருடன் போரிடக்கூடாது என்பது போர் நெறி ஆதலால் வாளைக் கைவிட்டனர். குதிரையோட்டுபவன் போல் குதிரையைப்பிடித்த படி நின்றனர். சிலர் குதிரைவாயில் உள்ள புல்லைப்பிடுங்கித் தம் வாயில் வைத்துக் கொண்டனர். அவ்வாறு கொள்வது தோல்வியை

ஒத்துக்கொண்டதன் அறிகுறி. வாளுடன் நின்றால் இவர் போா செய்ய நிற்கிறார் என்று எண்ணி காளி கொல்வாள் என்பதால் அதைக் கைவிட்டு நின்றனர்.

பூங்கதிர் வாள்-அழகிய ஒளியுடைய வாள். **வாம்பரி**-வாவும்பரி தாவி ஓடும் குதிரை. **அது பிடீஇ**-அக்கு திசையைப்பிடித்தபடி பிடுங்கி. **புரவிவாய்**-குதிரையின் வாய். **வாங்குபு**-பிடுங்கி எடுத்து. 180

591. வாங்கிய தனுவின்நாண் பூட்டும் வாளியும்
தாங்கிய கரமொடும் தரைப்பட் டார்சிலர்
ஓங்கிய வயவர்என்று உணர வீக்கிய
ஏங்குறு கழல்அறுத்து எறிகின் றார்சிலர்.

வீரர் நிலைகள்

தெளிவுரை : சிலர் வளைந்த வில்லின் நாணில் பூட்டும் அம்பும் தாங்கிய கையோடும் புண்பட்டுத் தரையில் விழுந்தனர். சிலர் சிறந்த வீரர் என்று மற்றவர் உணரக் கூடிய வீரக்கழலை அறுத்து எறிந்தார்.

விளக்கம் : வாங்கிய-வளைக்கப்பட்ட. **தனுவின் நாண்**-வில் நாண். **வாளி**-அம்பு. **ஓங்கிய வயவர்**-சிறந்த வீரர். **வீக்கிய**-கட்டிய. **ஏங்குறு கழல்**-ஒலிக்கும் வீரக்கழல் என்ற அணி. கழலுடன் இருந்தால் காளி கொல்வாள் என்பதால் கழலினை அறுத்து எறிந்தார் சிலர். 181

592. அழிந்தவர் தன்மையும், அழிவு றாதுஉயிர்
ஒழிந்தவர் இவ்வகை உயங்கும் தன்மையும்
கழிந்திடு புகழினோன் கண்டு, நாட்கடை
எழுந்திடு கனலினும் சீற்றம் எய்தினான்.

தாருகன் சினம் கொள்ளல்

தெளிவுரை : இறந்து போனவரின் இயல்பையும் இறவாமல் உயிர் தங்கப்பெற்றவர் இப்படி வருந்தும் இயல்பையும் நீங்கும் புகழையுடைய தாருகன் கண்டான். ஊழிக்காலத்தில் எழும் வடவைத் தீயைவிட மிக்க சினம் கொண்டான்.

விளக்கம் : அழிந்தவர்-இறந்தவர். **அழிவுறாது உயிர் ஒழிந்தவர்**-இறவாமல் உயிர் தாங்கியவுர். **உயங்கும்**-வருந்தும். **கழிந்திடு புகழினோன்**-நீங்கும் புகழை உடைய தாருகன். **நாட்கடை**-ஊழி இறுதிநாளில். **கனல்**-வடவைத்தீ. 182

593. எய்திய அவுணர்கோன் இரதம் இம்என
மொய்திகழ் குமரிமுன் முடுக வந்தனன்
நொய்துஎன மடங்கல்முன் நோன்மை யோடுஇகல்
செய்துஒரு களிறுஎதிர் செய்கை போலவே.

தாருகன் காளிமுன் வருதல்

தெளிவுரை : அவ்வாறு சினம் கொண்ட அவுண மன்னன் தாருகனின் தேர் இம் என வன்மை உடைய குமரியின் முன் விரைந்து வந்தது. சிங்கத்தின் முன் வன்மையுடன் போர் மேற்கொண்ட ஒரு யானையின் எதிர் செய்கையைப் போல்!

விளக்கம் : இம் என-விரைய. **மொய்திகழ்**-வன்மை விளங்கும். **குமரி**-குமரியான காளி. **முடுக**-விரைய. **நொய்தென**-விரைய. **மடங்கல்**-சிங்கம். **நோன்மையுடன்**-வன்மையுடன். **இகல்செய்து**-மாறுபட்டு. **களிறு**-யானை. மடங்கல் காளியையும் களிறு தாருகனையும் குறிக்கும். 183

594. வந்தவள் பயங்கர வடிவம் கண்டனன்
சிந்தையின் வியந்து இவள் தெரிவை ஆயினும்
எம்தமது அமரினுக்கு ஏற்று ளாள்என
நந்திடும் அறிவினான் நவிறல் மேயினான்.

தாருகன் வியப்பு

தெளிவுரை : தாருகன் போரிட வந்த காளியின் பயங்கர வடிவைக் கண்டான். மனத்துள் வியந்தான். இவள் பெண் ஆயினும் எமது போரினுக்கு ஏற்று வந்துள்ளாள் என அழியும் அறிவினால் சொல்லலானான்.

விளக்கம் : தெரிவை-பெண். **எந்தமது**-எம்முடைய. **அமரினுக்கு**- போருக்கு. **ஏற்றுளாள்**-ஏற்று வந்துள்ளாள். **நவிறல்**-சொல்லல். 184

வேறு

595. மாதுநீ யாரை வென்றி மதகரி யினையும் அஞ்ச
மோதும்ஆண் புலியை வெல்வான் முன்னிமான் அடைந்தது என்னப்
போதன்ஆ தியரை வென்ற என்னொடு பொரநீ வந்தது
ஏதுகா ரணம் உரைத்தி என்றனன் அறமி லாதான்.

பெண்ணே நீ யார் என வினவல்

தெளிவுரை : அறவுணர்வு இல்லாத தாருகன், 'பெண்ணே நீ யார்? வெற்றி'புடைய மதம் உடைய யானையும் அஞ்ச மோதும் ஆண் புலியை வெல்லும் பொருட்டு எண்ணி மான் ஒன்று சென்றாற் போல் நான்முகன் முதலியவரை வென்ற என்னுடன் நீ போரிட வந்தது என்ன காரணத்தால்? உரைப்பாயாக!' என்று வினவினான்.

விளக்கம் : யாரை-யார். **வென்றிமதகரி**-வெற்றியுடைய யானை. **வெல்வான்**-வெல்லும் பொருட்டு. **முன்னி**-நினைத்து. **மான் அடைந்தது என்ன**-மான் சென்றது போல். **பொர**-போரிட. **உரைத்தி**-கூறுவாய். 185

596. அன்னசொல் குமரி கேளா அசனிஏறு என்ன நக்கு
நன்னரில் பகைவ னானநவை உறு அசுர, கேண்மோ!
துன்னும்அக் கடவு ளர்க்குத் துயரம்நீ இழைத்தலாலே
என்னைநின் கொல்வான் முக்கண் எம்பிரான் இவண்விடுத்தான்.

நின்னை வெல்லச் சிவபெருமான் என்னை அனுப்பியுள்ளார்.

தெளிவுரை : தாருகன் கூறிய அச்சொல்லைக் காளி கேட்டாள். இடியேற்றைப் போல் சிரித்தாள். 'நன்மை இல்லாத பகைவனான குற்றம் உடைய அசுரனே கேள்! அக்கடவுளர்க்குத் துன்பத்தை நீ செய்ததால், என்னை நின்னைக் கொல்லும் பொருட்டு மூன்று கண்களையுடைய சிவபெருமான் இங்கு அனுப்பியுள்ளார்'.

விளக்கம் : கேளா-கேட்டு. **அசனியேறு**-இடியேறு. **நக்கு**-சிரித்து. **நன்னர்இல்**-நன்மை இல்லாத. **நவையுறு**-குற்றம் பொருந்திய. 186

597. ஆதலான் மதவேழத்தை அட்டுணப் பிணாம மடங்கல்
போதுமாறு என்ன நின்னைப் புகுந்துஒரு கணத்தின் நுங்கி
ஒதும்வா னவர்கள் துன்போடு உடற்றும்என் பசியும் நீங்கும்
காதலால் இவண் வந் துற்றேன் காளிநான் எனஉ ரைத்தாள்.

நின்னைப் போரிட்டு அழிக்க வந்துள்ளேன்.

தெளிவுரை : 'ஆதலால் மதம் கொண்ட யானையை வென்று உண்ணப் பெண் சிங்கம் செல்வது போல் நின்னைப் போரிட்டு ஒரு கணத்தில் நுங்கி, வானவர்கள் துன்பத்துடன், வருத்தும் என் பசியும் நீக்குகின்ற ஆசையால் இங்கு வந்துள்ளேன்! நான் காளி ஆவேன்!' என்று காளியுரைத்தாள்.

விளக்கம் : மதவேழம்-மதத்தையுடைய யானை. **அட்டு**-கொன்று. **உண**-உண்ண. **பிணாமடங்கல்**-பெண் சிங்கம். **போதுமாறு என்ன**-வருவதைப் போல். **நுங்கி**-உண்டு. **வானவர்கள் துன்போடு**-வானவரின் துன்பத்துடன். **இவண்**-இங்கு. 187

598. உரைத்தலும் அவுணர் கோமான் ஒருகையோடு ஒருகை தாக்கிச்
சிரித்துஎமை நுகர்வன் என்று தெரிவைநீ உரைத்த மாற்றம்
கரத்தினில் விசும்பு பற்றிக் கவ்வுவன் என்பது ஒக்கும்
தரித்தம் இவ் வளவும் உன்னைத் தையல் என்றுஅடாமல் என்றான்.

பெண் என்பதால் நின்னைக் கொல்லவில்லை

தெளிவுரை : அங்ஙனம் காளி உரைக்கவும், அவுணரின் மன்னனான தாருகன் ஒருகையுடன் ஒருகை தாக்கிச் சிரித்தான். 'என்னை உண்பேன் என்று பெண்ணாகிய நீ சொன்ன சொல் கையில் வானத்தைப் பிடித்து உண்பேன் என்பதைப் போன்றதாகும். இவ்வளவு நேரம் பொறுத்தேன். நீ பெண் என்று கொல்லாமல் விட்டேன்' என்று கூறினான்.

விளக்கம் : அவுணர் கோமான்-அசுரர் மன்னன். **நுகர்வேன்**-உண்பேன். **தெரிவை**-பெண். **மாற்றம்**-சொல். **கவ்வுவன்**-உண்பேன். **தரித்தம்**-பொறுத்தோம். **அடாமல்**-கொல்லாமல். 188

599. என்றலும் இறைவி கேளா, இழிதொழில் அவுண, என்னை
வென்றிஇல் மடந்தை என்ன விளம்பினை, உலகம்எல்லாம்
ஒன்றொரு கணத்தின் மாற்றி ஒடுக்குவது எமைஆள்வெள்ளிக்
குன்று இறை சத்தி அன்றோ குறித்திலை போலும் என்றாள்.

'எம் இறைவி பராசத்தி' எனக் காளியுரைத்தல்

தெளிவுரை : என்று தாருகன் உரைத்தான். அதைக் காளிதேவி கேட்டு 'இழிந்த தொழிலையுடைய அவுணனே, என்னை வெற்றி இல்லாத மடந்தை என்று உரைத்தாய். உலகம் எல்லாம் ஒரு கணத்தில் மாற்றி ஒடுக்குவேன். எம்மை ஆள்பவள் வெள்ளிமலை இறைவி பராசத்தி யல்லளோ! இதை நீ மனத்தில் எண்ணிப் பார்க்கவில்லை போலும்!' என்று மொழிந்தாள்.

விளக்கம் : கேளா-கேட்டு. **வெற்றியின் மடந்தை**-வெற்றி+இல்+ மடந்தை, வெற்றியில்லாத பெண். **விளம்பினை**-உரைத்தாய். **வெள்ளிக்குன்று**-வெள்ளிமலை. கயிலாய மலை. 189

600. என்று அவள் உரைத்தல் கொள்ளான் இழுதைஆ தலினால் சீறித்
தன்தனி வரிவில் ஒன்று தாங்கிநாண் ஒலிக்கொண்டு ஆர்த்தான்
மின்திகழ் முகில் உடைந்து வீழ்ந்தன பணிபு ரண்ட
குன்றமும் நிலமும் அண்ட கூடமும் வெடித்த அம்மா.

தாருகன் வில் எடுத்து நாண் ஒலியை எழுப்பினான்

தெளிவுரை : என்று காளியுரைத்தாள். அவன் அறிவற்றவன். ஆதலால் காளி கூறியதைக் கேட்டுக் கொள்ளவில்லை. சினத்துடன் தனது ஒப்பற்ற கட்டப்பட்ட வில் ஒன்றை எடுத்து நாணினைத் தெறித்து ஆரவாரத்தை எழுப்பினான் அதனால் மின்னலையுடைய மேகமும் உடைந்து விழுந்தன. பாம்புகள் புரண்டன. மலைகளும் நிலமும் அண்ட உருண்டைகளும் வெடித்தன.

விளக்கம் : இழுதை-அறிவற்றவன். **வரிவில்**-கட்டப்பட்டவில். **ஆர்த்தான்**-ஆரவாரம் செய்தான். **மின்திகழ் முகிலும்**-மின்னலை உடைய மேகமும். **பணி**-ஆதிசேடன் முதலிய அட்ட நாகங்கள். **அண்ட கூடம்**-உலக உருண்டை. 190

601. தார்மலி வயிரத் தோளான் தனுவின்நாண் எறியக் கண்டு
வார்முலை இறைவி தானும் அம்பினை வழங்கு முன்னம்
கார்முகம் அதிர்ப்பது என்னக் கார்முகம் அதனை வாங்கிக்
கூர்முக அம்பு வீச நாண்ஒலிக் கொண்டு நின்றாள்.

காளியும் நாண் ஒலியை எழுப்புதல்

தெளிவுரை : மாலை சூடப் பெற்ற வன்மையுடைய தோள்களை உடைய தாருகன் வில் நாண் ஒலியை எழுப்பக்கண்டு கச்சணிந்த கொங்கையையுடைய இறைவியான காளியும், அவன் அம்பைத் தொடுப்பதற்கு முன் மேகம் ஒலித்தாற் போல் வில்லை வளைத்துக் கூர்மையான அம்புகளை எய்ய நாணின் ஒலியை எழுப்பி நின்றாள்.

விளக்கம் : தார்மலி-மாலை சூடிய. **தனுவின் நாண்**-வல்லின் நாண். (கயிறு) **வார் முலை**-கச்சு அணிந்த கொங்கை. **இறைவி**-காளி. **கார்முகம்**-மேகம்; வில். **வாங்கி**-வளைத்து. **நாண் ஒலிக் கொண்டு**-நாணியின் ஒலியை. 191

602. அம்மைவெஞ் சிலை நாண் ஓசை அவுணன் நாண் ஒலிவிழுங்கி
இம்என எழுந்தது அம்மாயாமளை அவனை நுங்க
வெம்மைகொண் டிருந்தாள் என்றால் அவளது வில்லின் ஆர்ப்புக்
கொம்மையம் குவட்டுத் தோளான் குணஒலி விழுங்கிடாதோ.

அம்மையின் நாண் ஒலி தாருகனின் நாண் ஒலியை விழுங்கியது.

தெளிவுரை : காளி அம்மையின் கொடிய வில்லின் நாண் ஓசை அசுரனின் நாண் ஒலியை விழுங்கி இம்மென எழுந்து. காளி அந்தத் தாருகனை விழுங்க விரும்பியிருந்தாள் என்றால், அவளது வில்லின் ஆரவாரம் திரண்ட அழகிய மலைபோன்ற தோளானின் நாண் ஒலியை விழுங்காதோ!

விளக்கம் : காளி தாருகனை விழுங்க இருந்தான் என்றால் அவளது நாணின் ஒலி தாருகனின் நாண் ஒலியை விழுங்காதோ என்று இயைக்க.

அம்மை வெஞ்சிலை-காளியின் கொடியவில். **இம்மென**-விரை **யாமளை**-காளி. **நுங்க**-விழுங்க. **வெம்மை**-விருப்பம். **கொம்மையங்குவடு**-திரண்ட அழகிய தோள். **ஆர்ப்பு**-ஒலி. **குணஒலி**-நாண் ஒலி. **குணம்**-நாண். 192

603. பின்னா் அங்கு அவுணன் தானோர் பெருங்கணை சிலையில் பூட்டித்
தன்னடி விரல்முன் பின்றேர் தாங்குறச் சானு வாங்கி
முன்உரம் உறவ ளைந்து நின்றுமொய் குதை நாண்கையைக்
கன்னமது அளவும் ஈர்த்துக் காளிமேல் செல்ல எய்தான்.

காளி மீது அம்பு எய்தல்

தெளிவுரை : பின்பு அசுரன் ஓர் பெரிய அம்பை வில்லில் பூட்டித் தன் காலின் விரல் முன் பின் தேர் தாங்க வில்லை வளைத்து முன் உரம் மார்பில் பொருந்த வளைந்து நின்று பொருந்திய குதையில் பொருந்திய கையைக் கன்னம் வரை இழுத்துக் காளியின் மீது செல்லுமாறு எய்தான்.

விளக்கம் : கால்விரல் தேர்த்தட்டில் முன்னும் பின்னும் தாங்கத் துடையை மடக்கி நிற்கும் நிலை இதில் குறிப்பிடப்படுகின்றது. இந்நிலை சூலீடம். 'பிரத்யாலீடம்' என்ற போர் நிலை. **சிலை**-வில். 193

604. விரைந்து அடல் இறைவி பூட்டி வில்லின்ஓர் பகழி தூண்டிப்
பொருந்துறும் அதனை மாற்றிப் பொருக் எனப் பின்னும் நூறு
சரந்தெற எதிர்வி டுத்தாள் தாருகன் கண்டு மாறாத்
தெரிந்திடும் கணைகள் நூறு செலுத்தி அங்கு அவைஅ றுத்தான்.

இருவரும் அம்புகளை எய்தல்

தெளிவுரை : வன்மையுடைய இறைவி விரைந்து வில்லில் ஓர் அம்பைப் பூட்டிச் செலுத்தினாள். பின்பு அதை மாற்றி விரைய நூறு அம்புகளை எய்தாள். தாருகன் அவள் செயலைக் கண்டு அவள் விடுத்த அம்புகளுக்கு மாறாக அம்புகள் நூறு செலுத்தி காளி விடுத்த அம்புகளை அழித்தான்.

விளக்கம் : அடல்இறைவி-வலிமையுடைய காளி. **பகழி**-அம்பு. **பொருந்துறும் அதனை மாற்றி**-தாருகன் எய்த அம்பை மாற்றி.

பொருக்கென-விரைவைப் புலப்படுத்தும் சொல். **சரம்**-அம்பு. **தெற**-அழிக்க. **அறுத்தான்**-அழித்தான். 194

605. அறுத்தலும் இறைவி சீறி ஆயிரம் சுடுச ரங்கள்
தெறித்தவன் கலின மான்தேர்ச் சிந்தினள் பாகனோடும்
கறுத்துமற் றொரு தேர் வாவிக் கணைகள் ஓர்பத்து நூறு
குறித்திட வந்து வாளி குமரிமேல் உற்ற அன்றே.

ஆயிரம் அம்புகள் காளியின் மீது

தெளிவுரை : அவ்வாறு அவன் அறுப்பதைக் கண்டு காளி சினம் கொண்டாள். ஆயிரம் சுடுசரங்கள் எய்தாள். எய்து தாருகனின் கடிவாளம் பூட்டப்பட்ட குதிரைகளையுடைய தேரைப்பாகனோடும் அழித்தாள். அப்போது அவள் சினந்து வேறொரு தேர் மீது தாவி அம்புகள் ஓர் ஆயிரம் எய்தான். அவை வந்து குமரியான காளியின் மீது பாய்ந்தன.

விளக்கம் : இறைவி-காளி. **தெறித்து**-எய்து. **அவன் கலினமா**-அவனது கடிவாளம் பூட்டப்பட்ட குதிரை. **தேர்ச் சிந்தினாள்**-தேரை அழித்தாள். **கறுத்து**-சினந்து. **வாவி**-ஏறி. **கணைகள்**-அம்புகள். **உற்ற**-பாய்ந்தன. 195

606. வாளிகள் தாக்கி நொய்தின் அழிந்திட, வலவி நின்ற
காளிஅங்கு அதனைக் காணூஉக் கணைகள்ஈர் ஏழுசிந்தி
மூள்உறு சினத்து வெய்யோன் பற்றுகார் முகம்து ணித்தாள்
ஆளிஏ றுஅனையான் மற்றோர் அடற்சிலை எடுத்துக் கொண்டான்.

தாருகனின் கைவில்லைச் சிதைத்தல்

தெளிவுரை : அம்புகள் தாக்கிட விரைவில் தேர் ஓட்டுபவள் அழிந்தாள். காளி அதைப் பார்த்து, அம்புகள் பதினான்கு சிந்தி மூள்கின்ற சினம் உடைய கொடிய தாருகனின் கைக்கொண்ட வில்லினைத் துண்டித்தாள். சிங்க ஏறு போன்ற தாருகன் வேறொரு வில்லை எடுத்துக் கொண்டான்.

விளக்கம் : வாளிகள்-அம்புகள். **நொய்தின்**-விரைவில். **வலவி**-தேர் ஓட்டி. **காணூஉ**-பார்த்து. **ஈர்ஏழ்**-பதினான்கு. **வெய்யோன்**-கொடியவனான தாருகன். **கார்முகம்**-வில். **ஆளியேறு**-ஆண்சிங்கம். **அடற்சிலை**-போரிடும் வில்; வன்மையுடைய வில்லுமாம். 196

607. அச்சிலை குனித்து வாளி ஐம்பது சிதறிச் சூலி
கைக்சிலை துணித்து முப்பான் கணைஎதிர் புகவி டுத்தான்
அச்சிலை பகழிஎல்லாம் நாந்தகம் ஒன்றால் நூறி,
முச்சகம் புகழும் அம்மை மூரிவில் ஒன்றுஎ டுத்தாள்.

காளி வில்லை எடுத்தாள்

தெளிவுரை : தாருகன் எடுத்த அந்த வில்லை வளைத்து ஐம்பது அம்புகள் எய்து அவன் கையில் இருந்த வில்லைத் தூண்டித்தாள். அப்போது தாருகன் முப்பது அம்பு எதிரே செல்ல எய்தான். அந்த வில்லின் அம்புகளை எல்லாம் ஓர் வாளால் அழித்து மூன்று உலகங்களும் புகழும் அம்மை வன்மையுடைய வில் ஒன்றை எடுத்தாள்.

விளக்கம் : குனித்து-வளைத்து. **வாளிஐம்பது**-ஐம்பது அம்பு. **சூலி**-காளி. **துணித்து**-துண்டித்து. **நாந்தகம்**-வாள். **முச்சகம்**-மூன்று உலகம். **மூரிவில்**-வன்மை வாய்ந்த வில். 197

608. எடுத்தவெஞ் சிலைகு னித்தங்கு ஈரும்ஈர்ம் பகழி நொய்தின்
விடுத்தனள் அவுணன் மார்பின் விசிகம் மற்றுஅவன் உரத்தில்
அடுத்தன அடுத்தலோடும் அன்னது விலக்க மற்றும்
தொடுத்துஇரு சரங்கள் அன்னோன் சுடர்முடி தள்ளி ஆர்த்தாள்.

தாருகன் முடியைக் கீழே தள்ளுதல்

தெளிவுரை : காளி, எடுத்த கொடிய வில்லைக் குனித்து அங்குக் கூர்மையான அம்புகளை விரைவில் எய்தாள். அவுணனின் மார்பில் போய்த் தைத்தன. தைத்த அதை அவன் விலக்க, மேலும் அம்புகளைத் தொடுத்து இரு அம்புகள் எய்து அவன் சுடர் உடைய முடியைத் தள்ளி ஆரவாரித்தாள்.

விளக்கம் : வெஞ்சிலை-கொடிய சிலை. **ஈரும்**-அறுக்கும். **ஈர்ம்பகழி**-கூர்மையான அம்பு. **நொய்தின்**-விரைவில். **விசிகம்**-அம்பு. **அடுத்தன**-தைத்தன. **சரங்கள்**-அம்புகள். **ஆர்த்தான்**-ஆரவாரம் செய்தான். 198

609. பொறைஅறும் தவமும் மாட்சிப் பொருள்அறுங் கவியும் ஆன்ற
மறைஅறும் உணர்வும் செய்ய மகவுஅறும் வாழ்வு நீதி
இறைஅறும் உலகும் அன்போடு இயைபுஅறும் அறமும் போல
முறைஅறும் அவுணர் கோமான் முடிஇழந்து அழகு ஒழிந்தான்.

தாருகன் முடி இழத்தல்

தெளிவுரை : பொறுமை அற்ற தவமும், சிறந்த பொருள் இல்லாத கவியும், இரகசியம் அற்ற உணர்வும் நல்ல மகப்பேறு இல்லாத வாழ்வும், நீதிநடாத்தும் அரசன் இல்லாத உலகும், அன்புடன் தொடர்பு இல்லாத அறமும் போல நல்ல நெறி அற்ற அசுரர் மன்னன் முடியை இழந்து அழகு நீங்கப் பெற்றான்.

விளக்கம் : பொறையறுந்தவம்-பொறுமையில்லாத தவம் பயன்படாது. **பொருளறும் கவி**-சிறந்த பொருள் செறிவு இல்லாத கவி. சிறந்த பொருள் இல்லாத கவி சிறவாது. **மறையறு உணர்வு**-இரகசியம் இல்லாத உணர்வு. **செய்யமகவறு வாழ்வு**-நல்ல மக்கட்பேறு இல்லாத வாழ்வு. **நீதி இறையறு உலகு**-செங்கோல் நடாத்தும் மன்னன் இல்லாத உலகம். **அன்போடு இயைபு அறும் அறம்**-அன்புடன் அமையாத அறம். **முறையறும் அவுணர்**-நெறி முறையற்ற அசுரர். 199

610. சேகரம் குமரி தள்ளத் தீயவன் நாண்உட் கொண்டான்
மாகர்அங்கு எழுந்து துள்ளி மலர்க்கரம் எறிந்து நக்கார்
சாகரம் கிளர்நஞ் சன்ன தாருகன் கொதித்துச் செங்கேழ்
ஆகரம் கடுக்கும் மற்றோர் அணிமுடி முடிக வித்தான்.

தாருகன் வேறு முடியைச் சூடிக்கொள்ளல்

தெளிவுரை : காளி தன் முடியைத் தள்ள, தீயவனான தாருகன் உள்ளத்தில் நாணம் கொண்டான். அப்போது தேவர் எழுந்து துள்ளி மலர் போன்ற கைகளை எறிந்து சிரித்தனர். பாற்கடலில் தோன்றும் நஞ்சைப் போல் தாருகன் சினந்து சிவந்த நிறத்துக்கு இடமான மணியைப் போன்ற வேறொரு முடியைச் சூடிக் கொண்டான்.

விளக்கம் : சேகரம்-முடி. **தீயவன்**-தாருகன். **நாண்உட் கொண்டான்**-மனத்தில் நாணம் கொண்டான். **மாகர்**-தேவர். **மலர்க்கரம்**-மலர் போன்ற கை. **எறிந்து**-கொட்டி. **நக்கார்**-சிரித்தார்.

சாகரம்-கடல். **நஞ்சு அன்ன**-விடத்தைப் போல். **செங்கேழ் ஆகரம்**-சிவந்த நிறம் உடைய மணி. **கடுக்கும்**-ஒக்கும். **முடிகவித்தான்**-முடியைச் சூடிக்கொண்டான். 200

611. பின்னரவ் அசுரன்மேருப் பிறங்கல் நேர்சிலை வளைத்துத்
துன்னுறு சோனை மாரி தோற்றிடப் பகழி தூர்த்தான்;
அந்நிலை அமரர் எல்லாம் அஞ்சினர் இரியல் போனார்;
மன்இரு சுடரும் மீனும் மறைந்தன இருண்ட எங்கும்.

தாருகன் அம்புகளை மழை போல் சொரிதல்

தெளிவுரை : பின்பு அந்தத் தாருக அசுரன் மேருமலை போல் விளங்கும் வில்லை வளைத்துப் பொருந்திய விடா மழை போல் விளங்க அம்புகளை எய்தான். அப்போது அந்த நிலையில் தேவர் எல்லாம் அச்சம் கொண்டனராய் அகன்று போயினர். நிலைபேறுடைய கதிரவனும் சந்திரனும் நட்சத்திரங்களும் மறைந்தன. எங்கும் இருண்டன.

விளக்கம் : மேருப்பிறங்கல் நேர்-மேரு மலையை ஒத்த. **சிலை**- வில். **சோனைமாரி**-விடாமழை. **தோற்றிட**-விளங்க; உவமை உருபு. **பகழி**-அம்பு. **தூர்த்தான்**-எய்து நிறைத்தான். **இரியல் போனார்**- அஞ்சி அகன்றனர். **இருசுடர்**-கதிரவன், சந்திரன். **மீன்**-நட்சத்திரம். 201

612. நதித்திரை என்ன மேல்மேல் நஞ்சினும் கொடிய சாபம்
நுதித்தலைப் பகழி ஈட்டம் உமிழ்ந்திட நொறில்ப ரித்தேர்க்
கதிர்த்தின் மணிம றைப்பக் கழிஇருள் புகலும் கண்டம்
புதித்திரை யினர்கள் தாம்அற்புதத்தொடு மருட்சி கொண்டார்.

தேவர் மருட்சி

தெளிவுரை : நஞ்சை விடக் கொடியவனான தாருகனது ஆற்றின் அலையைப் போல், மேல் மேல் வில்லின் நுனி அம்புக் கூட்டம் உமிழ்ந்திட, விரைவையுடைய குதிரை பூட்டப்படும் தேர்க்கதிர் எழுந்து கதிரவனை மறைக்க மிக்க இருள் புகவும் அதைக் கண்டு, பாற்கடல் அமுதத்தை உண்ட தேவர் வியப்புடன் மருட்சியையும் அடைந்தனர்.

விளக்கம் : நதித்திரை-ஆற்றின் அலை. **நஞ்சினும் கொடியன்**-விடத்தை விடத் தீய தாருகன். **சாபம்**-வில். **பகழிஈட்டம்**-அம்புக் கூட்டம். **நொறில் பரித்தேர்க்கதிர்**- விரைவையுடைய குதிரை பூட்டப் பட்ட தேரின் கதிர். **தினமணி**-கதிரவன். **கழியிருள்**-மிக்க இருள். **புகலும்**-புகவும். **கண்டு**-பார்த்து. **அம்புதித்திரையின்கள்**-பாற்கடலில் தோன்றிய அமுதத்தை உண்ட தேவர்கள். **அற்புதம்**-வியப்பு. **மருட்சி**-மயக்கம். 202

613. பொன்தட மரைகு விந்த, பொலிந்தன குவளை வுட்கள்
தெற்றுறு குடம்பை புக்க, செய்தவர் திகைத்தார், இன்றும்
கற்றையின் சடிலத்து எந்தை கண்களை இமயம் ஈன்ற
பொன்தொடிக் கரத்துஎம் அன்னை புதைத்தனள் கொல்லோ என்று.

தவத்தவர் திகைத்தனர்

தெளிவுரை : இருள் ஏற்பட்டதால் அழகிய தாமரைமலர் குவிந்தன; குவளை மலர்கள் குவிந்தன. பறவைகள் பின்னப்பட்ட தம் கூடுகளுக்குள் சென்றன. இந்நாளிலும் கற்றையான சடையுடைய எம் சிவபெருமானின் விழிகளை இமயமலை ஈன்ற பொன்வளைக் கைகளையுடைய எம் தாய் மூடினாளோ என்று தவத்தவர் திகைத்தனர்.

விளக்கம் : பொன்தாமரை-அழகிய நீர் நிலையில் உள்ள தாமரை மலர். **மரை**-தாமரை. **தெற்றுறுகுடம்பை**-பின்னப்பட்ட கூடு. **கற்றை அம் சடிலத்து எந்தை**-கற்றையான அழகிய சடையையுடைய எம் தந்தையான சிவபெருமான். **இமயம் ஈன்ற**-இமயமலை பெற்ற. **பொற்றொடி**-பொன் வளை. **கொல்லோ**-கொல்+ஓ;. **கொல்**-ஐயப்பொருளை உணர்த்தி வந்த இடைச் சொல். 203

614. அதுதனை இறைவி காணா அசனி ஏறு உட்க நக்கு
கதும்மென நெற்றி நாட்டக் கனலினால் பகழி முற்றும்
சிதைவுற அடலை செய்தாள் செழுமறை சிரத்தி னோடும்
புதுமதி மிலைந்த அண்ணல் புரம்பொடி படுத்த தேபோல்.

அம்புகளை இறைவி எரித்தாள்

தெளிவுரை : அவ்வாறு நிகழ்ந்ததைக் காளி கண்டாள். இடியேறும் அஞ்சச் சிரித்தாள். விரைய நெற்றிக் கண் தீயினால் செழுமையான

மறையின் உச்சியில் பொருந்திய புதிய பிறைத் திங்களைச் சூடிய சிவபெருமான் திரிபுரங்களை எரித்துச் சாம்பலாக்கியது போல் தாருகன் எய்த அம்புகள் எல்லாவற்றையும் சிதையும் படி எரித்தாள்.

விளக்கம் : **காணா**-கண்டு. **அசனியேறு**-இடியேறு. **நக்கு**-சிரித்து. **கதும்என**-விரைய. **நெற்றி நாட்டக்கனல்**-நெற்றிக்கண் தீயினால். **பகழி**-அம்புகள். **அடலை**-சாம்பல். **புதுமதி**-இளம் பிறைச் சந்திரன். **மிலைந்த**-சூடிய. **புரம்**-திரிபுரம். **பொடிபடுத்தது**-சாம்பாலாக்கியது. 204

615. கூர்ங்கணைப் படலை மாயக் குலவும்ஊழ் விளங்கில் தொல்லை
ஈர்ங்கதிர் புனைந்த அண்ணல் அருளினால் இரிய மூட
நீங்கரும் அறிவிழந்து நிகழ்வுறும் தன்மை போல
ஆங்கது விழியின் கண்டான் அறம்என்பது அறிகிலாதான்.

செயலற்று நின்றான் தாருகன்

தெளிவுரை : கூர்மையான அம்புத் தொகுதிகள் அழிய, பொருந்திய குளிர்ந்த பிறைச்சந்திரனைச் சூடிய சிவபெருமான் அருளால் நீங்கின. மூட நீங்குதற்கு அரிய அறிவு இருக்க நடப்பனவற்றை அறியும் தன்மையைப் போல் அதை அப்போது விழியால் கண்டான் அறம் என்பதை அறியாத தாருகன்.

விளக்கம் : கண் எதிரில் காணும் இயல்பு இருந்தும் காண்பதற்கு மாற்றாக ஒன்றையும் செய்ய இயலாமை போலத் தாருகன் அறியும் அறிவு வாய்க்கப்பெற்றும் அவன் விடுத்த அம்புகளைக் காளி அழிப்பதைப் பார்த்தும் செயல் இன்றி இருந்தான் என்பது கருத்து.

கூர்க்கணைப்படலை-கூர்மையான அம்புத் தொகுதி. **ஊழ்**-பழமை. **விளங்கில்**-ஒருமலை. வில்வமும் ஆம். **அறம் என்பது அறிகிலாதான்**-அறம் என்பதை அறியாத தாருகன். 205

616. அன்னது கண்ட வெய்யன் ஆயிரப் பத்துவாளி
தன்நிகர் குமரி எண்தோள் தாக்குற விடுத்தான் தாக்கப்
பல்ஒளி விசிகம் நீறு பட்டன படலும் ஊழி
வன்னியிற் கனன்று கோடி வாளியங்குஅவன் மேல் தூர்த்தாள்.

தாருகன் மீது அம்பு எய்தாள் காளி

தெளிவுரை : அதைக் கண்ட கொடியவனான தாருகன் பத்தாயிரம் அம்புகளைத் தன்னை ஒத்த காளியின் எட்டுத் தோள் தாக்கும்படி எய்தான். பல நுனிகளையுடைய அம்புகள் எரிந்து சாம்பலாயின. சாம்பலாகவும் ஊழி முடிவில் ஏற்படும் தீயைப் போன்று சினந்து கோடி அம்புகள் அவன் மீது காளி எய்தாள்.

விளக்கம் : **வெய்யன்**-தீயவனான தாருகன். **ஆயிரப்பத்து**-பத்தாயிரம். **வாளி**-அம்பு. **குமரி**-காளி. **எண்தோள்**-எட்டுத் தோள்கள். **பன்னுனி**-பல்+நுனி. **விசிகம்**-அம்பு. **நீறுபட்டன**-சாம்பலாயின. **ஊழி வன்னியின்**-யுகமுடிவில் உண்டாகும் தீயைப் போல். **கனன்று**-சினந்து. 206

617. அத்துணைப் பகழி தூண்டி அவன் அவை அறுத்து வீழ்த்தான்
இத்திறம் இருவர் தாமும் ஒருவர்மீது ஒருவர் ஏவும்
வைத்தலைப் பகழி மாற்றி மகிழ்ச்சியும் துயரும் கொண்டு
மொய்த்துறும் அமரர் நோக்க முதிர்சமர்த் தொழில் புரிந்தார்.

ஒருவர் மீது ஒருவர் அம்பு எய்து போரிடல்

தெளிவுரை : அவ்வளவு அம்புகளைச் செலுத்திட அவன் அவற்றையெல்லாம் அறுத்து வீழ்த்தினான். இப்படி இருவரும் ஒருவர் மீது ஒருவர் ஏவும் கூர்மையான முனையையுடைய அம்பை மாற்றி மகிழ்வும் துன்பமும் கொண்டு கூடியுள்ள தேவர் பார்க்க முதிர்ந்த போர்த் தொழிலைச் செய்தனர்.

விளக்கம் : **பகழி**-அம்பு. **வீழ்த்தான்**-விழச் செய்தான். **ஏவும்**-எய்யும். **வைத்தலைப் பகழி**-கூர்மையான முனையையுடைய அம்பு. **மொய்த்துறும் அமரர்**-சூழ்ந்த தேவர். 207

618. வானகத்தொடு மேருவரை முதல் ஆகி நின்ற
மானகத் தோடும் துங்க மகரவே லைகளி னோடும்
கானகத் தோடும் அண்டகடாகத்தி னோடும் மால்நல்
போனகத் தோடும் அன்னோர் பொழிந்திடு சுடுசரங்கள்.

இருவர் அம்புகளும் சென்ற இடங்கள்

தெளிவுரை : காளி, தாருகன் ஆகிய இருவரும் எய்யும் அம்புகள் வானிலே செல்லும். மேருமலை முதலிய பெரிய மலைகளில் செல்லும். உயர்ந்த மீன்கள் வாழ்கின்ற கடலில் போகும். காட்டில் ஏகும். உலக உருண்டையின் ஒட்டில் போகும். திருமாலுக்கு உணவான பூமியில் செல்லும்.

விளக்கம் : வானகம்-வானம். **மேருவரை**-மேரு மலை. **மானகத்தோடும்**-மால்+நகத்து+ஓடும். **நகம்**-மலை. **துங்கம்**-உயர்வு. **மகரவேலை**-மீன் வாழும் கடல். **அண்டகடாகம்**-உலக உருண்டையின் ஓடு. **மானற்போனகம்**-மால்+நல்+போனகம்; திருமாலின் நல்ல உணவான பூமி. **பொழிந்திடு**-எய்யும். 208

619. மாதிரத்து, ஏகும், நேமி வரையகத்து ஏகும், ஆன்ற
பாதலத்து ஏகும், முற்றும் பாழியங் கடலின் ஏகும்,
மீதலத்து ஏகும், அண்ட முகட்டினில் ஏகும், மீண்டும்
பூதலத்து ஏகும் அன்னோர் போர்செய்அத் திரங்கள் அன்றே.

அம்புகள் சென்ற இடங்கள்

தெளிவுரை : காளியும் தாருகனும் போர் இடும் அம்புகள் திசைகளில் செல்லும் கடலால் சூழப்பட்ட எல்லையில் ஓடும் பொருந்திய பாதலத்தில் போகும் வளைந்த வன்மையுடைய கடலில் செல்லும் மேல் உள்ள இடத்தில் போகும். அண்டத்தின் உச்சியில் போகும். மீண்டும் பூமிக்கு வரும்.

விளக்கம் : மாதிரம்-திக்கு. **நேமிவரையகம்**-கடல் சூழ்ந்த எல்லை. **பாதலம்**-கீழ் உலகம். **பாழியங்கடல்**-அகன்ற அழகிய கடல். **மீதலம்**-மேல் இடம். **அண்டமுகடு**-உலகத்தின் உச்சி. **அத்திரங்கள்**-அம்புகள். **அன்றே**-அன்று+ஏ. அசைகள். 209

620. இவ்வகை அமர்செய் கின்ற வேலைஇவ் அரிவை தன்னை
வெவ்விய கடவு ளோர்தம் படைகளால் வெல்வன் என்னத்
தெவ்அடு குவவுத் தோளான் சிந்தனை செய்து கூர்ந்த
பவ்வமன் னவந்த னாது படைஎதிர் செல்ல உய்த்தான்.

வருணாத்திரத்தை எறிதல்

தெளிவுரை : இங்ஙனம் அவர்கள் போர் செய்த போது பகைவரை வெல்லும் திரண்ட தோளையுடைய தாருகன், இந்த மடந்தையைக் கொடிய கடவுளர் படைக்கருவிகளால் வெல்வேன் என்று மனத்துள் எண்ணிக் கூர்மையான கடல் மன்னனது படைக்கலத்தை காளி மீது செல்லும்படி செலுத்தினான்.

விளக்கம் : இவ்அரிவை-இந்த மங்கையை. **வெவ்விய கடவுளோர் தம் படைகள்**-கொடிய தெய்வ அத்திரங்களால்; அப்படைக் கலங்கள் வருணாத்திரம், அக்கினியாத்திரம் முதலியன. **தெவ்வடு குவவுத் தோள்**-பகைவரை வெல்லும் திரண்ட தோள். **பவ்வ மன்னவன்**-கடல் மன்னன், வருணன். அவனது படை வருணாத்திரம். 210

621. பொங்குவா ரிதிகள் ஏழும் புறப்பெருங்கடலும் ஒன்றா
இங்குவந்து எழுந்தது என்ன இருநிலம் விசும்பும் எல்லாம்
நுங்கிவன் திரைஎறிந்து நோன்மை கொண்டு ஆர்த்து நண்ண
அங்கியின் படைசெ லுத்தி அழித்தனள் அதனைச் சூலி.

வருணக்கணையைத் தீக்கணையால் காளி அழித்தல்

தெளிவுரை : தாருகன் எய்த வருணாத்திரம் பொங்கும் கடல்கள் ஏழும் புறப் பெருங்கடலும் ஒன்றாகும்படி இங்கு வந்து எழுந்தது என்னும்படி பெரிய உலகம் வானம் எல்லாம் விழுங்கி வன்மையான அலையை வீசி வன்மையுடன் ஆரவாரித்து நண்ணிட அதைக் காளி அக்கினிக் கனையைச் செலுத்தி அழித்தாள்.

விளக்கம் : பொங்கு வாரிதிகள் ஏழும்-பெருகும் கடல்கள் ஏழும். **வாரிதி**-கடல். **இருநிலம்**-பெரிய பூமி. **நுங்கி**-விழுங்கி. **வன்திரை**-வலிய அலை. **ஆர்த்து**-ஆரவாரித்து. **அங்கியின்படை**-அக்கினிக் கணை. **அங்கி**-அக்கினி. 211

622. மற்றது தெரிந்து தீயன் வன்னிமாப் படைவி டுத்தான்
சுற்றுறு முகலி ரிந்து சூல்அழிந்து இறப்ப ஆழி
வற்றுற அமரர் நைந்து மருண்டிட. எழுந்து பொங்கி
உற்றிட அதனைக் காளி ஒலிப்படை தந்து அழித்தாள்.

தீக்கணைக்கு வாயுக்கணை விடல்!

தெளிவுரை : அதை அறிந்து கொடியவனான தாருகன் தான் ஒரு தீக்கணையை எய்தான். அப்படைக்கலம் சுற்றும்படியான மேகம் போல் அதன் கருப்பத்தை அழிப்பது போல, கடல்கள் எல்லாம் உற்ற, தேவர்கள் வருந்தி மருண்டிட எழுந்து பொங்கி வர, அதைப் பார்த்த காளி வாயுக்கணையை விடுத்து அழித்தாள்.

விளக்கம் : தீயன்-கொடிய தாருகன். **வன்னி மாப்படை**-அக்கினிக் கணை. **முகில்**-மேகம். **சூல் அழிந்து**-கருப்பம் அழிந்து. **இறப்ப**-வற்றிப்போக. **அழிவற்றுற**-கடல் வற்ற. **அமரர்**-தேவர். **நைந்து**-வருந்தி. **மருண்டிட**-மயங்கிட. **ஒலிப்படை**-காற்றுக்கணை; வாயுவாத்திரம். 212

623. தீப்படை அழித லோடும், சினமலி அவுணன் வாயு
மாப்படை விடுத்தான், எல்லா வரைகளும் சுழல விண்ணின்
காப்பணை முறிய வீசிக் கலித்துஎழும் அதனை நாகப்
பூப்படை செலுத்தி மாற்றிப் புணரியும் உட்க ஆர்த்தாள்.

வாயுக்கணையைத் தாருகன் நாகக்கணையால் அழித்தல்

தெளிவுரை : அவுணன், எய்த தீக்கணை அழிய, பின்பு வாயுக்கணையை விடுத்தான். அதனால் எல்லா மலைகளும் சுழன்றன. வானில் கற்பக மரங்களின் கிளைகள் முரிந்தன. இவ்வாறு ஆரவாரித்து எழும் அக்கணையை நாகக்கணையை விடுத்து மாற்றினான்; கடல்கள் அஞ்ச ஆரவாரித்தான்.

விளக்கம் : தீப்படை-தீக்கணை; அக்கினியாத்திரம். **சினம்மலி அவுணன்**-சினம் மிக்க அசுரன். **வாயுமாப்படை**-வாயுக்கணை. **விண்ணின்கா**-கற்பகமரம். **பணை**-கிளை. **கலித்து எழும்**-ஆரவாரித்து எழும். **நாகப்படை**-பாம்புக்கணை; நாகாத்திரம். **புணரியும்**-கடலும். **உட்க**-அஞ்ச. **ஆர்த்தான்**-ஆரவாரித்தான். 213

624. கொடியவன் அதுகண்டு உள்ளம் தழல்எனக் கொதித்து நாகப்
படையினை விடுத்தான், ஆன்ற பஃறலைப் படம்வி ரித்துக்
கடுவினை வாய்கள் தோறும் கான்றது வருதலோடும்
மிடல்உறு கலுழ வென்றிப் படையினை விடுத்துஒ ழிந்தாள்.

காளி கருடக்கணையை விடுதல்

தெளிவுரை : கொடியவனான தாருகன் அதைப் பார்த்து. தீயைப் போல் சினந்து நாகக்கணையை விடுத்தான். பல தலைப்படங்களை விரித்து நஞ்சை வாய்தோறும் வெளிப்படுத்தி வருதலைப் பார்த்து காளி, வன்மைவாய்ந்த வெற்றியுடைய கருடப்படையை விடுத்து அழித்தாள்.

விளக்கம் : தழல்-தீ. **நாகப்படை**-பாம்புக்கணை. **பஃறலை**-பல தலை. **கடுவினை**-நஞ்சினை. **கான்று அதுவருதலோடு**-கக்கியபடி வருதலால். **மிடல்உறு**-வன்மையுடைய. **கலுழ வென்றிப்படை**-வெற்றிபெறும் கருடக்கணை. **வென்றி**-வெற்றி. 214

625. கண்டகன் அதுமற்று ஏவக் கலுழவெம் படைதன் பாங்கர்
மண்டுறு சிறகர்க் காற்றான் இறுதிநாள் மருத்தும் உட்கக்
கொண்டலும் இரிய ஓங்கு குன்றுகள் பொடிப்ப அங்கி
ஒண்திறல் அழிய வாயின் உரகமோடு அடைந்தது அன்றே.

கருடணைக் கணையால் அழிவு

தெளிவுரை : கொடியவனான தாருகன் அதைச் செலுத்தக் கருடக்கணை தன் பக்கம் பொருந்திய இறகின் காற்றால் யுக இறுதி நாளில் தோன்றும் மாருதமும் அஞ்சும்படி மேகமும் அகல, உயர்ந்த மலைகள் பொடியாக, அனல் ஒள்ளிய ஆற்றல் அழிய வாயில் பாம்புடன் அடைந்தது.

விளக்கம் : கண்டகன்-அசுரன். **கலுழவெம்படை**-கலுழன்+வெம்மை+படை; கருடனாகிய கொடிய படை; கருடாத்திரம். **சிறகர்க்காற்றால்**-இறகின் காற்றால். **இறுதிநாள் மருத்து**-யுக முடிவுநாளில் தோன்றும் காற்று. **உட்க**-அஞ்ச. **கொண்டல்**-மேகம். **இரிய**-அகல. **பொடிப்ப**-பொடியாய் ஆக. **அங்கி**-தீ. **ஒண்டிறல்**-ஒள்ளிய ஆற்றல். **உரகம்**-பாம்பு. **அன்றே**-அசை. 215

626. அந்தவான் படையின் ஆற்றல் அம்மைகண்டு அதற்கு ஒப்பாய
நந்திவான் படையெடுத்து நறுமலர் ஆதி கொண்டு
சிந்தையால் வழிபட்டேந்தித் திகழ்படைக்கு இறைநீ அன்னோன்
உந்துமாண் படையின் வன்மை ஒழித்தருள் எனவி டுத்தாள்.

விடைக்கணையைக் காளி விடுத்தல்

தெளிவுரை : அந்தச் சிறந்த கருடக்கணையின் ஆற்றலைக் காளி கண்டு, சிவபெருமானுக்கு ஒப்பான விடைக்கணையை எடுத்து. நறுமண மலர்கள் முதலியவை கொண்டு உள்ளத்தால் வழிபாடு செய்து 'விளங்கும் படைக்கு நீயே தலைவனாகும். ஆதலால் நீ தாருகன் எய்யும் சிறந்த படையின் வலிமையைக் கெடுப்பாயாக!' என விடுத்தாள்.

விளக்கம் : வான்படை-சிறந்த கணை. **அரற்கு ஒப்பாய**-சிவனுக்கு ஒப்பான. **நந்திவான்படை**-சிவக்கணை. **நறுமலர்**-நறுமணம் உடைய மலர்கள். **ஏத்தி**-துதித்து. **இறை**-தலைவன். **அன்னோன்**-அந்தத் தாருகன். **மாண்படை**-சிறந்தபடை. 216

வேறு

627. விடுக்கஅது விடை உருக் கொண்டு இமில்அண்ட
முகடுரிஞ்ச வியன்ஞா லத்தை
அடிக்குரமொன்று எற்றுறக்கட்டு அழல்தூர்ப்ப
வாயில்நீர் அதனைக் காட்டத்
தொடைக்கிளர்கிண் கிணிக்களத்தில் தடவரஅந்
தரமருத்துச் சுடுதீ யண்டம்
அடுக்கும் மணிப் புழைநாசி விழிகாட்ட
உலகம் எலாம் அயர்ந்து வீழ.

விடைக்கணையின் இயல்பு

தெளிவுரை : காளி அதைச் செலுத்த அது காளையின் வடிவைக் கொண்டு இமிலானது உலக முகட்டை உராய, பெரிய உலகத்தை அடியான குளம்பு ஒன்று எற்ற, தொகுதியான அழல் அவிப்பதை வாயில் நீர் புலப்படுத்த, மாலை விளங்கும் கிண்கிணி கழுத்தில் தடவ, வானத்துக் காற்றையும் சுடும் தீயையும் அண்டத்தில் அடுக்கும் மணிப்புழை நாசியும் விழியும் காட்ட உலகம் எல்லாம் தளர்ந்து விழ.

விளக்கம் : அந்தக்கணை காளையின் வடிவு கொண்டு வந்தது. அதன் இமில் அண்டத்தை உராய்ந்தது. நிலத்தைக் கால் பொருந்தியது. வாயில் நீர் ஒழுகியது. **தொடைக்கிளர்**-மாலை விளங்கும். **களத்தில்**-கழுத்தில். **தடவா**-தடவ. **அயர்ந்து**-தளர்ந்து. **இமில்**-முசுப்பு. **கட்டழல் தூர்க்குமாறு வாய் நீர் காட்ட**-காற்றை நாசியும், தீயை விழியும் காட்ட. 217

628. வாலடியான் மேருகிரி முதலாய
வரைபெயர்ந்து மறிந்து வீழ
மேல்அடன்மா மருப்புஎறிய உரியதிலா
மையினில் அங்கி மிசைஇரும்ப
மாலொடுவா னவர்கரங்கள் உச்சிகுவித்து
இறைஞ்சி நனி வாழ்த்த எங்கள்
பாலுடையான் எமைஆளும் பதமுடையான்
திருநந்திப் படைபோயிற்றால்.

விடைப்படை செல்லுமாறு

தெளிவுரை : அதன் வால் அடியால் மேருமலை முதலியவை நிலைகுலைந்து மடிந்து விழ, மேல் உள்ள வலிய மாமருப்பு எறிதற்கு உரியதில்லாமையின் அசையாது இருப்ப, திருமாலுடன் தேவர் கரங்களும் உச்சியில் குவித்து வணங்கி மிகவும் வாழ்த்த, எங்கள்பால் அன்பு உடையவன் எம்மை ஆளும் திருவடியை உடையவன் ஆன திருநந்திப்படை போயிற்று.

விளக்கம் : நந்திப்படையால் மேருகிரி முதலியவை நிலை குலைந்தன. **மிசை இருப்ப**-மேல் இருக்க. **மால்**-திருமால். **போயிற்றால்**-போயிற்று+ஆல்; **ஆல்**-அசைநிலை. 218

629. நந்தி அடல் படைகண்ட வுடன் கலுழப்
படைநடுங்கி நஞ்சு காலும்
தந்தமணி அரவுதனைக் கண்டதென
அழிந்தது, பின் தலைவன் ஆகும்
எந்தைஇறை விடைஅவுணன் மேற்செல்ல
அவனும்அதை எதிர்வி டுத்தான்
வந்தனைசெய்து அவைதம்மில் பொருதுவிடுத்து
அவரகத்தும் மறிந்து புக்க.

விடுத்தவரிடமே கணைகள் போய்ச்சேர்தல்

தெளிவுரை : நந்திபான வன்மையுடைய படையைக் கண்டதும் கருடப்படை நடுங்கி விடத்தைக் கக்கும் பணியையுடைய பாம்பைக் கண்டாற்போல அழிந்தது பின் தலைவனான எம் தந்தை

இறையான விடைக்கணை அவுணன் மீது சென்றது. அவனும் அதை எதிர் விடுத்தான். அவை ஒன்றை ஒன்று வணங்கித் தம்மில் போரிட்டு விடுத்தவரிடமே போய்ச் சேர்ந்தன.

விளக்கம் : நந்தி அடற்படை-நந்தியான போர்ப்படை. **கலுழப்படை**-கருடப்படை. **காலும்**-கக்கும். **அழிந்தது**-தோற்றது. **எந்தை**-எம் தந்தை. **விடை**-நந்திக்கணை. **அதை**-நந்திக்கணை. **தம்மிற் பொருது**-தமக்குள் போரிட்டு. **விடுத்தவரகத்து**-விடுத்தவரிடம். 219

630. இந்திரன்மா மலர்அயன் மால்எனும் இவர்கள்
படைகள்தமை எடுத்துப் பின்னர்
உந்தினன்அங்கு அவுணன்அவை அவர் உருக்கொண்டு
அதிர்ந்துநனி உருத்தெ ழுந்து
வந்திடலும் அவர் படைகள் தானும்எதிர்
செலவிடுத்து மாற்றி நின்றான்
கொந்தவிழும் மலர்இதழிச் சடாமகுடத்து
இறைவிடுத்த குமரி மாதோ.

இந்திரன் நான்முகன், மால் முதலிய கணைகளை விடுத்தல்

தெளிவுரை : கொத்து அவிழும் மலர்க் கொன்றையை அணிந்த சடையான மகுடத்தினையுடைய சிவபெருமான் விடுத்த காளி மீது இந்திரன், சிறந்த மலரில் வீற்றிருக்கும் நான்முகன், திருமால் என்னும் இவர்கள் படைகளை அவுணன் விடுத்தான். அவையெல்லாம். அவர் இந்திரன் முதலியவர் வடிவு கொண்டு அதிர்ந்து மிகவும் சினந்து எழுந்து வரவும், அப்படைகளையும் எதிர் எதிர் செல்லும்படியாக அம்புகளை விடுத்து மாற்றி நின்றாள்.

விளக்கம் : இந்திரன், நான்முகன் மால் முதலியவர் கணைகளை இருவரும் விடுத்தனர்.

படைகடமை-படைகள்+தமை; கணைகளை. **அவர் உரு**-அவர் அவர்வடிவு. **உருத்து எழுந்து**-சினம் கொண்டு எழுந்து. **கொந்த விழும் மலர் இதழி**-கொத்துகள் மலரும் கொன்றை மாலை. **இதழி**-கொன்றை. 220

வேறு

631. இங்குஇனி இவளை எல்லா உலகமும் இமைப்பில் மாற்றும்
சங்கரன் படைவி டுத்துச் சாடுதும் என்னத் தீயோன்
அங்குஅதை விரைந்தெ டுத்தே அருச்சனை மனத்து இயற்றி
'மங்கைதன் உயிர்கு டித்து வருதி' என்று இறைஞ்சி உய்த்தான்.

தாருகன் சிவக்கணையை விடுத்தல்

தெளிவுரை : தீயவனான தாருகன், 'இங்கு இனி இக்காளியை எல்லா உலகத்தையும் இமைப்போதில் அழித்து மாற்றும் இயல்புடைய சிவக்கணையை விடுத்துக் கொல்வோம்' என்று எண்ணினான். அந்தக் கண்ணையை விரைவாக எடுத்தான். உள்ளத்தில் அதை வழிபட்டான். 'அம்மங்கையினது உயிரைக் குடித்து வருவாயாக' என்று வணங்கி அந்தக் கணையை எய்தான்.

விளக்கம் : இவளை-காளியை. **இமைப்பின்**-இமைப்பொழுதில். **சங்கரன்படை**-சிவக்கணை. **சாடுதும்**-கொல்வோம். **அருச்சனை மனத்தியற்றி**-மனத்தில் வழிபாடு செய்து. **வருதி**-வருவாயாக. **இறைஞ்சி**-அக்கணையை வணங்கி. 221

632. ஊழியங் கனலி ஓர்சார் உருமொடு முகில்கள் ஓர்சார்
ஆழியங் கடல்கள் ஓர்சார், உலகுஅடும் ஆலம் ஓர்சார்,
சூழியங் கரிகள் ஓர்சார், சுடுசரத் தொகுதி ஓர்சார்,
பாழியம் புயத்து வென்றிப் பாரிடக் குழுக்கள் ஓர்சார்.

சிவக்கணை வெளிப்படுத்தியவை

தெளிவுரை : யுகமுடிவில் தோன்றும் தீ ஒருபக்கம், இடியுடன் மேகங்கள் ஒருபக்கம், ஆழமான கடல்கள் ஒரு பக்கம், உலகத்தை அழிக்கும் ஆலகால நஞ்சு ஒருபக்கம், முகபடாத்தை உடைய யானைகள் ஒருபக்கம், கொல்லும்படியான அம்புக் கூட்டம் ஒரு பக்கம், அகன்ற தோளையுடைய வெற்றி பொருந்திய பூதகணங்கள் ஒருபக்கம்.

விளக்கம் : இப்பாடல் 224 (634) ஆம் பாடலுடன் முடியும். அக்கணை செல்லும் போது, ஊழிக்கனல் போன்ற கனலையும் இடியுடன் கூடிய மேகங்களையும் கடல்களையும்

ஆலகாலத்தையும் யானைகளையும் அம்புகளையும் பூதகணங்களையும் வெளிப்படுத்திச் சென்றது.

ஓர்சார்-ஒரு பக்கத்தில். **ஊழி அங்கனலி**-யுகமுடிவில் தோன்றும் வடவைக்கனல். **உரும்**-இடி. **முகில்கள்**-மேகங்கள். **உலகுஅடும் ஆலம்**-உலகத்தை அழிக்கும் ஆலகால விடம். **தூழியங்கரிகள்**-முகபடாத்தையுடைய யானைகள். **அடுசரம் தொகுதி**-கொல்லும் அம்புகளின் கூட்டம். **பாழியம் புயத்து**-அகன்ற அழகிய தோளையுடைய. **பாரிடக்குழுக்கள்**-பூதகணங்கள். 222

633. கடவுளர் படைகள் ஓர்சார், கார்இருள் படலை ஓர்சார்,
படஅர வினங்கள் ஓர்சார், பாய்புலி அரிமான் ஓர்சார்,
உடல்உரு பவனம் ஓர்சார், உடல்உருத் திரர்கள் ஓர்சார்,
மிடல்உறு வடுகர் ஓர்சார், உக்கிர வீரர் ஓர்சார்.

(தொடர்ச்சி)

தெளிவுரை : கடவுளர்களின் படைக்கலங்கள் ஒருபக்கம், கரிய இருள் தொகுதி ஒருபக்கம், படத்தையுடைய பாம்புக் கூட்டங்கள் ஒரு பக்கம், பாய்ந்து செல்லும் இயல்புடைய புலி சிங்கம் ஆகியவை ஒரு பக்கம். உருத்தும் காற்று ஒரு பக்கம், உடம்பையுடைய உருத்திரர்கள் ஒரு பக்கம், மிக்க வன்மையுடைய வடுகர்-வைரவர்-ஒருபக்கம். வக்கிரமான வீரர் ஒருபக்கம்.

விளக்கம் : அக்கணை போகும்போது கடவுளர்களின் கணைகளையும் இருளையும் பாம்புக் கூட்டத்தையும் புலி சிங்கங்களையும் காற்றையும் உருத்திரர்களையும் வைரவரையும் தோற்றுவித்தபடி சென்றது. **கடவுளர் படைகள்**-இந்திரன், நான்முகன், திருமால் முதலிய தெய்வக்கணைகள். **கார் இருட்படலை**-கரிய இருள் தொகுதி. **படஅரவு**-படத்தையுடைய பாம்பு. **அரிமா**-சிங்கம். **மிடல்உறு**-வன்மையுடைய. **வடுகர்**-வைரவர். **உடலல்**-வருத்துதல். **உருத்திரர்**-ஏகாதசருத்திரர்; சிவசாருபம் பெற்றவர். 223

634. கான்றுவல் வரைந்து முக்கண் கடவுள்தன் படைமுன் வந்து
தோன்றலும், குமரி கண்டு துணுக்கெனத் தானும் அங்ஙன்
மூன்றுஎனும் புரம்முருக்கும் முதல்வன் வெம் படையைப் பூசை
ஆன்றதன் மனத்தின் ஆற்றி அதற்குஎதிர் செல்ல உய்த்தாள்.

காளியும் சிவக்கணை விடுதல்

தெளிவுரை : மேற்கண்டபடி பலவற்றை வெளிப்படுத்தியபடி விரைந்து மூன்று கண்களையுடைய சிவக்கணை முன்வந்து தோன்றியது. தோன்றவும், காளி, அதைக் கண்டு விரைவாய்த் தானும் அப்படியே மூன்று எனும் புரங்களை அழிக்கும் சிவபெருமானின் கொடிய படையை தன் உள்ளத்தில் வழிபாட்டைச் செய்து, தாருகன் விட்ட சிவகணைக்கு எதிரே தானும் ஒரு சிவக்கணையை விடுத்தாள்.

விளக்கம் : கான்று-வெளிப்படுத்தி. **வல் விரைந்து**-மிக விரைந்து. **முக்கண்கடவுள் படை**-மூன்று கண்களையுடைய சிவக்கணை. **குமரி**-காளி. **மூன்று எனும் புரம் முருக்கும்**-முப்புரங்களை அழிக்கும். **முதல்வன் வெம்படை**-சிவக்கணை; பாசுபதக்கணை. **உய்த்தாள்**-விடுத்தாள். 224

635. உய்த்திட அனையது அவ்வாறு உருவுகள் பலவும் ஆகி
அத்தலை அவுணன் தூண்டும் அடற்படையுடன் சென்றுஏற்று
மெத்தமர் புரிந்த தம்மா வேலைகள் தணந்த அண்ட
பித்திகை பிளந்தது அம்பொன் பிறங்கலும் வெடித்த அன்றே.

சிவக்கணைகள் ஒன்றை ஒன்று எதிர்த்தன

தெளிவுரை : அங்ஙனம் குமரியான காளி சிவக்கணையை விடுக்கவும், அக்கணை தாருகன் விட்ட சிவக்கணை பலவுருவங்களாகி வந்ததுபோல் பலவுருவாகி, அங்கு வந்த அசுரன் தாருகன் அனுப்பும் வன்மையுடைய கணைக்கு எதிர்போய் எதிர்த்தது. மிகவும் போர் பல செய்தது. அப்போது கடல்கள் வற்றின. அண்டச்சுவர் பிளந்தது. அழகிய பொன் மலையான மேருவும் வெடித்தது.

விளக்கம் : அவ்வாறு-தாருகன் விட்டகணை பல வடிவாகி வந்தவாறு. **அத்தலை**-அங்கு. **தூண்டும்**-செலுத்தும். **அடற்படை**-வன்மையுடைய படை. **ஏற்று**-எதிர்த்து. **மெத்தமர்புரிந்து**-மிகவும் போர் ஆற்றி. **வேலைகள் தணந்த**-கடல்கள்வற்றின. **அண்டப் பித்திகை**-உலகத்தின் சுவர். **அம்பொன் பிறங்கல்**-அழகிய பொன்மலையாம் மேருமலை. **அன்றே**-அன்று, ஏ; அசைகள். 225

636. இருவர்தம் படையும் இவ்வாறு ஏற்றமர் புரிந்து மீண்டும்
மருவின அவர்பால்; வெய்யன் மனமகிழ்ந்து அவள்தன் மீதில்
உரவிய கதை ஒன்று ஒல்லை ஒச்சினன் அதனைப் பாந்தள்
பொருவுறு சரம்ஈர் ஐந்து போக்கினள் துணித்து வீழ்த்தாள்.

தாருகன் தண்டினை எய்தலும் காளி பாம்புக்கணையை விடுத்தலும்

தெளிவுரை : இருவரின் கணைகளும் இப்படி எதிர்த்துப் போர் செய்து மீண்டும் விடுத்தவரிடமே திரும்பி வந்தன. கொடிய தாருகன் பின்னர் மனம் மிகழ்ந்து அக்காளியின் மீது வன்மையுடைய தண்டு ஒன்றை விரைவாக எறிந்தான். அத்தண்டைக் காளி பாம்புக்கணை பத்து செலுத்தித் துண்டித்து வீழ்த்தினாள்.

விளக்கம் : படை-சிவக்கணை. **அமர்**-போர். **மருவின**-திரும்பி விடுத்தவரிடம் வந்து பொருந்தின. **வெய்யன்**-கொடியவன். **உரவிய கதை**-வலிய தண்டு. **ஒல்லை**-விரைவில். **ஒச்சினன்**-எறிந்தான். **பாந்தள் பொருவுறு சரம்**-பாம்பினைப் போன்ற அம்பு. **துணித்து**-துண்டித்து. 226

637. பின்னர்ஐம் பதிற்றுஇ ரட்டிப் பிறைமுகக் கணைகள் தூவி
மன்னவன் தடந்தேர்ச் சாய்ப்ப மற்றொடு திகிரித் திண்தேர்
தன்னில் ஒண்பணையின் ஊடு தாவும்வா னரம்போல் பாய்ந்தான்
அன்னது மறித்தும் வீழ்த்தாள் அடற்கணை நூறு போக்கி.

தாருகனின் இருதேர்களைக் காளி அழித்தல்

தெளிவுரை : பின்னர், காளி, நூறு பிறைச்சந்திரன் போன்ற முகமுடைய அம்புகளைச் செலுத்தித் தாருகமன்னனின் தேரினை

அழித்தாள். அச்சமயத்தில் தாருகன் குரங்கைப் போல் வேறொரு சக்கரத்தையுடைய திண்மையான தேரில் பாய்ந்தான். காளி அவன் ஏறிய அந்தத் தேரையும் நூறு கணைகளைச் செலுத்தி அழித்தாள்.

விளக்கம் : ஐம்பதிற்றிரட்டி-நூறு. **பிறைமுகக்கணை**-பிறைபோன்ற முகமுடைய அம்பு. **தூவி**-எறிந்து. **தடந்தேர்**-பெரிய தேர். **சாய்ப்ப**-அழித்துக்கீழே தள்ள. **திகிரித் திண்டேர்**-சக்கரத்தையுடைய திண்ணிய தேர். **பணை**-மரக்கிளை. **வானரம்**-குரங்கு. **மறித்தும்**-திரும்பவும். **அடல்கணை**-வலிய அம்பு. 227

638. மற்றது தெரிந்து தீயன் மறுகுறு மனத்த னாகிப்
பற்றலர் புகழும் காளி தேரினில் பாய்ந்து இமைப்பின்
இற்றது புவிகொல் ஓங்கும் இமயங்கொல் என்னக் கையால்
எற்றியங்குஅவள் தன் மார்பின் இருநிலக் தனில்குப் புற்றான்.

காளி தாருகனைக் கையால் அடித்தல்

தெளிவுரை : காளி தன் தேரை அழித்தாள் என்பதைத் தாருகன் அறிந்து மயங்கும் மனத்தை உடையவனாகி, பகைவர் புகழும் காளியின் தேரில் பாய்ந்து ஏறி இமைப்போதில் அழிந்தது பூமியோ, இமயமலையோ என்று எண்ணுமாறு அவளது மார்பில் கையால் அறைந்து அவளது மார்பாகிய பெரிய நிலத்தில் தலைகுப்புற விழுந்தான்.

விளக்கம் : மறுகுறு-மயங்கும். **பற்றலர்**-பகைவர். **இமைப்பின்**-இமைப்பொழுதில். **இற்றது**-உடைந்தது. **இமயங்கொல்**-இமயமலையோ.
தன் தேர் அழிக்கப்பட்டத்தைக் கண்ட தாருகன் காளியின் தேரில் ஏறி அவள் மார்பில் அடித்தான். பின் குப்புற விழுந்தான். **எற்றி**-அடித்து. **குப்புற்றான்**-தலைகீழாக விழுந்தான். 228

639. கண்டனள் அதனைக் காளி கடையுகக் கனலில் சீற்றம்
கொண்டினி இவனை இன்னே கொல்வன் என்று அனந்தன் காண
மண்டலம் வெடிப்ப மன்னர் மன்னவனுடன்குப் புற்று
விண்டிட உரத்துஎ றிந்தாள் முத்தலை வேல்ஒன்று அம்மா.

வேல் ஒன்றைக் காளி எறிதல்

தெளிவுரை : தாருகன் குப்புற வீழ்ந்ததைக் காளி பார்த்தாள். யுகத்தின் முடிவில் தோன்றும் தீயைப் போன்று சினம் கொண்டு, 'இனி இவனை இப்போதே கொல்வேன்' என்று ஆதிசேடன் காண, பூமி வெடிக்க, மன்னர்கள் தம் மன்னன் தாருகனுடன் குப்புற்று அழிய, மூன்று தலைகளையுடைய வேலை அவன் மார்பில் எறிந்தாள்.

விளக்கம் : கடையுகக் கனலின்-யுகமுடிவில் ஏற்படும் தீயினைப் போல். **இன்னே**-இப்போதே. **அனந்தன் காண**-ஆதிசேடன் காண. **மண்டலம்**-பூமி. **விண்டிட**-அழிய. **உரத்து எறிந்தாள்**-மார்பில் பாய்ச்சினாள். **அம்மா**-அசை. 229

640. எறிந்திட அயர்ந்து நின்றான் மனச்சின எரிபோந் தன்ன
நிறந்தரு குருதி ஓங்கி நிலத்துஇழிந்து ஓடிற்று ஈசன்
மறம்தரும் அவுணன் சோரி மண்புகாது ஏற்றுஅருந்தென்று
அறைந்தருள் மொழிஅ யர்த்தாள் அடுத்தவெஞ் சினத்தால் காளி.

சிவபெருமான் கூறியதைக் காளி மறத்தல்

தெளிவுரை : அவ்வாறு காளி வேலை மார்பில் எறிந்ததால் தாருகன் மயங்கி நின்றான். மனத்தில் உள்ள சினம் என்ற தீ வெளிப்பட்டாற் போன்று நல்ல நிறம் உடைய குருதி வெளிப்பட்டு நிலத்தில் இழிந்து ஓடியது. 'அவனது குருதி மண்ணில் புகாது குடித்து விடு' என்று சிவபெருமான் கூறிய சொல்லைக் காளி தனக்கு அவன் மீது ஏற்பட்ட சினத்தால் மறந்து விட்டாள்.

விளக்கம் : அயர்ந்து நின்றான்-மயங்கி நின்றான். **மனச்சினஎரி**-மனத்தில் உண்டான சினமான தீ. **போந்தன்ன**-வெளிப்பட்டு இழிந்தாற் போல். **மறந்தரு அவுணன்**-வீரம் பொருந்திய அசுரன். **சோரி**-இரத்தம். **மொழிஅயர்த்தாள்**-சிவபெருமான் கூறிய சொல்லைக் காளி மறந்தாள். சிவபெருமான் கூறிய சொல், தாருகனின் குருதி கீழே சிந்தாமல் கபாலத்தில் பிடித்துக் குடித்து விடவேண்டும் என்றது. 230

641. மன்னவன் குருதி தோய்ந்த
மண்ணின்நுண் துகள்அ னைத்தும்
அன்னவன் வடிவம் ஆய
அவுணராய் ஆல காலம்
என்னவெங் கொடியராகி
இரும்படைக் கலங்க ளோடும்
துன்னுறு முகிலும் அஞ்ச
ஆர்த்தனர் தோன்றி னாரால்.

பல தாருகர்கள் தோன்றுதல்

தெளிவுரை : தாருக மன்னனின் இரத்தம் தோய்ந்த நுண்ணிய மண் துகள்கள் எல்லாம் அம்மன்னனான தாருகன் வடிவம் கொண்டு அவுணராயினர். அன்னார் ஆலகால நஞ்சினைப் போல் விளங்கினர். மிகக் கொடியவராயினர். அவர்கள் படைக் கலங்களை உடையவராய்த் தோற்றம் அளித்தனர். அவர்கள் மேகங்களும் அஞ்ச ஆரவாரத்துடன் தோன்றினர்.

விளக்கம் : தாருகனின் குருதி மண்ணில் சிந்தக் கூடாது. அப்படிச் சிந்தின் அவன் வடிவில் பல அசுரர் தோன்றுவர். ஆதலால் அவனது இரத்தத்தைக் கீழே சிந்தாமல் குடித்துவிட வேண்டும் என்பது இறைவன் ஆணை. அதைக் காளி தனக்குண்டான சினத்தால் மறந்து விட்டாள். ஆதலால் மண்ணில் தாருகனின் குருதிபட்ட மண் துகள் எல்லாம் பல்லாயிரக்கணக்கான தாருகர்களாய்த் தோன்றினர். **மன்னவன்**-தாருகன். **குருதி**-இரத்தம். **மண்ணின்நுண் துகள்**-நுண்ணிய மண் துகள். **அவுணர்**-அசுரர். **ஆலகாலம்**-பாற்கடலில் தோன்றிய மிகக் கொடுமையான நஞ்சு. அதன் கொடுமைக்கும் கருமைக்கும் அவுணர் உவமை.

இரும்படைக் கலங்களோடும்-தாருகன் போர்க் கருவிகளுடன் இருந்த போது விழுந்த இரத்தத்தினின்று பிறந்தவர்களாதலால் இரும்படைக்கலங்களோடு என்றார். **இரும்படைக்கலங்கள்**-இரும்பால் ஆன ஆயுதங்கள். **துன்உறு முகில்**-அஞ்சத்தக்க மேகம். **ஆர்த்தனர் தோன்றினரால்**-ஆரவாரம் செய்து கொண்டு தோன்றினர். **ஆல்**-அசை. 233

642. தோன்றிய அவுனத் தீயோர்
தொகுத்துஒரு பதினான்கு என்ன
ஆன்றிடும் உலகு அனைத்தும்
நிறைந்தனர் அனையோர்க் கண்டு
கான்றிடும் உயிர்ப்பு அடங்கிக்
கைப்பொருள் சோர்ந்துஇ றந்தோர்
போன்றனர் புலன்இ ழந்து
புலவர்என்று உரைக்கப் பட்டோர்.

தேவர்களின் நடுக்கம்

தெளிவுரை : அப்படித் தோன்றிய அவுணர்களாகிய கொடியவர் பதினான்காய்த் தொகுத்து வைக்கப்பட்ட நிறைவான உலகங்கள் எல்லாம் நிறைந்தனர். அவர்களைப் பார்த்து புலவர் என்று உரைக்கப்படும் தேவர்கள் யாவரும் வெளியாகும் மூச்சும் அடங்கினர். கையில் கொண்டிருந்த பொருள்கள் கீழே விழ இறந்தவர் போன்று ஐம்புல உணர்வு இல்லாதவர் ஆயினர்.

விளக்கம் : தோன்றிய-குருதி தோய்ந்த இரத்தத்தினின்று தோன்றிய அவுணர், அசுரர். **கான்றிடு**-வெளிப்படும். **உயிர்ப்பு அடங்கி**-மூச்சு அடங்கப்பெற்று. **இறந்தோர் போன்றனர்**-இறந்தவரைப்போல் விளங்கினர். **புலன் இழந்து**-ஐம்புலன்கள் உணர்வு நீங்கிடப் பெற்று. **புலவர்**-அறிவுடையவர்; தேவர். 234

643. சூலமும் மழுவும் வாளும்
சுரிகையும் எழுவும் பிண்டி
பாலமும் சரமும் வீசித்
தாருகன் படிவம் கொண்டுஓர்
ஆலமும் அனலும் அன்ன
உடற்பெருங் காளி தன்னைத்
தாலமும் விழுங்கு மாவஞ்
சனிப்படை யொடும்வ ளைந்தார்.

அவுணர் வந்த தோற்றம்

தெளிவுரை : தாருகனின் வடிவத்தையுடைய அந்த அவுணர்கள் சூலாயுதம், மழுவாயுதம், வாள், சுரிகை, எழு, பிண்டிபாலம், அம்பு என்பனவற்றை வீசியபடிவந்தனர். அவர்கள் ஆலகால விடமும்

தீயும் போல் வந்து, போரிட வந்துள்ள காளியை உலகத்தையே விழுங்கும் பெரிய யோகினிப்படையோடு வளைத்துக் கொண்டனர்.

விளக்கம் : சுரிகை-உடைவாள். **பிண்டிபாலம்**-ஆயுதவகை. எழு-வளைதடி; ஒருவகை ஆயுதம். **சரம்**-அம்பு. **படிவம்**-வடிவம்.

தாருகனின் வடிவில் தோன்றிய அவுணர்கள் காளியை அவளுடைய யோகினிப்படைகளுடன் வளைத்துக்கொண்டனர். **தாலம்**-உலகம். **மாவஞ்சனி**-பெரிய யோகினி. 233

644. மிண்டிய அசுரர் தங்கள்
தோற்றமும் சமர்க்கு மிக்கு
மண்டுறு செயலும் கண்டு
மாதொரு பாகன் சொல்உட்
கொண்டுதன் படைஅ னைத்தும்
கூவியவ் அசுரர் தம்மை
உண்டிடும் என்று தாமும்
அவர்தமை உண்ப தானாள்.

காளியின் செயல்

தெளிவுரை : அப்போது காளி தேவி, பெருகி வந்த அசுரர்களின் தோற்றத்தையும் அவர்கள் போருக்கு முனைந்துள்ள செயலையும் பார்த்து, உமையை ஒரு பக்கத்தில் கொண்ட சிவபெருமான் கூறிய சொல்லை, 'தாருகன் இரத்தத்தைக் கீழே சிந்தாமல் குடித்துவிட வேண்டும்' என்று உரைத்ததை-மனத்தில் எண்ணினாள். தன் யோகினிப்படையனைத்தையும் அழைத்தாள், 'சூழ்ந்து வந்துள்ள அசுரர் படையை உண்டு விடுங்கள்' என்று ஆணையிட்டாள். தானும் அப்படைய உண்ணத் தொடங்கினாள்.

விளக்கம் : மிண்டிய-பெருகி நெருங்கிய. **சமர்க்கு**-போருக்கு. **மண்டுறு**-மிக்குமுயல்கின்ற. **மாதொருபாகன்**-உமையம்மையை ஒரு பாகத்தில் உடைய சிவபெருமான். **சொல் உட்கொண்டு**-சொல்லை மனத்தில் எண்ணி. சிவபெருமான் உரைத்த சொல்லாவது. தாருகனின் உடல் குருதி மண்ணில் சிந்தினால் அவன் வடிவம்

போல் எண்ணற்றவர் தோன்றுவர் ஆதலால் அவனது குருதி கீழே சிந்தாமல் கபாலத்தில் ஏந்திக் குடித்துவிடவேண்டும் என்று உரைத்தது.

'சூலத் தாற்குத் துபுசொரி சோரிக
பாலத்து ஏற் றுப் பருகி அவன்நெடு
நீலத்து ஆக்கையை நீயே விழுங்குதி
ஆலத் தோடுஉதித் தாய்என் று அறைந்தனன்'

(தாருகன் வதைச் சருக்கம்-46)

என்ற இதனால் சிவபெருமான் காளிக்கு உரைத்தை அறியலாம். 234

645. முத்தலை அதனால் அன்னோர்
மொய்ம்பினில் குத்த நெய்த்தோர்
கைத்தலத்து இருந்த பாழிக்
கபாலத்தின் ஏற்றுஅ ருந்தி
மைத்தட வரைகள் அன்ன
வளரியாக் கைகளும் உண்டாள்
உத்தரம் தனிலும் ஓங்கும்
உதரஅங் கியினால் மிக்காள்.

அவுணர்களைக் காளி உண்ணல்

தெளிவுரை : வடவா முகாக்கினியை விட மிக்க கொடிய வயிற்றுத் தீயை உடைய காளிதேவி, தன்னிடம் உள்ள முத்தலையுடைய சூலத்தினால் அவுணரின் உடலைக் குத்தி அவர்தம் உடலினின்று வெளிப்படும் குருதியைப் பெரிய கபாலத்தில் ஏந்தி ஏற்றுக் கரிய மலைகளைப் போன்ற வளரும் அவுணர்களின் உடல்களை உண்டாள்.

விளக்கம் : **முத்தலை**-மூன்று உச்சிகளையுடைய சூலம். **அன்னோர்**-அவுணர். **மொய்ம்பினில்**-உடலில். **நெய்த்தோர்**-இரத்தம். **கைத்தலத்திருந்த பாழிக்கபாலம்**-கையில் இருந்த பெரிய மண்டை ஒடு. **மைத்தட வரை**-கரிய பெரிய மலை. **யாக்கைகள்**-உடல்கள். **உத்தரம்**-வடவா முகாக்கினி; ஊழித் தீ. **உதர அங்கியினால் மிக்காள்**-வயிற்றில் பசியாகிய தீயை யுடையவள். 235

646. விரிந்திடு வயிற்றுஒண் குண்டம்
ஆயிடை மேவும் அங்கி
எரிந்திடும் உதவகன் றான்
எனஅசு ரர்கள் தம் சோரி
சொரிந்தவர் உடல்நி ணங்கள்
தூர்த்துஒரு வீர யாகம்
புரிந்தனள் உலகம் எல்லாம்
புகழ்தரும் குமரி அன்றே.

வீர வேள்வியைச் செய்தாள்.!

தெளிவுரை : உலகம் எல்லாம் புகழ்கின்ற குமரியான காளி, விரிந்த வயிறு என்ற ஒளியுடைய வேள்விக் குண்டம் என்ற அங்குப் பொருந்தும் தீ அக்கினித் தேவன் போன்று விளங்க, அவுணர்களின் இரத்தத்தையும் அவர் உடலை நிணங்களையும் இட்டு வீரம் பொருந்திய வேள்வியைச் செய்தாள்.

விளக்கம் : **வயிற்று ஒண்குண்டம்**-வயிறு என்ற ஒளியுடைய வேள்விக் குண்டம். **ஆயிடை**-அ+இடை; அங்கு. **அங்கி எரிந்திடும்**-எரிந்திடும் தீ. **உதவகன்**-அக்கினி. சோரி-இரத்தம். **நிணங்கள் தூர்த்து**-நிணங்களை இட்டுத் தூர்த்து. **வீரயாகம்**-வீர வேள்வி. **புகழ்தரும்**-புகழ்கின்ற.

காளி தன் வயிறு என்ற ஓமகுண்டலத்தில் அவுணரின் இரத்தம் நிணம் ஆகியவற்றை இட்டு நிறைத்தாள். அச்செய்கை வேள்வி செய்பவர் வேள்விக் குண்டத்தில் அவி இடும் செய்கை போல் விளங்கியது. 236

647. மூர்த்தம்ஒன்று அதனில் ஆண்டு
மொய்த்தயோ கினிளோடும்
ஆர்த்துவந்து எதிர்த்த தீய
அவுணரை எல்லாம் உண்டாள்
சீர்த்திஅம் குமரி பின்னர்த்
தாருகன் தெளிந்து சீறிப்
பார்த்தனன் தனியாய் நெஞ்சம்
பதைத்துஅவள் புடைப்ப வந்தான்.

தாருகன் சினந்து காளியை அடிக்க வருதல்

தெளிவுரை : ஒரு நாழிகைப் பொழுதில் அங்கு வந்து கூடிய யோகினிகளுடனே ஆரவாரத்துடன் வந்து எதிர்த்துப் போரிட வந்த தீய அவுணர்களை எல்லாம் புகழ் பொருந்திய காளி தேவி உண்டுவிட்டாள். பின்பு தாருகன் தெளிந்து நிகழ்ந்ததை உணர்ந்து பெருஞ்சீற்றம் கொண்டு பார்த்தான். தனியனாய் மனம் பதைத்து அக்காளியை அடித்தற்காக வந்தான்.

விளக்கம் : மூர்த்தம்-நாழிகைப் பொழுது. **ஆண்டு**-அங்கு. **மொய்த்த**-நெருங்கிய. **யோகினிகளோடு**-காளியின் படைகள். **சீர்த்தி**-புகழ். **புடைப்ப**-அடிக்க. 237

648. வந்திட இலைவெஞ் சூலம்
மார்பினில் மீண்டும் ஒச்சிச்
சிந்திடு குருதி அங்கைச்
செழுங்கபா லத்துஏற்று உண்ணா
இந்தமண் மகள்தன் பாரம்
இறக்கினள் என்ன அங்஗ன்
வெந்தொழில் அவுணன் மாள
யாக்கையும் விழுங்கி னாளால்.

தாருகன் இறத்தல்

தெளிவுரை : அவ்வாறு தாருகன் தன்னைத் தாக்குதற்கு வர, அதைக்கண்டு, காளி தேவி, இலையைப் போன்ற வடிவுடைய கொடிய சூலத்தைத் தாருகன் மார்பில் செலுத்தி அவன் உடலினின்று வடியும் குருதியைத் தன்கையில் உள்ள செழுமையான மண்டைஓட்டில் ஏற்று உண்டு, இந்தப் பூமிதேவியின் சுமையை இறக்கினாள் என்னும்படி, கொடிய தொழிலையுடைய தாருகன் என்ற அசுரன் இறக்க அவனது உடலையும் உண்டு விழுங்கினாள்.

விளக்கம் : இலை வெஞ்சூலம்-இலையைப் போன்ற கொடிய சூலம் என்ற ஆயுதம். **ஒச்சி**-செலுத்தி. **அங்கை**-உள்ளங்கை. **உண்ணா**-உண்டு. **மண்மகள்**-பூமி தேவி. **வெந்தொழில் அவுணன்**-கொடிய தொழிலையுடைய அசுரனான தாருகன். **யாக்கையும்**-தாருகனது உடலையும். 238

649. மற்றது கண்டு விண்ணோர்
வலியதா ருகனை அன்னை
செற்றனள் நுங்கி இங்஗ன்
தேவர்என்று உரைக்கும் நம்மைப்
பெற்றனள் இன்றுஎன்று ஆர்வப்
பெருங்கடல் படிந்து நெஞ்சம்
உற்றவெந்துயர்அ கன்று
பாடினார் ஒடி னாரால்.

தேவர் மகிழ்ச்சி

தெளிவுரை : அங்஗னம் அவள் தாருகனைக் கொன்று உண்டதைக் கண்டு தேவர் வன்மையுடைய தாருகனைக் காளியன்னை இவ்வாறு கொன்று உண்டாள், "தேவர் என்று விளங்கும் நம்மை இன்று காளி பெற்றவள் ஆவாள்" என்று மகிழ்ச்சிப் பெருங்கடலில் முழுகினர். மனத்தில் உண்டான கொடிய துன்பம் அகலப் பெற்றுப் பாடினார், ஆடினார்.

விளக்கம் : செற்றனள் நுங்கி-கொன்று உண்டு. **ஆர்வப்பெருங் கடல்**-மகிழ்ச்சிப் பெருங்கடல். **வெந்துயரம்**-கொடிய துன்பம். காளி தாருகனைக் கொன்று தேவரை உயிர் வாழும்படி செய்தாள், ஆதலால் 'பெற்றனள் இன்று' என்று கூறினாள். 239

650. வேலையூடு எழுந்த நஞ்சம்
விமலன் உண்டு அளித்த செய்கை
போலநீ அம்மா இன்று
பொருவில்தா ருகனை உண்டு
பாலராம் எமைஅ ளித்தாய்
என்றனர் பழிச்சி வானோர்
சூலிமீது இடைவி டாமல்
சொரிந்தனர் பூவின் மாரி.

தேவர்கள் போற்றுதல்

தெளிவுரை : தேவர்கள், திருபாற்கடலில் தோன்றிய ஆலகால நஞ்சினைக் குற்றம் அற்ற சிவபெருமான் உண்டு எங்களைக் காப்பாற்றிய செய்கையைப் போன்று கொடுமையில் ஒப்பில்லாத தாருகன் என்ற அசுரனைக் கொன்று உண்டு பிள்ளைகளாகிய எங்களைக் காப்பாற்றினாய் என்று கூறினார்கள். இவ்வாறு

அவர்கள் காளியைத் துதித்துச் சூலத்தையுடைய காளி மீது இடைவிடாமல் பூமழையைச் சொரிந்தனர்.

விளக்கம் : வேலையூடு-திருப்பாற்கடலின் இடையே. **நஞ்சம்**-ஆலகால விடம். **விமலன்**-குற்றம் அற்ற சிவபெருமான்.

பாற்கடலில் எழுந்த நஞ்சினைச் சிவபெருமான் உண்டு எம்மை முன்னம் காத்தருளினார். அதுபோல் இன்று கொடிய தாருகனைக் கொன்று எம்மைக் காப்பாற்றினாய் என்று தேவர்கள் காளியை நோக்கியுரைத்தனர். **பாலர்**-பிள்ளைகள். **அளித்தாய்**-காப்பாற்றினாய். **பழிச்சி**-துதித்து; போற்றி. **சூலி**-சூலப்படையை உடைய காளி. **பூவின்மாரி**-பூமழை. 240

651. ஆயிடை உளம்ம கிழ்ந்தே
அவுணர்கள் மலைப்ப மாய்ந்து
போயின அனிகம் முற்றும்
பொருக்கென உயிர்பெற்று உய்ய
நாயகி குமரி நின்று
நவின்றனள்; நவின்ற காலை,
மேயின துயில்ஒ ழிந்து
விழித்துஎன எழுந்து சூழ்ந்தார்.

மடிந்த படைகள் உயிர்பெறல்

தெளிவுரை : காளி அச்சமயத்தில் மனம் மகிழ்ந்தாள். அவுணர்கள் போரிட்டதால் இறந்து போன தன் படைகள் முற்றும் பொருக்கென உயிர் பெற்று எழுந்திடக் கூறினாள். அவ்வாறு அவள் கூறியபோது பொருந்திய உறக்கம் நீங்கி எழுந்தது போல் படைகள் எல்லாம் காளியைச் சூழ்ந்து கொண்டன.

விளக்கம் : ஆயிடை-அப்போது. **மலைப்ப**-போரிட. **அனிகம்**-படைகள். **பொருக்என**-விரைய. **மேயின துயில்**-பொருந்திய உறக்கம். **நாயகி குமரி**-தலைவியான காளி. 241

652. அன்னது காலையில் அவுணர் சோரியும்
துன்னிய உடல்களும் துய்த்த தன்மையான்
மன்னிய குமரிதன் மதிம யங்கியே
தன்நிகர் இலைஎனத் தருக்கி னாள்அரோ.

காளி செருக்குக் கொள்ளல்

தெளிவுரை : அப்போது அவுணரின் இரத்தத்தையும் பொருந்திய உடல்களையும் உண்ட காரணத்தால் குமரியான காளி அறிவு மயங்கித் தனக்கு நிகர் எவரும் இல்லை என்று செருக்குக் கொண்டாள்.

விளக்கம் : அன்னது காலையில்-அச்சமயத்தில். **சோரி**-இரத்தம். **துன்னிய உடல்கள்**-பொருந்தியவுடல்கள். **துய்த்த தன்மையால்**-உண்ட இயல்பால். **மன்னியகுமரி**-நிலைபெற்ற காளி தேவி. **தருக்கினாள்**-செருக்குக் கொண்டாள். 242

653. தருக்கிய உளத்தினாள் தாங்கி நல்லியாழ்
திருக்கர விரலினால் தெறித்துப் பாடியே
முருக்கிய புயங்களும் முடியும் தாள்களும்
கரக்குவை களும்செறி களத்தின் ஆடினாள்.

ஆடினாள் காளி

தெளிவுரை : செருக்குக் கொண்ட காளி கையில் நல்ல யாழினைத் தாங்கிக் கைவிரலால் யாழ் நரம்பைத் தெறித்து இசையை எழுப்பிப் பாடிச் சிதைந்த தோள்களும் தலைகளும் கால்களும் கைக் குவியல்களும் குவிந்து பொருந்திய போர்க்களத்தில் ஆடினாள்.

விளக்கம் : தருக்கிய-செருக்குக் கொண்ட. **நல்லியாழ்**-நல்லயாழ். **தெறித்து**-மீட்டி. **முருக்கிய புயங்கள்**-சிதைந்த தோள்கள். **முடி**-தலை. **தாள்கள்**-கால்கள். 243

654. நடித்திட அவளது நாடிப் பெண்கள்தாம்
வெடித்திட நிலம்உடு வீழ வாவிகள்
துடித்திட இமயமும் துளங்கக் கைகளை
அடித்தனர் அதிர்த்தனர் ஆடல் மேயினார்.

யோகினியர் செய்கை

தெளிவுரை : அங்ஙனம் காளி ஆடிட அவளது நாடிபோன்ற பெண்கள் நிலம் வெடிக்கவும், நட்சத்திரங்கள் விழவும், நீர்நிலைகள் வற்றவும் இமயமலையும் நடுங்கவும் அவளுடைய

படையினரும் கைகளை அடித்தனர், அதிர்த்தனர்; ஆடத் தொடங்கினர்.

விளக்கம்: **உடு**-விண்மீன். **இமயம்**-இமயமலை. **துளங்க**-நடுங்க. **மேயினார்**-பொருந்தினர். **நாடிப்பெண்கள்தாம்**-நாடிபோல் விளங்கிய பெண்படையினர். 244

655. கொட்டுபு கரங்களைக் குலால நேமிபோல்
வட்டணை விரலினில் வருகின் றார்சிலர்;
கிட்டிய அலகைகள் கீதம் பாடியே
நட்டமது இடவுடன் நடிக்கின் றார்சிலர்.

மற்றும் சிலர் செயல்கள்

தெளிவுரை : சில யோகினிப் பெண்டிர் கைகளைக் குவித்துக் குயவனது சக்கரம் போல் வட்டமாகச் சுழன்று வந்தனர். மற்றும் சிலர், ஒன்றாய்க் கூடிய பேய்கள் இசையைப் பாடி அவற்றுடன் கூடி நடித்தனர்.

விளக்கம் : **கொட்டுபு**-கொட்டி. **குலால நேமி**-குயவனது சக்கரம். **வட்டணை**-வட்டம். **அலகைகள்**-பேய்கள். **நட்டமதுஇட**-நடனம் ஆட. 245

656. தண்ணுமை தனைஅடிச் சதிக்குஇ சைந்தொலி
நண்ணுற முழக்குபு நடிக்கின் றார்சிலர்;
அண்ணலம் தயித்தியர் ஆக்கைக் குன்றின்மேல்
துண்எண இவர்ந்தனர் துவைக்கின் றார்சிலர்.

சில படையினர் செயல்கள்

தெளிவுரை : சிலர் தண்ணுமை என்ற கருவியை அடித்துத் தாளத்துக்கு ஏற்றிடப் பொருத்தி இசைத்து அதற்குஏற்ப நடித்தனர் சில யோகினிப் பெண்கள். பெருமையுடைய அரக்கரின் உடலாகிய குன்றின் மீது திடீரெனப் பாய்ந்து ஆரவாரம் செய்தனர் சிலர்.

விளக்கம் : **தண்ணுமை**-மிருதங்கம். **முழக்குபு**-முழக்கி; ஒலியையுண்டாக்கி. **தயித்தியர்**-அசுரர். **ஆக்கைக்குன்று**-உடல்களாகிய மலை. **இவர்ந்தனர்**-ஏறி(னர்). **துவைக்கின்றார்**- ஆரவாரம் செய்தனர், காலால் மிதித்த்னர் எனவும் கொள்ளலாம். 246

657. மாகமீது எறியும்அம் மனைகள் பற்பல
வாகவீழ் தலைஎடுத்து ஆடு வார்சிலர்;
வாகுவால் விலாஉறத் தாக்கி மெய்வளைந்து
ஓகையால் நடம்நவின்று உழல்வ ரோர் சிலர்.

உடல்களை எறிந்து ஆடினர்

தெளிவுரை : வானத்தின் மீது எறியப்படும் பற்பல அம்மானைக் காய்களைப் போல் இறந்துபட்ட அவுணர்களின் தலைகளை எடுத்துச் சிலர் ஆடினர். தோள்களால் விலாப்புறத்தைத் தாக்கி உடல்வளைந்து மகிழ்ச்சியுடன் நடனத்தை ஆடித் திரிந்தனர் சிலர்.

விளக்கம் : **மாகம்**-வானம். **அம்மனைகள்**-அம்மானை ஆட்டத்தில். ஆடப்பயன்படுத்தும் காய்கள். மேலே அம்மானைக் காய்களை வீசி ஆடுவதைப் போன்று யோகினிப் படைகள் இறந்த அசுரர் தலைகளை மேலே எறிந்து விளையாடினர். **விழ்தலை**-கீழே விழுந்து கிடக்கும் தலை. **வாகு**-தோள். **ஒகையால்**-மகிழ்ச்சியால்; ஆரவாரத்தால். **நடம்நவின்று**-நடனம் ஆடி. **உழல்வர்**-திரிவர். 248.

658. மெலிகுறும் அடிகள்வாய் விழிபு ரூரம்அங்
குலிவிகா ரப்படக் குனிக்கின் றார்சிலர்;
வலிய வெண் கவடிகள் நிரைத்து வைத்தபோல்
நலிஎயிறு இலகுற நகைக்கின் றார்சிலர்.

சிலர் தோற்றமும் செயலும்

தெளிவுரை : சிலர், மெலிவையுடைய அடிகள், வாய், கண்கள், புருவம், விரல்கள் ஆகியவை விகாரப்பட ஆடினர். சிலர், வன்மையுடைய பலகறைகளை நிரைத்து வைத்தாற் போல் மெலிந்த பற்கள் வெளிப்பட்டு விளங்கச் சிரித்தனர்.

விளக்கம் : **புரூம்**-புருவம். **அங்குலி**-விரல். **குனிக்கின்றார்**-ஆடுபவர். **கவடிகள்**-பலகறைகள். **நிரைத்து வைத்தபோல்**-வரிசைப்பட வைத்தது போன்று. **நலிஎயிறு**-சிதைந்த பற்கள். **இலகுற**-வெளிப்பட்டுத் தோன்ற. 248

659. முத்தலை வேலினான் முடைப்பி ணங்களைக்
குத்துபு தாங்கியே குனிக்கின் றார்சிலர்;
மத்தகர் எனக்குடர் மாலை தோள்இடா
வத்திகள் எனஅதிர்த் தாடு வார்சிலர்.

ஆடிய ஆட்டம்

தெளிவுரை : சிலர், மூன்று உச்சிகளையுடைய வேலையுடைய தாருகனின் படைஞரின் புலால் நாற்றம் வீசும் பிணங்களைக் குத்திச் சிலர் ஆடினர். மதம் கொண்டவரைப் போல் இறந்தவரின் குடல்களாகிய மாலைகளைத் தோளில் இட்டு ஆடைகளைப் போன்று அவை விளங்க அதிர்ந்து சிலர் ஆடினர்.

விளக்கம் : முத்தலை வேலினான்-மூன்று தலைகளையுடைய சூலத்தையுடைய தாருகன். **முடைப்பிணம்**-முடைநாற்றம் வீசும் பிணம். **குத்துபு**-குத்தி. **குனிக்கின்றார்**-ஆடினர். **மத்தகர்**-மதத்தர். **குடர் மாலை**-குடல்களாகிய மாலை. இடா-இட்டு. **வந்திகள்**-ஆடைகள். குடல்களை மேலே உடுக்கும் ஆடைபோல் அணிந்து கொண்டனர். 249

660. இனையன பலவிதத்து எண்ணில் யோகினி
வனிதையர் குருதிநீர் வாய்ம டுத்திடு
நனிவரு களிப்பினால் மத்த நாகமே
அனையவெங் குமரியோடு ஆடி னார்அரோ.

காளியுடன் ஆடினர்

தெளிவுரை : இங்ஙனமாகப் பலவிதமாக எண்ணில்லாத யோகினிப் பெண்டிர் அவுணரின் இரத்த நீரைக் குடித்திடுதலால் உண்டான மிக்க களிப்பால் மதம் கொண்ட யானையைப் போன்று குமரியான காளியுடன் ஆடினர்.

விளக்கம் : எண்ணில்யோகினி வனிதையர்-அளவு இல்லாத யோகினி மங்கையர். குருதிநீர்-இரத்தமாகிய நீர். **வாய்மடுத்தல்**-குடித்தல். **மத்தநாகம்**-மதம் கொண்ட யானை. **வெங்குமரி**-விரும்பத் தக்க குமரியான காளி. அரோ-அசை. 250

661. ஆடுறும் அரவமும் அவர்மு ழக்கமும்
கூடுறும் அங்கைகள் கொட்டும் ஓசையும்
நீடுறும் உலகெலாம் நீங்க வந்துஎழா
மூடுறு முகில்கண முழக்கை வென்றவே.

மேகமுழக்கம் போன்ற ஓசை

தெளிவுரை : யோகினியர் ஆடுவதால் ஏற்படும் ஒலியும், அவர் எழுப்பும் ஒலியும், ஒன்று சேர்ந்து மங்கையர் கைகொட்டுதல் முதலியவற்றால் உண்டான ஓசையும் நீண்ட உலகு முழுவதும் அழிய வந்து எழுந்து மூடும்படியான மேகக்கூட்டம் எழுப்பும் ஓசையை வென்றன.

விளக்கம் : அரவம்-ஒலி. **கொட்டும் ஓசை**-கைகொட்டுதல் கருவிகளை முழக்குதல் முதலியவற்றால் உண்டாகும் ஓசை. **எழா**-எழுந்து; 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். **முகில்கணம்**-மேகக்கூட்டம். முழக்கை-ஒலியை. 251

662. போழ்ந்தன புவிஎலாம்; பொடிந்த வெற்புஎலாம்;
வீழ்ந்தன முகில்எலாம்; மெலிந்து மூர்ச்சையின்
ஆழ்ந்தன உயிர்எலாம்; மலைந்த வான்சுடர்
சூழ்ந்தன உலகெலாம் துயர வேலையே.

உலகில் அழிவு

தெளிவுரை : உலகம் எல்லாம் பிளவுபட்டன; மலைகள் எல்லாம் தூளாயின. மேகங்கள் எல்லாம் நிலத்தில் விழுந்தன. உயிர்கள் எல்லாம் மயக்கம் அடைந்தன. வானில் உள்ள கதிரவன் சந்திரன் ஆகிய சுடர்கள் அழிந்தன. உலகம் முழுவதும் துன்பம் என்ற கடலானது சூழ்ந்தது.

விளக்கம் : போழ்ந்தன-பிளவுபட்டன. **வெற்பு**-மலை. **பொடித்த**-தூளாயின. **முகில்**-மேகம். **வான்சுடர் அலைந்த**-வானில் உலவும் கதிரவன் திங்கள் ஆகியவை அழிந்தன. அலைந்த என்பதை 'மலைந்த' என்று கொண்டு கதிரவன் திங்கள் ஆகியவை தமக்குள் போரிட்டுக் கொண்டன எனவும் கூறலாம். **துயரவேலை**-துன்பம் என்ற கடல். 252

663. துப்புறு குமரிகள் தொகுதி ஆடுறச்
செப்பரும் புகழுடைச் சேடன் பாரினை
அப்பரம் பொறுக்கிலாது ஆயி ரங்கமும்
கொப்புளம் கொளவுளம் குலைந்து தாங்கினான்.

ஆதிசேடனின் சுமை

தெளிவுரை : வலிமையுடைய யோகினிப் பெண்கள் தொகுதிகள் வெற்றி இவ்வாறு பெறக் கூறுதற்கு அரிய புகழையுடைய ஆதிசேடன் சுமக்கும் உலகத்தை அந்தப் பாரம் பொறுக்க இயலாது ஆயிரம் தலைகளும் கொப்புளம் கொள்ள மனம் தளர்ந்து தாங்கலானான்.

விளக்கம் : தாப்புறு குமரிகள் தொகுதி-வலிமையுடைய காளியின் படையினரான பெண்கள் படை. **சேடன்**-ஆதிசேடன். **அப்பரம்**-அந்தப் பாரம்; பரம் என்பது பாரம் என்பதன் விகாரம். **கமும்**-தலைகளும். **தாங்கினான்**-சுமந்தான். 255

664. மாதவன் அயன்மகத்து அரசன் வானவர்
மூதறி வுடையமா முனிவர் யாவரும்
பேதுறு வந்துஇளம் பிறைமு டித்தஎம்
ஆதியோடு அபயம்என்று அறைதல் மேயினார்.

திருமால், நான்முகன் முதலியவர் வந்து காளியை வணங்குதல்

தெளிவுரை : திருமால், நான்முகன், இந்திரன், தேவர்கள் முதிர்ந்த அறிவுடைய சிறந்த முனிவர்கள் முதலிய யாவரும் வந்து இளம்பிறைத் திங்களை சூடிய எம் சிவபெருமானிடம் அடைக்கலம் என்று கூறலாயினர்.

விளக்கம் : மாதவன்-திருமால். **அயன்**-நான்முகன். **மகத்து அரசன்**-வேள்வித் தலைவனான இந்திரன். **இளம்பிறை**-பிறைத்திங்கள். **முடித்த**-சூடிய. **அபயம்**-அடைக்கலம். **அறைதல் மேயினர்**-கூறலானார். 254

665. எந்தையே தாருகன் இழைத்த வெந்துயர்
வந்தமா காளிஎங் க'்கு மாற்றியே
அந்தவான் துயரினும் அதிகம் ஆக்கினாள்
முந்துகான் முள்பறீஇ முளைஅ டித்தல்போல்.

காளி துன்பத்தை உண்டாக்கினாள்!

தெளிவுரை : 'எம் தந்தையே, முதலில் காலில் தைத்த முள்ளைப் பிடுங்கி விட்டுப் பின்பு அங்கு முளையை அடித்ததைப் போன்று, தாருகன் செய்த கொடிய துயரத்தைத் தங்களால் அனுப்பப்பட்டு வந்த மாகாளி எங்கட்குப் போக்கிப் பின்பு அதைவிடப் பெரிய துன்பத்தை உண்டாக்கி விட்டாள்.

விளக்கம் : எந்தையே-எம் தந்தையே. **இழைத்த**-செய்த. **வெந்துயர்**-கொடிய துன்பம். **மாற்றி**-போக்கி. **வான்துயர்**-மிக்க துயர். **முந்து கால்முள்**-முதலில் காலில் தைத்த முள். **பறீஇ**-நீக்கி.

சிறிய முள் காலில் தைத்திருந்தால் அதைப் பிடுங்கிவிட்டுப் பெரிய முளையை அவ்விடத்தில் அடித்தலைப்போல் தாருகன் செய்த சிறிய துன்பத்தைப் போக்கி அதை விடப் பெருந்துன்பத்தைக் காளி செய்து விட்டாள் என்றனர். 255

666. தாருக னால்வரும் துயரந் தன்னைநின்
பேரரு ளால்ஒரு பெண்ணின் நீக்கினை
ஆருறு செருக்கினால் அவள்செய் துன்பமும்
நீர்உறு சடையினாய் நீக்கி ஆட்கொள்நீ.

காளியால் உண்டான துன்பத்தைப் போக்கியருள்க!

தெளிவுரை : தாருக அசுரனால் எங்கட்கு உண்டாகிய துன்பத்தை நின் பேரருளால் ஒரு பெண்ணால் போக்கினை. தனக்கு உண்டான செருக்கினால் அவள் செய்கின்ற துன்பத்தையும், கங்கை நீர் பொருந்திய சடையை உடையவனே நீ, போக்கி, எங்களை ஆட்கொள்ளல் வேண்டும் என்று சிவபெருமானிடம் திருமால் முதலியவர் உரைத்தனர்.

விளக்கம் : பெண்ணின்-மங்கையால். **நீக்கினை**-போக்கினாய். **நீர்உறு சடையினாய்**-கங்கைநீர் பொருந்திய சடையை உடையவனே. **ஆட்கொள் நீ**-நீ ஆட்கொள்வாயாக! 256

667. நஞ்சினை அருந்தியும், கனலை ஏந்தியும்,
அஞ்சிட மதகரி அட்டும், ஏழையேம்
உஞ்சிட அருளிய ஒருவ, காளிதன்
விஞ்சிய செருக்கையும் வீட்டி ஆளுவாய்.

காளியின் செருக்கை அழித்தருள வேண்டும்

தெளிவுரை : பாற்கடலில் தோன்றிய விடத்தை உண்டும், தீயைக் கையில் ஏந்தியும், யாவரும் அஞ்சிட வந்த மதத்தையுடைய யானையைக் கொன்றும் எளியேம் உய்வு பெற அருள் செய்த ஒருவனே! நின்னால் அருளப் பெற்ற காளியின் செருக்கையும் அழித்தருளவாயாக!

விளக்கம் : நஞ்சினை-பாற்கடலில் தோன்றிய ஆலகால விடத்தை. **மதகரி**-மதயானை. **அட்டும்**-கொன்றும். **உஞ்சிட**-உய்ந்திட என்பதன் விகாரம்; உயிர்பிழைக்க என்பது பொருள். **ஒருவ**-ஒப்பற்றவனே. **விஞ்சிய**-மிக்க. **செருக்கு**-கருவம். **விட்டியருளுவாய்**-போக்கியருளுவாய். 257

668. என்றுஇவர் அனைவரும் இயம்பிக் கைதொழா
நின்றிட எங்கணும் நிறைந்த எம்பிரான்
வென்றிஅம் குமரிதன் மிகும்செ ருக்கினை
ஒன்றொரு சாழலால் ஒழிக்க உன்னினான்.

காளியின் செருக்கை அழிக்க எண்ணுதல்

தெளிவுரை : என மேற்கண்டவாறு கூறித் திருமால் முதலியவர் கைதொழுது நின்றனர். அப்போது எங்கும் நிறைந்தவனான எம் இறைவன் தாருகனை வெற்றி கண்ட காளியினது மிக்க செருக்கை, பொருந்திய ஓர் சாழல் விளையாட்டால் அழிக்க நினைத்தான்.

விளக்கம் : கைதொழா-கைதொழுது. **தொழா**-தொழுது. **வென்றி**-வெற்றி. **அம் குமரி**-அழகிய காளி தேவி. **சாழல்**-ஓர் விளையாட்டால். **உன்னினான்**-நினைத்தான். 258

வேறு

669. **உன்னு** நாயகன் உலகெலாம் ஈன்றவளோடும்
துன்னு வான்கணம் சூழ்தரச் சூர்அர மகளிர்
அன்னை ஆடிடம் வடவன மாகஆ யிடையில்
மன்னு பேரருள் தன்மையால் இமைப்பினில் வந்தான்.

திருவாலங்காட்டை அடைதல்

தெளிவுரை : அங்ஙனம் நினைத்தருளிய எம் சிவபெருமான் உலகங்கள் யாவற்றையும் ஈன்றவளான உமையாளொடும் நெருங்கிய தேவகணங்கள் சூழ, தேவ மகளிர் சூழ அன்னையான காளி ஆடுகின்ற இடமான திருவாலங்காட்டை மிக்க பொருந்திய பேரருளால் இமைப்போதில் வந்து சேர்ந்தான்.

விளக்கம் : உன்னும்-நினைக்கும். **ஈன்றவள்**-உமையாள். **துன்னு வான்கணம்**-நெருங்கிய தேவகணம்; பூதகணம் என்னினும் தவறில்லை. **சூர் அர மகளிர் அன்னை ஆடிடம்**-யோகினியருடன் காளி ஆடும் இடம். **வடவனமான**-திருவாலங்காடாக. **இமைப்பினில்**-இமைப்பொழுதில். 259

670. வந்து காளிமுன் பேர்உருக் கொண்டுமா மறையும்
அந்த நாரணக் கடவுளும் அறிவதற்கு அரிய
கொந்து லாம்மலர்த் திருவடி சிவந்திடக் குனித்தான்
தந்தை யாகிஎம் உயிரையும் அளித்தருள் தலைவன்.

சிவபெருமான் ஆடியருளல்

தெளிவுரை : தந்தையாகி எவ்வுயிரையும் காத்தருளும் இறைவன் சிவபெருமான். திருவாலங்காட்டுக்கு வந்து காளியின் முன்பு ஒருபெரிய வடிவம் கொண்டு சிறந்த வேதனும் அந்த நாராயணனும் அறிவதற்கு அரிய மலர்க் கொத்துக்கள் அணியப் பெற்ற தம் திருவடிகள் சிவக்க நடனம் ஆடியருளினான்.

விளக்கம் : எவ்வுயிரையும் அளித்தருள் தலைவர்-எல்லா உயிர்களையும் காத்தருளும் சிவபெருமான். **மாமறை**-சிறந்த வேதங்கள். **கொந்து உலா மலர்த் திருவடி**-மலர்க்கொத்துகள் சூடப்பெற்ற திருவடிகள். **கொந்து** கொத்து என்பதன் மெலித்தல் விகாரம். **மலர்த்திருவடி**-யாவர் உள்ளத்திலும் மலரும் திருவடி என்று உரைப்பினும் அமையும். **குனித்தான்**-ஆடினான். 260

671. கோதுக்கு ஆகரம் ஆகியே செருக்குறும் குமரி
மாதுக்கு ஓர்புறம் அளித்தவன் செயல்கண்டு வணங்கி
ஏதுக்கு ஆடுகின் றாய்வறிது? என்னொடும் மீண்டு
வாதுக்கு ஆடுதி, வருதி என்று உரைத்தனள் மயங்கி.

என்னுடன் ஆடுக!

தெளிவுரை : குற்றத்துக்கு இருப்பிடமாகிச் செருக்குக் கொள்ளும் காளி, உமைக்குத் தம் உடலில் ஒரு பகுதியை அளித்த சிவபெருமானின் செயலைக் கண்டு, அப்பெருமானை வணங்கி, 'நீ எதுக்கு வீணே ஆடுகினறாய்? என்னோடு மீண்டும் வாதிட்டுப் போட்டியிட்டு ஆடுவாய்! வருவாயாக' என்று மயங்கி உரைத்தாள்.

விளக்கம் : கோதுக்கு ஆகரம்-குற்றத்துக்கு இருப்பிடம். குற்றமாவது செருக்கு. **ஆகரம்**-இருப்பிடம். **மாதுக்கு ஓர் புறம் அளித்தவன்**-உமையம்மைக்கு இடப்பாகத்தை அளித்த சிவபெருமான். **வறிது**-வீணாக. **வாதுக்கு ஆடுதி**-வாதிட்டு ஆடுதி. **வருதி**-வருவாய். 261

672. என்ற வாசகம் கேட்டலும் அடியவர்க்கு எளியன்
அன்று காளிநீ தருக்கதாண் டவம்செய நவின்றாய்
வென்றி தோல்விகண் டுரைத்திடச் சான்றுநம் விமலை
நின்று தாண்டவம் புரிதிஎன்று ஆடினன் நிமலன்.

ஆடுவாயாக!

தெளிவுரை : என்று காளியுரைத்த சொல்லைக் கேட்டதும், அடியார்க்கு எளியவரான சிவபெருமான், 'நல்லது காளியே! தருக்க தாண்டவம் செய்யும்படி கூறினாய், எது வெற்றி எது தோல்வி எனக் கண்டு கூற நம் பார்வதியே சான்று. நீ தாண்டவம் செய்க' என்று கூறி விட்டு ஆடலாயினான்.

விளக்கம் : தருக்க தாண்டவம்-வாதிட்டு ஆடும் ஆட்டம். **நவின்றாய்**-கூறினாய். **வென்றி**-வெற்றி. **விமலை**-பார்வதி. **தாண்டவம் புரிதி**-ஆடல் செய்வாயாக. **நிமலன்**-குற்றமற்ற சிவபெருமான். 262

673. கற்றை வேணியில் செருகிய கதிர்இளம் பிறையைச்
சுற்றி வால்கொடு கட்செவி நான்றிடச் சுருதிப்
பற்ற தாகிய பதமலர்ச் சிலம்புஒலி பரப்பப்
பொற்ற மாநக நாயகன் திருநடம் புரிந்தான்.

சிவபெருமான் ஆடுதல்

தெளிவுரை : கற்றையான சடையில் அணியப்பட்ட கதிரையுடைய இளம் பிறையைச் சுற்றிய பாம்பு வாலைக்கொண்டு சுற்றித் தொங்கியசையவும், வேதத்துக்கு ஆதாரமான திருவடிகளில் சிலம்பின் ஒலி பரவ, அழகிய பெரிய கயிலை மலைத் தலைவனான சிவன் அழகிய நடனத்தை ஆடியருளினான்.

விளக்கம் : வேணி-சடை. பாம்பு பிறைச் சந்திரனைச் சுற்றித் தொங்கிட. **வால்கொடு**-வாலைக்கொண்டு. **கட்செவி**-பாம்பு; கண்ணைச் செவியாக உடைய பாம்பு. **நான்றிட**-தொங்க. **சுருதிப் பற்றதாகிய**-வேதத்துக்கு ஆதாரமான. **பதமலர்**- திருவடியாகிய தாமரை. **பொற்ற மாநகம்**-அழகிய பெரிய கைலைமலை. **பொற்ற**-அழகிய பொன் என்ற பகுதியினின்று பொற்ற என்னும் பெயரெச்சம் பிறந்தது. **மாநகம்**-கயிலை மலை. 263

674. படியும் வானமும் நடுங்கிப் பரவைகள் அடங்கக்
கொடிய யோகினிக் குழுஎலாம் பாணிகள் கொட்டி
நடந விற்றிட மயல்மிகு யாமளை நடித்தாள்
அடியர் வேண்டிய வேண்டியாங்கு அளிப்பவன் உடனா.

சிவனுடன் காளி ஆடல்

தெளிவுரை : பூமியும் வானமும் நடுங்கவும் பரந்த உலகத்தில் உள்ள உயிரினங்கள் அடங்கவும் கொடிய யோகினிக் குழுவெல்லாம் கைகளால் தாளம் கொட்டி நடனத்தைச் செய்யச் செருக்குடைய காளி, அடியவர் வேண்டியவற்றையெல்லாம், வேண்டியபடியே அளிப்பவனான சிவபெருமானுடன், நடனம் ஆடினாள்.

விளக்கம் : படி-உலகம். **பரவைகள்**-உலகத்தில் உள்ளவை பிற உலகங்கள் எனவும் கொள்ளலாம். **யோகினிக் குழூ**-காளியின்

படைக்கூட்டம். **யாமளை**-காளி. **அடியர் வேண்டிய வேண்டியாங்கு அளிப்பவன்**-அடியார் விரும்பியவற்றையெல்லாம் விரும்பிய படியே அளிக்கும் சிவபெருமான். 264

675. திருந்து தென்திரு ஆலங்காட்டு அருந்தவம் செய்யா
இருந்த முஞ்சிக னோடுகார்க் கோடகன் என்னப்
பரந்த சீர்த்திமா நாகமும் செஞ்சடைப் பகவன்
புரிந்த நாடகம் கண்டருங் கதியிடைப் புகுந்த.

முஞ்சிகன் என்ற முனிவனும் கார்க்கோடகனும் முத்திபெறல்

தெளிவுரை : செவ்வனே அமைந்த அழகிய திருவாலங்காட்டில் அரிய தவம் செய்து கொண்டிருந்த 'முஞ்சிகன்' என்பவனுடன் "**கார்க்கோடகன்**" ஆன பரவிய புகழை உடைய பெரிய பாம்பும் சிவந்த சடையையுடைய சிவபெருமான் செய்த நடனத்தைக் கண்டு அரிய கதியை-வீடு பேற்றை-அடைந்தனர்.

விளக்கம் : இப்பாடலில் கூறப்படும் முஞ்சிக முனிவன் வரலாறு : 'சுனந்தன்'என்ற முனிவர் கயிலாய மலையில் தமக்கு இறைவன் தாண்டவ தரிசனம் தந்தருளும்படி வேண்டினார். சிவபெருமான் அவர்க்குத் தாண்டவதரிசனத்தைத் திருவாலங்காட்டில் அளிப்பதாக அருளினார். ஆகவே அம் முனிவர் திருவாலங் காட்டில் வந்து தவம் செய்தபடி இருந்தார். அப்போது அவர் மீது மண்மேடு இட்டுத் திருமேனி மறைந்து கேசத்துடன் முஞ்சிப்புல் வளர்ந்திருந்தது. ஆதலால் அவர் 'முஞ்சிகேச முனிவர்' என அழைக்கப்பெற்றார். அம்முனிவர் இப்போது சிவபெருமானுடன் காளி ஆடியதைக் கண்டு உய்திபெற்றார்.

கார்க்கோடகன்-கார்க்கோடகன் அட்டமா நாகங்களுள் ஒன்று சிவபெருமானின் கைக் கங்கணமாய் இருந்தான். அத்தகையவன் தன் அறியாமையால் விடத்தைக் கக்கினான். அதன் காரணமாக அவனைத் திருவாலங்காட்டில் உறையும்படி அருள் செய்தார். அக்கார்க்கோடகனும் சிவனின் தாண்டவத்தைக் கண்டு வீடுபேற்றைப் பெற்றனன். **செய்யா இருந்த**-செய்து கொண்டிருந்த. **சீர்த்தி**-மிக்கபுகழ். **செஞ்சடைப்பகவன்**-சிவந்த சடையையுடைய சிவபெருமான். **நாடகம்**-நடனம்; கூத்து. **அருங்கதி**-அரிய முத்திப்பேறு. 265

676. வேதன் நாரணன் விண்ணவர் முனிவரர் விமலன்
போத நாடகம் காண்டலும் மெய்ம்மயிர் பொடிப்ப
ஏதும் வாசகம் தளர்ந்து உளம் நெக்குநெக்கு உருகிக்
காதலால் 'அர கர' எனக் கூப்பினர் கரங்கள்.

நான்முகன் முதலியவர் வணங்குதல்

தெளிவுரை : நான்முகன், திருமால், தேவர்கள், முனிவர்கள் ஆகியோர் குற்றம் இல்லாத சிவபெருமானின் ஞான நாடகத்தைக் காணவும் மெய்ம்மயிர் பொடிப்பச் சொல்லும் சொல் தளர மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகிக் காதலால்'அர, அர' என்று கைகளைக் குவித்து வணங்கினர்.

விளக்கம் : வேதன்-நான்முகன். **நாராயணன்**-திருமால். **விண்ணவர்**-தேவர். **விமலன்**-குற்றமற்ற சிவபெருமான். **காண்டலும்**-காணவும். **அரகரஎனும்**-அர கர என்ற ஒலியை எழுப்பி. 266

677. அண்டர் நாயகன் திருநடம் புரிவயின் அடுத்துப்
பண்டை நால்மறை உருவுகொண்டு அன்பொடு பாடக்
கண்டு நான்முகன் தாளம்ஒத் தினன்அது காலை
மண்டு மாபுகழ் அருள்நந்தி மத்தளம் அதிர்த்தான்.

வேதங்கள் பாட, நான்முகன் தாளம் இட நந்தி மத்தளம் கொட்டுதல்

தெளிவுரை : தேவர் தலைவனான சிவபெருமான் அழகிய நடனத்தைச் செய்யும் போது, பழைய நான்கு வேதங்களும் வடிவம் பெற்று அன்புடன் பாடின. அதைக் கண்டு நான்முகன் தாளம் இட்டான். அப்போது மிக்க பெரும்புகழ் உடைய நந்தியானவன் தண்ணுமை வாசித்தான்.

விளக்கம் : அண்டர்-தேவர். **புரிவயின்**-செய்த போது. **தாளம் ஒத்தினன்**-தாளம் இட்டான். **அருள் நந்தி**-அருள் உடைய நந்தியம் பெருமான். **அதிர்ந்தான்**-வாசித்தான். 267

678. எங்கள் நாயகன் உலகுஎலாம் ஆடல்கண்டிருக்கும்
மங்கை நாயகன் நடனம்இவ் வாறுசெய் தருள
அங்கு வாதுசெய்து உடன்சுழன்று ஆடுவாள் எய்த்தாள்
பொங்கு மானமுற் றிடுதலால் பினும்நடம் புரிந்தாள்.

காளியின் தளர்நிலை

தெளிவுரை : எங்கள் தலைவனும் உலகெலாம் இயங்குதற்குக் காரணமானவனுமான உமையம்மையின் கணவனும் ஆன சிவபெருமான் நடனத்தை இங்ஙனம் ஆடியருளினான். அங்கு அப்பெருமானுடன் தருக்கம் இட்டுச் சுழன்று ஆடியகாளி தளர்ச்சி அடைந்தாள் எனினும் பெருகும் மான வுணர்வால் மீண்டும் நடனம் செய்தாள்.

விளக்கம் : எங்கள் நாயகன்-எம் தலைவனான சிவபெருமான். **மங்கைநாயகன்**-உமை மங்கையின் கணவன் சிவபெருமான். **வாது செய்து**-தருக்கம் இட்டு. **எய்த்தாள்**-தளர்ந்தாள். **பினும்**-'பின்னும்' என்பதன் விகாரம். 268

வேறு

679. நொந்து ளாள்தனை நோக்குபு வாதினான்
வந்த நாடகம் மாற்ற அருள் கொளா
அந்த வேலையின் அண்ட முகடுஉற
எந்தை தாள்ஒன்று எடுத்தனன் என்பவே.

சிவபெருமான் ஒருகாலை உயரத் தூக்கி ஆடுதல்

தெளிவுரை : தளர்ச்சியடைந்திருக்கும் காளியின் தன்மையைச் சிவபெருமான் பார்த்தார். தருக்கமிட்டு நிகழ்த்தும் அவள் நடனத்தை மாற்றிவிட மனத்துள் எண்ணினார். அண்டத்தின் உச்சியில் பொருந்த எம் தந்தை சிவபெருமான் ஒருகாலை உயர்த்தி ஆடினார்.

விளக்கம் : நொந்துளாள்தனை-தளர்ந்துள்ள காளியை. **நோக்குபு**-பார்த்து. **அருள்கொளா**-அருள்கொண்டு. **அந்த வேலையின்**-அச்சமயத்தில். **அண்டம் முகடுற**-உலகத்தின் உச்சியைப் பொருந்த. **எந்தை**-எம் தந்தையான சிவபெருமான். 269

680. தொண்டர் ஆகுலம் தீர்க்கும் தொழிலினோன்
அண்ட கூடம் அளவும் எடுத்த தாள்
உண்ட தாலம் உமிழ்நெடு மால்முனம்
கொண்ட பேர்உருக் கொள்கை நிகர்க்குமால்.

திருமால் பேருருக்கொண்டது போல்விளங்குதல்

தெளிவுரை : அடியவரின் துன்பத்தைப் போக்கும் செயலையுடைய சிவபெருமான் அண்ட கூடம் வரை உயரத் தூக்கிய கால், தான் உண்ட உலகத்தை உமிழ்கின்ற திருமால் முன்காலத்தில் கொண்ட பெரிய வடிவம் கொண்டதை ஒத்துத் தோன்றியது.

விளக்கம் : ஆகுலம்-துன்பம். **தாள்**-திருவடி. **தாலம்**-உலகம்; தலம், என்பது 'தாலம்' என நீண்டது. **நெடுமால்**-பெருவடிவம் கொண்டு உயர்ந்து நின்ற திருமால். **முனம்**-முன்னம். **கொள்கை**-கொள்ளுதல். 270

681. மண்ணிடை ஒருதாள் ஊன்றி மற்றொரு கமலப் பொன்தாள்
விண்ணிடை எடுத்து மேலோன் நடிப்பது வீரி கண்டு
துன்னன நாண்உட் கொண்டு சுடுங்கனல் பட்டமென்பூ
வண்ணமது எனப்பு லர்ந்து வதனம்வன் தலைகு னித்தாள்.

காளி நாணம் கொள்ளல்

தெளிவுரை : நிலத்தில் ஒருகாலை ஊன்றி மற்றொரு தாமரை போன்ற அழகிய காலை வானில் தூக்கி எடுத்துச் சிவபெருமான் நடிப்பதைக் காளி கண்டாள். உடனே நாணம் கொண்டாள். சுடும்படியான தீ பட்ட மென்மையான பூ வாடிய தன்மையைப் போல் அவளது முகம் வாடியது. வலிய தலைகுனிந்தாள்.

விளக்கம் : ஒருதாள்-ஒரு கால். **கமலப் பொற்றாள்**-தாமரை போன்ற அழகிய திருவடி. **வீரி**-காளி. **வண்ணமது**-இயல்பு. **குனித்தாள்**-தலையைத் தாழ்த்தினாள். 271

682. நாணினாள் முகம்க விழ்ந்து நண்ணிய செருக்கு நீங்கி
ஏண்உலாம் குமரி நிற்ப எண்ணில்யோ கினிகள் எல்லாம்
காண்உறா நடம்ஒழிந்து சூத்திரம் கழல நிற்கும்
மாண்உலாம் பாவைபோல வறிதுநின் றனர்கள் அன்றே.

காளி நாணம் கொண்டாள்

தெளிவுரை : பெருமையுடைய காளியானவள் நாணம் கொண்டு முகம் கவிழ்ந்து நின்றாள். அவளது செருக்கு நீங்கியது. அங்ஙனம் அவள் நிற்ப, அளவில்லாத யோகினிகள் எல்லாம் கண்டனர். தாங்கள் செய்த நடனத்தைக் கைவிட்டனர். சூத்திரக்கயிறு அறுபட்டு நீங்கிய பாவையைப் போன்று வீணே நின்றனர்.

விளக்கம் : நாணினாள்-வெட்கம் கொண்டாள். இறைவன் ஒரு காலை அண்ட முகடு அளவும் உயரத் தூக்கி நின்றதால். அவனைப் போலத் தானும் ஒருகாலை உயரத்தூக்க இயலாததால் தோற்றுவிட்டாள். அதனால் அவள் நாணம் கொண்டாள். **நண்ணியசெருக்கு**-கொண்டிருந்த செருக்கு. **ஏண் உலாம்**-செருக்குப் பொருந்திய. **காணுறா**-கண்டு. **சூத்திரம்**-பாவையை ஆட்டுவார் அதனுடன் கயிற்றைக் கட்டி ஆட்டுவர். அக்கயிறு நீங்கப்பெற்றால் பாவை ஆடாது. அதுபோல் யோகினியர் ஆடாமல் நின்றனர். ஆதலால் 'நடமொழிந்து வறிது நின்றனர்' என்றார். **வறிது**-வீணே; நடம் இல்லாது; இயக்கம் இல்லாது. **அன்றே**-அன்று+ஏ; அசை. 272

683. ஆங்கது கண்டு விண்ணோர் உவகைபூத்து அமலன் மீது
தூங்குறு மழையின் மும்மை சொரிந்தகை பூவின் மாரி
பாங்கரின் வந்து வீழ்ந்து பணிந்தனர் எழுந்து துள்ளி
வாங்குதென் திரைக்கடற் கெண் மடங்குஒலி எழத்து தித்தார்.

தேவர் மலர் மழை பொழிதல்

தெளிவுரை : காளி நாணி நிற்றலைக் கண்ட தேவர்கள் மிக்க மகிழ்ச்சி கொண்டனர். தூயவனான சிவபெருமான் மீது பூ மழையை, அசையும் மேகத்தினின்று பெய்யும் மழையை விட மூன்று மடங்கு சொரிந்தனர். இறைவனின் பக்கத்தில் வந்து தரையில் விழுந்து பணிந்து எழுந்து துள்ளி வளைந்த கடல் அலையை விட எட்டு மடங்கு ஒலியுண்டாகும்படி துதித்தனர்.

விளக்கம் : அது-காளி நாணி நிற்றலும் யோகினியர் ஆடாமல் வறிதே நின்றதும். **உவகை பூத்து**-மகிழ்ச்சி கொண்டு. **அமலன்**-தூய

இறைவன். **மும்மை**-மூன்று மடங்கு **பாங்கர்**-பக்கம். **பணிந்தனர்**-பணிந்து; முற்றெச்சம். **வாங்கு தெண்டிரைக்கடல்**-வளைந்த தெளிவான அலைகளையுடைய கடல். **எண்மடங்கு**-எட்டு மடங்கு. தேவரின் துதி கடல் ஒலியைவிட எட்டு மடங்காக அமைந்தது. 273

684. ஆயகா லையினில் காளி அஞ்சிஆ ரணங்கள் தாமும்
மாயன்ஆ தியருங் காணா நின்றனை மதித்தி டாமல்
பேயனேன் செய்த தீமை பொறுத்தருள் பெரும என்று
தூயமா ஞானா னந்த சோதியைத் தொழுது நின்றாள்.

காளி சிவனை வணங்கி நிற்றல்

தெளிவுரை : அச்சமயத்தில் காளியானவள் அச்சம் கொண்டு பெருவேதங்களும் திருமால் நான்முகன் முதலியவராலும் காண இயலாது அரியவனாய் விளங்கினாய். இத்தகைய நின்னை மதிக்காமல் பேய்போன்ற யான் செய்த தீமையைப் பொறுத்தருளவேண்டும்!' என்று தூய்மையான ஞான ஆனந்தப் பேரொளியான சிவனை வணங்கி நின்றாள்.

விளக்கம் : ஆயகாலை-அப்போது. **ஆரணங்கள் தாமும்**-நான்கு வேதங்களும். **மாயன் ஆதியர்**-திருமால் நான்முகன் முதலியவர். **காணா நின்றனை**-அடிமுடி காண இயலாதவாறு உயர்ந்து தீப்பிழம்பாக நின்றாய். **பொறுத்தருள்**-மன்னித்தருளுக. **ஞானானந்தசோதி**-ஞானமும் ஆனந்தமும் பொருந்திய பேரொளியான சிவபெருமான். 274

685. நின்றவள் தன்னை நோக்கி நீஉளம் வெருவல் என்றே
தன்திரு வருள்பு ரிந்து சண்டதாண் டவம்இது அம்ம
உன்தனக்கு இதனை நோக்கல் அரிதுஎன உரைத்துத் தன்தாள்
என்தலை பொறித்த முக்கண் எம்பிரான் இயம்புகின்றான்.

இறைவன் காளிக்கு அருளல்

தெளிவுரை : அவ்வாறு நின்ற காளியை நோக்கி, 'நீ உள்ளத்தில் அச்சம் கொள்ளாதே' என்று இறைவன் அருள்செய்து, பின், 'இது சண்ட தாண்டவமாகும். உன்னால் இதை முடியப் பார்த்தல்

என்பதும் இயலாது' என்று கூறித் தன் திருவடியை என் தலைமீது பொறித்த மூன்று கண்களையுடைய சிவபெருமான் மேலும் கூறலானான்.

விளக்கம் : வெருவல்-அஞ்சாதே. இறைவன் அண்ட கூடத்துக்கு ஒரு காலை உயர்த்தி நின்றதால் காளியை நோக்கி அஞ்சாதே என்று உரைத்தான்.

சண்ட தாண்டவம்-கொடிய கூத்து. **அம்ம**-அசை. 'தன் தாள் என் தலை பொறித்த முக்கண்' என்று சூதமா முனிவர் தன் தலையில் இறைவன் கால்களைப் பொறித்ததைக் குறித்தார். 275

வேறு

686. திகழ்வுறும் இந்த வடவனம் தனக்குத்
தென்திசை யாகஓர் நகரம்
புகழ்வுறும் **கூவ புரம்**என உளதுஅப்
புரிகயி லையங்கிரி தன்னில்
நிகழ்வுறும் பெருமை பெற்றது நமைப்போல்
நிகர்இலா அதனிடை என்றும்
மகிழ்வொடும் உலகம் அனைத்தையும் புரப்பான்
மதித்திரக் காநடம் புரிதும்.

கூவத்தின் சிறப்பு

தெளிவுரை : இங்கு விளங்கும் இந்த ஆலங்காட்டுக்குத் தெற்கில் புகழ் பெற்ற ஓர் நகரம் உண்டு. அது கூவம் என்ற நகரம். அது நம் கயிலாயத்தை ஒத்த பெருமை யுடையது. நம்மைப் போல நிகரற்ற அதில் எக்காலத்தும் உலகம் முழுவதையும் காத்திட எண்ணி இரட்சிக்க நடனம் செய்கின்றோம்.

விளக்கம் : திகழ்வுறும்-விளங்கும். **வடவனம்**-வடம்+வனம்; திருவாலங்காடு. **வடம்**-ஆலமரம். திருவாலங்காட்டின் தெற்குத் திக்கில் கூவம் என்ற நகரம் உள்ளது. அது கயிலையை ஒத்த பெருமையுடையது. உலகினைக் காக்க நாம் அங்கு நடனம் புரிகின்றோம் என்று சிவபெருமான் காளிக்குச் சொன்னார்.

புகழ்வுறும்-புகழப்படும். **கயிலையங்கிரி**-கயிலாய மலை. **புரப்பான்**-காத்தற் பொருட்டாக; பான் ஈற்று வினையெச்சம். **நடம் புரிதும்**-நடனம் ஆடுகின்றோம். 276

687. அப்பெருங் கூவ புரத்திடை ஏகி
அருள்புரி நம்திரு நடனம்
செப்பருங் காத லால்தினம் கண்டு
திகழுமந் நகர்உளார் எல்லாம்
ஒப்பரு நமது நந்தியங் கணத்தின்
உள்ளவர் என்றுநீ கருதி
வெப்பது முதலாம் பிணிமிடி பேய்கள்
விலங்கினால் வருந்துயர் களைவாய்.

நோய் முதலியவற்றால் உண்டாகும் துன்பத்தைப் போக்கிக் கொள்வாயாக!

தெளிவுரை : அந்தக் கூவபுரத்தில் அருள் செய்யும் நம் நடனத்தைக் கூறுவதற்கு அரிய பத்தியால் நாள் தோறும் கண்டு விளங்கும் அந்நகரத்தில் வாழ்பவர் எல்லாம் ஒப்பில்லாத நமது நந்தியின் கணத்தில் உள்ளவர் ஆவார் எனக் கருதுவாய். ஆதலால் அங்குச் சென்று வெப்பு முதலிய நோய், வறுமை, பேய்கள், விலங்கால் உண்டாகும் துயரத்தைப் போக்கிக் கொள்வாயாக!

விளக்கம் : செப்பருங்காதலால்-கூறுவதற்கு அரிய பத்தியால் **ஒப்பு அரு**-நிகர் இல்லாத. **வெப்பது முதலாம் பிணி**-வெப்பு முதலிய நோய்கள். **மிடி**-வறுமை. **களைவாய்**-போக்கிக்கொள்வாயாக. 277

688. என்றுஇவை இசைத்து நம்மொடு தருக்கம்
இயம்பிநீ நடம்நவின் றதனால்
உன்தனக்கு ஒருபேர் தருக்கமா தாஎன்று
ஓங்குக இனையதும் அன்றித்
தென்திருக் கூவநகர்தனைக் காத்துச்
செறிந்திடு **பீடைகள் அரிப்ப**
வென்றிகொள் பெயர்பீ டாரிஎன்று உலகின்
விளங்குக என்றனன் விமலன்.

தருக்கமாதா எனவும் பீடாரி எனவும் பெயர் ஏற்படல்

தெளிவுரை : என்று மேற்கண்டவண்ணம் சொல்லி, பின்'நீ நம்முடன் தருக்கம் (வாதம்) கூறி நடனம் இட்டாய். ஆதலால், '**உனக்குத் தருக்கமாதா**' என்ற பெயர் உண்டாகுக. இதுவே அன்றித் தெற்குத் திசையில் உள்ள இந்தக் கூவநகரைக் காத்து இருப்பாயாக. அங்கு உண்டாகும் பீடைகளைப் போக்கும் வெற்றியுடைய பெயர் 'பீடாரி' என்று உலகில் நிலவுக!' என்று சிவபெருமான் கூறியருளினான்.

விளக்கம் : பீடைகளை நீக்கியதால் பீடாரி எனக் காளிக்குப் பெயர் ஏற்பட்டது. இதுவே பிற்காலத்தில் 'பிடாரி' என்று விகாரப்பட்டு வழங்குவதாயிற்று! (பீடை+அரி)

தருக்கம் இறைவனுடன் நிகழ்த்தி நடனம் இட்டதால் 'தருக்கமாதா' என்ற அவளுக்குப் பெயர் உண்டாகுக என்று இறைவன் கூறினார். **செறிந்திடு பீடைகள்**-பொருந்தும் துன்பங்கள். **வென்றிகொள்**-வெற்றி கொண்ட. **விமலன்**-சிவபெருமான். 278

689. அன்னசொல் குமரி கேட்டுஉளம் மகிழ்வுற்று
அன்பினால் மும்முறை வணங்கி
நின்அருள் அதனால் அடியனேன் தீமை
நீத்துஎனை ஆண்டஆ ரமுதே
பன்னருங் கூவ புரத்திடைச் சென்றுஉன்
பவுரிகண்டு அந்நகர் காப்பேன்
என்னஅங்கு இயம்பி விமலனை விடைகொண்டு
எய்தினள் கூவமா நகரின்.

காளி கூவ மாநகரத்தை அடைதல்

தெளிவுரை : இறைவன் உரைத்த அச்சொற்களைக் காளி கேட்டு மனம் மகிழ்ந்தாள். அன்பால் மூன்று முறை வணங்கினாள். பின்பு ' நின் அருளால் அடியேன் தீமையை நீத்து என்னை ஆட்கொண்ட அரிய அமுதம் போன்றவனே! கூறுதற்கு அரிய சிறப்புடைய கூவநகரத்தில் சென்று உன் திருநடனத்தைக் கண்டு கொண்ட வண்ணம் அந்நகரத்தைக் காப்பேன்' என்று கூறிச் சிவபெருமானிடம் விடைபெற்றுக் கூவமாநகரத்தை அடைந்தாள்.

விளக்கம் : அன்னசொல்-அத்தகைய சொல். அதாவது சிவபெருமான் உரைத்த அத்தகைய சொற்கள். **மும்முறை**-மூன்றுமுறை. **ஆர் அமுதே**-அரிய அமுதமே. **பன்அரும்**-கூறுதற்கு அரிய. **பவுரி**-கூத்து; நடனம். **விமலனை**-சிவபெருமானை. 279

690. எய்திய குமரி கூவமா நகரை
இறைஞ்சிஆ லயத்தினுள் போகிச்
செய்தவம் உடையோர் விழியினின் எளிதில்
தெரியும்விற் கோலநா யகனைத்
கைதொழுது அகலா அன்பினால் பணிந்து
களிப்பொடும் போந்தடி யவர்க்கு
மெய்தரும் அருள்சேர் வளர்சடைக்கூத்தன்
விளங்கரு நாடகம் கண்டாள்.

காளி கூவத்தில் இறைவனது நடனத்தைக் காணல்

தெளிவுரை : கூவமாநகரை அடைந்த காளி அந்நகரினை வணங்கிக் கோயிலுக்குள் சென்றாள். செய்த தவத்தை உடையவரின் கண்களில் எளிதில் தெரியும் விற்கோல நாதனை, கையால் தொழுது, மகிழ்ச்சியோடும் வந்து அடியவருக்கு உண்மையான அருளைச் செய்யும் அருள்பொருந்திய வளரும் சடையையுடைய கூத்தப்பெருமானின் நடனத்தைக் கண்டாள்.

விளக்கம் : குமரி-காளி. **விற்கோல நாதர்**-கூவத்தில் உள்ள இறைவனின் திருநாமம். **சடைக்கூத்தன்**-சடையையுடைய கூத்தன் (நடராசன்) விளங்கும் **அருநாடகம்**-சிறந்து விளங்கும் அரிய நாடகம்; உட்பொருள் விளங்குவதற்கு அரிய நாடகம் எனவும் கொள்ளலாம். 280

691. கண்டலும் அனலில்தீ படுமெழுகு எனவே
கரைந்துஉளம் உருகிவாள் விரிநீர்
கொண்டல்கள் மலைமேல் சொரிவது கடுப்பக்
குவிமுலை மீதுவீழ்ந்து ஒழுக
மண்டலம் அதனில் ஐந்துஉறுப்பு அணைய
வணங்கிஅங்கு எழுந்தனள் போற்றி
விண்டிட அரிய மெய்ப்பரா னந்த
வெள்ளத்தில் திளைத்தனள் அன்றே.

காளி ஆனந்த வெள்ளத்தில் முழுகுதல்

தெளிவுரை : காளி இறைவனின் நடனத்தைக் கண்ட அளவில் தீயில் இட்ட மெழுகைப் போல் மனம் நெகிழ்ந்து கரைந்து, ஒளியுடைய கண்களின் நீர் மேகங்கள் மலைமேல் நீர் சொரிவதைப் போல் குவிந்த கொங்கை மீது விழுந்து ஒழுகியது. பூமியில் ஐந்து உறுப்புக்களும் பொருந்த வணங்கிக் காளி அப்போது எழுந்தாள். சொல்வதற்கு அரிய மேலான ஆனந்த வெள்ளத்தில் முழுகினாள்.

விளக்கம் : அனல் வெப்பத்தில் இடப்பட்டு மெழுகு உருகுவதைப் போல். **வாள்விழி**-ஒளியுடைய கண். **கொண்டல்கள்**-மேகங்கள். **கடுப்ப**-போல. **மண்டலம் அதனில்**-தரையில். **ஐந்து உறுப்பு அணைய**-ஐந்து உறுப்புகள் பொருந்த; ஐந்து உறுப்பு என்பன கால்கள் இரண்டு, கைகள் இரண்டு, தலை ஒன்று. **விண்டிட அரிய**-சொல்ல இயலாத. **பரானந்தம்**-பரம்+ஆனந்தம்; மேலான ஆனந்தம். **திளைத்தனள்**-முழுகினாள்; எய்தினாள். 281

692. இத்திறம் அமலன் அருள்நடம் காணா
இன்பம்உற் றிடுபெருஞ் சூலி
கைத்தலம் அமர்ந்த மழுவினோன் **ஆலங்**
காட்டினில் அருளிய முறையே
மெய்த்தவர் புகழும் கூவமா புரத்து
விருப்பொடும் இருந்துஒரு துயரும்
அத்திரு நகரிற்கு உறாவகை என்றும்
அன்னைபோல் காத்திருக் கின்றாள்.

காளி கூவநகரத்தைக் காப்பாற்றி வருதல்

தெளிவுரை : இப்படி இறைவனின் அருள் பொருந்திய நடனத்தைக் கண்டு இன்பம் அடைந்திருந்தாள் காளி. கையில் மழு என்ற கருவியையுடைய இறைவன் திருவாலங்காட்டில் அக்காளிக்கு அருளியபடியே உண்மையான தவத்தை யுடையவர் புகழ்கின்ற கூவம் என்ற நகரத்தில் விருப்பத்தோடு இருந்தாள். ஒரு துன்பமும் அந்த நகரத்துக்கு அடையாவகையில் ஒரு தாயைப் போன்று காத்து வருகின்றாள்.

விளக்கம் : அமலன்-சிவபெருமான். **காணா**-கண்டு; 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். **பெருஞ்சூலி**-பெருமையுடைய சூலப்படையையுடைய காளி. **மழு**-ஓர் ஆயுதம், சிவபெருமான் கையில் உள்ளது. **ஆலங்காடு**-திருவாலங்காடு. 282

வேறு

693. இனையதிருக் கூவபுரப் பெருமையினை
இவ்வளவு என்று இயம்ப வல்லோர்
அனையநகர் தனைஇடம்கொண்டு அருள்திருவிற்
கோலநா யகரே அல்லால்
பினைஒருவர் உரைத்திடுதற்கு எளியதுவே
வியாதன்எனப் பெயர்பெற் றுள்ள
முனிவன்அருள் கொண்டுசிறிது அதன்பெருமை
தமியேனும் மொழியப் பெற்றேன்.

குருவருளால் கூவத்தின் சிறப்பைச் சிறிது கூறினேன்

தெளிவுரை : 'இத்தகைய திருக்கூவபுரப்பெருமையை இவ்வளவு என்று வரையறுத்துக் கூறவல்லவர் அந்த நகரத்தில் இடம் கொண்டுள்ள அருள் உடைய திருவிற்கோல நாயகரே அல்லாமல் வேறொருவர் எடுத்துக் கூறுதல் எளிதோ? வியாசர் என்ற பெயர் பெற்றுள்ள முனிவர் அருளைக் கொண்டு, அந்நகரத்தின் பெருமையை யான் சிறிது அக்குருவருளால் இயம்பினேன்' என்று சூதமா முனிவர் கூறினார்.

விளக்கம் : இனைய-இத்தகைய இயல்புடைய. **இடங்கொண்ட**-வீற்றிருக்கின்ற. **திருவிற்கோல நாயகர்**-கூவநகரத்தில் உள்ள இறைவரின் திருநாமம். **பினை**-பின்பு. **வியாதன்**-வியாசர். **தமியேனும்**-எளியேனும். 283

694. அண்ணல்அருந் தவமுனிவீர் முத்திதரு
சிவஞானம் அளிக்க வல்ல
கண்நுதலான் தலங்கள்தமில் அனந்த கோ
டியினின் ஒரு தலத்தை உன்னித்
துண்என இங்கு உரைத்திஎனப் புகன்றனீர்
ஆதலினால் சுரர்கள் போற்றும்
எண்அரிய புகழ்க்கூவ மாநகரைக்
குருஅருளால் இயம்பி னேனால்.

பலபதிகளுள் சிறந்த இந்நககரத்தைக் கூறினேன்

தெளிவுரை : அரிய பெருமையுடைய நைமிசவன முனிவர்களே! வீடுபேற்றைத் தரவல்ல சிவஞானத்தைத் தரவல்ல நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானின் பதிகளில் பலவற்றில் ஒரு பதியை நினைத்து விரைய உரைப்பீர் என்று உரைத்தீர்கள். ஆதலால் தேவர்கள் போற்றும் எண்ணில்லாத புகழையுடைய கூவம் என்ற பெருநகரத்தைக் குருவருளினால் யான் கூறினேன்.

விளக்கம் : அண்ணல்-பெருமை. **முத்தி**-வீடுபேறு. **கண்ணுதலான்**-நெற்றிக்கணையுடைய சிவபெருமான். **அனந்தகோடி**-கோடிக்கணக்கான தலங்கள். **உன்னி**-நினைத்து. **துண்ணென**-விரைவாக. **உரைத்தி**-உரைப்பாயாக. **புகன்றினீர்**-கூறினீர். **சுரர்கள்**-தேவர்கள். 284

695. இக்காதை தனைஒருகால் புகன்றருள
வினவினவர் இசைகூர் வண்டு
புக்காரும் நளினமலர்ப் புங்கவன்ஆ
குவர்இருகால் புகலின் கேட்பின்
மைக்காரின்நிகர் நிறத்த கமலவிழிப்
புவிஅளந்த மாய னாவர்
முக்கால்அவ் வகைபுரியின் எனைஆளும்
கயிலைமலை முதல்வன் ஆவார்

இப்புராணத்தை ஓதுபவரும் கேட்பவரும் அடையும் பயன்

தெளிவுரை : இக்காதையை ஒருகால் சொல்லிட இதைக் கேட்டவர் இசைமிக்க வண்டுகள் பொருந்தும் தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன் ஆவர். இருகால் கூறக் கேட்டவர். கரிய மேகத்தை ஒத்த நிறம் உடைய தாமரை மலர் போன்ற கண்களையுடைய நிலத்தைத் தன் அடியால் அளந்த திருமாலாக ஆவர். மூன்று முறை இப்புராணத்தைக் கேட்டவர் என்னை ஆளும் கயிலைமலையின் தலைவரான சிவபெருமான் ஆவர்.

விளக்கம் : இக்காதை-இந்தக் கூவபுராணம். **வினவினவர்**-கேட்டவர். **இசை கூர் வண்டு**-இசைமிக்க வண்டு; இசையை மிகுதியாகப் பாடும் வண்டு. **நளின மலர்**-தாமரை மலர். **புங்கவனார்**-நான்முகன். **இருகால் புகலின் கேட்பின்**-இரண்டு முறை

கூறக் கேட்பவர். **மைகாரின் நிகர் நிறத்த**-கரிய மேகத்தினை ஒத்த நிறத்தினையுடைய. **கமலவிழி**-தாமரை மலர் போன்ற கண். **புவி**-உலகம். **மாயவனார்**-திருமால். **முக்கால்**-மூன்று முறை. **கயிலை மலை முதல்வன்**-கயிலை மலைக்குத் தலைவனான சிவபெருமான். 285

696. பழுதுஇல் திருக் கூவபுரா ணத்தினைஓ
திடுபவர்க்கும் பயன்கேட் போர்க்கும்
கழுதுபல விலங்குநவக் கிரகஆதி
யால்அணையும் கடிய இன்னல்
முழுதும் இலை அவமரணம் துற்கனவு
மிடிபிணிகள் முற்றும் இன்றாம்
எழுதுபவர் வினையனைத்தும் நமன்கணக்கர்
தமதுஏட்டின் எழுதிடாரே.

கூவபுராணத்தைக் கூறுபவர் பயன், கேட்பவர் அடையும் பயன்

தெளிவுரை : குற்றம் இல்லாத கூவபுராணத்தைக் கூறுபவர்க்கும் அதன் பயனைக் கேட்பவர்க்கும் பேய், பல விலங்குகள், நவக்கிரகம் முதலியவற்றால் உண்டாகும் கொடிய துன்பம் முழுதும் இல்லையாகும். அகால மரணம். தீய கனா, வறுமை, நோய்கள் ஆகியவை நீங்கும். இப்புராணத்தை எழுதுபவர் வினைகள் முழுவதும் இல்லாகும். இயமனின் கணக்கனான சித்திராபுத்திரன் தம் ஏட்டில் அவரது உயிரைக் கொண்டு போக வேண்டும் என எழுத மாட்டார்.

விளக்கம் : பழுது இல்-குற்றம் இல்லாத. **கழுது**-பேய். **நவக்கிரகாதி**-ஒன்பது கிரங்கள் முதலியன. **இன்னல்**-துன்பம். **அவமரணம்**-காலமல்லாத காலத்தில் உண்டாகும். இறப்பு; அகால மரணம். **துற்கனவு**-துர்க்கனவு; தீய கனவு. **மிடி**-வறுமை, **பிணிகள்**-நோய்கள். **நமன்**-இயமன். நமன் கணக்கர் தமது ஏட்டின் எழுதிடார் என்றது இயமன் உயிரைக் கொண்டு போக வேண்டும் என்று எண்ணி எழுதார். 286

697. இக்கதையை அன்பினொடு படிப்பவர்கள்
அரும்பயன்கேட் டிடுவோர் மேன்மை
மக்கள்தமை உயிர்த்திடுவர் என்று என்றும்
ஒழியாத வாழ்வு சேர்வர்
மிக்கபெருஞ் சித்திகளோர் இருநான்கும்
அடைவர்மனம் விழைந்த எல்லாம்
அக்கணமே பெறுகுவர்ஈர் ஏழ்உலகு
தனினும்அவர்க்கு அரியது இன்றே.

ஓதுபவர் அடையும் பயனைக் கேட்பவர் பெறும் பயன்கள்

தெளிவுரை : இக்கதையை அன்புடன் படிப்பவர்கள் அடையும் அரிய பயனைக் கேட்பவர் மேன்மையான மக்களைப் பெற்றிடுவர். என்றும் அழியாத வாழ்வை அடைவர். மிகவும் பெரியனவான சித்திகள் எட்டையும் அடைவர். மனத்தில் விரும்பிய எல்லாவற்றையும் நினைத்த அப்போது பெறுவர். பதினான்கு உலகங்களிலும் அவர்க்குச் செய்தற்கு அரியது ஏதும் இல்லை.

விளக்கம் : மக்கள் தமை-பிள்ளைகளை. **உயிர்த்திடுவர்**-பெற்றெடுப்பர். **சித்திகள் ஓர் இருநான்கு**-அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனற எண் பெருஞ்சித்திகள். **விழைந்த எல்லாம்**-விரும்பியனவற்றை எல்லாம். **ஈர் ஏழ் உலகு**-பதினான்கு உலகு. 287

698. தீங்குஇல் திருச் சினகரமே, தவர்மடமே,
அறம்திறம்பாத் திகழும் இல்லே,
ஓங்குமலைக் கடமே, நன் நதிக்கரையே,
எனும்இவற்றுள் ஒன்றின் மிக்க
பூங்கடிமண் டபம்இயற்றி அதிலிருந்து
திருக்கூவப் புராணந் தன்னைத்
தேங்கமழும் மலர்புகை ஒண்சுடர்கொடுபூ
சனைஇயங்கள் சிலம்பச் செய்தே.

கூவ புராணத்தை ஓதும் முறை

தெளிவுரை : குற்றம் இல்லாத கோயில், துறவியர் வாழும் மடம், அறத்தினின்று தவறாது விளங்கும் வீடு, உயர்ந்த மலைகள், நல்ல ஆற்றின் கரைகள் ஆகிய இவற்றுள் ஒன்றில் மிக்க அழகிய மண்டபம் ஒன்றை அமைத்து, அதிலிருந்து திருக்கூவப் புராணத்தைத் தேன் மணம் வீசும் பூக்கள் நறுமணம், புகை ஒள்ளிய சுடர் ஆகியவற்றைக் கொண்டு பூசையை இன்னிசை வாத்தியங்கள் ஒலிக்கச் செய்து.

விளக்கம் : சினகரம்-கோயில், **தவர் மடம்**-துறவியர் வாழும் மடம். இல்-வீடு. **பூங்கடி மண்டபம்**-அழகிய விளக்கமான மண்டபம். **தேங்கமழும்**-தேன் மணம் கமழும். **புகை**-நறுமணப்புகை. **ஒண்சுடர்**-ஒளியுடைய விளக்கு. **கொடு**-கொண்டு. என்பதன் விகாரம். **இயங்கள்**-இசைக்கருவிகள். **சிலம்ப**-ஒலிக்க. 'ஓதிடுக' என்று அடுத்த செய்யுளுடன் முடியும். 288

699. ஓதிடுக, ஓதிடுநாள் தொடங்கிநால்
வகையுண்டி யோடும் அன்னம்
மாதவருக்கு இடுக,முடி வுறுநாளில்,
படித்தவர்கள் மலர்ப்பொன் தாளின்
ஆதரவு கொடு'பரம சிவன்' எனவே
வந்தனைசெய்து அறுவை யோடும்
தீதுஇல் அணி விளைநிலம் பால் பசு இவைகள்
அளித்திடுக, சிறக்கப் பின்னர்.

புராணத்தைக் கூறுபவர்க்குச் செய்ய வேண்டிய சிறப்பு

தெளிவுரை : புராணத்தைக் கூறுக. அவ்வாறு கூறும் நாள் தொடங்கி நான்கு வகைப்பட்ட உணவைத் துறவியர்க்கு இடுக. புராணம் கூறி முடிக்கும் நாளில் அதைப் படித்தவர்களின் மலர் போன்ற பொன் அடியில் அன்பு கொண்டு அவரைப் பரமசிவன் என்றே கருதி வணங்கி உடையுடன் குற்றம் இல்லாத பயிர் விளையும் நிலம், பால்தரும் பசு ஆகிய இவற்றைச் சிறக்க அளிக்க. பின்பு.

விளக்கம் : புராணத்தை மேற் கூறிய மண்டபத்திலிருந்து ஓத வேண்டும். ஓதும் நாட்களில் நான்கு வகையான உணவளிக்க வேண்டும். அதை ஓதுபவரின் திருவடியை அவரைப் பரமசிவனாக நினைத்து வணங்க வேண்டும். பின் சிறந்த ஆடை விளைநிலம், பசு முதலியவற்றைத் தருதல் வேண்டும்.

நால்வகையுண்டி-நான்குவகையாய் உண்ணப்படும் உணவு. அவையாவன. (1) உண்டல், (2) தின்றல், (3) நக்கல், (4) பருகல்.

அறுவை-உடை; அறுப்பதால் அறுவை; ஆகுபெயர். **விளைநிலம்**-பயிர் விளையும் நிலம். **பாற்பசு**-பால் கறக்கும் பசு. சிறக்க அளித்திடுக. என மாற்றுக. 289

700. பொய்இல்மறை புகழ்திருவிற் கோலநா
யகர்ப்புகழும் புராண மோடு
துய்யமன னுடன் படித்துப் பொருள்விரிக்கும்
பெரியோனைத் தொழுது போற்றி
வையம்முதல் ஊர்திகளின் இருத்திமிகு
பல்லியம்வான் மழையின் ஆர்ப்பச்
செய்யநகர் அலங்கரித்து வலம்வருவித்
திடல்வேண்டும் திகழும் அன்பால்.

புராணத்தை விரித்துக் கூறுபவர்க்கும் புராணத்துக்கும் செய்யும் சிறப்பு

தெளிவுரை : பொய்மை இல்லாத வேதங்கள் எல்லாம் புகழும் திருவிற்கோல நாயகரைப் புகழ்கின்ற கூவப் புராணத்துடன் தூய்மையான மனத்துடன் படித்துப் பொருளை விரித்துக் கூறும் சான்றோரை வணங்கித் துதித்து, வண்டி முதலிய ஊர்திகளில் அமரச் செய்து, மிக்க இசைக் கருவிகள் மேகத்தைப் போன்று ஒலிக்க, நல்ல நகரத்தை அணி செய்து, அன்புடன் வலமாக வரும்படி செய்திட வேண்டும்.

விளக்கம் : கூவப்புராணத்தையும் அதன் பொருளை விரிக்கும் சான்றோரையும் ஊர்தியில் அமர்த்தி வலம் வரும்படி செய்ய வேண்டும் என்பதாம்

பொய் இல் மறை-மெய்மையுடைய வேதம். **துய்ய**-தூய்மையான. **வையம்**-வண்டி; தேர். **பல்லியம்**-பல இசைக்கருவிகள். **வான் மழையின்**-வானத்தில் உலவும் இயல்புடைய மேகங்களைப் போல். **ஆர்ப்ப**-ஒலிக்க. **வலம் வருவித்து**-வலமாகச் சுற்றிவரச் செய்து. 290

701. இந்தவகை புரிந்திடுவோர் பாவகோ
டிகள் அகற்றி இம்பர் தன்னில்
புந்திவிழை பொருள் அனைத்தும் ஈந்துதிரு
விற்கோலப் புனித மூர்த்தி
கந்தமலர் அயன்முதலாம் கடவுளர்க்கும்
அரியபர கதியும் நண்ணத்
தந்தருள்வன் எனஉரைத்தான் சூதமா
முனிவன்எனும் தவத்தர் கோமான்.

நூலின் பயன் வீடுபேறு அளிக்கப் பெறல்

தெளிவுரை : இவ்வாறு செய்பவர் கோடிக்கணக்கான பாவங்களை நீக்குவர். இவ்வுலகில் உள்ளம் விரும்பும் பொருள் எல்லாவற்றையும் அளித்துத் திருவிற்கோலப் புனித மூர்த்தி மணம் பொருந்திய மலரில் வீற்றிருக்கும் நான்முகன் முதலிய கடவுளர்க்கும் கிட்டுதற்கு அரிய கதியை அடையுமாறு தந்தருளுவார். இப்படித் தவத்தர்க்குத் தலைவரான சூதமாமுனிவர் நைமிசவன முனிவர்க்கு உரைத்தார்.

விளக்கம் : புரிந்திடுவோர்-செய்பவர். **பாவகோடிகள்**-மிக்க பாவங்கள். **இம்பர்**-இவ்வுலகில். **புந்தி**-மனம். **விழை**-விரும்பும். **அயன்**-நான்முகன். **கந்தமலர்**-நறுமணம் கமழும் தாமரை மலர்-பரகதி-மேலான கதி; மோட்சம். **தவக்கோமான்**-துறவியரின் தலைவன். 291

702. சூதமுனி உரைத்தமொழி நைமிசமா
வனத்து உறையும் தூய நெஞ்ச
மாதவர்கள் அனைவரும் கேட் டுவந்து அனையோன்
தனைவழுத்தி வந்து கூவப்
போதநகர் தனின் அரிய விற்கோல
நாயகனைப் போற்றி மேவி
மூதறிவு வந்ததனால் மூலஇருள்
அகன்றுபர முத்தி சேர்ந்தார்.

நைமிச வன முனிவர் முத்தியடைதல்

தெளிவுரை : சூதமாமுனிவர் கூறிய சொல்லை நைமிசவனத்துள் வாழும் தூய்மையான மனமுடைய துறவியர் அனைவரும் கேட்டு மகிழ்ந்து அவரைத் துதித்துக் கூவநகரில் வீற்றிருக்கின்ற அரிய திருவிற்கோல நாயகனைப் போற்றிப் பொருந்தியிருந்தனர். அதனால் மூதறிவு கைவரப்பெற்றனர். அதனால் மூல அறியாமை நீங்கப் பெற்று முத்தியை அடைந்தனர்.

விளக்கம் : மாதவர்கள்-முனிவர்கள். **போதநகர்**-ஞானம் விளங்கும் நகர். **மூல இருள்**-ஆணவம் முதலிய உயிருடன் கூடிவந்த இருள் மலம். அறியாமையுமாம். **பரமுத்தி**-மேலான வீடுபேறு. 292

703. **தீதி லாஇறை செங்கோல் வழங்குக;**
வேத வாசக மெய்ந்நெறி ஓங்குக;
போத னாகிய புண்ணியர் மல்குக;
ஓதும் மூவர்தம் ஒண்டமிழ் வாழ்க.

வாழ்த்து

தெளிவுரை : அறத்தினின்று மாறுபடாத அரசாட்சி நடத்தும் செங்கோல் வாழ்க. வேதம், ஆகமம் ஆகிய நெறிகள் சிறந்து விளங்குக. நான்முகன் முதலிய புண்ணியம் உடையவர் பெருகுக. சிறப்பித்துப் பாடும் தேவாரம் பாடியருளிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி ஆகிய மூவரின் ஒளியுடன் தமிழான தேவாரம் வாழ்க.

விளக்கம் : தீது இலா-அறநெறியினின்று மாறுபடும் குற்றம். **இறை**-மன்னர். **போதன்**-நான்முகன்; சிவபெருமானுமாம். **ஓதும்மூவர்**-தேவாரப் பாக்களைப்படும் மூவர்; புகழ்ந்து பேசப்படும் மூவர். மூவர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். **ஒண்டமிழ்**-ஒளியுடைய தமிழ்ப்பாக்களான தேவாரம். 293

தாருகன் வதைச் சருக்கம் முற்றிற்று
இச்சருக்கம்-293
ஆக நூற் செய்யுட்கள்-703
திருக்கூவப்புராணம் முற்றுப் பெறுகிறது.
திருச்சிற்றம்பலம்.